
நினைவு அலைகள்

2



டாக்டர் நெ.து.சுந்தரவடிவேலு

சாந்தா பதிப்பகம்

நினைவு அலைகள்

(தன் வரலாறு)

இரண்டாம் பாகம்

பத்மஸ்ரீ டாக்டர் நெ. து. சுந்தரவடிவேலு

ஓய்வுபெற்ற தலைமைக் கல்வி ஆலோசகர், தமிழ்நாடு அரசு
முன்னாள் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

சாந்தா பதிப்பகம்

13, ஸ்ரீ புரம், 2-ஆவது தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600014.
தொலைபேசி : 044 - 2811 5618, 2811 6018

முதல் பதிப்பு : ஆகஸ்டு 1985
இரண்டாம் பதிப்பு : ஜூலை 2004

உரிமைப் பதிவு ©

NINAIVU ALAIGAL

The autobiography of

***Padma Shri Dr. N. D. Sundara Vadivelu**, D. Litt.,*

விலை : ரூ. **150**

தயாரிப்பு : சந்திரிகா ராஜமோகன் M.A., M.Ed.,

Typeset at: *Thaiyal Graphic Solutions*, Chennai - 14.
Printed at: *Sankar Printers Private Limited Chennai - 42.*

பதிப்புரை

இன்றைக்குத் தமிழகத்தில் இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வானியல், கணிப்பொறி இயல், அணுவியல் துறை, உயிரிதொழில்நுட்பவியல் எனப் பல்வேறு அறிவியல் துறைகள் காலத்திற்கு ஏற்ப வளர்ந்து புகழ்பெற்றுள்ளன. இந்த வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த கல்வியைப் பொதுவுடைமை யாக்கிய தமிழ்ச் சான்றோர்களை நாம் மறக்க முடியாது!

அறிவியலின் பல்துறை வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்துக் கொடுத்த அத் தமிழ்ச் சான்றோர்களுள் - குறிப்பாகக் கு. காமராஜ், சி. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்திய காங்கிரஸ் பேரியக்கத்தில் நேரிடையாகப் பங்கு பெற்றவர்கள்; கல்வித் துறையில் அரும்பணியாற்றிய நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் மாணவப் பருவத்திலேயே மறைமுகமாக அவ்வியக்கத்துக்கு ஆதரவு காட்டியவர். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், கல்வித் துறையின் வளர்ச்சிக்கும், பாமரமக்களும் கல்வி அறிவைப் பெற்று உயர்வதற்கும் இவர்கள் காட்டிய அக்கறையையும் உழைத்த உழைப்பையும் வரலாற்றுச் சுவடிகளைத் திருப்பிப் பார்ப்போர் மறுக்க முடியாது!

இப்பெருமக்கள், இந்த மாபெரும் சமுதாயத்தில் உச்ச நிலையை எட்டிய பிறகும், அடிப்படை விதிமுறைகளை எப்போதும்போல் கடைப்பிடித்தார்கள்; தங்கள் சமுதாயம் உயரக் கடினமாக உழைத்தார்கள்; அரும்பாடுபட்டார்கள். தாங்கள் சார்ந்த சமுதாயத்தின் உயர்வுக்குப் பாடுபடல் என்கிற குறிக்கோளை எட்டுவதற்கு, பின்விளைவை எதிர்நோக்கிய சிந்தனை, தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய திட்டம், சுயநலம் சிறிதும் கலவாத அர்ப்பணிப்பு, ஊக்குவிப்பு, தியாகம், ஒழுக்கம், பணிவு, சகிப்புத் தன்மை, குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட குறியை எட்டுவதற்கு மேற்கொண்ட செயல் திறன், பொறுமை முதலான அடிப்படைகளை

அவர்கள் விதிமுறை களாகக் கொண்டு தங்கள் காலத்தில் சாதனை நிகழ்த்திக் காட்டினார்கள்.

காலம் காலமாகத் தமிழகத்தில் இருந்துவரும் நல்ல நெறிமுறை களைத் தொடர்ந்து கடைப்பிடிப்பவர்கள் மிகச்சிலரே. அதனால்தான் மிகுச்சிலரே சாதனை படைக்கும் நல்ல மனிதர்களாக இருக்கிறார்கள். தியாகத்திற்குச் சிறந்த சான்றாகக் காமராஜரைவிட வேறு ஒருவரைக் காட்ட முடியுமா? 'தங்களுக்காக வாழ்வை மட்டுமா, பதவியை மட்டுமா, எதையும் தியாகம் செய்ய ஒரு மனிதர் தயாராக இருக்கிறார்' என்று இந்தியர் அனைவரும் எண்ணினர்! தமிழ் மக்கள் அவ்வாறு எண்ணிய காலம்வரை - தமிழ் நாட்டில் சமுதாயப் புரட்சி நடந்தது! கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது!

நெ.து.சு. அவர்கள் வடித்துள்ள நினைவு அலைகளை 'உழைத்தபின் புலம்பல்' எனக் குறைத்து மதிப்பிடவேண்டாம்! உழைத்த காலத்தில் தமக்கிருந்த ஆதரவுகளையும் எதிர்ப்புகளையும் பாராட்டுதல்களையும் கடந்து, சாதனை படைத்த தமது பட்டறிவைப் பிறர் அறியவேண்டும் என்கிற நல்ல நோக்கத்தில் எழுதப்பட்ட பதிவாகக் கொள்ள வேண்டும்! இனி உருவாகப் போகின்ற சமுதாயத்தின் இளந் தலைமுறைக்கு நல்ல வழி காட்டுதலாக அமையவேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் ஏற்றப்பட்ட சிந்தனைச் சுடராகக் கொள்ள வேண்டும்! அந்தச் சுடர், எதிர் நிற்கும் நீண்ட பாதையில் ஒளிவீசி, நடக்க வேண்டிய நல்ல நெறியைக் காட்ட உதவும்! நல்லோர் தம் எண்ணங்களையும் செயல்பாடுகளையும் அறிந்துகொள்வது தனிமனிதனுக்கு மட்டும் அன்று, சமுதாயத்திற்கே வழிகாட்டும் ஒளி விளக்காக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

நம் முன்னோர்களின் அனுபவத்தையும் அவர்கள் கூறும் அறிவுரைகளையும் படிக்கும்போது மனத்தில் ஒருவகை உத்வேகமும் வீறுகுமும் பிறக்கும். அது வருங் காலத்தில் சமுதாயத்திற்கு உழைக்கும் சான்றோர் சிலரை உருவாக்கும். ஒருவகை அர்ப்பணிப்பு வாழ்க்கை வாழ்ந்த நெ.து.சு. அவர்கள் தம் வாழ்வியல் பணி அனுபவங்களைத் தாம் வாழ்ந்த சமுதாயத்தின் நலன் கருதியே சுயசரிதையாக எழுதிப் பதிவு செய்துள்ளார். பொருளீட்டித் தம் வாரிசுகளுக்குச் சொத்து சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இல்லை என்பதை நினைவில் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம். தம் பதிவு, எதிர் வரும் காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் கல்வித் துறை வளர்ச்சிக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவலாம் என்கிற நோக்கத்தில்தான் எங்கள் பதிப்பகமும் அதை வெளிக் கொண்டுவரும் பெரு முயற்சியில் ஈடுபட்டுள்ளதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கல்வித் துறையில் நெ.து.சு. அவர்கள் சாதிக்காதது எதுவும் இல்லை எனக் கூறலாம். ஆயினும், கல்வித் துறையின் உயர்பதவியான துணைவேந்தர் பொறுப்பிலிருந்தபோதும், சில ஒழுக்க நெறிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து - முன்னுக்குவர நினைக்கும் மாணவனைப்போலவே செயல்பட்டுள்ளார். அந்த நிலையில் தாம் உச்சத்தை எட்டி விட்டதாக எண்ணி வானில் பறக்காமல், தரையில் பயணம் செய்யும் சாதாரண மனிதனைப்போலப் பணிவோடு, அடக்கமாகச் செயல்பட்டது சாதனையைப் பல மடங்காகப் பெருக்கியது. தாம் மேற்கொண்ட ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்தின்போதும், தாம் பணியாற்றிய துறையோடு தொடர்புடைய, துறை வளர்ச்சிக்குத் தேவையான ஏதாவது கிடைக்குமா எனத் தேடிக் கொண்டுவந்தார். அவ்வாறு பெற்றுவந்த புதுமைகளை வளர்ச்சிக்கு உகந்த வகையில் செயல்முறைப்படுத்திக் கல்வித்துறை ஏற்றம் பெற வழிவகுத்தார்.

தம் செயல்பாட்டினால் விளைந்த சாதனைகளை - தம் ஒருவரின் தனிப்பட்ட சாதனையாக அவர் காட்டிக் கொள்ளவில்லை. தாம் தலைமை ஏற்றிருந்த துறையில் பணியாற்றிய அனைவரது கூட்டு முயற்சியின் சாதனையாகவே - தன்னடக்கத்துடன் சுட்டிக் காட்டிக் கொண்டார். எந்தச் சாதனையும் பிறர் துணை இல்லாமல் முழுமை பெற முடியாது என்பதை உணர்த்தினார். அவருடைய தன்னடக்கம், சுய நலத்தை அழித்தது எனலாம்.

நெ.து.சு. அவர்கள் தகுதிக்கு மீறிய வசதியை விரும்பாதவர்; தகுதிக்கு மிஞ்சிய சலுகையை எதிர்பார்க்காதவர்! தாம் மதிக்கப்படுவதைப் போல - போற்றப் படுவதை போல அடுத்தவரும் மதிக்கப்பட வேண்டும், போற்றப்படவேண்டும் என்பது ஆரோக்கிய மான ஆசை! இந்த ஆசை சமுதாயத்தில் வளர்க்கப்பட வேண்டும்.

நெ.து.சு. அவர்கள் சென்ற தலைமுறையில் வாழ்ந்தவர்! நமக்கெல்லாம் நல்வழிகாட்டியவர். அவர் பதிவு செய்து விட்டுச் சென்றுள்ள நினைவு அலைகள், எதிர்வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகும்.

இந்த நாட்டின் தலையெழுத்தை மாற்றும் சக்தி இளைய தலைமுறைக்கு மட்டுமே உண்டு! அதிலும் குறிப்பாக, மாணவ சமுதாயத்திற்கு மட்டுமே உண்டு! 'காலம் தவறாமை' சாதனை படைப்பதற்கு முதல்படி! நேரமில்லை என்பது பெரும்பாலும் நமது சோம்பேறித் தனத்தை மறைப்பதற்கு மிகமிகச் சாதாரணமாக நாம் கூறும் காரணம்' என்பதை இளைய தலைமுறையினர் உணர வேண்டும். சமுதாயத்தைச் சீரழிவிலிருந்து பாதுகாக்கும் முயற்சியினை

மேற்கொள்ளும் வழிகாட்டிகள் அவ்வப்போது தோன்றுகிறார்கள். அவர்கள் விட்டுச் செல்லும் எச்சங்களை ஏற்று நடைபோட வேண்டும் என்பதற்கு இந்த நூல் சிறந்த சான்றாகும். 'சமுதாயச் சீரழிவிற்கு அரசியல் வாதிகளும் அதிகாரிகளுமே காரணம்' எனக் கூறிக் கொண்டிருப்பதில் மட்டும் நற்பயன் விளையாது. அத்தகைய இழிவாளர்கள் தோன்றாதிருக்க வழி என்ன என்று சிந்திக்க வேண்டும்.

நேர்மையும் எளிமையும் நிறைந்த வாழ்க்கையை மேற்கொண்டு மக்களுக்காக வாழ்ந்து, மக்களைத் கவர்ந்தவர்கள் விட்டுச் செல்லும் பதிவுகளைச் சமுதாயத்திற்கு வழிகாட்டும் நெறி நூல்களாகக் கொள்ள வேண்டும். அப்பதிவுகள் சமுதாயத்தில் உண்மை, எளிமை, உழைப்பு முதலான நற்பண்புகள் வளர வழிகாட்டும்.

இக் கருத்தினைச் சமுதாயத்திற்கு உணர்த்துவது நமது கடமையாகும். இக் கடமையை நிறைவேற்றும் பெருநோக்குடன், தமிழ்ச் சமுதாயம் பெருவிருப்போடு ஆதரித்து வரவேற்கும் என்ற நம்பிக்கையோடு இந்த நூலை எமது பதிப்பகத்தின் சார்பாக வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

இந்த நூல் சிறப்பாக வெளிவருவதற்குத் துணையாக மெய்ப்பு பார்த்து உதவிய பேராசிரியர் வி. கணபதி, அவர்களுக்கும், சென்னை, நிறித்தவக் கல்லூரி மேனிலைப் பள்ளியிலிருந்து ஓய்வு பெற்றத் துணைத் தலைமை ஆசிரியர் திரு. பூ. ஜெயராமன் அவர்களுக்கும் இந்நூலை வெளியிடுவதற்குப் பெரிதும் துணை நின்ற நெ.து.சு. அவர்களின் குடும்பத்தினராகிய திரு. லெனின் திரு. துரைசாமி முதலானவர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாந்தா பதிப்பகத்தார்

கல்வி நெறிக்காவலர் அய்யா நெ.து.சு. அவர்கள்
நினைவுஅலைகள் இரண்டாம் பாகத்தின்
முதற்பதிப்புக்கு அளித்த

முன்னுரை

பிறவி - மனிதப் பிறவி - பெறற்கரிய பேறாம். அப் பேற்றினை யான் பெற்றேன்; வழி வழி வந்த சான்றாண்மைச் சூழலில் வளர்ந்தேன். அது பெரும் ஆதாயம். அப்பேற்றினைப் பெற்றவர்கள் அனைவரும் கற்றவர்கள் அல்லர். திண்ணைப் பள்ளிக்கூடமும் இல்லாத சிற்றூரில் பிறந்தாலும், இந்தியாவின் மூத்த பல்கலைக் கழகங்களில் ஒன்றாகிய சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெறும் பேறு அரிய பேறே!

பிறவியும் கல்வியும் பெற்றவர்களுக்கும், வாய்ப்புகள் தாராளமாக வந்தடையும் என்று சொல்லி விட இயலாது. எனக்கோ வாய்ப்புகள் வந்தன. நாடாத போதும் தேடி வந்து தழுவிக் கொண்டன.

'தமிழ் நாடு' நாளிதழின் உதவி ஆசிரியர் பதவி முதல் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவி வரை பெற்ற ஒவ்வொரு பதவிக்கும் தேவைப்பட்ட தகுதியிருந்தாலும், அவற்றை நான் பெற்றது என்னுடைய திறமையால் என்று பெருமை பேச இயலாது. எப்படியோ எய்தற்கரியன வந்து இயைந்தன. அவற்றில் என் பெருமை சிறிதளவே! காலத்தின் வளம், பெரியோர்களின் நேர்மை இவற்றின் பங்கே பெரிது.

நான் செய்தது ஒன்றுமில்லையா? உண்டு. அது என்ன? ஒவ்வொரு பதவியையும் வாய்ப்பாகப் பயன்படுத்தினேன். செய்தற்கரிய செய்யப் பாடுபட்டேன்.

'என் கடன் பணி செய்து கிடத்தலே!' இது நம் ஆன்றோரின் குறிக்கோள்; நாம் கற்றறிந்த உயர் நோக்கம். இவ் விலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கிய காந்தியடிகளார், பெரியார், காமராசர், அண்ணா ஆகியோரின் பொதுத் தொண்டு என்னை ஊக்குவித்தது. ''போற்றுவோர் போற்றட்டும்! தூற்றுவோர் தூற்றட்டும்! இன்று செய்ய வேண்டிய பணியை இன்றே செய்வோம்' என்ற முனைப்பில் உழைத்தேன்.

ஒவ்வொரு நிலையும் அடுத்த நிலைக்கு என்னை ஆயத்தப் படுத்திற்று என்பது மிகையன்று.

தொடக்கத்தில், புறக்கணிக்கப்பட்ட நாட்டுப் புறச் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டு நான் பண்பட்டேன். தடபுடல் ஏதும் இல்லாத அக்கால நாட்டுப்புறங்களில் நல்லோர் பலர், இலைமறை காய்களாக இருந்ததை உணர்ந்தேன்.

பின்னர் கல்வித்துறையின் முதற் படிக்கட்டில் அடி எடுத்து வைத்தேன். தொடக்கப் பள்ளிகளில் அமைதியாக அரும்பணி ஆற்றும் நல்லாசிரியர்களை எளிய உருவங்களில் கண்டேன். அத் தொண்டர்களின் தோழமை என்பால் சமத்துவ உணர்வைப் பெருக்கிற்று. 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்னும் முழு நம்பிக்கையை வளர்த்தது. மெய்யான சமத்துவத் தோழமை இரு சாராரிடமும் செயல் திறனைப் பெருக்கிற்று. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் வளர்த்த நம்பிக்கை வெளிச்சத்தில் வீறு நடை போட்டேன். வஞ்சனையின்றித் தன்னினைவு கெட்டு - கல்வித் தொண்டிற்குப் பித்தனானேன்.

அடுத்து, மாவட்டக்கல்வி அலுவலர் என்னும் பெரும் வாய்ப்பு வந்து கூடிற்று. பெருமைப்படுவதற்குப் பதில் பெரியன செய்ய முயன்றேன். பொதுநலக் கண்ணோட்டமுடைய நல்லோர் சிலரின் ஒத்துழைப்பும் ஆதரவும் உதவின. கண்ட இடர்ப்பாடுகளும் உண்டு.

'ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்

கருதி இடத்தாற் செயின்'

என்னும் குறள் மின்னி என்னை நிலைப்படுத்தியது; நம்பிக்கையை ஊட்டியது; மேலும் அகன்ற பார்வையைத் தந்தது.

சிகாகுளம், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் பட்டறிவு பெற்றேன். பின்னர், எந்தப் பதவியைத் தொட அஞ்சினேனோ, அப்பதவி என்னை வலிய வந்து தழுவிக் கொண்டது. சென்னை மாநகராட்சியின் கல்வி அலுவலர் பதவி, 'நல்ல தமிழர்' என்பதற்காக என்னைப் பற்றிக்கொண்டது. அந்த மதிப்பீடு தவறாகவில்லை. அப்பதவியிலிருந்ததால், எனக்கு மக்கள் தொடர்பு விரிந்தது; ஆழ வேரூன்றியது.

அறைகூவல்கள் ஆட்களின் அளவு கோல்கள் எனலாம்; மூதறிஞர் இராசாசி கொண்டுவந்த புது முறைத் தொடக்கக் கல்வி என்னைப் பதம் பார்த்தது. நான் வளர்த்துக் கொண்டிருந்த கடுமையான கட்டுப்பாடு என்னைக் காத்தது. மூதறிஞரின் நன்மதிப்பைப் பெற உதவிற்று; நான் மாநிலம் அறிந்த மனிதன் ஆனேன்.

ஏழைகளின் பங்காளர் காமராசரின், கல்வி வளர்க்கும் பேரியக்கத்தில், முதல் தொண்டனாகச் செயல்படும் நற்பேறு என் சிந்தனையையும் செயற்பாட்டினையும் உயர் மட்டத்திற்குக் கொண்டு சென்றது. பெருந்தலைவர் என்னிடம் வைத்திருந்த நம்பிக்கை தனி வாழ்க்கை இடிகளைத் தாங்க உதவிற்று.

அறிஞர் அண்ணா, என்பால் கொண்டிருந்த நம்பிக்கை எனது வாழ்க்கையின் கசப்பைப் போக்க உதவிற்று.

அதே போல், டாக்டர் கலைஞர் கருணாநிதி காட்டிய ஆதரவு சென்னைப் பல்கலைக் கழகத்தைக் கட்டிக் காக்கவும், புதுப் பொலிவு ஊட்டவும் உதவிற்று.

முதல் அமைச்சர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் என்பால் காட்டிய அன்பு என்னை முதுமையிலிருந்து காக்கிறது.

இத்தகைய பெரியவர்கள் வாயிலாகக் காலமும் சமுதாயமும், பெரும் பொறுப்புகளையும் வாய்ப்புகளையும் உரிமைகளையும் வழங்கின. அப் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் இடர்ப்பாடுகளும் உண்டு; உதவிகளும் உண்டு.

ஏழைக்கு எழுத்தறிவிக்கும் அறப்பணியில் - சமுதாயப் பணியில் - முன்வந்து உதவியோர் ஏராளம். எத்தனை நல்லோரின் நன்கொடைகள்-, பகல் உணவாக, சீருடையாக, பள்ளிச் சீரமைப்பாக உருவெடுத்தன. அந்நிகழ்ச்சிகளைப் பற்றிய நினைவுகள் அமுதமாக வாழ்விக்கின்றன.

என்னிலும் இனியார், என்னிலும் கற்றார், என்னிலும் ஆற்றல் மிக்கார், எனினும் தன்னை மறந்து - தன் நாமம் கெட்டு, என்னையே எல்லாமாகக் கருதி, எனக்காகவே வேதனைகளையெல்லாந் தாங்கி 22.11.84வரை வாழ்ந்த-தியாகி-காந்தம்மாவை, எனது வாழ்க்கைத் துணைவியாக - எனது தனிச் செயலராக - செய்தித் தகவல் வாயிலாக - பாதுகாவலராகப் பெற்றது, பெரும் பேறு ஆகும்.

பாடுபட்டு வளர்க்க வேண்டியவை பல. அவற்றில் ஒன்று நன்றியுணர்வு. எனது நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் எத்தனையோ எளியோர்க்கு, அறிஞர்களுக்கு, பெரியவர்களுக்கு, நல்லவர்களுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கின்றேன். அவற்றை ஆங்காங்கே சொல்லி, நன்றிப் பயிரை வளர்த்தல் எனது கடமை. அப்பெரு நோக்கை மையமாகக் கொண்டே 'நினைவு அலைகள்' வீசுகின்றன.

நெ.து. சுந்தரவடிவேலு என்னும் ஆல விதையைக் காலமும், சூழலும், தொலை நோக்காளரும், அறவோரும் பயன்படுத்தி, தொண்டு மரமாக வளர்த்து விட்டார்கள்.

கோடிக் கணக்கான மக்கள் கொண்ட மாந்தர் இனத்தில் நான் ஒருவன்; சிறியேன். சிறியேன் எப்படிப் 'பெரியவன்' ஆனேன்?

தன்னலங் கருதாத் தொண்டால்; பயன் கருதாப் பணியால்; ஒருமனப்பட்ட ஈடுபாட்டால்; இன்பம் விழையாமையால்; இடும்பை இயல்பென உணர்ந்தமையால்; தியாக மலைகளை வழி காட்டிகளாகக் கொண்டமையால்; ஒரு சில செய்ய முடிந்தது.

படிப்பையே மறந்திருந்த, தமிழ் மக்களிடையே, ஆண்டுக்கு ஆண்டு பெருகி வரும் கல்விப் பசியை வளர்க்கும் திருத்தொண்டில் எனது வாழ்நாளில் முப்பந்தைந்து ஆண்டுகள் நிறைவுபெற்றன.

''குடிசை வாழ்வோரெல்லாம், உரிமையோடு உங்களிடம் வந்து, மேல்பட்டப் படிப்பிற்கு இடம் பெற்றுக் கொண்டு போக முடிகிறதே! இதனால்தான் உங்களைத் தேடுகிறேன்'' என்று அன்று தந்தை பெரியார் கூறிய பாராட்டுக்கு ஈடு எது?

இந்திய சோவியத் நட்புறவை வளர்க்கும் நற்பணியில் பதினைந்து ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறேன்.

வாய்ப்புகள் தந்த-தரும் பட்டறிவு சமுதாயத்தினுடைய பொதுச்சொத்து. எனவே 'நினைவு அலைகள்' பலர் புகழ்பாடும் நூலாக உருவாகி வருகிறது.

எனக்கு எழுச்சியூட்டிய இயக்கங்கள் என் சிந்தனைகளை வளர்த்த அறிஞர்கள், என் மனிதாபிமானத்தை வளர்த்த பெரியோர்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன்.

சிறுவர்களுக்கான பதின்மூன்று நூல்களையும், வயது வந்தவர்களுக்காக முப்பதுக்கு மேற்பட்ட நூல்களையும் எழுதி, தமிழ் மொழிக்குத் தொண்டாற்றும் பேறு பெற்றேன். இத்துணை நூல்களையும் எழுதும்படி தூண்டியவர்கள் சிலர். அவர்களில் முன்னே நிற்பவர், 'சத்ய கங்கை' மாத மிருமுறை இதழ் - ஆசிரியரும் என் இனிய நண்பருமான திரு. பகீரதன் ஆவார். அவர் இடம் கொடுத்துக்கொண்டிருப்பதால் இந்நூல் வெளிவர முடிந்தது. அவருக்கு நன்றி! நன்றி! நன்றி!

தரமான தமிழ் நூல்களை வெளியிட்டு மகிழும் திரு. வானதி திருநாவுக்கரசு என்னுடைய நூல்கள் பலவற்றை வெளியிட்டு

உதவியுள்ளார். இது, அவர் வெளியிடும் எனது நூல்களில் பத்தாவது ஆகும். அவருக்கு எச் சொற்களால் நன்றி கூறி நிறைவு செய்யமுடியும்!

நெடுங்காலமாக எனக்குக் கை கொடுத்து வரும் அன்பர்கள் 'நினைவு அலைகள்' முதல் பாகம் வெளியான ஓராண்டிற்குள் முதல் பதிப்பு முழுவதையும் வாங்கிப் பெருமைப் படுத்தியமைக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் அளித்த ஆர்வமிக்க ஆதரவே, இரண்டாம் பகுதியைக் கொண்டு வரும் துணிவைத் தந்தது.

நினைவு அலைகள் இரண்டாம் பகுதியையும் தயவு செய்து வாங்கிப் படியுங்கள். செயற்கரிய செய்வதற்குத் தன் முயற்சி, பலருடைய ஆதரவு, காலத்தின் சூழல் எனப் பல தேவை என்பதை உணருங்கள். பெரியோரை வியத்தலுக்குப் பதில், சிறியோர்க்கு உணர்வு ஊட்டுங்கள் என்று வேண்டிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய 'நாவல் ஆர்ட்' அச்சக உரிமையாளர், கவிஞர் நாரா. நாச்சியப்பனுக்கும், பிழை திருத்தி உதவிய திரு. சு.வ. நீலகண்டனுக்கும் நன்றி கூறுகிறேன்.

எத்தனையோ அதிர்ச்சிகள் குறுக்கிட்டாலும் சமாளித்து என் கட்டுரைகளைத் தொகுத்துப் பகுத்து நூலாக்க உதவிய - புகைப் படங்களைத் திரட்டி உதவிய - நண்பர் திரு. தி.வ. மெய்கண்டாருக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியுடையேன்.

நெ.து. சுந்தரவடிவேலு

32, கிழக்குப் பூங்கா சாலை,
சென்னை-600030.

உள்ளுறை

எண்		பக்கம்
1.	மாவட்டக் கல்வி அலுவலர் பயிற்சி	15
2.	அலுவலுக்கு அடங்கியே உரிமை	22
3.	விம்மி விம்மி அழுதேன்	28
4.	தந்தையாரைக் கண்டேன்	34
5.	பயிற்சி முடிந்தது	39
6.	கோடா கிருஷ்ணமூர்த்தி பந்துலுவின் கோபம்	44
7.	பணியில் மூழ்கினேன்	51
8.	அரசு ஊழியருக்குப் பாதுகாப்பு	57
9.	மக்கள் நம்பிக்கை குவிந்தது	63
10.	அளவில்லாத ஆடம்பரச் செலவு	70
11.	ஆதி ஆந்திரர் பள்ளி எழுப்பும் சிந்தனைகள்	77
12.	மொட்டைக் கடிதம்	84
13.	புயலில் சிக்கினோம்	93
14.	சேலத்துக்கு மாற்றல்	100
15.	திரு. வி. கலியாண சுந்தரனார்	106
16.	சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமி கவுண்டர் எம்.ஏ.எல்.டி.	114
17.	தீமை உருவாயிற்று	121
18.	தீமை விலகியது	127
19.	மாணவரின் மாண்பு	134
20.	நாச்சியப்பர் மதிப்பிட்டில் உயர்ந்தேன்	142
21.	பெண் குழந்தை பிறந்ததும் மறைந்தது	147
22.	ஆதி திராவிடருக்கு உரிய இடம்	155
23.	இந்தோ - சோவியத் நட்புறவு	161
24.	திராவிடர் கழகம் பிறந்தது	170
25.	கட்டாய இலவசக் கல்வி முறை வந்தது	180
26.	துணிவு குறையவில்லை	188

27. மதுரை மாவட்டக் கல்வி அலுவலர் பொறுப்பேற்றேன் 198
28. விபரீத சிந்தனை 207
29. பள்ளி நிறுவப் பெண்கள் அளித்த நகைகள் 216
30. ஒரு நாள் நீ இயக்குநர் ஆகிவிடுவாய் 224
31. அதிகாரியின் சதி 233
32. கல்வி அமைச்சர் அவினாசிலிங்கனார் 240
33. அண்ணல் காந்தி மறைந்தார் 249
34. மாநகராட்சியில் கல்வி அலுவலரானேன் 257
35. வீடு வாங்கினேன். 266
36. விடுதலை விழா கொண்டாடப்பட்டது 273
37. சுட்டாலும் பொன் ஒளி குன்றாது 283
38. பெரியவர்கள் வாக்குறுதியும் மீறலும் 291
39. திருவள்ளுவன் பிறந்தான் 300
40. பாரிசுக்குப் போகிறாயா? 309
41. கப்பல் பயணம் 320
42. பாரிசுக்குப் போனோம். 328
43. பாரிசு வரலாற்றுக் கருத்தரங்கு 337
44. ஹைடு பூங்காவில் பேச்சுரிமை 345
45. பிரிட்டனில் கல்வி முறை 354
46. வளர்விக்கும் முதியோர் கல்வி 362
47. குத்தூசி குருசாமிக்கு நெஞ்சுவலி 369
48. நான் யாருக்கு உரியவன்? 377
49. இராசாசியை முதல் அமைச்சர் பதவி தேடி வந்தது 386
50. திருவள்ளுவன் விழுந்து பிழைத்தான் 395
51. இராசாசியின் தொடக்கக் கல்வித்திட்டம் 404
52. தூக்கம் கெட்டது 413
53. முதலமைச்சர் இராசாசியின் கட்டளை 421
54. இப்படியும் ஒரு சோதனையா? 429
55. இராசாசி ஆட்சி நீடித்தது 438
56. காமராசர் முதல்வரானார் 445
57. பொதுக் கல்வி இயக்குநரானேன் 453



காணிக்கை

என்னிலும் கற்றவர், என்னிலும் வல்லவர், என்னிலும் பொறுமையாளர், அமைதியாளர், பண்பாளர், என்னிலும் சிறந்தவர்; குன்றின் மேல் விளக்காதற்கு முந்தாதவர், வீட்டு விளக்காக விளங்கியதில் மகிழ்ச்சி கொண்டவர்.

அவரே, காந்தம்மா; சாந்தமே உருவான காந்தம்மா; என் மனைவி காந்தம்மா; என் வாழ்க்கைத் துணைவி, காந்தம்மா; என் மெய்க்காப்பாளர் காந்தம்மா; என் கொள்கைக் காப்பாளர் காந்தம்மா; இதுவும் அதுவும் எதுவும் கேட்டு நச்சரிக்காதவர் காந்தம்மா.

பல்கலைக் கழகப் பட்டங்கள் மூன்றினைப் பெற்றவர் காந்தம்மா! ஆறு ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினராக விளங்கியவர் காந்தம்மா! சென்னை மாகாண சாரணீய இயக்கத் தலைமையக ஆணையராகத் தொண்டாற்றியவர், காந்தம்மா! பாமரர்களையும் மதித்தவர் காந்தம்மா! யான், எனது என்னும் செருக்கற்றவர் காந்தம்மா! அவாவின்மைக்கு அடக்கமான எடுத்துக்காட்டு என் காந்தம்மா!


பகைமை பாராட்டாத காந்தம்மா! வெறுப்பை வளர்க்காத காந்தம்மா! இன்னா செய்தார்க்கும் இனியவே செய்த காந்தம்மா!

நாற்பத்து நான்கு ஆண்டுகள், எனக்காகவே வாழ்ந்து வந்த காந்தம்மா!


22-11-84 அன்று இயற்கை எய்திய என் காந்தம்மாவுக்கு இந்நூலை எளிய காணிக்கையாக்குகிறேன்.




நெ. து. சுந்தரவடிவேலு



காமராசர்



தந்தை பெரியாருடன் நெ. து. சு.
12—10—1973



நெ. து. சு,—காந்தம்மா—சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர் குடும்பத்துடன்


குழந்தைக்கு வயிறு ஊதல் — பல தொற்றுநோய்களில்

மூன்று மாதத்தில்


மூன்று மாதத்தில்

மூன்று மாதத்தில்

மூன்று மாதத்தில்



தாத்தா சுப்பிரமணியம்
பாட்டி தங்கம்மாளுடன்



நெ. து. சு. வின் மாமா சுந்தரசேகரர்
தந்தை துரைசாமி ஆகியோருடன்



சென்னை சர்ச்பார்க் பிரசண்டேஷன் காண்வெண்ட்
தலைமை ஆசிரியை ரெவரெண்ட்
சிஸ்டர் செலின் அவர்களுடன்




ஆ. தெக்கூர் பள்ளிச்
சீரமைப்பு மாநாட்டில்
பிரதமர் நேரு, கல்வி
அமைச்சர் சுப்பிரமணியம்
ஆகியோருடன்
(1959)

மாநில கவர்னர்
ஸ்ரீ பிரகாசா
மற்றும்
பெற்றோருடன்





காந்தம்மா—மணி அம்மையார்—பெரியார்—நெ. து. சு.



காந்தி அடிகள்



பெரியார்



லெனின்



நேரு



இராஜேந்திர பிரசாத்



அம்பேத்கார்



வ. உ. சிதம்பரனார்



பாரதியார்



திரு. வி. க.



பி. எஸ்.
குமாரசாமி ராஜா



ஓமந்தூர் இராமசாமி
ரெட்டியார்



கல்வி அமைச்சர்
அவினாசிலிங்கம்



ராஜாஜி



காமராசர்



பக்தவத்சலம்



அண்ணாதுரை



கருணாநிதி



எம். ஜி. ஆர்.



திலகர்



மார்க்ஸ்



லாலா லஜபதி ராய்



படேல்



வ. வே. சு. அய்யர்



டி. எஸ். எஸ். ராஜன்



யூ. கிருஷ்ணாராவ்



கே. மாதவமேனன்



அமைச்சர்
பி. பரமேசுவரன்



சர் பி. டி. தியாகராயர்



டி. எம். நாயர்



பனகல் அரசர்



எஸ். முத்தய்யா முதலியார்



சர். பி. டி. ராசன்



டபிள்யூ பி. ஏ. சௌந்தர பாண்டியன்



பட்டுக்கோட்டை அழகிரிசாமி



பாரதிதாசன்



அ. பொன்னம்பலனார்



சேலம்
இராமசாமிக் கவுண்டர்



ஏ. இலட்சுமணசாமி
முதலியார்



இரா. நெடுஞ்செழியன்



நாமக்கல் கவிஞர்



கல்கி



வழக்கறிஞர்
வி. சி.
கோபாலரத்தினம்



சேலம் நாச்சியப்பக்
கவுண்டர்



சோமயாஜுலு



புத்தனேரி
சுப்பிரமணியம்



ராஜா சர்
முத்தய்யாச் செட்டியார்



சி. சுப்பிரமணியம்



ஓ. வி. அளகேசன்



மாசிலாமணி முதலியார்



மெவரல் ஸ்டேதம்



டாக்டர்
எஸ். ஆர். யு. சவுர்



டி. சதாசிவ ரெட்டி



எஸ். கோவிந்தராசுலு
நாயுடு



திருமதி
ஓ. சி. சீனிவாசன்



குஞ்சிதம்



குருசாமி



இந்தி எதிர்ப்பு வீரர்
நடராசன்



கைவல்யம்



சாமி சிதம்பரனார்



சிவகாமி சிதம்பரனார்



எஸ். எஸ். அருணகிரிநாதர்



எஸ். வி. லிங்கம்



வி. கே. இராமசாமி
முதலியார்



சர் ஆர். கே. சண்முகம் செட்டியார்



டாக்டர் அழகப்பச் செட்டியார்



டி. எம். நாராயணசாமி பிள்ளை




ஜி. கஸ்தூரிப் பிள்ளை



மயிலை சிவமுத்து



டாக்டர் தருமாம்பாள்



புலவரேறு வரத நஞ்சையப் பிள்ளை



வ. சுப்பையாப் பிள்ளை



அ. ச. ஞானசம்பந்தம்

1. மாவட்டக் கல்வி அலுவலர் பயிற்சி

இயக்குநர் சொன்ன இரகசியம்

பொதுக்கல்வி இயக்குநர் சர்மெவரல் ஸ்டேதம் மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ச்சிபெற்ற என்னிடம் நம்பிக்கைவைத்து, இரகசியச் செய்தியைத் சொல்லியனுப்பியது, எனக்கு அச்சம் ஊட்டியது.

''எல்லோரும் அய்யாசாமியாக இருக்க மாட்டார்கள். ஊரின் வாயை மூடுவதற்கு உலை மூடி ஏது?

''என்னிடம் சொல்லும் இச் செய்தியை இயக்குநர் சிலருக்காவது சொல்லி இருக்கலாம். அவர்களில் ஒருவர், இரகசியத்தை வெளியிட்டு விடக்கூடும். கடைசியில் பழி இளைஞனாகிய என் மேல் விழலாம்.''

இப்படிப்பட்ட சிந்தனைகள் விரைந்து மின்னியதால் அச்சங் கொண்டேன். எனினும் இயக்குநர் சொன்னதைக் கேட்கத்தானே வேண்டும்! கேட்டேன்.

அவர் என்ன சொன்னார்?

''சாதாரணமாக ஆறு திங்கள் வரை முன் பயிற்சி கொடுப்பதுண்டு. உனக்கு நான்கு திங்கள் பயிற்சியே போதும் என்று ஆணையிட்டுள்ளேன்.

''எனினும், நான்கு திங்கள் முடிவதற்கு முன்பே, கோவை மாவட்டக் கல்வி அலுவலராகவே, பொறுப்பேற்கவும் நேரிட்டு விடலாம்.

''உனக்குப் பயிற்சி கொடுக்கப் போகும் திரு. குலாம் தஸ்தகீர் விரைவில் பதவி உயர்வு பெறுவார். மண்டலக் கல்வி ஆய்வாளர் பதவி *(Divisional Inspector of Schools)* விரைவில் அவருக்குக் கிடைக்கும்.

''இச் செய்தியை அவரிடம் தனியாகச் சொல்லிவை. இதைப் பற்றி மற்றவரிடம் பேச்சு மூச்சு விடவேண்டாம் என்றும் சொல். நான்

சொல்லச்சொன்னதாக, இந்த நல்ல செய்தியை அவரிடம் கூறு'' என்று இயக்குநர் கூறினார்.

என்வழி தனிவழி

அடுத்த நிகழ்ச்சிகளைக் காட்டுவதற்கு முன்பு, என் முடிவை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இயக்குநர் ஸ்டேதம் வழியைப் பின்பற்றினேனா? துணை இயக்குநர், லோபோ வழியைப் பின்பற்றினேனா?

கோபுரத்தின் நேர்கீழே நின்று பார்த்தால், அதன் சிறப்புகளையோ, குறைகளையோ சரியாக மதிப்பிட முடியாது. சற்று எட்டி நின்று பார்த்தால், உண்மையை மதிப்பிட இயலும்.

அன்றாட அற்பங்களில் மூழ்கிவிட்டால், சாத்தியக்கூறுகள் தென்படா; எய்தக்கூடிய பெருநிலைகள் தெரியா; சிக்கெனப் பிடித்துக்கொள்ள வேண்டிய, உறுதியான நல்லியல்புகள், ஒழுக்கங்கள் கண்ணில் படா!

ஊராட்சித் தணிக்கைப் பணியில் இருந்தபோதே, மேற்கூறிய உண்மை ஓரளவு எனக்குப் புலனாயிற்று.

நன்றாகவும் நாணயமாகவும் ரூபாயின் எல்லாக் காசுகளையும் பொதுப்பணிக்குச் செலவிடும்படி பார்த்துக்கொண்டேன்.

சூனாம்பேட்டை அருணாசலம், புலம்பாக்கம் முத்துமல்லா, ஒழலூர் முத்துக்குமாரசாமி, பாலூர் விசுவநாதன், மாத்தூர் கிருஷ்ணசாமி, பென்னலூர் இராமலிங்கம் போன்ற நல்லவர்களை ஆதரித்து, அவர்களைக்கொண்டு, அந்த அந்த ஊர்களுக்கு வேண்டியதைச் செய்து வைத்ததால், நான் வெற்றிகரமாகச் செயல்பட முடிந்தது.

'உனக்கு எழுத்தர் வேலை போதாதா?' என்று என்னை மட்டம் தட்டப் பார்த்தவர் ஆயிற்றே அருணாசல முதலியார், என்று பழைய எரிச்சலைப் பயிரிட முயன்றிருந்தால், நான் எந்தச் சாதனையையும் பெற்றிருக்க முடியாது.

''பிறர் மேல் பழி தீர்த்துக்கொள்ள முயல்வது, அணு அணுவாகத் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும். அத்தகைய முயற்சி, பிறரைத் துன்புறுத்துவதைக் காட்டிலும் தன்னையே சித்திரவதை செய்யும்.''

இளமையிலேயே ஓரளவு, இப் பாடத்தைக் கற்றிருந்ததால் நான் இயக்குநர் ஸ்டேதத்தின் நல்வழியை ஏற்றுக்கொள்வது எளிதாயிற்று.

நல்ல அலுவலர்களைத் தட்டிக் கொடுத்து, முன்னர் நினைத்துக்கூட பார்க்க முடியாத, பொதுத் தொண்டுகளை நிறைவேற்றி வைக்க முடிந்தது. அதைவிடப் பெரியதையும் மகத்தானதையும் செய்யவும் முடிந்தது.

பதினோர் ஆண்டு காலம், எல்லா நிலைக் கல்விக்கும் பொதுக் கல்வி இயக்குநராக இயங்கிய போதும், எவர் ஒருவரையும் வேலை நீக்கம் செய்யாமலும், ஊழல் கண்காணிப்புத் துறையிடம் யாரையும் பலி கொடுக்காமலும் காப்பாற்றி, வேலை வாங்க முடிந்தது.

பெரியவர்களின் நேரடி உதவியைக் காட்டிலும் அவர்களுடைய நற்கருத்துகள் பெருந்துணையாக இருந்தன.

இயக்குநர் ஸ்டேதம் அவ் வழியில் எனக்கு உதவி செய்தார்.

இது இளைஞர்களின் உள்ளங்களில் பதிந்துவிட்டால், பெரியவர் களின் பட்டறிவைத் தங்களுடையதாக்கிக் கொண்டால், எவ்வளவோ உயரலாம்!

பெறவேண்டியவர்களிடம் வாழ்த்தினைப் பெற்றபின், கோவை செல்வதைப் பற்றிச் சிந்தித்தேன்.

கோவைக்குச் சென்றேன்

அங்கே எங்கே தங்குவது? ஊர் சுற்றிப் பழக்கப்படாத எனக்கு, அது மலைப்பாக இருந்தது.

நண்பர் டி.டி. அய்யாசாமியோடு தொடர்பு கொண்டேன்; ஆலோசனை கேட்டேன்; உதவி கிடைத்தது.

''நம் சி. சுப்பிரமணியம் இருக்கும்போது, கவலை எதற்கு? அவர், புகைவண்டி நிலையத்திற்கு அருகில், தனி பங்களா வைத்துக் கொண்டிருக்கிறார். சமையலுக்கு ஆள் இருக்கிறான். நேரே அங்கே போ! அவரோடு தங்கிக்கொள். அப்புறம் வீடு தேடு. அவர் உதவினால் விரைவில் வீடு கிடைக்கலாம்'' என்றார்.

நான் தயக்கம் காட்டினேன்.

''வனமலர்ச் சங்க 'அண்ணன்' வீட்டிற்குப் போக கூச்சம் வேண்டாம். உன் வருகையை அவர் சுமையாகக் கருதமாட்டார். நல்ல வளத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அவர், இன்னும் திருமணமாகாதவர்; விருந்தோம்பலுக்குச் சுணங்காதவர்; தாராளமாகப் போய் இரு'' என்று அய்யாசாமி அறிவுறுத்தினார்.

அவ்வளவு சொல்லியும் தயங்கினேன்.

''சரி! நீ இந்த வண்டிக்கு வருகிறாய் என்று, நானே சி.சு.வுக்குத் தந்தி கொடுத்துவிடுகிறேன்; சில நாள் தங்குவாயென்றும் அறிவித்து விடுகிறேன்.

''அவர் புகைவண்டி நிலையத்திற்கு வராவிட்டாலும் நீயே, வண்டி வைத்துக்கொண்டு, அவர் பங்களாவிற்குச் செல். கலெக்டர் அலுவலகம் தாண்டி, வலது பக்கம் திரும்பினால், அவருடைய பங்களா இருக்கிறது.

''சி.சு. புகழ்பெற்ற வழக்கறிஞராக இருக்கிறார். ரிக்ஷாக்காரர்களுக்கு அவர் பங்களா தெரியும். அங்குப் போய்ச் சேர்வதில் ஒரு தொல்லையும் இராது'' என்று அய்யாசாமி ஊக்கப்படுத்தினார்.

அதோடு நிற்கவில்லை; சி.சு.வுக்குத் தந்தியும் கொடுத்தார்.

அடுத்தநாள் இரவு நீலகிரி விரைவு வண்டியில் சென்னையிலிருந்து கோவைக்குப் புறப்பட்டுச் சென்றேன். மறுநாள் பொழுது விடிய, கோவை அடைந்தேன்.

அய்யாசாமி கூறியபடி, வழக்கறிஞர் சி. சுப்பிரமணியம் பங்களா, எல்லாருக்கும் தெரிந்திருந்தது.

அங்குப் போய்ச் சேர்ந்தேன்.

அவர் என்னை ஆர்வத்தோடு வரவேற்றார். எனக்காக, ஒதுக்கியிருந்த தனி அறையைக் காட்டினார்.

''எது வேண்டுமானாலும் கூச்சப்படாமல் சமையல்காரனிடம் சொல்லலாம்.

''உன் வீட்டில் இருப்பதுபோலவே சுதந்தரமாக இருக்க வேண்டும்.

''அவசரப்பட்டு, கண்ட இடத்தில் வீடு பிடிக்க வேண்டாம்'' என்று சி. சுப்பிரமணியம் கூறினார்.

எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

காலைக் கடன்களை முடித்தேன். சி.சு.வோடு சிற்றுண்டி உண்டேன்; சிறிது நேரம் உரையாடினேன்.

அலுவலக நேரத்திற்கு வெகு முன்னதாகவே, மாவட்டக் கல்வி அலுவலர், வீடு தேடிச் சென்றேன்.

குலாம் தஸ்தகீரின் பேருள்ளம்

திரு. குலாம்தஸ்தகீர், அன்போடு வரவேற்றார். ஆர்வத்தோடு பாராட்டினார்; பொங்கும் உவகையோடு வாழ்த்தினார்.

''நான் உங்களை மாவட்டக் கல்வி அலுவலர் பணிக்கு 'முன் பயிற்சி கொடுக்க வேண்டும்' என்பது இயக்குநர் இட்டிருக்கும் ஆணை. ஆனால் உங்களுக்கு, இயக்குநர் பதவிக்கே பயிற்சி கொடுக்கப் போகிறேன்.

''நீங்களும் இயக்குநர் பொறுப்புக்குப் பயிற்சி பெறுகிறோம் என்று நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உள்ளுதல் எல்லாம் உயர்வாக இருக்கட்டும்'' என்று மனமார வாழ்த்தி, கட்டித் தழுவிக் கொண்டார்.

இத்தகையோர், சிலராவது இருப்பதால்தான், நாடு காடாகாமல் இருக்கிறது.

என்னை உளமார வாழ்த்திய அவ்வேளையே, நல்ல செய்தியைக் கூறத் தக்க தருணம் என்று எண்ணினேன்.

காதும் காதுமாக, திரு. குலாம்தஸ்தகீர் அவர்களிடம் இயக்குநர் அனுப்பிய செய்தியைக் கூறினேன்.

அதைக் கேட்டதும் அப்பெரியவர், உணர்ச்சிப் பிழம்பானார்.

சதிக் கதை

''அதெல்லாம் எங்கே நடக்கப்போகிறது? இயக்குநர் நல்லவர்; அவர் நல்லது செய்ய, நீதிபெற முயலலாம். இக்காலத்தில் 'போருக்கு எதிரி' என்று பொய்யாகச் சொன்னாலும் போதும், இந்தப் போர்க் காலத்தில், எவர் உண்மையைக் கண்டுபிடிக்கப் போகிறார்? நியாயம் வழங்கப் போகிறார்?'' என்று கூறினார்.

''இல்லை அய்யா! இயக்குநர் திட்டவட்டமாக, ஆனால் இரகசியமாக இதைச்சொல்லி அனுப்பினார்.

''நம் இயக்குநர் அளந்து பேசுபவர் என்பது உங்களுக்கே தெரியும். உங்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதைப் பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளாமல் செய்தி அனுப்ப மாட்டார்'' என்று பெரியவரைத் தேற்ற முயன்றேன்.

பெரியவர் உள்ளம் திறந்து, சதிக் கதையை அவிழ்த்து விட்டார்.

''இப்போது நடக்கும் இரண்டாம் உலகப்போருக்குப் பலரும் பலவகையில் ஆதரவு திரட்ட வேண்டியிருக்கிறது. கல்வித் துறையில் உள்ள நாம் நிதி, பொருள் ஆதரவு திரட்டுவதோடு, கருத்து ஆதரவும் திரட்ட வேண்டும்.

''அதற்காக, ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலரும் ஆசிரியமையங்களுக்குச் சென்று உரையாற்ற வேண்டும். உயர்நிலைப்

பள்ளிகளுக்குச் சென்று மாணவர் மன்றக் கூட்டங்களைக் கூட்டிப் பேசவேண்டும் என்பது, நமக்கு வந்துள்ள அரசு ஆணை.

''அக்கூட்டங்களில் அலுவலர் பேசுவதற்குமுன், மாணவர்களில் சிலர் பேசுவது நல்லது; அவர்களில் எவராவது எதிர்ப்பாகப் பேசினாலும் பரவாயில்லை!

''அதற்குப் பதில் கூறக்கூடிய திறமையான மாணவர்களைப் பின்னர் பேசும்படி ஏற்பாடு செய்யலாம். கடைசியாகக் கல்வி அலுவலர் பேசலாம் என்பது எனக்கு வந்த ஆணையில் இருந்த ஆலோசனை.

அதன்படி, பல உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்றேன். பேசினேன். போர் ஆதரவு திரட்டினேன்.

ஈரோட்டில் ஓர் உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றேன். முன்னேற்பாட்டின்படி, மாணவர் கூட்டம் நடந்தது.

இரண்டொரு மாணவர், இந்தியர் போர் ஆதரவில் ஈடுபாடு கொள்ளத் தேவையில்லை என்று பேசியபின், சிலர் அதை வெட்டிப் பேசினார்கள்.

''இறுதியில், நான் உரையாற்றினேன். எதிர்ப்பார்த்தபடி, ஆங்கிலேயருக்கு ஆதரவாகப் பேசினேன்.

''பேச்சு முடிந்ததும் போராதரவு நிதி திரட்டப்பட்டது. எதிர்பார்த்ததை விடத் தாராளமாக வழங்கினார்கள்.

''இப்படி நடந்தது ஒன்று! ஆனால், காவல் துறையின் தலைமை நிலையத்திற்கு நேராகச் சென்ற, 'ஒற்றரின்' செய்தி நேர்மாறாக இருந்ததாம்.

''அந்தக் கூட்டத்தில், இரண்டொரு மாணவர், போர் பற்றி நாம் நாட்டம் செலுத்த வேண்டாமென்று பேசியதை அச் செய்தி சொல்லிற்றாம். நான் தலைமை ஏற்றேன் என்ற தகவலும் அதிலிருந்தது.

''மாணவர்களும் நானும் நிகழ்த்திய ஆதரவுப் பேச்சுகளைப் பற்றிய குறிப்பே இல்லையாம். எவ்வளவு 'போர் நிதி' கொடுக்கப்பட்டது என்றும் எந்தக் குறிப்பும் காட்டவில்லையாம்.

''சொல்ல வேண்டியவற்றைச் சொல்லாமல் விட்டதால், அச் செய்தி என்னைப் பற்றிய தவறான மதிப்பீட்டிற்குக் காரணம் ஆயிற்றாம்.

''மேல் மட்டத்தில் இருப்பவர்கள் பார்வையில், உலகப் போரில், நான் ஆங்கிலேயருக்கு எதிர்ப்பானவனாம்.

''அத்தகைய சிதைந்த செய்தி மேலிடத்திற்கு எட்டும் வேளை, என்னை மண்டலக் கல்வி ஆய்வாளராக நியமிக்கலாம் என்ற குறிப்பு ஆலோசனையில் இருந்ததாம். நம்பிக்கை இழந்த மேலிடம், என்னை விட்டுவிட்டு, அடுத்தவருக்குப் பதவி உயர்வு தந்துவிட்டது.

''இரகசியத்தை அறிந்த சர்மெவரல் ஸ்டேதம், எனக்குத் தெரியாமல் தன்னிச்சையாக, இதைப்பற்றி ஆய்ந்து பார்த்தாராம். என்மேல் சுமத்தப்பட்ட பழி ஆதாரமற்றது என்று தெரிந்துகொண்டார். உரிய 'ஆலோசகரிடம்' எடுத்துச் சொல்லி, எனக்குச் செய்த தீங்கைத் துடைக்க முயல்கிறார் என்று கேள்வி.

''பலிக்க வேண்டும் என்பது என் விழைவு; விழைவுகள் பலித்து விடுமா?

''ஒரே ஒரு ஆறுதல். இதனால் நம் இயக்குநர் என்னை மேலும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்.''

''ஏன் அப்படித் திரித்துச் செய்தி அனுப்பப்பட்டது?''

சதியின் வேர்

''காவல்துறை சுருக்கெழுத்தர் ஒருவருடைய மகன், ஈரோட்டில் அந்தக் குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளியில் படித்து வந்தான். ஆண்டுத் தேர்வில் போதிய மதிப்பெண்கள் பெறவில்லை என்று நிறுத்தப்பட்டான்.

''பிறகு, காவல்துறையின் பெரிய அலுவலர் ஒருவர், என்னை அணுகினார். 'தலைமை ஆசிரியருக்குப் பரிந்துரைத்து, அப் பையனை மேல் வகுப்பிற்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும்' என்று சொன்னார். நான் இசையவில்லை.

''அதை ஆழப் பதிய வைத்திருந்த காவல்துறை சுருக்கெழுத்தர் வாய்ப்பு கிடைத்தபோது, எனக்குக் கெடுதலான, தவறான, சிதைவுச் செய்தியை மேலிடத்திற்கு அனுப்பி விட்டார்.

''இவற்றையெல்லாம் இயக்குநர் இரகசியமாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். எவ்வளவு திறமையாகவும் நேர்மையாகவும் பணிபுரிந்தாலும், 'சின்னவர்கள்' தயவில், 'பெரியவர்கள்' வாழ வேண்டிய காலத்தில் நாம் வாழும்படி நேர்ந்துவிட்டதே'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

2. அலுவலுக்கு அடங்கியே உரிமை

கல்யாணசுந்தரரின் அறிவுரை

நான், கோவையில் மாவட்டக் கல்வி அலுவலர்க்கான பயிற்சி பெற்ற கதையைச் சொல்லுமுன், அதற்கு முந்திய நிகழ்ச்சியொன்றைக் காட்டுவது நல்லது.

என்னிடம் உடல்நலச் சான்றிதழ் கேட்டதையும் அதை வாங்கி அனுப்பியதையும் முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.

அப்படிச் செய்த பிறகு, நானும் என் மனைவி காந்தம்மாவும் காஞ்சிபுரம் சென்று வந்தோம்.

உறவினர்களைக் காணவா? இல்லை.

அன்றைய நிலையில் உறவினர்கள் என் கலப்புத் திருமணம் பற்றிப் பகைகொண்டிருந்தார்கள்.

காஞ்சிபுரம் சேலை எடுத்துக்கொடுக்கச் சென்றேனா? இல்லை.

பின் எதற்குச் சென்றேன்?

நல்லவர் ஒருவரிடம் வாழ்த்துப் பெறுதவற்குச் சென்றோம்.

அவர் யார்? காஞ்சிபுரம் பள்ளி ஆய்வாளர் திரு. டி.எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை. அவர் முன்னர், தஞ்சாவூரில் பள்ளி ஆய்வாளராக இருந்தார். அங்கு அவரது அரவணைப்பில் நான் வளர்ந்தவன்.

''நான், மாவட்டக் கல்வி அலுவலராகப் போகிறேன் என்ற செய்தியைக் கேட்டு அவர் பூரிப்பார்; மெய்யாகவே மகிழ்வார் என்பது எங்கள் எண்ணம்.

எனவே, முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு, என் மனைவியுடன் கல்யாண சுந்தரனாரைக் காணச் சென்றேன்.

நான் காஞ்சியில் உயர்நிலைப் பள்ளி மாணவனாக இருந்த போது குடியிருந்த மாசிலாமணி முதலியார் வீட்டிற்கு மேலண்டை வீட்டில், திரு. கல்யாணசுந்தரனார் தங்கி இருந்தார்.

அவர்கள் இல்லத்தில் இரண்டு நாள்கள் தங்கினோம். அவ்வீட்டரசியாரும் அவரும் எங்களை அவர்கள் குடும்பத்தவர்களைப் போன்ற பரிவுடன் நடத்தினார்கள்.

''நான் மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்படுவேன்'' என்று நான் கூறியதும் திரு. டி.எஸ். கல்யாணசுந்தரனார் மகிழ்ச்சிக் கூத்தாடினார்.

''தம்பி! மாவட்டக் கல்வி அலுவலர் பதவி தொடக்கம்; இயக்குநர் பதவி உன்னுடைய குறிக்கோளாக இருக்கட்டும்'' என்று வாழ்த்தி மகிழ்ந்தார்.

மகிழ்ச்சியிலும் மறக்காது, ஆலோசனை ஒன்று கூறினார்.

ஒவ்வொரு மனிதருக்கும் குறையும் உண்டு; நிறையும் உண்டு. அழுக்காறு என்பது எல்லா இனத்தையும் ஆட்டிப் படைக்கும் தீய இயல்பாகும்.

''ஆனால் தமிழருக்கோ'' அதுவே முதலும் முடிவுமான குணம்.

''நம்மோடு போட்டியிடுபவர்கள் பற்றிப் பொறாமைப்பட்டால் அதைப் புரிந்து கொள்ளலாம்.

'எங்கோ, எதிலோ பெரியவராக இருக்கும் தமிழர்கூட, தம்மோடு போட்டி இடாதவரின் வளர்ச்சியைக் கண்டு தாங்கிக் கொள்ளமாட்டார். அழுக்காறு கொள்வார்; அல்லல் படுவார்; அல்லல் படுத்தவும் செய்வார்.

''இதை ஏன் சுட்டிக் காட்டுகிறேன் தெரியுமா? 'பிரபேசன்' காலத்தில் தமிழ்நாட்டுப் பகுதியில் வேலை பார்க்காதே!

''நம் மாகாணத்தின் வேறு மொழி பகுதிக்குப் போய்விடு.

''எவ்வளவு காலம் வெளியில் இருக்க முடியுமோ அவ்வளவு காலம் பிறகு பகுதிகளில் இருந்துவிட்டு வா.

''உடன் இருந்து, உழைத்து உதவினால் அரித்து எடுப்பார்கள்.

''எங்கோ இருந்துகொண்டு, தன்னை மட்டும் வளர்த்துக் கொண்டால், உச்சி மேல் வைத்துக் கொண்டாடுவார்கள்.

''உரிய நேரத்தில் இயக்குநரைக் கேட்டுத் தெலுங்குப் பகுதிக்கோ, கன்னடப் பகுதிக்கோ போய்விடு.

''நான் சொல்வதைத் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டாயென்று எண்ணி, ஒளிக்காமல் பேசுகிறேன்'' என்றார்.

அக்கால கட்டத்தில் சென்னை மாகாணத்தில், பதவி வகித்த, மாவட்டக் கல்வி அலுவலர்கள், தாய்மொழியல்லாத தென்னிந்திய மொழியொன்றைக் கற்றுத் தேர்வு எழுதி வெற்றிபெற வேண்டும்.

அவ் விதிப்படி, நான் கோவையில் சேர்ந்ததும் 'என்ன மொழி கற்ற விரும்புகிறாய்?' என்று இயக்குநரிடம் இருந்து எனக்குக் கேள்வி வந்தது.

கல்யாணசுந்தரனாரின் அறிவுரை நினைவிற்கு வந்தது; தெலுங்கு படிக்க விரும்புவதாகப் பதில் எழுதினேன்.

உரிய நேரத்தில், தெலுங்கு மாவட்டம் ஒன்றின் கல்வித்துறை அலுவலராக நியமிக்கப்பட்டேன்.

குலாம் தஸ்தகீர், டி.எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை போன்றவர்களே உலகில் இருந்தால், மக்கள் இவ்வளவு துன்பப்பட மாட்டார்களே.

வேறு வகையானவர்களும் உலகில் நிறைய உள்ளனர். இத்தகைய ஒருவரிடம் நான் சிக்க நேர்ந்தது.

மீண்டும் துணை ஆய்வாளர் பயிற்சி

என்னுடைய நான்கு திங்கள் முன் பயிற்சியின்போது என்னென்ன பணிகளில் பயிற்சி பெறவேண்டும் என்று எனக்கு விரிவான ஆணை பிறப்பிக்குமாறு, மண்டலப் பள்ளி ஆய்வாளருக்கு, இயக்குநர் கட்டளையிட்டார்.

அந்த ஆணை, நான் இளநிலை பள்ளி ஆய்வாளராக இருந்ததைச் சுட்டிக்காட்டியது.

இருந்தும் நான் ஆய்வாளர் அலுவலகத்தில் அதே பணியில் ஒரு திங்கள் பயிற்சி பெற வேண்டும் என்று மண்டல ஆய்வாளர் திரு. ஆர்.எம். சவூர் கட்டளையிட்டார்.

அது தேவையில்லை என்று எழுத திரு. குலாம் தஸ்தகீர் விரும்பினார்.

அப்படிச் செய்வதால் என் மீது தப்பெண்ணம் வளருமென்று அஞ்சி, அப்படிச் செய்ய வேண்டாமென்று, நான் வேண்டிக் கொண்டேன்.

கோவை வட்ட ஆய்வாளரோடு ஒரு திங்கள் பல பள்ளிகளுக்குச் சென்றேன்.

புதிதாகக் கற்றுக்கொண்டது அதிகம் இல்லை. ஆயினும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களோடு இருந்த தொடர்பினை வளர்த்துக்கொள்ள அது உதவிற்று.

ஆய்வாளர் பயிற்சி முடியும் தருவாயில், குலாம்தஸ்தகீருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைத்தது.

புதிய பயிற்சியாளர்

அவர் இடத்திற்குத் திருச்சி மாவட்டக் கல்வி அலுவலரான திரு. சி. இரகுநாதன் மாற்றப்பட்டார். அவரிடம் மாவட்ட அலுவலர் பயிற்சி பெற்றேன்.

அவர் அய்யங்கார். நான் குறைபட அவர் இடங்கொடுக்க வில்லை. என்னிடம் அன்பும் ஆதரவும் காட்டினார்.

வேலை கற்றுக் கொடுப்பதிலும் ஆர்வத்தோடு இருந்தார். அவருடைய நட்பு பல்லாண்டு காலம் தொடர்ந்தது.

திரு. இரகுநாதன் அலுவல் பற்றி ஈரோடு சென்றார். என்னையும் அழைத்துக்கொண்டு போனார்.

ஈரோட்டிற்குச் செல்லும்போது, பெரியார் ஈ.வெ.ரா.வைக் காண, என் மனைவியையும் அழைத்துச் செல்லலாம் என்று அவரே யோசனை கூறினார்.

அப்படியே காந்தம்மாவை அழைத்துச் சென்றேன். நாங்கள் இருவரும் பெரியார் வீட்டில் தங்கியிருந்தோம் அவரோடு விருந்துண்டோம். உரையாடினோம். மகிழ்ந்தோம்.

மாணவர் இரா. நெடுஞ்செழியன்

அப்போது மாணவர் இரா. நெடுஞ்செழியன் பெரியார் இல்லத்திற்கு வந்து இருந்தார். அவரைப் பெரியார் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

பெரியாரை நினைக்கும்போது எனக்கு நாவலர் நினைவிற்கு வருவதும், நாவலரை நினைக்கும்போது அவரோடு என்னைத் தொடர்பு படுத்திய பெரியார் நினைவில் மின்னுவதும் அதனால் தான்.

சி. சுப்பிரமணியத்தின் பரிவு

திரு. சி. சுப்பிரமணியன் வீட்டில் அவரது விருந்தாளியாகத் தங்கியிருந்த எனக்குத் தனி வீடு கிடைக்க ஏறத்தாழ இரண்டு திங்கள் ஆயிற்று.

அவ்வளவு காலம் தேடிய பிறகு, கோவை இரத்தினசபாபதி புரத்தில் வெங்கடசாமி தெருவில் தனி வீடு ஒன்று கிடைத்தது.

அவ் வீடு கிடைத்து, நான் அங்குக் குடியேறுவதற்கு முன்பு, இந்திய வரலாற்றில் இடம் பெற்றுள்ள துடிப்பான போராட்டம் ஒன்று வெடித்தது.

நான் குறிப்பிடுவது எதை?

1942ஆம் ஆண்டு நடந்த ஆகஸ்ட் போராட்டத்தைக் குறிப்பிடுகிறேன்.

அப் போராட்டத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு வந்த நாளன்று திரு. சி. சுப்பிரமணியம் என்னிடம் தனியாகப் பேசினார்.

அப் போராட்டத்தில் அவருக்குப் பங்கு இருக்கலாம். அவரைக் காவல்துறை ஒற்றர்கள் கண்காணிக்கலாம்.

அவ் வீட்டில் தங்கியிருப்பதால் அரசு அலுவலில் சேர்ந்துள்ள எனக்கு ஏதாகிலும் தீங்கு நேரிடலாம். காவல்துறையினர் என் பெயரையும் சி. சுப்பிரமணியத்துடன் இணைத்து எழுதிவிட்டால், வேலை போய்விடக் கூடும்.

இவற்றை விளக்கமாகக் கூறிவிட்டு, ''நீங்கள் தொடர்ந்து இங்கே இருக்க விரும்பினால், தாராளமாக இருக்கலாம். இந்த வம்பை விரும்பாமல் வேறு இடம் போய்விட விரும்பினால், நல்ல ஓட்டலில் ஏற்பாடு செய்யட்டுமா?'' என்று மிகுந்த பரிவுடன் கேட்டார்.

போராட்டத்தில் ஈடுபட விரும்பாவிடினும் நான் கோழையாகி, அங்கு இருந்து ஓட விரும்பவில்லை.

''வருவது வரட்டுங்க; வீடு கிடைத்தால் போகிறேன்; இல்லாவிட்டால் தொடர்ந்து உங்களோடு தங்கியிருக்கிறேன்'' என்று பதில் கூறினேன்.

''சரி! அப்படியே செய்யலாம். எனினும் சில நாள்கள் வரை, இங்கு வருவோர் கண்ணில் படாமல் இருக்கப் பாருங்கள்'' என்று எச்சரித்தார்.

ஆகஸ்ட் போராட்டம் தொடங்கியது. கோவைப் பகுதியில் சூலூர் விமான நிலையத்தில் தீவைத்ததாகச் செய்தி வந்தது. நகரம் அல்லோலகல்லோலப்பட்டது.

அந்நாளும் அடுத்து சிலநாள்களும் நான் விடுதலைப் போராட்டத்தில் தொடர்பு கொண்டு இருந்த திரு. சி. சுப்பிரமணியத்தோடு தங்கியிருந்தேன்.

திரு. குலாம்தஸ்தகீர் எந்தப் பாவமும் செய்யாது பழியேற்றதைப் போன்று நான் குற்றச்சாட்டிற்கு ஆளாகாமல் தப்பியது, என்னுடைய திறமையால் அல்ல; தற்செயலாக நேர்ந்தது.

ஆகஸ்ட் போராட்டம் தொடங்கிய பத்து நாள்களுக்குப் பிறகே, எனக்கு வீடு கிடைத்தது.

அப்படிக் கிடைக்கும் என்று தெரிந்ததும் சென்னைக்கு எழுதினேன்; என் மனைவியை அழைத்துக் கொண்டேன்.

வேலையா? உரிமையா?

சாரதா வித்யாலயத்தில் என் மனைவி பட்டதாரி ஆசிரியையாகப் பணியில் இருந்தார். அது என்னவாயிற்று?

காந்தம்மா, தியாகராய நகர் சாரதா வித்யாலயத்தில் 'பிரபேசனி'ல் இருந்தார்.

நான் கல்வி அலுவலராகத் தேர்ந்து எடுக்கப்பட்டதும் என் மனைவி, தாளாளர் வாசு தேவாசாரியாரைக் கண்டார். தனக்கு வாய்த்த நற்பேற்றை அவரிடம் எடுத்து உரைத்தார்.

''என் கணவருடைய பயிற்சி அக்டோபர் இறுதியில் முடிவுறும். நவம்பர் தொடக்கத்தில், ஏதாவது ஒரு வெளி மாவட்டத் தலைநகரத்திற்கு அவர் சென்று வேலை பார்க்க நேரிடும். அப்போது, நானும் அவரோடு செல்வதற்கு விரும்புகிறேன்.

''ஆகவே, நவம்பர் முதல் நாளிலிருந்து என் ஆசிரியைப் பதவியை விட்டுவிடுவதாக முன் அறிவிப்பு கொடுக்க விரும்புகிறேன்'' என்றார்.

''அம்மா! சட்டம் உன் பக்கம் இருக்கிறது. ஒரு திங்கள் அறிவிப்பே போதும். கல்வித்துறை விதி முறைப்படி, நான் உன்னை நவம்பர் முதல்நாள் வரை என் பள்ளியில் வைத்திருக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

''ஒரே ஒரு சங்கடத்தை உன்னிடம் சொல்லட்டுமா? நவம்பரில் உனக்குப் பதில் வேறோர் ஆசிரியை, அதுவும் தாவர இயல் பாடத்தில், கிடைப்பது அரிது என்பதை நீ அறிவாய். அப்படிக் கிடைக்காவிட்டால், பல பெண்களின் படிப்பு பாழாகிவிடும்.

''உன்னிடம் பாடம் கற்கும் பிள்ளைகள் படிப்புக்கெட, நீ விரும்ப மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்.

''சிறு உபகாரம் செய். இப்போதே, மாற்று ஆசிரியரைத் தேடட்டுமா? அப்படி ஒருவர் கிடைத்தால், அந்த தேதியில் இருந்து விலகிக்கொள்ளலாமா?'' என்று கேட்டார்.

காந்தம்மா, மறுநாள் பதில் கூறுவதாகச் சொல்லிவிட்டு வந்தார்.

மறு நாளைக்கு முன், மற்றொருவர் சொல்லியனுப்பினார்.

அவர் யார்?

பொதுக் கல்வித்துணை இயக்குநர், திரு. அரங்கநாத முதலியார்.

என்ன சொல்லி அனுப்பினார்?

''காந்தம்மா இப்போது வேலையை விடவேண்டாம். பள்ளி நிர்வாகம் விடச் சொன்னால்கூட அவருக்குச் சட்டப்படி உள்ள உரிமையைக் கைவிட வேண்டாம், மாறாகக் கல்வித்துறைக்கு முறை இடட்டும். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.''

''உரிமையைவிட, பொது நன்மை பெரிது'' என்று காந்தம்மா நினைத்தார்.

நானும் அப்படியே நினைத்தேன்.

மறுநாள், எப்போது வேண்டுமானாலும் விலகிக்கொள்வதாகத் தாளாளரிடம் அறிவித்துவிட்டார்.

சில நாள்களில் புதிய ஆசிரியை ஒருவரைக் கண்டுபிடிக்க முடிந்தது.

காந்தம்மா அந்தக் கணமே வேலையில் இருந்து நீங்கிக் கொண்டார்.

எந்த அலுவலுக்காக நியமிக்கப்படுகிறோமோ அந்த அலுவலுக்கே கேடு விளைவிக்கும் அளவு தத்தம் உரிமைக்காக மட்டுமே போராடும் இக்காலத்தவர், எங்களைப் பைத்தியம் என்று கருதினால் வியப்பில்லை.

3. விம்மி விம்மி அழுதேன்

பள்ளிப் படிப்பு எட்டாத காலம்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டாம் ஆண்டில் கோவை நீலகிரி மாவட்டங்கள் இரண்டிற்குமாக, ஒரே ஒரு மாவட்டக் கல்வி அலுவலரே இருந்து பணி செய்து வந்தார்.

அதேபோல், ராயலசீமைப் பகுதியில் கடப்பை, கர்னூல் ஆகிய இரு மாவட்டங்களை இணைத்து, ஒரே ஒரு மாவட்டக் கல்வி அலுவலரின் மேற்பார்வையில் வைத்திருந்தார்கள்.

அது எப்படி முடிந்தது?

கல்வி நிலையங்கள் மிகவும் குறைவாக இருந்ததால் முடிந்தது.

இந்தியாவின் பிற மாகாணங்களில் இருந்தது போன்றே, சென்னை மாகாணத்திலும் தொடக்கப் பள்ளிக்கூடம் இல்லாத சிற்றூர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தன. உயர்நிலைப் பள்ளிகள் எல்லாப் பேரூர்களிலும் இருந்தன என்று சொல்லமுடியாது.

மனிதர்களை மக்களாக்கும் அடிப்படைச் செல்வமாகிய கல்வி வாய்ப்புகள்கூட பெறாதவர்களே, அன்று நம் மக்களில் பெரும்பாலோர் ஆவார்.

ஆண்ட ஆங்கிலேயர், மாந்தர் உரிமைகளில் முன்னதான கல்வியைப் பொதுச் சொத்தாக்காதது தவறு.

அதைப்பற்றிக் கவலைப்படாதது, நம் மக்களின் அறியாமை.

இந்த அவலம் முழுமையாகத் துடைக்கப்படாதது அநீதி.

எந்த அளவிற்கு நமது மாநிலத்தில் கல்விப் பற்றாக்குறை இருந்தது?

அன்று கோவை மாவட்டத்தின் சிறந்த நகரமான காங்கேயத்தில் உயர்நிலைப் பள்ளி கிடையாது; நடுநிலைப் பள்ளி ஒன்று மட்டுமே இருந்தது.

மொத்தத்தில், இன்றைக்கு இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளில், நான்கில் மூன்று பங்கு, தன்னாட்சி இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டவை.

காங்கேயம் நடுநிலைப்பள்ளியை ஆண்டுத் தணிக்கை செய்ய, மாவட்டக் கல்வி அலுவலர் திரு. இரகுநாதன் சென்ற போது, நானும் அவருடன் சென்றேன்.

தாராபுரம் உயர்நிலைப்பள்ளியை அவர் தணிக்கை செய்த போதும் நான் உடன் இருந்து உதவினேன்.

தாராபுரத்தில், முன்னர்க் காணாத அனுபவம் எனக்குக் கிடைத்தது.

அது என்ன?

ஆடிக்காற்றின் வலிமையை முழுமையாக உணர்ந்தேன்.

'ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்' என்பது நாட்டு வழக்கு.

சென்னையிலும் செங்கற்பட்டிலும்கூட அந்தக் காற்றின் அட்ட காசத்தை எதிரிட்டது உண்டு.

ஆனால் தாராபுரம் காற்றோ, வலிமையின் எல்லையாக அடித்தது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு திருப்பூர் நகர் மன்றம், ஓர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியை நடத்தி வந்தது.

அப்பள்ளியைத் தணிக்கை செய்ய மாவட்டக் கல்வி அலுவலர் சென்றபோது நானும் அவரோடு சென்றேன்.

அவரது காரில் சென்றோம்; பெட்ரோல் செலவுக்கென்று அவர் என்னிடம் ஏதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தலைமை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அய்யர்

அன்று, திருப்பூர் நகர் மன்ற ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, பெயர் பெற்ற கல்வி நிலையமாக இருந்தது. அப் பெருமையைப் பல்லாண்டு, காத்து வந்தது.

அப்போது, அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் யார்? திரு. கிருஷ்ண மூர்த்தி அய்யர் என்னும் அறிஞர்.

அவர், நாவன்மைக்குப் புகழ்பெற்ற சீனிவாச சாஸ்திரியாரின் நெருங்கிய உறவினர்; ஆங்கிலப் புலமை மிக்கவர்; ஆங்கிலத்தில் உரையாற்றுவதில் வல்லவர்; ஆளுமையும் செயல்திறனும் சேர்ந்த, தலைமை ஆசிரியர்.

புலமை, திறமை, பொலிவு, கனிவு, கண்டிப்பு ஆகிய அய்ந்தும் ஒரு பள்ளி ஆசிரியருக்குத் தேவை.

இவற்றைப் பெற்றிருந்த தலைமை ஆசிரியர் திரு. கிருஷ்ண மூர்த்தி அய்யர், என் மதிப்பைப் பெற்றார்.

தந்தி வந்தது

திருப்பூரில், இரண்டாம் நாள் பிற்பகல், நான் நடுநிலை வகுப்புகளில், பாடங்கள் நடத்துவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவ் வேளை, தலைமை ஆசிரியரின் கடைநிலை ஊழியர் என்னிடம் வந்தார்.

''ஏதோ, தந்தியோடு, கோவையில் இருந்து ஒருவர், உங்களைக் காண வந்து இருக்கிறார்; தலைமை ஆசிரியர் அறையில் உள்ளார்; உடனடியாகத் தங்களிடம் சொல்லவேண்டிய செய்தியாம்; உடனே பார்க்க வேண்டுமாம்'' என்று மெல்லிய குரலில் கூறினார்.

நான் உடனே, தலைமை ஆசிரியரின் அறைக்குச் சென்றேன். நான், உள்ளே காலெடுத்து வைத்ததும், முன் பின் தெரியாத ஒருவர் - ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்த ஒருவர் - என்னிடம் ஒரு கடிதத்தை நீட்டினார்.

அதை வாங்கிக்கொண்டேன். ஒரு நாற்காலியில் அமர்ந்த பின், அக்கடிதத்தோடு இணைந்த ஏற்கெனவே, பிரிக்கப்பட்டிருந்த, தந்தியைப் படித்தேன்.

தாயை இழந்தேன்

இமைப்பொழுது தலை சுழன்றது; உலகம் சுழன்றது; சிந்தனை சூன்யம் ஆயிற்று. அங்கே உட்கார்ந்து இருந்த ஓராசிரியரிடம் தந்தியைக் காட்டினேன்.

அதைப் படித்துவிட்டு, ஆசிரியர் வந்தவரை விசாரணை செய்தார்.

''இந்தத் தந்தியைப் பிரித்தது யார்? இதை உன்னிடம் கொடுத்தது யார்?'' என்பவை கேள்விகள்.

''அய்யா வீட்டு அம்மா, வாங்கினார்கள்; பிரித்துப் பார்த்தார்கள்; செய்தியைப் படித்ததும் பதறினார்கள்.

''அப்போது, என் வீட்டுக்காரி அந்த அம்மாவோடு பேசிக் கொண்டிருந்தாள். அவள், என்ன செய்தி என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். உடனே வீட்டிற்கு வந்தாள்.

''திருப்பூர் சென்றிருக்கும் அய்யாவிடம் நேரில் அத் தந்தியைக் கொடுத்துவிட்டு வரும்படி சொன்னாள்.

''அய்யா வீட்டிற்கு வந்து, தந்தியை வாங்கிக்கொண்டு, புறப்பட்டேன். திருப்பூர் வந்ததும் நகராட்சி பயணிகள் விடுதிக்குச் சென்றேன். அங்குள்ள காவலர், என்னை இங்கே அனுப்பிவைத்தார்'' என்று சொன்னார்.

தந்தி கொடுத்த பெயரை என்னால் அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை. சென்னையில் இருந்த என் நேர் இளவல் சிவானந்தத்திற்கு வந்த தந்தி. அதைச் சிறு குறிப்போடு எனக்கு அனுப்பி இருந்தான்.

''இச் செய்தி மெய்யாக இருக்குமா'' என்று, தந்தியைப் படித்த ஆசிரியர் கேட்டபோது, எனக்கும் அப்படியொரு அய்யம் எழுந்தது.

''பொய்யாக இருக்க வேண்டும் என்று அவாவினேன்.'' அவாவிப் பயன்?

இதற்குள், அச்செய்தி, ஏதோ ஒரு வகுப்பில் இருந்த மாவட்டக் கல்வி அலுவலர் காதுக்கு எட்டியது. அவர், என்னைத் தேடி வந்தார்; தலைமை ஆசிரியரும் உடன் வந்தார். தந்தியை வாங்கிப் பார்த்தார்கள்.

''அவர்களுக்கு எவ்வளவு காலமாக, உடம்பு நன்றாய் இல்லை?'' இருவரும் கேட்ட ஒரே கேள்வி.

''என் வீட்டோடு, எனக்குக் கடிதத் தொடர்பு இல்லை. உடம்புக்கு என்ன? எவ்வளவு நாளாக நோய், இத் தகவல்கள் காற்றுவாக்கிலும் எனக்கு எட்டவில்லை'' என்றேன்.

திரு. இரகுநாதன், நொடியில் அதன் உட்பொருளைப் புரிந்து கொண்டார்.

''ஒவ்வொன்றினுக்கும் ஒரு வரம்பு உண்டு. வெகுளிக்கும் வரம்பு வேண்டும். உடனே தந்தி கொடுத்திருக்கக் கூடாதா? முகத்தையாவது பார்த்திருக்கலாம். தகனம் ஆன பிறகு, தெரிகிறது; பார்த்து ஆறுதல் அடையும் வழியில்லை. என்ன செய்வது?

''நல்லது கெட்டது மாறிமாறி வரும். இரண்டையும் ஏற்றுத் தாங்கிக் கொள்வதைவிட வழியில்லை.

''இங்கிருந்தபடியே உங்கள் ஊருக்குச் செல்ல விரும்பினால், அப்படியே செய்யலாம். நெடும்பயணத்திற்கு வேண்டிய பணம் கொண்டு வராதிருந்தால் கவலைப்படத் தேவையில்லை. நான் கை பதிலாகத் தருகிறேன். ஊருக்குப்போய் வாருங்கள்'' என்றார் இரகுநாதன்.

''முதலில் கோவைக்குச் செல்கிறேன். நாளை அங்கிருந்து ஊருக்குப் போய் வருகிறேன். மூன்று நாள்களுக்கு விடுப்பு கொடுங்கள்'' என்றேன்.

''அதற்கென்ன? உடனே புறப்பட்டுச் செல்லுங்கள்'' என்று சொல்லிப் பரிவுடன் விடை கொடுத்தார்.

''பயணிகள் விடுதிக்குச் சென்றதும் முதலில் தலைமுழுகி விடுங்கள். அப்புறம் சிறிது தெளிவு ஏற்படும்; பயணத்தில் தொல்லை தோன்றாது'' என்று தலைமை ஆசிரியர் வழிகாட்டினார்.

பயணிகள் விடுதிக்கு விரைந்தேன்; அறைக்குள் நுழைந்ததும் அழுதேன்; அழுதேன்; விம்மி, விம்மி அழுதேன். பல மணித்துளிகள் அழுதேன்.

'அழுது பயன் இல்லை' என்றது அறிவு.

'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?' என்று முணுகிற்றுப் பழம் பாடல்.

'காலை மணந்த மணாளன் மாலை மறைந்தாலும் துக்கம் விசாரிக்க வந்திருப்போர் முன், இளம் விதவை அலறி அழக் கூடாது' என்பது ஜப்பானின் புது நெறி.

'அத்தகைய உறுதிப்பாடு நமக்குள் வளரவேண்டும்!'' இப்படி ஒரு கட்டுரை, கல்கத்தாவில் இருந்து வெளிவந்த 'மாடர்ன் ரெவியூ' என்ற திங்கள் இதழில் வெளியாகி இருந்தது.

அதைக் கருப்பொருளாகக் கொண்டு, 'ஜப்பானில் நவயுகம்' என்று தலைப்பு இட்டுக் கட்டுரை ஒன்றை எழுதி, உத்தமபாளையம் 'பாரதி' இதழில் வெளியிட்டிருந்தேன்.

அது நினைவுக்கு வரவும் அழுவதற்கு வெட்கப்பட்டேன்; வெட்கத்தை வேதனை வென்றது. அழுது ஓய்ந்தேன். பின்னர் தலைமுழுகினேன்.

சிந்தனை விரைந்தது. தந்திச் செய்தி பளிச்சிட்டது.

'செப்டம்பர் 21 ஆம் நாள் என் தாய் மறைந்தார்' இது தந்திச் செய்தி.

அடுத்த நாள் எரியூட்டப்பட்டது என்பது தம்பியின் குறிப்பு.

மூன்றாம் நாள், தந்தியும் குறிப்பும் அஞ்சல் வழி எனக்கு ஞ்ஞுப்பப்பட்டது. உள்ளூரில் அஞ்சல் நிலையம் இல்லாமையால், வாலாஜாபாத் சென்றவர் வழியாக அவை அனுப்பப்பட்டன.

'இத்தகவலை நான் கொடுத்தேன் என்பது தெரியவேண்டாம்!' சிவானந்தம் இப்படியொரு குறிப்பும் அனுப்பியது வேதனையை மேலும் பெரிதாக்கிற்று.

என் தாய்

என்னிலும் எடுப்பான என் அன்னையின் உருவம் மனக்கண் முன் பளிச்சிட்டது. பொறுமையின் உருவம் அது.

செல்வத்தில் பிறந்து, செழிப்பில் வாழினும் செருக்குக் கொள்ளாத தாயின் உருவம் நிழலாடிற்று.

வீட்டிலுள்ளவர்களுக்குத் தொண்டு செய்வதோடு, தொழுவத்தில் இருந்த மாடு கன்றுகளையும் களத்து மேட்டு ஒப்படியையும் சுணங்காது கண்காணித்த தாயின் உருவம் ஓடிற்று.

சுற்றம் தழுவுவதிலும் ஏழைகளுக்கு உதவுவதிலும் புகழ் பெற்ற என் அருமைத் தாய், எல்லோரையும் போல, சூழ்நிலையின் 'சாவி'ப் பயிர்.

வீட்டில் வளமிருந்தாலும் பெண்கள் எழுத்தறிவு பெறக் கூடாது என்பது எங்கள் சுற்றத்தாரின் மரபு. என் தாய் அவ் வநீதியின் கடைசி அடையாளம்.

முதற் பிள்ளை பெற்றபின், இரவிக்கை அணியக்கூடாது என்பது எங்கள் சாதிச் சிறுகூட்டத்தின் மூடப் பழக்கங்களில் ஒன்று.

அந்தப் பழக்கத்தின் கடைசி அடிமை என் தாய்.

சிரிக்காதீர்கள்! மற்றவர்கள் முன்பு கணவனோடு மனைவி பேசக்கூடாதென்பது மற்றோர் மரபு. அம் மரபால் 'ஊமையானவர்' என் அருமை அன்னை.

உணவு பரிமாறும் போதும், என் தந்தை என் தாயோடு, பேசிப் பார்த்தது இல்லை. தாய் கைக் குறிப்பைக் கொண்டே செயல்பட வேண்டும்.

பல தலைமுறைகளாக இழையோடி வரும் நல்லியல்புகளோடு, சேர்ந்துள்ள மூடப்பழக்கங்கள் என்னும் 'என்புருக்கி'யால், நலிந்து போனவர் என் தாய்.

என்னையும் என் இளவல்கள் மூவரையும் பெற்று வளர்த்த மகிழ்ச்சியை வேளைக்கு வேளை கொப்பளிக்கும் கணவரின் வெகுளியால் சுடுசொற்களால் தேயவிட்டு, வாடிய சான்றோர் என் தாய்.

நாங்கள் ஆளாகி, 'சான்றோர்' எனப் பெயர் பெறுவதற்கு முன், தனது எண்ணம்போல், 'பூவோடும் பொட்டோடும்' மறைந்தவர், என் தாய்.

எனது புரட்சி நடவடிக்கையால் எத்தனை வேதனைப்பட்டாரோ என் தாய்!

பெரிய சமுதாய மாறுதலுக்குப் பெரிய விலை கொடுக்கத் தான் வேண்டும்! மகனைப் பார்க்க முடியாத விலையையா கொடுக்க வேண்டும்.

4. தந்தையாரைக் கண்டேன்

ஈராண்டுக்குப் பின் நெய்யாடுபாக்கம்

தாயின் மறைவு பற்றிய துயரச்சுமையோடு, திருப்பூரில் இருந்து புறப்பட்டேன். கோவையை அடைந்தேன். பழக்கத்தால், வீடு தேடிச் சென்றேன்.

வீடு சேர்ந்ததும்,

''அத்தான், என்னால் அல்லவா, உங்களுக்கு இந்த நிலை; இவ்வளவு ஒதுக்கீடு; இழிவு'' என்று என் அருமை மனைவி காந்தம்மா அலறினார்.

நானாகத் தேடிக்கொண்டது; உன்னால் நேர்ந்ததல்ல'' என்று கூறிக் காந்தம்மாளைத் தேற்ற முயன்றேன்.

''முன்பு, லிங்கமும் பொன்னம்பலனாரும் சேர்ந்து, நம் இருவரையும் உங்கள் ஊருக்கு அழைத்துப்போக முன்வந்தார்களே! அதற்கு உடன்பட்டிருந்தால், உங்கள் அருமை அம்மாவை உயிரோடு பார்த்து இருப்பீர்களே!

''என்னை ஏசுவார்கள் என்று சொல்லிப் போக மறுத்து விட்டீர்களே!

''உங்கள் அம்மாவிற்கு உடல் நலம் இல்லை என்ற பேச்சு, காற்றுவாக்கில் நமக்கு எட்டவில்லையே. எவ்வளவு கடுமையான இரும்புத்திரை'' என்று காந்தம்மா வருந்தினார்.

இங்கே, லிங்கம் என்றது, தன்மான இயக்கச் செயல் வீரர்களில் ஒருவராகிய மாயவரம் எஸ்.வி. லிங்கம்தான்.

பொன்னம்பலனார் என்பது அவ் வியக்கத்தின் நாடியாக, பேச்சாளராக, எழுத்தாளராக, சுறுசுறுப்பான அமைப்பாளராக விளங்கிய பூவாளூர் பொன்னம்பலனார் அவர்கள்தான்.

எங்களுக்குத் திருமணமான சில திங்களில் அவர்கள் இருவரும் எங்களை அழைத்துக் கொண்டுபோய், என்பெற்றோரோடு உடன்பாடு ஏற்படுத்தத் தீவிரமாக முன்வந்தார்கள். பெற்றோர்களின் கடும் சொற்களுக்கு அஞ்சின நான் அதற்கு உடன்படவில்லை.

சிறிது நேரத்தில் ஒரு முடிவுக்கு வந்தோம். அது என்ன?

நான் மட்டும் நெய்யாடுபாக்கம் செல்வது; என் தந்தையைக் கண்டு என் தாயின் இழப்பிற்கு ஆறுதல் கூறுவது; இருக்கச் சொன்னால், சில நாள்கள் அங்கே தங்கிவிட்டு வருவது, என்பதே எங்கள் முடிவாகும்.

அம்முடிவின்படி, அடுத்தநாள் மாலை நீலகிரி விரைவு வண்டியேறினேன். அரக்கோணத்தில் இறங்கி அங்கிருந்து செங்கற்பட்டு செல்லும் பயணிகள் வண்டியேறினேன். வாலாஜாபாத் புகைவண்டி நிலையத்தில் இறங்கினேன்.

ஒற்றைமாட்டு வண்டியை அமர்த்திக்கொண்டு, அதில் நெய்யாடு பாக்கம் சென்றேன். காலை பத்து மணியளவில் ஊர் போய்ச் சேர்ந்தேன்.

அதற்கு முன்பு, ஊருக்குச் சென்றால், முதலில் என் மாமா, சுந்தரசேகரர் வீட்டிற்குச் செல்வேன். அங்கே பெட்டி பேழைகளை வைத்துவிட்டு, பிறகே, எங்கள் வீட்டுக்குச் செல்வேன்.

அப்பாவிடம் துக்கம் விசாரித்தேன்

இம்முறை, நேரே எங்கள் வீட்டிற்குச் சென்றேன். என் வீட்டில் எவரும் என்னை எதிர்பார்க்கவில்லை.

என் வருகையைக் கண்டு, தந்தைக்கு அதிர்ச்சி. இரண்டொரு மணித்துளிகளில் சமாளித்துக் கொண்டார்.

''கோயம்புத்தூரிலிருந்தா வருகிறாய்?'' என்று கேட்டார்.

''ஆம்'' என்றேன்.

''வாலாஜாபாத்தில் இருந்து நடந்தா வந்தாய்?''

''இல்லை; வாடகை வண்டியில் வந்தேன்.''

''அப்படியானால், வண்டியோட்டியைச் சாப்பிட்டுவிட்டுப் போகச் சொல்.''

''அம்மாவுக்கு என்ன நோய்? எவ்வளவு காலம் நோயாக இருந்தார்கள்? எவர் மருத்துவம் பார்த்தார்கள்?'' இப்படிக் கேள்விகளை அடுக்கினேன்.

கண்கள், தாமாகவே செயல்பட்டன; கண்ணீரைச் சிந்தின.

''இரத்தக் குறைவு; நாட்டு மருத்துவமே'' என்றார் தந்தை.

மருத்துவ வசதிகள் குறைந்த காலத்தில் என் தாய் வாழ்ந்தார். இன்றும் பல கோடி இந்தியர்கள், அப்படியே வாழ்ந்து அல்லல் படுகிறார்கள்.

நமக்குள் பேச்சு குறைந்து, செயல்கள், ஆக்கமான செயல்கள் பெருகும் காலமும், ஒவ்வொருவர் வாழ்வதும் பிறரை வாழ்விக்கவே என்ற உண்மையான உணர்வும் வந்தால், பிஞ்சுகளாகவும் காய்களாகவும் இந்தியர்கள் வெம்பி வீழ்ந்து மறைவது நிற்கும்.

சில மணித்துளிகளில் எங்கள் வீட்டில் சிலர் கூடிவிட்டனர். அதிலே ஒருவர், எங்கள் மாமாவின் பண்ணையாள்; கொசப்பட்டான் என்பவர்.

அவரைக் கண்டதும், 'வடிவேலரை அழைத்துக் கொண்டுபோய், அவங்க அம்மா இடத்தைக் காட்டிவிட்டுவா' என்று என் தந்தை ஆணையிட்டார்.

அப்படியே, கொசப்பட்டான் முன் செல்ல, நான் பின் தொடர்ந்தேன். எங்கள் ஊருக்கு வடக்கே ஓடும் செய்யாற்றிற்குச் சென்றோம்.

அப்போது, செய்யாறு வற்றிக் கிடந்தது. சுடுமணலில் நடந்தோம். எங்கள் வீட்டிற்குக் கிழக்கே, நடு ஆற்றில், ஓர் இடத்தை அடைந்தோம்.

''இங்கேதான், அம்மாவிற்கு எரியூட்டினார்கள்.

''பெரிய பிள்ளை இல்லையே என்று எல்லோரும் ஏங்கினார்கள்.

''அந்த மகராசிபோல் ஏழைகளுக்கு இனி யார், சோறு போடுவார்கள்?'' என்று கொசப்பட்டான் சொல்லும் போது, தொண்டை அடைத்துவிட்டது; கண்ணீர் பொழிந்தது.

என் நிலை என்ன?

தலை சுற்றிற்று. சிந்தனை நின்றது. கண்ணீர் மழை பெய்தது. பல்லைக்கடித்துக்கொண்டு, தாங்கமுடியாத சோகத்துடன் வீடு திரும்பினோம்.

''அம்மாவிற்குப் பதினாறாம் நாள் சடங்கு ஏதும் இல்லை. சிவானந்தம் கொள்ளி வைத்தான். அவன் இங்கே இருப்பான். நீ, வசதிப்படி செய்யலாம். இருக்க வேண்டுமென்றால் இருக்கலாம்; போக வேண்டுமென்றால் போகலாம்'' என்று என் தந்தையார் கூறினார்.

அன்று அங்குத் தங்கினேன். அடுத்த நாள் காலை, சிற்றுண்டிக்குப் பின், மாகறலுக்குச் சென்றேன்.

அது எங்கள் ஊரில் இருந்து மேற்கே அய்ந்து கல் தொலைவில் செய்யாற்றின் வட கரையில் இருக்கிறது.

சாதியில் திருமணம் செய்து கொள்

அவ்வூரில் அப்போது என் சித்தி - தாயாரின் தங்கை - நோய் வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக இருந்தார். அவர் நிலையும் மோசமாக இருந்தது.

அவர்தான், நான் முதலில் படிப்பிற்காகக் காஞ்சிபுரம் சென்றபோது, எனக்கும் என் மாமாவிற்குமாக, சமைத்துப் போட்டவர். அவரிடம் என் தாயைப் போலவே பாசங்கொண்டிருந்தேன்.

என் சிறிய தாயார், திருப்புவனத்தம்மாளைப் படுக்கையில் கண்டேன். எழுந்து இருக்கமுடியாத அளவு மிகவும் மெலிந்து இருந்தார். கஞ்சியே உணவு. அவருக்கும் 'சோகை' நோய்.

என்னைக் கண்டதும் சிறிய தாயார் கதறிக் கதறி அழுதார்.

''உன் அம்மாவை உயிரோடு பார்க்காவிட்டாலும் என்னையாவது, பார்க்க வந்துவிட்டாயே! இனி, அமைதியாகக் கண்மூடி விடுவேன். உன் அம்மா உன்னைக் காணக் கொடுத்து வைக்கவில்லை'' என்று அங்கலாய்த்தார்.

துயரங்களைப் பரிமாறிக் கொண்ட பிறகு, சிறிய தாயார் என்னிடம் சில விளக்கம் கேட்டார்.

''உன் மனைவி மருத்துவ சாதியா?''

''இல்லை.''

''பின் என்ன சாதி?''

''இசை வேளாளர் சாதி.''

''சரி, மாகறலில்கூட, அவர்கள் வீடு இரண்டு மூன்று உண்டு. நம் உறவினர்கள் சிலர், அவ்வீடுகளுக்குப் போவதும் வருவதும் உண்டு'' என்று முறைகள் சொல்லிக்கொண்டார்.

பிறகு, எனக்கு அறிவுரை கூறினார். அதில் குழைவு இருந்தது; பரிவு இருந்தது. நான் நான்கு பேர் மதிக்க வாழ வேண்டுமென்ற கவலை இருந்தது.

''இப்பவோ, சிறிது நேரத்திலோ, என் ஆவி போய்விடும். அப்புறம் நான் என்ன கேட்கப் போகிறேன்? இந்த என் கடைசி ஆசையை நிறைவேற்றி வை. சரியென்று, ஒரு சொல் வந்தால், போதும்'' என்று என் சிறிய தாயார் கண்ணீரும் கம்பலையுமாக வேண்டுகோள் ஒன்றை உதிர்த்தார்.

''வந்தவள் அதிர்ஷ்டத்திலே, உனக்குப் பெரிய வேலை கிடைத்திருக்கிறதாம். நல்லது, அவளும் இருக்கட்டும்; இன்னொருத்தி செகப்பா, இலட்சணமாக, நம்ம சாதியில் பார்த்து, முடிச்சு வைக்கச் சொல்லுகிறேன்; மறுப்புச் சொல்லாமல்கட்டிக்க. உன் வரும்படிக்கு இரண்டு பேர்களைக் கட்டிக் கொண்டா, குடிமுழுகிப் போகாது'' என்பது சிறிய தாயாரின் அறிவுரை.

நான் சிறிய தாயாருக்கு கடமைப் பட்டவன். அவர்களிடம் பரிவும் பாசமும் கொண்டவன். இருப்பினும் அழுத்தமாக மறுத்துக் கூறினேன்.

''வழக்கமாகச் செய்து கொள்ளும் முறையில், நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. அரசு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொண்டு உள்ளேன். அப்படிச் செய்துகொண்டவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டால், சட்டம் அவரைச் சிறைக்கு அனுப்பி வைத்துவிடும்'' என்றேன்.

''அப்படியென்றால், இருபதோ, முப்பதோ, மொத்தமாகக் கொடுத்து விட்டுப் போகச் சொன்னால் போகிறது. அதாவது அத்தனை ஆயிரங்கள். முதலில் நீ ஒப்புக்கொண்டால், அப்புறம் பேசிப் பார்க்கலாம். நான், இனி, என்ன கேட்கப்போகிறேன். 'எப்படியாவது பெரிய மனது பண்ணி, நம் சாதிப்பெண் ஒருத்தியை மணந்து கொள். மாட்டேன் என்று சொல்லாதே. மொத்தமாகக் கொடுத்தனுப்பப் பணத்திற்கு நான் ஏற்பாடு செய்துவிடுகிறேன்'' என்று சிறிய தாயார் மன்றாடினார்.

பிறகு, என் சித்தப்பாவும் அதே பாட்டைப் பாடினார்.

பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு, எதிர் பாராத நிலையில், மீண்டும் இரண்டாவது மணம் செய்து கொள்ளும் ஆலோசனை என் காதுகளைத் துளைத்தது.

எப்படியோ ஒவ்வொரு முறையும் பொறுமையை வரவழைத்துக் கொண்டு,

''முடியாது; அது முடியாது'' என்று பல்லவியை மட்டும் மெல்லிய குரலில் பாடி முடித்தேன்.

அன்று பிற்பகல் மாகறலில் இருந்து புறப்பட்டு, காஞ்சிபுரம் சென்றடைந்தேன். அங்கிருந்து இரயில் ஏறி, அரக்கோணம் வழியாக, கோயம்புத்தூருக்குத் திரும்பினேன்.

சிறிய தாயாரின் விருப்பத்தைப் பல்லாண்டுகள் வரை காந்தம்மாவின் காதுகளில் போடவில்லை.

5. பயிற்சி முடிந்தது

தந்தையின் தனித் தன்மை

நான் உடலால், கோவைக்குத் திரும்பிவிட்டேன். இருப்பினும் உள்ளத்தால், நெய்யாடுபாக்கத்திலும் மாகறலிலும் இருந்தேன்.

கல்வி அலுவலர் பயிற்சியில் ஈடுபட முயன்றேன். ஆனால் அதில் சிந்தனை செல்லவில்லை. மாறாக நெய்யாடுபாக்கம், மாகறல் என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே என் சிந்தனை சுழன்றது.

'என் தாய் என்னைப் பெற்று வளர்க்க எத்தனை பாடுபட்டார். ஆயினும் என்னிடம் எதையும் எதிர்பார்க்க வில்லை.

''சில அன்னையர்போல், இந்த உறவுப் பெண்ணைக் கட்டி வைக்கவோ, அந்த உறவுப் பெண்ணைக் கட்டிவைக்கவோ அவர் முனைந்ததில்லை.

'எனவே, என் திருமணம் பற்றி என் தாய்க்கு ஏன் மனக்குறை? சாதி உணர்வால் மனக்குறை. இயற்கையான உணர்வா இது?. இல்லை. முழைப்பருவம் முதல் ஊட்டப்பட்ட உணர்வு.

'நாங்கள் பிறவியில் உயர்ந்தவர்கள் என்றும் வேறுபலர் தாழ்ந்தவர்களென்றும் கருதியதால்', நான் சாதி கெட்டவனானதைப் பற்றி வேதனைப்பட்டார்.

தன் கணவன் விரும்பாததை நினைக்காத பண்பாட்டில் வாழ்ந்ததால், எனக்குத் திருட்டுத்தனமாகவும் தன் நிலையைச் சொல்லி அழுபவில்லை.

என் தந்தை நிலை என்ன? சாதி உணர்வு மழுங்கியவர். வைக்கம் போராட்ட எதிரொலியாக, எங்கள் வீட்டிற்குள் ஆதிதிராவிடப் பெண்ணையாளைத் தாராளமாக வரவிட்டவர்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பே, வேறு சாதி அதாவது கீழான சாதி என்று கருதப்பட்ட வீடுகளில் உணவருந்தத் தயங்காதவர்.

கட்டையாம்பந்தல் சபாபதி வீட்டில், வாலாஜாபாத் கோபால் நாயுடு வீட்டில், மேலமையூர் வேதாசலம் வீட்டில் பேதம் பாராட்டாமல் உணவு சாப்பிட்ட முற்போக்காளர்.

குத்தூசி குருசாமியார், குஞ்சிதம் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டபோது பாராட்டி, மகிழ்ந்தவர்.

திரு. அ.ச. ஞானசம்பந்தம் வேறு சாதியில் திருமணம் செய்து கொண்டதை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

பண்டிட் ஆனந்தம், 'எங்களவர்' இராதாபாயைத் திருமணம் செய்து கொண்டதைப் பாராட்டியவர்.

இளையனார் வேலூர் கோவிந்தசாமியின் கலப்புத் திருமணத்தைப் போற்றியவர். தந்தை பெரியாரைப் பின்பற்றிய அவர், கோயிலுக்குச் சென்று வழிபடுவதையும் விட்டுவிட்டவர்.

இவ்வளவு தீவிரமானவர், என் திருமணம் பற்றி மட்டும் கடும் சினம் கொண்டது ஏன்?

அவ்வளவு கடும் சினத்திற்கு இடையிலேயும் திடீரென, வீடேறிச் சென்ற என்னை விரட்டி அடிக்கவில்லை; என் முகத்தில் விழிப்பதில்லை என்று எழுந்து போய்விடவில்லை.

குத்தூசி குருசாமியார் உறவினர்கள் இரண்டொருவர் அவரை வெளியே வைத்து உணவு இட்டதைப்போல், என்னை என் தந்தை ஒதுக்கிவைத்து இழிவு படுத்தவில்லை.

வீடு தேடி வந்த என்னை மன்னித்துப் பரிவுடன் விசாரித்தது, பண்பாட்டின் சிறப்பு அல்லவா?

சோகத்தின் ஊடே, தேனீர்க் கடை கூட இல்லாத, சிற்றூருக்கு வண்டி ஓட்டி வந்தவர், பட்டினியாகப் போகக் கூடாது என்ற எண்ணம் பளிச்சிட்டு, 'சாப்பிட்டுவிட்டு போகச் சொல்' என்று ஆணையிட்டது, அவருடைய மனிதத் தன்மையின் வெளிப்பாடு அல்லவா!

வந்தவரை வரவேற்கும் நாகரிகம், மன்னிக்கும் இயல்பு, விருந்தோம்பும் பண்பு, இவ்வளவோடு, அக்கம்பக்கத்தாருக்கு, முரட்டு முற்போக்காளராகக் காட்சியளித்த என் தந்தை, ஏன் நான் கலப்புத் திருமணம் செய்து கொண்டதற்காக என்மேல் அளவிற்கு மீறிய வெகுளி கொண்டார்?

ளருக்குச் சொன்னது, தன் வீட்டிற்கே வந்தபோது, அதைத் தாங்கிக்கொள்ள இயலாமையாலா?

வயது முதிர முதிர, சில தீவிரவாதிகள், சாதுக்களாகி விடுவதைப்போல், கழுவாய் தேடும் அளவு நலிந்து போவதைப் போன்று, தளர்ந்துவிட்டாரா?

படிப்பில் நாட்டம் கொள்ளாத பிரிவிலே வாழ்ந்திடினும் மூத்த மகனைச் சிறந்த பட்டதாரியாக்கிப் பார்த்தவர், எனக்குத் தன் சாதியில் பெரிய இடத்தில் பெண் எடுக்க நினைத்தது, நடவாமல் போன ஏமாற்றத்தாலா?

தம்முடைய உறவினர்கள் தன் குடும்பத்தை விலக்கி வைத்து விடுவார்கள் என்ற அச்சத்தாலா?

அப்படி நேராவிட்டாலும், மற்ற மூன்ற தம்பிகளுக்கும் எந்தக் கொண்டைகட்டியாரும் பெண் கொடுக்க மாட்டார்களே, என்ற கவலையாலா?

பெரிய தாயார் ஏன் அப்படிச் சொன்னார்? மாகறலிலேயே, இசை வேளாளர் வீடுகளோடு உறவு கொண்டு இருந்த இரண்டொரு பெரியவர்கள் பெயர்களைப் பெருமையோடு கூறினார்.

நான் அப்படி வைத்துக்கொண்டால், தவறில்லை என்று முடிவு கூறினார்.

ஆனால், குடும்ப வளர்ச்சிக்காக, பிறந்த பிரிவில் ஒருத்தியை மணம் செய்துகொள்ளும்படி ஏன் கெஞ்சினார்?

'ஒழுக்கம் கெட்டவனாக இருந்தால் தவறில்லை; சாதி கெட்டவனாக இருப்பது பெரும் குறை' என்பதுதானே என் சிறிய தாயார் கருத்து!

அதுதானே சமுதாயத்தின் கருத்து!

சாதியைக் காப்பதற்காகவே இருப்பதாக ஒரு மயக்கம், அதுவும் கலைமுறைதோறும் உறுதி செய்யப்படும் உணர்வு.

குணத்தைக் காட்டிலும் குலத்தை முன்னிறுத்தும் நாம் முன்னேறுவோமா?

இப்படியெல்லாம் எண்ணிக் குழம்பிற்று, என் சிந்தனை.

எவரோ, எப்படியோ, எந்நிலையிலோ சொன்ன சாதி உயர்வு தாழ்வு உணர்வைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு நாம் அனைவரும் வெளிவர இயலாது, தத்தளிக்கிறோம்.

குளத்தில் மிதக்கும் தெப்பம் எத்தனை முறை சுற்றினாலும் தானாக, அதனால் வெளி ஏறமுடியாது.

சாதிக் குட்டையில் சிக்கியுள்ள தனி இந்தியன், தானாக, அதிலிருந்து வெளியேறி, முழு மனித உணர்வோடு, தன்மையோடு, பண்போடு, வாழமுடியாது என்று எனக்குப் பட்டது.

அதற்கென, வீறுடன் செயல்படும் நாடு தழுவிய பேரியக்கம் தேவை என்ற கருத்து மின்னிற்று.

அத்தகைய பேரியக்கத்தைத் தோற்றுவித்த தந்தை பெரியார், நீதிக்கட்சி சுமையைத் தூக்கிப்போட்டுக் கொள்ளாமல் இருந்தால், கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னே நிற்க வேண்டிய நெருக்கடி தலைமேல் விழாமல் இருந்தால், சாதிக்கலைப்பு, மேலும் மேலும் பெருகி விரைந்து இருக்குமோ என்று ஏங்கினேன்.

வேறு சாதியில் பெண் எடுத்துக் கொண்டேன் என்பதைவிட, தன்னை மதிக்கவில்லை என்ற உணர்வால் என் தந்தை என் மேல் அளவிற்கு மீறிய வெகுளி கொண்டாரோ?

தன் முற்போக்கு நிலைக்குப் பழுது வரும் அளவு வெகுள வேண்டுமா? இப்படியும் எண்ணினேன்.

மறுவினாடி, இந்த முனைப்புதானே இந்தியனிடம் மேலோங்கி வரும் இயல்பு என்ற நினைப்பு மின்னிற்று.

மருமகன் பிருதிவிராசன் தன்னைப் பொருட்படுத்தவில்லை என்ற சினத்தில், மன்னர் ஜெயசந்திரன், மகள் விதவையாகவும் நாடு அன்னியனுக்கு அடிமைப்படவும் உதவியது, நினைவில் பளிச்சிட்டு மின்னியது.

மன்னர் என்ன? தலைவர்கள் நிலையும் அதுவே. மக்கள் தேடிக் கொள்ளும் கேடுகளும், அதே ஊற்றில் இருந்து பொங்கி வருபவைகளே.

இப்படிச் சுழன்ற சிந்தனை, 'பொருட்படுத்தாதவர்களை, பொருட்படுத்தாமல் ஒதுக்கிவிட்டு, ஆக்க முயற்சியில் மூழ்கி விட, தமிழர்கள் கற்றுக்கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

'எத்தனை சாதனைகளைப் புரிந்து மகிழக்கூடும்?'

- என்ற கேள்விகளை எழுப்பிற்று.

அடிக்கடி, நொடிக்குநொடி, பொருட்படுத்தாதவர்களோடு, கணக்கு தீர்த்துக்கொள்வதில் தமிழர் வீணாகிற அளவு, பிற மக்கள் பாழாகிறார்களா?

'சென்றதையே சிந்தை செய்து கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமைய'த்தான் பிறந்தோமா?

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த இக் கேள்விகள் இன்று மூச்சுக்கு மூச்சு வெளிப்படுகின்றன. இப்படி இருக்கலாமா?

சீகாகுளத்திற்கு நியமனம்

முடங்கிப்போன, என் சிந்தனை விடுபட, தூண்டுகோல் ஒன்று கிடைத்தது.

அது, சென்னை பொதுக்கல்வி இயக்ககத்தில் இருந்து வந்தது.

என்னுடைய பணிப்பயிற்சி முடிந்ததும் நான், வட விசாகப் பட்டின மாவட்டக் கல்வி அலுவலராகச் சேர வேண்டுமென்று, அவ்வாணை கூறிற்று.

அம் மாவட்டம், அன்று வருவாய்த் துறை மாவட்டம் அல்ல. பெரிய விசாகப்பட்டின மாவட்டத்தின் ஒரு பகுதி; கல்வித்துறை அலுவலுக்கு மட்டும் பிரிக்கப்பட்ட பகுதி.

அந்தக் கல்வி மாவட்டத்தின் தலைநகரம் எது? சீகாகுளம்.

அந் நகரத்திற்கு எப்படிப் போய்ச் சேருவது? எத்தனை நாளில் போய்ச் சேருவது? அங்கே எளிதில் வீடு கிடைக்குமா? வேலைக்கு ஆள் கிடைக்குமா?

இத்தகைய சில்லறைக் கவலைகளில் கவனம் திரும்பிற்று.

சென்னை மாகாணத்தில் வடகோடிப் பகுதியாகிய அதைப் பற்றி எவருக்கும் அதிகம் தெரியவில்லை.

சீகாகுளத்திற்குப் புகைவண்டி கிடையாது. அதற்கு அருகாமையில் உள்ள புகைவண்டி நிலையம் 'ஆமதாலவலசா' என்னும் பெயர் உடையது.

அங்கே, கல்கத்தா செல்லும் விரைவு வண்டி நிற்கும். அங்கே இறங்கி, பேருந்து வண்டியிலோ, குதிரை வண்டியிலோ, பதினோரு கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்தால், சீகாகுளம் நகரத்தை அடையாளம் என்பது மட்டுமே கோவையில் கேள்விப்பட்டேன்.

நான் 1942 நவம்பர் முதல் நாள் சீகாகுளத்தில் அலுவலர் பொறுப்பு ஏற்கவேண்டும்.

'ஆமதாலவலசா' சென்று அடையும் கல்கத்தா மெயில் மாலை ஐந்து மணி அளவில் அங்குப் போய்ச் சேரும்.

எனவே, அக்டோபர் 31ஆம் நாள் மாலை அங்குச் சேர்ந்து, அடுத்த நாள் அலுவலில் சேரத் திட்டமிட்டேன்.

வட விசாகப்பட்டின மாவட்டக்கல்வி அலுவலகத்தில் இருந்த தலைமை எழுத்தர் பெயர், கோவையில் இருந்தவர்களுக்குத் தெரியவில்லை.

எனவே, பெயர் குறிப்பிடாமல், பதவியை மட்டும் குறிப்பிட்டு, அலுவலகத் தலைமை எழுத்தருக்குக் கடிதம் எழுதி அனுப்பி வைத்தேன்.

நானும் என் மனைவியும் சென்னையில் இருந்து அக்டோபர் 30ஆம் நாள் புறப்பட்டுக் கல்கத்தா மெயிலில் ஆமதால வலசாவிற்கு அடுத்தநாள் மாலை வருவதாக எழுதினேன். புகைவண்டி நிலையத்தில் இருந்து நகரத்திற்கு அழைத்துப்போக, பேருந்தில் இடம் ஏற்பாடு செய்து வைக்கக் கூறினேன்.

சீகாகுளத்தில் வீடு பிடிக்கும் வரை, தற்காலிகத் தங்கலுக்கு இடம் ஏற்பாடு செய்யவும் எழுதியிருந்தேன். இருவருக்கும் மரக்கறி ஓட்டலில் இருந்து சாப்பாடு கொண்டுவர ஏற்பாடு செய்யவும் எழுதியிருந்தேன்.

அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுத, சென்னையில், என் மாமனார் முகவரியைக் கொடுத்திருந்தேன்.

பெட்டி பேழைகளைக் கட்டினோம். வழியனுப்பு விருந்துகளை உண்டோம்.

பல நண்பர்களுடைய வாழ்த்துதல்களோடு திரு. சி. சுப்பிரமணியத்திடம் விடைபெற்றுக் கொண்டு உரிய நாளன்று நீலகிரி விரைவு வண்டியில் சென்னைக்குப் புறப்பட்டோம்.

6. கோடா கிருஷ்ணமூர்த்தி பந்துலுவின் கோபம்

சீகாகுளம் சேர்ந்தேன்

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டாம் ஆண்டு, அக்டோபர் முப்பதாம் நாள், நானும் காந்தம்மாவும் கல்கத்தா மெயிலில் சென்னையிலிருந்து புறப்பட்டோம்.

மறுநாள் மாலை, ஆமதாலவலசா புகைவண்டி நிலையத்தை அடைந்தோம்.

அங்கே இறங்கிய பயணிகள் சிலரே.

'சிறிய நிலையம் ஆயிற்றே. இரண்டொரு மணித்துளிகளில் இரயில் புறப்பட்டுவிடுமே' என்று அஞ்சிய நான், முன்கூட்டியே - விசயநகரத்திலேயே - வண்டியின் காவலரிடம் அது பற்றிய என் கவலையைக் கூறினேன்.

'கவலைப்படாதீர்கள்! உங்கள் பெட்டிகளெல்லாம் இறக்கப்படும் வரை வண்டியை நிறுத்தி வைக்கிறேன்' என்று காவலர் உறுதி கூறினார்.

இது, ஏதோ ஒரு நல்ல காவலர், அன்றைய புகைவண்டியில் வந்ததால் கிடைத்த உறுதி அல்ல.

அந்தக் காலத்தில், இரயில்வேக்கள், ஆங்கிலேய கம்பெனிகள் நடத்தின. அன்னியர்களுக்கு ஏவல் செய்தே பழக்கப்பட்ட நம் ஊழியர்கள், போதிய அளவு, பொறுப்போடும் கட்டுப்பாடோடும் செயல் புரிந்தார்கள். பயணிகளிடம் பரிவோடு நடந்தார்கள்.

அதுவும் முதல் வகுப்புப் பயணிகளுக்குக் கிடைத்த கவனிப்பே தனி. புது மாப்பிள்ளைக்குக் கிடைக்கும் மதிப்பு கிடைக்கும்.

ஆங்காங்கே, சிற்றுண்டி, உணவு முதலியன கலப்படம் இல்லாமல் பெற முடிந்தது. பரிமாறுவோர் பணிவோடு செயல்பட்டனர்.

எனவே, மனநிறைவோடு, நீண்ட பயணத்தை முடித்துக் கொண்டு, ஆமதாலவலசாவில் இறங்கினோம்.

வண்டி நிற்கவும் நான் தலையை நீட்டவும், நொடியில் மகிழ்ச்சியான காட்சி தென்பட்டது.

பலர் அடங்கிய குழுவொன்று, திறந்த பெட்டியை நோக்கி விரைந்து வந்தது. எங்களை வரவேற்கவே வருகிறார்கள் என்று எண்ணினேன். அடுத்த வினாடி அது உறுதியாகிவிட்டது.

'பிள்ளை சேவகர்' இருவர் வருவது கண்ணில் பட்டது. நான் தரையில் காலெடுத்து வைக்கவும் அவ்விருவரும் என்னிடம் ஓடி வந்து வணங்கினார்கள்.

'மாவட்டக் கல்வி அலுவலக ஊழியர்கள்' என்று அவ்விருவரும் தெலுங்கில் சொல்லியதைத் தமிழாக்கம் செய்து கொண்டே, என் மனைவி இறங்கினார்.

அதற்குள், அலுவலகத் தலைமை எழுத்தர், பிற எழுத்தர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அடங்கிய குழு வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

பில்லை சேவகர்கள், இரயில் பெட்டிக்குள் தாவினார்கள். எங்கள் பெட்டி பேழைகளை இறக்கி வைத்து, சரிபார்த்துக் கொள்ளச் சொன்னார்கள்.

என் மனைவி, தணிக்கை செய்து சரியாக இருப்பதாகக் கூறினார்.

இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டு நின்ற காவலர், வண்டியை விடலாமாவென்று கேட்டார். 'ஆம்' என்று நான் சொன்னதும் விசில் அடித்தார். வண்டி புறப்பட்டது.

நாங்கள் புகைவண்டி நிலையத்தை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தோம். எங்களுக்குப் பின்னால் வந்த பயணி ஒருவர் எங்களை முந்த முனைந்தார். நான் வழிவிட்டு விலகினேன்.

முன்னேறியவர், சும்மா செல்லவில்லை. எங்கள் பக்கத்தில் இருந்த ஒருவரிடம் ஏதோ கேட்டார்.

அதற்கு அவர், 'சீகாகுளத்திற்குப் புதிதாக வந்துள்ள மாவட்டக் கல்வி அலுவலர்' என்று பதில் கூறினார்.

அப் பயணி எரிச்சல் கொண்டார்.

'எந்துக்கு ஈ அரவவாடு இக்கட வஸ்தாரு' என்று அதிருப்தியுடன் சொல்லிக்கொண்டே நடந்தார்.

பயணியின் முதற் கேள்வியும் பிந்திய எரிச்சல் கூற்றும் என் செவிகளில் வீழ்ந்தன. ஆனால் எனக்குப் புரியவில்லை.

'மௌனம் கலக நாசம்!' இது நினைவிற்கு வரவும் ஊமையாக நடந்தேன்.

எல்லோரும் வெளியே வந்தோம். அருகிலிருந்த பேருந்து வண்டியின் முன் இரு இருக்கைகளைக் காட்டி, அவற்றில் எங்களை அமரும்படி மிகப் பரிவுடன் வேண்டிக் கொண்டார்கள்.

''சீகாகுளத்தில் கார் கிடைக்கவில்லை. பேருந்து அல்லது குதிரை வண்டியில்தான் இங்கிருந்து அங்குச் செல்ல வேண்டும்'' என்று விளக்கம் சொன்னார்கள்.

நாங்கள் வசதியாக அமர்ந்தோம். பின் வரிசைகளில், புளி மூட்டைகளைப்போல மக்கள் திணிக்கப்பட்டார்கள்.

மாலையில், ஒரே ஒரு பேருந்து ஓடும் நிலையில் எல்லோரையும் எப்படியாவது இட்டுக்கொண்டு போவதே, பொது நன்மையாகும் என்பது விளங்கிற்று.

சாலையோ, கருங்கல் கப்பி போட்டது. வழிநெடுகிலும் குண்டும் குழியுமான பள்ளங்கள். ஆளைக்குலுக்கி எடுப்பத்தில் அதற்கு இணையாக வேறு ஒன்றை அதுவரை நான் கண்டது இல்லை.

ஆனால் மகிழ்ச்சியடைந்தேன். எதனால்? சாலையின் இரு மருங்கிலும் உயர்ந்த ஆலமரங்கள் அணிவகுத்து நின்றன; பந்தலென நின்றன.

அன்னியர் இந்த நாட்டை ஆண்டபோது, பல நெடுஞ்சாலைகளில், சிறு சாலைகளில், இரு பக்கங்களிலும் நெடு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன.

அவை, கண்டவர்களால் சிதைக்கப் படவில்லை. காற்று மண்டலத்தைத் துப்புரவாக வைக்கவும் வெப்பத்தைத் தணிக்கவும் உதவின. மழையை வரவழைத்தன. இன்றோ?

அன்று இருபுற இயற்கைச் சூழலையும் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்ததால், நேரம்போனது தெரியவில்லை.

இறுதியில், சீகாகுளம் பேருந்து நிலையத்தில் வண்டி நின்ற போது, கைக் கெடிகாரத்தைப் பார்த்தேன்.

வழிப்பயணத்திற்கு நாற்பது மணித்துளிகள் பிடித்தது என்று தெரிந்தது.

சீகாகுளத்தில் எங்கே தங்கினோம்? பயணிகள் விடுதியில். ஓட்டல் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சாப்பாட்டிற்காகக் காத்திருக்கையில், ஆமதாலவலசா, இரயில் நிலையத்தில், ஒரு தெலுங்கர் என்னைச் சுட்டிக்காட்டி, விசாரித்ததைப் பற்றி என் மனைவியிடம் கேட்டேன். அவர் தமிழாக்கம் செய்தார்; விவரம் புரிந்தது.

அரவாடு

தெலுங்கர்கள், தமிழை அரவம் என்று சொல்வது மரபு.

காரணம் என்ன தெரியுமா? ஆதி நாளில் ஆந்திர நாட்டின் எல்லையில் இருந்த தமிழ் நாட்டின் பகுதிக்கு அரவ நாடு என்று பெயர்.

தமிழ் நாட்டின் ஒரு பகுதியான அரவ நாட்டினர் பேசியது தமிழ்.

எனவே தங்கள் நாட்டின் எல்லையில் இருந்த அரவ நாட்டினர் பேசிய தமிழையே அரவம் என்று பாமரத் தெலுங்கு மக்கள் சொல்லி வந்தார்கள்.

அதுவே பின்னர் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர்கள் எல்லோராலும் 'அரவம்' என்று தமிழை அழைக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது.

ஆனால், தமிழன், தெலுங்குப் பகுதியில் அலுவல் பார்க்கக் கூடாதென்ற கருத்து எனக்குப் பிடிக்கவில்லை. எரிச்சல் சுரந்து பொங்கியது.

மறுநொடி, 'பொறுத்தார் பூமியாள்வார்' என்னும் அமுதப் பழ மொழி என் நினைவுக்கு வந்தது.

'செவி கைப்பச் சொல் பொறுக்கும் வேந்தன்' என்று தொடங்கும் குறள் நினைவிற்கு வந்தது.

'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்பதும் போட்டிபோட்டுக் கொண்டு என் சிந்தனையில் மின்னிற்று.

இத்தனையும் சேர்ந்து, என் மனக்கொதிப்பை அடக்கின.

எவரோ ஒரு வழிப்போக்கர். அவர் அந்தப் பகுதி தெலுங்கர் அனைவருக்கும் பிரதிநிதி அல்லர்.

ஒருவரை எண்ணி, ஒன்பது பேர்களைப் பகைத்துக் கொள்வது பகுத்தறிவுக்கு ஒப்பாது. பகைப் பயிரைக் காய்ந்துபோக விடுதலே அறிவுடைமை.

குழந்தை பிறக்கும்போது அழுகிறது. அது, நல்லவனாகி வாழ்ந்தால், பிறர் அழ, கண் மூடுவது முறை.

நான் இங்கு வரும்போது, ஏதும் அறியாத ஒருவர் முணுமுணுத்துவிட்டார். நான் இங்குப் பணி புரிந்துவிட்டு, வேறோர் ஊருக்குச் செல்லும்போது, இப் பகுதியினர் அழவேண்டும்.

அதற்கேற்ற வகையில் நற்பணி, அன்புப்பணி, ஆற்றுவேனென்று உறுதி பூண்டேன். அதன்படி நடந்தேனா?

பதவி ஏற்றேன்

மறுநாள் காலை. பத்தேகால் மணிக்கு மாவட்டக் கல்வி அலுவலகம் போய்ச் சேர்ந்தேன்.

அது வாடகைக் கட்டடத்தில் இருந்தது. அது ஒரு மாடிக் கட்டடம்.

அலுவலர் அறைக்குள் நுழைந்தேன். அய்ம்பது வயதிற்கு மேற்பட்ட ஒருவர் அலுவலர் நாற்காலியில் இருந்தார்.

நம் வழக்கப்படி அவரை இருகரம் கூப்பி வணங்கினேன். அவர் திருப்பி வணங்கினார்; எதிரிலிருந்த நாற்காலி ஒன்றைக் காட்டினார். உட்கார்ந்தேன்.

மாறுதல் பற்றிய படிவங்கள் சிலவற்றில் அவர் கையெழுத்திட்டார்.

அவற்றை வாங்கி என்னிடம் நீட்டினார், கடைநிலை ஊழியர் ஒருவர்.

நான் கையெழுத்திட்டேன்.

பிறகு? இரகசியக் குறிப்புகள் உள்ள அலமாரிச் சாவியைப் பெறவேண்டும்.

அந்த அலுவலர் என்ன செய்தார்? மூன்று சாவிகள் கொண்ட ஒரு கொத்தை என் கையில் கொடுத்தாரா?

இல்லை.

புண்படுத்தும் செயல்

அதற்குப் பதிலாக, தொலைவில் உட்கார்ந்தபடியே, என்னை நோக்கித் தூக்கி எறிந்தார்.

அருகில் கொண்டுபோய்க் கொடுத்தால், தீட்டாகிவிடும் என்று நாட்டுப்புற உயர் சாதி இந்துக்கள், ஆதிதிராவிடப் பழங்குடி இந்துக்களிடம் இப்படி நடந்து கொள்வது உண்டு.

அது என் நினைவிற்கு வந்தது; வெகுளி பொங்கிற்று. 'சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டு அடி' என்ற தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தின் முழக்கம் எழுச்சியூட்டியது நினைவிற்கு வந்தது.

ஆனால், மின்னலென, மற்றொன்றும் பளிச்சிட்டது.

அதுவே வலிய வந்து மோதினாலும் முதல் நாள், முதல் மணியே, அலுவலகத்தில் சண்டையோடு தொடங்குவது அறிவுடைமை அல்ல.

இவரோடு சண்டையிடுவது, என் தன்மானத்திற்கு நிறைவு கொடுக்கலாம். ''சாதி ஏற்றத்தாழ்வு உணர்ச்சியை அழிக்க எவ்வளவு தூரம் உதவும் அது?''

அவர் நடந்துகொண்ட முறை அவருடைய இயற்கையான உணர்ச்சியல்ல; அவருக்கு ஊட்டப்பட்ட உணர்ச்சி. பல தலைமுறைகளாக, சூட்டோடு ஊட்டப்படும் உணர்ச்சி.

அந்த நச்சுச்சூழலின் நோயாளிகளாக என் உறவினர்கள் இருக்கவில்லையா?

அதைப் போன்று, இவரும் - திரு. கோடா. கிருஷ்ணமூர்த்தி பந்துலுவும் - சூழ்நிலையால் நலிந்தவர். இந் நோய்க்கு அவரை மட்டும் வெறுப்பானேன்?

''சாதி அடிப்படையையே அடியோடு மாற்றியாக வேண்டும். அதற்குப் பெருமுயற்சி தேவை.

''பலருடைய முயற்சி தேவை; காலம், இடம், அறிந்து முனையும் இடைவிடாத முயற்சி தேவை.

''இந்தத் தனி மனிதரின் புண்படுத்தும் நடவடிக்கைக்கு இவர் மேல் வெறுப்பு கொள்வது, சிறு பிள்ளைத்தனம்; சாதி முறையின் மேல் கசப்பு கொள்வது முதிர்ந்த நிலை; அறிவுடைய நிலை. பிந்தியதைப் பின்பற்றுவோம்.

''ஆதிதிராவிடர்களை, பிற கீழ்ப் பிரிவினர்களை உயர்த்துவோம். மற்றவர்களுக்கு ஈடாக உயர்த்துவோம்.

'ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்.'

''வேரூன்றி, வலிமை பெற்று பள்ளத்தில், இருப்போரைத் தூக்கிவிடும் நிலை வரும் வரை பொறுத்திருப்போம்.

''குடி செய்வார், மானம் கருதக் கூடாதே.

''பதவியை, புதிய சமத்துவக் குடியை உருவாக்கும் வாய்ப்பாகக் கருதியுள்ள நான், நொய்க்கஞ்சியாக, இருத்தலாகாது.

''வந்த அவமானத்தைப் பொருட்படுத்தாமல், அன்புடனும் பண்புடனும் இயங்க முடிந்தால், பலருடைய அவமானத்தைப் போக்க நான் பயன்படக்கூடும்.''

நொடியில், உச்சி வானத்திலிருந்து தொடுவானம் வரை வெட்டும் மின்னல் கீற்றுகளையொப்ப, என் சிந்தனை பாய்ந்தோடிற்று. சூழ்நிலை தணியவும், மேலும் தெளிவு பிறந்தது. அது என்ன?

திரு கோடா, கிருஷ்ணமூர்த்தி, சென்னை மாகாண கல்வித் துறையின், கீழ்நிலையில் அலுவலைத் தொடங்கியவர்.

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் சாதாரண பணிகளில் தேங்கிக் கிடந்த பிறகே, அய்ம்பது வயதை நெருங்கும் போது மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வு பெற்றார்.

விசாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒரு கல்வி அலுவலர் போதாதென்னும் அளவிற்குக் கல்வி நிலையங்கள் பெருகியிருந்தன.

அதனால் வட விசாகப்பட்டினம் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி, புதிதாக உண்டாக்கப்பட்டது.

பதவி உயர்வுக்கு காத்திருந்தோரில் முதல் இடத்தில் இருந்ததால், கோடா கிருஷ்ணமூர்த்தி பந்துலு, மாவட்டக் கல்வி அலுவலராக நியமிக்கப்பட்டார்.

பல்லாண்டுகள் தவங்கிடந்து பெற்ற அப்பதவியும் அவருக்குத் தற்காலிகமாகவே கொடுக்கப்பட்டது.

ஆறு திங்கள்போல், பணிபுரிந்த பின் மீண்டும் பள்ளி ஆய்வாளராகப் பதவி இறக்கம் செய்யப்பட்டதால், அவருக்கு ஆத்திரம் பொங்குவது இயற்கை.

அதோடு நின்றதா முள் குத்தல்?

நான், சீகாகுளம் போய், பதவி ஏற்கும்வரை, திரு. கோடா கிருஷ்ணமூர்த்தி எப் பதவியில் சேரவேண்டும் என்று ஆணை வந்து சேரவில்லை.

இவ்விரண்டோடு, ஒரு 'தாழ்த்தப்பட்ட' பிரிவு அலுவலரிடம் பதவியைக் கொடுக்க நேரிட்டதைப் பற்றி, அவர் குமுறியது இயற்கை.

கல்வித் துறையின் மேல் காட்ட முடியாத வெகுளியை,

'ஆந்திராவிடர்' இனத்தைச் சேர்ந்தவன் நான் என்று என்னைப்பற்றி அவர் எனோ நினைத்துக் கொண்டார். அந்தக் கோபத்தை என்மேல் காட்டிவிட்டார்.

அவர் நிலை பரிதாபத்திற்கு உரியது என்று எனக்குப் பட்டது.

இன்னா செய்த அவருக்கு நன்னயம் செய்ய விழைந்தது, என் உள்ளம்.

அவ் வுணர்வு உருப்பெற்றது.

எப்படி உரு?

7. பணியில் மூழ்கினேன்

வேலைப் பளு

திரு. கோடா கிருஷ்ணமூர்த்தி தம்முடைய விடுப்பு தீரும் வரை, சீகாகுளத்திலேயே தங்கி இருக்கப் போவதாகச் சொன்னார்.

அது ஒரு திங்களுக்கும் மேலாகவும் இருக்கலாம் என்றார்.

அவர் அவ்வூரில் தங்கி இருக்கும் வரை, மாவட்டக் கல்வி அலுவலகக் கடைநிலை ஊழியர்களில் ஒருவர், அவர் வீட்டுப் பணிகளை வழக்கம்போலக் கவனித்துக்கொள்ளச் சொன்னேன்.

அலுவலக வேலை ஓரளவு முடங்கினாலும் பொறுத்துக் கொள்ளும்படி அலுவலகத் தலைமை எழுத்தரிடம் கூறினேன்.

அவரும் ஒத்துழைத்தார். பதவி இறக்கம் பெற்றவரின் மனப்புண் ஓரளவு ஆறிற்று.

இதற்கிடையில், நான் குடியிருக்க வீடு தேடும் படலம் தொடங்கிற்று.

சிறிய நகரமாகிய சீகாகுளத்தில் வாடகை வீடுகள் சிலவே. மாவட்ட அலுவலர் குடியிருப்பதற்கு வசதியான வீடுகள் அரிதினும் அரியன.

யாதவத் தெருவில், தாசில்தார் குடிஇருந்த வீடொன்று காலியாக இருந்தது.

நான், ஆதிதிராவிடர் என்று எண்ணிய அவ் வீட்டுக்காரர் என்னைக் குடிஇருக்க விடுவாரா? மறுத்துவிட்டார்.

நான், மரக்கறி உணவுப் பழக்கமுடையவன் என்றும் பொடிச் செய்தியும் இரண்டொரு நாள்களில் காற்றில் பறந்தது. வீட்டுக்காரருக்குத் துணிச்சல் வந்தது. எனக்கு அவ் வீடு கிடைத்தது.

வீடு, பெரியதும் அல்ல; சிறியதும் அல்ல; இருவர் தேவைக்கு மேல் பெரியது. அக்கம் பக்கத்தார் அடக்கமானவர்கள். பண்பானவர்கள். ஓரளவு பாதுகாப்பான கட்டடமும் கூட,

வீடு கிடைத்தும் வீட்டு வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை, சில நாள்கள் தொல்லைப்பட்ட பிறகு, 'சலவைத் தொழிலாளர் பிரிவைச் சேர்ந்த பெண் ஒருத்தி கிடைத்தாள். அவளுடைய உதவியோடு என் மனைவி, வீட்டை நடத்தினார்.

நான், அலுவலில் மூழ்கினேன். அந்த மாவட்டத்தில், தனியார் தொடக்கப் பள்ளிகள் ஆயிரத்தை நெருங்கிக் கொண்டிருந்தன. மாவட்ட ஆட்சிக் குழுவின் சார்பில் நடந்த தொடக்கப் பள்ளிகள் பல நூறு ஆகும்.

ஆண்டுக்கு ஒரு முறை மான்யம்

அக் காலத்தில் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு இன்றைக்கு இருப்பதைப் போன்று திங்கள் தோறும் அரசின் நிதி உதவி வழங்கவில்லை. நிதி ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்பட்டது.

எட்டாம் வகுப்புத் தகுதியும் பயிற்சியும் பெற்றவருக்கு ஆண்டுக்கு நூற்று நாற்பத்து நான்கு ரூபாய்கள் மான்யம்; பள்ளி இறுதித் தகுதியும் பயிற்சியும் பெற்றவருக்கு இருநூறு ரூபாய்கள் ஆண்டு ஊதியம்.

இவற்றிலும் ஓரளவு பிடித்துக் கொண்டு, மிச்சத்தைக் கொடுக்கலாம்.

எவ்வளவு வெட்டலாம்?

பாதி வரையில் வெட்டலாம்.

எந்த அடிப்படையில் வெட்டலாம்?

ஆண்டுத் தணிக்கை அறிக்கையில் ஆய்வாளர் சுட்டிக்காட்டும் குறைகள் பெரிதாக இருந்தால், பாதி வரை தாராளமாக வெட்டலாம்.

ஆண்டுத் தணிக்கை அறிக்கைகள் திங்கள் தோறும் மாவட்ட அலுவலகம் வந்து சேரும். அவற்றை அவ்வப்போது மதிப்பிட்டு, எவ்வளவு வெட்டுவது என்று ஆணையிடும் 'பொல்லாத பொறுப்பு', தொடக்கக் கல்வி அலுவலருடையது.

ஆய்வாளர் மதிப்பீட்டை நம்பி, வெட்டு கொடுப்பது, சில வேளை, உழைத்த ஆசிரியர் வயிற்றில் மண்ணைப் போடுவதாக முடிவதுண்டு.

ஆய்வாளரின், அவா, வெறுப்பு முதலியன, பல குடும்பங்களைப் பாழ்படுத்தி போட்டது உண்டு.

விசாகப்பட்டின மாவட்டத்தை இரு கல்வி மாவட்டங்களாகப் பிரிப்பது என்று 1942 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே முடிவு செய்யப்பட்டது.

எனவே, வட விசாகைப் பகுதியைச் சேர்ந்த பள்ளித் தணிக்கை அறிக்கைகள், மதிப்பீடு செய்யப்படாமல் சேர்த்துக் கட்டி வைக்கப்பட்டன.

வட விசாகை, மாவட்டக் கல்வி அலுவலகம் தொடங்கியதும் அக் கோப்புகள் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டன.

இங்கேயும் திறக்கப்படாமல் அப்படியே கிடந்தன. ஏன்?

புதிய அலுவலகத்தைத் தொடங்கி இயக்கும் முன்னேற்பாடுகளில் அலுவலர்களின் காலம் கழிந்தது.

இவற்றின் கூட்டுப் பயன் என்ன?

நான், பத்துத் திங்கள் பணியை, இரு திங்களில் எடுத்து முடிக்க வேண்டும்.

டிசம்பர் இறுதிக்குள் எல்லா அறிக்கைகளையும் மதிப்பிட்டு, எல்லாப் பள்ளிகளுக்கு முழு உதவி, எவற்றிற்கு எவ்வளவு வெட்டு என்ற எழுத்து வழி ஆணையிட்டு அறிவிக்க வேண்டும். அம் முடிவுகளை அதற்குரிய பேரேட்டில் எழுதிக் கையெழுத்திட வேண்டும்.

அப்போதுதான், ஆண்டு முழுவதற்கும் சேரவேண்டிய உதவி நிதியைக் கணக்கிட்டு வழங்க முடியும்.

பன்னிரண்டு திங்களில் செய்யவேண்டிய, தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட, அறிக்கை மதிப்பீடுகளை இரு திங்களில் செய்யவேண்டிய நெருக்கடியில் நான் சிக்கிக்கொண்டேன்.

அதோடு அன்றாட அலுவல்களை நடத்தவேண்டும்.

மேலும் கல்வி அலுவலரின் நேரடிப் பொறுப்பான, உயர் நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆசிரியப் பயிற்சி பள்ளி ஆகியவற்றை ஆண்டுக்கு ஒரு முறை தணிக்கை செய்யும் வேலையைச் சரிவரச் செய்வதோடு, 'போர் ஆதரவு' பேச்சுகளில் ஈடுபடவேண்டும்.

போர் ஆதரவுக்காக, தொடக்கப் பள்ளி ஆசிரிய மையங்களுக்குச் சென்று பேச வேண்டும்; மாணவர்களிடம் உரை ஆற்ற வேண்டும்; பொதுக்கூட்டங்கள் கூட்டி உரை நிகழ்த்த வேண்டும். இவ்வளவு பணிகளிலும் முழுமூச்சுடன் ஈடுபட்டேன்.

பகல் முழுவதும் வேலை

விடியற் காலை அய்ந்து மணிக்கு எழுந்து, தொடக்கப் பள்ளி தணிக்கை அறிக்கைகளை மதிப்பிடுவேன். இது இரண்டு மணி நேரம் நடக்கும். மீண்டும் இரவு அவ் வேலையில் மூழ்குவேன்.

காலை ஏழு மணிக்குக் காலைக் கடன்களை முடிப்பேன்; குளிப்பேன்; அதற்குள் தயாராகியுள்ள சிற்றுண்டி உண்பேன்.

அருகில் இருந்த அலுவலகத்திற்கு ஒன்பது மணிக்கே, சென்று விடுவேன். அன்றாட அஞ்சல்களைப் பார்த்து, அப்போதைக்கப்போதே முடிவு எடுப்பேன்.

எவர் குறிப்பு எழுதினாலும் சுட்டிக் காட்டும் விதிகளை நானே படித்துப் பார்த்த பிறகு முடிவு செய்வேன்.

எவ்வளவு நம்பிக்கைக்குரியவராயிருந்தாலும் வாய்வழி ஆதாரங்களை ஏற்பது இல்லை என்பதில் உறுதியாக இருந்தேன்.

நடுப்பகல், வீட்டிற்கு வந்து உணவு அருந்திவிட்டுச் செல்வேன். இந்த அரைமணி, ஒரு மணி, அலுவல் அறையை விட்டுப் போனது, கால் ஆரவும் வேலைத் தேய்விலிருந்து விடுபடவும் உதவிற்று.

சீகாகுளம் மாவட்டக் கல்வி அலுவலகத்தில், கடைநிலை ஊழியர், காவலர், தோட்டக்காரர் தவிர ஏனையோர் தெலுங்குப் பார்ப்பனர்கள்.

அவர்கள் அனைவருமே வேலைக்குச் சிறிதும் சுணங்காதவர்கள்; சுறுசுறுப்புக்குச் சுடர் ஒளிகள்.

எங்கிருந்தோ சென்ற என்னை 'எசமானனாக' மதித்து மிகுந்த கண்ணியத்துடன் பணிபுரிந்தார்கள்.

நானும் அவர்களை மதித்து மரியாதையாக நடத்தினேன்.

மதிக்கப்படுகிறோம் என்று உணரும்போது, மனிதர்கள் ஆற்றக்கூடிய பணிகள் நினைக்காத அளவு, பெரியவனாக விளங்குவதை அங்குக் கண்டேன்.

அலுவலர் அனைவரும் வைதீகர்கள். நீராடி, பூசை செய்து, உண்டுவிட்டே, அலுவலகம் வந்தார்கள்.

ஆயினும் அவர்கள் நேரம் தவறி வந்ததாக நினைவு இல்லை.

மாலையில் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு அய்ந்து மணிக்கே வீட்டிற்குக் கிளம்பிவிடும் 'சமூகத் துரோகம்' அவர்களிடம் காணவில்லை.

நான் இரவு பதினொன்று, பன்னிரண்டு மணி வரை, கண்விழித்து, என் கைப்பட, மதிப்பீட்டுக் குறிப்புகளை எழுதி வைப்பேன்.

அவற்றைத் தட்டச்சில் கொண்டு வருவதற்காக, இரவாகும் வரை வேலை செய்வார்கள். என் விரைவுக்கு மிகச் சிறப்பாக ஒத்துழைத்தார்கள்.

பள்ளித் தணிக்கை அறிக்கைகளை மதிப்பீடு செய்கையில் நான் அணுகுமுறை, தாராளமாகவே நடந்து கொண்டேன்.

ஆய்வாளர்களின் பரிந்துரை அளவு வெட்டு கொடுப்பதில்லை; அவற்றினும் சிறிதே கொடுத்தேன்.

எங்கள் அலுவலர் 'கர்ணப் பிரபு' என்று மகிழ்ந்தார்கள்.

கீழே பணிபுரிபவர்களுக்குக் கண்டிப்பு தேவைப்படலாம்; ஆனால், பெரிய தண்டனைகளை வழங்கும் நிலையில் மேலே இருப்பவர்களுக்குக் கருணையே பெருமை என்பது அன்று நான் கற்ற பாடமாகும்.

ஆய்வாளருக்கு அடி

நான், சீகாகுளத்தில் சேருவதற்குச் சில நாள்களுக்கு முன்பு, நடக்கக் கூடாத ஒன்று நடந்துவிட்டது.

அது என்ன?

சீகாகுளம் சரக பள்ளி இளந்துணை ஆய்வாளர் ஒருவரை, தனியார் தொடக்கப் பள்ளி நிர்வாகி, ஒருவர், வழிமறித்து அடித்துவிட்டார். ஏன்?

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, தொடக்கப் பள்ளிகளில் பல, ஏட்டில் மட்டுமே இருந்தன; நாட்டில் நடைமுறையில் அவை இல்லை.

அத்தகைய ஏட்டுப் பள்ளிகள், நெடுஞ்சாலைகளுக்கு அருகில் இரா. எளிதில் போய்ச் சேரமுடியாத சிற்றூர்களில் நடப்பதாகத் தோன்றும்; ஆனால் உண்மையில் இயங்கா.

பள்ளித்துணை ஆய்வாளர், பார்த்து, தண்டிக்கப் பரிந்துரைக்க மாட்டாரா? நிச்சயம் செய்வார்.

ஆனால், பள்ளி இல்லையென்பதை அவ்வளவு தெளிவாக மெய்ப்பிப்பது கடினம். எதனால்?

ஆய்வாளர், ஆண்டுத் தணிக்கைக்குப் போவதானால் போதிய முன்னறிவிப்பு கொடுக்கவேண்டும்.

அத்தகைய அறிவிப்பு வந்ததும் பள்ளி நிர்வாகி விழித்துக் கொண்டு, சில பையன்களையும் பெண்களையும் திரட்டி ஏதோ சொல்லிக் கொடுத்து, ஆயத்தமாக வைத்திருப்பார்.

திடீர்ப் பார்வையில் எந்த வகையிலும் சிக்க மாட்டார்களா?

சிக்குவது மிக மிக அரிது. முறையில் உள்ள கோளாறு, பொய்யர்களுக்கு உதவிற்று.

ஆண்டுத் தணிக்கைக்குப் போகும்போதே, அக்கம் பக்கத்துப் பள்ளிகளைத் திடீர்ப் பார்வையிட வேண்டும். இது விதி.

எனவே, ஏதாவது ஒரு பள்ளிக்கு ஆண்டுத் தணிக்கை அறிவிப்பு வந்தால், அப் பள்ளி நிர்வாகி, சுற்றியுள்ள பள்ளிக்குத் தகவல் கொடுத்துவிடுவார்.

இல்லாத பள்ளிக்கூடம், நடப்பதுபோல் காட்ட, நிர்வாகிகள் ஒருவருக்கு ஒருவர் துணை புரிந்துகொள்வார்கள்.

இந் நிலையில், புதிதாக இளந்துணை ஆய்வாளராக வந்த ஓர் இளைஞர் - எம்.ஏ.எல்.டி. பட்டதாரி - ஒரு பள்ளியை மெய்யாகவே திடீரெனப் பார்வையிட்டுவிட்டார்.

அவருக்கு வந்த மொட்டைக் கடிதம் ஒன்று, குறிப்பிட்ட ஊரில் தொடக்கப் பள்ளி நடக்கவில்லை; பொய்க்கணக்கு எழுதி அனுப்பி, நிர்வாகி பணம் கொள்ளை அடித்து வருகிறார், என்று குற்றம் சாட்டியது.

அதன் உண்மையைக் கண்டறிய, அவர் அங்குச் சென்றார். எட்டுக் கல் தொலைவு மிதிவண்டியில் சென்று, அவர் அறிந்து கொண்டது என்ன?

அப் பள்ளி நடக்கவில்லை என்பது, அப்படியொரு வாக்கு மூலத்தைப் பெற்றுக்கொண்டு அவர் திரும்பி வந்தார்.

பக்கத்து ஊருக்குச் சென்றிருந்த நிர்வாகிக்கு, இந்தச் செய்தி காற்றில் விரைந்து எட்டிற்று.

அவர் என்ன செய்தார்?

மிதிவண்டியில் விரைந்து சென்றார்; பாதி வழியில் ஆய்வாளரைக் கண்டார்; வீழ்ந்து வணங்கினார். வாக்குமூலத்தைத் திருப்பித்தர வேண்டினார்; போதிய கைம்மாறு கொடுப்பதாக ஆசை காட்டினார். ஆய்வாளர் மசியவில்லை.

நிர்வாகி பொங்கினார்; தாக்கினார்; வாக்குமூலத்தைப் பிடுங்கிக் கிழித்துப் போட்டார்; பிறகு ஊர் திரும்பினார்.

அடிபட்ட ஆள்வாளர், நொந்த உடம்போடும் உள்ளத்தோடும் துணையின்றித் திரும்பினார்.

8. அரசு ஊழியருக்குப் பாதுகாப்பு

வழிமறிக்கப்பட்ட ஆய்வாளர், நேரே வழியில் இருந்த ஆமதாலவலசா காவல் நிலையம் சென்றார்.

ஆசிரிய நிர்வாகியின்மேல் புகார் கொடுத்தார்; பின்னர் சீகாகுளம் வந்து சேர்ந்தார்.

அன்று, காவல் நிலையத் தலைவரான ஆய்வாளர் விடுப்பில் இருந்தார்; பொறுப்பில் இருந்த தலைமைக் காவலர், புகாரைப் பதிந்துகொண்டு, எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுத்தார்.

ஆசிரிய நிர்வாகி, சும்மா இருந்தாரா? இல்லை. தலைமைக் காவலரை நெருக்கினார்; பணத்தால் மயக்க முயன்றார்; தன் செல்வாக்கால் மிரட்டினார்.

தலைமைக் காவலர் கோழையானவரா? இல்லை. விலை போனாரா? இல்லை. கருமமே கண்ணாக இருந்தார்; விழிப் போடும் உறுதியோடும் பணியாற்றினார்.

வலைவீச்சு

காவல் துறைக்கு வலை வீச முடியாது போகவே, கல்வித் துறைக்கு வலைவீச முயற்சி நடந்தது.

எதற்கோ வந்ததுபோல், அப் பக்க பெரியவர் ஒருவர் என்னைக் காண வந்தார். பேச்சு வாக்கில், மேற் கூறிய நிகழ்ச்சியை நினைவு படுத்தினார்.

அப்படி ஆய்வாளரை வழிமறித்து அடித்ததைப் பற்றிய கருத்து எதையும் கூறாமல் பேசினார்.

அத் தகராறு, பார்ப்பன ஆய்வாளருக்கும் பார்ப்பனர் அல்லாத நிர்வாகிக்கும் இடையே உள்ள போராட்டம், என்று சாயம் பூசப் பார்த்தார்.

நான் மிகப் பொறுமையாகக் காதுகளைக் கொடுத்துக் கேட்டேன். அவ்வளவோடு நின்றுவிட்டேன்.

அவர் எதிர்பார்த்தபடி, பார்ப்பனர் அல்லாத நிர்வாகிக்குச் சார்பாக இல்லை.

காவலரின் பொறுப்புணர்ச்சி

இப்படி இருக்கையில் பல நாள்களுக்குப்பின், ஒரு நாள், நான் சீகாகுளத்தில் இருந்து பாலகொண்டா என்ற ஊருக்குப் பேருந்தில் சென்றேன்.

வழியில் ஆமதாலவலசா காவல் நிலையத்தில் பேருந்து நின்றது.

ஓட்டுநரும் நடத்துநரும் காவல் நிலையத்திற்குள் கையெழுத்து இடச் சென்றார்கள்.

நான் பேருந்து வண்டியில் காத்திருந்தேன்.

அவ் வேளை தலைமைக்காவலர், வெளியே வந்தார்; என்னிடம் நெருங்கினார். காவல்துறை முறைப்படி வணக்கம் செய்தார்; சில விவரங்களைக் கூறினார்.

''நான் இக் காவல் நிலையத்தின் தலைமைக் காவலர்.

''திரு. சத்யநாராயண பந்துலுவை ஒரு நிர்வாகி அடித்த அன்று, நான் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தேன்.

''அவர் புகாரை முறைப்படி பதிந்து கொண்டேன். உடனடியாக நடவடிக்கையும் எடுத்தேன். வழக்குப்போட ஏற்பாடுகளும் செய்தேன். தண்டனை வாங்கித் தருவது உறுதி.

''நாங்கள் சத்திய சீலர்கள் அல்லர். நான், கொடுப்பவர்களிடம் கைநீட்டி வாங்காதவனும் அல்லன்.

''ஆனால், இவ்வழக்கில் வளைந்து கொடுக்க மாட்டேன். ஏன் என்று, 'தெய்வம்' போன்ற உங்களிடம் சொல்லாமல் ஒளிப்பானேன்?

''இப்போது பள்ளிக்கூட ஆய்வாளரை அடித்ததைப் பற்றிப் பாராமுகமாக இருந்துவிட்டால், கண்டிப்பான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டால், பொது மக்களுக்குக் குளிர்விட்டுவிடும்; அச்சம் அகன்று விடும்.

''அப்புறம் அவர்கள் காவல் துறை அலுவலர்களிடம் கை வரிசையைக் காட்டுவதற்கு நாள் ஆகாது.

''அரசு அலுவலர்களுக்கு உரிய பாதுகாப்புச் சரிய, நான் துணையாக இருக்கக்கூடாது. அதனால்தான், வரும் அதிக வருவாயை இழப்பதைப் பொருட்படுத்தாது, உடனடியாக இயங்கினேன். தங்களுக்குத் தண்டனிட்டேன்.

''பிழையிருந்தால் பொறுத்தருள்க'' என்று மீண்டும் 'சல்யூட்' அடித்தார்.

சொற்ப ஊதியம் பெற்ற அந்தத் தலைமைக் காவலருக்கு இருந்த 'குழு உணர்ச்சி' என்னைப் பரவசப்படுத்தியது.

அரசு ஊழியருக்குப் பாதுகாப்பு

பல கட்டுகளுக்கிடையே பணிபுரியும் அரசு ஊழியர்களைக் கை விடக்கூடாது என்று தோன்றிற்று.

அலுவலர்களைத் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்ட வேளைகளிலும், அவர்களைக் காட்டிக்கொடுக்காமல், அலுவலர் அணிக்கு அவமானம் நேரிடாத வகையில் திருத்துவதே முறை என்று எனக்குத் தோன்றியது.

அப்படியே நடந்து வந்தேன். வெற்றியும் பெற்றேன் என்று சொல்லலாம்.

என்னுடைய நீண்ட அலுவல் காலத்தில் எவரையும் 'காவல் துறை புலன் விசாரணை' என்கிற உளைச்சேற்றில் தள்ளி, சித்திர வதை செய்யாமலும், வேலை நீக்கம் போன்ற தண்டனைகளைக் கொடுக்காமலும் அரும்பணியாற்ற அலுவலர்களைத் தட்டிக் கொடுப்பதில் வெற்றி பெற்றேன்.

கருச் சிதைவு

சீகாகுளத்தில் குடியேறிய மூன்று நான்கு நாள்களில், இடி வீழ்தல் போன்ற நிகழ்ச்சியொன்று என்னுடைய தனி வாழ்க்கையில் விழ்ந்தது.

ஓர் இரவு, பதினோரு மணிக்கு நான் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தேன். என் மனைவி காந்தம்மா என்னை அவசரமாகக் கூப்பிட்டார்.

''தாங்க முடியாத இடுப்பு வலி; உடனே ஒரு மருத்துவரை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்'' என்றார்.

அந்நேரம், என் வீட்டில் காவல் புரிந்து வந்த, கடைநிலை ஊழியர் ராஜாராவை அழைத்தேன்; அவரிடம் விவரத்தைச் சொன்னேன்.

''சீகாகுளத்தில் அரசினர் மருத்துவமனை ஒன்றும் கிறித்துவ திருச்சபை மருத்துவமனை ஒன்றும் இருக்கிறது.

''முந்திய மருத்துவமனைக்குச் சென்று அழைத்தால், அகாலத்தில் மருத்துவர் வீட்டுக்கு வருவாரா என்பது தெரியாது.

''கிறித்தவ மருத்துவமனைக்குச் சென்றால், மருத்துவ அம்மையார் இங்கு வந்து ஆவன செய்வது உறுதி'' என்றார்.

உடனே கிறித்தவ மருத்துவமனைக்கு ராஜாராவை அனுப்பினேன்.

வாடகைக் குதிரை வண்டியில், மருத்துவர் வந்து சேர்ந்தார். காந்தம்மாவைச் சோதனை செய்தார்.

உடனே மருத்துவமனையில் சேர்த்து, ஆவன செய்வதாகக் கூறினார். நள்ளிரவுபோல், டாக்டர் ராய் அம்மையார், என் மனைவியை அழைத்துப் போனார்.

உடன் செல்ல எனக்கு அனுமதியில்லை

நான் வீட்டிலேயே தவித்துக்கொண்டு இருந்தேன். பின்னிரவு ஒரு மணிபோல் ராஜாராவ், வீடு திரும்பினார்.

''இனி அச்சமில்லை'' என்று மருத்துவர் சொல்லியனுப்பியதாகச் சொன்னார்.

இருப்பினும் இரவெல்லாம் விழித்து இருந்து கவலைப்பட்டேன். தெலுங்கு தெரியாததால் எவரோடும் கவலையைப் பகிர்ந்துகொள்ள இயலவில்லை.

தவிப்பு அதிகமாக இருந்தது. பொழுது விடிய, மருத்துவ மனைக்குச் சென்றேன். 'கருச் சிதைவு' என்று தெரிந்து கொண்டேன்.

தெரிந்தவர்கள் யாருமில்லாத ஊரில், தொலையூரில், இப்படி மாட்டிக்கொண்டோமே என்று கண்கலங்கினேன்.

டாக்டர் ராய் அம்மையார் திறமையும் பரிவும் கனிவும் பொறுப்புணர்ச்சியும் செறிந்தவராகத் தென்பட்டார்.

அது சிறிது ஆறுதல் தந்தது. ஆனாலும் கவலை மின்னியபடி இருந்தது.

நான்கு நாள்களுக்குப் பிறகு, காந்தத்தின் காய்ச்சல் குறைந்தது. வழித்துணையாக வந்து தோன்றிய ராய் அம்மையாரைப் பற்றிப் பேசிப்பேசி, மனக்கவலையை மறந்தோம்.

அம்மையார் வீட்டு உணவைக் காந்தம் உண்டதைக் கண்டு, அவர் பெருமகிழ்ச்சி கொண்டார்.

தொழில் ஈடுபாட்டோடு பாச உணர்வும் கலக்க, மருத்துவம் பார்த்து, உடல் நலத்தைக் கொடுத்து, பரிவுடன் வீட்டிற்கு அனுப்பினார்.

ஓராண்டிற்குப் பிறகு, மீண்டும் கருச்சிதைவு ஏற்பட்டது.

அப்போதும் ராய் அம்மையாரின் மருத்துவத்தால், எளிதில், காந்தம்மா உடல் நலம் பெற்றார்.

காந்தம்மாளுக்கு ஆய்வாளர் பதவி

இதற்கிடையில், சிகாகுளம், பெண் தொடக்கப் பள்ளிகளின் ஆய்வாளர், விடுப்பில் சென்றார்.

அவ்வளவு தூர இடத்திற்குப் பெண் ஆய்வாளர்கள் வரத் தயங்கினார்கள்.

அந் நிலையில், எதிர்பாராத ஆணை ஒன்று வந்து சேர்ந்தது.

காந்தம்மாவை அன்றாட நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பெண் ஆய்வாளராக நியமித்திருப்பதாக அவ்வாணை அறிவித்தது.

அதாவது ஊர் ஊராகச் சுற்றி, தணிக்கை செய்ய வேண்டியதில்லை.

அன்றாட அஞ்சல்களை உடைத்துப் பார்த்து, உடனுக்கு உடன் பதில் எழுதினால் போதும் என்பதாகும்.

அப் பொறுப்பைச் சரிவர நடத்த நான் ஆலோசனை கூறினேன். அதனால் என் வேலைப்பளு மிகுதியாயிற்று.

சிலபோது, சில நாள்களில் மட்டும் மான்ய பில்களில், அய்யாயிரம் கையெழுத்துகள் போட நேரிடும்.

விரைந்துபோட நேர்ந்ததால், என் கையெழுத்து, படிக்க இயலாத அளவு அடியோடு மாறிவிட்டது.

இப்போதைய என் ஆங்கிலக் கையெழுத்தில் என்.டி.எஸ். என்ற மூன்று எழுத்துகளே தெளிவாக இருக்கும். மற்றவை ஒரே கிறுக்கல்.

சீகாகுளம் போவதற்கு முன்பு, என் கையெழுத்து முத்து முத்தாக இருக்கும். அதைப்பற்றிப் பேசிப் பயன் என்ன?

நான் சீகாகுளத்தில் அலுவல் பார்த்த போதுதான், பஞ்சப்படி கொடுக்கும் முறை முதன் முதலாக, நடைமுறைக்கு வந்தது. முதல் ஆணை, நான்கு திங்கள் முன் தேதியிட்டு வந்தது.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வந்த பஞ்சப்படி மூன்று ரூபாய்களாகும். நான்கு திங்கள் படி. ரூபாய் பன்னிரண்டையும் விரைந்து கொடுத்தேன்.

புதிய சேமிப்புத் திட்டம் புகுந்தது

அநேகமாக அதே நேரத்தில் பாதுகாப்பு சேமிப்பு நிதி என்ற பெயரில், அஞ்சல் அலுவலகங்களில், புதிய சேமிப்புத் திட்டம் தொடங்கப் பட்டது.

சாதாரண அஞ்சல் சேமிப்பிற்கு வட்டி, நூற்றுக்கு மூன்று விழுக்காடு, பாதுகாப்பு சேமிப்புக்கு நூற்றுக்கு மூன்றரை வட்டி.

எதிர்பாராது கிடைத்த, பன்னிரண்டு ரூபாய்களை முழுமையாகவோ, பகுதியாகவோ, 'பாதுகாப்புச் சேமிப்பில் வைக்கும்படி, வேண்டும் சுற்றறிக்கை ஒன்றை நான் அனுப்பினேன்.

அதிகப் பழக்கமில்லாத சீகாகுளம் ஆசிரியர் படை கொடுத்த ஒத்துழைப்பு போற்றத்தக்கதாம்.

'பாதுகாப்புச் சேமிப்பில்' சேராதவர்கள் நூற்றுக்கு ஒரிருவரே. மற்றவர்கள் சேமிப்பில் ஈடுபட்டார்கள். திங்கள் தோறும் தவறாது சேமித்தார்கள்.

உணவுத் தட்டுப்பாடு

பிரிட்டானியர் சேர்ந்திருக்கும் சோவியத் அமெரிக்க கூட்டணியின் வெற்றியே இந்தியாவின், உலகத்தின் உரிமைக்கும், எதிர்காலத்திற்கும் நல்லது என்பது, சாதாரண மக்களுக்கும் அன்று மிகத் தெளிவாகப் புரிந்தது.

போர் மூள்வது, உணவுத் தட்டுப் பாட்டிற்குக் காரணமாகும். அத் தட்டுப்பாடு இந்தியாவை விட்டதா? இல்லை.

மேற்கு வங்கத்தை வாட்டி வதைத்தது. இலட்சக்கணக்கான வங்காளியர், பட்டினிக் கொடுமையால், காக்கை குருவிகளைப் போல் மாண்டு கிடந்தார்கள்.

எப்படியாவது, எங்காவது உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது; வழியொன்று பிறந்தது; ஆணையொன்று வெளியானது. அது என்ன?

அரசின் அலுவலகங்களின் வளாகங்களில் காய்கறிகளைப் பயிரிட்டுக் கொள்ளலாம்.

எவர் பயிரிடலாம்? அலுவலகக் காவலர்கள், ஊழியர்கள் பயிரிட்டுக் கொள்ளலாம். அதற்குப் பொது அனுமதி கொடுக்கப்பட்டது. பயிரிட்ட பண்டங்களை என்ன செய்வது?

அதில் ஈடுபட்ட ஊழியர்கள், தங்களுக்குள் நியாயமானபடி, பங்கிட்டு எடுத்துக்கொள்ள, உரிமை உண்டு.

பொது நிதியிலிருந்து செலவு செய்யாது, ஊழியர்களின் உழைப்பால் உற்பத்தியாகும் காய்கறிகள் அவர்களுக்கே உரியது என்ற ஆணை பெரிய தூண்டுகோலாக அமைந்தது.

அலுவலக வளாகங்களில் பருவ காலங்களில், காய்கறிகள் விளைந்தன.

சீகாகுளம் மாவட்டக் கல்வி அலுவலகத்திலும் காய்கறித் தோட்டம் உருவாயிற்று. பதின்மூன்று வகைக் காய்கறிகள் பயிராயின. நான்கு நாங்கள் வரை ஊழியர்களுக்கு, காய்கறிப் பஞ்சமில்லை.

பல பள்ளிகளிலும் இத்தகைய விளைவைக் கண்டோம்.

ஆனால் அதை, தன்னாட்சி இந்தியாவில் கைவிட்டு விட்டோம்.

பகல் உணவு போடும் பள்ளிகளோடு தோட்டங்களை இணைத்து, இயற்கைப் பாடக் கருவியாகவும் பச்சைக் காய்கறி தந்து வளர்க்கும் உபாயமாகயும் பள்ளிக்கூடத் தோட்டம் வளர்ப்பதைக் கருத்தில் கொண்டு இருந்தோம். அதுவும் 'கருச்சிதை' வாக முடிந்தது.

9. மக்கள் நம்பிக்கை குவிந்தது

உலகப்போர்

பகல் இரவு மாறி மாறி வரும்; வேலை அடுத்து ஓய்வு. அது இயற்கை. இன்பம் துன்பம் பின்னிப் பின்னிவரும்.

புதிய வேலை; நிறைய வேலை; அது நிறைவைத் தந்தது. மனைவியின் உடல் நலக்குறைவு வேதனைக்கு ஊற்றாயிற்று.

உலக அரங்கிலும் வேதனை சூழ்ந்தது. போர் மேகங்கள் இருண்டு கவிந்தன. இட்லரின் மண்ணாசை, அவனது படைகளை - பொறுக்கி எடுக்கப்பட்ட மறவர்களை விமானப்படைகளை சோவியத் நாட்டினைத் தாக்க அனுப்பியதை முன்னரே குறித்துள்ளேன்.

வல்லவனுக்கும் ஒரு வல்லவன் இருப்பான். கிழடு தட்டிப் போன, பிரான்சு வீழ, பிரிட்டனும் தள்ளாடக் கண்ட இட்லர், பாட்டாளிகளின் நாடாகிய சோவியத் நாட்டை ஆறு வாரங்களில் பிடித்துவிட முடியும் என்று, மனப்பால் குடித்தான். கனவு கண்டான்.

அந்தக் கணக்கு தப்புக் கணக்காகி விட்டது; வெறும் கனவாகி விட்டது.

ஆறு திங்களில்கூட சோவியத் நாட்டைப் பிடிக்க இயலவில்லை; போர் ஆண்டுக்கணக்கில் நீண்டது.

இறுதியில்?

சோவியத் படை, செர்மானியப் படையை முறியடித்தது; துரத்தியடித்தது; பெர்லின் வரை நாசிப்படைகளை விரட்டிக் கொண்டு சென்றது.

செர்மனியின் தலைநகராகிய பெர்லின் நகரில், செஞ்சேனையின் வெற்றிக் கொடியை நாட்டிப் புகழ் பெற்றது.

அப்படிச் செய்ய எப்படி முடிந்தது?

சோவியத் மக்கள் அனைவருமே அறைகூவலை ஏற்றுக் கொண்டனர்; வீரத்துடன் விவேகத்துடன் போராடினர்.

ஒரு நாட்டின் மெய்யான பாதுகாப்பு, அந்த நாட்டின் பொது மக்களே, என்பதை அன்று உலகம் அறிந்தது.

இப்போதைய நிலையில், இந்தப் பாடத்தை இந்தியர்களாகிய நாம் திரும்பப் படிப்பது நல்லது.

மேற்கே, சோவியத் மண்ணில், செர்மானியப்படை மாட்டிக் கொண்டு, உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் கிழக்கே, சப்பானியர் படை எடுத்து வந்தனர். சின்னஞ்சிறு நாடுகளையெல்லாம் விழுங்கி, எக்காளமிட்டுக்கொண்டு, இந்தியாவை நெருங்கினர்.

சயாம், இந்தோசீனா, பர்மா - சப்பானியர் கைவசமாயின.

பர்மாவிலிருந்து, காட்டிலும் மேட்டிலும் நடந்து வந்த இந்திய அகதிகள், பல்லாயிரவர் வழியில் மடிந்தார்கள்; சிலரே இந்தியா வந்து சேர்ந்தனர்.

போர் நெருங்க, நெருங்க, இந்தியப் போர் முயற்சிகள் சூடு பிடித்தன.

நாள்தோறும் சொற்பொழிவு

கொள்கை விளக்கக் கூட்டங்கள் ஆங்காங்கே நடந்தன; பட்டாளத்திற்கு ஆள் சேர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நன்கொடை திரட்டுவது போதாது என்று பாதுகாப்புப் பத்திரங்கள் விற்பனையால், பாதுகாப்பு நிதி திரட்டும் முயற்சி, முடுக்கிவிடப்பட்டது.

சராசரி, நாளைக்கு ஒரு கூட்டத்திலாவது நான் பேச வேண்டியிருந்தது.

தெலுங்கு பேசத் தெரியாத நான், ஆங்கிலத்தில் பேசினேன்.

பெரும்பாலும், பள்ளி ஆய்வாளர், அதைத் தெலுங்கில் மொழி பெயர்ப்பார்.

நீண்ட சொற்றொடர்களாக அமைந்தால், மொழி பெயர்ப்பாளர், இடர்ப்படக்கூடும் என்பது விளங்கிற்று. எனவே, சிறு சிறு தொடர்களாகப் பேசும் முறையினை மேற்கொண்டேன்.

அதுவே, என்னுடைய பேச்சு, எழுத்துப் பாணியாக நிலைத்து விட்டதோ என்று இப்போது எண்ணிப் பார்க்கிறேன்.

படிப்பில் மிகப் பின்தங்கிய அப் பகுதியில், பட்டாளத்தில் சேர முன்வருவோர் சிலராக இருந்தனர்.

நிதி திரட்டுவதில் ஆசிரியப் படை உதவிற்று; திங்கள் தோறும் தவறாது, குறிப்பிட்ட தொகையைச் சேமித்து உதவிற்று; ஊரார் சேமிக்கவும் உதவிற்று. எப்படி?

பாதுகாப்பு நிதி திரட்டினேன்

நான் சீகாகுளத்தில் சேர்ந்த சில திங்களில், அரசு ஆணை ஒன்று வந்தது. அது என்ன?

'கெஜட்' பதிவு பெற்ற அலுவர்கள் அனைவரும் பாதுகாப்பு நிதி சேர்க்க வேண்டும் என்பது அந்த ஆணை.

அதையொட்டி, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரும் 'பாதுகாப்புப் பத்திரம்' விற்கும் அலுவலராக மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு 'கெஜட்' பதிவு பெற்றவரையும் நியமிக்க வேண்டும்.

விசாகப்பட்டினம் ஆட்சித் தலைவர் என்னை சீகாகுளம் பகுதி விற்பனையாளர்களில் ஒருவராக நியமித்தார்.

அதற்கான இரசீதுக் கட்டுகளை எனக்கு அனுப்பி வைத்தார்.

பத்திரங்கள் பத்து, அய்ம்பது, நூறு, ஆயிரம் ரூபாய் அளவையில் அச்சடிக்கப்பட்டு இருந்தன.

சேமிப்பாளர், கட்டுகிற தொகையைப் பெற்றுக்கொண்டு, அவருக்கு இரசீது கொடுக்கவேண்டும்.

பணத்தை முடிந்தால், நாள்தோறும், அரசின் கருவூலத்தில் கட்டிவிடவேண்டும். முடியாதபோது, இரண்டொரு நாள்களுக்கு ஒருமுறையாவது கருவூலத்தில் செலுத்துதல் கடமை.

அவ்வப்போது, அந்த இரசீதுகளின் அடிக்கட்டையும் கருவூல இரசீதுகளையும் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பிப் பத்திரங்களை வாங்கி, உரியவர்களிடம் கொடுக்க வேண்டும்.

சொந்தச் செலவில் பயணம்

நான், எந்த ஊருக்குச் சென்று தங்கினாலும் எல்லாச் செலவுகளையும் நானே ஏற்றுக்கொள்வேன்.

ஆசிரியர்களோ, ஆய்வாளரோ செலவு செய்ய விடமாட்டேன்.

இந்தச் செய்தி, நானா பக்கங்களிலும் பரவிவிட்டது. எனவே, பொது மக்கள், என்பால் நம்பிக்கை கொண்டனர்.

என்னையே நாடினர்

'பாதுகாப்புப் பத்திர' விற்பனையாளராக, நான் நியமிக்கப் பட்ட சில நாள்களில், நாட்டுப்புறத்தார் பலர், என்னை நாடி அணுகி வந்தனர்.

அவர்களில் சிலர் அய்யாயிரம், பத்தாயிரம், ரூபாய்களைக் கொண்டு வந்து, என்னிடம் கொடுத்து, பத்திரங்களுக்காகப் பதிந்து கொண்டனர்.

பெருந்தொகைகள் வந்த பொழுது அவற்றைப் பாதுகாப்பாக வைக்க, வீட்டில் இடமில்லை.

அலுவலக இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டுவேன்.

அதற்கு உதவியாகும் பொருட்டு, அலுவலக நேரத்திற்கு முன்பே, அங்குச் செல்லும் பழக்கம் எனக்கு ஏற்பட்டது.

எனக்கு முன்பின் தெரியாத நாட்டுப்புறத்தார், வருவாய்த்துறை அலுவலர்களிடம் சென்று பணத்தைக் கட்டாமல் என்னிடம் வந்தது, புதிராக இருந்தது.

அவர்களில் எவரும் விளக்கம் சொல்லாமல் மழுப்பினார்கள்.

பிறகொரு நாள்களில், ஓர் ஆசிரியர், தெளிவு படுத்தினார்.

''நிலமுடையவர்கள், வருவாய்த்துறை அலுவலரிடம் சென்று பணத்தைக் கட்டினால், ஆயிரம் கொடுத்தால், தொள்ளாயிரத்துக்கு ரசீது தருவோம், இரசீது கொடுக்கிறார்களாம்.

''நூறு ரூபாய்களை 'மாமூல்' என்று எடுத்துக்கொள்ளுகிறார்களாம். அவர்களோடு போராடமுடியுமா?

''நம்மிடம் வந்தால், அவர்கள் கொடுத்த பணம் முழுமைக்கும் ரசீது கிடைக்கிறதாம்.

''அதோடு, தாசில்தார் அலுவலத்திற்குப் போனால், வேலை முடியும் வரை சேமிப்பாளர், கால்கடுக்க நின்று கொண்டு இருக்க வேண்டுமாம்.

''நம்மிடம் வந்தால், பத்து ரூபாய் சேமிப்பவரும் உட்கார்ந்து பேசமுடிகிறதாம்'' இப்படி விளக்கம் கூறினார்.

பெரும்பாலான மக்கள், என்னிடம், பாதுகாப்புப் பத்திரம் வாங்கியதால் எனக்கு ஏதும் ஆதாயம் கிடையாது. எனக்குப் பொறுப்பு அதிகமாயிற்று.

வருவாய்த் துறை அலுவலரின் அழுக்காறு

ஆனால் சிலருக்கு 'மாமூல்' இழப்பு. அவர்கள் எரிச்சல் கொண்டார்கள்; கொதிப்படைந்தார்கள்; அழுக்காறும் ஆத்திரமும் கொண்டார்கள்.

எங்கிருந்தோ வந்த தமிழனுக்கு தெலுங்கரிடையே இவ்வளவு செல்வாக்கா என்று பொருமியவர்கள் உண்டு.

முடியாத வேலையில் மூழ்கிக்கிடந்த எனக்கு, அதைப்பற்றித், தெரிந்து கொள்ள முடியவில்லை. தொடர்ந்து பாதுகாப்புப் பத்திர விற்பனையில், சுறுசுறுப்பாக இருந்தேன்.

ஒரு நாள், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து அவர் பிறப்பித்த ஓர் ஆணையின் படிவம் எனக்கு வந்தது.

அந்த ஆணை, எவருக்குப் பிறப்பிக்கப்பட்டது?

வருவாய்த் துறை அலுவலர்களுக்கு.

அது என்ன சொல்லிற்று?

''சீகாகுளம் மாவட்ட கல்வி அலுவலரிடம் பாதுகாப்புப் பத்திரங்கள் வாங்கும்போது, பல குடியானவர்கள், எவ்வளவுக்கு வாங்க வேண்டுமோ, அவ்வளவுக்கு வாங்காமல், குறைந்த தொகைக்கு வாங்குகிறார்கள்.

''அக்குடியானவர்களின் நில உடைமைக் கணக்கு, கல்வி அலுவலருக்குத் தெரியாதாகையால், அவர் குறைந்த தொகையை ஏற்றுக்கொள்ளுகிறார்; அவர், ஆசிரியர்களிடம் மட்டுமே பத்திரங்கள் விற்பனை செய்யலாம் என்று கட்டுப்படுத்திவிட்டால், குடியானவர்கள் குறைத்துக் கொடுக்கும் வாய்ப்பு அடைபட்டு விடும்' என்று வருவாய்த்துறை அலுவலர்கள் கூறிய ஆலோசனையை ஆழ்ந்து சிந்தித்தோம்.

''வருவாய்த்துறை அலுவலர்கள் சுமக்க வேண்டிய பளுவை, மாவட்டக் கல்வி அலுவலர் சுமப்பதற்கு நாம், அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

''ஆயிரம் ரூபாய்க்குப் பத்திரம் வாங்க வேண்டியவர், கல்வி அலுவலரிடம் எண்ணூறு ரூபாய்களுக்கே வாங்கி இருந்தால், பாக்கி இருநூறு ரூபாய்களை அவ்வட்ட தாசில்தாரோ, பிற அதிகாரிகளோ, அந்தக் குடியானவர்களிடம் வாங்குவதற்குத் தடை இல்லை'' என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

''கல்வி அலுவலர், பாதுகாப்புப் பத்திரம் விற்பதை கட்டுப் படுத்தும் தேவை இல்லை'' என்று ஆணை பிறப்பித்தார், மாவட்ட ஆட்சித் தலைவர்.

பாடம் கற்றேன்

முப்பது வயதில், நடந்த இந் நிகழ்ச்சியால், நான் ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக் கொண்டேன். அது என்ன?

மக்கள் இனம் உயர்ந்தது எதனால்? ஆறாவது அறிவைப் பெற்றிருப்பதால்! அதைக்கொண்டு, கருத்து மண்டலத்தில், 'உயிர்க் கருணை!' வரை உயர்ந்து வளர்ந்திருப்பதால்!

வித்து விதைத்துப் பயிரிடும் கலையைக் கற்றதால்!, ஓட்டுகள் போட்டு வகை வகையான, தானியங்களைக் காய்களைக் கனிகளைப் பயிரிடக்கற்றதால்! அவற்றைக் கொண்டு அறுசுவை உணவுகளைச் சமைக்கும் திறன் பெற்றதால்.

பொறுத்தில் பதுங்கியிருந்த மானுடம், மட்டை நிழலில் தங்கக் கற்று, மலைக் குடிசையில் இருக்கக்கற்று, மெல்ல மாடமாளிகைகளைக் கட்டி வாழும் சாதனையால் சிறப்புப் பெறுகிறது!

கூர்நுனி வெய்யிலும் தெரியாதபடி குளுகுளு வசதிகளைச் செய்துகொள்ளும் ஆற்றல், செயல்படும் அறிவின் அடையாளம் ஆகும்.

இலைகளையும் ஓலைகளையும் அணிந்த மாந்தர், மெல்ல மரத்திலிருந்து சென்று, இன்று பட்டிலும் பஞ்சிலும் செயற்கை நாரிலும் உடை நெய்து உடுக்கக் கற்று உள்ளதால், சிறந்தவர்கள் ஆயினர்!

ஆனால், உடன் பிறந்தே கொல்லும் நோய்களையும் உடையது, மக்கள் இனம். அறிவெனும் அழியாச் செல்வம் உடையதே போன்று. அறிவு பயனுறு தெரியாது. தன் இனத்தை அழிக்கும் சில நோய்கள் வழி வழி தொடர்ந்து வளர்த்துக் கொண்டிருப்பது.

மக்கள் அறிவால் இயங்குவதைவிட, உணர்ச்சியால், உந்தப்பட்டு உருண்டு வீழ்வதே அதிகம். அவ் வுணர்ச்சி இருவேறு வகைப்படும்.

தன்னம்பிக்கை, இடையறாத முயற்சி, பிறர் நலம் கண்டு மகிழ்தல், புறங்கூறாமை போன்றவை ஆக்க உணர்வுகள் ஆகும். அவை உள்ளவரையும் வளர்த்து, சுற்றியிருப்பவரையும் வளர்க்கும் தன்னையன.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், பழிவாங்கும் பகைமை, ஆகியவை அழிக்கும் உணர்வுகள்.

அறிவுத் துறையில் வானளவு வளர்ந்துள்ள மாந்தர் இனம், உணர்வுத்துறையில், பரிதாபத்திற்குரிய அளவு படுபாதாளத்தில் கிடக்கிறது; உளைச் சேற்றில் யானையாகத் தவிக்கிறது.

நல்ல உணர்ச்சிகளான, அழுக்காறு, அவா, புறங்கூறல், பகைமை யாவற்றைப் பயிரிட்டுப் பாழாகிறது.

பதவி உயர்வு ஒன்றுக்காகவே வருவாய்த் துறை அலுவலர்கள் தங்களுக்குள் போட்டி போடுபவர்கள்.

அவர்களுக்குள் அழுக்காறு சுரப்பது, மன்னிக்க முடியாத கேடு பயிலும், புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

அவர்களோடு போட்டி போடும் வாய்ப்பே இல்லாத, என்னிடம் அவர்கள் அழுக்காறு கொண்டார்கள், அதை அடக்கி ஆளமுடியாமல், மாவட்ட ஆட்சியாளரிடம் கொட்டியிருக்கிறார்கள்.

மாவட்டத்திலுள்ள இலட்சக்கணக்கான குடியானவர்களில் சில நூறு பேர்கள், கல்வி அலுவலர் வழியாகப் பத்திரம் வாங்குவதைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத அளவு அவா கொண்டு, அல்லல் பட்டார்கள். அந்தோ! பரிதாபம்!

மாந்தர் இனத்தை ஆட்டிப் படைப்பது அறிவு அல்ல! உணர்ச்சி! நீயா உணர்ச்சி என்பதை அன்று நான் விளங்கிக்கொண்டேன்.

பிந்திய நாற்பது ஆண்டுகளில் நான் தெரிந்து கொண்டது என்ன?

அழுக்காறால், அவாவால், துரோகத்தால், இனக்கொலையால் மொத்தத்தில் மாந்தர் இனம் எட்டவேண்டிய நிலையை எட்டாமல் பரிதவிக்கிறது.

இதில், மக்கள் இனத்தின் மூத்த பிரிவினராகிய தமிழரொடு எவரும் போட்டியிட இயலாது.

அவர்கள் தாழ்ந்தது, மீளமுடியாது மீண்டும் வீழ்வது, அழுக்காறால், பேராசையால், வளர்த்தவர்களையே புறமுதுகில் குத்துவதால்; மூன்று காசுக்குத் தோழனை வெட்டும் புத்தியால்; சொன்ன சொல் காக்காமையால்.

தமிழ்நாட்டில் இன்னும் ஆயிரம் பெரியார்கள் தோன்றி அளப்பரும் பாடுபட்டாலும், சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் தமிழர்களைக் கண்டு பரிதாபப்பட்டுப் பலன் என்ன?

10. அளவில்லாத ஆடம்பரச் செலவு

தெலுங்கு கற்றேன்

சீகாகுளத்தில் வேலை பார்க்கையில், தெலுங்கு மொழி கற்பதில் ஈடுபட்டேன். அதில் தேர்வு எழுதி வெற்றி பெற்றால்தான், என் பதவி உறுதியாகும். என் தெலுங்கு ஆசிரியர் என் மனைவி காந்தம்மாளே.

தெலுங்கில் வாய்மொழித் தேர்வும் உண்டு. பேச்சுப் பழக்கம் ஏற்படுவதற்காக, ஊழியர்களோடு தொடர்ந்து தெலுங்கில் பேச முயன்றேன்.

'அப்படியே' என்று தமிழில் சொல்லுவதற்கு ஈடாக, ஊழியர்கள் 'சித்தம்' என்று பணிவாகக் கூறுவார்கள்.

என் அலுவலகத்தில் மூன்று, கடை நிலை ஊழியர்கள் பணி புரிந்தார்கள். அவர்களில் ஒருவர் பெயர் ராஜாராவ்.

வைழியர் வீட்டில் பகட்டான விழா

ஒரு நாள் காலை அவர் ஒரு தாம்பாளத்தில் தாம்பூலத்தை வைத்து அதன்மேல் ஓர் உறையை வைத்து எடுத்துக் கொண்டு வந்தார்.

'அம்மகாருனி, பிலுவண்டி பாபுகாரு' என்று குழைவோடு சொன்னார்.

'அம்மாவை அழையுங்கள்' என்று அதற்குப் பொருள். அதன் படி என் மனைவியை அழைத்தேன்.

காந்தம்மா என் பக்கம் வந்து நின்றதும், தாம்பாளத்தை எங்கள் இருவர் கைகளில் கொடுத்துவிட்டு, மின்னலின் விரைவில், எங்கள் கால்களைத் தொட்டு, கண்ணில் ஒத்திக்கொண்டார்.

பொத்தானை அழுத்தியதும் வெளிச்சம் பளிச்சிடுவதுபோல, என்னுள் சினம் பொங்கி வழிந்தது; கண்கள் சிவந்தன; நாடிகள் துடித்தன.

'ஒத்து! ஒத்து! இட்ல செயக்கூடது' என்று பதற்றத்தோடு கூறினேன். அதற்குள், 'மலரடி' தொட்டுக் கும்பிட்டு ஆகிவிட்டதே!

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு என்னைச் சினங்கொள்ள வைத்த அப் பழக்கம் சமுதாயத்தில் அடியோடு நிற்காவிட்டாலும் குறிப்பிடத்தக்க அளவாவது குறைந்ததா? அந்தோ! இல்லை.

பெரியாரின் தன்மான இயக்கம் வளர்த்த சமத்துவ உணர்ச்சியால் உந்தப்பட்ட என்னைப் போன்ற இலட்சக் கணக்கானவர்கள் காலைத் தொட்டுக் கும்பிடுவதைவிட்டு வளர்ந்து வந்தோம்.

முப்பது ஆண்டு காலம் இத்தகைய நல்ல போக்கு வளர்ந்தது.

ஆனால் கொடுமை! சென்ற இருபது ஆண்டுகளாக, இந்த இழிந்த போக்கு, செழுமையாக வளர்ந்து கொண்டு இருக்கிறது.

எவர் எவரை, எதற்கு வீழ்ந்து வணங்குவது என்ற வரையறை கூட, இல்லாது போய்விட்டது.

பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள்கூட நாடறிய, ஆயிரக்கணக்கானவர்கள் காண, 'பெரியவர்கள்' காலில் வீழ்ந்து கும்பிடுவதே, விளம்பரப்படும் புதிய நாகரிகமாகிவிட்டது; வயிறு வளர்க்கும் வழியாகிவிட்டது.

சமயாச்சாரிகளைப் பின்பற்றுவோர் கூட காலில் வீழாமல் மரியாதை செய்யும் முறைக்கு மாறிய பிறகும், மற்றவர்கள் போட்டி போட்டுக்கொண்டு காலில் வீழ்ந்து வளரும்போது, நாம் பெரியாரால்

'பண்படுத்தப்பட்டவர்கள்' என்று தற்பெருமை பேசிக்கொள்வதில் ஏதேனும் பொருள் உண்டா?

ராஜாராவ் அளித்த அழைப்பு தெலுங்கில் இருந்தது. காந்தம்மா அதைப் படித்துச் சொன்னார்.

அந்த அழைப்பு எதற்காக? காதுகுத்தும் விழாவிற்கு அழைப்பு. எவருக்குக் காது குத்து? இராஜாராவின் மூத்த மகனுக்குக் காதணி விழா.

நல்ல தாளில் அச்சிடப்பட்ட அழைப்பு சிந்தனையைத் தூண்டிற்று.

''என்ன ராஜாராவ்! இவ் விழாவிற்கு எவ்வளவு செலவு செய்யப்போகிறாய்?'' என்று கேட்டேன்.

அதை என் மனைவி மொழி பெயர்த்துச் சொன்னதும்,

''அய்ந்நூறு ரூபாய் என்று திட்டமிட்டுள்ளேன்; நூறு இருநூறு அதிகமானாலும் சமாளிக்க வேண்டியதே!'' என்று பெருமிதத்தோடு கூறினார்.

''இதற்கு வேண்டிய பணத்தைச் சேமித்து வைத்திருக்கிறாயா?'' என்ற கேள்வியை எழுப்பினேன்.

தெலுங்கில் வந்த பதில் :

''இல்லை எசமான் (பாபு)! என் நாணயத்தில் நம்பிக்கையுடைய ஒரு நண்பர், கடனாகக் கொடுத்துள்ளார்'' என்பதாம்.

அன்று ராஜாராவின் ஊதியம், திங்களுக்குப் பதினைந்தே. மேல்வரும் படி உண்டா? கிடையாது.

ஏன்? அலுவலகம் தேடி வருவோர் வலியக் கொடுத்தாலும் ராஜாராவ் வாங்கிக் கொள்ள மாட்டார். அவ்வளவு மானி இராஜாராவ்!

''தேவுடு ஈயவல்ல, பாபு!'' என்று மறுத்துவிடுவார். அதாவது கடவுள் கொடுக்கணும் என்பார்.

சொற்ப ஊதியக்காராகிய ராஜாராவ், கையூட்டு வாங்குமளவு தாழாத ராஜாராவ், இவ்வளவு பெரிய கடனை எப்படி அடைப்பார் என்ற கவலை என் சிந்தனையில் மின்னிற்று.

''ஏன்? இவ்வளவு செலவு செய்யணுமா? நூறு இரு நூற்றில் முடித்து விடக்கூடாதா?'' என்று கேட்டேன்.

சில மணித்துளிகளுக்கு முன்பு, எனக்கு வந்த அளவு வெகுளி, ராஜாராவுக்கு வந்தது.

முகம் சிவக்க, ''எப்படிங்க, நான் இதற்கும் குறைவாகச் செலவு செய்வது? நான் கடைநிலை ஊழியனாக இருக்கலாம். ஆனால் ராஜ

பரம்பரை, எஜமான்! பொப்பிலி அரசர் சாதியைச் சேர்ந்தவர், ராஜாவாள்!' என்று பெருமிதத்துடன் பதில் வந்தது.

நாடாண்ட பரம்பரை எவ்வளவுக்கு வீழ்ந்துவிட்டது! எடுபிடியாகத் தாழ்ந்துவிட்டது! முன்னோர் ஏன் அப்படி விட்டுவிட்டார்கள்?

இந்திய மக்கள் தாழ்வுற்று வறுமை மிஞ்சி, பல நூறு ஆண்டுகளாகத் தவிக்கிறார்களே! 'விரலுக்கு ஏற்ற வீக்கமே சரி; அளவோடு செலவு செய்வதே முறை. குடும்பத்தோடு நிற்க வேண்டிய சிறு சிறு நிகழ்ச்சிகளுக்கு, ஊரைக் கூட்டிச் செலவழித்து ஓட்டாணியாகக் கூடாது' என்பதாக எந்தச் சாதிப் பெரியவரும், எந்தச் சமயத் தலைவரும் வாய் திறந்து திட்டம் செய்யவில்லையே! ஏன்?

தந்தம் சமயாச்சாரியர்களிடம் பக்தி காட்டும் அய்யர், அய்யங்கார்களுக்குள்ளும் செலவுக் கட்டுப்பாடு, விதிக்க முடியாதது ஏன்?

பிரதமர் இந்திரா காந்தி, தம் அருமை மகனின் திருமணத்திற்கு நூறு பேர்களை மட்டுமே அழைத்து இந்தியச் சமுதாயத்திற்கு வழிகாட்டினார்.

அப்புறமாகிலும் அவரைப் போற்றிப் புகழ்வோரில்; பின்பற்றுவோரில் எத்தனை பேர்கள் சிக்கனத் திருமண முறையைக் கையைப் பிடிக்க முன்வந்தார்கள்!

தமிழர்கள் ஆடம்பரம்

அறுபது ஆண்டு காலம் திருமண முறையை மாற்ற, சிக்கனத்தைக் கொண்டுவர, தந்தை பெரியார் படாத பாடு பட்டாரே!

தமிழர்களாகிய நாம் மாறவேண்டிய அளவு மாறினோமா? சிக்கன முறையைப் பின்பற்றுகிறோமா?

பெரியார் எதை விரும்புகிறாரோ, அதற்கு மாறாக அல்லவா பெரியார் வகுத்த திருமண முறை இப்போது நடைபெறுகிறது!

திருமணத்தை மாநாடாகவே மாற்றி விட்டு, அளவுக்கு மீறிச் செலவு செய்கிறோமே! அவ்வேளை பார்த்து எவர் எவரோ, 'மிக வேண்டியவராக உலகுக்குக் காட்டிக்கொண்டு பிழைக்க, வாங்க, வழி செய்து விடுகிறோமே!

அய்ந்தாவது மட்டுமே படித்த ராஜாராவ் 'மனித இனம் என்னும் பெருமையைக் காதால்கூடக் கேட்டறியாது, அரச பரம்பரை என்ற ஆணவமும் அதற்கேற்பப் பகட்டுச் செலவுப் போக்கும் கொண்டிருந்ததைப் பற்றிப், பரிதாபப்பட்டேன்.

அதை விழுங்கிக்கொண்டு, அவரது குழந்தையை வாழ்த்தினேன்.

காந்தம்மையாருக்குப் புதிய பதவி

இந்தியப் பொது மக்கள், இந்தியாவை நெருங்கி வரும் போரைப் பற்றிப் பீதி அடையாதிருக்கவும் உணவுப் பொருள்களைப் பதுக்கலைத் தவிர்க்கவும் தீவிரப் 'பிரசாரகர்கள்' மாவட்டம் தோறும் நியமிக்கப்பட்டார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு 'தேசிய போர் ஆதரவு அமைப்பாள'ரும் ஒரு, 'பெண் சொற்பொழிவாளரும்' நியமிக்கப் பட்டார்கள்.

சீகாகுளம்மாவட்டத்திற்கு அப் பகுதியில் திறமையான 'பெண் சொற்பொழிவாளர்' எவரும் கிடைக்கவில்லை.

என் மனைவி காந்தம்மா படிப்பில் மூன்று பட்டங்கள் பெற்றவர்.

அதோடு தெலுங்கை முறையாகக் கற்று, தெலுங்கில் பேச வல்லவர் என்ற செய்தி வெள்ளையரான மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, எப்படியோ எட்டிற்று.

அவருடைய ஆணைப்படி, சீகாகுளம் துணை ஆட்சியாளர் (இவரும் வெள்ளையர்) என்னை அழைத்துப் பேசினார்.

என் மனைவியை 'பெண் சொற்பொழிவாளர்' பதவிக்கு நியமிக்க ஆட்சித் தலைவர் விரும்புவதாகவும் அதற்கு இசைவு தரும் படியும் கோரினார். மனைவியைக் கேட்டுச் சொல்லும்படி சொன்னார்.

''பெண்கள் கூட்டங்களில்தான் பேசுவேன்; நீங்கள்போகும் ஊர்களுக்கும் அவற்றின் அருகில் உள்ள ஊர்களுக்கு மட்டுமே செல்ல இயலும். எங்கெங்கோ தொலைதூரம் போகச் சொன்னால், இயலாது'' இந்த நிபந்தனைகளைத் துணை ஆட்சியாளரிடம் கூறினேன்.

அவர் அதிர்ச்சியடையவில்லை. என் மனைவியின் படிப்பு முதலிய தகவல்களைக் கேட்டுக் குறித்துக்கொண்டார். என்னிடமோ என் மனைவியிடமோ மனு ஏதும் கேட்கவில்லை.

சில நாள்களுக்குப் பின், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து என் மனைவிக்கு நியமன ஆணை வந்தது; அவ் வேலைக்கு ஊதியம் எவ்வளவு? திங்களுக்கு நூற்று அய்ம்பது ஆகும்.

ஆங்காங்கே உள்ளூர் ஆசிரியர்கள், பெண்கள் கூட்டங்களைத் தனியே ஏற்பாடு செய்வார்கள். நான், அக் கூட்டங்களில் தலைகாட்டுவது இல்லை.

பிரசாரகர் பணியில், என் மனைவி முன்னிறுத்தியவை வீடு தோறும் காய்கறித்தோட்டம் போடுதல், உணவுப் பொருள்கள் பாழாகாமல் பார்த்துக் கொள்ளல், பண்டங்களைப் பதுக்காமல் சமுதாயத்தைக் காத்தல், 'என்ன ஆகுமோ ஏது ஆகுமோ' என்று கிலி பிடித்து அலையாமை ஆகியவைகள்!

சந்தடிசாக்கில், பெண்களைப் படிக்க வைக்கும்படியும் கூட்டந்தோறும் சொல்லி வந்தார். பொதுக்கல்வி வளர்ச்சிக்கு அது துணையாயிற்று.

தொடக்கப் பள்ளிகளில் படிப்போர் எண்ணிக்கை கூடியது.

அதனால் மாவட்ட கல்வித்துறைக்கு நல்லபெயர் வளர்ந்தது.

சலவையான நாடகம்

சீகாகுளத்திற்கு மேற்கே, தொலைவில் ராஜாம் என்ற பேரூர் உள்ளது. அவ் வூர்க்குப் பேருந்தில் செல்ல வேண்டும். அப்படியே இருவரும் சென்றோம்.

என்ன கண்டோம்? ஊர் நடுவில் மாவட்ட ஆணைக்குழுவின் தொடக்கப் பள்ளியொன்று இருந்தது.

அதற்கு நூற்று அய்ம்பது பேர்கள் அளவில் வந்து கொண்டிருந்தார்கள்.

அப் பள்ளியில் இரண்டே ஆசிரியர்கள் இருந்தார்கள். எப்படிச் சமாளிப்பார்கள்? இப்படிக் கேட்கத் தோன்றுகிறதா? கேட்டு விடாதீர்கள், பலருடைய பகைக்கு ஆளாகவேண்டும்.

இன்றைக்கு ஆயிரக்கணக்கான பள்ளிகளில் போதிய ஆசிரியர்களில்லை. ஒவ்வொரு பிரிவுக்கும் அறுபது, எழுபது - ஏன் எண்பது மாணக்கர் இருப்பது பரவலான கோளாறு.

அதைப்பற்றிப் பேச்சு மூச்சுவிட்டால், பலருக்குப் பகையாகி விடுவோம்.

நம்மவர்கள் ஆளும்போதே இப்படி என்றால், அன்னியர் ஆண்டபோது, 'நம்மாலே ஆவதொன்றும் இல்லை' என்று கண்டும் காணாமல் பொறுத்துக் கொள்வதை யன்றி வேறு வழியில்லை.

ஆனால் சுவையான நாடகம் உண்டு. என்ன நாடகம்? அந்தப் பள்ளியைத் தணிக்கை செய்யும் ஆய்வாளர், அந்தப் பள்ளிக்கு நான்கு ஆசிரியர் தேவை என்று குறித்துவிட்டுப் போவார். இட வசதியும் இரட்டிப்பாக வேண்டும் என்று எழுதத் தவற மாட்டார்.

அவை போதும், அவர் தன் வேலையைக் காப்பாற்றிக் கொள்ள.

மாவட்ட ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காதா? எடுக்க முயலும்.

அதில் வெற்றி பெறுமா? பெறாது. கண்ணாம்பூச்சி ஆட்டத்தைப் பாருங்கள்:

மாவட்ட ஆட்சிக்குழு, வரவு செலவுத் திட்டம் தயாரிக்கையில், எந்த எந்தப் பள்ளிக்கு எத்தனை ஆசிரியர்கள் கூடுதலாக வேண்டும் என்று கணக்குப் போடுவார்கள்.

தலைவருக்கோ, செல்வாக்குள்ள உறுப்பினருக்கோ பகையாளி இல்லாத ஊர்களின் தேவைகள் மட்டும் கணக்கில் சேரும். முத்தையய்யா முதலியாருக்கும் வேணுகோபால் முதலியாருக்கும் இடையே உள்ள பதவிப் போட்டி, அதனால் வளர்ந்த பகை, முந்தியவர் ஆட்சியில் பிந்தியவரின் ஊரிலுள்ள பள்ளியின் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கும்.

அப்படி பகையில்லாத ஊர்களின் தேவைகள் கணக்கில் சேர்ந்துவிட்டால், அப்படியே கிடைத்துவிடுமா?

கூடுதல் ஆசியர்களின் ஊதியமதிப்பீட்டைச் செலவுத் திட்டத்தில் சேர்த்து, ஆட்சிக்குழுவின் ஒப்புதல் பெற்று, ஊராட்சிகளின் 'பெரும் ஆய்வாளருக்கு' முறைப்படி அனுப்புவார்கள்.

அவர், தமது பரிந்துரையோடு அரசுக்கு அனுப்புவார்.

அரசு செயலக மட்டத்தில், அத்தனை ஆசிரியர்கள் தேவையா இல்லையா என்பதைப் பார்ப்பதற்குப் பதில், வரவுக்குமேல் செலவு அதிகம், என்பதையே முன்னிலைப்படுத்துவார்கள்.

'துண்டுவிழும் தொகையை மான்யமாகக் கொடுக்க வசதி இல்லை', என்று சொல்லி, கேட்டதில் வலிவான வெட்டு விழும். அப்போதும் குறிப்பிட்ட ஊருக்குக் கூடுதல் ஆசிரியர் கிடைத்து விடமாட்டார். ஏன்?

மாவட்ட ஆட்சிக்குழு அரசின் ஒப்புதல் கிடைத்த பின் எந்தெந்தப் பள்ளிகளுக்கு எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப் போகிறது என்று, மாவட்டக்கல்வி அலுவலருக்கு எழுதவேண்டும்.

அவருடைய ஒப்புதலைப் பெற்ற பிறகே, கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்கலாம். மாவட்டக் கல்வி அலுவலராவது தம்மிடமுள்ள தகவல்களின் அடிப்படையில் முடிவுசெய்ய முடியுமா?

முடியாது; கூடாது. அவர், பள்ளி ஆய்வாளருக்கு அனுப்பி அவருடைய கருத்துரையைக் கேட்கவேண்டும்.

ஏற்கெனவே, ஆண்டுத் தணிக்கையின் போது, ஆய்வாளர், கூடுதல் ஆசிரியர் ஒருவர் தேவை என்று எழுதியிருப்பார்.

அதை மாவட்ட அலுவலர் கோடிட்டு வற்புறுத்தியிருப்பார். அவற்றை எடுத்துக் காட்டியும் அவரே ஒப்புதல் கொடுக்க மாட்டார்; கொடுக்கக்கூடாது.

வேலை நடக்காதிருப்பதற்காகவே பல படிகளை, நுழைவாய்களை, ஆங்கிலேய ஆட்சி உருவாக்கிற்று; நிர்வாகத்தைத் தேவைக்கு அதிகமான அளவு சிக்கல் உடையதாக்கிற்று. அந்த முறையை எங்கே கைவிட்டோம்!

ராஜாம் என்ற பேரூரைப் பொறுத்த மட்டில், ஆய்வாளர் கூடுதல் ஆசிரியர் போட இசையவில்லை.

எனவே, கல்வி அலுவலர் ஒப்பவில்லை ஏன்? இடவசதி போதாது; அதைப் பெருக்கிவிட்டு, கூடுதல் ஆசிரியருக்கு மனுச் செய்யவும். ஆகிற செயலா அது?

ஆண்டுக்கு முந்நூறு ரூபாய் செலவான ஆசிரியர் நியமனத் திட்டத்தையே கடுமையாக வெட்டிய அரசின் 'மேலோர்'கள் ஆசிரியருக்கு நாலாயிரம் ரூபாயில் இடவசதி செய்ய நிதி கொடுப்பார்களா?

11. ஆதி ஆந்திரர் பள்ளி – எழுப்பும் சிந்தனைகள்

ஆதி ஆந்திரர்கள் நடத்திய பள்ளி

நூற்று அய்ம்பது மாணவர்களுக்குக் கற்பிக்க இரண்டே இரண்டு ஆசிரியர்கள். எழுபது பேர்களுக்கு மட்டுமே போதுமான இடவசதி.

இவ்விரு சிக்கல்களும் அய்ந்தாறு ஆண்டுகளாக நீடித்தது. ஒன்றையும் தீர்க்க முடியவில்லை.

கூடுதல் ஆசிரியர்களைப் போட, இசைவு கேட்டால், இடமின்மையைக் காட்டினார்கள். இடப் பெருக்கத்திற்கு நிதி கேட்டால், மேலிடத்தார், கையை விரித்தார்கள்.

இந்த அவலக் கதையை, ராஜாம் பள்ளியைப் பார்வை இட்டபோது, கேள்விப்பட்டேன்.

'என்று தொலையும் இந்தத் தொல்லை' என்று எனக்குள்ளே, பொருமிக்கொண்டிருக்கையில், ஏழெட்டு ஆண்கள் மிகுந்த பணிவுடன் வந்து நின்றார்கள்.

பள்ளிக்கு வெளியே நின்றபடியே பெரிய கும்பிடு போட்டார்கள். அவர்கள் பள்ளிக்கு உள்ளே நுழைந்து வரவேண்டுமானால், பிள்ளைகளை மிதித்துக் கொண்டுதான் வரவேண்டும்.

எனவே, நானே வெளியே சென்று, அவர்கள் சொல்வதைக் கேட்டேன்.

''நாங்கள் ஆதி ஆந்திரர்கள். எங்கள் குடியிருப்பு, ஊருக்குத் தொலைவில் இருக்கிறது. சிறு பிள்ளைகள், அங்கு இருந்து, இப் பள்ளிக்கு வந்து படிக்க இயலாது, எங்கள் குடியிருப்பிலேயே ஒரு தொடக்கப் பள்ளி வைக்க ஒப்புதல் தாருங்கள்'' என்று கோரும் மனுவை என்னிடம் நீட்டினார்கள்.

என் அருகில் நின்ற ஊர்ப் பள்ளித் தலைமை ஆசிரியரைப் பார்த்து,

''ஊருக்கும் குடியிருப்பிற்கும் எவ்வளவு தொலைவு?' என்று கேட்டேன்.

''இரண்டு மைல்'' என்றார்.

''அங்கிருந்து இப் பள்ளிக்கு வரும் ஆதி ஆந்திரர்கள் எத்தனை பேர்?'' இது என்னுடைய அடுத்த கேள்வி.

''ஒருவரு மில்லை'' என்பது தலைமை ஆசிரியரின் பதில்.

''எவ்வளவு காலமாக இந்த நிலை?'' என்று கேட்டேன்.

''எனக்குத் தெரிய, அய்ந்தாண்டுகளாக, இந்நிலை, பாபு'' என்றார்.

''ஆதி ஆந்திரர்கள் படிக்காத பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்யவேண்டும் என்பது தெரியுமா?'' என்று தலைமை ஆசிரியரை மடக்கினேன்.

நொடியில் பதில் வந்தது.

என்ன பதில்?

''ஒரு மைலுக்குள் ஆதி ஆந்திரர் குடியிருப்பு இருந்து, அந்தக் குடி இருப்பில் இருக்கும் பிள்ளைகளைச் சேர்க்கா விட்டால்தான் அந்த ஆபத்து'' என்றார்.

வெகுளியை அடக்கிக்கொண்டேன். ''ஆதி ஆந்திரர்கள் குடியிருப்பில், ஒரு தொடக்கப் பள்ளி தொடங்க இசைவு கொடுக்கலாமா?'' என்று வினவினேன்.

தலைமை ஆசிரியர் வாய் திறக்கவில்லை. ஊரார் ஒருவர் பதில் கூறினார்.

''மாவட்ட ஆட்சிக்குழு ஒப்புக்கொண்டால், கொடுக்கலாம்'' என்று அலைமதியாகக் கூறினார். அப்போது, அதில் உள்ள சூது புரியவில்லை.

வார்ப் பள்ளியிலிருந்து குடியிருப்புப் பகுதிக்கு நடந்தே சென்றேன். எவ்வளவு தொலைவு? பழைய காலக் கணக்குப்படி, ஒரு மைல் ஆறு பர்லாங்கு.

குடியிருப்புக்குள் சென்றேன்.

நான்கு அடி மண் சுவர் வைத்து, பனை ஓலை வேய்ந்த, கூடத்திற்குள் அழைத்துச் சென்றார்கள்.

தரை நன்றாக மெழுகப்பட்டிருந்தது. ஒட்டடை இல்லாத கட்டடம். அதுதான், பழங்குடி மக்கள் தாங்களாகவே நடத்தி வந்த தொடக்கப் பள்ளியாம்.

அதை நான்கு ஆண்டுகளாக நடத்தி வந்தார்கள். கற்போர் வருகை எவ்வளவு? நூற்றுமுப்பதற்கும் மேல்.

ஆசிரியர்கள்? மூவர்.

அவர்கள் தகுதி? எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்.

ஆனால் ஆசிரியப் பயிற்சி பெறாதவர்கள். பயிற்சியைவிடப் பெரிய தகுதி அவர்களுக்கு இருந்தது; அவர்கள் மூவருமே பழங்குடி மக்கள். எனவே, ஆதி ஆந்திரர்களோடு உறவாடினார்கள்.

தங்கள் 'இனப் பிள்ளைகளைப் படிக்க வைத்து, ஆளாக்குகிறோம் என்ற உள்ள உணர்வோடும், ஆர்வத்தோடும், பாடம் சொல்லிக் கொடுத்தார்கள்.

அவ் வாசிரியர்களுக்கு எவர் ஊதியம் தந்தார்கள்? அந்தக் குடி இருப்பைச் சேர்ந்தவர்கள்.

அந்தக் குடியிருப்பில் கல் வீடு ஒன்று கூட இல்லை. அவ்வளவு ஏழைகள் அத்தனை பேரும்! இருந்தால் என்ன?

ஆசிரியர்கள் மூவருக்கும் தங்களுக்குள் முறைபோட்டுக் கொண்டு சாப்பாடு போட்டார்கள்; இரு வேளை உணவு அளித்தார்கள்; மேற்கொண்டு, கைச் செலவிற்கென்று, ஆளுக்கு அய்ந்து ரூபாய்கள் திங்கள் தோறும் தந்தார்கள்.

அவ்வளவு சொற்ப ஊதியத்தில், பயிற்சி பெறாத அம் மூவரின் பணி, எப்படி இருந்தது?

ராஜாம் ஊருக்குள் இருந்த பள்ளியின் பணியைவிட நன்றாக இருந்தது.

புறத் தோற்றத்திலும் பாடத் தேர்ச்சியிலும் ஊர்ப் பள்ளியில் படித்த சாதி இந்து மாணாக்கரைவிட பழங்குடி மாணவர்கள் சிறப்பாக இருந்தார்கள்.

நாற்பது, அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஆதி திராவிட ஆசிரியர்களும் சமுதாயத்தின் கீழ்ப் படிகட்டுகளில் அழுத்திவைக்கப் பட்டிருந்த சாதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் கணிசமாக விழுக்காட்டினர்.

கடமை உணர்வு, பொறுப்புணர்ச்சி செறிந்தவர்களாக இருந்தார்கள். 'இனப் பற்றோடு, தலைதெறிக்கும் ஆர்வத்தோடு, தொண்டு உள்ள படையாகச் சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

அம்மம்ம! அவர்களின் தியாகத்தை நினைக்கப் புல்லரிக்கிறது.

ராஜாம் குடியிருப்பில் ஆசிரியர்களாகத் தொண்டாற்றிய தியாகிகளின் பெயர்கள் என் நினைவுக்கு வரவில்லை. அது எனக்கு தவறாகத் தோன்றுகிறது. ஆனால் அவர்களின் தியாகம் நெஞ்சை நெகிழ்விக்கிறது.

இருவேளை சோற்றுக்கும் அய்ந்து ரூபாய்க்கும் உயிரை விட்டும் பாடம் சொல்லிக் கொடுத்த அம் மூவரால் மனிதர்கள் ஆனவர்கள் எத்தனையோ!

தியாகிகளை மறக்கலாமா?

இதை எழுதும்போது வேறு சில தியாகங்களும் என் நினைவுக்கு வருகின்றன. அதைப்போல், தஞ்சை மாவட்ட ஆதி திராவிடர் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்களான முத்துசவரி, தாமஸ், செபாஸ்டியன், சேலம் கிச்சிபாளையம் கந்தசாமி, அரூர் புலவர் இராமச்சந்திரனார், சென்னை கணேசன், நடராஜ மூர்த்தி போன்றவர்கள் ஆற்றிய சிறப்பான கல்விப் பணியும், சமுதாயப் பணியும் எத்தனை பேர்களை நிமிர்ந்து நடக்க வைத்து உள்ளது!

எத்தனை தமிழர்கள் அத்தகையோரை எண்ணிப் பார்க்கிறார்கள்? பழுத்த மரங்களைத் தேடித் தானே ஓடும் வெளவால்கள்!

காடு வெட்டி, நாடாக்கித் தந்தவர் எவரோ! அதில் அறுவடை பெற்று உல்லாசமாக வாழ்வார் எவரோ!

உரிமைக்காகப் போராடியவர்கள், இன்னல் பட்டவர்கள் பலர்.

அவர்களில் பெரும்பாலோர் பெற்ற ஆதாயம் ஏதும் இல்லை.

திருப்பூர் குமரன் நாட்டின் மானத்தைக் காக்கும் பணியில் அடிபட்டு மாண்டார். அவர் தியாகம் எந்தக் குமரனுக்கும் நினைவுக்கு வருவதில்லை.

லாலா லஜபதிராய்

பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராயின் தியாகம் தெரியுமா? எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய காலத்திலேயே, ஆண்டுக்கு அறுபதாயிரம் சம்பாதித்த வழக்கறிஞர் லஜபதியாவார்.

அதில் பத்தாயிரம் ரூபாய்களை மட்டும் தம் குடும்பச் செலவுக்கு எடுத்துக் கொண்டு, மீதி அய்ம்பது ஆயிரத்தைப் பொதுப் பணிக்கு - கல்வித் தொண்டுக்கு வழங்கிய வள்ளல் லாலா லஜபதிராய் என்பது யாருக்குத் தெரியும்?

பிரிட்டானியப் பேரரசு அவர்களைக் கண்டு அஞ்சி நடுநடுங்கியது. அவர்களை இந்தியாவைவிட்டு நாடு கடத்தியது. அப்படி நாடு கடத்தப்பட்ட பெருமை பெற்றவர் பெரியவர் லாலா லஜபதிராய் ஆவார்.

வ.உ.சி– திரு.வி.க

அத்தகைய சான்றோர் காவல் துறையினரின் தடியடியால் மாண்டு, உரிமைத் தீயை வளர்த்தார் என்பதை நினைக்கிறோமா? நினைத்தால் செம்மைப்பட்டு இருப்போம். கப்பலோட்டிய தமிழராம் சிதம்பரம் பிள்ளையை வாடவிட்டுக் கிடந்தவர்கள் அல்லவா நாம்? தேடி வந்த அன்பளிப்பை மறுத்த, திரு.வி.க. கலியாணசுந்தரனாரை நினைத்த துண்டா? நாமும் நம் பண்பாடும்!

தூக்குக் கயிற்றை முத்தமிட்டு மாண்ட, மாண்புடைய வீரர் பகத்சிங், யதீந்திர தாஸ் போன்றவர்களின் உயிர்ப்பலியால் பெற்ற தன்னாட்சி உரிமையைக் காக்கத் தியாகம் செய்ய முன் வருவோர் எங்கே?

தனக்கென்று ஒன்றுமில்லாது இருட் சிறைக்கு மீண்டும் மீண்டும் சென்று பலமுறை உண்ணா நோன்பு இருந்து, உரிமையைப் பெற்றுத் தந்த காந்தியாருக்கு நாம் செய்த நன்றிக் கடன் என்ன?

நுப்பாக்கிக் குண்டைப் பாய்ச்சி மாய்த்தது! அதோடு நின்றோமா?

முப்பத்தைந்து ஆண்டுகளாக மூலைக்கு மூலை, சமயக் கலவரத்தையே, சாதிச் சண்டைகளையே வளர்த்துவிட்டு நாட்டின் நாடி

நரம்புகளை ஒவ்வொன்றாக வெட்டிக் கொண்டிருக்கிற 'புனிதப் பணியில் அல்லவா தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்!

சும்மா வந்ததா, சுதந்திரம்?

நன்றி கெட்ட நாம், புத்தி கெட்டவர்களாகவும் எவ்வளவு காலம் கிடப்பது?

நாம் போகிற போக்கில், இந்தியாவின் விடுதலைக்குப் போராடியவர்கள் ஏதும் அறியாதவர்கள். விடுதலை பெற்றது, போராடியல்ல; வாதாடியே! அழகு ஆங்கிலத்தில் வாதாடியே; நிர்வாகத் திறமையைக் காட்டியே என்றாலும் வாய் பொத்திக் கிடக்கும் காலம் விரைவில் வந்துவிடும். அந்தோ அவலம்!

அன்று பொதுத்தொண்டு ஒருவருடைய உழைப்பையும் நேரத்தையும் உயிரையும் கேட்ட, போராட்டப்பணி. இன்றோ, விளைந்த கொல்லையில், முடிந்த வரை பறித்துக் கொள்ளும் வாய்ப்பு!

தாலமுத்து நடராசன்

தாலமுத்துவும் நடராசனும் சிறைப்பட்டு, அவதிப்பட்டு, உயிர்கொடுத்து, கட்டாய இந்திப் பாடத்தை நாற்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தடுத்து நிறுத்தினார்கள்.

சிவலிங்கம் இராசேந்திரன் உயிர் இழந்ததைக்காட்டிப், பிழைப்பு நடத்துவோர் அவர்கள் குடும்பத்தினர் அல்லர்.

பூவாளூர் பொன்னம்பலனார்

வழி வழி வளத்தோடும் மதிப்போடும் வாழ்ந்த குடியில் பிறந்து, சைவத்தில் பெரும்புலமை பெற்ற, பூவாளூர் அ. பொன்னம்பலனார், எத்தனை ஆண்டுகள் தம் வீட்டுப் பணத்தைச் செலவிட்டு, முழுநேர சாதியொழிப்பு, பகுத்தறிவு சமதர்மப் பணியாற்றிச், சூறாவளியெனச் சுழன்று, பெரு மழையெனப் பேசி, நொடியில் மறைந்த தியாகம் தெரியுமா?

சென்னையில் அவர் மறைந்தபோது, மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரனின் இளகிய மனம் உதவிய வேனில், பொன்னம்பலனார் உடலம் பூவாளூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அந்த உதவி கிடைத்திராவிட்டால், நினைக்கக் கூசுகிறது! பொன்னம்பலனாரின் நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட தியாகத் தொண்டை நினைத்துப் பார்க்கவும் தெரியாத மாக்கள், சமத்துவம் பெறுவது எப்படி?

கே.வி. அழகிரிசாமி

இருபதாண்டு காலம், தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சென்று, முழங்கிய கோடையிடி! எவராலும் விலை பேசி வாங்க முடியாத தன்மான இயக்கத் தளபதி, அஞ்சாநெஞ்சன் பட்டுக் கோட்டை கே.வி. அழகிரிசாமி பேசிப் பேசி, என்புருக்கி நோயால் மாண்டது சமுதாயத்திற்காகவே என்பதை அதற்குள் மறந்து விட்டோமே!

குத்தூசி குருசாமி

பெரியாரிடம் இரண்டறக் கலந்த, முதல் பட்டதாரி, சா. குருசாமி ஆவார்! கொள்கைக்காகப் பெருவிலை கொடுத்த, குத்தூசி குருசாமியார், பெரியாரின் சிந்தனையாக, குரலாக, பேனாவாகச் செயல்பட்டு, எழுதி எழுதி, ஆட்சியாளரையும் பொது மக்களையும் அடி தெரியக் கலக்கினது மறந்து போனதே!

அவர், 'வெள்ளித் தோட்டாக்களை வீசுங்கள்' என்று எழுதினார். கேட்டதற்கும் மேலே அய்ந்தாறு பங்கு பணம் பெரியாருக்குக் குவிந்தது.

பெரியாரின் தன்னல மறுப்பையும் மீறி அவர்க்குப் பொது மக்கள் சார்பில் வேனை வாங்கித்தர ஏற்பாடு செய்தார், குத்தூசி குருசாமியார்.

தனிப்பட்ட முறையில் தங்களுக்குள் இருந்த நட்பின் நெருக்கத்தையும் பாராமல், பெரியாரை ஆதரிப்பதற்காக, அறிஞர் அண்ணாவைக் கடுமையாகச் சாடினார், குத்தூசி குருசாமி.

திருமதி. குஞ்சிதம் குருசாமிக்குச் சென்னை மாநகராட்சி, கல்வி அலுவலர் பதவியைக் கொடுக்கச் செய்ததற்காகவும், அண்ணாவுக்குத் தாட்சணியப்படாமல், பெரியாரைத் தமக்கே உரிய சூட்டோடு ஆதரித்தார். அதற்காக அண்ணாவைத் தொடர்ந்து சாடினார்.

அவர் மட்டுமா தன்மான இயக்கத்தின் இரத்த நாளமாகப் பயன்பட்டார்? அவருடைய வாழ்க்கைத் துணைவியார், திருமதி. குஞ்சிதமும் எண்ணற்ற இயக்கக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பங்கு கொண்டுள்ளார். முக்கிய மாநாடுகளில் தலைமை தாங்கியுள்ளார். இவை எல்லாம் கதைகளாகத் தோன்றுகின்றனவா இளைய தலைமுறைக்கு?

பெரியாருக்கு எழுதிய கதை

அவருடைய தன்மான உணர்விற்கு ஊறு செய்து, குருசாமியாரை வெளியேற்றும் சதியில் வெற்றி பெற்ற பிறகும், 'பெரியாருக்காக

எழுதிய கை, வேறு எவருக்கும் எழுதாது' என்று கூறி, கருமுத்து தியாகராயர் 'தமிழ்நாடு' இதழுக்கு ஆசிரியராக அழைத்த போது அந்த அழைப்பினை மறுத்துவிட்டார்.

பெரியாரிடம் பெற்ற ஊதியம். ரூ. 150 தியாயகராயர் அளிக்க முன் வந்தது ரூ. 1500. இத்தகைய தியாகம் இளம் காதுகளில் வீழ்ந்தால், சிலராவது அம் மரபினைப் பயிரிடுவார்கள்.

கடைசியில் குருசாமி கண்ட பலன்?

சர். பன்னீர் செல்வத்தின் மறைவைக் கேட்டுத், தந்தை பெரியார், ''மனைவி நாகம்மாள் மறைந்தபோது நான் கண்ணீர் சிந்தவில்லை. என் தாயார் மறைந்த போது இயற்கையென்று இருந்துவிட்டேன். அண்ணார் மகன் இலண்டனில் படித்து விட்டுத் திரும்பியதும் இருபது வயதில் இறந்தபோதும் கலங்கவில்லை. 'தமிழர்களுக்குப் பாடுபட சர். செல்வத்திற்குப் பின் யார்? யார் தமிழர் நிலைமையைக் காணும் தோறும் காணுந்தோறும், எண்ணுந் தோறும் எண்ணுந் தோறும் நெஞ்சம் பதறுகிறது'' என்று எழுதினார். பன்னீர் செல்வத்தை எத்தனை பேருக்கு அறிமுகப் படுத்தினோம்?

முந்தையர் ஆக்கிய ஓவியச் செல்வத்தை அழித்து, முடியாவிட்டால் மறைத்து, தமிழ் நாடகத்தை அழிக்க முயன்று, அதில் பெரிய வெற்றியும் பெற்றால் நாடகத் தமிழ் சொல் வழக்காகவே இன்றும் கிடக்கிறது.

ஆதி தமிழனின் காட்டுக் காலப் போக்கு எவ்வளவு காலத்திற்கு இளமையோடு பீடுநடை போடுவது?

நிற்க, மீண்டும் ராஜாமுக்குப் போவோம்!

ராஜாம் குடியிருப்பின் தொலைவு பற்றியும், ஊர்ப் பள்ளியில் கூடுதலாக, மாணாக்கர்களைச் சேர்க்க இயலாமை பற்றியும் குடியிருப்பிற்குத் தனியாக ஒரு தொடக்கப் பள்ளி தேவைப்பட்டது.

12. மொட்டைக் கடிதம்

ஆந்திரப் பள்ளிக்கு ஆணை பிறந்தது

ராஜாம் ஆதி ஆந்திரர் குடியிருப்பிற்குத் தனியாக ஒரு தொடக்கப் பள்ளி தேவை என்பதை உணர்ந்த நான்,

''விசாகப்பட்டினம் மாவட்ட ஆட்சிக் குழு, மற்றோர் பள்ளியை இங்கே தொடங்குமா?'' என்று வந்திருந்தவர்களைக் கேட்டேன்.

''முடியாது என்று மாவட்ட ஆட்சிக் குழு சொல்லிவிட்டது.

''அப்புறம், நாங்களே, தனியார் பள்ளி நடத்த உரிமம் தரும்படி, மாவட்டக் கல்வி அலுவலருக்கு மனுபோட்டோம்.

''அவர், முறைப்படி மாவட்ட ஆட்சிக் குழுவின் ஒப்புதலைக் கேட்டு எழுதினார். அதையும் ஆட்சிக்குழு மறுத்துவிட்டது.

''நாங்களும் விடாமல் ஒவ்வோர் ஆண்டும் மனுப்போடுகிறோம். அவர்களும் அதே மறுப்பைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எங்களுக்கு எப்போதுதான் விடிவு காலம் வருமோ?'' என்று ஆதங்கத்துடன் பதில் வந்தது.

பெரிய குடியிருப்பு; ஊருக்குத் தொலைவு; படிக்க வருவோர் நூற்றுக்கு மேல்; அய்ந்தாண்டுகளாகக் குடிமக்கள் செலவில் பள்ளியை நடத்தி, தங்கள் ஆர்வத்தை மெய்ப்பித்து விட்டார்கள். இருப்பினும் அவர்களுக்கு உதவிபுரிய வகையில்லை; வழியில்லை.

அதை உணர்ந்த என்னுள் சினம் பொங்கிற்று; கூடு ஏறிற்று.

கோபால கிருஷ்ணமூர்த்தி, எட்டி இருந்து சாவிக் கொத்தைத் தூக்கி எறிந்தபோது நான், பல்லைக் கடித்துக்கொண்டு, வெகுளியை அடக்கிக்கொண்டேன். அதேபோல், உணர்வினை அடக்கி மறைத்துக் கொண்டேன்.

ஆந்திர ஆந்திரர்கள் என்னிடம் கொடுத்த கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்டு, கவனிப்பதாகக் கூறினேன்.

புதிய பள்ளி திறக்க, உரிமம் கோரும் படிவத்தை நிறைவு செய்து அனுப்பும்படி தலைமை ஆசிரியருக்குச் சொல்லி விட்டு வெளியேறினேன்.

சில நாள்களில், உரிய படிவத்தில் முறைப்படி மனு வந்தது.

அய்ந்தாண்டு கோப்புகளையும் நுணுகிப் படித்தேன்.

பாஜாம் ஆதி ஆந்திரக் குடியிருப்பிற்குத் தனியார் பள்ளி வாங்கித் தருவதே நீதி என்று புலனாயிற்று.

நூற்றாண்டுச் சட்டங்களும் விதிமுறைகளும் பொதுமக்கள் நடைமுறையாகப் புரிந்துகொள்ள முடியாத அளவு சிக்கல்களாக்கப் பட்டுள்ளன. கல்வித்துறைகள் அதற்கு விலக்கல்ல.

நடந்துகொண்டிருக்கும் தொடக்கப் பள்ளிக்கு ஒரு கல் தொலைவிற்குள் மற்றோர் தொடக்கப் பள்ளியைத் திறக்க முடியாமல்கூடாது என்பது விதி.

ராஜாம் பள்ளியைப் பொறுத்த மட்டில், ஒன்றே முக்கால் கல் தொலைவு இருப்பதால், ஒப்புக்கொள்ளலாமென்று எனக்குத் தோன்றிற்று.

அதற்குக் குறுக்கே இன்னும் ஒரு விதி தடையாக வந்து நின்றது.

பள்ளிக்கூடம் நடக்கும் பகுதிக்கும் பள்ளி கேட்கும் பகுதிக்கும் இடையிலான தொலைவு எவ்வளவு பெரியதாயினும் இரு பகுதிகளும் 'வருவாய்த் துறை'க் கணக்கில் ஒரே ஊராகக் கணக்கிடப்பட்டால், புதிய பள்ளியைத் திறக்க ஒப்புதல் அளிக்கக் கூடாது.

இந்த விதியை என் அலுவலகத் தலைமை எழுத்தர் கொண்டு வந்து காட்டினார்.

அவரா அவ் விதையை உருவாக்கியவர்? எவரோ போட்டதை அவர் காட்டினார். அதுவும் கடமை பற்றிக் காட்டினார்.

அத் தடையைச் சுற்றி வளைத்துச் செல்வது, எப்படி என்று கேட்டேன்.

சிலரைப்போல் காலைத் தொட்டுக் கும்பிட்டே காலம் தள்ளும் தலைமுறையினர் அல்லர் அவர். கடைசிப் படிக்கட்டில் இருந்து முறையாகக் கற்றுக் கற்று, முன்னேறியவர்.

எனவே, ராஜாம் சிக்கலுக்கு வழி ஒன்றும் சொன்னார். அது என்ன?

'ஒரே ஊரில் இரண்டாவது தொடக்கப்பள்ளி தேவைப்பட்டால், மண்டலப் பள்ளி ஆய்வாளர் மட்டுமே அதைக் கொடுக்கலாம்' என்ற விதியைக் கொண்டு வந்து காட்டினார்.

எனக்குப் பிடி கிடைத்தது.

ஆதி ஆந்திரர்களின் குடியிருப்பில் தொடக்கப் பள்ளி தேவை என்பதை ஊரில் உள்ள பள்ளிக்கூடத்தையும் ஒப்புதல் இல்லாது நடக்கும் குடியிருப்புப் பள்ளியையும் நேரில் பார்த்த பிறகே உணர்ந்தேன்; அய்ந்தாண்டுகளாக அது மறுக்கப்பட்டது, எதன் பொருட்டு?

மாவட்ட ஆட்சிக்குழு இசையவில்லை என்ற காரணத்தால்.

ஏற்கெனவே உள்ள பள்ளியில் இடவசதி பெருகவில்லை.

அந்த அய்ந்து ஆண்டுகளாக, ஆதி ஆந்திரர்களின் தொடக்கக் கல்விக்கு எந்த ஏற்பாடும் செய்யமுடியவில்லை.

அப்படியிருக்க அவர்கள் மறுப்பினைமேலும் மதிக்கத் தேவையில்லை.

'பெரிய குடியிருப்பு; நிறைய பேர் பள்ளிக்கு வருகிறார்கள்; அய்ந்தாண்டுகளாக நிற்காமல் வருகிறார்கள்.

'எனவே, குடியிருப்புப் பள்ளியைத் தனியார் பள்ளியாக, கல்வித்துறை ஏற்றுக் கொள்ளலாம். வேண்டுமானால் அப்படிச் செய்யப் போகிறோமென்று ஆட்சிக் குழுவிற்கு முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு, அனுமதியுங்கள்'.

மேற்கூறியவாறு, மேலுக்கு பரிந்துரைத்தேன். சில வாரங்கள் சென்றன. ஆணை வந்தது. நல்ல ஆணையே!

வாலில் நஞ்சு

தனியார் பள்ளியைக் கொடுக்கும் ஆணையைப் படித்து மகிழ்ந்தேன். ஆனால் அதன் வாலில் நஞ்சு இருந்தது.

''மாவட்டக் கல்வி அலுவலர் இப் பள்ளி பற்றி இவ்வளவு அக்கறை காட்டி இருக்க வேண்டாம்'' என்று சொட்டு இருந்தது. ஒதுக்கப் பட்டவர்களுக்குப் பாடுபடாவிட்டால் பிறவி வீண் என்று உறுதி கொண்டேன்.

ஆதி ஆந்திரர்களுக்கு நீதியும் வாய்ப்பும் பெற்றுத் தரும் கருவியாக, நான் பயன்பட்டது பற்றி மகிழ்ந்தேன்.

தில்லி பயணம்

விசாகப்பட்டிணம் மாவட்ட, போர் ஆதரவுக் குழுவின் கூட்டம் ஒன்று, விசாகையில் நடந்தது.

அக் குழுவில் நான் ஓர் உறுப்பினர். தென் விசாகப்பட்டினம் மாவட்டக் கல்வி அலுவலர் ஓர் உறுப்பினர்.

கூட்ட அறிவிப்பு வந்ததும், தென் விசாகை மாவட்டக்கல்வி அலுவலர், எனக்குக் கடிதம் எழுதினார். தன் வீட்டில் தங்கும்படி அழைத்தார். என் மனைவியையும் அழைத்து வரும்படி கூறினார். அப்படியே சென்றோம்.

தெலுங்கு அய்யராகிய திரு. சத்திய நாராயணா வீட்டில் தங்கினோம்.

தமது குடும்பத்தவர்போல் எங்களை நடத்தினார். வீட்டிலிருந்த தாய்க்குலமும் அப்படியே நடந்து கொண்டதை மறக்க முடியுமா?

சீகாகுளத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, அனைத்து இந்திய அரசுப் பணியாளர் பொறுக்குக் குழு ஒரு விளம்பரம் செய்தது.

சென்னை மாகாணத் தமிழ் நாட்டுப் பகுதிக்கு ஒரு போர் ஆகாயப் அமைப்பாளர் தேவை என்பது விளம்பரம்.

அதன் 'படி' ஒன்று, கல்வி இயக்குநர் வழி, என் கைக்கு வந்தது.

பல்கலைக்கழக முதுகலைப் பட்டம், ஆங்கிலத்திலும் தமிழிலும் பொதுக் கூட்டங்களில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றும் திறன், அலுவலக அனுபவம் ஆகிய தகுதிகள் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

எனக்குச் சபலம் தட்டிற்று. மனுச் செய்தேன். நேரடிப் பேட்டிக்கு வரும்படி சில வாரங்களில் கடிதம் வந்தது.

இருபத்துநான்கு மணிக்குள் புறப்பட்டால்தான், தில்லிக்கு நேரத்தில் போய்ச் சேர முடியும்.

தற்செயலாக, நான் ஊரில் இருந்ததாலும் விடுமுறை நாள் அல்லவாகையால் வங்கியிலிருந்து பணம் வாங்க முடிந்ததாலும் நேரத்தில் தில்லிக்குப் போய்ச் சேர முடிந்தது.

முதல் வகுப்பில் பயணம் செய்தேன். காலை எட்டு மணி போல், கல்கத்தா போய்ச் சேர்ந்தேன். அங்கிருந்து மாலை தில்லிக்குப் புறப்பட வேண்டும்.

அதுவரை கல்கத்தா இரயில் நிலைய முதல் வகுப்புப் பயணிகள் ஓய்வு அறையில் தங்கினேன்.

அப்போது என்னைக் கவர்ந்தது எது?

முதல் வகுப்புப் பயணிகளுக்குக் கிடைத்த மதிப்பு, பெட்டி பேழைகளை எவரும் திருடி விடுவார்களோ என்ற அச்சம் இல்லாது, நடமாட முடிந்தது ஆகிய இரண்டும் ஆகும்.

இந்து சாயா – முஸ்லீம் சாயா

அதுவரை நான் அறியாத ஒன்றை அப் பயணத்தில் தெரிந்து கொண்டேன். வட இந்திய புகைவண்டி நிலையங்களில், 'இந்து சாயா' (இந்து தேனீர்) 'முஸ்லீம் சாயா' என்று கூறி விற்றார்கள். விற்பனையாளர்களின் உடை அழுக்கில், இந்து முஸ்லீம் வேறுபாடு இல்லை.

அத்தகைய வேற்றுமை பாராட்டாத தமிழ் நாட்டில் முஸ்லீம் சிற்றுண்டிச் சாலைகளில் தேனீர் அருந்தப் பழகி இருந்த நான், ஓரிடத்தில் முஸ்லீம் சாயாவை வாங்கிக் குடித்தேன்.

வட இந்தியாவில், பால் தேனீர் போன்றவற்றை மண் குடுவைகளில் கொடுப்பார்கள். வாங்கிக் குடித்தவர், அந்த மண் குடுவையைக் கீழே எறிந்து விடுவதே வழக்கம்.

நான் முஸ்லீம் சாயாவை வாங்கிக் குடித்ததை, என்னுடன் பயணம் செய்து கொண்டிருந்த முதியவர் கவனித்தார்.

புகைவண்டி புறப்பட்டதும் ''நீங்கள் இந்துவென்று நினைக்கிறேன்'' என்றார்.

''அப்படித்தான்'' என்றேன்.

''அப்படியானால், இனிமேல் முஸ்லீம் சாயாவை வாங்கிக் குடிக்காதீர்கள். இப் பகுதிகளில் அதுவே, வகுப்புக் கலவரத்தை மூட்டிவிடும் தீப்பொறியாகி விடும்'' என்று எச்சரிக்கை செய்தார்.

புன்னகையோடு கேட்டுக் கொண்டேன். விடியற்காலை தில்லி சேர்ந்தேன்.

இந்தி தெரியாத நான் எப்படிச் சமாளிப்பேன் என்ற அச்சத்தோடு இறங்கினேன்.

அக்கால புது தில்லி ஊழியர்களுக்கு ஆங்கில வெறுப்பு இல்லை.

ஆங்கிலச் சொற்கள் பலவற்றைப் புரிந்து கொள்ளும் நிலையில் இருந்தார்கள்.

எனவே, போர்ட்டர் என்னை எளிதாக வெளியே அழைத்துப் போனார். ஒரு 'டோங்காவில்' (குதிரைவண்டியில்) ஏற்றிவிட்டார்.

தென்னிந்திய ஓட்டல் என்று நான் ஆங்கிலத்தில் கூறியதைப் புரிந்து கொண்ட டோங்காவாலா என்னைப் பாதுகாப்பாகத் தென்னிந்திய ஓட்டலுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

முழுவதும் விடியுமுன், பனி மூட்டத்தில், அங்குச் சென்றேன். சிறு அறை கிடைத்தது. வெந்நீரில் குளித்து, சிற்றுண்டி அருந்தி விட்டு நேர்முகப் பேட்டிக்குப் புறப்பட்டேன்.

நேர்முகப் பேட்டி

ஓட்டலில் இருந்தவர், வாடகை வண்டி அமர்த்தித் தந்தார்.

இப்படியும் அப்படியும் இழுத்தடிக்காது, நேரே, உரிய அலுவலகத்திற்குக் கொண்டுபோனார் வண்டிக்காரர்.

பேட்டி முடிந்தது. ''எனக்கா? லாகூரில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த தமிழர் ஒருவருக்கா?'' என்று உடன் வந்தவர்கள் பேசிக்கொண்டார்கள்.

தமிழ்த் தொடர்பு அற்றுப்போன அவரைவிட எனக்கே, வாய்ப்பு அதிகம் என்ற குறிப்பு பேட்டியில் மின்னிற்று.

நிறைவோடு வந்த வழியே திரும்பினேன். இறுதியில் அமைப்பாளராக எவரையும் நியமிக்கவில்லை.

சீகாகுளம் திரும்பியதும், அவ்வூர் சப்கலெக்டர் திரு கிராலி என்ற ஆங்கிலேயர் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். போய்ப் பார்த்தேன்.

மொட்டைக் கடிதம் ஒன்றைக்காட்டினார். படித்துப் பார்த்தேன். பதறவில்லை. ''என் அலுவலகம் சென்று அரை மணியில் உரிய கோப்புகளோடு வருகிறேன்'' என்று கூறிச் சென்றேன். அப்படியே விரைந்து திரும்பி வந்தேன்.

மொட்டைக் கடிதம்

மொட்டைக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டு இருந்தது?

'மாவட்டக் கல்வி அலுவலராகிய நெ.து. சுந்தரவடிவேலு அண்மையில் தில்லிக்குப் போய் வந்தார்' என்றது. அது மறுக்க முடியாத உண்மை.

அந்தச் செலவிற்குப் பணம் ஏது? ''பாதுகாப்புப் பத்திரம் வாங்கும் பொதுமக்கள் கொடுத்த பணத்தில், ஆயிரம் ரூபாய்களை எடுத்துக் கொண்டு, போய் விட்டார். அதனால் அரசின் நிதியை அரசின் கருவூலத்தில் செலுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கையாடலைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்''. என்பது கடிதத்தின் வேண்டுகோள்.

அலுவலகத்திலிருந்த, பாதுகாப்புப் பத்திரப் பதிவேடுகளையும் என்னுடைய அஞ்சல் சேமிப்புக் கணக்குச் சுவடியையும் எடுத்துக் கொண்டு போனேன். சப்கலெக்டர் கிராலியிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னேன்.

என்ன நடந்தது?

நான் தில்லிக்குப் புறப்படும் நாள் அன்று, இரண்டு மூன்று பெரியவர்கள் வந்து பத்திரங்களுக்கான பணத்தைச் செலுத்தி இரசீது பெற்றுக்கொண்டு போனார்கள். அன்று கருவூலத்தில் பணம் கட்டும் நேரம் தவறிவிட்டது.

அவ்வளவு பெரிய தொகையை என் அலுவலகத்தில் வைத்து விட்டு வெளியூர் போவதற்கு அஞ்சினேன்.

அத்தகைய நிலைகளில் அந்த நிதியை, தலைமை அஞ்சலகத்தில் தற்காலிக வைப்பாகக் கொடுத்து இரசீது பெற்றுக் கொள்ளலாம் என்று விதியிருந்தது. அதன்படி செய்தேன். அதற்கான சான்றைப் பார்த்தார்.

பின்னர், என்னுடைய சேமிப்புக் கணக்கைக் காட்டினேன்.

நெல்லிக்குப் புறப்பட்ட நாளன்று ஆயிரம் ரூபாய்களை வங்கியில் இருந்து எடுத்தது, என் சேமிப்புக் கணக்கில் குறிக்கப்பட்டு இருந்தது.

இத்தகைய பதிவுகள் இல்லாமல் போயிருந்தால் என்மேல் அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம்.

சராசரி மனிதனுடைய விழிப்பிற்கு மேலான விழிப்போடு செயல் பட்டதால் என் நாணயம் கேள்விக் குறியாகவில்லை.

வெள்ளையருக்குப் புரியவில்லை

பதிவேடுகளை என்னிடம் திருப்பிக் கொடுத்த சப்கலெக்டர் கிராலி "இதைப்பற்றி மனம் நோக வேண்டாம்; துச்சமாகத் தள்ளி விடுங்கள். ஏன் உங்கள் மக்கள், இத்தகைய கீழறுப்பு வேலைகளில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை" என்று ஆறுதல் கூறினார்.

அந்தக் கயமைச் செயல் எவருடையதாக இருக்கும்? இதே சிந்தனையில் சில நாள்களைக் கழித்தேன்.

மொட்டைக் கடிதம் எழுதியவரை அடையாளம் கண்டுவிட்டேன்.

அவர் யார்? சீகாகுளம் கல்வி மாவட்டத்தின் ஆய்வாளர்களில் இருவர் மட்டுமே பார்ப்பனரல்லாதவர்கள்.

அவர்களில் ஒருவர் என்னை முதுகில் குத்த முயன்று இருக்கிறார்.

இருவரில் எவர் என்பதைக் கண்டு பிடித்தபோது தமிழனின் பழிவாங்கும் புத்தி என்னிடம் மேலோங்கிற்று,

தியாக உள்ளம் படைத்த தியாகராயர்

அடுத்த நொடி, பெருமைக்கு உரிய வரலாற்று நிகழ்ச்சி ஒன்று நினைவிற்று.

நான் வெட்கித் தலைகுனிந்தேன். பழி வாங்காமல் செயல் பட்டேன்.

என்னை 'மனிதனாக்கிய' வரலாற்றுப் பெருமைமிக்க நிகழ்ச்சி எனது?

தமிழ் நாட்டில் நீதிக் கட்சியைத் தோற்றுவித்தவர்கள் தியாகராயச் செட்டியார், டாக்டர் டி.எம். நாயர், டாக்டர் நடேச முதலியார் ஆவர்.

முன் இருவரும் தொடக்கத்தில் இந்திய தேசிய காங்கிரசில் சுறுசுறுப்பாகச் செயல்பட்டவர்கள்.

தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர்கள் சிலரின் பிரித்து இழிவுபடுத்தும் நடவடிக்கைகளால் மனம் நொந்து, வெளியேறி, நீதிக்கட்சியை நிறுவினர்.

தியாகராயர், பெயருக்கேற்ற, தியாக சீலர். பெரும் செல்வராயினும் தீய பழக்கம் ஏதும் இல்லாது வாழ்ந்த சான்றோர்: வாரி வழங்கிய வள்ளல்.

அவர் தலைமையில் நீதிக்கட்சி, 1920இல் நடந்த பொதுத் தேர்தலில் வென்றது. ஆளுநர், அமைச்சரவை அமைக்க, தியாகராயரை அழைத்தார்.

அவரோ, கட்சி முன்னணியில் இருந்த வேறு மூவரை அமைச்சராக்கி, அவர்களை ஆதரித்து மகிழ்ந்தார்.

பொது வாழ்க்கையில் மக்களின் போற்றுதலைவிட தூற்றுதலையே அதிகம் எதிர்பார்க்கலாம்.

தியாகராயர் போன்ற சீலரும் அதில் இருந்து தப்ப முடியாது. தியாகராயரைச் சாடியவர்களில், திரு.வி.க. கலியாண சுந்தரனாரும் ஒருவர்.

தனிப்பட்ட பகையால், வெறுப்பால், திரு.வி.க. அவரைச் சாடவில்லை.

காங்கிரசை ஆதரிக்கும் பணியின் கூறாக, வெள்ளுடை வேந்தராய் தியாகராயரைச் சாடியது உண்டு.

அந் நிலையில், விடுதலைப் போராட்டத்தில் காட்டிய முனைப்பிற்காக, திரு.வி.க.வை நாடு கடத்தும் படி ஆங்கில ஆளுநர் ஆணை பிறப்பித்துவிட்டார். அதைக்கேட்ட தியாகராயர் ஆளுநர் மாளிகைக்கு விரைந்துசென்றார். ''திரு.வி.க.வை நாடு கடத்தும் ஆணையை ரத்து செய்யாவிட்டால் நீதிக்கட்சி அமைச்சர்கள், பதவியில் இருந்து விலகிக்கொள்ளும்படி நேரும்'' என்று தெளிவாக எச்சரித்தார்.

''இது அமைச்சர்களுக்குத் தொடர்பு இல்லாத, ஒதுக்கப்பட்ட பிரிவின் முடிவு என்று ஆளுநர் விளக்கினார்.

தியாகராயர், உறுதியாக நின்றார். ''திரு.வி.க.வை நாடு கடத்தக்கூடாது'' என்று அழுத்திச் சொன்னார். அதில் வெற்றியும் பெற்றார்.

அதை நினைத்ததும் சீரானேன். பழி வாங்குவதை மறந்தேன். மற்ற வேலைகளில் மூழ்கினேன்.

13. புயலில் சிக்கினோம்

ஆண்டு தோறும் புயல்

மக்கள் மனம் குரங்கிற்கு ஒப்பானது.

ஆன்றோர், மனித மனத்தை ஏன் அப்படி மதிப்பிட்டார்கள்?

அது என்ன செய்யும் என்ன செய்யாது என்று முன் கூட்டிச் சொல்ல முடியாது; நொடியில் உணர்ச்சி வயப்படும்; செய்யக் கூடாததைச் செய்யும். அதே போல், நொடிப் பொழுதில் செயற்கரியதைச் செய்து முடிக்கும்.

இதற்கு அசோக மாமன்னன் சிறந்த எடுத்துக் காட்டல்லவா?

கொன்று குவித்து நாடு பிடிப்பதைப் பெருமையாகக் கருதிய, அம் மாமன்னர், கலிங்கப் போரில் வெற்றிகண்டார். ஆனால் போரின் அழிவைக் கண்டு அதன் கொடுமை பற்றி ஒருகணம் சிந்தித்ததும் வெறியிலிருந்து விடுபட்டார்.

மக்கள் உணர்ச்சி வயப்பட்டு இயங்குகையில், இயற்கையோ மாற்றறியாத சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கிறது.

ஞாயிறு போற்றுவதால், விரைந்து வருவதில்லை; தூற்றினால் தாமதித்து வருவதில்லை. அதற்கு உரிய முறையில் இருந்து, பிறழாது இயங்கி வருகிறது.

அதனால்தான், கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாகக் கருதப்படும் ஞாலம் நிலைத்து இருக்கிறது.

மண்ணுருகப் பெய்து. பொன்னுருகக் காயும் பருவம், சில விளைவுகளுக்குக் காரணமாகிறது.

அதில் ஒன்று, நவம்பர் கடைசியில் தவறாது நிகழ்ந்து வருகிறது.

இந் நூற்றாண்டின் தொடக்கம் முதல் நிகழ்ந்து வருகிறது.

எதை எதையோ, தெரிந்து வைத்து இருக்கும் நாம், அதைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்ளத் தவறிவிட்டோம்.

அது என்ன?

புயல்! வங்காள விரிகுடாவிலிருந்து புறப்படும் புயல், கிழக்குக் கடற்கரை நோக்கி நகர்ந்து, விரைந்து, பின்னர்ச் சீறியடிக்கும் புயல்!

நவம்பர் இருபதுக்கும் இருபத்தேழுக்கும் இடையில் இப் புயல் இந்தியாவின் கிழக்குக் கரையைக் கடந்து, வெள்ளத்தையும் அழிவையும் அள்ளி வீசி விட்டுப் போய்க் கொண்டிருக்கிறது.

வேதாரண்யத்திற்கும் ஓரிசாவிலுள்ள கட்டாக்குக்கும் இடையில் ஓர் இடத்தில், புயல் கரையைக் கடக்கும்.

நம்முடைய மர அழிவுத் திருவிளையாடல்கள், இந்தப் புயலைச் சிதறடிக்கச் சிறிதும் இயலவில்லை.

ஆனால் அது வரும் காலத்தைப் பத்து நாள்கள் போல் தள்ளி வைத்துள்ளது. அவ்வளவுதான்!

1943ஆம் ஆண்டு, நவம்பரின் கடைசியில், வழக்கம் போல் புயல் உருவாயிற்று; வடமேற்காக நகர்ந்தது; பின்னர்ச் சீறிப் பாய்ந்தது.

வட விசாகப்பட்டினம் பகுதியில், நாட்டிற்குள் நுழைந்தது; பெருமழை பெய்தது; ஓடைகளை ஆறுகளை வயல்களை வெள்ளக் காடாக்கிற்று.

புயல் வரும் வாரம் அது என்பதை நான் அறியவில்லை.

பிறரும் அறியவில்லை.

வருவது அறியாது: வட விசாகை மாவட்டத்தின் கடைகோடியில் உள்ள 'பாதபட்டம்' 'பழையபட்டினம்' என்ற ஊருக்கு அலுவல் பற்றிச் சென்றேன்.

மூன்று நாள்கள், அங்குத் தங்கி, பள்ளித் தணிக்கை செய்தேன். என்னுடன் மனைவி காந்தம்மாவும் வந்தார். மாதர் கூட்டங்களில் பேசினார்.

புயல் வீசியது

அலுவலை முடித்துக்கொண்டு சீகாகுளம் வர, புகைவண்டி ஏறியபோது, கடுங்காற்று அடித்தது; மழை பெய்யத் தொடங்கியது.

ஒரு மணிக்குள் காற்று, புயலாகி விட்டது. எதிரில் இருப்பது தெரியாத அளவு, கடும் மழை கொட்டிற்று.

நாங்கள் பயணம் செய்த வண்டியை, வழியில் ஒரு சிறு, புகை வண்டி நிலையத்தில் நிறுத்திவிட்டார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு மணிகள் அது நின்று கிடந்தது.

மழை சற்று குறைந்தபோது, வண்டியின் காவலர், எங்கள் பெட்டியண்டை வந்தார். ''ஏதாகிலும் வேண்டுமா?'' என்று பரிவுடன் கேட்டார்.

''சுடச்சுட காப்பியோ, தேனீரோ கிடைத்தால் நன்றாயிருக்கும்'' என்று அவரிடம் சொன்னேன்.

''எதுவும் கிடைக்காத, பாடாவதி சிற்றூரில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். ஊர், நிலையத்திற்கு நெடுந்தூரத்தில் இருப்பதால் எதையும் வரவழைத்துக் கொடுக்க வாய்ப்பில்லை'' என்று அவர் மிகவும் வருந்தினார்.

எப்படியாவது, இந்த வண்டியைத் தெக்கலி சந்திப்புவரை கொண்டுபோய் நிறுத்த முயல்கிறேன். அதுவரை தடம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக அடுத்த நிலையங்களோடு, தொடர்பு கொள்ளப் பார்க்கிறேன். தெக்கலி போய் விட்டால், பயணிகளுக்குச் சிற்றுண்டிக்காகிலும் ஏற்பாடு செய்து விடலாம்'' என்று கனிவோடு காவலர் கூறவும், எங்களுக்கும் நம்பிக்கை பிறந்தது.

நாங்களே எங்களை அறிமுகம் செய்து கொண்டோம் ''போர் ஆகாவுப் பணியில் ஈடுபட்டுள்ள அம்மகாரு'' என்றதும் அவரது சுறுசுறுப்பு அதிகமாயிற்று.

தொடர்பு கொள்ள வேண்டியவர்களோடு தொடர்பு கொண்டு, ஆணை பெற்று, புகைவண்டியை, மெல்ல தெக்கலிவரை கொண்டு சேர்த்தனர்.

அப்போது இரவு எட்டு மணிக்கு மேல் இருக்கும்.

முன் கூட்டியே, காவலர் தெக்கலிக்குத் தகவல் கொடுத்திருந்ததால், பலருக்கு உணவு கிடைத்தது.

இரவு முழுவதும் வண்டி நகராது. தெக்கலிக்குத் தெற்கே உள்ள பாலசதாரா ஆற்றுப்பெருக்கு குறைந்த பிறகு பகலில் புகைவண்டியை ஓட்ட முயல்வதாகக் காவலர் கூறினார்.

மறுநாள் காலையும் வண்டி புறப்படவில்லை. சிற்றுண்டியும் பகல் உணவும் வண்டியிலேயே. பாதுகாப்பாக, இருக்கிறோமே என்று ஆறுதல் பெற்றோம்.

ஆசிரியர் இருவரின் பாசம்

பிற்பகல் வண்டி, தெற்கு நோக்கி நகர்ந்தது; இருட்டும் வேளை, ஆமதால வலசாவை அடைந்தது; களைப்போடு வண்டியைவிட்டு இறங்கினோம்.

இருவர் எங்களை நோக்கி, வேகமாக ஓடோடி வந்தனர்.

''நமஸ்கார்! பாபு! சித்தம்'' என்று சொல்லியபடியே எங்கள் பெட்டிகளை வாங்கிக் கொண்டனர்.

அடித்த புயல் கடுமையானது; விளைந்த சேதம் அதிகமானது. அழிந்த பயிர், பரவலானது. சீகாகுளம் சாலை முழுவதும் மரங்கள் குறுக்கே வீழ்ந்து உள்ளன; வண்டிப் போக்குவரத்து கிடையாது; மின்விசை அடியோடு துண்டிக்கப்பட்டு விட்டது.

''எனவே, இரவு முழுவதும் இங்கேயே தங்கியாக வேண்டும். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இரவு எல்லாம் நாங்கள் உங்களுக்கு காவல் இருப்போம்'' என்று சொல்லிக் கொண்டே, புதிய வகுப்புப் பயணிகள் தங்கும் அறைக்கு எங்களைக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

அவ்விருவரும் எவர்?

அருகாமையிலுள்ள தொடக்கப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்கள்.

நானும் என் மனைவியும் நான்கு நாள்களுக்கு முன்பு வடக்கே பயணம் போனதைக் கேள்விப்பட்டார்களாம். நான், திரும்பி வேண்டிய நாளன்று புயல் வீசியதால், என்னைத் தேடிப் புகைவண்டி நிலையத்திற்குத் தாமாகவே வந்தார்களாம்.

இவற்றையெல்லாம் கூறிவிட்டு,

''பாபு! எங்கள் வீட்டிலிருந்து எளிய உணவு கொண்டு வருகிறோம். அதை உண்ட பிறகு உறங்குங்கள்; நாங்கள் இங்கேயே காவல் இருக்கிறோம்.

''நாளை சாலை சரியாக, நேரமானாலும் பரவாயில்லை. நாங்களும் உடனிருந்து ஊருக்கு அழைத்துக்கொண்டு போய் விடுகிறோம்'' என்று எங்களுக்குத் தெம்பூட்டிவிட்டுச் சென்றார்கள்.

ஒரு மணிக்குள் உணவு வந்தது. தும்பை மலர் போன்ற சோறு; மணக்கும் நெய்; குழம்பு; சாறு; மோர். இவ்வளவும் கொண்டு வந்து பரிமாறினார்கள்.

மறுநாள் காலை; அவர்கள் சிற்றுண்டியை உண்டோம்; பகல் உணவும் அவர்களுடையதே!

பிற்பகல் இரண்டு மணிக்கு, சீகாகுளம் அலுவலகத்திலிருந்து, இரு எழுத்தர்களும் இரு கடைநிலை ஊழியர்களும் எங்களைத் தேடி வந்தார்கள். இடையிலே உள்ள நெடுஞ்சாலை, போக்குவரத்துச் சரியாகவில்லை.

வழியில் வீழ்ந்து மறித்துக்கொண்டு இருக்கும் மரங்களை வெட்டிவிட்டு, வாகனங்கள் போகும் அளவு வழிசெய்ய, மேலும் ஒரு நாள் ஆகுமென்ற செய்தியைக் கொண்டு வந்தார்கள்.

நடந்தே திரும்பினோம்

பெட்டிகளை ஆமதாலவலசாவில் ஒப்படைத்துவிட்டு, என் மனைவியும் நானும் துணிந்து ஏழு கல் தொலைவும் நடந்து விடுவதென்று புறப்பட்டோம்.

எழுத்தர்கள், ஊழியர்கள், 'இரு ஆசிரியர்கள்' உடன்வர நீண்ட பயணத்தைத் தொடங்கினோம்.

அப்படி நடக்கும்போது, ஆதி மாந்தர் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதை எங்களால் ஊகிக்க முடிந்தது.

ஆங்காங்கே, தடை நீக்கப்பட்ட சாலைத் திட்டுகள்.

பெரும்பாலான இடங்களில், வீழ்ந்து கிடக்கும் மரக் கிளைகளின் மேல் ஏறி இறங்கி நடக்கவேண்டிய நிலை.

மற்றோர் இரவு, ஆமதாலவலசாவில் தங்கிவிட்டு வந்திருக்கலாம் என்று தோன்றிற்று. பின்னடைவதானாலும் மரங்களைத் தாண்டி நடக்கவேண்டும்.

எனவே, ஆனது ஆகட்டும் என்று பயணத்தைத் தொடர்ந்தோம். சூரியன் எல்லையை நெருங்கும் நேரம் ஒரு குதிரை வண்டி கண்ணில் பட்டது.

கடைநிலை ஊழியர்கள் அதை அமர்த்திக் கொடுத்தார்கள், கடைசி கல், வண்டியில் சவாரி செய்து, வீடு சேர்ந்தோம்.

இளமை முறுக்கில் சமாளித்துவிட்டாலும், உடம்பு நோய் நீங்க ஒரு வாரம் பிடித்தது.

ஸ்டேதம் வருகை

திடீரென, பொதுக்கல்வி இயக்குநர், சர் மெவரல் ஸ்டேதம் அவர்களின் சுற்றுப் பயணச் சுற்றறிக்கை எனக்கு வந்தது.

அவர், விசாகப்பட்டினம் வரையில் வந்து திரும்புவதாகக் காட்டிற்று.

என் அலுவல் பகுதிக்கு வருகை இல்லை; எனக்கு அனுப்புவானேன்.

''இயக்குநர் உங்களை, விசாகப்பட்டின வருகையின்போது, காண விரும்பலாம்'' என்று தலைமை எழுத்தர் விளக்கம் சொன்னார். அது சரியாக இருக்கலாம் என்று நினைத்தேன்.

குறிப்பிட்ட நாள்களில் விசாகையில் தங்கிப் பொதுக்கல்வி இயக்குநரைக் காண முடிவு செய்தேன்.

உரிமையோடு, அவ்வூர், மாவட்டக் கல்வி - அலுவலர் திரு. சத்தியநாராயணாவுக்கு எழுதினேன். தம் வீட்டில் தங்கும்படி அழைத்தார். அப்படியே போய்த் தங்கினேன்.

உரிய நேரத்தில் இருவரும் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம். இயக்குநர் வருவது, விசாகைக்கு.

எனவே, அவ்வூர் அலுவலர்கள் அவரை வரவேற்ற பிறகே, நாங்கள் இயக்குநரை வரவேற்று மாலையிடுவது முறையென்று கருதினேன். சற்றுப் பின்னால் ஒதுங்கிக் காத்திருந்தேன்.

வண்டி நின்றதும், மண்டலக்கல்வி ஆய்வாளர், திரு. பத்ரய்யா முதலில் இறங்கினார். அவர் பார்வை, பின்னால் நின்று கொண்டிருந்த என்மேல் பட்டது.

சட்டென்று இறங்கினார்; மடமட என்று, மற்றவர்களைத் தள்ளிக்கொண்டு என்னிடம் வந்தார்.

''இயக்குநர் உன்னைக் காண ஆவலாய் இருக்கிறார்; நீ வராமற்போனால், தந்தி கொடுத்து, வரவழைக்கச் சொன்னார். நீ வந்திருப்பது அவருக்கு உடனே தெரியட்டும், நீ போய் மாலையிடு'' என்று கூறி என்னைத் தள்ளி விட்டார்.

அதற்குள் சத்யநாராயணா மாலையிட்டது எனக்கு நிறைவைக் கொடுத்தது.

நான் ஒதுங்கிப்போனாலும், சூழ்நிலை, என்னைப் பல வேளைகளில் முன்னே தள்ளி விடுவதால், என்பால், பலர் காழ்ப்பு கொள்ள நேரிடுகிறது.

இயக்குநரின் பாராட்டு

நான் என்ன செய்ய?

விசாகையில் தங்கியிருந்தபோது, இயக்குநர் எனக்கு நீண்ட பேட்டி தந்தார். என் அலுவல் பற்றி விரிவாகத் தெரிந்து கொண்ட பின்,

''நீ நல்ல பணி செய்வதைப் பற்றி நான் கேள்விப்பட்டு மகிழ்கிறேன். நீ முழு மூன்றாண்டு காலம் சீகாகுளத்திலேயே தங்கநேரிடும். அதைக் கருத்தில்கொண்டு, திட்டந் தீட்டி, கல்வியை வளர்த்து வா'' இயக்குநருடைய அறிவுரையின் சுருக்கம் இது.

அனைத்து மண்டலப்பள்ளி ஆய்வாளரும் கேட்டுக்கொண்டு இருந்தார்.

எனவே, பின்னர் ஓய்வாக இருந்த வேளை, அவரிடம் ஒரு விண்ணப்பம் காட்டி,

"என் மாவட்டத்தில் தனியார் நடத்தும் பள்ளிகளே, அதிகம். இதனால் பலானவை ஓலைக் குடிசைகள்.

"அக்டோபர் முதல் டிசம்பர் வரை மழைக்காலம். அப்போது, தனியார்களுக்கு வரும் பள்ளிகளின் கட்டடங்கள் நல்ல நிலையில் இராது. அதைக் காட்டி, அவற்றிற்குக் கொடுக்க வேண்டிய நிதி உதவியைக் குறைக்கிறோம்.

"இவர்கள் கல்வியாண்டு தொடங்கும்போது கட்டடங்களைப் பழுது பார்க்கிறார்கள். அதைக் கணக்கில் கொண்டு, அதிகம் வெட்டு கொடுக்காமல் இருந்தால் நன்றாயிருக்கும். பள்ளியை நடத்துவோருக்கும் ஊக்கம் பிறக்கலாம்" என்றேன்.

ஆரோக்கியமான ஆலோசனை

திரு. பத்மய்யா பரிவோடு அணுகினார்.

"இவர்தான் ஆண்டுத் தணிக்கைக்குப் பின்னால், கணிசமாகச் சலுகை செய்து பழுது பார்த்துள்ள பள்ளிக்கு, ஆய்வாளர் முதலில் பரிந்துரைத்த அளவு வெட்டு கொடுக்காமல், குறைந்த வெட்டு கொடுக்கலாம்.

"அதனால் கூடுதல் செலவு ஏற்படலாம்; பரவாயில்லை. வேறு மாவட்டங்களின் மிச்சத்தைப் பின்தங்கிய உன் மாவட்டத்திற்குத் தருவிக்கிறோம்.

"ஆகவே, உடனே மறுபரிசீலனை செய்து பார். கூடுதல் பணம் தேவைப்பட்டால், சென்னைக் கல்வி இயக்ககத்தில் துணை இயக்குநராக இருக்கும், திரு தென்னேட்டி சூரியநாராயணா என்பவருக்கு நேரடிக் கடிதம் எழுது; நான் ஆணையிட்டதாகக் கூறி எழுது" என்று வழி காட்டினார்; ஊக்கம் அளித்தார்.

சூடு விழுந்தது

அப்படியே செய்தேன். கேட்ட நிதி கிடைத்தது. ஆனால் கூடவே அதில் சூடும் வந்தது. என்ன குட்டு?

"மாவட்டக்கல்வி அலுவலர் எவரும் துணை இயக்குநருக்கு நேரடியாக எழுதக் கூடாது" இப்படிக் குட்டினார்.

அவர் நிலை என்ன? மாவட்டக்கல்வி அலுவலர் நிலையே.

அக் காலத்தில், துணை இயக்குநர் பதவி பெரிய பதவியல்ல.

இருப்பினும் நேரே எழுதக்கூடாது என்று அதிகார ஆணை குட்டிற்று.

எனினும் பலருக்கு உதவுகிறோமென்ற நிறைவில், அக் குட்டினைப் பொருட்படுத்தவில்லை.

சேலத்துக்கு மாற்றல்

சில நாள்கள் கழிந்தன. தந்தி ஒன்று வந்தது. என்னைச் சேலம் மாவட்டக்கல்வி அலுவலராக மாற்றி இருப்பதாக அது கூறிற்று.

வழக்கமாகவுள்ள பயணக்காலம் எடுத்துக் கொள்ளாமல், விரைந்து சென்று, சேலத்தில் சேரும்படி கட்டளையிட்டது.

''பொதுக்கல்வி இயக்குநர் சொல்லுக்கு இவ்வளவுதானா மதிப்பு? துணை இயக்குநர், காதைத் கடித்திருப்பாரோ?'' இப்படித் திகைத்தேன்.

14. சேலத்துக்கு மாற்றல்

''சேலத்திற்கு மாற்றியிருப்பது ஒரு வகையில் நன்மை; வேறொரு வகையில் தீமை. இயக்குநர் நேரில் சொல்லியபடி மூன்றாண்டு காலம், சீகாகுளத்தில் இருந்தால் தெலுங்குத் தேர்வை முடித்துவிட்டு இருக்கலாம்.

''சேலத்தில் அதற்கு வாய்ப்பு இல்லாமல் போகலாம்; எப்படியோ இருக்கட்டும். சேலம் நம் ஊர்போல; அங்குச் செல்வதற்கு ஆயத்தமாகுங்கள்'' என்று என் மனைவி கூறினார்.

அதுவும் சரியாகத் தோன்றிற்று. போராதரவுப் பணியில் என் மனைவி, பெண் சொற்பொழிவாளராகப் பணி புரிவது கெட்டுப் போகுமே என்று எண்ணியபோது கலக்கம் ஏற்பட்டது.

''சேலம் மாவட்டத்திலும் அத்தகைய பதவியிருக்கலாம். அப்படி இருந்தால் அங்கு அப் பதவியை ஏற்றுப் பணிபுரியச் சித்தமாய் இருப்பதாக, நீங்கள் மனுச்செய்துகொள்ளலாம்'' என்று நண்பர் ஒருவர் ஆலோசனை கூறினார்.

அப்படியே செய்துவிட்டு, சேலத்திற்குப் புறப்பட ஆயத்தமானோம்.

கல்கத்தா - சென்னை வண்டியில் சென்னைக்கு இடம் கேட்டு ஆமதாலவலசாவிற்கு ஆள் அனுப்பினோம்.

அதிக நாள்கள் காத்திருக்க நேரமில்லை. நான்கைந்து நாள்களில் சென்னை வண்டியில் இடம் கிடைத்தது.

இருநூறு ஆசிரியர்கள் வழியனுப்பினர்

மாலை நேரத்தில் ஆமதாலவலசா புகைவண்டி நிலையம் போய்ச் சேர்ந்தேன். அங்கே பெருங்கூட்டம்.

எதற்காக?

என்னை வழியனுப்ப.

கிட்டத்தட்ட இருநூறு பேர்கள்! பெரும்பாலும் ஆசிரியர்கள், மாணாக்கருடன் குழுமி இருந்தார்கள்.

பலர் மாலையிட்டு வாழ்த்தினர். எலுமிச்சம் பழங்களை அளித்து வாழ்த்தியவர்களும் உண்டு.

நெகிழ வைக்கும் அந்த வழியனுப்புதல், எனக்குப் பழைய நினைப்பைக் கொண்டு வந்தது.

முதல் முதல் அவ்வூரில் இறங்கிய போது, நேருக்குநேர் பழகியில்லாத ஒருவர், ''இந்தத் தமிழன் இங்கு ஏன் வந்தான்?' என்று வெறுப்புடன் கூறியது நினைவுக்கு வந்தது.

தேவையற்றுக் குத்திய அச்சுடுசொற்களை மறந்து, அங்குள்ள மக்களோடு பரிவோடும் பாசத்தோடும் பழகியதால், அவர்களுக்கு உரிய மதிப்பைக் கொடுத்ததால் பலருக்கும் மிகவும் வேண்டியவன் ஆகிவிட்டேன்.

உலகில், நாட்டில் அவ்வப்போது மோதல்கள் வெடிக்கின்றன; அவற்றில் ஈடுபட்டு வன்முறையில் திளைக்கும் மற்றவர்களில் பலருக்கு எவரும் நேரடிப் பகைவர்களாக இருக்க மாட்டார்கள்.

நாட்டுப் பகை, மொழி வெறி, சாதி வெறி, சமயச் சழக்கு ஆகியவை இப்பொறிகளுக்கு ஒப்பானவை.

இப்பொறிகள் எப்படி எங்கெங்கோ தீ மூட்டி, நல்லார்களையும், யாவுமேதும் அறியாத குழந்தைகளையும் அழிப்பது போல், மொழிப் பகை முதல் சமயப் பகை ஈறாக எல்லாமே, நல்லுறவை வளர்க்க வேண்டிய மக்களிடையே காழ்ப்புகளைப் பயிரிடக் காண்கிறோம்.

இவ்வளவு கசப்புகளும் வெறுப்புகளும் பகைகளும் தேவையா?

'ஒருவர் பொறை இருவர் நட்பு', 'பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்' என்பவை ஏனோ ஏட்டு உரைகளாகவே நின்றுவிடுகின்றன.

அறிமுகமில்லாத அதிதியாக அங்குச் சென்ற நானும் என் மனைவியும் அன்பர்கள் சூழப் புறப்பட்டபோது, எங்கள் இருவர் கண்களும் கலங்கின.

வழி அனுப்பியவர்களில் பலரும் கலங்கினதைக் காண முடிந்தது.

சீகாகுளம் அலுவல் பற்றிய அதிகாரத்தை முடிக்கும் முன், என் உதவியாளர் ஒருவரைப்பற்றி இங்குக் குறிப்பிடுவது என் கடமை.

பைரி சூர்ய நாராயணா

பைரி சூர்யநாராயணா என்ற பெயருடைய இளைஞர் ஒருவர், என் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார்.

என்ன வேலை?

'அட்டெண்டர்' வேலை

அவர் பள்ளி இறுதித் தேர்வில் ஒரு பாடத்தில் தவறி விட்டவர். எனவே, எழுத்தர் வேலைக்குத் தகுதி பெறவில்லை.

அவர் வீட்டில் கொஞ்சம் நிலபுலம் உண்டு. வசதியாக வாழக் கூடிய நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். வசதி இருந்தும் ஏனோ அரசு ஊழியத்தில் நாட்டங் கொண்டுவிட்டார்.

சொந்தக் கிராமத்தில் தங்கியிருந்தால், பார்வை குறுகிப் போகும் என்ற முடிவுக்கு வந்த, சூர்ய நாராயணா, கடைநிலை ஊழியரான 'அட்டெண்டர்' வேலையை ஏற்றுக்கொண்டார்.

அவர் பெற்ற பதவி சிறியது; அவர் செய்த வேலையோ பெரியது; பெருமைக்குரியது. பாராட்டுதற்கு உரியது.

சூர்ய நாராயணா, தட்டெழுத்தில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார்.

எனவே, அவரால் அலுவலக எழுத்தர்களுக்கு உதவ முடிந்தது.

எல்லோரிடமும் பாசத்தோடு பழகக் கூடியவர். அவ் விளைஞர் அலுவலரிடம் பணிவாகப் பழகுவதில் பரிசு பெறத் தகுதியுடையவர்.

எவ்வளவு வேலை கொடுத்தாலும் சுணங்காது செய்வார்; எவ்வளவு நெடுநேரம் வேலை செய்ய நேரிட்டாலும் பின்னடைய மாட்டார்.

பந்துலுவாகிய அவர், மரக்கறி உணவில் உறுதியாக நின்றது இயற்கை. இருப்பினும் பார்ப்பனரல்லாதவர்கள் இல்லங்களில் அந்த நாளிலேயே உண்ணும் சமத்துவப்போக்கு, அவராகக் கற்றுக் கொண்டது ஆகும்.

கூது, வாது, புரட்டு, உருட்டு, புறங்கூறல், கலகமூட்டுதல் முதலான எந்தத் தீயகுணமும் இல்லாத சூர்ய நாராயணாவை இப்போது நினைத்தாலும் மகிழ்ச்சி பொங்குகிறது.

அக் காலத்தில் கல்வித் துறை எழுத்தர் பதவிக்கு, சீகாகுளம் மாவட்டத்தில் தகுதியுள்ளவர்கள் கிடைப்பதில்லை.

அதைக் காரணம் காட்டி, அவரைத் தற்காலிக எழுத்தராக உயர்த்துவதற்காக, மண்டலக் கல்வித் துறை ஆய்வாளருக்குப் பரிந்து உரைத்தேன்.

அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

என்னிடம் சில திங்கள் எழுத்தராகவே பணி புரிந்தார்.

பின்னர் அந்தப் பதவியில் ஒழுங்காக நியமிக்கப்பட்டாராம்.

அப்போது அந்தத் தகவலை எனக்கு எழுதி, வாழ்த்துதலைப் பெற்றார்.

நான் பொறுக்கிய ஆள், கெட்டிக்காரராகத் தொடர்ந்ததைப் பற்றி மகிழாமல் இருக்கமுடியுமா?

சீகாகுளத்தில் இருந்து, சேலம் செல்லும் வழியில் சென்னையில் இரண்டொரு நாள்கள் தங்கினோம்.

அப்போது கல்வி இயக்குநர் அலுவலகத்திற்குச் சென்றேன். அன்று கல்வி இயக்குநர் ஊரில் இல்லை.

மற்ற அலுவலர்களைப் பார்த்துவிட்டு, சேலத்திற்குப் பயணமானேன்.

இடம் புதிது; வீடு கிடைக்குமா என்று தெரியாது. எனினும் துணிவுமாக என் மனைவியையும் அழைத்துக்கொண்டு போனேன்.

சீகாகுளத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பே 'சேலம் மாவட்டகல்வி அலுவலகத்தின் தலைமை எழுத்தர்' என்ற முகவரிக்கு நான் வரும் விவரத்துக்குக் கடிதம் எழுதி இருந்தேன்.

அதில், எந்த வண்டியில் சேலம் வந்து சேருவேன் என்பதையும் தெளிவாகத் தெரிவித்தும் இருந்தேன்.

பின்னிரவு மூன்று மணிக்கு நாங்கள் சேலம் சந்திப்பில் இறங்கினோம். கடைநிலை ஊழியர்கள் இருவரும் எழுத்தர்கள் சிலரும் புகைவண்டி நிலையம் வந்து காத்துக்கொண்டிருந்தார்கள்.

கடைநிலை ஊழியர்களின் 'டவாலி'யும் எழுத்தர்கள் கைகளில் இருந்த மாலைகளும் அவர்களை இனம் காட்டிற்று; அடையாளம் காட்டிற்று.

வந்திருந்தவர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். அதில் இருந்து, தலைமை எழுத்தர் வரவில்லை என்பது தெரிந்தது.

அந்த அகாலத்தில் வர இயலாமை குறையாக எனக்குத் தோன்றவில்லை.

ஆனால், சில மணித்துளிகளில், ஒருவர் நாரதர் வேலை செய்தார்.

''தலைமை எழுத்தர் பெயரைச் சொன்னார். அவர் பார்ப்பன உணர்வில் ஊறிப்போன அய்யங்கார். நீங்கள் இங்கு வருவது அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே, உங்களை வரவேற்க வரவில்லை; நாங்கள் அழைத்தும் வரவில்லை; இப்படிச் சொல்லி என்னிடம் கலகமூட்டினார் ஒருவர்.

இதற்குள் வெளியே காத்திருந்த காரிடம் வந்து சேர்ந்தோம். அதில் ஏறிச் சென்றோம்.

குடியிருக்க வீடு பிடிக்கும் வரை அலுவலகத்திலேயே ஓர் அறையில் தங்க ஏற்பாடு செய்து இருப்பதாகச் சொல்லி அழைத்துச் சென்றார்கள். காலை நான்கு மணியளவில் அங்குப் போய்ச் சேர்ந்துவிட்டோம்.

பொழுது விடிய விழித்துக்கொண்டோம். காலைக் கடன்களை முடித்து, சிற்றுண்டியை முடிக்கையில் மணி எட்டுக்கு மேல் ஆயிற்று.

சேலம் நண்பர்கள் சிலர் என்னைக் காண வந்தார்கள். அவர்கள், தன்மான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். சேலம் நகரில் பலருக்கும் தெரிந்தவர்கள்.

என் அலுவலக எழுத்தர் ஒருவர் வழியாக என் வருகை பற்றித் தெரிந்துகொண்ட அவர்கள், என்னைக் கண்டு வரவேற்க வந்தார்களாம்.

'நண்பர்கள்' என்று அடையாளங்காட்டச் சிலராவது இருக்கிறார்களே, என்று மகிழ்ந்தேன். சில வினாடிகளில் அது மாறி விட்டது.

புகைவண்டி நிலையத்தில் 'நாரதர்' கோள் சொன்னதைப் போன்றே நண்பர்களில் ஒருவர் தலைமை எழுத்தர் பற்றிக் கோள் சொல்ல ஆரம்பித்துவிட்டார். ஏற்கெனவே கேட்ட புகார்.

மகிழ்ச்சி கலைந்தாலும் எரிச்சல் கொள்ளவில்லை. காதுகளைக் கொடுத்ததோடு நின்றுவிட்டேன்; மனக்கதவை இறுக அடைத்து விட்டேன்.

அலுவலகநேரத்திற்குத் தலைமை எழுத்தர் வந்து சேர்ந்தார். எனக்கு மாலை அணிவித்தார்.

'பணியில் வர இயலாமைக்கு 'மன்னிப்பு'க் கோரினார். நான் எவ்வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தவில்லை.

தலைமை எழுத்தர், சேலம் பதவி எப்படிக் காலியானது என்பதைப் பற்றி விரிவாகக் கூறினார். அதைக் கேளுங்கள்.

திரு. தியாகராயபிள்ளை என்பவரை இரண்டு திங்களுக்கு முன்பு இந்தப் பதவிக்கு நியமித்தார்கள்.

அவர் அய்ம்பது வயதைத் தாண்டியவர். பொதுக்கல்வி இயக்ககத்தில் எழுத்தராக நுழைந்த அவர் திறமையால், நீண்ட பணியால், நேர்மையால் இயக்குநரின் நேர்முக உதவியாளர் நிலைக்கு உயர்ந்தாராம்.

அப் பதவியும் கல்வி அலுவலர் பதவியும் ஒரே நிலை ஆகும்.

திடீரென அவரைச் சேலம் மாவட்டக் கல்வி அலுவலராக மாற்றினார்களாம். முப்பது ஆண்டுகள்போல், கட்டுப்பட்டே பழகி விட்ட அவர், மறுபேச்சுப் பேசாமல் சேலத்திற்கு வந்து சேர்ந்தார்.

அவர், சில ஆண்டுகளாக, இருதய நோயால், அடிக்கடி அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறாராம்.

அவர் குடும்பம், பிள்ளைகளின் படிப்பிற்காக, சென்னையில் தங்கி இருக்க வேண்டிய அவசியம் இருந்தது. எனவே தாம் மட்டும் சேலம் வந்தார்.

இயக்குநரின் அனுமதி பெற்று, அலுவலக அறையில் தங்கியிருந்தார்; ஓட்டல் உணவு உண்டு வந்தார்.

ஒரு திங்கள்தான் முழுச் சம்பளம் வாங்கினார். அடுத்த திங்களில் ஒருநாள் தூக்கத்தில் இறந்துவிட்டார்.

தகவல் தெரிந்து, சென்னையிலிருந்து அவருடைய குடும்பத்தினர் வந்தனர். சேலத்திலேயே எரியூட்டு நடந்தது.

அலுவலகத்தில் முன்னர் இப்படி நடந்ததில்லை. இப்போது நடந்தது என்னவோபோல் இருக்கிறது.

இதைக் கேட்டபோது, இனந்தெரியாத கவலையில் மூழ்கினேன்.

இறந்தவர் பதவிக்கு வந்திருக்கிறேன் என்று கேள்விப்பட்டதும் துக்கம் மேலும் பொங்கிற்று.

தியாகராயபிள்ளை இறந்த அறையிலேயே, தங்க நேரிட்டதைப் பற்றி எப்படியோ இருந்தது.

என் முகம் வாடியதைக் கவனித்த தலைமை எழுத்தர், அடுத்த கணமே வேறொரு செய்தியைச் சொல்லி என் சிந்தனையைத் திசை திருப்பினார்.

''சேலம் மாவட்ட மருத்துவ அலுவலர் அருகில் குடியிருக்கிறார். அன்று இரவு தியாகராயபிள்ளை, நெஞ்சு வலி என்று சொன்னதும், கடைநிலை ஊழியர் பழனி, விரைந்து சென்று அவரை அழைத்து வந்தார்.

''அந்த இரண்டு மூன்று மணித்துளிக்குள் உயிர் போய்விட்டது. மருத்துவம் பார்க்க வாய்ப்பே கிடைக்கவில்லை.

''தியாகராயபிள்ளையின் இறுதிப் பயணத்தின் போது, அவரது சடலத்தை எடுத்துச் சென்ற நால்வரில் அந்த மருத்துவ அலுவலரும் ஒருவர்.

''தொடக்கத்தில் தோள் கொடுத்த போது, மரியாதை செய்கிறார் என்று நினைத்தோம். பத்து அடி நடந்த பின், உறவினர் ஒருவர் தோள் கொடுக்க அவருக்கு உதவ முன் வந்தார்.

''டாக்டர் பி. அனுமந்தராவோ, உடன்படவில்லை. இறுதிவரை இரண்டு கல் தொலைவு தூரம் தாமும் தாங்கிக்கொண்டு சென்றார். அப்படிப்பட்ட புண்ணியவான்களும் வாழ்வதால்தான் மழையும் பெய்கிறது'' என்று அவர் கூறியதைக் கேட்டு உருகிப் போனேன்.

15. திரு. வி. கலியாணசுந்தரனார்

புதிதாகச் சேர்ந்திருக்கும் மாவட்டக் கல்வி அலுவலரான என்னைக் காணப் பலர் வந்தனர்.

அவர்களில் ஒருவர் டாக்டர் அனுமந்தராவ். தியாகராயபிள்ளையின் உடலைத் தூக்கிச் சென்ற நிகழ்ச்சியை நெஞ்சுருக நினைவுபடுத்தினார்.

''அய்யா! டாக்டர் அனுமந்தராவ் மராட்டியப் பார்ப்பனரல்லாதார். இங்கே மருத்துவப்பட்டம் பெற்றதோடு நில்லாமல், சீமைக்குச் சென்று பட்டம் பெற்றவர். மருத்துவத் துறையில் பணி மூப்பு உடையவர். அய்ம்பது வயதை நெருங்கிக்கொண்டு இருப்பவர்.

''அது மட்டுமா? சென்னையில் புகழ் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்.

'மயிலாப்பூரில், டாக்டர் நஞ்சுண்டராவ் என்றொருவர் இருக்கிறார். அவர் திறமையான மருத்துவர்; முற்போக்குச் சிந்தனையாளர்; கைலாஸ்ய சாமியார் சென்னைக்குச் செல்லும் போது நஞ்சுண்டராவ் வீட்டில்தான் தங்குவார்.

''அப்படிப்பட்ட பெரியவருக்கு உறவான, பெரிய அலுவலில் உள்ள அனுமந்தராவ், சடலத்தைத் தூக்கிக் கொண்டு சென்றது எவ்வளவு பெரிய பண்பாடு.

''துன்பத்தில் துடிக்கும்போது, அப்படித் துடிப்பவர்களுக்கு உதவியாகக் கைகொடுப்பதே உண்மையான பண்பாடு; பிறிதின் நோய் தன்நோய்போல் நோக்கும் பண்பே அறிவின் சின்னம்.

திரு.வி.க. மணிவிழா

''சென்ற ஆண்டு, ஆகஸ்ட் திங்களில் எங்கோ வடக்கே இருந்து வீட்டார்கள். திரு.வி.க.வின் மணி விழாவைக் காணும் பேற்றினை இழந்துவிட்டீர்கள்'' என்று அன்பர் வேறு செய்தியைத் தொடரும் வேளை பேச்சை இடைமறித்தேன்.

அலுவலகத்தில் அரசியல்வாதிகளைப் பற்றி நான் பேசுவது நல்லது யாது. எனவே, மறுமுறை கண்டு அதைப்பற்றிப் பேசுவோம் என்று சொல்லி விடை கொடுத்து அனுப்பி வைத்தேன்.

திரு.வி.க. நூற்றாண்டு விழா

திரு.வி.க. போன்ற ஒருவர் எந்தச் சமுதாயத்தில் பிறந்திருந்தாலும் அந்தச் சமுதாயம் பெருமைப்பட்டிருக்கும். ஏன்?

திரு.வி.க. சிறந்த மனிதர்; உயர்ந்த பண்பாளர்; 'தன் கடன் பணி செய்து கிடப்பதே' என்று வாழ்ந்து காட்டியவர்.

அத்தகைய பெரியவரின் மணி விழாவில் அவையிலிருந்து மகிழும் பேறு பெறாமல் போய்விட்டதைப் பற்றி அன்று வருத்தம் பொங்கிற்று.

''தமிழ்த் தென்றலாம் திரு.வி.க.வின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்; தமிழக அரசால் கொண்டாடப்படும்; அப்போது நானும் வாழ்வேன்; பங்கு கொள்ள வாய்ப்புப் பெறுவேன்'' என்று நொடிப் பொழுதும் நினைக்கவில்லை. நினைக்காத நல்லதும் நடப்பது உலகத்தின் புதிர்களில் ஒன்று.

தமிழக அரசுக்குப் பாராட்டு

தமிழக அரசு - அ.இ.அ.தி.மு.க அரசு - தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் பற்பல துறைகளில் தொண்டு ஆற்றியவர்களின் பிறந்த நாள்களைக் கொண்டாடும் புதிய மரபினைத் தொடங்கித் தொடர்ந்து காத்து வருகிறது.

அம் மரபினை யொட்டி, 28,29 - ஆகஸ்ட் 1982 ஆகிய இரு நாள்களிலும் தமிழ்ச்சோலை திரு.வி.க.வின் நூற்றாண்டு விழாவை எடுத்தது.

சென்னையில் நடந்த விழாவில், முதல் நாள் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் படி, அரசு என்னை அழைத்தது.

அழைப்பினைக் கண்டு மகிழ்வதற்கு முன்பு திகைத்தேன்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்' - என்பது திருக்குறள்.

இன்றைய ஆட்சிக்குத் தலைமை தாங்கும் மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரனையோ இத்தகைய விழாக்களுக்கு ஏற்பாடு செய்யும் மாண்புமிகு ஆர். எம். வீரப்பனையோ, எப்போதோ ஒரு முறை அதுவும் பொதுவிடங்களில் மட்டுமே கண்டு வரும் என்னையும் நினைவில்கொண்டு, அவ்வப்போது அழைத்ததற்கு எப்படி நன்றி சொல்ல?

திரு.வி.க.வின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்கும்படி அரசு அழைத்தது போன்றே சென்னை, கொண்டித்தோப்பில் கால் நூற்றாண்டிற்கு மேலாக இயங்கி வரும் மணவழகர் மன்றமும் என்னை அழைத்து, ஒருவேளை நிகழ்ச்சியில் பங்கு கொள்ளச் செய்தது.

என்னால் நேரடியாக எவ்வித உதவியும் பெறாதவர்கள், என்னை அழைக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை எப்படிச் சொல்வேன்?

தமிழ்க் கடல் திரு.வி.க.

திரு.வி.க தமிழறிஞர்; உரிமை வேட்கை கொண்ட தமிழ் அறிஞர்; அறிவு வேட்கை கொண்ட நல்லறிஞர்.

தமிழ் தேனினும் இனியது; கடலினும் பெரியது.

அந்தத் தேன்கடலில் இறங்குவோர் கரையேறுதல் அரிது; பிற ஈடுபாடுகளில் நாட்டங்கொள்வது அருமை.

திரு.வி.க. தமிழ்க் கடலில் மூழ்கி, மூழ்கி முத்தும் பவழமும் கண்டெடுத்துக் கொணர்ந்தார். அவற்றைப் பொது மக்களுக்கு மீண்டும் வழங்கினார்.

திரு.வி.க தமது அறிவுக் கதவினைத் திறந்து வைத்திருந்தார்.

ஆங்கில இதழ்களையும் ஆங்கில நூல்களையும் கற்றார். அவை கொண்டு வந்த செய்திகளை, உணர்வுகளை, தன்னுடன் அலுவல் பார்த்தவர்களோடு பங்கிட்டுக் கொள்ள முயன்றார்.

அது ஸ்பென்சர் கம்பெனியின் மேலாளரின் எரிச்சலைக் கிளப்பிற்று; மேலாளர் திரு.வி.கவை எச்சரித்தார்.

திரு.வி.க. அடிமையாக இருக்கவில்லை. எழுத்தர் பணியை உதறிவிட்டார்.

ஆசிரியராகச் சேர்ந்தார். வெஸ்லி கல்லூரி தலைமைத் தமிழ் ஆசிரியராகத் தம் உழைப்பால் உயர்ந்தார்.

அன்னிபெசன்ட் அம்மையாரின் 'ஹோம் ரூல்' - 'தன்னாட்சிக்' குரல் அவரைக் கவர்ந்தது. அதற்குச் செவி சாய்த்தார்; கல்லூரிப் பதவியைக் கைவிட்டார்.

'தேச பக்தன்' நாளிதழின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார்.

தேச பக்தனுக்கு நிதி உதவியவர்களில் பெரியாரும் ஒருவர்.

திரு.வி.க. தமிழ் மழை பொழிந்தார்; உரிமைப் பயிர் வளர்க்க முனைந்தார். இனிய தமிழில் கட்டுரைகள்; இலக்கணத் தமிழில் கலையரங்கங்கள்; துள்ளுநடைத் தமிழில் கருத்துரைகள்.

வென்றால் தமிழ் மக்களிடம் அரசியல் விழிப்பை ஏற்படுத்தினார்; புதுப்புது சிந்தனைகளை வளர்த்தார். ஒழுக்க நெறிகளைக் காட்டினார்.

தக்காரைத் தக்க பணிக்குப் பயன்படுத்தக் கற்காத சமுதாயம் நம் சமுதாயம்.

தம் சக்தி வாய்ந்த தமிழால் உருவாக்கப்பட்டு அதனால் புகழ் பெற்ற 'தேச பக்தன்' ஆசிரியப்பொறுப்பு கைமாற வேண்டிய நிலை உருவாகியது.

அந்த நாளிதழ் பொறுப்பை உதறிவிட்ட திரு.வி.க. 'நவசக்தி' என்னும் வார இதழைத் தொடங்கினார்.

இருபது ஆண்டுகள் அதை நடத்தினார். அதன் வாயிலாகத் தமிழை வளர்த்தார். சைவத் தமிழை - சமயத் தமிழை மட்டுமா வளர்த்தார்? இல்லை.

பித்திருத்தத் தமிழை வளர்த்தார். சமுதாய சமத்துவத்திற்காக ஆகவான தமிழை வளர்த்தார்.

அரசியல் உரிமை உணர்வுகளை - சாதிக் கலைப்புக் கருத்துகளை புதிய பொருளியல் முறைக்கு வாதிடும்வாதங்களை 'நவசக்தி' மக்கள் முன் மிகுந்த ஆற்றலுடன் கொண்டு சென்றது.

காங்கிரசை வளர்த்தார்

தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், காங்கிரசு இயக்கத்தை முன்னின்று வளர்த்த பெருமை, சிறப்பாக நாலைந்து பேர்களுக்கு உண்டு.

'அதில் ஒருவர், திரு. வி. கலியாணசுந்தரனார்' என்று திரு. இராமசாமி திரு.வி.க.வின் மணி விழாவின்போது, இளைய தலைமுறைக்கு அடையாளங் காட்டினார்.

'தமிழ் நாட்டில் தமிழை மேடைகளில் முழங்க வைத்த பெருமை திரு.வி.க. வையே சேரும்' என்று பெரியார் ஈ.வெ. ராமசாமி போற்றினார்.

தொழிற் சங்கத் தந்தை

'இந்தியத் தொழிற் சங்க இயக்கத்தின் தந்தையும் தாயும் திரு.வி.க. என்றால் மிகையல்ல' என்று வியந்து வியந்து பாராட்டினார் காமராசர்.

இப்படிப் பன்முகத் தொண்டாற்றிய, திரு.வி.க. காங்கிரசு இயக்கத்தின் முன்னணியில் இருந்து, தமிழகத்தின் காடுமேடெல்லாம் சுற்றி வந்து, காந்தியத் திட்டங்களைப் பரப்பினார்.

அக் காங்கிரசை விட்டு திரு.வி.க.வும் விலகினார். பெரியார் ஈ.வெ. ராமசாமி விலகிய அடுத்த ஆண்டு, திரு.வி.க.வும் விலகினார். காரணம் ஒன்றும் அல்ல.

காங்கிரசுக் கொள்கைகளைப் பரப்பும் பணியில் மூழ்கி இருந்த போதே திரு.வி.க. தொழிற்சங்க உரிமை பற்றி, நலன் பற்றி கருத்துச் செலுத்தினார்.

இந்தியாவின் முதல் தொழிற் சங்கமாகிய சென்னைத் தொழிலாளர் சங்கத்தை, வாடியா, செல்வபதி செட்டியார், இராமானுஜ மூர்த்தி ஆகியோரோடு சேர்ந்து தொடங்கினார்.

தொடக்கத்தில் துணைத் தலைவராக இருந்து இயங்கினார்.

பின்னர் பதினோர் ஆண்டுகள் தலைவராக விளங்கினார். வாழ்நாள் முழுவதும் அச்சங்கத்தின் நண்பராக, வழிகாட்டியாக, தோழராகச் செயல்பட்டார்.

1921 ஆம் ஆண்டு பக்கிங்காம் ஆலையில் வேலை நிறுத்தம் நடந்தது.

ஆங்கிலேய ஆட்சியின் அடக்குமுறை பலிக்கவில்லை. திரு.வி.க.வை நாடு கடத்த முடிவு செய்தது அன்றைய அரசு.

இச்செய்தி எட்டியதும் நீதிக்கட்சித் தலைவர், சர் தியாகராய செட்டியார், தாமாகவே தலையிட்டு, அம்முடிவை முறியடித்ததை முன்னரே பார்த்தோம்.

குத்தூசி குருசாமியார் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிக்கவர்; திரு.வி.க.வோடு சில கருத்து மாறுபாடு கொண்டு வாழ்ந்தவர்.

திரு.வி.க.வின் பெருந்தன்மை

சென்னை மேடைகளில் திரு.வி.க.வைக் கண்டித்து கிண்டல் செய்து முழங்கி வந்தவர்.

அத்தகையவர் சென்னையில் இருந்து கடலூருக்கு மாற்றப்பட்டார். இது அவருக்குப் புதிது.

இவருக்குக் கேள்வியுற்ற திரு.வி.க. 'தொலையட்டும் தொல்லை' என்று இருந்துவிடவில்லை.

குருசாமி, கலப்பு மணம் செய்ததைப் பாராட்டி மகிழ்ந்தவர் திரு.வி.க.

உடனே, கடலூரில் வாழ்ந்து வந்த, திரு.டி.கே. நாராயணசாமி நாயுடு என்னும் நண்பருக்குக் கடிதம் எழுதினார்.

அதில் குருசாமிக்கு உதவும்படி பரிந்துரைத்தார். அவரும் உதவினார்; நல்ல நண்பராக இருந்து உதவினார்.

அதன் விளைவு, குத்தூசி குருசாமியாரின் குடும்பத்திற்கா? இல்லை, தமிழ்ச் சமுதாயத்திற்கு!

புதுவை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுப்பு யார் பெயரில் வெளியிடப்பட்டது? திருமதி. குஞ்சிதம் பெயரில் வெளியிடப்பட்டது.

அந்த வெளியீட்டாளர் யார்? குருசாமியின் வாழ்க்கைத் துணைவியார்.

டி.கே. நாராயணசாமி உதவினார்.

அம்முதல் தொகுப்பிற்கு வேண்டிய முன் பணம் தந்து உதவியவர் யார்?

டி.கே. நாராயணசாமி நாயுடு. அவரோ திருப்பாதிரிப்புலியூர் நகரின் முக்கியமான கவுரவிகளின் சீடர். அத்தகையோர் பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுப்பு நூலை வெளியிடக் கடன் கொடுத்து உதவியிருந்தார்.

அதற்கு முன்னுரையிலேயே நன்றி தெரிவித்தார், பாரதிதாசன்.

இது, அக்காலப் பொது வாழ்க்கை எப்படி விளங்கியது என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு.

இளமையில், மிடுக்கோடும் துடுக்கோடும் வாழ்ந்தவர் திரு.வி.க.

'சொல்லுக்குச் சொல்; கல்லுக்குக் கல்; மல்லுக்கு மல்' என்ற வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தவர்.

அத்தகையோர், 'ஆன்றவிந்து அடங்கிய சான்றோராக' ஒளிவிடத் துணை நின்றவை எவை?

திரு.வி.க.வின் இல்லற வாழ்க்கை; அவர் ஏற்றுக்கொண்ட இன்னா செய்யாத காந்திய நெறி; சமகாலத் தலைவர்களின் உயர்ந்த பண்பாடு.

சோவியத் நட்பை வளர்த்தார்

தமிழ் நாட்டில், நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய சோவியத் நட்புறவை வளர்த்த பெரியோர்களில் திரு.வி.க.வும் ஒருவர் ஆவார்.

நிதியேற்க மறுத்தார்

தூய்மைக்கு, எளிமைக்கு, பொறுமைக்கு, உயிர் விளக்காக வாழ்ந்தவர் திரு.வி.க. பொதுத்தொண்டினை, அறவிலை வாணிகமாக மாற்றிக்கொள்ளாதவர்; தம் மணி விழா பெயரால், அன்பளிப்பு என்ற பெயரால், எவரும் உதவுவதற்கு இடங் கொடுக்க வில்லை.

முதுமையும் நோயும் திரு.வி.க. வோடு தோழமை கொண்டு, அவரைப் படுக்கையில் கிடத்தி இருந்தபோது, செல்வம் கொழித்த தமிழ் அன்பர் ஒருவர், வலிய அனுப்பிய காசோலையைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்த திரு.வி.க. எப்படிப் பிறரிடம் கையேந்துவார்?

1947இல் சென்னை பி. அண்ட். சி ஆலையில் வேலை நிறுத்தம்.

அதற்கு திரு.வி.க. வழிகாட்ட, ஆத்திரங் கொண்ட நம் அரசு, அவரை வீட்டுச் சிறைக்கு ஆளாக்கியது.

நானா பக்கங்களிலும் கண்டனம் எழவும் அக் கொடுமை நீக்கப்பட்டது.

அப்போது ஏற்பட்ட உள் உணர்வு திரு.வி.க.வை, கடலூரில் நடந்த திராவிட நாட்டுப் பிரிவினை மாநாட்டில், மாநாட்டாளர் அழைப்பின் பேரில், கலந்து கொள்ளச் செய்தது.

திராவிட நாடு கோரிக்கைக்கு ஆதரவு

பத்தாண்டுகளில் திராவிடநாடு, தனி ஆட்சியாகிவிடும் என்று 1948-இல் ஈரோட்டில் நடந்த மாநாட்டில் திரு.வி. கலியாண சுந்தரனார் முழங்கினார்.

சரியாகவோ, தவ்றாகவோ ஈ.வெ.ராவும் திரு.வி.க.வும் 'திராவிட நாடு கிடைத்தால் சாதி அற்ற சமுதாய வாழ்க்கை முறைக்கு சாத்தியக்கூறும், வாய்ப்பும் அதிகம்' என்று நம்பினார்கள்.

இறை நம்பிக்கையுடைய திரு.வி.க. இறையின் பெயரால் சாதி ஏற்றத்தாழ்வுகளை நடைமுறைப் படுத்துவதை எதிர்த்தார். ஏழ்மையை நியாயப்படுத்துவதைக் கடிந்தார். சாதியற்ற, சமதர்ம ஆட்சியை உருவாக்கத் துடித்தார்.

'தன்மான இயக்கத்தின் தாய், நான்; தந்தை, பெரியார்; அது பிறந்தது முதல் தந்தையின் வீட்டிலேயே வளர்ந்து வருகிறது' என்று முழங்கியதன் வாயிலாக, திரு.வி.க. சாதிக் கலைப்பிற்கும் சமதர்மத்திற்கும் தமது உடன்பாட்டைத் தெரிவித்துக்கொண்டார் எனலாம்.

அய்ம்பத்து அய்ந்து நூல்களை எழுதி வெளியிட்ட பெருமை திரு.வி.க.வுக்கு உரியதாகும். போதிய அளவு அவற்றைப் படித்துத் தெளிவு பெறாத குறை மக்களுக்கு உரியதாகும்.

நம் வாழ்க்கை முறையில்; அதன் நடைமுறையில் மற்றோர் குறை நினைவுக்கு வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, அண்ணா மலை நகரில் ஒரு அதிர்ச்சியான நிகழ்ச்சி.

அங்கு, தத்துவத்துறைப் பேராசிரியராக இருந்த டாக்டர் இராமலிங்கம் மாரடைப்பால் நொடியில் மறைந்தார்.

அவரது துணைவி, சிவயோகவல்லி - திரு.வி.க.வின் பேத்தி - அப்போது அங்கு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக இருந்தார். கல்லூரியில் படிக்கும் ஒரு பெண்ணுக்குத் தாய்.

கணவனை இழந்த அதிர்ச்சியில் அச் சூழலைவிட்டு வெளிவர முயன்றார்.

சென்னையில் ஏதாவது ஒரு பள்ளியில் வேலை பெறப் பட்டபாடு கொஞ்சமல்ல. தமிழ்ப் பற்றாளர்கள் உதவ முன் வரவில்லை. அம்மையாரின் பள்ளித் தோழியாகிய டாக்டர் இரஷ்ஷியா சில பெரியவர்களை நேரில் கேட்டுப் பார்த்தார்.

ஒருவர் மற்றவருக்குக் கைகாட்டுவதற்குப் போகவில்லை.

இறுதியில் மராட்டியப் பார்ப்பனராகிய திருமதி. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அம்மையார் பரிவு கொண்டு உதவ, அவர் தயவால் எங்கோ தற்காலிக வேலை கிடைத்தது.

எம்.ஏ. பட்டம் பெற்ற மகளுக்கு எப்போது கிடைக்கும் வேலை என்று ஏங்குகிறார் அந்த அம்மையார்.

16. சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமி கவுண்டர் எம்.ஏ., எல்.டி.

சேலத்திலிருந்த நான், சென்னைக்குத் தாவினேன்; 1944-இல் இருந்து 1982-க்குத் தாவினேன்.

இதுவே மனத்தினுடைய தனியாற்றல்; இது குறும்பாகப் பயன்படுவதுமுண்டு.

சென்ற காலத் தீமைகளை நினைவுபடுத்தி, பகையைப் பயிரிடும் போது, கேடானதே அத்தகைய தாவல்.

மீண்டும் 1944 ஆம் ஆண்டிற்குச் செல்வோம்.

சேலம் மாவட்டத்தில் நான் பணி ஆற்றிய காலம், சாதனைகளும் வேதனைகளும் கலந்தவை.

அங்கே சில அருமையான நண்பர்கள் கிடைத்தார்கள்.

அவர்களுடைய நட்பு உண்மையானது; ஆதாயங்கருதாதது; வாழ்நாள் முழுவதும் வளர்ந்தது; நினைக்க நினைக்க இனிப்பானது.

கல்லூரி முதல்வர்

என் உயிருக்கு உயிரான நண்பர்களில் ஒருவர், திரு. அ. இராமசாமி கவுண்டர் என்னும் உத்தமர்.

அவர் யார்?

அவர், அன்றைய சேலம் நகராட்சிக் கல்லூரியின் முதல்வர். புருவத்தை உயர்த்தாதீர்கள்.

அப்போதும் அதற்குப் பிறகு பல்லாண்டும் சென்னை மாகாணத்தில், சேலம் நகர் மன்றம் ஒரு கல்லூரியை நடத்தி வந்தது.

அது இரண்டாம் நிலைக்கல்லூரி; அதாவது இளங்கலைப் பட்டப் படிப்பிற்கு ஏற்பாடு செய்யாமல் 'இண்டர் மீடியட்' வரை பாடம் சொல்லிக் கொடுத்து வந்தது.

1927 இல் சேலம் கல்லூரி முதல்வர் பதவி காலி ஆயிற்று.

அப்போது, சேலம் நகர் மன்றத் தலைவர் திரு. தம்மண்ணச் செட்டியார். அவர் நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்.

எனவே, பார்ப்பனரல்லாதவர் ஒருவரை முதல்வராக நியமிக்க விரும்பினார்.

அவர் நினைத்தபடி தக்கவர் கிடைத்தார்.

அவரே திரு. இராமசாமி கவுண்டர்; அவரது பின்னணி என்ன?

உயர் கல்வியின்பால், தமிழர்களுக்கு நாட்டமில்லாத காலத்தில், 1900 ஆம் ஆண்டில் இராமசாமி பிறந்தார்.

எனினும் தமிழ் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக வளர்ந்தார்.

போதிய அக்கறையோடு படித்தால் எல்லோருக்கும் படிப்பு - உயர் படிப்பு வரும் என்பதை மெய்ப்பித்தார்; எம்.ஏ. பட்டம் பெற்றார்.

முதல் பட்டதாரி

வடஆர்க்காடு மாவட்டத்தில் பார்ப்பனரல்லாதாரில் இவரே முதல் எம்.ஏ. பட்டம் பெற்றவர்.

என்ன பாடத்தில்? கணக்குப் பாடத்தில்; பார்ப்பனர் அல்லாதவர்களுக்குக் கணக்கு வராது. என்பது பல மூட நம்பிக்கைகளில் ஒன்று. அதை உடைத்துக் காட்டினார் இராமசாமி கவுண்டர்.

அப்போது வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி தொடக்க நிலையில் இருந்தது. அதுவும் இரண்டாம் நிலைக் கல்லூரியே.

அந்தக் கல்லூரியில் மூன்றாண்டு பணிபுரிந்தார். கல்லூரி நிர்வாகம் அவர் திறமையைக் கண்டு போற்றியது.

அக்காலத்தில் எல்லாக் கல்லூரிப் பேராசிரியர்களும் எல்.டி. என்கிற ஆசிரியப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

எனவே, வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி நிர்வாகத்தினரே, அவரைச் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பினர்.

பயிற்சியை வெற்றிகரமாக முடித்துத் திரும்பிய திரு. இராமசாமி கவுண்டரைக் கல்லூரி முதல்வராகவே நியமித்தனர்.

ஆனால் ஒரு நிபந்தனை; தகுதி பெற்ற இஸ்லாமியர் வந்தால், அவருக்கு முதல்வர் இடத்தைக் கொடுத்துவிட்டு, பேராசிரியர் பணிக்கு மாறிவிடவேண்டும் என்பது நிபந்தனை.

அதற்கு உடன்பட்டு, திரு. இராமசாமி கவுண்டர் கல்லூரி முதல்வர் ஆனார்.

மூன்றாண்டுப் பணி அனுபவமே உடையவர்; ஆயினும் திரு. இராமசாமி கவுண்டர், வெற்றிகரமான முதல்வராக விளங்கினார்; திறமையான கணக்குப் பேராசிரியர் என்று புகழ் பெற்றார்.

ஓராண்டு முதல்வராக இயங்கிய பிறகு இஸ்லாமியர் ஒருவர் கிடைத்தார். அவரை வாணியம்பாடி கல்லூரி முதல்வர் ஆக்கினர்.

அவ்வேளை பார்த்து, சேலம் கல்லூரி முதல்வர் பதவி காலியாயிற்று.

நகர அவையர் திரு. இராமசாமி கவுண்டரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இளைஞர் முதல்வராவதா?

இருபத்தேழு வயதுடைய இளைஞரை சேலம் நகர் மன்றக் கல்லூரியின் முதல்வராக நியமித்தார்கள்.

வாதப் புயல் கிளம்பிற்று. இஸ்லாமியர்கள் ஏற்றுக்கொண்ட முதல்வரை, இந்துக்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளவில்லை. இத்தனைக்கும் இராமசாமி கவுண்டர் வெளிப்படையான வைணவர்; முழு நாமம் நெற்றியில் துலங்க இஸ்லாமியக் கல்லூரியில் வெற்றிகரமாகப் பணி புரிந்தவர்.

இந்துக்கள் ஆயிரம் சிதறல்களாக உடைத்த தேங்காய்க்கு ஒப்பானவர்கள்.

ஒருவரை இன்ன 'சாதி'யைச் சேர்ந்தவர் என்று கருதி விட்டால், பல சாதியார் தேவையற்றுப் பகைப்பதும், சில சாதியார் ஏனோ தானோ என்று வேடிக்கை பார்ப்பதுமே நம் வரலாறு.

பொறுப்புக்கு வந்தவர்கள், செயல்பட ஓரளவு வாய்ப்பாகிலும் கிடைத்தபிறகு எதிர்ப்போம் என்கிற பொறுப்பு உணர்ச்சியையும் வளர்த்துக் கொள்ளாத அழுக்காறு சமுதாயம் ஆயிற்றே, இந்து சமுதாயம்.

திரு. இராமசாமி கவுண்டர் சேலம் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்டதைப் பற்றி வாதப்புயல் கிளம்பிற்று.

'திரு கவுண்டருக்கு வயது போதாது' என்று கூச்சலிட்டது ஒரு கூட்டம்.

சிலர் நினைத்தால் கடுகைப் பெருமலையாக மிகைப்படுத்திக் காட்ட முடியும்.

அத்தகையோர், சேலம் கல்லூரி முதல்வர் பதவியை அறுபது எழுபது ஆண்டுகளாக அனுபவித்து வந்தார்கள்.

அவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு வேறொரு 'பிரிவு'க்குப் போவதைக்கூடப் பொறுக்க மனம் இல்லை. ஆன்மீகத்தைப் பற்றி வானளாவ அளக்கும் இந்துக்களுக்கு.

கல்லூரி முதல்வர் நியமனம் பற்றி எழுந்த வாதப்போர், பார்ப்பனர், அல்லாதார் போட்டியை, பகையை, ஊதி ஊதி வளர்த்தது; பல்லாண்டுகள் அதைப் பரவும்படியும் செய்தது.

இப்படித்தான் இந் நாட்டு அறிவாளிகள், சிறுசிறு நியமனங்களைக்கூடத் தத்தம் வட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களுக்கு விட்டுக்கொடுக்காமல், அவ்வப்போது வெறுப்புப் பகைத் தீயை மூட்டி வளர்க்கிறார்கள்.

1927ஆம் ஆண்டில் திரு. இராமசாமி கவுண்டர் முதல்வர் ஆவதா என்று எழுப்பிய எதிர்ப்பு, 1944ஆம் ஆண்டிலும் சேலத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்ததை நான் உணர்ந்தேன்.

கல்லூரி வரை ஊர்வலம்

வீண் வாதம் எழாதிருந்தால் திரு. இராமசாமி கவுண்டர் சாதாரணமாக, காதும்காதும் வைத்தாற்போல் வேலையில் சேர்ந்திருப்பார்.

பாடமுண்டு, கல்லூரிப் பணியுண்டு என்று மூழ்கியிருந்திருக்கக் கூடும்.

ஊரில் சிலர், தொலைநோக்கின்றி, எழுப்பிய எதிர்ப்பால் பலர் எழுச்சியவந்து, திரு. இராமசாமியாருக்குப் பேராதரவு தரும் நிலை உருவாகியது.

திரு. இராமசாமி கவுண்டர், சேலத்தில் பணியேற்க வந்து இறங்கியபோது, செவ்வாய்ப்பேட்டை புகைவண்டி நிலையத்தில் இருந்து, 'சாரட்'டில் இருத்தி, கல்லூரி வரை அவரை ஊர்வலமாக அழைத்து வந்தார்கள்.

மக்கள் முதல்வர்

அதனால் அவர்கள் மக்கள் முதல்வராக ஆகிவிட்டார். ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலம், பார்ப்பனரல்லாத தமிழ் நாட்டவர், திரு இராமசாமி கவுண்டரைக் குறிப்பிடும் போதெல்லாம், 'நம்மபிரின்ஸ்பால்' என்றுதான் மிகுந்த பாசத்தோடு சொல்லுவார்கள்.

அவ்வளவு உரிமையோடு அழைக்கக் காரணம் என்ன?

பிழைக்கத் தெரிந்தவர்கள் என்ன செய்வார்கள்? செல்வம் செல்வாக்குடையவர்கள் பிள்ளைகளாகப் பார்த்துச் சேர்த்துக் கொள்வார்கள்.

அவர்களைப் பயன்படுத்தி, தங்களுக்குப் பதவி உயர்வுகளும் சொத்து சுகங்களும் சேர்த்துக் கொள்வார்கள்.

இந்த உலகியல் அறியாத குழந்தையா, முதல்வர் இராமசாமி கவுண்டர்? இல்லை. இருப்பினும் வளர்க்கத் தெரிந்த அவருடைய அணுகுமுறை வேறு. அது எத்தகையது?

''இதோ இந்தப் பையன், பல இலட்சத்திற்கு அதிபதி. தந்தையார் கட்டாயப் படுத்துவதால், நகர் மன்றக் கல்லூரியில், சேர, வேண்டா வெறுப்பாக இசைந்து இருக்கிறான்.

''இவனுக்கு வெளியூர் சென்று படிக்க ஆவலும் இருக்கிறது; வசதியும் இருக்கிறது. இவன் திருச்சிக்கே செல்லட்டும்; சென்னை வேண்டுமானாலும் சென்று படிக்கட்டும்.

''அதோ அந்தப் பையன், 'சலூன்' வைத்திருப்பவர் பையன். வெளியூருக்குச் சென்று படிக்க பணம் இல்லாதவன். அவனுக்கும் கொடுத்துவிட்டு, மீதி இருந்தால், பெரியவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கொடுப்போம்.

''எட்டி நிற்கிறானே, அந்தப் பையன் பாராவண்டி ஓட்டும் பரசுராமன் மகன்; அவனும் இவ்வூரில் இடங்கிடைக்கா விட்டால், படிக்க முடியாது.

''அதோ! கையைக் கட்டிக்கொண்டு சிரிக்க முயலும் சங்க மேஸ்வரனின் அப்பா, சிற்றுண்டிச் சாலையில் சமையல்காரர். அவர் பையன் திருச்சி போய்ப் படிக்க முடியாதே.

''ஆகவே, அவனுக்கும் முன்னுரிமை. அவன் சாதியார் சிலர், என்னை எதிர்த்தார்கள் என்பதற்காக, இச்சிறுவனைக் கெடுக்கக்கூடாது. அவனுக்கும் இடம் கொடுப்போம். மிச்சமிருந்தால், செல்வர் வீட்டுப் பிள்ளைக்கு.''

இப்படி எல்லாச் சாதி ஏழைகளுக்கும் கல்லூரியில் இடம் கொடுத்தவர், திரு. இராமசாமி கவுண்டர்.

இடம் கிடைக்காமல் ஏமாறிய பெரிய மனிதர்கள் பார்ப்பனரல்லாதவரே - அவரைப் பார்ப்பனப் பகைவர் என்று வீண்பழி சுமத்தினர்.

கர்மவீரன் பேச்சுகளுக்கு அஞ்சுவது இல்லை; புகழ்ச்சிகளுக்கு மயங்குவது இல்லை. கல்லூரி முதல்வர் இராமசாமி கர்மவீரராகவே செயல்பட்ட தீரர்.

தாம் பதவி வகித்த இருபத்துமூன்று ஆண்டு காலமும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தார்.

வடமொழியிலும் வல்லுநர்

திரு. இராமசாமி கவுண்டர், கணக்கில் புலியாக விளங்கியது போன்றே, தமிழில் கடலாகவும், வடமொழியில் புலவராகவும் இசையில் வல்லுநராகவும் விளங்கினார்; வகுப்பில் பாடம் நடத்துவதில் திறமை மிக்கவராக இயங்கினார்.

மக்களோடு பழகுவதில், பெரியார் ஈ.வெ.ரா.வோடு போட்டி போடக் கூடியவராக வாழ்ந்தார்.

கருணைமிக்க கனகம்மையார்

திரு. இராமசாமி கவுண்டரின் விருந்தோம்பல் சிறப்பானது.

அதற்கேற்ற, கனகம்மையார் என்ற இல்லத்தரசியாரைப் பெற்றிருந்தார். இது அவர் பெற்ற பெரும்பேறு.

அம்மையார், தமிழ்ப் பற்றும் தமிழ் மக்கள்பால் பரிவும் சிறப்பாகச் சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் கிடப்போர்பால் கருணையும் உடையவர்கள்.

இருவருமே சமயப் பற்றாளராயினும் முற்போக்குச் சிந்தனையாளர்கள்; பெரியார் காண விழைந்த சமத்துவ சமுதாயத்திற்கு ஆதரவாக நின்றவர்கள்.

அம்மையார், கலந்து கொண்டு உரை ஆற்றிய, சுயமரியாதை இயக்க மாநாடுகள், கூட்டங்கள் சில உண்டு.

தந்தை பெரியாருக்கு இக் குடும்பத்தின்மேல் மதிப்பும் பற்றும் அதிகம்.

ஊக்கம் ஊட்டினார்

சேலத்தில் குடியேறிய என் மனைவியும் நானும், திரு. இராமசாமி கவுண்டரையும் அவரது வீட்டரசியாரையும் காலதாமதமின்றிக் கண்டு அறிமுகம் செய்து கொண்டோம்.

என்னிலும் பன்னிரண்டு வயது மூத்த, கல்லூரி முதல்வர், என்னைத் தம்பியாக நடத்தவில்லை.

நம்பிக்கைக்குரிய தோழனாக நடத்தினார். இரண்டு ஆண்டு காலம் எண்ணற்ற மாலைப் பொழுதுகளை அவர்கள் பங்களாவில் செலவிட்டோம்.

முதல்வரும் நானும் திறந்த வெளியில் நாற்காலிகளில் அமர்வோம்; கனகம்மையாரும் காந்தம்மையாரும் முன்னவரின் மூன்று மகன்களும் படிக்கட்டுகளில் உட்கார்ந்து கொள்வார்கள்.

மணிக்கணக்கில் பேசி உலகளாவிய உரையாடல்களில் திளைப்போம். கனகம்மையாரின் உரைகள் தெளிவூட்டும்.

திரு. இராமசாமி கவுண்டரின் தோழமை எனக்கு உறுதியையும், நல் உணர்ச்சியையும், ஊக்கத்தையும் வளர்த்தது; அவரது பட்டறிவால் நான் பெற்ற ஆதரவு பெரிது.

பேராசிரியர்கள் தேவநேயப்பாவாணர், சொக்கப்பா, சங்கர நாராயணன், தங்கராசு, அச்சுத நாயர், கோவிந்தராசன், உலக ஊழியர், போன்றவர்களுக்குப் புலவராக விளங்கியவர் திரு. இராமசாமி கவுண்டர். அவர்களை ஊக்கப்படுத்தி வளர்த்தவர், இராமசாமியார். இவர்களில் ஒருவரும் கவுண்டர் சாதியைச் சேர்ந்தவர் அல்லர்.

பார்ப்பனரல்லாதாரில் ஒருவர் பெரும் பதவிக்கு வருவது, தம் சாதியை வளர்க்க அல்ல; கூட்டாளிகளை உயர்த்த அல்ல; பல சாதியினருக்கும் புதியவர்களுக்கும் கைகொடுத்து, அனைவரையும் வளர்க்க, என்று நடைமுறை வாயிலாக வழிகாட்டியவர் திரு. இராமசாமி கவுண்டர் ஆவார்.

புகழ் பெற்ற மாணவர்கள்

அவருடைய மாணவர்களில் எண்ணற்றோர் பட்டம் பெற்று, பதவி பெற்று, பெருவாழ்வு வாழ்கிறார்கள்.

அவர்களில் எனக்குத் தெரிந்த சிலரையாவது குறிப்பிடாமல் போவது பிழை.

தமிழக சட்டமன்றப் பேரவைத் தலைவர், திரு.க. இராசாராம் அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. வி.சி. குழந்தை சாமி, ஸ்தபதி கணபதி, உயர்நீதி மன்ற நடுவர், திரு.சி. நடராசன் ஆகியோர் முதல்வர் இராமசாமி கவுண்டரின் காலத்தில், சேலம் கல்லூரியில் கற்றுத் தேறியவர்கள் ஆவர்.

எண்ணற்ற இளைஞர்களைப் பெரியவர்களாக்கிய அந்நல்லார், தாம் தலைமை ஏற்று நடத்திய கல்லூரியையும் உயர்த்தி விட்டார்.

இரத்தினசாமிப் பிள்ளை.

இரண்டாம் நிலைக் கல்லூரியாக இருந்ததை முதல்தரக் கல்லூரியாக்க, வேர்களாக அமைந்தவர்கள் இருவர்.

ஒருவர், முதல்வர் இராமசாமி கவுண்டர். மற்றொருவர் சேலம் நகர் மன்றத் தலைவர் திரு. இரத்தினசாமிப் பிள்ளை என்னும் அறிஞர்.

17. தீமை உருவாயிற்று

திரு. இரத்தினசாமிப் பிள்ளை, தம்காலில் நின்று, தம் உழைப்பால் வளர்ந்தவர். முறையான படிப்பு சிறிதே ஆயினும் உலகியல் பட்டறிவில் முதிர்ந்திருந்தார்.

சுவர்ணாம்பிகை பேருந்துத் தொடர்களுக்கு முதலாளியானவர். கையில் காசும், சுற்றி ஆள் பலமும் சேர்ந்த பிறகு பொது வாழ்க்கைக்கு வந்தார்.

பொது வாழ்க்கையில் இருந்து ஆதாயம் தேடும் நிலைக்குத் தம்மைத் தள்ளிக் கொள்ளாமல் வாழ்ந்தார்.

நான், சேலம் மாவட்டக்கல்வி அலுவலராகச் சேர்ந்தபோது, திரு. இரத்தினசாமிப் பிள்ளை சேலம் நகர் மன்றத் தலைவராக இருந்தார்.

மாவட்ட ஆட்சிக்குழுவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவும் செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

கண்காட்சி வரும்படியில் கல்விச் சீரமைப்பு

சேலம் நகரில் அம்மன் திருவிழா ஒன்று தடபுடலாக நடக்கும். ஆண்டுதோறும் நடக்கும் அத் திருவிழாவின் போது, சேலம் நகர் மன்றம் கண்காட்சி ஒன்றை நடத்தி வந்தது.

அதனால் ஆண்டொன்றுக்கு இருபது இருபத்தைந்து ஆயிரம் ரூபாய்கள் வரை வருவாய் கிடைத்தது.

திரு. இரத்தினசாமி, தலைவரானதும் கண்காட்சி வரும்படியைக் கல்விச் சீர் அமைப்பிற்காகவே, ஒதுக்கி வைக்கலாம் என்று ஆலோசனை கூறினார்.

நகர் மன்றம் அதை ஏற்றுக்கொண்டது. அந்நிலையில் நான் அவ்வூருக்குப் போய்ச் சேர்ந்தேன்.

சேலம் கல்லூரி முதல் தரம் ஆனது

ஒரு நாள் மாலை நகர் மன்றத்தலைவர், கல்லூரி முதல்வர், நான் ஆகிய மூவரும் தற்செயலாகக் கூடினோம்.

உரையாடலின்போது தலைவர், முதல்வரைப் பார்த்து,

''உங்களுக்கு, சென்னைப் பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பதவியைப் பெற்றுத்தர, சில நண்பர்கள் முயல்வதாகக் கேள்வி. அது எவ்வளவுக்கு உண்மை? ஏன் இங்கிருந்து வேறு கல்லூரிக்குச் செல்ல முயல்கிறீர்கள்'' என்று கேட்டார்.

இந்தச் செய்தி எனக்குத் தெரியாது. இருப்பினும் முந்திரிக் கொட்டைபோல் நான் முந்திக்கொண்டேன்.

''பதினேழு ஆண்டுகள் பணி புரிந்த பிறகு, முதல்நிலைக் கல்லூரி முதல்வராக விரும்புவது இயற்கை.

''எவ்வளவு காலம் இரண்டாம் நிலைக் கல்லூரியில் தேங்கிக் கிடப்பார்?' என்று நான் பதில் கூறினேன்.

''அப்படியானால், நம் கல்லூரியையே முதல் நிலைக் கல்லூரியாக உயர்த்திவிட்டால் போகிறது; அதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்; செய்து முடிப்போம்'' என்று திரு. இரத்தினசாமி கூறினார்.

''அப்படியா?'' என்று முதல்வர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மீண்டும் குறுக்கிட்டேன்.

''முதல்வர் அய்யாவுக்கு என்னென்ன செய்யவேண்டும் என்பது தெரிந்திருக்கலாம். இருப்பினும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், டாக்டர் ஆர்க்காடு இலட்சுமணசுவாமி முதலியாரைப் பார்த்து, நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வது மிகவும் நல்லது.

''அவர், இது இது தேவையென்று சொல்லிவிட்டால் அப்புறம் அவருடைய சகாக்கள் கட்டை போட முடியாது அல்லவா?'' என்றேன்.

இருவரும் என் கருத்தை ஏற்றனர்.

முதல்வரும் தலைவரும் மேலும் இரண்டொரு நண்பர்களை அழைத்துக்கொண்டு சென்னை சென்று துணைவேந்தரைக் காணவும் முடிவு செய்தார்கள்.

முடிவு செய்தபடி, சென்னைக்குச் சென்றார்கள்; முதலியாரைக் கண்டார்கள். பட்டப் படிப்பிற்கென்று தனியாகக் கட்டடம் தேவை; கூடுதலாகத் தளவாடங்கள் தேவை; நூலகம் தேவை. இப்படி ஒரு நீண்ட தேவைப் பட்டியல் கொடுத்தார் துணைவேந்தர்.

அவர் கூறியவற்றை முடித்துக் கொடுக்க முயன்றார்கள்.

கண்காட்சி நிதியைக் கல்லூரி அமைக்கும் செலவிற்கு ஒதுக்கினார்கள்.

கல்லூரி அமைப்புக் குழுவை நிறுவி, நன்கொடை திரட்டினார்கள்.

கூட்டு முயற்சி, மாடிக் கட்டடமாக எழுந்தது. தேவையான பொருள்கள் தாராளமாக வந்து நிரம்பின.

உரிய காலத்தில் பல்கலைக் கழகத்திற்கு மனு அனுப்பினார்கள்; வேண்டுகோள் பலித்தது; சேலம் நகரம் முதன் முதலாக முதல்நிலைக் கல்லூரியைப் பெற்றுச் சிறந்தது.

முதல்நிலைக் கல்லூரி உருவானபோது, நான் சேலத்தில் இருந்து, கண்டு மகிழும் பேறு பெற்றேன்.

பல்லாண்டுகளுக்குப் பிறகு, நகர் மன்றம் அக்கல்லூரியைச் சென்னை மாநில அரசிடம் ஒப்படைத்தது.

அதை அரசின் சார்பில், பொதுக்கல்வி இயக்குநராக இயங்கிய நான், நடத்தும் வாய்ப்புப் பெற்றேன். நினைக்காதது நடந்தது.

வழிபாடு மக்கள் மேம்பாட்டுக்காகவே

திரு இராமசாமி கவுண்டர், நாள் தவறாமல் பூசையில் திளைப்பார். பூசை செய்வதற்கு ஒரு மணி நேரம்போல் எடுத்துக் கொள்வார்.

பெரியார் ஈ.வெ.ரா.வின் கட்சியினர் என்று கருதப்பட்ட முதல்வர் அப்படிப் பூசையில் திளைப்பதைப் பற்றிப் பலர் வியப்பில் ஆழ்வதுண்டு.

திரு இராமசாமி கவுண்டர் சேலத்தில் இருந்த 'ஆபீசர்ஸ் கிளப்'பில் மூத்த உறுப்பினர்; சீட்டாட்டத்தில் கெட்டிக்காரர்; எல்லோருடனும் கலகலப்பாகப் பழகக் கூடியவர்.

ஒரு நாள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆர்.எம். சுந்தரம், அய்.சி.எஸ். சும் மற்றுமிருவரும் கல்லூரி முதல்வரோடு சீட்டாடிக் கொண்டு இருந்தார்கள். அப்போது திரு. சுந்தரம்

''என்ன, கவுண்டர் சார்! நீங்கள் ஒரு மணி நேரம் பூசை செய்கிறீர்களாமே! என்னதான் வேண்டிக்கொள்ளுவீர்கள்?'' என்று கேட்டார்.

கல்லூரி முதல்வர் அமைதியாக -

''எங்கள் மக்களுக்குச் சுறுசுறுப்பைக் கொடு; வாழக் கற்றுக் கொடு; ஒற்றுமை உணர்வை வழங்கு; அழுக்காறு அற்றபோக்கைக் கற்பி; ஒருநிலை உணர்வை அருள்புரி என்று வேண்டிக்கொள்வேன்'' என்று பதில் சொன்னார்.

இப்படி வந்த பதிலைக் கேட்டு, நண்பர்கள் திகைத்தார்கள்.

''என்ன கிண்டலா பண்ணுகிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

''இல்லாதவற்றைக் கேட்கத்தானே இறை வழிபாடு. இருப்பதைக் கேட்பது வீண்தானே!

''எங்கள் மக்களுக்கு அழுக்காறு குறைந்து, ஒருவர் காலை ஒருவர் வாரிவிடுவதைக் கைவிட்டுவிட்டால், நாங்களும் உங்கள் அளவு வளர்ந்துவிடுவோம்.

''தான் வளர்வதில் காட்டுகிற முனைப்பைக் காட்டிலும் அடுத்தவனை மட்டந்தட்டுவதில் காட்டும் ஆர்வம், என்புருக்கி நோயாகத் தொல்லைப் படுத்துகிறதே!'' என்றார். என்ன சொல்வார்கள்?

என் அலுவல்கள்

அலுவல் பற்றி, மாவட்டக் கல்வி அலுவலர்க்கும் மாவட்ட ஆட்சிக்குழுத் தலைவருக்கும் அடிக்கடி தொடர்புகள் ஏற்படும். இருவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய நேரங்களும் அவ்வப்போது வரும்.

மாவட்ட ஆட்சிக்குழு நடத்தும் தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி ஆகியவற்றில் படிப்போர் வருகை அதிகம் ஆகும்போது, கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்.

அதற்கென ஒரு வாய்பாடு இருப்பினும் பள்ளி ஆய்வாளரின் ஆலோசனையின் பேரில், கல்வி அலுவலரின் பரிந்துரையைப் பெற்ற பிறகே கூடுதல் ஆசிரியரை நியமிக்கலாம்.

அதேபோல், மாவட்டக்கழக உயர்நிலைப் பள்ளிகளில் வருகை பெருகி, கூடுதல் ஆசிரியர் தேவைப்பட்டாலும், தேவைப்படும் ஆசிரியர்களை நியமிக்கக் கல்வி அலுவலரின் ஒப்புதல் தேவை.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். அது என்ன?

கூடுதலாக நியமிக்க வேண்டிய ஆசிரியர், என்ன பாடம் கற்பிக்கத் தகுதி உடையவராக இருக்கவேண்டும் என்பதையும் நன்கு கவனித்து முடிவு செய்யவேண்டும்.

இந்த முடிவு செய்யும் பொறுப்பு கல்வி அலுவலருடையதாகும்.

ஆங்கிலேயர்கள் ஆண்டபோது, மாவட்ட ஆட்சிக்குழுத் தலைவர்களாக இருந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள்? பெரும்பாலும் மாவட்டத்தின் வழி வழி பெரிய குடும்பங்களில் ஒருவராக இருப்பார். தம் வீட்டுப் பணத்தைச் செலவு செய்து, பொதுத் தொண்டு ஆற்றுபவர்களாக அநேகர் இருந்தனர்.

இருப்பினும் அவர்கள் விரும்பியபடி எல்லாம் செயல்பட அவர்களுக்கு உரிமை கொடுக்கவில்லை. சில வரம்புகளுக்குள்ளேயே செயல்படலாம்.

அதிகாரம் குவியக் குவிய, கட்டுப்பாடும் அதிகமாக வேண்டும்.

ஆண்டுக்கு ஒருமுறை, கோடை விடுமுறையின்போது மட்டுமே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களையோ, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையோ, ஊர் விட்டு ஊர் மாற்றலாம்.

அப்படிச் செய்வதற்கும் கட்டுப்பாடுகள் உண்டு. விதி உண்டு.

எந்த எந்தத் தொடக்கப்பள்ளி ஆசிரியரை எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குமாற்ற உத்தேசம் என்று பட்டியல் போட்டு முன்னதாகவே மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்புதல் கடமை. மாற்றத்திற்குரிய காரணத்தையும் பட்டியலில் காட்டவேண்டும்.

அலுவலர், உரிய ஆய்வாளர்களைக் கலந்து ஒரு நிலை எடுக்கவேண்டும்.

குறிப்பிட்ட ஒரு நாளில், ஆய்வாளர்கள் உடனிருக்க, மாவட்டக்குழுத் தலைவரும் கல்வி அலுவலரும் கூடிப்பேசி எவர் எவரை மாற்றலாம்; எவர் எவரை மாற்றக் கூடாதென்று முடிவு செய்வார்கள்.

அடுத்த பொது மாறுதலுக்கு முன்பு எவ்வூரிலாவது ஏதாவது எதிர்பாராத நெருக்கடி ஏற்பட்டு, அதனால் ஓர் ஆசிரியரை அங்கிருந்து மாற்ற நேரிட்டால் என்ன செய்வது?

மாவட்டக் குழுத் தலைவர், தமது பொறுப்பில் காரணங்களை எழுத்தில் பதிந்துவிட்டு, மாறுதலைச் செய்யலாம்.

அதை உடனே கல்வி அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் மாவட்டக் குழு நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் பட்டியலை, கல்வி அலுவலர் ஆயத்தம் செய்தல் கடமை. அப்படிச் செய்வதற்குமுன், ஆட்சிக் குழுத் தலைவரைக் கலந்து கொள்ள வேண்டும்.

இப்படி இருவரும் அவ்வப்போது இணைந்து செயல்பட வேண்டி இருந்தது.

எனவே, நான் சேலம் மாவட்டக் குழுவின் தலைவரோடு நல்லுறவை வளர்த்துக்கொள்ள முயன்றேன்.

சேலத்தில் பதவியேற்ற மறுநாளே, குழுத் தலைவர் ஊரில் இருக்கிறாரா என்று அறிய ஆள் அனுப்பினேன்.

போனவர் திரும்பி வந்தார். என்ன தகவலோடு வந்தார்?

''கவுண்டர் ஊரில் இல்லை. சுற்றுப் பயணம் போயிருக்கிறார். எப்போது திரும்பி வருவார் என்று அங்கு இருப்பவர்களுக்குத் தெரியாதாம்.''

அதனால் குழுத்தலைவரைக் காணும் என் முயற்சி பலிக்கவில்லை. பிறகு பார்த்துக்கொள்வோம் என்று தள்ளிப்போட்டேன்.

ஆட்சிக் குழுத் தலைவர் யார்? திரு. கே.ஏ. நாச்சியப்ப கவுண்டர். அவர் பரம்பரை ஜமீந்தார்; டாக்டர் சுப்பராயனுக்கு நெருங்கிய உறவினர்; திறமையான நிர்வாகி; நேர்மையான தலைவர்; எவ்விதக் ஒழுக்கக் குறையும் இல்லாத அரசியல்வாதி; காங்கிரசு இயக்கத்தைச் சேர்ந்தவர்.

அவர் சென்னை மாகாண சட்ட மன்றத்தில் பல்லாண்டுகள் ஒழுக்கமாய் உள்ள உறுப்பினராக இருந்தவர்.

அவர் காலத்தில், சட்டமன்றத்தில் கேள்வி கேட்பதில், திரு. நாச்சியப்பருக்கே முதல் இடம்.

அவர் கேட்ட அளவு கேள்விகள் கேட்டவர் இல்லை; துளைக்கும் கேள்வி கேட்டு அம்பலப் படுத்துவதில், அவருக்கு இணை அவர்தான்.

அவர் பெரிய ஊர் சுற்றி; நாளைக்கு நான்கு ஊர்களுக்காவது செல்வார். பொதுப் பணிகளை முடுக்கிவிடுவார்.

அவர் சேலத்திற்கு வரும்போது, நான் வெளியூர்ப் பயணத்தில் இருப்பேன்.

நான் சேலத்தில் தங்கும் நாள்களில், அவர் எங்காவது தொலைவில் இருப்பார்.

எனவே, நான் பெரிதும் விழைந்தும் நாச்சியப்பரைக் காணாமலே இரண்டு திங்கள்போல் ஓடிவிட்டன.

அது பெருந்தீமையாக உருவாகும் வேளை தற்செயலாக எங்களுக்குப் புரிய ஆரம்பித்தது.

18. தீமை விலகியது

நல்லவர் சின்னய்யா பிள்ளை

நான் சேலத்தில் பணி புரிந்தபோது, திரு. டி. சின்னய்யா பிள்ளை எம்.ஏ., பி.எல். என்ற புகழ்பெற்ற வழக்குரைஞர் அங்கு இருந்தார்.

அவர் என்னுடைய கல்லூரிக் காலந்தொட்டு நண்பரான திரு. டி.டி. அய்யாசாமிக்குச் சகலர்.

என் மனைவியும் நானும் அவரோடும் அவர் குடும்பத்தோடும் நட்புக் கொண்டோம். அது, பண்பாடுடையார் நட்பாக வளர்ந்தது; பயன் பட்டது.

திரு. சின்னய்யா பிள்ளையின் வீட்டில் ஒரு நன்மை விழா, அதற்கு நானும் என் மனைவியும் அழைக்கப்பட்டிருந்தோம்.

சடங்கு நடந்ததும் பத்து மணிக்குள் பகல் விருந்து அளித்தார்கள்.

நான் முதல் பந்தியில் உணவு அருந்திவிட்டு, அலுவலகத்திற்குக் காலத்தில் சென்றுவிட்டேன்.

நச்சு விதை

சில மணித் துளிகளுக்குப் பிறகு, அவ்விருந்திற்கு திரு. கே. ஏ. நாச்சியப்ப கவுண்டர் வந்தார்.

அவரும் வேறு சில நண்பர்களும் திரு. சின்னய்யாவுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் பற்றிப் பேச்சு வந்ததாம்.

''நாம், பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் என்று ஏதேதோ செய்து உயர்த்தப் பார்க்கிறோம். ஆனால், நம்மவர்களோ, 'தான் என்று முனைப்பாகவே இருக்கிறார்கள்; மற்றவர்களை மதிப்பதாகக் காணோம்.

''ஒன்று பாருங்கள் நம் மாவட்டத்திற்குப் புதிதாக ஒருவர், கல்வி அலுவலராக வந்திருக்கிறாராம். அப் பதவிக்கு நேரடியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டவராம்; வந்து இரண்டு மாதங்கள் - அறுபது நாள்கள் ஆகப்போகின்றன.

''இதுவரையில் மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவரை மதித்து, அவரை வந்து பார்க்கவில்லை.

''பெரியவர்கள் பாடுபட வேண்டியது. இளைஞர்கள், பலனைப் பெற்றுக் கொண்டு, மற்றவர்களை மதிக்காமல் போக வேண்டியது!

''அவர்களாக இருந்தால், அப்படி நடப்பார்களா?'' இப்படி ஒருவர் என்பேரில் புகார் கூறினார்.

திரு. நாச்சியப்பர் முகம் சிவந்தது. ''புதிதாக வந்திருப்பவர் பெரியார் ஈ.வெ.ரா.வுக்கு வேண்டியவராம். அதனால்தான் நம்மை மதிக்க வில்லையோ'' இப்படி நாச்சியப்பர் கேட்டார்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த சின்னய்யா, வாய் திறக்கவில்லை. ஆனால் விரைந்து செயல்பட்டார்.

அவசர அழைப்பு

என்னை உடனே அழைத்து வரும்படி கட்டளை இட்டுத் தம் காரையும் அனுப்பி வைத்தார்.

அலுவலகத்திலிருந்த என்னைத் தேடிக் கார் வந்தது. ஓட்டுநர் வந்தார்.

''அய்யா, கையோடு அழைத்து வரச் சொன்னார்கள். அய்ந்து நிமிடங்களில் திரும்பிவிடலாம்'' என்று ஓட்டுநர் பணிவோடு என்னிடம் சொன்னார்.

திரு. சின்னய்யாவின் பங்களாவிற்குச் சென்றேன். அய்ந்தே மணித்துளிகள் மட்டுமே தேவைப்பட்டது.

திரு. சின்னய்யா என்னை நாச்சியப்பருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அவரோடும் அவரது நண்பர்களோடும் உரையாடினேன். பின்னணி அறியாத நான், இயற்கையாகப் பேசினேன்.

வந்த மறுநாளே, நாச்சியப்பரைக் காண முயன்றதைச் சொன்னேன்.

அவரது அலுவலகத்தார், ஏனோ தானோ என்று பிடி கொடுக்காமல் பதில் கூறியதைக் கூறினேன்.

நாமக்கல், ராசிபுரம், மேட்டூர், தர்மபுரி, ஆத்தூர் எனப் பல ஊர்களுக்கு நான் செல்ல வேண்டி இருந்ததைச் சொல்லத் தொடங்கினேன்.

அங்கு நடத்திய நிகழ்ச்சிகளில், ஆங்காங்கே உள்ள பள்ளிக் கட்டடங்களின் நிலைபற்றிப் பேச்சுத் தொடர்ந்தது.

நான் ஓரூர் பயணத்தைச் சொல்லி முடிப்பதற்கு முன் நாச்சியப்பர், என் அடுத்த ஊர்ப் பயணத்தையும் நிகழ்ச்சியையும் பற்றித் தகவல் கொடுத்தார்.

அரசின் புலனாய்வுத் துறைகூட அவ்வளவு விழிப்பாகவும், விரைந்தும், விரிவாகவும் தகவல் கொடுக்காது.

அவ்வளவு தகவல்களை அவர் தெரிந்து வைத்து இருந்தார்.

ஒரு மணி நேரம்போல் மனந்திறந்து உரையாடினோம். தெளிவு பிறந்தது பிறகு நாச்சியப்பர்,

''நீங்கள் சுறுசுறுப்பாகச் சுற்றி வந்து பல பள்ளிகளைப் பார்த்து வந்ததையும், ஆங்காங்கே மாணவர் கூட்டங்களில் பேசி, கல்வியின் பால் நாட்டத்தைத் திருப்புவதைப் பற்றியும் பலரும் சொல்லக்கேட்டு மகிழ்ந்தேன்.

''என்னை மதித்து வந்து பார்க்கவில்லை என்பதை நண்பர் ஒருவர், நான்கு பேர்களுக்கு முன், சுட்டிக்காட்டியபோது, என் உள்ளம் புண் பட்டது.

''இதுவரை உங்கள் மேல் வெகுளி பொங்கியபடியே இருந்தது. இப்போது அது எவ்வளவு பெரிய தவறு என்பதை நான் நன்கு உணர்கிறேன்.

''மாவட்டப் பள்ளி ஆண்டு விழாக்களில் சிலவற்றிற்கு உங்களை அழைப்பார்கள். அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள். நானும் கலந்து கொள்கிறேன்; இருவரும் சேர்ந்து போவோம்'' என்று நாச்சியப்பர் முடித்தார்.

அப்போதுதான், திரு. சின்னய்யா அவர்கள் மகிழ்ச்சியுடன் பேசினார்.

''இரு நல்லவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்காமலே காழ்ப்புக் கொள்வது பல முறை நிகழக் கண்டிருக்கிறேன்.

''நீங்கள் இருவரும் கண்டு பேசிவிட்டால், தவறான மதிப்பீடு சீராகிவிடும் என்று நினைத்தேன். நான் நினைத்தது சரியாகி விட்டது'' என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

சின்னய்யாக்கள் தேவை

இது சிறிய நிகழ்ச்சி; அதில் புதைந்திருக்கும் பாடம் பெரிது.

சரியாகவோ, தவறாகவோ, இருவருக்குள், ஒருவரைப்பற்றி ஒருவர் புரிந்து கொள்ளாமல் போகலாம்.

அப்படிச் சிறு கீறல் ஏற்பட்டால், அதைக்கொண்டு பெரிய பகையை வளர்ப்பவர்கள் ஒரு வகையினர்.

பெரிய கசப்பு முளைத்தாலும் உரியவர்களை அழைத்து வைத்தோ, அவர்களிடம் தூது சென்றோ, இருவரிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவோர் மற்றோர் வகையினர்.

எந்தச் சமுதாயத்தில் பகைப்படுத்திக் கலகமூட்டுவோர் அதிகமோ, அச் சமுதாயம் சாண் ஏறினால் முழம் சறுக்கும்.

எந்தச் சமுதாயத்தில் மன்னிப்பைப் பயிரிட்டு, ஒற்றுமையை வளர்க்கும் அறவோர் பெருகியுள்ளனரோ, அந்தச் சமுதாயம் இடர்களை, புறங்கூறல்களை, முதுகில் குத்துதலைச் சமாளித்து முன்னேறிக் கொண்டிருக்கும்.

திரு. சின்னய்யா வைதீகர்; சாதிக் கலைப்பில் முனைப்புக் காட்டாதவர்.

இருப்பினும் என்னைப்பற்றி, எவரும் வீணாகத் தப்பெண்ணம் கொண்டு, பகைமை பாராட்டக்கூடாது என்ற பெரிய மனம் படைத்தவராக, பண்பாளராக நடந்து காட்டினார்.

அவர், 'காலத்தினாற் செய்த சிறிய உதவி, ஞாலத்தின் பெரிதாகப் பயன்பட்டது. எனக்கும் நாச்சியப்பருக்கும் இடையே ஆழமான நட்பை வளர்த்தது.

நம் சமுதாயத்தில் திரு. சின்னய்யா போன்று, பூசல்களைத் தீர்த்துவைக்கும் நல்லோர் மிக மிகச் சிலரே.

'நமக்கென்ன வந்தது'' என்று நழுவி விடுவோர் பலர்; காதும் மூக்கும் வைத்து மிகைப்படுத்தி, புறங்கூறி, கலகமூட்டி, பிழைப்போர், மகிழ்வோர் மிகப்பலர் ஆவார்.

இந்த நிலையில் மாற்றம் இல்லையா?

இருக்கிறது.

சென்ற நாற்பது ஆண்டுகளில், திரு. சின்னய்யா போன்ற நல்லவர்கள் நாட்டில் அருகி வருகின்றனர்.

கோள் சேர்க்கும் தமிழ் நாரதர்கள் பெருகி வருகின்றனர்.

தம் மக்கள் இழிவுபடுத்தப்படக் கண்டு, உள்ளூர மகிழும் தமிழர்கள் மிகுந்து பெருகி வருகின்றனர்.

பள்ளியை மூடு

நான் சேலத்தில் பொறுப்பேற்ற சில நாள்களில், உள்ளூரார், பொறுப்பாளர் அல்லாதார் சிலர் என்னிடம் வந்தனர்.

அருகில் எவரும் இல்லை என்பதை உறுதிபடுத்திக்கொண்டு-

''இந்த ஊரில், கோகுலநாத் இந்து உயர்நிலைப்பள்ளி ஒன்று நடக்கிறது. அது பாப்பாரப் பள்ளி; ஆசிரியர்கள் எல்லோரும் அவர்களே!''

''நம் பையன்களுக்கு இடம் கிடைப்பது அரிது. அதன் செயலாளரும் ஒரு அய்யங்கார். அப் பள்ளிக்குத் தற்காலிக அங்கீகாரமே உள்ளது. அதைப் புதுப்பிக்க வேண்டிய காலம் வந்துள்ளது. இப்போது ஒரு கை பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று காதைக் கடித்தார்கள்.

அவர்கள் சொன்னதைப் பொறுமையாகக் கேட்டேன். பிறகு,

''பலரிடம் நன்கொடை பெற்று, அந்தப் பள்ளிக்கூடம் தொடங்கப் பட்டதா?'' என்று கேட்டேன்.

''இல்லை; இன்றைய செயலாளரின் தந்தையாரே தம் சொத்தை எழுதி வைத்துத் தொடங்கினார். தமது ஒரே மகன் ஆயுட்காலச் செயலர் என்று எழுதி உள்ளார்'' என்ற பதில் கிடைத்தது.

மூடுவதால் கேடு

''அந்தப் பள்ளிக்கு அங்கீகாரத்தை நீடிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எங்கே போவார்கள்?'' என்று அடுத்துக் கேட்டேன்.

''சேலம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கே வருவார்கள்'' என்று பதில் தெளிவாகக் கிடைத்தது.

''அங்கே இடங்கள் காலியா? அங்கே படிப்பவர்களில் பெரும் பாலோர் எப் பிரிவைச் சேர்ந்தவர்கள்?'' என்று வினாக்களை எழுப்பினேன்.

''அங்கும் இட நெருக்கடிதான். தலைமை ஆசிரியர் ஓர் ஐயர் இருப்பினும், நகராட்சி உறுப்பினர்கள் நம்மவர்களே'' என்ற விஷ வேகமாக வந்தது.

அது எனக்கு வழி காட்டியது.

''கோகுலநாத் உயர்நிலைப் பள்ளிக்கு அங்கீகாரம் கிடைக்காவிட்டால், நூற்றுக்கணக்கான பார்ப்பனப் பிள்ளைகள் நகராட்சிப் பள்ளிக்கு வந்து நிற்பார்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும்படி, கல்வித்துறை ஆணையிடலாம்; அப்போது நம் மாணாக்கர் வெகுவாகப் பாதிக்கப்படலாம் அல்லவா?

''இருக்கிற பள்ளிக்கு இடையூறு செய்துகொண்டு, காலங் கடத்த வேண்டாம். அதற்குப் பதில், நான் இருக்கும்போதே, நகராட்சியின் சார்பிலோ, வேறு அமைப்புகளின் சார்பிலோ, சேலத்தில் இரண்டு மூன்று உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அனுமதி வாங்கிக் கொள்ளுங்கள்.

''அப்படிச் செய்துவிட்டால், சில ஆண்டுகளுக்காவது, பள்ளிகளில் இடப் பஞ்சம் ஏற்படாது; நம் பிள்ளைகள் அனைவருக்கும் இடம் கிடைத்துவிடும்'' என்று வழி சொன்னேன்.

தீமை செய்ய அஞ்சினேன்

அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

''என்ன? நாங்களெல்லாரும் துணை நிற்கிறபோதே, இப்படி அஞ்சு கிறீர்களே! துணிந்து அடிக்கவேண்டியதுதானே!'' என்று குறைபட்டார்கள்.

தீயது செய்ய, இருப்பதைக் கெடுக்க அன்றும் அஞ்சினேன்; பின்னரும் அஞ்சினேன்; இன்றும் அஞ்சுகிறேன். அதனால், என்னைப் பிள்ளைப் பூச்சியாகக் கருதுவோர் கருதட்டுமே!

சேலம் அன்பர்கள், மனக் குறையோடு சென்றார்கள்; பிற பேர்களிடம் நடந்ததைச் சொல்லிப் பொருமினார்கள்.

சூளுரை

சில நாள்கள் சென்றன; சென்னையில் இருந்து நீதிக்கட்சியைச் சேர்ந்த பிரமுகர் சேலத்திற்கு வந்தாராம்.

சேலத்தில் நடக்கவிருந்த நீதிக்கட்சி மாநாடு பற்றி உள்ளூர்ப் பெரியவர்களோடு கலந்து பேசிவிட்டு, அன்றே சென்னைக்குத் திரும்பினார்.

அவரை வழியனுப்ப, சேலம் சந்திப்பிற்குச் சென்றவர்களில், கோகுலநாத் உயர்நிலைப் பள்ளி பற்றி என்னிடம் பேசிய இருவர் இருந்தார்கள்.

அவர்கள் என்னோடு பேசிய நிகழ்ச்சியைச் சொல்லி, குறைபட்டார்களாம்.

சென்னையில் இருந்து வந்தவர் வெகுளி; 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற அவசரப் போக்கினர்.

என் மேல் அவர்கள் சொல்லிய புகாரைக் கேட்டுவிட்டு-

''சென்னைக்குத் திரும்பியதும் பொதுக்கல்வி இயக்குநர், திரு. மெவரல் ஸ்டேதமிடம் இதைச் சொல்லுகிறேன். நெ.து.சு.க்கு 'பிரபேசன்' முடியவில்லை. அதை முறித்து அவரை வீட்டுக்கு அனுப்பிவிட ஏற்பாடு செய்து விடுகிறேன்'' என்று அந்தப் பிரமுகர் அவர்களிடம் உறுமினாராம்.

நீதிக் கட்சியின் ஊதுகுழல்களில் ஒன்றாகிய அவர், என்னிடம் பேசாமலே என்னைத் தொலைத்துக்கட்ட வாக்குக் கொடுத்து விட்டார்.

இதுதான் தமிழரின் தனித்தன்மை; அன்றைக்கு இருந்ததை விட இன்று வளர்ந்துள்ள பொல்லாத நோய்.

அப்படி அவர் வாக்குறுதி கொடுத்தபோது, சேலம் - சூரமங்கலம் டாக்டர் நமச்சிவாயம் என்னும் நல்லவர் தற்செயலாக அங்கு இருந்தார்.

அவர் எனது நண்பர். எனவே, பதை பதைத்தார்; அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் காத்திருந்தார்.

அடுத்த நாள் காலை, நமச்சிவாயம் என்னைத் தேடி வந்தார். தயங்கித் தயங்கி முன்னால் இரவு, சேலம் இருப்புப்பாதை சந்திப்பில் நடந்ததைச் சொன்னார். புகார் செய்தவர்கள் பெயர்களைக் கூறினார். சூளுரைத்த பெரியவர் பெயரைச் சொன்னார். சொல்லி விட்டு,

''அவர் ஒரு உளறுவாய், வெகுளி! பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் இயக்குநரிடம் விரைந்து புகார் செய்துவிட்டால் தங்களுக்கு ஏதாவது தீங்கு நேரிடக்கூடுமே என்று அஞ்சுகிறேன்.

''உடனே பெரியாருக்கோ, அண்ணன் குருசாமிக்கோ தகவல் கொடுத்து, தடுப்பு முயற்சியை மேற்கொள்ளச் செய்யுங்கள்'' என்று நமச்சிவாயம் கூறியபோது, அவர் உணர்ச்சி வசப்பட்டார். அவர் கண்களில் நீர் தளும்பிற்று.

''நன்றிங்க! இதைப்பற்றிக் கவலைப்படாதீங்க! யோசித்து முடிவு செய்கிறேன்'' என்று ஆறுதல் கூறி நமச்சிவாயத்தை அனுப்பி வைத்தேன்.

நமச்சிவாயம் குறிப்பிட்டவர்கள், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அரும்பாடு பட்டவர்களே! அந்த இயக்கத்தில் முன்னணியில் இருந்தவர்களே!

விளையாட்டுப் பிள்ளைகளைப் போன்று, அடிக்கடி, தாங்கள் கட்டிய 'வீடுகளை' ஆத்திரத்தில் அழித்துவிட்டுக் கைகளைப் பிசைந்து கொண்டு இருப்பார்கள்.

இப்படியும் சில 'தியாகிகள்'

நான் அது பற்றிக் கவலைப்படவில்லை. பெரியாருக்கோ குருசாமியாருக்கோ நான் எதுவும் எழுதவில்லை.

19. மாணவரின் மாண்பு

கல்வியில் கடைசி மாவட்டம்

அன்றைய சேலம் மாவட்டம், பரப்பில் மிகப் பெரியது. இன்று தருமபுரி மாவட்டமாக இருக்கும் பகுதியும் சேலத்தைச் சேர்ந்திருந்தது.

இன்று இரு மாவட்டங்களிலுமாக இருநூற்று அய்ம்பது உயர்நிலைப் பள்ளிகள் போல் உள்ளன.

அன்று அவ்வளவு பெரிய மாவட்டத்தில் பன்னிரண்டு உயர் நிலைப் பள்ளிகள் மட்டுமே இருந்தன.

தொடக்கப் பள்ளிகள்கூட இல்லாத ஊர்கள் பலநூறு ஆகும்.

எழுத்தறிவில் சென்னை மாகாணத்தில் கடைசி இடத்திலிருந்த பெருமை சேலம் மாவட்டத்திற்கு உரியது.

அப்படிப்பட்ட மிகப் பின் தங்கிய மாவட்டத்தின் கல்விப் பொறுப்பு என் கைகளில் ஒப்படைக்கப்பட்டது.

எனக்கு அது ஓர் அறைகூவலாகத் தோன்றிற்று. அந்த அறை கூவலைச் சமாளிக்கும் வாய்ப்புகள் எனக்குத் தாராளமாகத் தடையின்றிக் கிடைத்தன.

அப்போதையை உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களில் பெரும்பாலோர் ஜாம்பவான்கள்; பொறுப்பு உணர்ச்சி இல்லாதவர் என்று எவரையும் சுட்டிக் காட்ட முடியாது.

ஆசிரியர்கள் எப்படிப்பட்டவர்கள்?

பெரும்பாலும் நல்லுணர்ச்சிப் பிழம்புகள்; தாய்நாட்டுப் பற்றால் உந்தப்பட்டவர்கள் சிலர்; சமுதாயத்தைத் தூக்கி நிறுத்தத் துடித்தவர்கள் பலர்; வேலை தெரியாதவர் என்று பிறர் குற்றங்காணக்கூடாது என்ற குறிக்கோளோடு செயல்பட்டோர் பலர் ஆவார்.

வேதநாயகம், இலட்சுமண செட்டியார், பி.ஆர். சுப்ரமணிய பிள்ளை, ஈ. சண்முகம்பிள்ளை, கிருஷ்ணசாஸ்திரி, சாமிதாஸ், நாராயணசாமி அய்யர், சேஷகிரிராவ் என்ற தலைமை ஆசிரியர் பெயர்கள் பல்லாயிரக்கணக்கானவர்களிடம் பரிவினைப் பொங்க வைக்கும்.

மாந்தர் தேட வேண்டியவற்றுள் பணத்திலும் உயர்ந்தவை பல என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

''மகான்கள் என்று சொல்வதற்கு இல்லா விட்டாலும் எவரையும் கண்டு வெட்கப்படுவதற்கு இல்லாத வாழ்க்கை வாழ முயன்றார்கள். அதில் அவர்கள் பெரிதும் வெற்றி பெற்றார்கள்.

இவர்களுக்கு நான் புதியவன்.

எனினும், எவரும் என்னிடம் ஒத்துழையாமை வழியைக் காட்ட வில்லை. நானும் எவரையும் கடிந்து கொள்ள நேரவில்லை.

ஆசிரிய சமுதாயத்தின் ஒத்துழைப்புக் கிடைத்தது போன்றே, பொது மக்கள், அவர்களுடைய பல கட்சித் தலைவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் எனக்குத் தாராளமாகக் கிடைத்தது.

முதல் பேச்சு

நான் முதன் முதலாகப் பார்வையிட்ட உயர்நிலைப் பள்ளி நாமக்கல் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியாகும்.

அன்று நாமக்கல் வடக்கு உயர்நிலைப் பள்ளி கிடையாது.

போர் ஆதரவு உரை ஆற்றுவதற்காகத் திடீரென அப் பள்ளிக்குச் சென்றேன்.

அந்தக் காலத்து நெடுஞ்சாலைகள் இன்றைக்கு இருப்பது போன்று, அவ்வளவு நல்ல நிலையில் இல்லை.

குழிகள் நிறைந்திருக்கும்; சேலத்தில் இருந்து நாமக்கல் போய்ச் சேருவதற்குள் முதுகு வலி எடுத்துவிடும்.

அந்தக் காலத்தில் பொதுத்துறைப் பேருந்துகள் இல்லை. எல்லாத் தடங்களிலும் தனியார் பேருந்துகளே ஓடின.

ஆங்கிலேயர் ஆண்டபோது, மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குக் கூடப் பெரும் மதிப்பு இருந்தது.

சேலம் மாவட்ட மக்கள் கல்வியை நாடா விட்டாலும் கல்வியை மதித்தார்கள்; கல்வியாளர்களை மதித்தார்கள்.

எனவே, முன்கூட்டியே சொல்லி அனுப்பிவிட்டால் கல்வி அலுவலருக்கும் பேருந்துகளில் முன் வரிசையில் இடம் ஒதுக்கி வைப்பார்கள்.

அன்று ஏறு என உலவிய மாவட்டக் கல்வி அலுவலர்களை, பிற்காலத்தவர்கள் சுண்டெலிகளாக்கி விட்டார்களே என்று எண்ணிக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

நாமக்கல் போய்ச் சேர்ந்ததும் பயணிகள் மாளிகைக்குச் சென்றேன்.

பெட்டி பேழைகளையும் கடைநிலை ஊழியரையும் அங்கே விட்டு விட்டு, அருகில் இருந்த உயர்நிலைப் பள்ளிக்குத் தனியாகவே நடந்து சென்றேன்.

அப்போது முற்பகல்

பள்ளியின் நுழைவாயிலில், இரண்டொருவர் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து,

''தலைமை ஆசிரியர் அறை எங்கே, தம்பி?'' என்று கேட்டேன்.

நின்று கொண்டிருந்த இருவரும் என்னைவிட ஒரு சாண் உயரமாக, கம்பீரமாக இருந்தார்கள்.

அவர்களைத் தம்பி என்று அழைத்ததை அவர்கள் விரும்பவில்லை போலும்.

நான் அலுவலக உடையில் இல்லை; வேட்டி, சிப்பா அணிந்து கொண்டிருந்தேன். அதோடு, அந்த முப்பத்து இரண்டாம் வயதிலும் குழந்தை முகம் கொண்டவனாக இருந்தேன்.

ஒன்பது ஆண்டுகால அரசு ஊழியத்தால், அதன் உயிரான தொல்லைகளால், தார்குச்சுகளால் முகத்தில் கோடுகள் தோன்றாமல் இருந்தது வியப்பே!

என்னை எவனோ ஓர் இளைஞன் என்று எண்ணிய இருவரும் மிக அலட்சியத்தோடு, மையக் கட்டடத்தைச் சுட்டிக்காட்டி ''அதற்குள் சென்று பாருங்கள்'' என்றார்கள்.

நான் எரிச்சல் கொள்ளவில்லை. காட்டிய இடத்திற்குச் சென்றேன்.

தலைமை ஆசிரியர் அறை கண்ணில் பட்டது. கதவை மெதுவாகத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தேன்.

தலைமை ஆசிரியருக்கு என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

தலைமை ஆசிரியர் இலட்சுமண செட்டியார், ஆறடிக்கு மேல் உயரமானவர்; கச்சிதமாக உடை உடுத்தியிருந்தார்.

பள்ளிக்கு எப்படியும் போகலாம் என்ற விளையாட்டுப் பிள்ளைத் தனம் அக் காலத்தவருக்குக் கிடையாது.

தலைமை ஆசிரியர், என்னை மிகுந்த மரியாதையோடு மட்டு மல்லாது அன்போடும் வரவேற்றார்.

பிற்பகல், மாணவர் கூட்டத்தில், 'போர் ஆதரவு' பற்றிப் பேச விரும்புவதாகக் கூறினேன்.

உடனே, சுற்றறிக்கை அனுப்பினார்.

மாலை நான்கு மணிக்குக் கூட்டம் தொடங்கியது; கூட்டத்துக்குத் தலைமை ஆசிரியர் தலைமை ஏற்றார்.

'முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்ற வழக்கு நமக்குத் தெரியும்.

நான் எதைப்பற்றிப் பேச அழைக்கப்பட்டாலும் கல்வியின் தேவையை, சிறப்பைப் பற்றிப் பேசாமல் இருப்பதில்லை.

''வட்ட வரை படத்தில்கூட, நெய்யாடுபாக்கம் என்ற ஊரின் பெயர் குறிக்கப்படவில்லை.

''அவ்வளவு சிற்றூரில் பிறந்த நான், காந்தியக் கவிஞராம் இராம லிங்கம் பிள்ளை வாழும் நாமக்கல்லில் வந்து பேச எப்படித் தகுதி பெற்றேன்?

''நான் பெற்ற கல்வி எனக்கு அந்தத் தகுதியைத் தந்தது.

''கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு? இது எல்லோர்க்கும் பொது விதி; உங்களுக்கும் பொருத்தமானது.

''ஆகவே, கேடில் விழுச்செல்வமாம் கல்வியைத் தேடுங்கள்; ஒரு மனப்பட்டுத் தேடுங்கள்! எல்லோர்க்கும் படிப்பு வரும் என்ற நம்பிக்கையுடன் தேடுங்கள்.

''கல்வியில் ஈடுபட்டுள்ள உங்களுக்குக் கவனச் சிதைவு ஏற்படக் கூடாது.

''உலகப்போர், நாட்டுக் கிளர்ச்சிகள், ஊர்ப் போட்டிகளைச் சமாளிக்க வயது வந்தோர் உள்ளனர்.

''அவ் விவகாரங்களைப் பெரியவர்களுக்கு விட்டு விடுங்கள்.

''அவர்களிடையே எதிரும் புதிருமான கருத்துகள் உள்ளது தெரியும். முதிர்ந்தவர்கள் வாதாடி, மக்களுக்கு நல்ல வழி காட்டட்டும்.

''நீங்கள் அனைவரும் ஒவ்வோர் ஆண்டும் தேர்ச்சி பெறும் அளவு அக்கறையோடும் படிப்பது உங்களுடைய முதற் கடமை; அதுவே நாட்டுத் தொண்டு; சமுதாயத் தொண்டு.

''மாற்றம் உலகத்தின் இயற்கை; உணவு தானியங்கள் கூட புதிதாகப் பயிராக்கப்படுகின்றன.

''நான் சிறுவனாக இருந்தபோது எங்களூரில் 'வரகு' பயிராகும். இப்போது வரகு பயிரிடுவது இல்லை; எல்லோருமே நெற்பயிர் இடுகிறார்கள்.

''நெல்லிலும் புதுவகை கண்டுபிடித்துப் பரப்புகிறார்கள்.

''சேலம் மாவட்டத்துப் பெரியவர்கள், எதிர்காலச் சமுதாயம் எந்த தன்மையில் அமையவேண்டும் என்பதைக் காட்டி உள்ளார்கள். அவர்கள் சொல்லால் முழங்குவதற்குப் பதில், செயலால் வழி காட்டியுள்ளார்கள்.

''டாக்டர் சுப்பராயன், பிராமண அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டதையே குறிக்கிறேன்.

''மூதறிஞர் இராஜாஜி, மகாத்மாகாந்தி அவர்களின் சம்பந்தி ஆனதை உங்கள் முன் வைக்கிறேன்.

''வேறு போராட்டங்களில் ஈடுபட்டுள்ள அவர்கள், தனி வாழ்க்கை முறை பற்றி, பன்னிப் பன்னிப் பேசவேண்டுமா? நடந்து காட்டியது போதாதா?

''ஏன் இவற்றை இங்கே சொல்லுகிறேன்? நாம் விரும்புகிற அரசியல் விடுதலை விரைவில் வர, நமக்குள் ஒற்றுமை விரைவாகப் பரவ வேண்டும். அதற்கு இத்தகைய சாதிக்கலப்புத் திருமணங்கள் உதவுகின்றன.

''விடுதலை பெற்ற பிற்கு, அதைக் காக்க, அதிகப்படியான விழிப்பும் பற்றும் ஒற்றுமையும் தேவைப்படும்.

''ஆண்டுக்கு ஆண்டு ஊருக்கு ஒருவர், கலப்புத் திருமணம் செய்துகொண்டே வந்தால், சாதி உணர்வு சுக்குநூறான வாளாகி விடும்; மக்கள் இடையே ஒற்றுமை இயல்பாக வளரும்.

''இது நீண்டகாலத் திட்டம்; குறுகிய காலத்திட்டம் என்ன?

''அச்சத்தால், பீதியால் வழக்கத்திற்கு அதிகமாக, உணவுப் பொருள்களைப் பதுக்கி வைக்காதீர்கள்.

''பதுக்கினால், துன்பப்படப் போகிறவர் எவர்? நம் பங்காளிகள்; நம் தாயாதிகள்; நம் நண்பர்கள்; நமக்காக உழைப்போர் ஆகிய நம்மவர்களே.

''வேண்டியவர்கள் எல்லாரும் நசித்துப் போய்விட்டால் நாம் யாரோடு வாழப் போகிறோம்? அயலார்களை அழைத்து வந்து குடியேற்றப் போகிறோமா? 'வாழில் முப்பது கோடியும் வாழ்வோம்'', என்று பாரதி கட்டளையிட்டார். அதை மீறக்கூடாது.

''வதந்திகளைப் பரப்பாதீர். உச்சிமீது வானிடிந்து வீழ்வதே ஆனாலும் முன் கூட்டி, கிலி பிடித்து நடுங்குவதால் அதைத் தடுத்துவிட முடியுமா?

''முடியாது.

''ஆகவே, வருவது வரட்டும்; அப்போது சமாளிப்போம் என்ற அச்சமற்ற உறுதியோடு, உங்கள் பணியில் கருத்தாயிருங்கள்'' இந்தப் பாணியில் உரை ஆற்றினேன். என்னுடைய உரை ஒரு மணிக்கு மேல் நீண்டுவிட்டது.

தலைமை ஆசிரியர் பொருத்தமான முடிவுரை கூறி முடித்தார்.

மாணவரின் மாண்பு

நன்றி கூறுபவர் பெயரைச் சொல்லும் வேளை, அவையிலிருந்த ஒருவர், தலைமை ஆசிரியரிடம் விரைந்து வந்தார்.

ஒரு மணித்துளி தாம் பேச விரும்புவதாகப் பணிவுடன் கூறினார்.

தலைமை ஆசிரியர் தயங்கினார். நான் குறுக்கிட்டேன்.

''பேசவிடுங்கள்; மூன்று மணித்துளிகளில் முடித்துவிடு தம்பி!'' என்றேன்.

இளைஞர் பேசினார்; அவர் அப் பள்ளி மாணவர். அவர் எவர் பேச்சையும் ஒட்டியோ, வெட்டியோ பேசவில்லை.

முற்பகல் என்னைப் பொருட்படுத்தாமல் பதில் கூறிய சிறிய நிகழ்ச்சியைப் பணிவுடன் வெளிப்படுத்தினார்.

''பக்கத்துப் பள்ளிக்கூட மாணவர் என்று எண்ணி, அப்படிப் பதில் கூறியதற்காக வெட்கப்படுகிறேன். இவ்வளவு பெரிய முற்போக்குச் சிந்தனையாளர் என்னை மன்னித்து விடும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்'' என்று சுருக்கமாகவே முடித்தார்.

''கொங்கு நாட்டவர்கள் சூதுவாது தெரியாதவர்கள்; சற்று முன் கோபிகள்; நெற்றியில் உட்காரும் ஈக்குப் புத்தி புகட்ட நெற்றியைக்கூ வெட்டிவிடுவார்கள்'' என்று சிலர் சொல்லிக் கேள்விப்பட்டது உண்டு.

முந்திய பாதி உண்மை என்பதை அந்த நிகழ்ச்சி மெய்ப்பித்து விட்டது. அவ் விளைஞர், ஏதும் அறியாதவர்போல, நழுவி இருக்கலாம். பிற பகுதி தமிழர்கள் அவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டு இருப்பார்கள்.

அந்த வெள்ளை உள்ளம் இக் காலத்திலும் கொங்கு நாட்டில் செல்வமாக விளங்குமென்று நம்புகிறேன்.

தென்னிந்திய ஆசிரியர் ஒன்றியம்

அந்தக்காலத்தில், சென்னை மாகாண ஆசிரியர்கள், 'தென்னிந்திய ஆசிரியர் ஒன்றியம்' என்ற அமைப்பின்கீழ், சிறப்பாக இயங்கி வந்தார்கள்.

அவ் வமைப்பு, ஆசிரியர்களின் உரிமை பற்றி மட்டும் பேசவில்லை. அவர்கள் சரியானபடி கடமை ஆற்றவேண்டும் என்பதையும் அவ்வப்போது நினைவு படுத்தத் தவறியது இல்லை. அதற்குரிய சிறப்பாக வழி காட்டிற்று.

அது ஆசிரியர்களுக்குத் தொழிற் சங்கமாக இயங்கிய அளவு, அதே ஆர்வத்தோடு, கல்விக் காவலர் நிலையமாகவும் செயல் பட்டது.

பாடத் திட்டங்களில் எவற்றைச் சேர்க்கலாம்? எவ்வளவு சேர்க்கலாம்?

அவற்றை எந்தெந்த முறைகளில் கற்பிக்கலாம்? அவற்றிற்கு எத்தகைய சூழ்நிலை தேவை?

என்னென்ன துணைக் கருவிகள் வேண்டும்? பள்ளிக்கூடங்கள் எத்தனை நாள்கள் வேலை செய்யலாம்?

இத்தகையவை பற்றி அந்த அமைப்பு கருத்துத் தெரிவிக்கும்; தக்காரைக் கொண்டு ஆலோசிக்க வைத்த பின் தெரிவிக்கும்; நாம் தெரிவித்த கருத்தைச் செயல்படுத்தவும் முற்படும்.

எனவே, ஆசிரியர் ஒன்றியம் பெரிதும் தன்னலம் இல்லாத கல்வி வல்லுநர் அணியாகச் செயல்பட்டது.

பிற்காலத்தில் முதல் அமைச்சர் இராஜாஜி குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தபோது இந்த அமைப்பு, நாடறிய அதைக் கண்டித்து பின்னர் வேலை நாள்களை அதிகப்படுத்தும் ஆலோசனையை எதிர்த்தது.

'நீங்கள் உங்கள் உரிமைகளைப்பற்றிப் பேசுங்கள்; வேண்டிய சலுகைகளைக் கேளுங்கள். முடிந்த அளவு தருகிறோம். கல்வி பற்றிய மற்ற விவகாரங்களில் சும்மா இருங்கள்'' என்று கூறும் குறுகிய கண்படைத்தவர்கள், ஆங்கிலேய ஆட்சியாளர்களில் இல்லை; அக்கால அமைச்சில் இல்லை; அதிகாரிகளிலும் இல்லை.

மாகாணம் முழுமைக்கும் தென்னிந்திய ஆசிரியர் ஒன்றியம் இருந்ததே போன்று மாவட்டந்தோறும் 'ஆசிரியர் கழகம்', 'டீச்சர்ஸ் கிளப்' இருந்தது. சேய்களாகிய அவை, தாயின் பாணியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டன.

தமிழா? ஆங்கிலமா?

1944 ஆம் ஆண்டு, மே திங்கள், சேலம் மாவட்ட 'ஆசிரியர் கழகம்' வழக்கமான ஆண்டு மாநாட்டை நடத்தியது.

திருச்சி தேசியக் கல்லூரி, ஆங்கிலப் பேராசிரியர் திரு. இராமய்யர் தலைமை ஏற்றார். புதிதாக வந்த அலுவலராகிய என்னை மாநாட்டைத் தொடங்கி வைக்க அழைத்தார்கள். கடமை பற்றி அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டேன்.

வரவேற்புரை ஆங்கிலத்தில்; தலைமை ஏற்கவேண்டிக் கொள்ளல் ஆங்கிலத்தில்; வாழ்த்துச் செய்திகள் ஆங்கிலத்தில்.

பிறகு, மாநாட்டைத் தொடங்கி வைக்க அழைக்கப்பட்டேன்.

நான் தமிழில் தொடங்கினேன்; தமிழில் தொடர்ந்து உரை ஆற்றினேன்; தமிழிலேயே முடித்தேன்.

நாற்பத்து ஐந்து மணித்துளிகளைக் கொள்ளை கொண்ட என் உரையில், ஆங்கிலச் சொல் ஒன்றுகூட நுழையவில்லை. தமிழ் என்ற பெயரால், மணிப்பிரவாளம் கூத்தாடவில்லை.

அவையோரில் நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று; மற்றவர்களுக்கு ஏமாற்றம்; எரிச்சல்; ஏதோ தீட்டுப் பட்டுப்போன உணர்வு; இதற்கு நான் என்ன செய்ய?

திரு.வி. கலியாண சுந்தரனாரின் உரைகளையும் நூல்களையும் ஆழ்ந்து படித்ததால் நான் பெற்ற பலன் அது.

பகல் உணவு வேளை சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமி கவுண்டரின் மைத்துனர் திரு. அருணாசலம் என்பவர் வேறு இரு ஆசிரியர்களோடு என்னிடம் தூது வந்தார்.

''வாடிய பயிருக்கு வான் மழைபோல் நல்ல தமிழ் பொழிவைப் பெற்றோம். எங்களுக்குள்ள மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

''ஆனால், சில பொறாமைக்காரர்கள், 'நீங்கள் ஆங்கிலம் கற்க வில்லை; தமிழில் தான் பட்டம் பெற்றிருப்பீர்கள்' என்று சொல்லக் கேட்டு நாங்கள் பொங்குகிறோம். மாநாட்டுக்காரர்களோடு பேசினோம். நீங்கள் மாலை மீண்டும் பேசலாம்; 'ஆங்கிலத்தில் பேசட்டும்' என்று வாய்ப்பை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம். தயவு செய்து சிறிது நேரமாகிலும் ஆங்கிலத்தில் உரையாற்றுங்கள்''

நான் மறுத்துவிட்டேன். ஆங்கில உரையாற்றி என்னை உயர்த்திக் கொள்வதில் உள்ள பற்றைக் காட்டிலும் தமிழில் பேசி, தமிழரின் தன்னம்பிக்கையை வளர்ப்பதே என் குறிக்கோள் என்று கூறி அனுப்பினேன்.

20. நாச்சியப்பர் மதிப்பீட்டில் உயர்ந்தேன்

தெலுங்கில் தேர்வு

சீகாகுளத்தில் பணி புரிந்தபோது, நான் தெலுங்கு மொழித் தேர்வுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன்; உரிய காலத்தில் தேர்வு எழுதினேன்; ஆனால் வெற்றி பெறவில்லை.

நான் என் வாழ்க்கையில் தேர்வில் தோற்றது அதுதான் முதல் முறையாகும்.

சேலம் சென்ற பிறகு மீண்டும்தெலுங்கு மொழித் தேர்வு எழுதினேன். எழுத்துத்தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றேன்.

அப்புறம் பேச்சுத்தேர்வுக்கு அழைக்கப்பட்டேன். அந்தத் தேர்வு கோயம்புத்தூரில் நடந்தது.

நடத்தியவர்கள் எவர்?

சென்னை பணித்தேர்வுக்குழு உறுப்பினர் திரு. அனந்தாச்சாரி தேர்வுக்குழுவின் தலைவர். வேளாண்மைத்துறை துணை இயக்குநரும் - புகழ்பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரரும் ஆகிய திரு. இராமசாமி நாயுடு உறுப்பினர்.

வாய்வழி கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதில்கள் தந்தேன். தயங்காமல் தெளிவாகப் பதில் அளித்தேன்.

இருவருடைய நிறைவும் முகங்களால் வெளிப்பட்டது. தேர்வு பெற்றுவிடுவேன் என்ற நம்பிக்கையோடு ஊருக்குத் திரும்பினேன்.

அன்று மாலை கோவை புகைவண்டி நிலையத்தில் வண்டிக்காகக் காத்திருந்தேன். கோவை மண்டலக் கல்வி ஆய்வாளர் திரு. வி. ஆர். அரங்கநாத முதலியாரின் தனி உதவியாளர், என்னிடம் விரைந்து வந்தார்.

''தெலுங்குத் தேர்வில் தேர்ச்சி பெற்று விட்டீர்களென்று சொல்லி விட்டு வரும்படி, அய்யா சொல்லி அனுப்பினார்'' என்று உற்சாகத்துடன் கூறினார்.

''இதற்குள் அய்யாவுக்கு எப்படித் தெரியும்'' என்று கேட்டேன்.

''கோவை காஸ்மாபாலிடன் கிளப்பில் திரு. சி. இராமசாமி நாயுடுவைக் கண்டாராம். அவரே, வலிய அந்தத் தகவலைக் கூறினாராம். அய்யாவுக்கு அளவற்ற மகிழ்ச்சி. உடனே என்னை அனுப்பி வைத்தார்'' என்று உதவியாளர் கூறக் கேட்டு மகிழ்ந்தேன்.

சில வாரங்களில் முடிவு வெளி ஆயிற்று. பேச்சுத் தேர்வில் தோல்வி என்று அறிவித்திருந்தார்கள்.

பணித் தேர்வுக் குழுவிற்கு எழுதினேன்; மறுபார்வை பார்க்கும்படி வேண்டினேன். ஒரு மதிப்பெண் குறைவில் தோற்று விட்டதாகப் பதில் வந்தது. அப்பப்பா, அப்போ நான் பட்ட வேதனையை எப்படிச் சொல்ல!

அத்தேர்வில் பெற்றி பெற்றால்தான் என் பதவி உறுதி செய்யப்படும்.

அதுவும் இரண்டு ஆண்டிற்குள் தேர்ச்சி பெற்றே ஆக வேண்டும்.

ஓராண்டு முடியச் சில திங்கள் பாக்கி இருக்கையில், இப்படி ஓர் எதிர்பாராத தோல்வி ஏற்பட்டது.

திரு.வி. ஆர் அரங்கநாத முதலியார் கைகொடுத்துக் காத்தார். நெ.து. சுந்தரவடிவேலுவைக் காலத்திற்கு முந்தி மாற்றாதிருந்தால், படிப்பிற்கு இடையூறு ஏற்பட்டு இராது; ஏற்கெனவே வெற்றி பெற்றிருப்பார்; மறுதல் தேர்ச்சியைப் பாதித்துள்ளது.

அவர் போல் ஆதரவுப் பணியில் முதல் இடம் பெறும் வகையில் நிலைமாகத் தொண்டாற்றி உள்ளார். எனவே அடுத்த தேர்வு எழுத வாய்ப்பு கொடுப்பதோடு, அம்முடிவு வரும் வரை அவரது

'பிரபேசனை' நீடிக்கவும் என்று, மண்டல ஆய்வாளர், திரு.வி. ஆர். அரங்கநாதன் இயக்குநருக்குப் பரிந்துரைத்தார். அது பலித்தது.

மீண்டும், உரிய காலத்தில், பேச்சுத் தேர்வுக்குச் சென்றேன். அதே கோவையில் நடந்தது. முதன் முறையும் சரி, இரண்டாம் முறையும் சரி, திரு.வி.ஆர். அரங்கநாத முதலியார் அவர்களின் பங்களாவில்தான் தங்கினேன்.

அவரே அங்குத் தங்க அழைத்தார்; அவர் விருந்தோம்பலில் சிறந்தவர்.

தேர்வுக்குப் புறப்படும்போது, ''தெம்பாகப் போங்கள்; சென்ற முறை ஏதோ சூது நடந்திருக்கிறது'' என்று ஊக்கப்படுத்தியும் அனுப்பினார்.

டி.எம். நாராயணசாமிப் பிள்ளை

இம் முறை, பழைய இராமசாமி நாயுடு இருந்தார். அவர் தெலுங்கு மொழிப் புலமைக்காக அழைக்கப்பட்டவர். தேர்வுக் குழுவின் சார்பில் திரு. அனந்தாச்சாரியார் வரவில்லை. அவருக்குப் பதில் திரு.டி.எம். நாராயணசாமி பிள்ளை வந்து இருந்தார்.

என்னைப் பேட்டிக்கு அழைத்தார்கள் உட்காரச் சொன்னார்கள்.

அப்படி அமர்ந்ததும் திரு. பிள்ளை விடுவிடு என்று தாக்கினார்.

''செய்ய வேண்டியதை அவ்வப்போது செய்வதில்லை. கடை நேரம் வரை தள்ளிப் போடுவது; அந்தக் கோளாறு, உம் 'பிரபேசனை' நீடிப்பிற்கு ஆளாக்கி விட்டது. இம் முறை தேர்வில் தவறினால் வேலை போய் விடும்.

''என்ன அலுவலர் அய்யா நீர்? விழிப்பாக, சொந்த விவகாரங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டாமா?'' என்று பொரிந்து கொட்டினார்.

''நான் முதல் தலைமுறை அரசு அலுவலன்; எனவே, பிழைப்பிற்கு முன்னுரிமை கொடுக்காமல், பணிக்கு முன்னுரிமை கொடுத்து ஏமாறிவிட்டேன், அய்யா'' என்று அடக்கத்தோடு பதில் அளித்தேன். அப்புறம்?

திரு. இராமசாமி நாயுடு பேச்சுத் தேர்வு நடத்தினார். விரிவாகவே நடத்தினார். பிறகு வெளியே வந்தேன்,

சில நாள்களுக்குப் பிறகு முடிவு வெளியிட்டபோது, நான் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

முந்திய முறை நடந்தது என்ன?

''என் பதில்கள் முதல் தரமாகவே இருந்ததாக, என் மொழி அறிவைச் சோதிக்க அழைக்கப்பட்ட திரு. இராமசாமி நாயுடு கூறினாராம். திரு. அனந்தாச்சாரி ஒப்புக்கொண்டார்.

''முதல் வகுப்பு மதிப்பெண் தரலாம் என்று இராமசாமி சொல்ல, இத்தேர்வில், வகுப்பு முறை கிடையாது; எனவே, வெற்றிக்கு வேண்டிய அளவு மட்டுமே போடுவோம்'' என்று அனந்தாச்சாரி சொல்ல, இராமசாமி நாயுடுவும் அப்படியே செய்தார்.

பிந்தியவர், அதற்கு இரு எண்கள் குறைத்துப் போட்டு விட்டார்; அது நாயுடுவிற்குத் தெரியாது.

முதன் முறை ஏமாறி, எனக்குத் தீங்கு ஏற்படும்படி ஆகிவிட்டதை உணர்ந்த இராமசாமி நாயுடு இந்த முறை விழிப்பாய் இருந்து எனக்கு உரிய வெற்றியை வழங்கினார்.

நாச்சியப்பரின் வழி

அக்கால ஆங்கில ஆட்சி, பள்ளிகளை - அவற்றிலும் உயர்நிலைப் பள்ளிகளைக் கொடுப்பதில் கஞ்சத்தனமாக நடந்து கொண்டது. மாவட்ட ஆட்சிக் குழுவின் பற்றாக்குறை நிதி நிலைமையைச் சாக்காக்கி, ஆண்டிற்கு இரண்டொரு உயர்நிலைப் பள்ளிகளைக் கூடத் திறப்பதற்கு விடுவதில்லை.

இத் தடுப்பை உடைக்க விரும்பினார், திரு நாச்சியப்பர். அதற்கு ஒரு வழியும் கண்டு பிடித்தார்.

என்ன வழி?

உயர்நிலைப் பள்ளிக்கூடம் வேண்டும் என்று கேட்கும் ஊரார் விரும்புமுறைக்கும் மேலாக, பத்து ஏக்கர் அடிமனை நிலம் தர வேண்டும்.

அதோடு, அலுவலகம், தலைமை ஆசிரியர், ஆசிரியர்களுக்கான அறைகள், வகுப்பிற்கு ஓர் அறை, அவற்றிற்கான தளவாடங்கள், மூன்றாண்டு நிகர செலவிற்காக, அய்யாயிரம் ரூபாய்கள் ஆகியவற்றை மாவட்டக் குழுவிற்கு முன்னதாகவே தரவேண்டும்.'

அவற்றைக் காட்டி, மாவட்டக் குழுவின் தலைவர், ஆட்சியை நெருக்கி, உயர் நிலைப் பள்ளியைப் பெற்றுத் தரமுடியும்.

இது நாச்சியப்பரின் வழி.

பல பள்ளிக்கூட நிகழ்ச்சிகளின் போது, மேற்கூறிய வழியை ஆதரித்து நான் தீவிரமாகப் பேசினேன்.

''எல்லாவற்றையும் ஊரார் கொடுத்துவிட்டால், அப்புறம் அரசு எதற்கு?'' என்று வைதீக சிந்தனையாளர்கள் பலர் முணு முணுத்தார்கள்.

அவர்களே உலகம் அல்ல. பல ஊர்களில் மக்கள் அவ் வழியை அப்படியே ஏற்றுப் பின்பற்றினார்கள்.

விளைவு?

1945 ஆம் கல்வி ஆண்டின் தொடக்கத்தில், புதிதாக அய்ந்து உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்க, இயக்குநரிடம் இருந்து ஆணை பெற முடிந்தது.

படத்திறப்பு

அவற்றில் ஒரு உயர்நிலைப் பள்ளி அரூர் என்ற பின்தங்கிய பெரிய சிற்றூரில் தொடங்கப்பட்டது.

அந்தத் தொகுதியின் மாவட்டக் குழு உறுப்பினர் யார்?

சென்னி செட்டியார் என்ற நீதிக்கட்சிக்காரர்.

திரு. நாச்சியப்பர் கட்சிக் கண்ணோட்டத்தைப் புகுத்தாமல், நிர்வாகம் நடத்தியதால், அரூருக்கும் உயர்நிலைப் பள்ளி கிடைத்தது.

அரூர் உயர்நிலைப் பள்ளியின் தொடக்கவிழா வெகு சிறப்பாக மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

அவ் விழாவிற்கு டாக்டர் சுப்பராயன் தலைமை ஏற்றார் பலர் உரையாற்றினர்.

மாவட்டக் குழு தலைவர் திரு. நாச்சியப்பர் திருவுருவப் படமும் அவ்விழாவில் திறந்து வைக்கப்பட்டது.

அந்தப்படத்தைத் திறந்து வைக்கும் பெருமை எவருக்கு அளிக்கப்பட்டது?

மாவட்டக் கல்வி அலுவலனாகிய எனக்கு அளிக்கப்பட்டது. அது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

விழாவின்போதே, அதற்கு வேண்டிய விளக்கமும் கிடைத்தது.

அரூர் விழாவில்தான் முதன்முதல் டாக்டர் சுப்பராயனைக் கண்டேன்.

அவர் பந்தலுக்குள் வந்து அமர்ந்ததும் திரு நாச்சியப்பர் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார்; அவர் என்னோடு கை குலுக்கிவிட்டு

''நாச்சியப்பருக்கு வேண்டியவராக இருப்பது மிகக் கடினம். அதுவும் அலுவலர்களை மிகத் துல்லியமாக எடை போட்டுப்

பார்ப்பார். அவருக்குப் பிடித்தமானவர்கள் இரண்டொரு அலுவலர்களே இருக்கிறார்கள்! அதிலே முதல் இடம் உங்களுக்காம்.

''செயல் திறனிலே, சளையாத உழைப்பிலே, புடம்போட்ட நேர்மையில் நாச்சியப்பருக்கு இணையாக நீங்கள்தான் இருக்கிறீர்களாம்.

''எனவே, நீங்களே அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று திரு. நாச்சியப்பர் உறுதியாக நின்றார். அப்படியே மகிழ்ச்சி நிரல் உருவாக்கப்பட்டது'' என்றார்.

நல்லவர் நாச்சியப்பர் போட்ட மதிப்பீட்டில் சிறிதும் குறையக் கூடாதென்ற ஒரே குறிக்கோளோடு, அன்றுமுதல் பாடுபட்டு வந்தேன்.

உயரத்தில் உள்ள ஒற்றைக்கம்பியில் நடக்கும் விந்தையில் வெற்றிபெற்றேன்.

ஒருவருடைய இளமைப் பருவத்தில் பெரியோர் துணை இடுமானால், அவர்களும் சுரங்கத்தின் ஆழத்தில் இருக்கும் தங்க மணலைத் தரைக்குக் கொண்டு வருவது போல் ஊக்கினார்களானால், மிகவும் பயிராகும்.

21. பெண் குழந்தை பிறந்ததும் மறைந்தது

தலைமை ஆசிரியர் தேர்வு

புதிய உயர்நிலைப் பள்ளிகள் தோன்றியதால், தலைமை ஆசிரியர் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் பட்டியல் நீளமாக நேர்ந்தது.

நகராட்சிப் பள்ளிகளுக்குத் தனிப்பட்டியலும் மாவட்ட ஆட்சிக் குழுப் பள்ளிகளுக்குத் தனிப்பட்டியலும் ஆயத்தம் செய்யவேண்டும்.

அப் பட்டியலில் சேர, குறைந்தது பத்தாண்டுகளாவது பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி இருக்க வேண்டும்.

பணி மூப்புடைய ஆசிரியர்கள் பலர், போருக்குத் தொடர்பான பல பணிகளுக்குச் சென்றுவிட்டதால், அய்ந்து ஆண்டு காலம் பட்டதாரி ஆசிரியராக இருந்தாலே பட்டியலில் சேர்க்கலாம் என்று அரசு ஆணையிட்டது.

ஆனால் திறமை அடிப்படையில்தான் பட்டியலில் சேர்க்கலாம்.

அந்தப் பட்டியலை மாவட்டக் கல்வி அலுவலர் ஆயத்தம் செய்யவேண்டும்.

அப்படிச் செய்வதற்கு முன்பு, மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவரிட இருந்து உரியவர்களின் பணி பற்றிய தகவல்களையும் இரகசியக் குறிப்புகளையும் பெற்று மதிப்பிட வேண்டும்.

அந்த மதிப்பீட்டின் அடிப்படையில், பட்டியலில் சேர்த்து மண்டலப் பள்ளி ஆய்வாளருக்கு அனுப்பவேண்டும்; மண்டல ஆய்வாளர் அதை ஏற்கலாம்; ஏற்காமலும் மாற்றலாம்.

அவர் முடிவுப்படி, அப்பட்டியல் வரிசைப்படி, தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அந்தப் பட்டியல் ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும்.

இரு முறை, நான் ஆயத்தம் செய்து ஒப்புதலுக்கு அனுப்பிய பட்டியல்கள் பற்றி நகராட்சித் தலைவரோ, மாவட்ட ஆட்சிக் குழுத்தலைவரோ, மண்டல ஆய்வாளரோ என் கருத்துக்கு முரணான கருத்து கொண்டது இல்லை.

அதோடு, அத்தனை பேர்களுமே நல்லபடி பணியாற்றித் தங்களுக்கும், தங்களைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கும் நற்பெயர் தேடித் தந்தார்கள்.

மாநகராட்சிப் பள்ளித் தலைமை ஆசிரியர் மாணிக்கம் பிள்ளை, மாவட்ட ஆட்சி உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் பூபதி முத்துசாமி, அரங்கசாமி, சண்முகம், கிருஷ்ணபண்டாரம் போன்ற பலருமே, தாக்குப் பிடித்து, ஒழுங்கை, கட்டுப்பாட்டைக் காப்பதில் வெற்றி பெற்றார்கள்.

கிருஷ்ண பண்டாரம்

திரு. கிருஷ்ண பண்டாரம் ஆதி திராவிடர்; பட்டம் பெற்றவர்; நாட்டுப்பற்று பற்றி அரசு ஊழியத்திற்குப் போக மறுத்துவிட்டார்.

திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் சேர்ந்து, சில ஆண்டுகள் ஆக்கப்பணி புரிந்து வந்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சிக் குழுவின்கீழ் கல்விப் பணியாற்ற விரும்பினார்.

அப்போது பட்டதாரி ஆசிரியர் வேலை காலி இல்லை. இடை நிலை ஆசிரியராகத்தான் சேர்ந்தார்.

மனக்குறை யின்றி, சூதுவாது இன்றி ஆர்வத்தோடு பணி புரிந்து வந்தார்.

பள்ளிக்குக் கதர் உடையில் வருவதே அவரது பழக்கம். ஆறடி உயரமும், இனிய சொல்லும் உடைய அவரை, மாணாக்கர் மதித்து, விரும்பப்பட்டார்கள்.

சில ஆண்டுகள் இடைநிலையில் சிறப்பாக ஊழியம் செய்தபின், பட்டதாரி ஆசிரியர் பதவி பெற்றார்.

ஆகவே, நான் இரண்டாம் முறை தலைமை ஆசிரியர் பட்டியலை ஆயத்தம் செய்யும்போது அவருக்குப் பட்டதாரி ஆசிரியர் நிலையில் அய்ந்து ஆண்டு பணி முடியவில்லை.

அன்று சென்னை மாகாணத்தில், மாவட்ட ஆட்சிகளின் கீழ் பணிபுரிந்த ஒரே ஆதிதிராவிடப் பட்டதாரி ஆசிரியர் கிருஷ்ண பண்டாரம் ஆவார்.

காந்தி நெறியில் பண்பட்டு, இளைஞர்களை நல்லவர்களாக உருவாக்குவதில் முனைப்பாய் இருந்த கிருஷ்ண பண்டாரம் அவர்களைத் தலைமை ஆசிரியராக்குவது நல்லது என்று பட்டது.

அவரைப் பொறுத்தமட்டில் திறமையையும் இடைநிலைப் பணியையும் சேர்த்துக்கொண்டு பட்டியலில் சேர்த்தால், ஆதி திராவிடரில் ஒரு தலைமை ஆசிரியர் கிடைப்பதோடு, முதல் தரமான தலைமை ஆசிரியராக உயரும் வாய்ப்பும் அவருக்கு இருக்கும் என்று மேலை ஆய்வாளருக்குப் பரிந்துரைத்தேன்.

அவர் அதை ஏற்றுக்கொண்டு, இயக்குநருக்கு அனுப்பி வைத்தார்.

இயக்குநரின் ஒப்புதலோடு கிருஷ்ண பண்டாரம் தலைமை ஆசிரியர் பட்டியலில் இடம் பெற்றார். அடுத்த கல்வி ஆண்டில் தலைமை ஆசிரியரானார்.

படாடோபம் இன்றி, அமைதியாக, திறமையாகப் பணிபுரிந்து, எல்லோருக்கு நிறைவைக் கொடுத்தார்.

நான் தேர்ந்தெடுக்க நேரிட்ட பிற தலைமை ஆசிரியர்களும் அப்படியே திறமையாக இயங்கினார்கள்.

நான் வெட்கப்படவோ, வேதனைப்படவோ இடம் கொடுக்க வில்லை.

இதற்கிடையில், நான் சேலத்தில் சேர்ந்த சில திங்களில் என் துணைவி காந்தம்மாவை, சேலம் மாவட்ட, பெண் போர் ஆதரவு தொழிற்பொழி வாளராக அரசு மாற்றிவிட்டது.

ஆகவே, இருவருமே சேர்ந்து பல ஊர்களுக்குச் சென்றோம்.

நான் பொது மக்கள் கூட்டங்களிலும் என் மனைவி, பெண் மக்கள் கூட்டத்திலும் பேசுவது வழக்கம்.

பீதிகளைத் தணிப்பதையும் பதுக்கல்களைக் குறைப்பதையும் மையமாக்கி இருவரும் உரையாற்றுவோம்.

பட்டாளத்தில் தச்சு, கருமார், எழுத்தர் வேலைகளுக்குச் சேர, தாராளமாக ஆள்கள் வந்தார்கள்.

அவர்களைப் பட்டாளத்துத் தேர்வுக்காக, பெங்களூர் அனுப்பி வைத்தேன்.

அவர்களில் பெரும்பாலோர் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

பாதுகாப்புப் பத்திரங்களில் முதலீடு செய்ய வைப்பதிலும் சீகாகுளத்தில் பெற்ற அளவு வெற்றியைப் பெற்றேன்.

மாவட்ட ஆட்சியாளர், திரு. பெல் அய். சி.எஸ். என்பவர் தலைமையில் கூடிய மாவட்டப் போர் ஆதரவுக் குழுவில் பணி மூப்புடை அலுவலர்கள் சிலர்கூட அஞ்சி, அடக்கமாகப் பேசினார்கள். 'முயல்வேன்' என்று பணிவோடு கூறினார்கள்.

அன்றே, எனக்கு ஆசிரியப் பெரும்படை என் பக்கம் இருப்பதாக நம்பிக்கை. அதில் சுரந்த தெம்போடு, ஆட்சியாளர் கூறிய குறியீடுகளைக் கல்வித்துறை நிறைவேற்றும் என்று கணீர் என்று உரைத்தேன்.

'இளம்பிள்ளை பயம் அறியாது பேசுகிறது' என்று எண்ணியவர்கள் உண்டு.

இருந்தால் என்ன?

ஆசிரியர்கள், நான் எதிர்பார்த்தபடி, கைகொடுத்தார்கள்.

கெடுபிடி இல்லாமல், நாட்டுப்புறத்தாரோடும் பழகியதால், ஊரார் ஒத்துழைப்பும் கிடைத்தது. எதிர்பார்த்த குறியீடுகள் எட்டின.

இருபத்துநான்கு மணிகளும் பகலாகவே இருந்துவிடுவதில்லை; இரவும் இடைப்படும் அல்லவா?

என் நீண்ட வாழ்க்கை முழுதும் பெரும் அளவில் துன்பம் வந்து அணைக்கும்; துயரம் வந்து முட்டும்; கவலை வந்து கவ்வும்; ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் வம்பு வந்து மோதும்.

'சாதியானாக வாழமாட்டேன்; மனிதனாக வாழ்வேன்; மற்றவர்கள் அப்படி வாழ உதவுவேன்' இதை வாழ்க்கையின் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டு இருந்தேன். இது உந்திக் கொண்டிருப்பதால், இன்றும் இருக்கிறேன்.

நான் சேலத்தில் அலுவல் பார்த்தபோது, இன்றைய தருமபுரி மாவட்டம் சேலத்தோடு இணைந்திருக்கிறது; ஒரே சேலம் மாவட்டமாக இருந்தது.

அப்போது, தருமபுரியில் ஓர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி நடந்து வந்தது. அது மாவட்ட ஆட்சிக் குழு நடத்தியது.

அதன் தலைமை ஆசிரியர், திரு நாராயணசாமி அய்யர்.

இப்போது சட்டமன்றப் பேரவைத் தலைவராக விளங்கும் மாண்புமிகு க. இராசாராம் அப்போது, மாணவ மன்றச் செயலாளராக இருந்தார்.

இவர், தலைமை ஆசிரியரின் ஒப்புதலோடு, தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமியை உயர்நிலைப் பள்ளி மாணவர் மன்றக் கூட்டத்தில் உரையாற்றும்படி அழைத்தார்.

பெரியார், அழைப்பை ஏற்றுக்கொண்டார். நாளும் நேரமும் குறிப்பிட்டார். அழைப்பினை அச்சிட்டுப் பலருக்கும் அனுப்பினர்; எனக்கும் வந்தது.

அழைப்பைக் கண்டதும் சிறிது கலக்கம் கொண்டேன். நான்தான் பெரியாரை அழைப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தேன் என்று கதை கட்டி விட்டால், என்ன செய்வது? உண்மையை மெய்ப்பிப்பது எப்படி?

காங்கிரசுக்காரர்களைவிட, என்னைத் தொலைத்துவிடுகிறேன் என்று சேலத்தில் சூளுரைத்துவிட்டுப் போனவரைப் பற்றியே அஞ்சினேன்.

காந்தம்மா தேற்றினார்.

''நீங்கள் தூண்டுகோல் அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். பெரியாரைத் தடுத்து நிறுத்த உங்களுக்கு உரிமையோ, தகுதியோ இல்லை. வலிய வரும் தொல்லை, வந்ததுபோல் தானாகத் தொலையும். கவலைப்படாது அலுவலைப் பாருங்கள்'' என்று தேற்றினார்.

சில நாள்கள் சென்றன.

திரு நாச்சியப்பரும் நானும் ஒரு பள்ளிக்கூட நிகழ்ச்சியில் பங்கு கொண்டோம். என்னைக் கண்டதும்,

''சில நாள்களுக்கு முன்பு ஒரு தர்ம சங்கடமான நிகழ்ச்சி நடந்தது. உங்களுக்கு வீண்பழி வந்துவிடுமோ, என்று எண்ணினேன்.

''தருமபுரி உயர்நிலைப் பள்ளிக்குப் பெரியார் அழைக்கப்பட்டார். அவரும் பள்ளிக்கு வந்து பேசினார்.

''மாணவ மன்றக் கூட்டங்களுக்கு அழைப்பதைப்பற்றி நான் தலையிடுவது இல்லை. பெரியார், என்ன பேசுவாரோ, என்ன சலசலப்பு ஏற்படுமோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

''கூட்டம் நடந்த பிறகு, தலைமை ஆசிரியர் நாராயணசாமி அய்யர் வந்து என்னைக் கண்டார். கூட்டத்தின் முழு விவரத்தையும் கூறினார்.

''பெரியார் பேச்சு முழுவதும் கல்வியின்பால் அக்கறை கொள்ளுதல், பள்ளிக்கூடக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடத்தல், ஒழுங்கும் ஒழுக்கமும் கற்றுக் கொள்ளல், ஊர் விவகாரங்களில் சிக்கிக்கொண்டு படிப்பைப் பாழாக்காது இருத்தல் ஆகியவை பற்றியேதானாம்.

''பார்ப்பன வெறுப்போ, சமய நிந்தனையோ, அரசியல் கண்டனமோ இல்லையாம். இன்னும் சில வாரங்களுக்காவது மாணவர்களைக் கட்டுப்படுத்துவது எளிதாய் இருக்குமென்று, நாராயணசாமி அய்யர் பூரிப்போடு கூறினார்'' என்று நாச்சியப்பர் கூறினார்.

அதுவே, பெரியாரின் தனித்தன்மை என்பதை உணர்ந்திருந்த எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

சேலத்தில் இருக்கையில் என் மனைவி காந்தம்மா கருவுற்றார்.

மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் அனுமந்தராவ் அவ்வப்போது, மருத்துவ சோதனை செய்து வந்தார்; நிலைமை நிறைவாகவே இருந்தது.

உரிய காலத்தில், காந்தம்மாவைச் சென்னைக்கு - அவருடைய தாய் வீட்டிற்கு - அனுப்பி வைத்தேன்.

சென்னை எழும்பூர் பிள்ளைப்பேறு மருத்துவமனைக்குச் சென்று, டாக்டர் இலட்சுமண சுவாமி முதலியாரிடம் மருத்துவம் பார்த்துக் கொண்டார்.

அவரும், குத்தூசி குருசாமிக்காக, தனிப்பட்ட கவனத்தோடு மருத்துவம் பார்த்து வந்தார்.

ஒரு வாரத்தைக் குறிப்பிட்டு, அவ்வாரத்தில் குழந்தை இயல்பாகப் பிறந்து விடுமென்று, முதலியார் கூறினார்.

அந்த வாரத்தில் நான் சென்னையில் இருக்க விரும்பினேன். விடுப்புக்கு எழுதினேன்; மண்டல ஆய்வாளர் விடுப்பைக் கொடுத்தார்.

சென்னைக்குச் செல்ல ஏற்பாடு செய்து கொண்டேன். சென்னைக்குத் தகவல் கொடுத்துவிட்டேன்.

புறப்படுவதற்கு முன்னால், மண்டல ஆய்வாளர் சேலத்திற்கு வந்துபோவதாகவும், விடுப்பு எடுத்துக்கொண்டு சென்னைக்குச் செல்ல வேண்டாம் என்றும் எனக்கு ஒரு தந்தி வந்தது.

புறப்பட வேண்டிய நாளன்று மண்டல ஆய்வாளர் வந்து சேர்ந்தார்.

''அலுவல் பற்றி வரவில்லை; தனிப்பட்ட வேலைபற்றித்தான் வந்து இருக்கிறேன், இரண்டு நாள் தங்குவேன்'' என்றார் ஆய்வாளர்.

''அப்படியானால், தங்களுக்குப் பணி செய்யத் தக்க ஏற்பாடு செய்துவிட்டு, நான் சென்னைக்குச் செல்ல விடை தாருங்கள்'' என்று வேண்டினேன்.

'பணியில் கண்டிப்பு; உறவில் தோழமை' இது, மண்டல ஆய்வாளர் திரு வி..ஆர். அரங்கநாதம் என்று சொன்னால் அது மிகையல்ல.

அவ்வளவு நல்லவர்! ஏனோ, என்னைச் சென்னைக்கு அனுப்ப மறுத்துவிட்டார். நான் சென்னைக்குச் செல்ல இயலவில்லை.

இதற்கு இடையில், சென்னையில் காந்தம்மாவை பிள்ளைப்பேறு பார்த்துவமனையில் சேர்த்துவிட்டார்கள். வழக்கமான ஆய்வுகள் நடந்தன.

சிறுநீரில் 'ஆல்புமென்' அதிகமாக இருப்பதாகத் தெரிந்தது. அதற்கு மருந்து கொடுக்கப்பட்டது. 'ஆல்புமென்' குறைந்து கொண்டே வந்தது. அடியோடு குறையவில்லை.

ஆனால், ஆய்வின் முடிவை எழுதுகையில் தாதிப்பெண் தவறு செய்துவிட்டார். 'ஆல்புமென் இல்லை' என்று குறித்து வைத்துவிட்டார்.

எனவே, அதைக் குறைக்க கொடுத்த மருந்து நிறுத்தப்பட்டது.

மறுநாள் இரவு பத்து மணிபோல் காந்தத்திற்கு இடுப்புவலி ஏற்பட்டது. அவரது தாயார் தங்கம்மாள் துணைக்கு இருந்தார். இரவு மூன்றரை மணிக்கு வலிப்பு ஏற்பட்டதாம். தங்கம்மாள் தாதிகளை அழைத்துக் காட்டினார்.

''பெரிய டாக்டர் கேஸ். இந்த நேரத்தில் அவரைக் கூப்பிட்டுச் சொல்ல முடியுமா? வேறு டாக்டர் அதைக் கவனிக்கக்கூடாதே'' என்று மூவரும் நழுவிவிட்டார்கள்.

விடியற்காலை அய்ந்து மணிக்கு, திரு குருசாமி, மருத்துவமனைக்கு வெளியே காப்பியோடு நிற்பதாகக் கூறியிருந்தாராம். எனவே, அய்ந்து

மணிக்கு வாயிலுக்குச் சென்ற என் மாமியார், காந்தம் படும் அவதியைக் கூறினார்.

உடனே, திரு குத்தூசி குருசாமி, டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரோடு தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டார்.

அவதியைக் கேட்ட முதலியார், பத்து மணித் துளிகளில் வந்து சேர்ந்தார்.

ஊசி வழி மருந்து போட்டுவிட்டு, மருத்துவம் பார்த்தார். பெண் குழந்தை பிறந்து, சில வினாடிகளில் மாண்டது.

தாயைக் காப்பாற்ற வேண்டுமே! டாக்டர் இலட்சுமணசாமி அரும்பாடுபட்டார். நான்கு முறை மருத்துவமனைக்கு வந்து பார்த்தார். பிற்பகல் வீட்டிற்குப் போனவர், அந்திப்போது மீண்டும் வந்து ஆவன செய்தார்.

சேலத்திற்குத் தந்தி வந்தது. சென்னை வந்தடைந்தேன்.

''மாண்ட குழந்தையைப் புதைக்கக்கூட நீங்கள் இல்லாமல் போய்விட்டீர்களா?'' என்று காந்தம் கதறியதற்கு, ஆறுதல் கூற முடியாமல் துடித்தேன்.

பெரியார் தோன்றினார்

தந்தை பெரியார் எனக்குமுன் சென்னைக்கு வந்து காந்தத்தைத் தேற்றினார். டாக்டர் முதலியாரைப் பார்த்து, ''காந்தத்தைப் பிழைக்க வையுங்கள்'' என்று வேண்டினார்.

என்னைக் கண்டதும் என் கைகளைப் பற்றிக்கொண்டு வருந்தினார். முதுகைத் தடவி அமைதிப்படுத்த முயன்றார்.

அழவும் முடியாது இருந்த என்னை ஆறுதல் படுத்த,

''நீங்கள் கடவுளை நம்புகிறவர்களா என்று எனக்குத் தெரியாது! பிள்ளைப் பேறு வலிப்பில் நான்கு மணி நேரம் அவதிப்பட்ட பிறகு உயிரோடு இருப்பவர், இலட்சத்தில் ஒருவரே.

''காந்தத்திற்கு இனி ஆபத்து இல்லை. இந்த அற்புதத்திற்காக வாகிலும் நீங்கள் கடவுள் நம்பிக்கை கொண்டால் அதில் தப்பு ஒன்றும் இல்லை'' என்றார்.

சிந்தனையும் செயலும் மறந்து இருந்த நான் பெரியாரின் பேச்சைக் கேட்டுக் கற்சிலையாக இருந்தேன்.

22. ஆதி திராவிடருக்கு உரிய இடம்

வட்டிலே தான் ஒதுக்கீடு

அன்றைய சேலம் மாவட்டத்திற்கு ஆண்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று மட்டுமே இருந்தது.

மேட்டூரில் செயல்பட்ட அப்பள்ளியில், ஆண்டுக்கு நாற்பது பேர்களைமட்டுமே சேர்க்கலாம். எட்டாவது தேர்ச்சி பெற்றவர் களுக்காக அந்தப் பயிற்சிப் பள்ளி.

அக் காலத்தில் ஆதிதிராவிடர்களுக்கு நூற்றுக்குப் பத்து விழுக்காடு இடம் ஒதுக்க வேண்டும் என்பது அரசின் ஆணை. அப்படி நடந்ததா?

'இல்லை' என்று என்னிடம் குறைபட்டுக் கொண்டார்.

யார்?

நாமக்கல்லைச் சேர்ந்த முத்துசாமி என்ற ஆதிதிராவிடத் தலைவர்.

அவர், 'சமத்துவம்' என்ற பெயரில் ஓர் இதழை நடத்திக் கொண் டிருந்தார். அதில் பெரும் பொருள் இழந்தார்.

முற்காலத்தில் சமுதாயத் தொண்டு புரிந்த பலர் இப்படித்தான் தங்களைச் சிதைத்துக் கொண்டார்கள்.

தோழர் முத்துசாமி என்னைப் பேட்டி கண்டார்.

''அய்யா! நான் சொல்லுகிறேனென்னு வருத்தப்படாதீர்கள். மேட்டூர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் எங்கள் பிரிவினருக்கு நான்கு இடங்கள் உண்டு.

''ஆனால், சென்ற இரண்டு ஆண்டுகளில், ஓர் ஆதிதிராவிடரும் சேர்க்கப்படவில்லை.

''எனக்குத் தெரிந்த சிலர் மனு செய்திருந்தார்கள். அவர்கள் பேட்டிக்குக்கூட அழைக்கப்படவில்லை.

''அய்யா காலத்திலாவது, எங்களுக்கு நீதி கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று முறையிட்டார்.

''அப்படியிருக்காது'' என்று எனது கல்வித் துறையை விட்டுக் கொடுக்காமல் பதில் கூறி அனுப்பினேன்.

உண்மையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, முந்தைய ஆண்டு களின் கோப்புகளை வாங்கிப் பார்த்தேன். நெருப்பில்லாமல் புகை வருமா!

ஒவ்வோர் ஆண்டும் இரு ஆதி திராவிடர்கள் மனு போட்டிருந்தார்கள். உரிய காலத்தில் போட்டிருந்தார்கள்.

நான்கிற்கு இரண்டு மனுக்களே வந்தும் பொருளில்லாத நொண்டிச் சாக்கைச் சொல்லி, அவை தள்ளுபடி செய்யப்பட்டன.

எனவே, உரியவர்கள்பேட்டிக்கு அழைக்கப்படவில்லை.

இழப்பை ஈடு செய்தேன்

ஆதி திராவிடர் இடங்கள் சாதி இந்துக்களுக்குக் கிடைத்தன. அந்த ஆக்கிரமிப்பைச் சரி செய்ய விரும்பினேன்.

''எட்டாவது தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடப் பையன்கள் இருந்தால், ஆசிரியப் பயிற்சிக்கு உரிய காலத்தில் மனுப்போடத் தூண்டுங்கள்'' என்று சில உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களிடம் சொல்லி வைத்தேன்.

பலன் இருந்தது.

அதற்கான காலத்தில் பதினான்கு மனுக்கள் வந்தன.

அத்தனை பேர்களையும் தேர்ந்தேடுத்தேன். அனைவரும் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்துவிட்டனர்.

சேர்க்கையெல்லாம் முடிந்த பிறகு மேட்டூருக்குப் போக நேர்ந்தது.

சமத்துவவாதி வெட்கட்ராமய்யா

பயிற்சிப் பள்ளியின் தலைமையாசிரியர் என்னைக் கண்டார். என்னுடன் உரை ஆற்றிக்கொண்டு இருந்தார்.

அவர் சமத்துவவாதி. தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரைப்போல் பூணூலைக் கழற்றிவிட்டவர். எனவே,

''இவ்வாண்டு சேர்ந்தவர்கள் திறன் எப்படி இருக்கிறது?'' என்று நான் அவரைக் கேட்டேன்.

''எல்லோருமே அக்கறையாகப் படிக்கிறார்கள்; ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் நடந்து கொள்ளுகிறார்கள்.

''ஆனால், இது சிறிய ஊராயிற்றே! சாதிக் கண்ணோட்டம் சற்று அதிகமாக உள்ளது. 'உங்க கல்வி அதிகாரி, பயிற்சிப் பள்ளிக்கூடத்தை, ஆதிதிராவிடப் பள்ளிக்கூடமாக ஆக்கிவிட்டாரே'' என்று சொல்லுகிறார்கள்.

''பயிற்சி பெறுபவர்களைப் பொறுத்தமட்டில், எல்லோரும் ஒரே உணவு விடுதியில், சண்டை சச்சரவு இன்றி அமைதியாக உண்கிறார்கள்.

''இவ்வாண்டின் ஒழுங்கு உச்சத்தில் இருக்கிறது'' என்று மிகுந்த மகிழ்ச்சியோடு பதில் அளித்தார்.

திரு வெங்கட்ராம அய்யர், எனக்காக அப்படிச் சொல்லவில்லை. உண்மையிலேயே, அவ்வளவு ஒழுங்கும் கட்டுப்பாடும் பள்ளியில் இருந்தன.

40 ஆண்டுகளுக்கு முன் மாணவர் நிலை

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தலைமைப் பித்தும் விளம்பர வெறியும் மிகக் குறைவு. ஏன்? இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம்.

அவர்களை அரசியல் கட்சியினரும் பகடைக் காய்களாகப் பயன்படுத்தியது அரிது. பெரும்பாலும் மாணவர்கள், மாணவர்களாகவே செயல்பட்டார்கள்.

அன்று அரசியல் விடுதலை, சமுதாய சமத்துவம் என்ற கொள்கைகளின் பெயரால், வெளியுலக விவகாரங்களில் ஈடுபட்டவர்களில் அநேகர் புதுத் தலைமுறை கற்போர் அல்லர்.

எனவே, அவர்களால் பெருமளவு இரண்டையும் சமாளித்துக் கொள்ளும் ஆற்றல் இருந்தது.

இருபதாண்டுகளாக மாணவர் நிலை

சென்ற இருபது ஆண்டுகளாக மாணவ உலகப்போக்கு வேறு பக்கம் திரும்பியுள்ளது.

அவர்கள் அரசியல் கட்சிகளின் பகடைக் காய்களாக மாறும் அவலநிலை உருவாகிவிட்டது.

அடுத்து, சாதி வெறியர்களின் கருவிகளாகப் பயன்படும் அவலம் மிக மிக அதிகமாகப் பெருகி வருகிறது.

அவர்களில், குறிப்பாக, ஆதிதிராவிடர்களின் படிப்பும்கெட்டு, சமுதாயத்தில் தேவையற்ற கசப்பும் வளர்ந்து, நாட்டின் முன்னேற்றம் தடைபட்டுப் போகக் காண்கிறோம்.

வீடுகளில் பெற்றோர் அல்லது மூத்தோரிடமிருந்து வீட்டுப் பாட உதவியைப் பெறமுடியாத, முதல் தலைமுறை மாணாக்கர், கற்க வேண்டியவற்றை வகுப்பறைக் கவனத்தால் கற்றுக் கொண்டால்தானே தேர்ச்சி பெறமுடியும்?

கவனச் சிதைவிற்கு இடம் கொடாமல் கற்பதில் மட்டுமே கவனமாக இருந்தால் அல்லவா, அத்தகையோர் கல்வியில் தரம் பெற முடியும்?

சில ஆண்டுகளுக்குக்கூடக் கட்டுப்படக் கற்றுக் கொள்ளாவிட்டால், பிற்காலத்தில் பல்லாண்டுகளுக்குத் தங்கள் கீழே வேலை செய்பவர்களைக் கட்டுப்படுத்தி, வேலை வாங்கும் ஆளுமை வளராதே!

மாணவப் பருவம் இரண்டுங்கெட்டான் பருவம். பாம்பு ஓடுகிறது என்றால், இதோ மிதித்துக் கொன்றுவிட்டு வருகிறேன் என்று துரத்திக்கொண்டு ஓடுகிற பருவம்.

அவர்களை நெறிப்படுத்த வேண்டியவர் எவர்?

நாட்டின் தலைவர்கள்.

அவர்கள் நேர் வழிகாட்டத் தவறிவிட்டார்களா? இல்லை.

காந்தி வழி

இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒரு கூறாக, ஆங்கில ஆட்சியின் முத்திரை பெற்ற கல்வி நிலையங்களுக்குப் போக வேண்டாம் என்றார், அண்ணல் காந்தி அடிகள்.

அந்த அளவு பத்தியமிருக்க இயலாது, கல்வி நிலையங்களில் சேர்ந்து இருந்தவர்களுக்கு, தேசத் தலைவர் காந்தி அடிகள் காட்டிய நெறி என்ன?

'கல்வி நிலையங்களின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடவுங்கள்' என்பதே.

நம் நாட்டின் தந்தை காட்டிய கட்டுப்பாட்டு நெறியையே, உலகின் முதல் சமதர்ம நாட்டை உருவாக்கிய மாவீரர் லெனின், சோவியத் நாட்டு இளைஞர்களுக்குக் காட்டினார்.

''படியுங்கள்! படியுங்கள்! மேலும் படியுங்கள்'' என்பது புரட்சித் தலைவர் லெனின் சோவியத் இளைஞர்களுக்குக் காட்டிய வழி ஆகும்.

அண்ணா கருத்தை இந்திய அரசு ஏற்றது

பேரறிஞர் அண்ணாதுறை சென்னை சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கியபோது அம்மன்றப் பேரவை வாயிலாக, இந்தியா முழுமைக்கும் வழி காட்டினார்.

அதை, அன்றைய அனைத்திந்திய கல்வி அமைச்சர், பேராசிரியர் உமாயூன்கபீர், தமது தனிக் கடிதத்தின் வாயிலாக, எல்லா அரசுகளுக்கும் பரிந்துரைத்தார்.

அது என்ன?

''ஆசிரியர்களையும் மாணவர்களையும் தீவிர அரசியல் சடுபோட்டிற்கு இழுப்பதில்லை என்று, மன்றத்தில் உள்ள எல்லா மாநில அரசியல் கட்சிகளும் ஒரு பெரிய மனித உடன்படிக்கைக்கு வருகிறோம்'' என்பது ஆகும்.

தம் கட்சி நலனிலும் சமுதாய நலமே பெரியது என்று கருதி பேரறிஞர் அண்ணா கொண்டுவந்ததை, ஆளுங்கட்சி மகிழ்வோடு ஏற்றுக் கொண்டது; அன்றைய தமிழக சட்ட மாமன்றமும் ஒருமனதாக ஒப்புக்கொண்டது.

கல்வியின் தர உயர்வு, மாணாக்கர் காட்டும் அக்கறையையும் பொறுத்தது என்பது எல்லோர்க்கும் தெரியும்.

அரசியல் விறுவிறுப்பு அதிகமாகிவிட்டால், அக்கறை கெடும் என்பதைக் கூறவும் வேண்டுமா?

முதறிஞர் இராசாசியும் தந்தை பெரியாரும் விரும்பியதும் காட்டியதும் அதே கட்டுப்பாட்டு வழியே ஆகும்.

அவ்வழியில் நடந்து, முன்னேறி முன்னேற்றிப் பாரை உயர்த்திடவேண்டிய இளைய தலைமுறை, பழுக்காத பச்சை, நெல்லாகவே பாழாகிவிடலாமா?

தலைமுறை தலைமுறையாக, நிலக்கிழார்களுக்காக, ஏழைகள் தலை உருண்டதுபோல், இன்று அரசியல் கிழார்களுக்காக இளைஞர்கள் தலை உருளுவது, அவர்கள் அடி உதை படுவது, படிப்பைப் பாழாக்கிக் கொள்வது தகுமா? சரியா? முறையா?

முதல் தலைமுறைப் படிப்பாளிகளை அரசியல் அருவிகளிடம் இருந்து, தடுத்தாட்கொள்ளக் கூடியவர்கள் இல்லையா?

தொன்மை வாய்ந்த இப் பெரிய நாட்டில், பண்பட்ட பத்துப் பெரியவர்கள், சான்றோர்கள் இல்லையா?

ஆண்டிக்கு இலைக் கணக்கு எதற்கு?

முற்காலத்தில் கல்விக் கூடங்களை அரிக்கும் அரசியல், அரிதாக இருந்ததால், மாணவர்கள் தொல்லை இல்லாமல் கல்வி கற்றுக் கலைசேர முடிந்தது.

புலவரேறு வரதநஞ்சையா பிள்ளை

சேலத்தில் பணி புரிகையில் புலவரேறு வரதநஞ்சையா பிள்ளை என்னும் பெரும் புலவரை இரண்டு மூன்று முறை கண்டு மகிழும் பேறு பெற்றேன்.

கல்வி நிலைய நிகழ்ச்சிகளில் அந்தப் பெரியவரோடு கலந்து கொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றேன்.

தமிழ்க் கடலாக விளங்கிய, பழுத்த பழமாகிய அவர், என்னை ஒட்டிப்பேசிப் பாராட்டியது எனக்கு ஆர்வமூட்டியது.

வெட்டிப் பேசுவதிலும் கிண்டல் செய்வதிலும் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுவதிலும் அதிக நாட்டம் செலுத்தும் இக் காலப் பேச்சாளர்கள் வரதநஞ்சையா போன்றவர்களின் பேச்சுகளைக் கேட்க முடியாதே!

இராமசாமி கவுண்டரின் பாராட்டு

சேலம் கல்லூரி முதல்வர் திரு அ. இராமசாமி கவுண்டரும் நல்ல நாவன்மை படைத்தவர்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் கேட்டார் பிணிக்கும் வகையில் பேசியவர்.

அவரோடு பல நிகழச்சிகளில் பங்கு கொண்டிருக்கிறேன்.

உள்ளத்தின் உண்மையொளி ஒன்றை மட்டும் முதலாகக் கொண்டு உரையாற்றிய இளம் பேச்சாளனாகிய என்னை அவர் பலமுறை ஊக்கியுள்ளார்.

அவரது கல்லூரியிலும் பேச, ஓரிரு முறை அழைத்துப் பெருமை செய்தார்.

கல்லூரி முதல்வர் திரு இராமசாமி கவுண்டர், ஒருமுறை என் மேடைப்பேச்சை எடைபோட்டுக் காட்டினார்.

''பெரியாரைப் போன்று நீங்களும் உங்கள் பொறுப்பில் கருத்துகளைக் கூறுகிறீர்கள். இவர் இப்படிச் சொன்னார்; அவர் அப்படிச் சொன்னார் என்று சொல்லி மற்றவர்கள் பின்னால் பதுங்கிக் கொள்வதில்லை'' என்று கூறினார்.

பல்லாண்டுகளுக்கு முன்னரே, மேற்கூறியபடி என்னுடைய இயல்பு மாறிவிட்டது.

பொது மக்களிடம் கல்வியின்பால் நாட்டத்தை வளர்ப்பதற்காக, பல பாரதி பாடல்களையும் சில பாரதிதாசன் பாடல்களையும் கலந்து பேசத்தொடங்கினேன். அப் பழக்கம் பெருகிவிட்டது.

பாரதிதாசனைக் கண்டேன்

நான் சேலம் மாவட்டக் கல்வி அலுவலராக இருந்தபோது, புரட்சிக் கவிஞர், பொது உடைமை முரசு, சமத்துவத் தாரையாம் - பாரதிதாசனை முதன் முதல் கண்டேன்.

சேலம் பரமத்தி வேலூரில் அவர் உரையைக் கேட்டேன்.

அன்று கேட்ட கருத்து, இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

''சிறுவர்கள் சிலர் காற்றாடிகளைப் பறக்கவிட்டு, விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒருவனுடைய காற்றாடி மிக உயரப் பறந்தது. சிறுவனுக்குக் கொள்ளை இன்பம்.

''அடுத்த நொடி அவனுடைய காற்றாடி தந்திக் கம்பத்தில் சிக்கியது. சிறுவன் சட்டென்று இழுத்தான்; வால் அறுந்து போய்விட்டது.

''இமைக்கு முன்பே சிறுவன், அடுத்திருந்த பெருமரத்தின் பின்னே மறைந்தான். நொடியில் கோவணத்தின் ஓரத்தைக் கிழித்து, காற்றாடிக்கு வாலாகக் கட்டினான். காற்றாடியை மீண்டும் பறக்க விட்டான்.

''இம்முறை அந்தக் காற்றாடி மேலும் உயரப் பறந்தது; துள்ளிக் குதித்தான்; மகிழ்ந்தான் சிறுவன்.

''அடுத்த வினாடி! அக் காற்றாடியின் வால், கோபுரக் கலசத்தில் சிக்கிக் கொண்டது.

''இப்படியும் அப்படியும் இழுத்துப் பார்த்தான். வால் அறுபட்டு விட்டது.

''பொற் கலசத்தில் சுற்றிக்கொண்ட, பழங்கந்தை பட்டொளி வீசிற்று. 'என் வால் எப்படிப் பளபளக்கிறது பார்' என்று சிறுவன் துள்ளிக் குதித்தான்.

''அறிவில் முதிர்ந்த நாம், அச் சிறுவனின் நிலையில் நின்று விடலாமா? புத்தம் புதிய, இயற்கையான ஒளியுடைய இலக்கியங்களை உருவாக்கவேண்டாமா?'' என்று கணீரென்ற வெண்கலக் குரலில் பாரதிதாசன் பேசக் கேட்டது, இப்போதும் ஒலிக்கிறது.

23. இந்தோ சோவியத் நட்புறவு

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

நான், சேலம் மாவட்டக் கல்வி அலுவலனாகப் பணி புரிந்தபோது, இவருடைய நட்பைப் பெற்றேன்.

அவர்களுடைய நட்பு இன்றுவரை நீடிக்கிறது; வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் என்று நம்புகிறேன்.

அத்தகைய நண்பர்களில் ஒருவர், திரு. புத்தனேரி சுப்பிரமணியம்.

அவர் அப்போது மேட்டூர் அணையில், பொதுப்பணித் துறையில் எழுத்தராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். சுறுசுறுப்பான இளைஞர்; தமிழ்ப் பற்று உடைய இளைஞர்.

அவர் கவிஞராக அரும்பிக் கொண்டிருந்த அந் நிலையில் 'தமிழ்ப் பண்ணை' என்ற பெயரில் ஓர் அமைப்பை ஏற்படுத்தி தமிழ்ப் பயிரை வளர்த்துக் கொண்டிருந்தார்.

தமிழ்ப் பண்ணை பெரும்புலவர் வரதநஞ்சையா பிள்ளைக்குப் பாராட்டு விழா எடுத்துச் சிறப்புச் செய்தது.

அவ் விழாவிற்குத் தலைமை தாங்கும் பேற்றினை எனக்கு அளித்தார்கள்.

இருமுறை தமிழ்ப் பண்ணை நடத்திய நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டதாக நினைவு.

திரு புத்தனேரி சுப்பிரமணியம், பின்னர், சென்னைக்கு மாறுதலாகி வந்தார்; பணியில் உயர்ந்தார்; தமிழ்த்தொண்டில் வளர்ந்தார்; பாராட்டுகளைப் பெற்றார். 'கலைமாமணி'யானார்; பாரதிதாசன் விருது பெற்றார்.

கவித்திறன் பெற்றவர்களில் சிலரே உலகியல் நுட்பம் அறிந்தவர்கள். அச் சிலரில் ஒருவர் புத்தனேரியார்.

வளர்முகத்தில் இருக்கும் என் நண்பர் புத்தனேரி சுப்பிரமணியம் 2-11-82 அன்று மணிவிழா கண்டார்.

என் இசைவை எதிர்பார்த்து, மணிவிழாக் குழுவில் என்னையும் உறுப்பினர் ஆக்கிக் கொண்டார்.

விழாவில் கலந்துகொண்டு, வாழ்த்துரை வழங்குமாறு முன்னே கூட்டியே எழுதியிருந்தார். இருப்பினும் கலந்துகொள்ள இயலவில்லை.

என் வாழ்க்கை நிலை

என் நிலை பலருக்குத் தெரியாது. நான் பொதுச் சொத்து. நான் உறவினர்களுக்குப் பயன்படும் நிலையில் இருந்து, அறுபது நேர்ந்தது, நாற்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு.

முப்பத்தைந்து ஆண்டு காலம், முகவரி இல்லாத, பரிந்துரை பெற இயலாத, வழிப்போக்கர்களுக்குக் கைகொடுக்க வாய்ப்புகள் பெற்றிருந்தேன்.

அத்தகையோருக்கே முன் உரிமை கொடுப்பதில், முனைப்பாய் இருந்ததால் பலமுறை வேண்டியவர்களின் எரிச்சலுக்கு ஆளானேன்.

சென்ற சில ஆண்டுகளாக, நான் முழுக்க முழுக்கப் பொதுச் சொத்தாகி விட்டேன்.

வேண்டியவர்கள் சிறப்பு பெறும்போது, மகிழ்ச்சியில் திளைக்கும் போது, உடன் இருந்து அவற்றைக் கண்டு பூரித்து, இனமையோடிருக்கும் வாய்ப்பினை விரைந்து இழந்து வருகிறேன்.

புத்தனேரியாரின் மணிவிழா அன்று, நான் நீண்ட பயணத்தில் இருந்தேன்.

கயாவில் இஸ்கஸ் மாநாடு

இருப்புப் பாதை வழியே சென்னையிலிருந்து, பீகார் மாநிலத்திலுள்ள கயாவிற்குச் சென்று கொண்டிருந்தேன்.

பணியம்தேடியா? இல்லை! பதவி நாடியா? இல்லை! புகழை நாடியா? இல்லை! பின் எதற்கு?

கயாவில் மூன்று நாள்கள் நடைபெற்ற இந்திய சோவியத் நட்பாட்டுக் கழகத்தின் அனைத்து இந்திய மாநாட்டில் பங்கு பெறுவதற்காக, அந்த நீண்ட பயணத்தை மேற்கொண்டேன்.

அனைத்து இந்திய 'இஸ்கஸ்' குழுவின் மூத்த துணைத் தலைவர்களில் ஒருவனாகிய நான், போகாமல் இருப்பது முறையல்ல என்பதால், வீட்டுக்குத் துணையாய் இருந்து தெம்பூட்ட வேண்டிய காலகட்டத்தில், இரண்டாயிரத்து முந்நூறு கிலோ மீட்டர்கள் தொலைவு பயணம் செய்த, என் அப்பாவித்தனத்தை எவரே புரிந்து கொள்வர்?

மாஸ்கோ சென்றேன்

கயாவிலிருந்து திரும்பி வந்த ஒன்பதாம் நாள் அதைவிடத் தொலைவிலுள்ள சோவியத்தின் தலைநகரான மாஸ்கோவிற்குப் புறப்பட்டுச் செல்ல நேர்ந்தது.

நடமாட முடியாத என் வாழ்க்கைத் துணைவியை ஏங்க விட்டு விட்டு, அனைத்துலக அமைதி மாநாட்டிற்குப் போன என்னை, எவரும் பாராட்டுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

மறக்க முடியாத செய்தியொன்று என் நினைவிற்கு வருகிறது. 1975 ஆம் ஆண்டு, நான் துணைவேந்தர் பதவியில் இருந்து விலகிய சில மாதங்களுக்குப் பிறகு, உலக அமைதிக் குழுவின் தலைவர், திரு.

ரொமேஷ் சந்திரா என்ற இந்தியர் சென்னைக்கு வந்தார். அண்ணா சாலையில் உள்ள மைய நூலகக் கட்டடத்தில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

அப்போது-

'திரு நெ. து. சுந்தரவடிவேலு இந்திய சோவியத் பண்பாட்டுக் கழக மாநிலத் தலைவராக இருப்பதைக் கண்ட வெளிநாடு ஒன்று (பெயரைக் குறிப்பிட்டார்) எரிச்சல் கொண்டு, துணைவேந்தர் நியமனத்தில் திரைமறைவில் இருந்து தலையிட்டு உள்ளது' என்று அறிவித்தார்.

ஏற்கெனவே, என் காதில் வீழ்ந்த செய்தியை அவர் உறுதிப்படுத்தினார். அவ்வளவுதான்!

அந்தப் பதவி இழப்பை நான் தியாகமாகக் கொள்ளவில்லை.

ஏன்?

இந்திய சோவியத் உதவி

இந்திய சோவியத் நட்புறவு என் உயிரினும் இனியது. எதனால்?

தன்னாட்சி பெற்ற இந்தியா, நான்கு முறை அண்டை நாடுகளின் தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது.

புறமுதுகில் குத்திய அந்த நிகழ்ச்சிகளால், இந்தியாவின் ஆட்சி உரிமை பறிபோகாமல், காப்பதற்கு எவருடைய உதவி கைகொடுத்தது? சோவியத் ஒன்றியத்தின் உதவியே.

சட்டப்படி உரிமை பெறுவதற்கு நான்கு திங்கள் முன்பே நட்புக் கரம் நீட்டி, இந்தியாவோடு தூதர் மட்ட உறவுகொண்ட முதல் நாடு சோவியத் நாடு!

உலக அரங்குகளில் வல்லரசுகள் சில, இந்தியாவின்மேல் பழி சுமத்த முயன்ற போதெல்லாம், நம் நாட்டை ஆதரித்து, நமக்குத் துணை நின்றது சோவியத் நாடே. அது மட்டுமா?

சோவியத் மக்கள் எத்தனை பெரும் தொழிற்சாலைகளை இந்தியாவில் அமைத்துத் தந்திருக்கிறார்கள்!

அந்தப் பேருதவி கிடைக்காதிருந்தால் இன்னும் பலகோடிக்கு இந்தியா கப்பறை ஏந்த நேர்ந்திருக்குமே!

மனிதாபிமானப் பற்றால் உந்தப்பட்டு, பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நமக்கு உதவியுள்ளார்கள்.

தங்கள் நாடு, முதிர்ந்த சமதர்ம நிலையில் இருந்து, முழு பொது உடைமை நிலைக்குப் போவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும், மனித இனத்திற்கு ஆற்றவேண்டிய கடமையை ஆற்றுவோம் என்று சோவியத் மக்கள் இந்தியாவிற்கு உதவுகிறார்கள்.

நண்பர்களிடம் இருந்து அத்தகைய தொடர் தியாகத்தைப் பெற்று வரும் நாம், முழு அளவு இல்லாவிட்டாலும் ஓரளவு நாட்டுப் பற்றோடாகிலும் தொழில் புரிந்தால், அத் தொழிற்கூடங்கள் கொள்ளை இலாபம் கொடுக்குமே!

பெருந்தியாகத்தைக் கண்முன் கண்டும், சிறு தியாகம் செய்யத் தயங்கும் மனிதன் எப்படி மனிதத் தன்மை பெற்றவனாவான்?

'நாளும் மனிதனாக வேண்டும்; இந்தியத் தாயின் ஆட்சி உரிமையைக் காக்கத் துணை நிற்கவேண்டும்.

'அப்படித் துணை நிற்கும் உலகத்தின் பெரிய நாடாகிய, சோவியத் ஒன்றியத்தோடு நட்பை வளர்ப்பதே இன்றைய நிலையில், என்னைப் பெற்றவன் ஆற்றக்கூடிய நாட்டுத் தொண்டு.'

இத்தகைய உணர்வுகளால் உந்தப்பட்டல்லவா நான் இயங்குகிறேன்?

பெரியார் கற்பித்த பாடம்

அந்த உணர்வை என்னுள் வலுப்படுத்தியவர் தந்தை பெரியார்.

பாகிஸ்தானோ, சீனாவோ இந்தியாவைத் தாக்கிய போதெல்லாம், 'தேசிய இனவாதி'யென்று கருதப்பட்ட, பெரியார் என்ன செய்தார்?

உடனடியாக, சிறிதும் தயங்காமல், இந்திய அரசுக்கு ஆதரவு கொடுத்தார்.

'உதவிசெய்ய, நிதியளிக்க, படையில் சேர' வேண்டுகோள் விடுத்தார்.

இந்திய அரசுக்கு ஆதரவு கொடுக்கும்படி, தமிழ்நாடு முழுவதும் முழங்கினார்.

கடுமையான கருத்து மாறுபாடு கொண்டிருந்த நிலையிலும் இந்திய ஆட்சி உரிமைக்குக் கேடு வரக்கூடாது என்று எண்ணி, பேசி, எழுதி, செயல்பட்டார் பெரியார். அதுவே முதிர்ச்சியின் சிறந்த அடையாளம்.

வேலை இல்லாத் திண்டாட்டத்தை வளரவிடுவது பேராபத்து என்று எண்ணுவதாலேயே, தாய் நாட்டின் உரிமையைப் பற்றி, ஏனோதானோ என்றிருக்கலாமா?

பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் நம்மைச் சுற்றி வளைத்து மிரட்டிப் பணியவைக்கத் திட்டமிடுகையில், மெய்யான நண்பனாகிய சோவியத் நாட்டோடு, நட்பையும் ஒத்துழைப்பையும் வளர்த்துக்கொள்ளல், எவ்வளவு இன்றியமையாதது!

தாய்க்கு மருந்து வாங்கித் தருவதை தியாகம் என்று பெயர் சூட்டும் மகனும் ஒரு பிள்ளையா?

இந்திய சோவியத் நட்புறவை வளர்க்கும் ஒவ்வோர் நினைப்பும் இந்தியத் தாய்க்கு அளிக்கும் குளிகையாகவே நான் கருதுகிறேன்.

அதன் விளைவாக நான் பதவி இழந்திருந்தால், அதைத் தியாகமாகக் கருதவேண்டாம்; கடமையாகக் கொள்ளுதலே முறையாகும்.

வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி

சுற்றியுள்ளோர் வளர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தே அடையும் மகிழ்ச்சியில் நெடுநாள், தொண்டு வாழ்வு வாழ்ந்த தந்தை பெரியாரைப் போன்றே என்னைச் சுற்றியுள்ளோர் வளர்ந்து, செழித்து, கொடிகட்டிப் பறப்பதைக் கண்டே நான் மகிழ்ச்சி கொள்வதால்தான் இவ்வளவு காலம் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

அப்படியிருக்க, என்னைவிடக் குறைந்த பணிக்காலத்திலும் என்னிலும் வளமான வாழ்க்கை நடத்த வாய்ப்புக் கொண்டவர்கள்,

அதை நினைந்து இன்புறுவதை இழந்துவிட்டு, -

என்னைக் கண்டு அழுக்காறு கொண்டு, ஏதேதோ கற்பனைகள் செய்துகொண்டு, தங்கள் உடல் நலத்தையும் மனநலத்தையும் சிதைத்துக் கொள்கிறார்களே என்றுதான் நான் வருந்துகிறேன்.

நான் வருந்துவதால் அவர்கள் திருந்தப் போவதில்லை.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும்' நம்பிக்கை விளைவிக்கும் மாற்றத்தை, காந்தியடிகளின் வாழ்க்கை ஏற்படுத்தாத திருத்தத்தை எளியேன் எப்படி ஏற்படுத்த முடியும்?

நண்பர் மா. இராசகோபால்

சேலத்தில் எனக்குக் கிடைத்த மற்றொரு நண்பர் திரு. மா.இராசகோபால்.

அவர், அன்று, ஆவணப் பதிவுத் துறையில், சார்புப் பதிவாளராகப் பணி புரிந்து வந்தார்.

அவருக்கு அன்றே திராவிட இயக்கத்தவர்களில் சிலரோடு நெருங்கிய தொடர்பு உண்டு; அவர் மேடைப் பேச்சில் அடிக்கடி ஈடுபட்டு வந்தார்.

பின்னர், சேலம் மாவட்டப் போர் ஆதரவுச் சொற்பொழிவாளராகப் பணி புரிந்தார்.

அலுவலில் உயர்ந்து, அத் துறையின் தலைமைப் பதிவாளருக்கு உதவியாளரானார். உரிய காலத்தில் ஓய்வு பெற்றார்.

திரு. இராசகோபால், வாழும் கலை அறிந்தவர். அவர் தமது பிள்ளைகள், பெண் ஆகியவர்கள் அனைவரையும் நன்றாகப் படிக்க வைத்து, 'அவையத்து' முந்தியிருக்கச் செய்தவர்.

அவ் வகையில் பிறர்க்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.

திரு. இராசகோபால், முன்னர்க் கூறிய தமிழ்ப் பண்ணையின் சிறப்பு நிகழ்ச்சியில் என்னோடு கலந்துகொண்டு உரை ஆற்றினார். வேறு சில தமிழ் மன்றங்களிலும் நாங்கள் இருவரும் சேர்ந்து பங்கு கொண்டிருக்கிறோம்.

அத்தகைய அன்பர், இப்போது சென்னையில் தங்கியுள்ளார்.

அவ்வப்போது, அவரைக் காணவும் அவரோடு கலந்துரையாடவும் வாய்ப்புகள் கிட்டுகின்றன. இருவரும் முந்தைய நிகழ்ச்சிகளை அசை போட்டு நிறைவு கொள்கிறோம்.

எத்தனை கோடி ஆற்றல்

மக்கள் வாழ்க்கை புதிர்கள் செறிந்தது; புதையல்கள் கொண்டது.

புதிர்கள் அறிவிப்பு இன்றி வந்து நிற்கும்; புதையல்கள்கூடத் தோன்றாதபோது தட்டுப்படும்.

நான் புதையல் என்று இங்கே குறிப்பிடுவது, பொருட்புதையலை அல்ல. பின் எதை? அறிவுப் புதையலை; தெளிவுப் புதையலையே!

1939 ஆம் ஆண்டு செப்டம்பரில் தொடங்கிய இரண்டாவது உலகப்போர் அய்ந்தாண்டுகள் ஆகியும் நிற்கவில்லை.

மேலும் பல்லாண்டுகள் நீடிக்கும்போல் தோன்றியது.

அந்த நிலையில், இளைஞர்களிடையே, அப் போரின் தன்மை பற்றிய கருத்துத் தெளிவையும் முதிர்ச்சியையும் வளர்க்க நினைத்தது, அன்றைய ஆட்சி. அதற்காக வழியொன்றைக் கண்டது.

முழுப்போர் மாவட்டத்திலும் மாணவர் கருத்தரங்கம் நடத்த ஆணையிட்டது.

கருத்தரங்கம் பதினைந்து நாள்கள் நடக்கவேண்டும். அதில் முப்பது பேர்களாவது பங்கு கொள்ள வேண்டும்.

'மக்களாட்சி உரிமையைக் காக்கும் பொருட்டே, அப்போர் நடக்கிறது' என்பதைத் தக்கார் உரைகளின் வாயிலாக விளக்க வேண்டும்.

அதோடு மாணவர்கள் கலந்துரையாட நிறைய வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

போருக்குப் பிறகு சமுதாயம் எப்படித் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றிப் பேச, கவிதை புனைய, நாடகம் நடத்த மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இப்படி அரசு ஆணை வந்தது.

கருத்தரங்கச் செலவு அரசு நிதியில் இருந்து உயர்நிலைப் பள்ளிக்கு இரு மாணாக்கர் என்று தேர்ந்தெடுத்தேன். பயிற்சிப் பள்ளியிலிருந்து இருவர்; ஆசிரியர்கள் இருவர் என்று முப்பது பேர்களைத் தேர்ந்தெடுத்தேன்.

மேட்டூர் அணையில் பயிற்சிப் பள்ளி வளாகத்தில் கருத்தரங்கம் நடந்தது.

அது பற்றிய சுற்றறிக்கையை உரியவர்களுக்கு அனுப்பினேன்.

மாணவர் வெங்கடாசலபதி வளர்ச்சி

மறுநாள் காலை என் வீடு தேடி இருவர் வந்தனர்.

கணவனும் மனைவியுமாக வந்த அவர்கள் எவர்?

கல்லூரியிலிருந்து கருத்தரங்கிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் ஒருவரின் பெற்றோர் ஆவர்.

அவர்கள் எனக்கு நன்றி சொல்லவா வந்தார்கள்? இல்லை.

அம் மாணவரைக் கருத்தரங்கிலிருந்து விடுவிக்கும்படி வேண்டினார்கள்.

எதன் பொருட்டு?

'எங்கள் பையன் வெங்கடாசலபதி பரம சாது. அவனாக, தனியாக எந்த ஊருக்கும் போனதில்லை. நாங்கள் அழைத்துப் போகும் இடத்திற்கு மட்டுமே வருவான்.

'இப்போது தனியாக, பதினைந்து நாள்கள் மேட்டூருக்கு வெளி தயங்குகிறான். அழமாட்டாத குறையாக, எங்களை அனுப்பியுள்ளனர்.

தயவு செய்து அவனுக்குப் பதில் யாரையாவது போட்டு விடுங்கள், என்று என்னிடம் வேண்டினார்கள்.

வெங்கடாசலபதியின் தந்தை திரு சின்னப்ப செட்டியார், மூத்த பள்ளி ஆய்வாளர். ஆகவே, உரிமையோடு அவரிடம் பேசினேன்.

''நான் பதினைந்து நாள்களும் மேட்டூரில் தங்கப்போகிறேன் மாணவர்கள் என் பார்வையில்தான் இருப்பார்கள். எனவே, அஞ்சத் தேவையில்லை.

''மேலும் என் மனைவியும் மேட்டூரில் என்னுடன் இருப்பார். அவரும் அப் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வார். எவருக்கும் ஏதும் நேரிடாதபடி பாதுகாத்துக் கொண்டுவந்து விடுகிறேன்'' என்று உறுதி கூறினேன்.

என் மனைவியை அழைத்து நடந்ததைக் கூறினேன்.

அவரும் வாக்குக் கொடுத்தார்.

அப்புறம் ஒருவாறு ஆறுதல் பெற்றுச் சென்றார்கள்.

அடுத்த நாள் இண்டர்மீடியட் வகுப்பு மாணவரான வெங்கடாசலபதியை அழைத்துவந்து, என் மனைவிக்கு அறிமுகம் செய்தனர்.

கருத்தரங்கம் நடந்தது; இரண்டு நாள்வரை வெங்கடாசலபதி இருந்த இடம் தெரியவில்லை.

அப்புறம் அவருடைய ஆளுமை வெளிப்பட்டது; பல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார்.

கலகலப்பாகப் பழகினார்; எல்லோர் பாராட்டையும் பெற்றார்.

அதைப்போல, பல மாணாக்கர் போற்றத்தக்க தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

வகுப்பறைகளில் முடங்கி இருந்தபோது வெளிப்படாத ஆற்றல்கள், வளர்ச்சிக்குத் துணையான ஆற்றல்கள் வெளிப்பட்டன.

'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' என்று பாரதி பாடினார்.

'எத்தனை கோடி ஆற்றல் வைத்தாய்' என்று பாடினாலும் பொருந்தும் என்பதை அப்போது உணர்ந்தேன். கல்வி நிலையங்கள் பல்வகை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்னும் தெளிவைப் பெற்றேன்.

வெங்கடாசலபதி பின்னர், கிண்டி பொறியியல் கல்லூரியில் சேர்ந்தார்.

'கிரிக்கெட்' குழுவிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் அளவு திறமை பெற்றார். பலரோடு நட்பாகப் பழகினார்.

வாழ்க்கையில்?

நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் நிலைக்கு உயர்ந்தார்.

ஆற்றலிலும் பதவியிலும் உயர்ந்தாலும் அடக்கத்தைக் கைவிடாதவராக வாழக் கண்டேன்.

24. திராவிடர் கழகம் பிறந்தது

நீதிக் கட்சியின் மாநில மாநாடு

தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றைப் பாதிக்கும் நிகழ்ச்சியொன்று சேலத்தில் நடந்தது. அது என்ன?

1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12, 13 ஆம் நாள்களில் சேலத்தில் நடந்தது வரலாற்றுச் சிறப்புமிக்க நீதிக்கட்சி மாநாடாகும். அது பற்றிப் பல திங்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது.

அவ்வாண்டு பிப்பிரவரி 13 ஆம் நாள், சென்னை மாவட்ட நீதிக்கட்சி மாநாடு, அறிஞர் அண்ணாதுரையின் தலைமையில் ஆர்வத்துடன் கூடிற்று.

சென்னை மாநாடு, 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற பெயரில் நடந்து வந்த கட்சிக்குத் 'திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யும்படி, சேலம் மாநாட்டிற்குப் பரிந்துரை செய்தது.

அதையொட்டிய பெயர் மாற்றத் தீர்மானத்தை சேலம் மாநாட்டில், அறிஞர் அண்ணா கொண்டு வந்தார். அதோடு வேறு சில தீர்மானங்களையும் கொண்டு வந்தார்.

திராவிடநாடு தீர்மானம்

அவற்றில் ஒன்று திராவிட நாடு பற்றிய தீர்மானம் ஆகும்.

'திராவிடர் கழகத்தின் முக்கிய கொள்கைகளில், திராவிட நாடு என்ற பெயருடன் நம் சென்னை மாகாணம், மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் இல்லாததும், நேரில் பிரிட்டிஷ் செக்ரட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டதுமான ஒரு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டியது' என்ற கொள்கை முதற் கொள்கையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று இந்த மாநாடு ஏக மனதாகத் தீர்மானிக்கிறது.

'மேலே கண்ட தன்மைகளை நீதியாகக் கொண்ட அரசியல் சட்டங்களையும் மாற்றி அமைக்க வேண்டும்' என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

மேற்கூறியவை பழைய முடிவுகளை உறுதிப்படுத்துவதே ஆகும்.

பின்வரும் தீர்மானத்தை அறிஞர் அண்ணா முன்மொழிய, மாநாடு ஏற்றுக்கொண்ட முடிவோ புதிது; மிகவும் துணிச்சலானது.

'நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும், நம் கட்சியின் தன்மானத்தைக் கருதியும், நமது கட்சியின் பேரால் இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்துவரும் போக்கை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் கொண்டு போகப்பட்டு விட்டோம்.

பட்டம் பதவி துறப்பீர்

'இந்திய அரசியல்' சமூக இயல் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளில் சர்க்கார் நம் கட்சியையும் நம் இலட்சியமாகிய திராவிட நாட்டுப் பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள்.

'நம் கட்சியில் இருக்கும் அங்கத்தினர்களும் இனியும் வந்துசேர இருக்கும் அங்கத்தினர்களும் சர்க்காரால் மக்களுக்கு அளிக்கப்பட்ட எந்த விதமான கவுரவப் பட்டங்களையும் உடனே சர்க்காருக்கு வாபஸ் செய்துவிட வேண்டும். இனி ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

'அதுபோலவே, அவர்கள் யுத்தத்திற்காகவும் மற்றும் சர்க்கார் காரியங்களுக்காகவும் மத்திய சர்க்காராலோ, மாகாண சர்க்காராலோ எந்த விதமான கமிட்டியில் எப்படிப்பட்ட கவுரவ ஸ்தானம், அங்கத்தினர் பதவி, ஆலோசகர் பதவி அளிக்கப்பட்டிருந்தாலும் அவைகளை எல்லாம் உடனே இராஜினாமா செய்து விடவேண்டும்.

'தேர்தல் அல்லாமல், ஸ்தல ஸ்தாபனம் - அதாவது ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு ஆகியவற்றில் தலைவர், உப தலைவர், அங்கத்தினர் ஆகிய சர்க்கார் நியமனம் பெற்றோ, அல்லது நியமனம் பெற்ற அங்கத்தினர்களால் தேர்தல் பெற்றோ இருக்கிறவர்கள் எவரும் தங்கள் தங்கள் பதவிகளை உடனே இராஜினாமா செய்துவிட வேண்டும்.

'சர்க்காரால் தொகுதி வகுக்கப்பட்ட எந்த விதமான தேர்தலுக்கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக்கூடாது.

'இதை ஏற்று ஒரு வாரத்தில் இதன்படி கட்டுப்பட்டு நடக்காதவர்கள் எவரும், தங்களுக்கு இக் கட்சியில் இருக்க இஷ்டமில்லை என்று கருதி கட்சியை விட்டு நீங்கிக் கொண்டவர்களாகக் கருதப் படவேண்டிய வர்கள் ஆவார்கள்.'

தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் இசைந்து பேசி எடுத்த முடிவான முடிவின் அடிப்படையில் இவை கொண்டு வரப்பட்டன.

பின்னணி என்ன?

இந் நிலைக்குப் பின்னணி என்ன?

இந்தியாவின் வருங்கால அரசியல் அமைப்புப் பற்றி பிரிட்டானிய அரசுக்குப் பரிந்துரை கூற, சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் தலைமையில் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது.

அக் குழு இந்தியாவிற்கு வந்து பல்வேறு கட்சிகளைக் கலந்து பேசியது.

நீதிக்கட்சித் தலைவர். ஈ.வெ. ராமசாமி, அக்குழுவைக் கண்டு திராவிட நாடு பிரிவினையை வலியுறுத்தினார்.

ஆனால், கிரிப்ஸ் அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

1940 ஆம் ஆண்டும் 1943 ஆம் ஆண்டும் சென்னை மாகாண கவர்னரும், இந்திய வைசிராயும், ஈ.வெ.ரா.வை சென்னை மாகாண பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார்கள். இரு முறையும் மறுத்துவிட்டார்.

ஆங்கில ஆட்சி, நிர்வாக இயந்திரத்தில் இருப்பவர்கள் அல்லது வெளியே இருந்து தொல்லை கொடுப்பவர்கள் ஆகியோரைக் கவனிக்கும்.

மேற்படி முடிவுகள் மிகத் துணிச்சலானவை; அதுவும் போர்க் காலத்தில், அரசு எவரையும் எளிதாகச் சிறையில் அடைத்துவிட உரிமை பெற்றிருந்த நிலையில், இவற்றைப் பற்றிக் கேள்விப்பட்ட பலர் பதறிப்போனார்கள்.

இயக்கத்தின் முன்னோடிகள் பலர், பல நாள் முன்னதாகவே சேலம் வந்து சேர்ந்தார்கள்; அவர்களிடையே ஓயாத ஆலோசனை; மாற்று முடிவுகள் தீவிரமாகச் சிந்திக்கப்பட்டன.

முடிந்தால், பெரியாரின் தலைமைப் பதவியைப் பிறருக்கு மாற்றிவிடத் திட்டமிட்டவர்களும் உண்டு.

அப்போது, மாயூரம் எஸ்.வி. லிங்கமும், பூவாளூர் பொன்னம் பலனாரும் சேலம் வந்தார்கள். பழைய நட்புபற்றி என் வீட்டில் தங்கினார்கள்.

அவர்கள் ஆலோசனையில் நான் கலந்து கொண்டது இல்லை. ஆனால், அவர்கள் உரையாடல்களில் இருந்து அறிஞர் அண்ணாவின் மதிப்பீட்டைப் பற்றித் தெரிந்து கொண்டேன்.

அது என்ன?

காந்தி அடிகள் உள்ளவரை அவரே காங்கிரசு.

ஜின்னா உள்ளவரை அவரே முஸ்லீம்லீக்.

பெரியார் உள்ளவரை அவரே நீதிக்கட்சி; தன்மான இயக்கம்.

இந்த மூவரில் எவரையும் எப்படிப் பட்டவரும் எதிர்த்து வெற்றிபெற இயலாது.

எனவே, ஒன்று பெரியார் கூறுவதை ஏற்றுக்கொண்டு அவரோடு இருக்க வேண்டும். இல்லாவிட்டால், பேசாமல் விலகிக் கொள்வதே அறிவுடைமை.

அண்ணா, மாற்றுக் கருத்தாளர்களுக்குப் பிடிகொடுக்கவில்லை. எனவே, எதிர்ப்பு, போட்டி, சலசலப்பு அனைத்தும் அடங்கிப்போயின.

இருப்பினும், பெரியார் கட்சியில் உள்ள பெரிய மனிதர்களுக்குப் பெரிய மனது பண்ணினார். அவர்கள் கேட்டபடி இராஜினாமாவிற் காகக் கொடுத்த வாய்தாவை நீட்டித்தார். அடுத்து தனி மாநாடு போட்டு உறுதிப்படுத்தும்வரை அவர்களுக்குத் தவணை கொடுத்தார்.

அப்படியே அடுத்த ஆண்டு, திருச்சியில் தனி மாநாடு கூடிற்று. சேலம் முடிவுகளை உறுதிப்படுத்தியது.

தவறைத் திருத்திக் கொண்டேன்

பரபரப்பூட்டிய சேலம் மாநாட்டைக் காண விரும்பினேன். ஆனால், அரசு ஊழியன் ஆகையால், மாநாட்டிற்குள் போவது முறையல்ல. சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமி கவுண்டரின் நண்பர் ஒருவர், வலிய வந்து உதவினார்.

அவர் வணிகர். அவரது கடை, மாநாட்டுக் கொட்டகைக்கு அருகில் இருந்தது. கல்லூரி முதல்வர், அவரது வாழ்க்கைத் துணைவியார் திருமதி கனகம்மையார், என் மனைவி காந்தம்மா, நான் ஆகிய நால்வரும் அக் கடையில் அமர்ந்து உரைகளைக் கேட்டோம்.

சில மணித் துளிகளில் சங்கடமான நிலை ஏற்பட்டது. மாநாட்டுக்குப் போய்க் கொண்டிருந்த சில ஆசிரியர்கள், என்னைக் கண்டதும் நின்று கும்பிட்டு விட்டுச் சென்றார்கள்.

பொது ஊழியத்தில் இருப்பவன் எல்லோர்க்கும் பொதுவானவன்.

அவன் ஒரு பிரிவில் சேர்ந்தவன் என்று மதிப்பிட நேர்ந்தால், அவனுடைய மதிப்பு குறையும். அது அவனது ஆளுமையைக் குறைக்கும்.

ஆசிரியர்கள் கும்பிட்டபோது, நான் அவ்விடத்தில் உட்கார்ந்திருப்பது தவறு என உணர்ந்தேன்.

எனவே, அடுத்த வேளை அந்தக் கடைப் பக்கமே செல்லவில்லை.

மெவரல் ஸ்டேதம் மறைவு

1944 ஆம் ஆண்டு, அதிர்ச்சி தரும் நிகழ்ச்சியோடு முடிந்தது. அவ்வாண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள், பொதுக் கல்வி இயக்குநராக இருந்த, சர் மெவரல் ஸ்டேதம் திடீரென இயற்கை எய்தினார்.

அச் சோகச் செய்தி சென்னை மாகாண கல்வி உலகத்தை உலுக்கியது.

ஆசிரியர்களுக்கு ஆதரவாக, பொது மக்களுக்கு உதவியாக, பொதுக்கூட்டங்களில் உரையாடி வழிகாட்டிய இயக்குநரை இழந்தது பேரிழப்பாகும்.

அவர் காலத்தில் தொடக்கல்வியின் வளர்ச்சியில் விறுவிறுப்பு இருந்தது: பாடத்திட்டம் மறுமலர்ச்சி பெற்றது; பாடத் துணைக் கருவிகள் பெருகின.

அவருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த கல்வி உலகம் முயன்றது. சேலம் மாவட்டம் நிதி திரட்டிக் கொடுத்தது.

அக் காலத்தில், இலட்சக் கணக்கில் எவரும் நிதி திரட்ட இயலாது.

மொத்தத்தில் இருபத்தைந்து ஆயிரம் ரூபாய் சேர்ந்தது. அந்த நிதி சென்னைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்னையில், மாநிலக் கல்லூரி மாணவிகளுக்கு விடுதி கட்டியபோது, அந்தத் தொகை மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதற்கு ஈடாக, அந்த விடுதியில் பல்கலைக் கழக மாணவியர் இத்தனை பேருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இராவ்சாகேப் பட்டம்

சேலம் மாவட்டக் கல்வி அலுவலரான எனக்கு இரகசியக் கடிதம் வந்தது.

அது கல்வித் தொண்டாற்றி வரும் எவருக்காவது கவுரவப் பட்டம் கொடுக்க வேண்டுமென்று கருதினால், முழுத்தகவல் அனுப்பச் சொல்லிற்று.

காதும் காதும் வைத்ததுபோல் நான், நகர் மன்றத் தலைவர், திரு இரத்தினசாமி பிள்ளை பற்றிய தகவல்களை கல்லூரி முதல்வர்

மாயிலாகத் திரட்டி அனுப்பினேன்; அவருக்கு இராவ்சாகேப் பட்டம் அளிக்கப் பரிந்துரைத்தேன்.

அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. உரிய நாளில் அறிவிக்கப்பட்டது.

எனக்கு அழைப்பில்லை

சேலம் அன்பர்கள், இராவ்சாகேப் இரத்தினசாமி பிள்ளைக்கு விருந்தளித்துப் பாராட்டினார்கள்.

அந்த ஏற்பாட்டைச் செய்தவர்களில் சிலருக்கு என்மேல் சினம். ஏன்?

கோகுலநாத் மகாசன உயர்நிலைப் பள்ளிக்குத் தற்கால அங்கீகாரமும் தர வேண்டாமென்று சிலர் கூறியதை முன்னர்க் குறித்திருந்தேன்.

அதைக் கேட்காமல் நிலையான ஒப்புதலே பெற்றுத் தந்தேன்.

அதனால் என்மேல் எரிச்சல் கொண்டிருந்த, அவர்கள் எனக்கு அழைப்பு அனுப்பவில்லை.

நாச்சியப்ப கவுண்டருக்கு வேண்டியவன் என்பதால் இரத்தினசாமி பிள்ளை அப்போது என்னிடம் பற்றற்று இருந்தார். எனவே எனக்கு அழைப்பில்லை.

விருந்தில் உரையாற்றுகையில், கல்லூரி முதல்வர், திரு இராமசாமி கவுண்டர், 'திரு இரத்தினசாமி பிள்ளைக்கு இப் பட்டத்தை வழங்கும்படி பரிந்துரைத்த நெ.து. சுந்தரவடிவேலு இங்கு இல்லாதது வருத்தமாய் இருக்கிறது' என்று சொல்லி, இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டார்.

எனக்கு வர வேண்டிய பட்டம்

சில நாள்களுக்குப்பின், கோவை மண்டலப்பள்ளி ஆய்வாளர் திரு இராவ்பகதூர் வி. ஆர். அரங்கநாத முதலியார் சேலம் வந்தார்.

அவருக்கு அவ்வாண்டுதான், இராவ்பகதூர் பட்டம் கொடுக்கப் பட்டது. அதற்காக, உடனே பாராட்டுத் தந்தி அனுப்பியிருந்தேன்.

அது பற்றிப் பேச்சு வந்தபோது -

'என்னுடைய மண்டலத்தில் பல வகையான போர் ஆதரவுப் பணிகளையும் மதிப்பிட்ட உயர்மட்ட பட்டாள அலுவலர்கள், உங்களுக்கு இராவ்சாகேப் பட்டம் கொடுக்க உத்தேசித்திருப்பதாக எனக்கு இரகசியமாக எழுதி, ஒப்புதல் கேட்டார்கள். எல்லோர்

பணியிலும் உங்களுடையது மிக உயர்ந்தது. எனினும், இப்போதைக்கு இராவ்சாகேப் பட்டம் வேண்டாம்; பின்னர் பார்த்துக் கொள்வோம் என்று எழுதிவிட்டேன்.

''நான் அப்படிச் செய்திருக்கக் கூடாது. உங்களைப் போன்றவர்களின் உழைப்பே நான் இராவ்பகதூர் பட்டம் பெற உதவியது. உங்களுக்கு இராவ்சாகேப் கொடுக்க நினைத்ததைத் தடுத்திருக்கக்கூடாது'' என்றார்.

'என் சொல்வேன்! தமிழர்களின் தரித்திரபுத்தி' என்று மேலதிகாரியிடம் சொல்லத் துணிவில்லை; அத் தீங்கைப் பொறுத்துக் கொண்டேன்; வேறு வழி?

அது ஒத்திகை; பிற்காலத்தில் அடுத்தடுத்து உரிய பாராட்டுதலை இழப்பதற்கு ஒத்திகை.

அத்தகைய இழப்பால், மனமுடையாது, உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளாது, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று மக்கள் தொண்டாற்றப் பக்குவப்படுத்தும் நிகழ்ச்சி அது என்பதை அன்று அறியேன்.

பிரதமர் – குடியரசுத் தலைவர் பாராட்டு

பத்தாண்டுகளுக்குப் பிறகு, காலத்தின் கட்டாயம், ஏழை பங்காளன் காமராசரை சென்னை மாநில முதல் அமைச்சராக்கியது.

அதே காலத்தின் கட்டாயம், மாநிலப் பொதுக்கல்வி இயக்குநர் பதவியில் எதிர்பார்த்ததற்கு முன்பே, திடீரெனக் காலி ஏற்படுத்தியது.

பலரைப் பற்றியும், நல்லதும் கெட்டதும் கேட்டு வைத்திருந்த காமராசர், எதிர்பாராத எனக்கு அந்தப் பதவியைக் கொடுத்தார், சுதந்திரத்தையும் கொடுத்தார். தொகை எழுதாத 'காசோலை'யைக் கொடுத்துக் கல்வி வளர்க்கச் சொன்னார்.

பாடுபட மட்டுமே தெரிந்த எளியேன், அதில் மூழ்கி வெற்றி பெற்று வந்தேன்.

கல்வி வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக மட்டுமே முதலில், பள்ளிக்கூடப் பகல் உணவுத் திட்டம் காமராசர் ஆணைப்படி தொடங்கப்பட்டது.

அதன் சிறப்பு அதை நடத்தியவர்கள், உள்ளூர் மக்களின் குழுக்களே பொதுமக்களின் ஈடுபாட்டோடும், நன்கொடையோடும், ஒத்துழைப்போடும் செயல்பட்டது.

ஆசிய நாடுகளிலேயே இதுதான் முதல் மாநிலம் தழுவிய இயக்கம்.

இது 1960 இல் கராச்சியில் கூடிய அகில ஆசிய தொடக்கக் கல்வி மாநாட்டில், ஆசிய நாடுகளுக்கு, இதை ஏற்கும்படி பரிந்துரைக்கப் பட்டது. மீண்டும் 62 சனவரியில் புதுடில்லியில் கூடிய யுனெஸ்கோ கல்வி மாநாட்டில் ஆசிய நாடுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்குள், மக்களைக் கொண்டே, மக்கள் நலனை வளர்க்கும் காந்திய வழியில் பள்ளிச் சீரமைப்பு இயக்கம் தொடங்கப்பட்டது.

தொடக்கத்தில் இரு திட்டங்களும் விளம்பரத்தை ஒதுக்கிவிட்டே பரவிற்று. எவ்வளவு காலம் இவற்றை மறைத்து வைக்க முடியும்?

மதுரை மாவட்டக் காந்தி கிராமக் கல்வி நிலையங்களின் பத்தாம் ஆண்டு விழாவுக்குப் பிரதமர் நேரு வந்தார். அதே விமானத்தில் அவரோடு பயணம் செய்த, இந்திய அரசின் கல்வி அமைச்சகக் கூடுதல் செயலர் திரு சைதீன் என்பவர், பகல் உணவுத் திட்டம் பற்றிப் பிரதமர் நேருவிடம் சொல்ல, அவர் மகிழ்ந்து பாராட்டி, முதல் அமைச்சர் காமராசரிடம் அதுபற்றிக் குறிப்பு கேட்டார்.

அவர், கல்வி அமைச்சர் திரு சுப்பிரமணியம் வழியாக, என்னிடம் இருந்த தகவல்களைத் திரட்டி அனுப்பினார்.

பள்ளிச் சீரமைப்பு இயக்கம் பற்றிக் கேள்விப்பட்ட குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் அதைக் காண விழைந்தார்.

வடஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரில் நடந்த பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் கலந்து கொண்டார்.

இந்த நூற்றாண்டின் முப்பதுகளில் காந்தி அடிகளும் தாமும் சேர்ந்து மேகார் மாகாணத்தில் நடத்த முயன்ற மக்கள் உதவி இயக்கத்தைச் சென்னை மாகாணக் கல்வித்துறை வெற்றிகரமாக நடத்துகிறதென்று இராசேந்திரபிரசாத் பாராட்டினார்.

டில்லிக்குச் சென்ற பின்-

'இவ்வளவு நல்ல பணிபுரியும் இயக்குநருக்கு விருது ஏதும் அளிக்காதிருப்பது வியப்பாக இருக்கிறது. அடுத்து வரும் குடியரசு நாளன்று அவருக்கு விருது அளிக்கலாமா' என்று குடியரசுத் தலைவர் தமிழக முதலமைச்சர் காமராசருக்கு நேர்முகக் கடிதம் எழுதினார்.

பத்மபூஷண் பத்மஸ்ரீ ஆயிற்று

காமராசர், பத்மபூஷண் பட்டமளிக்கும்படி எழுதினார்.

முதலமைச்சரோ, கல்வி அமைச்சரோ அதுபற்றி மூச்சு விடவில்லை.

எனினும், இரண்டு நாள்களில் பெரியவர் ஒருவர் வழியாகத் தகவல் கிடைத்தது.

அப்போது கல்விச் செயலராக இருந்த திரு கே. சீனுவாசனுக்கு அப்பரிந்துரையைப் பொறுக்க முடியவில்லை.

டில்லிக்குச் சென்றார். தமிழ்நாட்டுப் பேராசிரியர் ஒருவரை அணுகினார். அவர் உத்தமர்; அவர் தீங்கு செய்வதற்கு ஒப்பவில்லை.

பிறகு பார்ப்பனரல்லாதார் ஒருவரை அணுகினார்; அவர் மிகுந்த ஆர்வத்தோடு தலை இட்டார்.

என்ன முயன்றும் பட்டம் கொடுப்பதைத் தடுக்கமுடியவில்லை. பத்மபூஷன் பட்டத்தை 'பத்மஸ்ரீ' ஆகக் குறைக்கும் அளவு வெற்றி பெற்றார்.

அந்தச் சதி நடக்கையில், ஒவ்வொரு நடவடிக்கையும் எனக்குத் தெரிந்தது. திரு காமராசரிடமோ திரு சி. சுப்பிரமணியத்தினிடமோ சொல்லியிருந்தால் சதி முறியடிக்கப்பட்டிருக்கும்.

போதிய நெருக்கமும் அடிக்கடி காணும் வாய்ப்பும் பெற்றிருந்தும் அவர்களிடம் சொல்லவில்லை.

'தன் நலனைப் பொறுத்தமட்டில், தாமரை இலைத் தண்ணீராக வாழவேண்டும்' என்ற லட்சியத்தால், அந்தச் சதியை வெல்ல விட்டுவிட்டேன்.

பாரதியார் விருது பறிக்கப்பட்டது

அடுத்து, திரு மீ. பக்தவத்சலனார், பாரதியார் சங்கத் தலைவராகவும் திரு ஆக்கூர் அனந்தாச்சாரியார் அதன் செயலாளராகவும் இருந்த காலம்.

அப்போது, இராணிப்பேட்டை, விடுதலைப் போராட்ட வீரர், சிறை சென்ற தியாகி திரு கே.ஆர். கல்யாணராம அய்யர், எனக்குத் தெரியாமலே, அனந்தாச்சாரியாருக்குப் பரிந்து எழுதினார். என்ன பரிந்துரை?

'பள்ளிகள் வாயிலாகவும், பொது மேடைகள் வழியாகவும் பல்லாண்டுகளாக, பாரதியார் பாடல்களைப் பட்டிதொட்டி எங்கும் பரப்பி வரும் நெ.து. சுந்தரவடிவேலுவின் தொண்டு போற்றத்தக்கது. பாரதியார் சங்கம் அவரைப் பாராட்டி விருது அளிக்க வேண்டும்.' இது அவருடைய பரிந்துரை.

நிரு பக்தவத்சலனார் அதைப் பார்த்தார். 'கல்யாணராம அய்யர் எழுதியிருப்பது முழு உண்மை. இப்போது நெ. து. சுந்தரவடிவேலுவைப் பாராட்டினால் பொறாமை வளரும். அப்புறம் செய்வோம்' என்று முடிவு கூறினார்.

அப்புறம் ஏது? அனந்தாச்சாரியார் இதைச் சொல்லி என்னிடம் அங்கலாய்த்தார். அவருக்கு ஆறுதல் கூறி அனுப்ப அருப்பாடுபட்டேன்.

மூத்தியோர் கல்வி வாரியத் துணைத்தலைவர்

அடுத்து, 1978 ஆம் ஆண்டு பொங்கல் நாள். தமிழகக் கல்வி அமைச்சர் மாண்பு மிகு அரங்கநாயகம் தொலைபேசியில்,-

"மாநில முதியோர் கல்வி வாரியத்தின் துணைத் தலைவராக முதலமைச்சர், உங்களை நியமித்துள்ளார். அந்தத் தொண்டை ஆற்றுகிற முழுப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கச் சொல்லியிருக்கிறார்" என்று சொன்னார்.

அதையே, அன்றே வேறொரு அமைச்சர் என் காதோடு சொன்னார்.

மூத்த தமிழ்ப் பெரியார், அதே செய்தியை இரகசியமாகச் சொன்னார்.

துணைத்தலைவராக நியமிக்கும் ஆணை வந்தது. பொறுப்பு கொடுக்கும் ஆணை மட்டும் இன்றுவரை வரவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் வாரியம் புதுப்பிக்கப்பட்டது. எனக்குப் பொறுப்பு கொடுத்திருப்பார்கள் என்று எண்ணினேன். ஆனால் புதுமிகு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் என்னையே மீண்டும் முதியோர் கல்வி வாரியத் துணைத் தலைவராகப் போட்டார்.

இரண்டிற்கும் இடையிலும், பிறகும் பொன்மனச் செம்மல் புதுமிகு எம். ஜி. ஆர். அவர்களைப் பல பொது நிகழ்ச்சிகளில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எட்டி உட்கார்ந்திருந்த என்னை மிகுந்த பரிவுடன் அழைத்து முதல்வர் எம்.ஜி.ஆர். தம் அருகில் அமர்ந்திக்கொண்டு பேசி இருக்கிறார்.

அதைப் பயன்படுத்திக்கொண்டு என் விஷயத்தில் முதலமைச்சரின் உள்ளத்தை அதிகாரியின் ஆணையாக வெளியிடத் தவறியதை நான் முதல்வரிடம் சொல்லவில்லை.

குத்தூசி குருசாமியின் மகள் டாக்டர் இரஷ்ஷியா தூண்டியும் அதிகாரிகள் செயலைக் கூறவில்லை. ஏன்?

தொண்டிற்குத் துடிக்கக் கடமை உண்டு! ஆனால், பதவிகள், பெருமைகள் ஆகியவற்றில் பற்றுக் கொள்ளத் துடிப்பது இல்லை. காரணம், அது அவாவாகப் பெருத்துவிடும் என்பதால்.

25. கட்டாய இலவசக் கல்விமுறை வந்தது

மிதிவண்டியில் நாச்சியப்பர்

1945 ஆம் ஆண்டு, ஒரு நாள் காலை ஒன்பது மணி; நான் அலுவலக அறையில் அமர்ந்து கோப்புகளைப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

கடைநிலை ஊழியர் அங்கமுத்து, பதற்றத்தோடு உள்ளே நுழைந்து, ''கவுண்டர் அய்யா வருகிறார்கள்'' என்று அறிவித்தார்.

''எந்தக் கவுண்டர் அய்யா?'' என்று கேட்டுக்கொண்டே வெளிப்புறத்தை நோக்கினேன்.

மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவர், நிலக்கிழார், நாச்சியப்பக் கவுண்டர் மிதிவண்டியில் இருந்து நிதானமாக இறங்கியதைக் கண்டேன்.

வீழ்ந்து அடித்துக்கொண்டு வெளியே சென்றேன்.

''கார் என்ன ஆயிற்று? இப்படி மிதிவண்டியில் வருவானேன்? சொல்லி அனுப்பினால், நான் வந்திருப்பேனே!'' என்று சொல்லியபடியே உள்ளே அழைத்து வந்தேன்.

உள்ளே அமர்ந்ததும்,-

''என் காரை மாதாந்திரப் பராமரிப்புக்கு அனுப்பியுள்ளேன். அது மாலையில்தான் வரும். அதுவரை தள்ளிப் போடக்கூடாது என்று எண்ணி இந்த ஆணையை என் கைக்கு வந்ததும் கொண்டு வந்துவிட்டேன்'' என்று என்னிடம் நீண்ட ஆணை ஒன்றை நீட்டினார்.

நான் இரு பக்கங்களையும் படித்து முடிக்கும்வரை பொறுத்திருந்தார்; படித்து முடித்ததும்,-

''இதன் படி ஒன்று, உங்களுக்கு வந்திருக்கலாம். இதில் கண்ட படி, சில குறிப்பிட்ட பேரூர்களைத் தேர்ந்தெடுங்கள். அந்த ஊர்களில் கட்டாய இலவசக்கல்வி முறையைக் கொண்டு வருவதற்கான தீர்மானத்தை நான் போட்டுத் தருகிறேன்.

''ஆணையில் கண்டபடி, அந்தந்த ஊர்களில் பகல் உணவு பெறும் உள்ளூர்க் குழுக்களை நீங்களே தேர்ந்தெடுங்கள்.

''உங்கள் பரிந்துரைப்படி, குழுக்கள் நியமிக்கும் தீர்மானத்தையும் ஆட்சிக் குழுவில் நிறைவேற்றி அனுப்புகிறேன்.

''எல்லா ஊர்களிலுமாகச் சேர்ந்து, நம் மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள எண்ணிக்கையில் சிறுவர் சிறுமியர் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார்.

''அய்யா! இந்த அரசு ஆணைப்படி, கட்டாயக் கல்விக்கான ஊர்களைத் தேர்ந்தெடுக்கவும், அங்கே பகல் உணவுக் குழுக்களை நியமிக்கவும் உங்களுக்கே உரிமை கொடுக்கப்பட்டு உள்ளது.

''அப்படித் தேர்ந்தெடுத்தபின், மாவட்டக் கல்வி அலுவலரோடு கலந்து பேசியபின், வட்ட ஆட்சிக் குழுக் கூட்டத்தில் வைத்து உரிய நியமனங்களை நிறைவேற்றிக்கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறுகிறது.

''எனவே, உங்களுக்குப் பதில், நான் தேர்ந்தெடுப்பது முறையாகாது!'' என்று பதில் கூறினேன்; மெதுவாக நழுவிவிடப் பார்த்தேன்.

''நீங்கள் பொது மனிதர்! உங்கள் நடுநிலைமையில் எனக்கு நம்பிக்கை இருப்பது போலவே, எல்லாப் பெரிய மனிதர்களுக்கும் இருக்கிறது.

''நீங்கள் தேர்ந்தெடுத்துவிட்டால், அவ்வூர்களைப்பற்றிச் சச்சரவு வராது. அதோடு, அவ்வூர்களில் இலவசக் கல்வியை நடைமுறைப் படுத்தி எல்லாச் சிறுவர் சிறுமியரையும் பள்ளிக்குக் கொண்டுவரும் பொறுப்பு பள்ளி ஆய்வாளர்களுடையது.

''நீங்கள் முன்நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால், ஆய்வாளர்கள் ஆலோசனையும் ஒத்துழைப்பும் அதிகமாய் இருக்கும்.

''எந்த ஊர்களைத் தேர்ந்தெடுப்பது என்பதில் உங்கள் முடிவை ஏற்றுக்கொள்ள நான் சித்தமாக இருக்கிறேன்.

''அதேபோல், எந்தக் கட்சிக்காரர்களை நீங்கள் பகல் உணவுக் குழுவில் சேர்த்தாலும் சரி. ஆட்சிக் குழு ஒப்புதல் அளிக்க, நான் உறுதி கூறுகிறேன்.

''இந்த அடிப்படையில் ஒரு நேர்முகக் கடிதத்தையும் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

''நீங்கள் உடனே செயல்படுங்கள். நேரில் பார்த்து ஊர்களையும் ஆட்களையும் முடிவு செய்யுங்கள்'' என்று சொன்னார். அடுத்த கணம் திரும்பி வண்டியேறிப் போய்விட்டார்.

அப்படியே ஒரு மணியில் நேர்முகக் கடிதம் வந்தது.

அவர் என்பேரில் வைத்த நம்பிக்கை, நடக்காதவற்றை நடக்க வைத்தது. பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

அடுத்த நாளே புறப்பட்டு, நாலா பக்கமும் சென்றேன்.

ஆய்வாளர்களையும் ஆசிரியர்களையும் கலந்து பேசினேன்.

எந்தப் பேரூர்களில் பொது மக்கள் ஒத்துழைப்பும் ஆசிரியர் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று கண்டு கொண்டேன்.

ஓசூர் முதல் பரமத்தி-வேலூர் வரை, பள்ளி பாளையம் முதல் ஆத்தூர் வரை ஊர்களைத் தேர்ந்தெடுத்தேன்.

அந்தந்த ஊர்களில் பகல் உணவுக் குழுப் பட்டியலையும் ஆயத்தம் செய்து கொண்டேன்.

இரண்டு பட்டியல்களும் ஆயத்தமான வேளை, அரசு ஆணையின் படிவம் முறைப்படி எனக்கு வந்து சேர்ந்தது.

ஏன் அவ்வளவு தாமதம்?

ஆணை முதலில் பொதுக்கல்வி இயக்குநரகத்திற்குச் சென்றது.

அங்கிருந்து படிகள் எடுத்து எல்லா அலுவலர்களுக்கும் அனுப்பப் பட்டது. எனவே தாமதமாயிற்று.

கட்டாய இலவசக் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கான ஊர்கள் பட்டியலையும் பகல் உணவுக் குழு பட்டியலையும் நாச்சியப்பருக்கு அனுப்பிவைத்தேன்.

அதில் அவருடைய எதிர்க்கட்சிக்காரர்கள் செல்வாக்கு பெற்றிருந்த ஊர்களும் இடம் பெற்றிருந்தன.

சலகண்டபுரம், அரூர், தாரமங்கலம் ஆகியவை நினைவுக்கு வருகின்றன.

நாச்சியப்பர், என் ஆலோசனையை முழுமையாக ஏற்றுக் கொண்டார்.

அதை ஒட்டி, உரிய தீர்மானங்களைப் போட்டு அனுப்பினார்.

கட்டாய இலவசக் கல்வி நுழைவு ஒவ்வோர் ஊரிலும் விழாவாகவே கொண்டாடப்பட்டது.

ஒன்றிரண்டு தவிர, எல்லா ஊர்களுக்கும் நாச்சியப்ப கவுண்டரும் நானும் கலந்து போனோம்; பொதுக் கூட்டங்களில் பேசினோம்.

பாரதி பாடல்களையும் பாரதிதாசன் பாடல்களையும் தாராளமாகப் பயன்படுத்தினேன். பொதுமக்களிடம் விழிப்பை உண்டாக்கி வேகத்தைப் பொங்க வைத்தோம்.

ஒன்றரை அணாவில் சாப்பாடு

அன்று பகல் உணவுத் திட்டம் எப்படிச் செயல்பட்டது?

முழுக்க முழுக்க, வரிப் பணத்திலிருந்து செலவிடப்பட்டது.

ஏழைப் பிள்ளைக்கு வேளைக்கு ஒன்றரை அணாவை அரசு, மாவட்ட ஆட்சிக் குழுவிற்கு அனுப்பியது.

ஆட்சிக் குழு, பிடித்தம் ஏதும் செய்யாமல், முழுப் பணத்தையும் பகல் உணவுக் குழுக்களுக்கு அனுப்பி வைத்தது.

பகல் உணவுக் குழுக்கள் அக்கறை காட்டினவா? காட்டின!

சில ஊர்களில், குழு உறுப்பினர்கள் முறை போட்டுக்கொண்டு மேற்பார்வை யிட்டார்கள்.

மொத்தம் பதினெட்டு ஊர்களில் பகல் உணவு போட்டதாக நினைவு.

காலணா மிச்சம்

அவற்றில், அயோத்தியா பட்டணம், மேச்சேரி ஆகிய இரு ஊர்களில் மிகச் சிக்கனமாக நடந்தது.

எவ்வளவு சிக்கனமாக?

வேளைக்கு, பிள்ளைக்குக் காலணா மிஞ்சிற்று.

உணவின் அளவைக் குறைத்து மிச்சப்படுத்தினார்களா? இல்லை.

உணவின் தரத்தைக் குறைத்தார்களா? இல்லை.

பின் எப்படி மிச்சப்படுத்த முடிந்தது.

குழுத் தலைவர்கள், ஊரில் செல்வாக்கு உடையவர்கள் உணவுப் பண்டங்கள் வாங்குவதை அவர்களே நேரில் கண்காணித்தார்கள்.

அதனால், சற்று மலிவாகப் பண்டங்களை வாங்க முடிந்தது.

மிச்சப் பணத்தில் சீருடை

மிச்சப் பணத்தை என்ன செய்தார்கள்?

அதைச் சேமித்து வைத்தார்கள்! ஊரார் நன்கொடைகளையும் அதனுடன் சேர்த்து, பகல் உணவு உண்ட ஏழைப் பிள்ளைகளுக்குச் சீருடை அளித்தார்கள்.

எல்லா ஊர்களிலும் அல்ல. அயோத்தியா பட்டணம், மேச்சேரி ஆகிய இரு ஊர்களிலும்.

மேச்சேரி குழுவின் தலைவர் திரு சேர்வராயகவுண்டர் என்று நினைவு.

அயோத்தியா பட்டணத் தலைவர் பெயர் நினைவுக்கு வரவில்லை. அவர் ஒரு கருணீகர் என்பது மட்டும் நினைவு வருகிறது.

இவர்கள், எதற்காகவும் உதவி கோரி என்னிடம் வராதவர்கள். எனவே ஒருவர் பெயர் மட்டுமே நினைவு வருகிறது.

புகார் ஒலி

நாச்சியப்பர், அரசு அலுவலரிடம் இவ்வளவு நம்பிக்கை வைப்பதும், அவருக்குத் தாராளமாக இவ்வளவு உரிமை கொடுப்பதும் அருமை.

எனக்குக் கொடுத்த அளவு உரிமையை வேறெவருக்கும் அவர் கொடுத்தது இல்லையாம்.

இத்தனைக்கும் நான் அவர் வீடு தேடிச் சென்றது இல்லை.

ஆனால், வெளியூர்களில் இருவரும் அடிக்கடி சந்தித்திருக்கிறோம். அதன் விளைவாக என் அணுகு முறையிலும் சொல் திறனிலும் முழு நம்பிக்கை வைத்திருந்தார்.

இச் செய்தி எங்கும் பேசப்பட்டது. அலுவலர் வட்டாரங்களிலும் பரவிற்று.

கோவை, மண்டலப் பள்ளி ஆய்வாளர் திரு வி.ஆர். அரங்கநாதர் முதலியார் ஒருமுறை என்னைப் பார்த்து,

''நீங்கள் நாச்சியப்பரோடு கைகோர்த்து நெருக்கமாக இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்'' என்று புகார் ஒலியில் கூறினார்.

''முற்றிலும் உண்மை அய்யா! ஆனால், இருவர் கரங்களும் தூய்மையானவை. அதைப்பற்றி வேறு விதமாகக் கேள்விப்பட்டால் சொல்லுங்கள்'' என்றேன்.

''இருவருமே அப்பழுக்கு இல்லாதவர்கள் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள்; அவர் காங்கிரசுத் தலைவராயிற்றே!'' என்றார்.

''அது அவரைப் பொறுத்தது. அவரது உதவி, கல்வி வளர்ச்சிக்கு, நிபந்தனையின்றிக் கிடைக்கும்போது, அதைப் பயன்படுத்திக் கொள்வதுதானே அறிவு உடைமை'' என்றேன்.

''ஆம்'' என்று அவர் சொன்னது எனக்கு நிறைவைத் தந்தது.

சில நாள்களுக்குப் பிறகு, வாலாஜாபாத் வா. தி. மாசிலாமணி முதலியார் என்னைத் தேடி வந்தார்.

என் நலம் கேட்டபின், -

''தம்பியைப் பற்றி அரங்கநாத முதலியார் பெருமையாகச் சொல்கிறார்.

''ஓயாத உழைப்பு, நேர்மையான, தூய்மையான நடைமுறை, விருப்பு வெறுப்பு இல்லாத பண்பு ஆகியவை நிரம்பியுள்ளன என்று பாராட்டினார்.''

அதைச் சொல்லிவிட்டு ''ஓரளவு தாட்சணியத்திற்குக் கட்டுப்பட்டு, காரியங்கள் செய்தால் நன்றாக இருக்காதா?'' என்றார்.

புன்முறுவலோடு முடிந்தது என் பதில்.

சிற்சில பருவங்களில் சிற்சில பூண்டுகள் முளைக்கும்; மரவட்டை போன்ற ஊர்வன தென்படும்.

அவற்றையொப்ப, சிற்சிலபோது சாதி உணர்வுகள் வெளிப்படும்; சாதிச் சங்கங்கள் தோன்றும்; நல்ல விளம்பரங்களுடன் மாநாடுகள் நடக்கும்.

மேலைப் பேச்சுகளைக் கேட்டால், ஏதோ, திடீரெனக் கொடுமைகள் பொங்குவதுபோலத் தோன்றும்; அவற்றிற்கு எதிரான புரட்சி அணி திரள்வது போன்ற மாயை ஏற்படும்.

அப்படியொன்று அந்தக் காலத்தில் சேலத்தில் நடந்தது.

ஒரு நாள் மாலை சேலம் இலக்கியச் சங்கத்தின் திறந்த வெளியில், இராமானுஜர் காப்பக உயர்நிலைப் பள்ளியில் தருமபுரி கஸ்தூரி பிள்ளையோடு உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தேன்.

இவர், இன்றைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு ஆ. பொன்னையாராமின் தந்தை ஆவார்.

கஸ்தூரி பிள்ளை

வழக்கமாக இருக்கும் மாலைப் பொழுதுகளில் - ஒன்று கல்லூரி முதல்வர் இராமசாமி கவுண்டரோடு, அல்லது இலக்கியச் சங்கத்தில் கஸ்தூரி பிள்ளையோடு உரையாடுவதே என் பொழுதுபோக்கு.

அப்படி உரையாடிக் கொண்டிருக்கையில், மெயில் நாளிதழின் நிருபர் திரு சுப்பிரமணிய அய்யரும், 'இந்து' நாளிதழின் நிருபர் திரு இராமச்சந்திர அய்யரும் சேர்ந்து எங்களிடம் வந்தனர்.

''என்ன செய்தி?'' என்று அவர்களைக் கேட்டேன்.

''செய்தி இருக்கிறது; அதைக் கேட்டுச் சிரிக்காதீர்கள்'' என்று சொல்லியபடியே அருகில் இருந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

''செய்தி என்ன?''

''இப்போது சேலம் பிராமணர்களின் கூட்டத்திலிருந்து நேரே இங்கே வருகிறோம். திரு ஆர்.வி. கிருஷ்ண அய்யர் அக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்.

''பலரும் பேசியபின், சேலத்தில் தங்கள் நலனைக் காப்பாற்றிக் கொள்ள பிராமணர் சங்கம் அமைப்பது என்று முடிவு செய்தார்கள்.

''அந்தச் சங்கச் சார்பில், உயர்நிலைப் பள்ளி ஒன்றைத் தொடங்குவது, பிறகு கல்லூரி, தொழிற்கல்வி நிலையம் ஆகியவற்றைத் தொடங்கி நடத்துவது என்றும் முடிவு எடுத்தார்கள்.

''அவற்றிற்குப் பிராமணர்கள் தாராளமாக நன்கொடை அளிக்குமாறு வேண்டுகோள் விடப்போகிறார்கள்.

''ஓய்வு பெற்ற சட்டப் பேரவைச் செயலாளர், ஆர்.வி. கிருஷ்ண அய்யர் பிராமணர் சங்கத்தின் செயலாளர்'' என்று தகவல் கொடுத்தார்கள். பிறகு, 'ஆண்டிகள் மடம் கட்டின கதைதான்' என்று இருவருமே இணைந்து மதிப்பீடு செய்தார்கள்.

''காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்; அவர்களுக்கு ஆர்வம் இருக்கும்போதே, நடவடிக்கை எடுக்கவேண்டும்.

''சேலம் நகருக்கு மேலும் பல உயர்நிலைப் பள்ளிகள் தேவை; புதிய பள்ளிகள் தோன்றினால்தான் இடநெருக்கடி தீரும். அதற்கு பிராமணர் சங்கத்தின் முடிவு உதவட்டும்.

''நீங்கள் பிராமணர்கள் என்ற நிலையில் போகவேண்டாம். நெ.து.சு.வின் நல்ல நண்பர்களாக, ஆர்.வி.கி. யிடம் நாளையே தூது செல்லுங்கள்.

''அவர்கள் முடிவு செய்தபடி உயர்நிலைப் பள்ளி தொடங்க நான் ஒப்புதல் வாங்கித் தருகிறேன். இப்பொழுது, ஏதாவதொரு பங்களாவைப் பிடித்து அதில் உயர்நிலைப் பள்ளி தொடங்க ஏற்பாடு செய்துவிட்டால், பிறகு பள்ளிக்கேற்ற புதுக் கட்டடம் கட்டிக் கொள்ளலாம்.

''நாளை காலை என் அலுவலகம் வாருங்கள்; உரிய மனுவைத் தருகிறேன். அதைக் கொண்டுபோய், நிறைவு செய்து கொடுங்கள்.

வாருங்கள். நான் விரைந்து இயக்குநரின் இசைவைப் பெற்றுத் தருகிறேன்'' என்றேன்.

''மனுச் செய்வதற்கான தேதி தாண்டிவிட்டதாகக் கூட்டத்தில் சொன்னார்கள். அப்படியிருக்க நீங்கள் கிண்டலா செய்கிறீர்கள்'' என்று நிருபர்கள் என்னை மடக்கினர்.

''நெ. து. சு. வுக்குக் கிண்டல் பேசத் தெரியாது என்பது உங்களுக்கே தெரியும். அவர் எதையும் 'சீரியஸ்' ஆகத்தான் சொல்லுவார். அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள்'' என்று கஸ்தூரி பிள்ளை முட்டுக் கொடுத்தார்.

நிருபர்கள் இசைந்தார்கள்.

அடுத்த நாள் அலுவலகம் வந்தார்கள். மனுவையும் வழிமுறைகளையும் பெற்றுக்கொண்டு சென்றார்கள்.

ஒரு வாரத்திற்குள் மனுவைப்பெற்று வரும்படி சொல்லி அனுப்பினேன்.

'பள்ளிக்காக, தற்காலிக இடங்கள் இரண்டொன்றைப் பார்த்து வையுங்கள். நீங்களும் என்னோடு வாருங்கள். நான் அவற்றைப் பார்த்து, ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறேன்'' என்று ஆர். வி. கிருஷ்ண அய்யருக்குச் சொல்லியனுப்பினேன். அந்தச் செய்தியை அவராலும் நம்ப முடியவில்லை.

நிருபர்கள் நெருக்கி மனுவைப் பெற்றார்கள்; மூன்று கட்டடங்களைக் குறித்துக் கொண்டார்கள்.

நான்கு நாள்களில் எல்லாம் என்னிடம் சேர்ந்தன. முன்கூட்டிச் சொல்லிவிட்டு, திரு ஆர். வி. கி. யையும் நிருபர்களையும் அழைத்துக் கொண்டு கட்டடங்களைத் தணிக்கை செய்தேன்.

எந்தக் கட்டடம் ஏற்றது என்பதில் ஒருமித்த கருத்து உருவாயிற்று.

அக் கட்டடத்தில் புதிய பள்ளி நடக்கஇசைவு தரும்படி, கோவை மண்டலப் பள்ளி ஆய்வாளர் வழியாக, பொதுக்கல்வி இயக்குநருக்குப் பரிந்துரை அனுப்பி வைத்தேன்.

அம் மனு காலந்தவறி வருவதைப் பொருட்படுத்தாது, தேவையைப் பற்றிக் கவனம் செலுத்தி, இசைவு தரும்படி வேண்டினேன்.

சில நாள்கள் சென்றன.

அலுவல் பற்றிச் சென்னைக்குச் சென்ற மண்டல ஆய்வாளரைச் சேலம் சந்திப்பில் கண்டேன்.

''என்ன! பிராமண சங்கம் உயர்நிலைப் பள்ளி நடத்த ஒப்புதல் தரும்படி இவ்வளவு தூரம் பரிந்துரைக்கிறீர்களே!'' என்று குறைபட்டார்.

''உடனடித் தேவை உயர்நிலைப் பள்ளி இடங்களை அதிகப் படுத்தல். பிராமணர்கள் முன்வந்தால், அதைப் பயன்படுத்திக் கொள்வது பொது நன்மைக்கு மிகவும் ஏற்றது.

''ஆர்.வி.கி. பொறுப்பில் குற்றங்கள் புகா. அவர்கள் பையன்களுக்கே இடங்கொடுத்தாலும் பெருங்கேடு விளையாது. அந்த அளவிற்கு இட நெருக்கடி குறைவது உறுதி; பரிந்துரை பெற முடியாதவர்களும் எளிதாக மற்ற பள்ளிகளில் சேரக்கூடும்'' என்றேன்.

''சும்மா கேட்டேன்! உங்கள் பரிந்துரையை ஆமோதித்து உடனே இயக்குநருக்கு அனுப்பி விட்டேன். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லிவிடலாம்'' என்றார்.

இது நடந்தது ஒரு கல்வி ஆண்டின் நடுவில்.

அடுத்த கல்வி ஆண்டின் தொடக்கத்தில் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கும் வகையில், உரிய நேரத்தில் ஒப்புதல் கிடைத்தது.

பெரியவர் திரு ஆர். வி. கிருஷ்ணஅய்யர் என்னைத் தேடி வந்து நன்றி கூறிவிட்டுச் சென்றார்.

அப் பள்ளி, பாரதி வித்யாலயம் என்ற பெயரில், இன்றும் நடந்து வருகிறது; மேனிலைப் பள்ளியாகச் செயல்படுகிறது; பிராமண சங்கத்தின் சார்பில் நடந்தது மாறி, வேறொரு கல்விக் குழுவின் சார்பில் நடந்து வருகிறது.

26. துணிவு குறையவில்லை

குமாரசாமி ராஜாவோடு

திரு நாச்சியப்ப கவுண்டர் நாட்டுப் பற்றாளர் மட்டுமல்லர்; மனிதஇனப் பற்றாளர்; அப் பற்றை வளர்க்கும் சாரண இயக்கத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்; சென்னை மாகாண சாரண இயக்கத்தின் துணை (அஸிஸ்டெண்ட்) ஆணையர்களில் ஒருவராக அவர் பல்லாண்டு செயல்பட்டவர்.

நான் சேலத்தில் அலுவல் பார்க்கையில், அவர் ஏற்காட்டில் மாவட்டச் சாரண ஆணையர்களின் பாசறை ஒன்றைச் சிறப்பாக நடத்தினார்.

அப் பாசறைக்கு வந்தவர்கள் கூடாரங்களில்தான் தங்கவேண்டும்.

அப்போது, இராசபாளையம் திரு பி.எஸ். குமாரசாமி ராஜா இராமநாதபுரம் மாவட்டச் சாரண ஆணையராக இருந்தார். அவர் ஏற்காட்டிற்கு வந்து பாசறையில் பங்கு கொண்டார்.

நாச்சியப்பரின் அழைப்பின் பேரில் நானும் அங்குச் சென்று ஒரு நாள் சாரணர் பாசறையில் தங்கி இருந்தேன்.

அப்போது எனக்கும் குமாரசாமி ராஜாவுக்கும் ஒரே கூடாரத்தில் இடம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மூத்தவராகிய அவர்-காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராகிய அவர்-என்னிடம் பாசத்தோடு பழகினார்; கலகலப்பாகப் பேசினார்.

பிற்காலத்தில் அவர் சென்னை மாகாண முதலமைச்சராவார், அப்போது துணை இயக்குநராக உயர்ந்துவிட்ட என்னை அடையாளம் கண்டுகொள்வார், கூடார வாழ்வை நினைவு படுத்துவார் என்று கூடாரத்தில் இருக்கையில், நான் நினைத்துப் பார்க்கவில்லை.

அந்தச் சாரண இயக்கத்தின் மாகாண ஆணையராக என்னை அழைப்பார்கள்; அதில் தொடர்ச்சியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் பணிபுரிய நேரிடும்,-

அப்புறம், நான் அரசு ஊழியன் என்ற பரிதாப நிலையைப் பயன்படுத்தி, அப் பதவியில் இருந்து என்னை விலகிக் கொள்ளும்படி, கல்வி அமைச்சர் பக்தவத்சலம் ஆணையிடுவார்,-

அவ்வளவு நீண்ட பணிக்கு உரிய 'வெள்ளி யானை'ப் பரிசை தில்லித் தலைமை நிலையம் அனுப்பியதை அப்படியே அழுத்தி வைப்பார்கள் என்று அன்று ஏற்காட்டில் கனவு காணவில்லை.

'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்று தானேவந்த பணிகளை ஏற்றுச்செய்ய, அது என்னை எங்கெங்கோ தள்ளிக் கொண்டு போயிற்று; இன்றும் தள்ளிக் கொண்டிருக்கிறது.

கருத்து உரிமை

நான் சேலத்தில் பணி புரிகையில் பொதுக்கல்வி இயக்குநர், உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் சிறிய சீர்திருத்தம் ஒன்றை அறிவித்தார்.

அது என்ன?

உயர்நிலை வகுப்புகளில் வாரந்தோறும் சில 'பீரிடு'கள் கைத்தொழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதாம்.

என்ன கைத்தொழில்கள்?

கைத்தறி நெசவு, தச்சுவேலை, தையல், காய்கறித் தோட்டம் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யும்படி அறிவிப்பு வந்தது.

அவ் வறிவிப்பு வந்த அன்று மாலை, எடப்பாடி பள்ளிக்கூட ஆண்டு விழா நடந்தது.

நாச்சியப்ப கவுண்டரும் நானும் அதில் கலந்து கொண்டோம்.

என் உரையில், பள்ளிப் படிப்பில், கைப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதை விளக்கமாக வரவேற்றேன்.

ஆனால், பெரிய கேள்வி ஒன்றைத் துணிந்து எழுப்பினேன்.

''நம் இளைஞர்களுக்கு இந்தக் காலத் தொழில்களைக் கற்றுத் தரக்கூடாதா? புதிய பட்டறைத் தொழில், மின்கம்பி இணைப்பு வேலை, அதிக நுட்பமில்லாத பொறியியல் ஆகியவற்றைப் பயின்று கொள்ள அவர்களால் முடியாதா?'' என்று பொதுமேடையில் கேட்டேன்.

'இளங்கன்று அச்சமறியாது' என்பதை மெய்ப்பிக்கும் வகையில் 'பிரபேசனில்' இருந்தபோதே, இயக்குநர் அறிவிப்பு பற்றி இப்படித் துணிந்து கேட்டுவிட்டேன்.

அது அடுத்த நாள், 'மெயில்' நாள் இதழில் கொட்டை எழுத்துகளில் வெளியாயிற்று.

அப்போது, எனக்குச் சற்றுக் கவலை ஏற்பட்டது. 'கல்வித் துறையில் ஒழுங்கிற்கு முரண்பாடு அல்லவா?' என்று எண்ணித் திகைத்தேன்.

ஆனால், கல்வித் துறை என்பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை; பரிவாலா? பாராமுகத்தாலா? இல்லை.

அந்தக் காலத்தில் கல்வியாளர்கள், மறைக்காமல் கருத்து தெரிவிப்பதை எதிர்பார்த்தார்கள்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, அரை வேளை படிப்பு முறையை முதல்வர் இராசாசி கொண்டு வந்தார்.

அப்படி ஆணையிடுவதற்கு முன்பு, நான் அதற்கு எதிரான குறிப்பு ஒன்றை எழுதிக்கொடுத்தேன். சிறிது கால தாமதத்திற்குப் பின், இராசாசி அதைத் தெரிந்துகொண்டார்.

ஆனால், என்னைத் தண்டிக்கவில்லை: வெகுளக்கூட இல்லை. மாறாக, என் திறமையையும் பாராட்டி, கோப்பு ஒன்றில் பதிந்து வைத்தார்.

காமராசர் காலத்தில், ஓராசிரியர் பள்ளிகளைச் சில ஆயிரக்கணக்கில் திறந்தோம். ஓர் ஆசிரியர் பள்ளி திறப்பு வீண் என்று மாவட்டக் கல்வி அதிகாரி ஒருவர், பொதுக்கூட்டத்தில் தம் கருத்தைச் சொன்னார். அதுவும் நாளிதழ்களில் வெளியாயிற்று.

அப்படிப் பேசிய திருவேங்கட வரதன் பேரிலும் நடவடிக்கை ஏதும் இல்லை.

பின்னொரு சமயம், கல்வி அமைச்சர் சுப்பிரமணியம்-

'இயக்குநர் கல்விக்கு ஆலோசகர். அவர் கட்டுகளின்றி, சிந்திக்கவும் மாறும் கருத்துகளைக் கூறவும் உரிமை பெற்றிருக்க வேண்டும். அத்தகைய உரிமையைச் சென்னை அரசு கட்டுப்படுத்த விரும்பவில்லை' என்று இந்திய அரசிற்குப் பதில் எழுதினார்.

உரிமை பற்றிப் பேசிப் பயன் என்ன?

எடப்பாடி பேச்சு வெளியான உடனே, ஈரோடு டாக்டர் எல். கே. முத்துசாமியிடம் இருந்து எனக்குக் கடிதம் ஒன்று வந்தது.

'பொடி மாணவப் பருவத்தில், வனமலர்ச் சங்க உறுப்பினராக இருந்த காலத்தில், உன்னிடம் கண்ட சுயசிந்தனையும் துணிவும் இவ்வளவு காலத்திற்குப் பிறகும் அப்படியே இருப்பதை எடப்பாடி பேச்சு காட்டுகிறது. நான் பூரிக்கிறேன்' என்று எழுதி இருந்தார்.

சேலம் மாவட்டத்தில் அன்று மிகப்பெரிய கல்வி அறக்கட்டளை ஒன்று நடந்து வந்தது. அது கந்தசாமி கண்டர் என்பவரால் நிறுவப்பட்டது.

பிள்ளைப்பேறு பெறாத, பெருஞ்செல்வர், கந்தசாமி கண்டர், சொத்தம் முழுவதையும் கல்வி அறக்கட்டளையாக எழுதி வைத்தார். அதைக் கொண்டு பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும் கொடுக்கும்படி எழுதி வைத்தார்.

இந்த நூற்றாண்டின் நாற்பதுகளில் அவ் வறக்கட்டளையின் சார்பில், பவானி வேலூரில் தொடக்கப் பள்ளியும் உயர்நிலைப் பள்ளியும் நடந்து வந்தன.

அந்த அறக்கட்டளை பத்திரத்தைப் பார்த்தபோது, அதைக்கொண்டு வேலூரிலேயே நடத்தலாமென்று உணர்ந்தேன். அதைத் தாளாளர் திரு. பரிமள கண்டர் இடம் கூறினேன்.

அவர் பணிவோடு கூறினார்.-

வேலூரிலோடு தொழில் நுட்பப் பள்ளி நடத்தவும் நிதி இருக்கிறது என்பது உண்மை. அவற்றை நிறுவினால், வேலை வாங்க ஆள் வேண்டுமே!

'சாதாரணப் படிப்புடைய நான், பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆணையிட நேரிடும்போது பெரிதும் வருந்துகிறேன். கல்லூரிப் பேராசிரியர்களுக்கு ஆணையிட எனக்கு வாய் வராதே!

'வள்ளல் பெருமான் ஒரு நாள் உங்கள் விருப்பத்திற்கும் வழி காட்டுவார். எங்கள் குடும்பத்தில் எவராவது ஒரு நல்ல பிள்ளை, பட்டம் பெற்று, பண்பட்டு வரட்டும். அவரை வைத்துக்கொண்டு உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன்!'

அவர் சொன்ன சொல்லைக் காப்பாற்றினார். எப்படியென்று, பின்னர், உரிய இடத்தில் விரிவாகக் கூறுவேன்.

தகாத உறவு

பொது ஊழியத்தில் இருப்பவர்கள்மேல், மெய்யாகவும் புகார் வரும்; பொய்யாகவும் வரலாம்.

அத்தகைய புகார்களைவிட விசாரிப்பதில் தேவையான மனிதத் தன்மை தேவை.

விசாரிக்கப்படுபவரை அதிகமாக மிரட்டினால் அல்லது இழிவு படுத்திவிட்டால், அது மற்ற அரசுப் பணியாளர் இடையே பீதியையும் கசப்பையும் வளர்த்துவிடும்.

அதனால், பணியாளர்கள் வெறும் 'முன் பளு' 'பின் பளு' கற்களாக மாறிவிடுவார்கள்.

சேலம் மாவட்டக் கல்வி அலுவலராக இருந்தபோது, நான் பொல்லாத புகார் ஒன்றை விசாரிக்க நேர்ந்தது.

'ஓசூரில் பள்ளி ஆய்வாளர், அங்கு மாறுதல் ஆகிவரும்போது முந்தைய சரகத்தில் தொடர்பு கொண்ட ஓர் ஆசிரியையை அழைத்து வந்துள்ளார்.

'தன் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த அம்மாளுக்கு ஊராட்சிப் பள்ளி ஒன்றில் வேலை வாங்கிக் கொடுத்துள்ளார். அவளோடு தொடர்பு வைத்துள்ளார். பல ஊர்களுக்கு அழைத்துக்கொண்டு போனார்' என்று புகார் எழுதியவர்கள், ஊர்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தார்கள்.

அத்தகைய அசிங்கமான புகாரை அப்போதுதான் முதன்முறை கண்டேன். கலக்கமடைந்தேன்.

'உண்மை புலப்பட வேண்டுமே! நீதி வழங்கப்பட வேண்டுமே! தேவைக்குமேல் ஆய்வாளருக்குப் பழி ஏற்படாது இருக்க வேண்டுமே!' என்று கலங்கினேன். சிலநாள் என் தூக்கம் கெட்டது.

பிறகு, திடீரென ஒசூர் போய்ச் சேர்ந்தேன்.

ஆய்வாளர் வெளியூர் சென்றிருந்தார்.

மாவட்ட ஆட்சிக்குழுவின் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கிருஷ்ணசாஸ்திரிக்குச் சொல்லி அனுப்பினேன், அவர் என்னைப் பயணிகள் விடுதியில் கண்டார்.

கல்வி பற்றிப் பலவற்றைப் பேசியபின் மெல்ல ஆய்வாளர் பற்றிக் கேட்கத் தொடங்கினேன். ''சுறுசுறுப்பானவர்; பெரிய குடும்பி; அய்ந்தாறு பிள்ளைகள்; அவரது சொற்ப ஊதியத்தைக் கொண்டே வாழவேண்டிய நிலை; எனினும் கையூட்டுப் பெறாதவர். வேலை தெரிந்தவர்; வேலைக்குச் சுணங்காதவர்'' என்று சாஸ்திரியிடம் இருந்து தெரிந்துகொண்டேன். அப்புறம்-

''சங்கடமான தகவல் கேட்கப் போகிறேன். உண்மை தெரிந்துவிட்டால் பரிதாபத்திற்குரிய அவரைக் காப்பாற்றினாலும் காப்பாற்றலாம். ஆகவே ஒளிக்காமல், உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள்.

''அவர், 'பெண் வேட்டைக்காரர்' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு ஓர் ஆசிரியை பெயரைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்'' என்று கூறி ஆசிரியை பெயரைச் சொன்னேன்.

''இது உண்மைதான். அவரைப்பற்றி நான் வருந்தவில்லை. சின்னஞ் சிறுகுகளாகிய குழந்தைகள் எப்படிப் பிழைக்கும்? அப்பாவி மனைவி எப்படி வாழ்வாள்? என்று எண்ணியே கவலைப்படுகிறேன்'' என்றார், சாஸ்திரி.

''இவ்வளவு தெரிந்திருந்தும் பழுத்த பழமாகிய நீங்கள் கனிவுமையோடு அவருக்குப் புத்தி சொல்லித் திருத்தியிருக்கலாமே!'' என்று கேட்டேன்.

''பல முறை வலிய அறிவுரை கூறினேன். அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை. என் வீட்டிற்கு அடுத்த வீட்டில் குடியிருக்கும் அவர், சில நாள்களாக என்னோடு பேசுவதுகூடக் கிடையாது'' என்று குறைபட்டுக் கொண்டார்.

ஆய்வாளர் போன ஊருக்கு ஆள் அனுப்பினேன். அவர் வந்ததும் தனியாக வைத்துக்கொண்டு ''உம்முடைய அந்தரங்கங்களைக் கேட்க வேண்டிய சங்கடத்திற்கு என்னைத் தள்ளி விட்டீர்கள்.

''உங்கள் பெரிய குடும்பத்தை நடுத்தெருவில் தவிக்க விடுவதா என்று வருந்துகிறேன்.

''.....என்ற பெயருடைய அம்மாளை வேறு சரகத்திலிருந்து அழைத்துவந்து இங்கு வேலை வாங்கிக்கொடுத்து, கூடா நட்பு கொண்டிருப்பதாகப் புகார் வந்திருக்கிறது. அதையெல்லாம் கேட்க நான் விரும்பவில்லை.

''நீங்கள் அப்படிப்பட்ட தவறு செய்து கொண்டிருப்பதால், உங்களைத் திருத்தவும் காக்கவும் ஓர் உபாயம் தோன்றுகிறது. நீங்களே, தொலைவில் உள்ள மேட்டூர் பயிற்சிப் பள்ளிக்கு மாறுதல் கோரி எழுதிக்கொடுங்கள்.

''அந்த மாறுதலைப் பெற்றுத் தருகிறேன். அப்போதாவது இத்தகைய தவறுகளுக்கு வாய்ப்பு குறையலாம். இதைப்பற்றி யோசித்துச் சொல்லலாம்'' என்று இழுப்புக் கயிறு கொடுத்தேன்.

அவர் அதைப் பற்றிக்கொண்டு கரை ஏற மறுத்துவிட்டார்.

''நீங்கள் விசாரித்துக் கொள்ளலாம்'' என்று பதில் கூறிவிட்டார்.

அந்தத் தொல்லையில் இருந்து நான் தப்ப முடியவில்லை.

முதலில், புகாரில் குறித்திருந்த ஊர்களுக்குச் சென்றேன். ஆய்வாளரின்றிச் சென்றேன். ஆங்காங்கு இருந்த பள்ளிகளைப் பார்த்தேன். ஆய்வாளர் எழுதி வைத்திருந்த குறிப்புகளில் இருந்து அவ் ஊர்களுக்குக் குறிப்பிட்ட நாள்களில் வந்தது மெய் என்பதைப் புரிந்துகொண்டேன்.

குறிப்பிட்ட பயணிகள் விடுதிகளுக்குச் சென்று தங்கினேன். அந்த அம்மாள் அவ் விடங்களில் தங்கியதற்குப் பதிவுக் குறிப்புகள் இருந்தன. ஆசிரியை அம்மாளின் பெயரில் இருவர் தங்கினார்கள் என்று குறித்து, கட்டணம் வாங்கப்பட்டிருந்தது.

இப்படி அடிப்படைத் தகவல்களைத் திரட்டிக்கொண்டு போனேன். ஆய்வாளரிடம் பேசி, மறுபரிசீலனைக்குத் தவணை கொடுத்தேன்.

அவரிடமிருந்து இதுபற்றி எவ்விதக் குறிப்பும் வரவில்லை. மீண்டும் ஓசூர் சென்றேன். ஆய்வாளரை வைத்துக்கொண்டு உரியவர்களை விசாரித்தேன். புகார் உண்மை என்று இயக்குநருக்கு அனுப்பி விட்டேன்.

என்ன தண்டனை கொடுப்பது என்று நான் எழுதவில்லை.

பொதுக்கல்வி இயக்ககம் அந்த அறிக்கையை ஊழல் விசாரணை ஆணையருக்கு அனுப்பியது.

அவர் பல திங்களுக்குப்பின் என்னையும் விசாரணைக்கு அழைத்தார்.

ஆணையர் அந்த ஆய்வாளர் முன்னிலையில் என்னைக்கடிந்து கொண்டார்.

இப்படிப்பட்ட காமுகனுக்கு நீங்கள் இரக்கங்காட்டி இருக்கக்கூடாதென்றார்.

ஆணையர் ஆய்வாளரை வேலை நீக்கம் 'டிஸ்மிஸ்' செய்யும் படி பரிந்துரைத்தார். அப்படியே நடந்தது.

ஆனால், இடைக் காலத்தில், அப்போதைய இயக்குநர், பார்ப்பனர் மேல் பகைகொண்டு நான் அப்படி அறிக்கை கொடுத்துவிட்டதாக, ஆணை இயக்குநர்களிடம் கூறினாராம்.

பிறகு அறிக்கை முழுவதையும் படித்தபோது, அவருக்குத் தெளிவு பிறந்ததாம்.

கடைநிலை ஊழியரின் நாணயம்

ஒரு நாள், ஓர் ஆய்வாளரைப் பற்றிய இரகசியப் பதிவேடுகளை அனுப்பும்படி மண்டல ஆய்வாளரிடமிருந்து எனக்குக் கடிதம் வந்தது.

அப்போதுதான் சேலம் மாவட்டக் கல்வி அலுவலகத்தின் இரகசியப் பெட்டியைத் திறந்து பார்த்தேன்; பதிவேடுகளைப் புரட்டிப் பார்க்கையில், நூறு ரூபாய் நோட்டொன்று தென்பட்டது.

உடனே தலைமை எழுத்தரை அழைத்தேன். அவர்முன், எல்லா ஏடுகளையும் சோதித்தேன். ஒன்றில் மட்டுமே அத்தகைய நோட்டு இருந்தது.

'அப் பணம் எப்படி வந்து இருக்கும்? எனக்கு முன்பு இருந்த திரு. நியாகராய பிள்ளை எவரிடமும் கையூட்டுப் பெற்று இருக்கமாட்டாரே!' என்றேன்.

தலைமை எழுத்தர் சொன்னார்.

''நியாகராயபிள்ளை அலுவலக அறையில் இரவு மறைந்தார். அவர் மேலை மேல் நாள்குறிப்பு இருந்தது. மேசைக்குள் காசுப்பை இருந்தது. நாள்குறிப்பில் கணக்கு எழுதியிருந்தார். அதோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் ரூபாய் நூறு குறைவாக இருந்தது.

''உற்றார் அவருக்குப் பணிவிடை செய்த ஊழியனைச் சந்தேகித்துத் தொலைத்தார்கள். அவன் அப்படிச் செய்யக்கூடியவன் அல்ல.

''இருந்தாலும், துப்பும் துலங்காமல், பணமும் கிடைக்காமற் போகவும் அவன் பேரில்தான் சந்தேகம் ஏற்பட்டது.

''இப்போது அவன் ஒரு பாவமும் அறியாதவன் என்பது புலப்பட்டுவிட்டது. இது தியாகராயபிள்ளையின் பணம். அவர் அரை இரகசியப் பதிவு ஏடுகள் வைக்கும் பெட்டியில் பதுக்கி வைத்திருக்கிறார்'' என்று சொன்னார்.

கடைநிலை ஊழியர் பழனியை அழைத்தேன். ''காணாமற் போன நூறு ரூபாய் இதோ பெட்டியில்; நீ கவலைப் படாதே!'' என்றதும் பழனியின் முகம் அன்றலர்ந்த தாமரையாக ஒளி விட்டது.

பல நாள்களாக அவர் ஏக்கத்தில் இருந்ததற்கும் காரணம் விளங்கிற்று.

சில ஆண்டுகளுக்கு முன் பழனி இறந்துவிட்டார். இவர் பிள்ளை வேலைக்குத் திண்டாடினார்.

என்னால் அவருக்கு வேலை வாங்கித்தர முடியவில்லை. இன்றும் திண்டாடுகிறாரோ என்னவோ?

உயர்நிலைப் பள்ளிக்கு ஊரார் உதவி

சேந்தமங்கலம் என்ற ஊரில், காலம் சென்ற இயக்குநர் சர் மெவரல் ஸ்டேதம் நினைவு நிதிக்குப் பணம் திரட்டும் பொருட்டு அவ்வூர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்கள்.

அந் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவதற்காக நான், நாமக்கல் ஆய்வாளர் ஆராவமுத அய்யங்காருடன் அங்குப் பகல் 10 மணிபோல் போய்ச் சேர்ந்தேன்.

வேறு இடம் இல்லாமையால், ஊராட்சி அலுவலகத்தில் நான் தங்க ஏற்பாடு செய்தார்கள்.

அப்படித் தங்கியிருக்கையில், ஊராட்சித் தலைவர் அங்கு வந்து சேர்ந்தார்.

எனக்கு மாலை யணிவித்து, வரவேற்புக் கூறினார். அவர் முப்பது வயதுக்குட்பட்ட இளைஞர்; 'உடையார்' என்பது அவருடைய பெயர்.

உரையாடலின்போது, ''சேந்தமங்கலம் போன்ற பெரிய ஊருக்கு உயர்நிலைப் பள்ளி தேவை. அதற்குத் தேவை அய்ந்து ஏக்கர் நிலக்கொடை; மூன்று ஆண்டு நிகரச் செலவிற்காக ரூபாய் அய்யாயிரம் கட்டவேண்டும். இவை பெரிய பளு அல்லவே! ஏன் இவற்றைத் தந்து உயர்நிலைப் பள்ளியைப் பெறக்கூடாதா?'' என்று கேட்டேன்.

உடையார் நாட்டுப்புற பாணியில்-

''ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சுந்தரம்செட்டியார் இந்த மனுக்காரர். அவரை இரண்டு முறை முயன்று பார்த்து ஓய்ந்துவிட்டார். அவரால் ஆகாதது உங்களால் ஆகிவிடுமா?'' என்று தூக்கி ஏறியும் அழுத்தமான குரலில் பதில் உரைத்தார்.

ஆராவமுத அய்யங்காருக்கு வெகுளி பொங்கிற்று, ''எங்கள் மாவட்ட அதிகாரியை என்ன என்று எண்ணி விட்டீர்கள்?'' என்று தொடங்கிப் பொரிந்தார். அவரை அமைதிப்படுத்திவிட்டு,-

''ஊதுகிற சங்கை ஊதுவோம்; விடியும்போது விடியட்டும்; இன்னொரு முறை முயலுங்கள். நான் இங்கிருந்து சேலத்திற்குப் புறப்படும்முன் ஊர்ப் பெரியவர்களைக் கலந்து பேசி, எனக்குப் பதில் சொல்லுங்கள்'' என்று உடையாருக்குச் சொல்லி அனுப்பினேன்.

கலை நிகழ்ச்சி தொடங்கும்போது இருட்டிவிட்டது. அப்போது அங்கு வந்த உடையார், ''அய்யா, ஊரார் பணம் கொடுக்க முன் வருகிறார்கள். இரண்டொரு திடல்களையும் பார்த்து வைத்துள்ளோம். அதில் எது ஏற்றது என்று பார்த்துச் சொல்லுங்கள். அதை நன்கொடையாக வாங்கித் தருகிறேன்'' என்று சொன்னார்.

விடியற்காலை அய்ந்தரை மணிக்கு விளக்குகளின் ஒளியில் மூன்று திடல்களைப் பார்த்து ஒன்றைத் தேர்ந்தெடுத்தேன். ஆறு மணி பேருந்தைத் தாமதிக்க வைத்து, அதில் என்னை ஏற்றி அனுப்பினார்.

சேலம் பேருந்து நிலையத்தில் நாச்சியப்பர், டாக்டர் ராஜாராம் நர்சிங் இல்லத்தில், கை கட்டிக்கு அறுவை மருத்துவத்திற்குப் பிறகு ஓய்வு எடுத்துக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். முதலில் அவரைப் பார்க்கச் சென்றேன்.

நாச்சியப்பரிடம் சேந்தமங்கலத்தாரின் உயர்நிலைப் பள்ளி பற்றிக்கூறினேன்.

''இன்றே எனக்கு எழுதிவிடுங்கள். நான் ஆட்சிக் குழுவின் தீர்மானத்தைப் போட்டு, உடனே மனு அனுப்புகிறேன்'' என்றார்.

நாச்சியப்பரின் தலையீடு

அடுத்து, ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தார். அது அப்போதைய கல்வி அமைச்சர் மாண்புமிகு அவினாசி லிங்கனாருக்கு எழுதப்பட்டது.

''நெ. து. சு. வை, மூன்றாண்டு முடிவதற்குமுன், மதுரைக்கு மாற்ற இயலிப்பதாகக் கேள்விப்பட்டேன். கட்டாய இலவசக் கல்விப் பொறுப்பு முழுவதையும் அவரிடமே ஒப்படைத்துள்ளேன். அவர்

இங்கு வந்து, இரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆகின்றன. எனவே, தயவு செய்து தலையிட்டு, மாறுதல் ஆணையை மாற்றி விடுங்கள்'' என்று நாச்சியப்பர், நேர்முகக் கடிதம் எழுதியிருந்தார்.

''என்னிடம் சொல்லாமல் இப்படிச் செய்துவிட்டீர்களே! நான் தங்களிடம் சொல்லி நெருக்கியதாக நினைத்துவிட்டால், எனக்குத் தீங்காக முடியுமே?'' என்று சொல்லிக் கலங்கினேன்.

''செய்தி நம்பகமானது; உடனே தடுத்தால்தான் தடுக்க முடியும். எனவே எழுதிவிட்டேன். ஆத்திரப்பட்டு, உங்களைப் பற்றித் தவறாக எண்ணுபவர்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எந்த ஆண்டிக்கு எந்த மடம் சதம்'' என்றார்.

நடந்தது நடந்தாயிற்று; அதை மாற்ற இயலாது. ஆகவே பொறுமையாக இருந்தேன்.

இரண்டு நாள்களில் நாச்சியப்பருக்கு, 'முடியாது' என்ற பதில் வந்தது. மதுரைக்குத் திறமையான அலுவலர் மிகத்தேவை. ஆகவே நெ. து. சு.வை மாற்றி உள்ளோம். என்று கல்வி இயக்குநர் நாச்சியப்பருக்குப் பதில் எழுதியிருந்தார்.

எப்படி இருந்தால் என்ன?

அடுத்த மடத்திற்குச் செல்ல ஆயத்தப்பட்டேன்.

27. மதுரை மாவட்டக் கல்வி அலுவலர் பொறுப்பேற்றேன்

மதுரைக்கு மாற்றல்

எதிர்பார்த்தபடி, மாறுதல் ஆணை வந்தது, மதுரைக்கு விரைந்து சென்று பொறுப்பை ஏற்கும்படி சொல்லிற்று.

முதலில் சீகாகுளத்திற்குச் சென்றபோது தயக்கத்தோடு சென்றேன். அங்குப் போன பிறகு, மூன்று ஆண்டுகாலம் முழுவதும் இருந்து விட்டுப் போகலாமே என்ற அவா மின்னிற்று.

சேலத்தில் இருந்து மதுரைக்கு மாறுதல் ஆனபோதும் அதே உணர்வு பொங்கிற்று.

கிருஷ்ணகிரி மலை, சங்ககிரி மலை இரண்டையும் ஏறிப்பார்த்தது போல், கொல்லி மலைக்குச் சென்றுவர விரும்பினேன். அப்போது கொல்லி மலைக்கு வண்டிப்பாதை கிடையாது.

இருப்பினும், திரு. நாச்சியப்பர் என்னை அங்கு அழைத்துப் போக எண்ணி இருந்தார். நானும் ஆசை வைத்திருந்தேன். அது பலிக்க வில்லையே என்ற ஏக்கம் எழுந்தது.

நான்கு ஆண்டுகளாக, விடுப்பே எடுக்காத நான், பதினைந்து நாள்களாவது விடுப்பு எடுத்துக்கொண்டு, ஏற்காடு சென்று ஓய்வு எடுக்கலாமென்று என் மனைவி ஆலோசனை கூறியிருந்தார்.

இன்றைய உயர்நீதி மன்ற நீதிபதி மாண்பமை நடராசனுடைய தந்தையார, திரு. சுப்பராய முதலியாருக்கு ஏற்காட்டில் நல்ல பங்களா இருந்தது. அதில் தங்கும்படி அவரும் அன்புடன் வேண்டிக் கொண்டு இருந்தார்.

ஆகவே, சேலத்தில் பதவியை ஒப்படைத்துவிட்டு, பதினைந்து நாள்கள் ஏற்காட்டில் தங்கிவிட்டுப் போகலாம் என்று நண்பர்கள் கூறினார்கள்.

மாறுதல் செய்ததும் விடுப்பில் போவதைப்பற்றி மேலதிகாரிகள் தவறாகக் கருதக் கூடுமென்று அஞ்சி, அப்படிச் செய்ய மறுத்து விட்டேன்.

வழியனுப்பு விழா

எனக்கு வழியனுப்பு விருந்துகள் நடந்தன. அதிகாரிகள் மன்றத்தின் விருந்திற்கு, மாவட்ட நீதிபதி போன்ற அதிகாரிகள் வந்து சிறப்பித்தார்கள்.

நான் அம் மன்றத்திற்கு ஒழுங்காகச் சந்தா செலுத்தி வந்த போதிலும், எப்போதாதோ ஒரு முறையே அங்குச் சென்று பெரியவர்களோடு பழகியவன்.

இருப்பினும், விருந்திற்கு வந்து என்னை வாழ்த்தி அனுப்பியது, பொது மக்களோடு தோழமை கொள்வது போலவே அதிகாரிகளோடும் தோழமையாய் இருக்கவேண்டும் என்று எனக்கு நினைவுறுத்துவதுபோல் அமைந்தது.

எங்கள் சேலம் வாழ்க்கையின்போது, நாங்கள் பெற்ற இனிய தொடர்புகளைச் சொல்லாமல் போக மனம் வரவில்லை.

வேதநாயகத்தின் பாசம்

எனக்கு, அம் மாவட்டத்தின் எல்லாத் தலைமை ஆசிரியர்களும் வேண்டியவர்களே. இருப்பினும், சேலம் நகர இலண்டன் கிறித்துவ கல்லூரியின் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், திரு. வேதநாயகம்

மறக்க முடியாதவர். அவர் திறமையான தலைமையாசிரியர்; பலருடைய நம்பிக்கைக்கும் உரியவர்; இனிமையாகப் பழகக்கூடியவர்; எனக்கு உற்ற நண்பர்களில் ஒருவர்.

போர் ஆதரவுப் பணியிலும், சர் மெவரல் ஸ்டேதம் நினைவு நிதி திரட்டுவதிலும் எனக்குத் துணை நின்றவர். அவர் ஓய்வு பெற்றபின், சென்னை நகரில் பல்லாண்டு வாழ்ந்து வந்தார்; முதுமையிலும் ஆண்டுக்கு ஒரு முறையாகிலும் - பெரும்பாலும் ஆண்டின் முதல்நாள் - என் இல்லம் வந்து, என்னை வாழ்த்தி விட்டுப் போவார்.

அந்த அன்பர் மறைந்தபோது எனக்குத் தகவல் கிடைக்கவில்லை. நான் அவருக்கு இறுதி வணக்கம் செய்யும் வாய்ப்பினை இழந்துவிட்டேன்.

மாணிக்கம் பிள்ளை

திரு. மாணிக்கம் பிள்ளை என்பவர் சேலம் நகர் மன்ற உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர்; தமது சொந்தச் செலவில் கல்வி பற்றி உயர் பயிற்சி பெற இங்கிலாந்திற்குச் சென்றார்.

ஆனால், தட்பவெப்ப நிலை அவருடைய உடலுக்கு ஒத்து வரவில்லை; பாதியில் திரும்பிவிட்டார். இவரும் வாழ்நாள் முழுவதும் என்னிடம் பற்று உடையவராக இருந்தார்.

சேலம் நினைவுகள்

ஏற்காட்டில் மாண்ட்போர்டு உயர்நிலைப் பள்ளி என்ற பெயரில் ஒரு கல்வி நிலையம் இயங்கி வருகிறது.

'ஆங்கிலோ இந்தியப் பள்ளி முறை'யில் இயங்கும் அது உறையுள் பள்ளியாகும். அதில் செல்வர்களின் பிள்ளைகளே படிக்க இயலும்.

நான் சேலத்தில் இருந்தபோது, சர்.பி.டி. இராசனின் மகன்களாகிய கமலத் தியாகராசன், பழனிவேலு ராசன் ஆகிய இருவரும் அப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பன்னிரண்டு, பத்து வயதிருக்கலாம்.

அவர்கள் வார விடுமுறையின்போது சேலம் வருவார்கள்; எங்கள் வீட்டில் தங்குவார்கள். திங்கட்கிழமை பொழுது விடியப் புறப்படும் பேருந்துவில் ஏற்காட்டிற்குப் போவார்கள். அவர்கள் வருகை எங்களுக்கு மகிழ்வூட்டும்.

சேலம் கல்வித் துறையில், எழுத்தர்களாகப் பணிபுரிந்த சிலரை மறக்க முடியவில்லை. திருவாளர்கள் செல்லப்பன், மாணிக்கம், பால

கிருஷ்ணன் ஆகியோர் நல்ல திறமையான பணியாளர்கள். அவர்களின் பிந்திய இருவரும் பிற்காலத்தில் பதவி உயர்வு பெற்று, சென்னையில் பொதுக்கல்வி இயக்ககத்தில் அலுவல் பார்த்தார்கள்.

திரு. செல்லப்பன்; தம்முடைய குடும்பச் சூழல் பற்றி, அப்படிப்பட்ட வாய்ப்பு வந்தபோது, அதை ஏற்க முடியாமல் மறுத்துவிட நேர்ந்தது.

மாணிக்கம் அலுவலக மேற்பார்வையர் பதவிவரை உயர்வு பெற்று ஓய்வுபெற்றார். பிறகு சேலம் சென்று அங்குத் தொடங்கிய தனியார் கல்லூரி ஒன்றில் வேலையில் சேர்ந்தார்.

கலப்பு மணம் செய்த கஸ்தூரி

பாலகிருஷ்ணன் பொதுக்கல்வி இயக்ககத்தில் பணியாற்றிவிட்டு 'பொருளாளர்' 'பர்சார்' பதவி பெற்று, மேரி இராணி கல்லூரியில் பணிபுரிந்து வந்தார்.

ஓய்வு வயதிற்கு முன்பே, அலுவலகத்திலிருந்து திரும்பும்போது பேருந்தில் அடிபட்டு, அகாலத்தில் மறைந்தார்.

அவருக்குப் பிள்ளைகுட்டிகள் அதிகம். அவர்கள் அனைவரும் படித்துப் பட்டம் பெற, தமிழக அரசு உபகாரச் சம்பளம் கொடுத்து உதவியது.

பாலகிருஷ்ணன் மகள்களில் ஒரு மகள், கஸ்தூரி என்ற பெண் விசுவநாதன் என்பவரைக் கலப்பு மணம் செய்துகொண்டார். திருத்தணியில் நடந்த அத் திருமணத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித் தரும் பேற்றினை எனக்கு மிகுந்த பரிவுடன் நல்கினர்.

சுற்றத்தார் எதிர்ப்பைப் பெரிதாகக் கொள்ளாது கலப்பு மணத்திற்கு ஒப்புதல் தந்த திருமதி பாலகிருஷ்ணனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

செல்வத்தோடு வந்த பெண்களைப் பொருட்படுத்தாமல், சாதாரண குடும்பத்தில் கலப்புமணம் செய்துகொண்ட விசுவநாதன் இளைஞர் உலகிற்கு வழிகாட்டியாவார். வாழ்க அவர் குடும்பம்!

தந்தையை இழந்த பிள்ளைகளை நல்ல வண்ணம் வளர்த்து, அவர்கள் பட்டம் பெற உதவிய தாய் வாழ்க!

என் அலுவலகத்தில் ஊழியம் பார்த்த பழனியப்பன், அங்கமுத்து ஆகிய இருவர்களும் எங்களுக்குச் செய்த பணியின் சிறப்பினை மிஞ்ச வேறொன்றும் இல்லை.

சேலத்திலிருந்து மதுரைக்கு எப்படிச் செல்ல? ஈரோடு வழியாகத் திருச்சி சென்று, அங்கு வண்டி மாறி மதுரை செல்ல வேண்டும்.

பொன்னம்பலனார் துணைக்கு வந்தார்

இரண்டு இடங்களில் மாறும் தொல்லைகளை நாங்கள் சமாளிக்கவில்லை; அருமை நண்பர், பூவாளூர் அ. பொன்னம்பலனார் ஏற்றுக்கொண்டார்.

என் பதவி மாறுதல் அறிவிப்பைப் பற்றி, செய்தித்தாளில் படித்ததும் அவர் சேலம் வந்து சேர்ந்தார்.

முன்னர், பொன்னேரியிலிருந்து தஞ்சைக்கு மாறுதல் ஆகிப் போனபோது தஞ்சாவூருக்குத் துணை வந்ததைப்போல் இம் முறை, சேலத்திலிருந்து மதுரைவரை வழித்துணையாக வந்தார்.

அவரது உதவியால் வசதியாகப் பயணம் செய்தோம்; மாலைப் பொழுது மதுரையை அடைந்தோம்.

புகைவண்டி நிலையத்திற்கு ஆய்வாளர்கள் சிலரும், மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும் வந்து, எங்களை வரவேற்று அழைத்துக்கொண்டு போனார்கள்.

வழக்கம்போல் இடைக்கால ஏற்பாடாக அலுவலகத்தில் தங்க வசதி செய்திருந்தார்கள்.

மாவட்டக் கல்வி அலுவலகம் எங்கு இருந்தது? வைகை ஆற்றின் வட கரையில், சிவகங்கை பங்களா என்ற இடத்தில் அமைந்திருந்தது. சூழல் நன்றாக இருந்தது. எனினும் அலுவல் இடத்தைத் தங்குமிடமாக நீடிக்க என் மனம் ஒப்புவதில்லை.

திரு அ. பொன்னம்பலனார் வீடு தேடத் தொடங்கினார். இரண்டொரு நாள்களில் ஒரு வீடு கிடைத்தது.

தல்லாகுளத்தில் சர்.பி.டி. இராசன் பங்களாவிற்கு வடக்கே ஒரு சிறு பங்களா; அது மதுரை நகர் மன்ற துணைத் தலைவர் இராவ்சாகிப் ஆறுமுக நாடார் அவர்களுடையது.

அதை அவர் வாடகைக்கு விடுவது இல்லை; விடவேண்டிய தேவையுமில்லை; நண்பர்கள் வந்தால், சில நாள்கள் மட்டும் தங்கிப்போக அதை வைத்திருந்தார்.

திரு. ஆறுமுகநாடார் சமூகச் சீர்திருத்தத்தில் பற்று உடையவர்; தன்மான இயக்க ஆதரவாளர். அதைக்கொண்டு சாதிகள் கலைந்துவிட்ட புதியதோர் சமுதாயத்தை உருவாக்க முடியுமென்று முழுமையாக நம்பியவர்.

என்னைப் பற்றித் தெரிந்து கொண்டவர். 1940 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள் நடந்த என் திருமணத்தைப் பாராட்டி 'குடி அரசு' தலையங்கம் தீட்டியிருந்தது. அதைப் படித்ததால், என்னிடம் பற்றுக் கொண்டிருந்த அவர், தமது பங்களாவை எனக்குக் கொடுக்க முன் வந்தார்.

ஆனால், ஒரே ஒரு நிபந்தனை! வாடகைப் பேச்சு எழக்கூடாது.

வாடகை கொடுக்காமல் தங்கத் தயங்கினேன்.

''ஆறுமுகனார் எந்தவிதப் பரிந்துரைக்கும் உங்களிடம் வரமாட்டார். அந்த வீட்டுக்கு அதிகம் கொடுப்பதனாலும் அய்ம்பது அறுபது ரூபாய்க்குமேல் போகாது. அத் தொகை கிடைக்காமல் போவது, அவருக்குப் பெரிய இழப்பல்ல. தயங்காமல் அவ் வீட்டிற்குக் குடியேறுங்கள். அங்கிருந்தபடியே வீடு தேடுவோம்'' என்றார் பொன்னம்பலனார்.

வேறு வழியின்றி, ஆறுமுக நாடார் பங்களாவிற்குச் சென்று தங்கினோம். அதைச் சுற்றி ஓங்கி வளர்ந்த தென்னை மரங்கள் பல இருந்தன. பாரதியாரின் 'காணி நிலம் வேண்டும்' என்னும் பாட்டை அது நினைவுபடுத்தியது.

காவலுக்கு ஒரு காவற்காரர் இருந்தார். அவர் தோட்ட மூலையில், குடும்பத்தோடு குடியிருந்தார். எனவே, அக்கம் பக்கத்தில், கூப்பிடு தொலைவில் வீடுகள் இல்லாத நிலையிலும் அச்சமின்றிக் குடியிருந்தோம்.

சில வாரங்களில், சின்னச் சொக்கி குளத்தில், திரு. கோபால கிருஷ்ணன் கோனார் என்ற புத்தக வணிகரின் வீட்டிற்கு அருகில் சிறிய பங்களா கிடைத்தது. அங்குக் குடிபெயர்ந்தோம்.

கிட்டத்தட்ட ஈராண்டு அங்கேயே தங்கினோம். வாடகை முப்பத்தைந்து ரூபாய்களே. இப்போது அந்த வாடகைக்குக் குடிசை கிடைப்பதே அரிது.

பி.ஏ.பி. சௌந்தரபாண்டியன்

மதுரை மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள் அதிகம்; ஆகவே, தலைக்கை வேலை அதிகம்.

அதைவிடத் தொல்லையானது என்ன தெரியுமா? பள்ளிகளை நடத்தியவர்கள் பெரிய செல்வர்கள். ஆகவே செல்வாக்கு உடைய பேரமைப்புகள்.

வேலைப் பளுவும் பெரியவர்களின் அழுத்தமும் பல கல்வி அதிகாரிகளை அச்சமூட்டி அனுப்பியுள்ளன.

எனக்கு முந்தைய மாவட்டக் கல்வி அதிகாரிகள் பத்துப் பேர்களில் ஒருவர் மட்டுமே ஆறு திங்கள்வரை தாக்குப் பிடித்துத் தங்கியுள்ளார். மற்றவர்கள் மூன்று, நான்கு திங்களில் விடுப்பு போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

அத் தகவலைத் தெரிந்துகொண்டபோது நான் அஞ்சவில்லை; மாறாக அதை அறைகூவலாக ஏற்றுக்கொண்டேன்.

'ஒவ்வோர் விவகாரத்தையும் அதன் தரத்திற்கு, நியாயத்திற்கு ஏற்ப முடிவு செய்வோம்; தொடர்புடையவர்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைப் பற்றி நினைக்க மறுப்போம்' என்று எனக்குள்ளே முடிவு செய்து கொண்டு செயல்பட்டேன்.

அப்போது மதுரை மாவட்ட ஆட்சிக் குழுவின் தலைவர் பட்டிவீரன்பட்டி திரு. டபிள்யு.பி.ஏ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

அவர் 1929 இல் செங்கற்பட்டில் நடந்த முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர்.

ஆதிதிராவிடர் பேருந்தில் செல்ல உரிமை

அவர் ஒருமுறை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சிக் குழுவின் தலைவராக இயங்கினார்.

அக் காலத்தில் பேருந்து வண்டிகளுக்கு உரிமம் கொடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சிக் குழுவிடம் இருந்தது.

அதனிடம் உரிமம் பெற்று ஓடிய பேருந்துகள் சிலவற்றில் ஆதிதிராவிடர்களுக்கு இடம் இல்லை என்று நிர்வாகிகள் சிலர் அறிவித்தார்கள்.

திரு. சௌந்தரபாண்டியன் தாமதம் இன்றித் தலையிட்டார். ஆதிதிராவிடர்களை ஏற்றிச்செல்ல மறுக்கும் பேருந்து வண்டிகளின் உரிமம் இரத்து செய்யப்படுமென்று எச்சரிக்கை விடுத்தார்.

அது பயன்பட்டது; ஆதிதிராவிடர்கள் அப் பகுதி பேருந்துகளில் பயணம் செய்ய உரிமை பெற்றார்கள்.

அவர் மதுரை மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவராக இருந்தபோது, நான் அங்கு - மதுரைக்குப் போய்ச் சேர்ந்தேன்; அவரைக் கண்டு பேசினேன்.

சேலத்தில் ஊரார் நிதி உதவியைப் பெற்றுப் புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்க உதவியதைப் பற்றிக் கூறினேன். அவருக்கு அந்தத் திட்டம் பிடித்தது.

அம்முறையை மதுரை மாவட்டத்திலும் செயல்படுத்த முடியும் என்று கருதினார்.

எனவே, ஆட்சிக் குழுவின் துணைத்தலைவரிடம் அத் திட்டத்தைச் சொன்னார்; அதை ஆதரிக்கச் சொன்னார்; வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார்.

துணைத் தலைவர் எவர்? திரு. லெ. பசுபதி அவர்கள்.

அவர் தந்தையார் நாமக்கல்லில் வழக்குரைஞராக விளங்கிய திரு. வெங்கடபதி முதலியார் ஆவார்.

அவர் சாதிப் பிரிவுகளைக் கலைக்க முயன்ற தன்மான இயக்கத்திற்குத் துணையானவர். பெரியாருக்கு வேண்டியவர். சர்.பி.டி. இராசனின் அக்காளை மணந்தவர்.

என் கல்லூரிப் பருவத்திலேயே திரு. பசுபதி எனக்கு அறிமுகமானவர்; அப்போது நாங்கள் அடிக்கடி கண்டு உறவாடுவோம். பழைய நண்பனோடு புதிய உறவில் தொடர்பு கொள்வது எளிதாகவும் இனிமையாகவும் இருந்தது.

பசுபதியும் நானும் பல ஊர்களுக்குச் சென்றோம்; குறிப்பாக, இலவசக் கட்டாயக் கல்வி நடைமுறையில் இருந்த ஊர்களுக்குச் சென்றோம்.

பள்ளிகளைப் பார்வையிட்டோம்; பொதுக்கூட்டங்கள் கூட்டி உரையாற்றிக் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவு திரட்டினோம். ஆசிரியர் அணிக்குத் துணையைப் பெற்றோம்.

பசுபதி நீதிக்கட்சியைச் சேர்ந்தவர். எனினும் என்னிடம் கட்சிச் சார்பை எதிர்பார்க்கவில்லை.

பிற்காலத்தில் அமைச்சர்களாக உயர்ந்த திருவாளர்கள் கக்கன், இராசாராம் நாயுடு ஆகியோர் அப்போது மதுரை மாவட்ட ஆட்சிக் குழு உறுப்பினர்கள். அவர்களோடு நான் சில ஊர்களுக்குச் சென்றேன்; பல பள்ளி விழாக்களிலும் பொதுக் கூட்டங்களிலும் பேசினேன்.

மேலூரில் ஏற்பாடு செய்யப்பட்ட திருவள்ளுவர் விழாவில், திரு. கக்கனோடு ஒரே மேடையில் நான் பேசியது நினைவிற்கு வருகிறது.

அமெரிக்கன் கல்லூரியில் சொற்பொழிவு

கல்வி நிலைய இலக்கிய மன்றங்கள் போட்டி போட்டுக் கொண்டு என்னை அழைத்தன.

பெரும் மாவட்டக் கல்வி அதிகாரியாகிய என்னை அமெரிக்கன் கல்லூரித் தமிழ் மன்றம் நிறைவு விழாவிற்கு அழைத்தது.

அதற்கு வேராக இருந்த திரு. கார்மேகக் கோனார் என்பால் அன்பு பொழியத் தொடங்கினார்.

திருக்குறளில் அருமை பெருமைகளைக் கற்றோரும் உணராது, உரைக்காது இருந்த காலத்தில் அதைப்பற்றிப் பேசவும் அதற்கான தகுதியைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, குறள் நெறியைப் பின்பற்றவும் எனக்கு வாய்ப்புக் கிட்டியது.

கல்வி நிலையங்களில் பாரதியையும் பாரதிதாசனையும் அறிமுகமாக்கும் வாய்ப்புகளை நிறையப் பெற்றேன்.

பாரதி–பாரதிதாசன் புகழ் பரப்பினேன்

தமிழாசிரியர்கள், திருவள்ளுவர் பற்றியோ, பாரதிதாசன் பற்றியோ பேச அழைத்தார்கள். மற்றவர்கள் பாரதியைப் பற்றிப் பேச அழைத்தார்கள். மூன்று கவிஞர்களுமே என்னை இயக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

குறள் நெறி பரப்பினேன்.

மதுரையில், வடக்கு ஆடி வீதியில், திருவள்ளுவர் மன்றம் ஒன்று பல்லாண்டுகளாக நடைபெற்று வருகிறது.

நான் மதுரையில் அலுவல் பார்த்தபோது, அம் மன்றத்தின் செயலாளர் திரு. பழனியப்பன் அவர்கள். அவர், இன்றைய தமிழ்நாடு காமராஜ் காங்கிரசு கட்சியின் தலைவரான திரு. நெடுமாறன் அவர்களுடைய அருமைத் தந்தையாவார்.

அவர் என்னை ஓர் ஆண்டுவிழாவிற்கு அழைத்தார்; திருக்குறள் பற்றி உரையாற்ற வைத்தார்.

அதே விழாவில், சாத்தூர் வழக்குரைஞரும் தமிழ் அறிஞருமான திரு. கந்தசாமி முதலியார் அவர்களும் உரையாற்றினார்.

புலமை மிக்க அத்தகைய அறிஞர்களோடு அமர்ந்து திருக்குறளைப் பரப்பியதை, மதுரை உலகத்தமிழ் மாநாட்டின்போது 'ஆனந்த விகடன்' நினைவுகூர்ந்து, குறள் பரப்பின நூற்றுவர் பட்டியலில் என்னையும் சேர்த்துக் குறிப்பு எழுதியது. அதை எண்ணி நெகிழ்வதோடு, குறள் வழி நடக்க இடையறாது முயல்கிறேன்.

28. விபரீத சிந்தனை

சாத்தூர் திருக்குறள் மன்றம்

சாத்தூர் கந்தசாமி முதலியார் முன்நின்று, சாத்தூரில் திருக்குறள் மன்றம் ஒன்று நடத்தி வந்தார்.

அதன் ஆண்டுவிழாவிற்கு என்னை அழைத்து உரையாற்ற வைத்தார். விழா இனிது நடைபெற்றது.

ஆற்று மணற் பரப்பில் ஆயிரக்கணக்கானோர் அமர்ந்து உரைகளைச் செவிமடுத்தனர்.

இன்று ஆட்சி மொழிக் காவலர் என்று அழைக்கப்படும் இராமலிங்கனார் அன்று திண்டுக்கல் நகரமன்ற ஆணையராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

நகர் மன்ற உயர்நிலைப் பள்ளியில் நடந்த பாரதி விழாவில் இருவரும் கலந்துகொண்டிருக்கிறோம்.

எங்கள் தொடர்புகள் அதிகமாயின; நட்பாகக் கனிந்தன.

பாரதி பணி – அமுதசுரபி பாராட்டு

பாரதி நூற்றாண்டு விழாவின்போது, பாரதியின் பாடல்களைப் பரப்புவதில் நான் 'அடக்கமாக' ஆற்றி வந்துள்ள தொண்டினை நினைவு கூர்ந்து, 'அமுத சுரபி' என்னும் திங்கள் இதழ் என்னைப் பாராட்டி எழுதியமை என் உள்ளத்தை உருக்கியது.

அமுத சுரபிக்கும், டாக்டர் விக்ரமனுக்கும் பெரிதும் நன்றி உடையேன்.

மதுரை மாவட்டத்தில் எனக்குப் பல்சுவை பட்டறிவு நிறையக் கிடைத்தது.

முன்னோடிப் பழத் தோட்டம்

மாவட்ட ஆட்சிக் குழுவின் தலைவர் திரு. டபிள்யூ.பி.ஏ. சௌந்தரபாண்டியன் குடியிருந்த பட்டிவீரன்பட்டிற்குச் சென்றது மகிழ்ச்சியான நிகழ்ச்சி.

அவரது விருந்தோம்பல் மிகவும் சிறப்பாக இருந்தது.

அவர் மலையடிவாரத்திற்கு அழைத்துப் போனார்: தமது பழத்தோட்டத்தைக் காட்டினார்.

கூழாங் கற்கள் நிறைந்த பெரும் பரப்பில் சில ஏக்கர்களில் திராட்சையும் சாத்துக்குடியும் பயிரிடப்பட்டிருந்தன.

இன்று திண்டுக்கல் முதல் கொடைக்கானல் சாலைவரை, பல்லாயிரம் ஏக்கர் பரப்பிற்குத் திராட்சை பயிராகியது.

மதுரை மாவட்டத்தில் திராட்சைப் பயிரை முதலில் அறிமுகம் செய்தவர் திரு. சௌந்தரபாண்டியன் ஆவார்.

அதற்காக, புஞ்சை நிலத்தில் இருந்த சிறு கூழாங்கற்களைப் பொறுக்கி எடுக்க மட்டும் மூவாயிரம் ரூபாய் பிடித்ததாம்.

மூன்று ஏக்கர் நிலத்தில் கற்களைக் களைய அவ்வளவு செலவு செய்ததை, 'பணக்கொழுப்பு' என்று தூற்றியவர்கள் பலர் ஆவார்.

அவர் செய்த பெருஞ்செலவு' ஏற்ற பழி, எத்தனையோ ஊர்களின் நிலையை மாற்ற உதவிற்று.

எவராவது ஒருவர், மெழுகு வத்தியாகி எரிந்தால்தான், எண்ணற்றவர்களுக்கு ஒளி கிடைக்குமென்ற பாடம் என் நெஞ்சில் பதிந்தது.

உயர்நிலைப் பள்ளிகள் இல்லாத ஊர்களில் புதுப்பள்ளிகள் திறக்கலா மென்ற முயற்சிகளுக்குப் பொதுமக்கள் நல்ல ஆதரவு தந்தார்கள்.

பத்து ஊர்கள்போல் வேண்டிய நிலமும் கட்டடமும் செலவுத் தொகையும் கொடுக்க முன்வந்தன.

மாவட்ட ஆட்சிக் குழு கலைக்கப்பட்டது

மாவட்ட ஆட்சிக் குழு அலுவலகத்தில் இருந்து உரிய மனுக்களை எதிர்பார்த்து இருந்தேன். அப்போது இடி வீழ்ந்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஆட்சிக் குழுக்களைக் கலைத்து விட்டு, மாவட்ட ஆட்சியாளரிடம் அவற்றை விரைவில் ஒப்படைக்கும் ஆணையை அரசு பிறப்பித்தது.

ஆட்சியாளர் சார்பில் புதிய பணியைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

அப்படி நடந்த சில நாள்களில், தனி அலுவலர் என்னைத் தேடி வந்தார்; அலுவலகத்தில் என்னுடன் பேசினார்.

விபரீத சிந்தனை

''நான் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிக் குழுவின் செயலாளனாகப் பணியாற்றி உள்ளேன். பல்லாண்டு அக் குழு உறுப்பினராக இருந்த உங்கள் மாமா சுந்தர சேகரன் நன்றாகத் தெரியும்.

''அந்த உரிமை பற்றி உங்களோடு மனந்திறந்து பேச வந்துள்ளேன்.

''கல்வி அலுவலர் என்ற முறையில் உங்கள் காலத்தில் நிறைய உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்த முயல்வதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

''அப்படி ஏற்பட்டால், சுற்றியுள்ள ஏழைகள், சமுதாயத்தில் பிழைனவர்கள் எளிதாகப் படித்துவிடுவார்கள்.

''அப்புறம் நமக்கு மரியாதை மிகக் குறைந்துவிடும். அப்படிப் படித்தவர்கள் நம்மோடு சமத்துவம் கொண்டாடுவார்கள்.

''உயர்நிலைப் பள்ளிகள் ஏராளமாக ஏற்படுவது, சமுதாய ஏணியின் மேல்தட்டுகளில் உள்ள நமக்கு நல்லதல்ல.

''இதை மாவட்ட ஆட்சியாளரிடம் விளக்கினேன்; எனவே, புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்க மனு அனுப்பவேண்டாமென்றேன். அவர் அதை ஒப்புக் கொண்டார்.

''நீங்கள், நமக்கு வேண்டிய குடும்பத்துப் பிள்ளையாயிற்றே! நீங்கள் வருந்தக் கூடாதே என்பதற்காகச் சொல்ல வந்தேன்'' என்று பாடப்பே இல்லாமல், திரு தாயப் பிள்ளை கூறினார்.

அவர் பார்ப்பனரல்லாதவர் என்பதைச் சொல்லி வேலை பெற்றவர்; அலுவலில் பதவி உயர்வுகள் பெற்றவர்.

அவர் இப்படிச் சொல்கிறாரே என்று அப்போது அதிர்ச்சி அடைந்தேன்.

பிற்காலத்தில், அவர் தனி மரம் அல்ல; பெருந்தோப்பின் ஒரு மரம் என்பது எனக்குத் தெரிந்தது.

மாவட்ட ஆட்சியாளரை அணுகி, நெருக்கி, புதிய உயர்நிலைப் பள்ளிகளைப் பெறும் அளவு, ஆர்வம் உடையவர்கள் இல்லை. எனவே, என் முயற்சி சிதைந்துவிட்டது.

டாக்டர் செல்லப்பா–மெர்சி செல்லப்பா

மதுரையில் நான் இருமுறை நோய்வாய்ப்பட்டேன்.

ஒரு நாள் மாலை, பெரியகுளத்தில் அலுவலர்கள் மன்றத்தில் அமர்ந்து, அன்பர்களோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென மேல் உதடு வீங்கிற்று; கனமாகிவிட்டது. ஏதோ பூச்சிக்கடி என்று எண்ணி, உடனே பயணிகள் இல்லத்திற்குச் சென்றுவிட்டேன்.

மறுநாள் காலையில் எவ்வித வீக்கமும் இல்லை.

அடுத்த மாலையில் அதே சூழ்நிலையில் இரு உதடுகளும் தடித்துவிட்டன.

அன்பர்கள் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

மருத்துவர் என்னைச் சோதித்தார். உடம்பில் சுண்ணாம்புக் குறைவு ஏற்பட்டதால் இந்த வீக்கம்; பெரியகுளம் குடி நீரில் சுண்ணாம்புச் சத்தே கிடையாது; எனவே சிலர், சில நாள், இங்கே தங்கினால், இந்த நோய்க்கு ஆளாகிறார்கள் என்று விளக்கிவிட்டு ஏதோ மாத்திரைகள் கொடுத்தார்.

முறைப்படி அதைச் சாப்பிட்டேன். வீக்கம் குறைந்தது. மறுநாள் அது வெளிப்படவில்லை.

மதுரை திரும்பியதும் அமெரிக்கன் மிஷன் மருத்துவமனைக்குச் சென்றேன்.

அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த டாக்டர் செல்லப்பாவின் மனைவி திருமதி மெர்சி செல்லப்பா என் மனைவிக்கு மிக வேண்டியவர்.

மருத்துவர் அந்த உரிமை பற்றி, என்னைத் தம் பங்களாவிலேயே வைத்து மருத்துவம் பார்த்தார்.

நாள்தோறும் சுண்ணாம்புச் சத்தை ஊசி வழி செலுத்தினார்.

பகல் இரவு இரு வேளையும் உணவுக்குப்பின் வெற்றிலை பாக்கு போடும்படி வற்புறுத்தினார்.

சில திங்கள் அப்படிச் செய்தபின் வெற்றிலை போடுவதை நிறுத்தினேன்.

சில திங்களுக்குப் பிறகு வயிற்றுப் போக்கால் அவதிப்பட்டேன்.

அப்போதும் டாக்டர் செல்லப்பா, என்னைத் தமது பங்களாவில் தங்க வைத்து, மருத்துவம் பார்த்துக் குணப்படுத்தி அனுப்பினார்.

டாக்டர் செல்லப்பாவும் அவருடைய மனைவி மெர்சி செல்லப்பாவும் எங்கள்பால் நல்லெண்ணம் கொண்டிருந்த குடும்ப நண்பர்களாகப் பல்லாண்டு வாழ்ந்தார்கள்.

எங்கள் துன்பங்களில் பங்குகொள்ளப் பறந்தோடி வந்தார்கள்.

இருவரும் இன்று இல்லை; முதலில் அம்மையாரும், பின்னர் ஐயாவும் மறைந்தனர்.

அவர்கள் இருவருமே நல்ல தொண்டு புரிந்த கிறுத்தவர்கள்.

அவர்களுடைய மக்களில் ஒரு மகள் ஜாம்பியாவில் அலுவல் பார்க்கிறார்.

குழந்தைப் பருவத்தில் அறிமுகமான அவர் சென்றமுறை இந்தியாவிற்கு வந்தபோது சென்னையில் எங்களைத் தேடிவந்து, கண்டுவிட்டுப் போனது நெகிழ்விக்கிறது. என்ன பாச உணர்வு!

மொட்டைக் கடிதம்

திருவாளர் தி. ச. அவிநாசிலிங்கனார் கல்வி அமைச்சரானபோது, ஆய்வாளர்கள் மீது ஊழல் புகார் வந்தால், அதை நேரே மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பிக் கருத்துக் கேட்கும் முறையைக் கொண்டுவந்தார்.

அது கட்டுக்கோப்பைக் குலைக்கும் என்று அப்போதைய பொதுக்கல்வி இயக்குநர் சுட்டிக்காட்டியதால், காலதாமதத்தைத் தவிர்க்க, புகாரை நேரே அனுப்புவதென்றும், ஆனால் ஆய்வுரையின் மூலப்படி மட்டும் இயக்குநர் வழியாகவே வரட்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இயக்குநருக்கு அனுப்பும் மூலத்தின் படியை நேரே அமைச்சருக்கு அனுப்பவேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது கிலியை வளர்க்க உதவியது.

ஆய்வாளரைக் கண்டிக்க, தண்டிக்கக உரிமை உடையவர் துணை இயக்குநர்.

கண்காணிக்கும் பொறுப்பைக் கொண்டவர் இயக்குநர்.

அவர்களை நம்பாது, அமைச்சரே கண்காணிக்கும் நிலைக்குத் தாழ்த்திக் கொண்டது, இந்திய நிர்வாகம் கெட்டதற்கு ஒரு காரணம்.

உயர் கொள்கைகளைக் கவனிக்க வேண்டியவர்கள், கீழ்மட்ட ஆள்களைக் கண்காணிப்பவர்களாக மாறியது நல்ல மரபு அல்ல.

நான் மதுரையில் சேர்ந்த சில வாரங்களில் அப்படியொரு கையெழுத்து இல்லாத புகாரை அமைச்சர் எனக்கு அனுப்பி விசாரித்துக் கருத்து கூறும்படி கட்டளையிட்டார். புகார் என்ன?

குறிப்பிட்ட ஆய்வாளர், தன் தணிக்கையின் கீழ் வரும் பள்ளிகளில் கையூட்டுத் தராவிட்டால், தாறுமாறாக எழுதுகிறார்; மாணியங்களை

அளிப்பதில் காலதாமதம் செய்கிறார். இப்படிப் பொதுவாக இருந்தால் ஒரே ஒரு பள்ளியின் பெயர் மட்டும் குறிக்கப் பட்டிருந்தது. அதன் பேரில் என் கருத்தைக் கேட்டிருந்தார்கள்.

இவற்றை மனத்தில் வைத்துக்கொண்டு அவரது சரகத்தில் தனியார் நிர்வாகத்தின் கீழ் நடந்த பள்ளிகள் சிலவற்றை முன் அறிவிப்பின்றிப் பார்வையிட்டேன்.

அய்யப்பாட்டிற்குச் சிறிதும் இடம் கிடைக்கவில்லை.

பெயர் குறிக்கப்பட்டிருந்த பள்ளி சின்னமனூரில் இருந்தது. 'குருக்கள் பள்ளி' என்று அழைக்கப்பட்டது.

அதை பார்வையிட்டு, பழைய குறிப்புகளையும் புரட்டிப் பார்த்தேன்.

ஓர் ஆதிதிராவிடப் பையன்கூடப் படிக்காத ஈராண்டுகளின் தணிக்கைக் குறிப்புகளில் 'ஆதிதிராவிடர்களுக்கும் இடம் உண்டு'. என்று எழுதிய அதே ஆய்வாளர், மூன்றாம் ஆண்டில் மூன்று ஆதிதிராவிடர்கள் வந்திருந்தபோது, 'பெயரளவில்தான் ஆதிதிராவிடர்களுக்கு இடம்' என்று குறை கூறி இருந்தார்.

புகாரில் இதைச் சொல்லி, அதற்குக் காரணம், கையூட்டு எதிர்பார்ப்பு என்று எழுதப்பட்டிருந்தது.

பள்ளிக்கூட நிர்வாகி அதை உறுதிப் படுத்தினார். பணம் கேட்டதற்குச் சாட்சி இல்லை என்றார்.

இப் பள்ளிக்கூடத் தணிக்கைக் குறிப்பு அய்யப்பாட்டை எழுப்புவதாகத் தோன்றினும், அந்த ஒன்றைக் கொண்டே ஆய்வாளர் ஊழல் பேர்வழி என்று திட்டவட்டமாகச் சொல்ல இயலாது.

மனிதர்கள் குரங்குப் போக்கினர். எக் காரணம் பற்றியாவது எரிச்சல் கொள்ளும்போது, வரம்புமீறி நடந்து விடுவது உண்டு.

ஏதோ எரிச்சல் பற்றிக் குறை சொல்லியிருக்கக்கூடும்.

ஆய்வாளர் அப் பகுதியில் மூன்றாம் ஆண்டு பணிக்காலத்தில் இருப்பதால், அவரை வேறு சரகத்திற்கு மாற்றுவதற்குமேல் ஏதும் தேவையில்லை.

இப்படிக் கருத்துரைத்தேன்.

முதல் படியை இயக்குநர் வழியாக அனுப்பிவிட்டு, நகலை நேரே அமைச்சருக்கு அனுப்பினேன்.

சில நாள்களுக்குப்பின், சென்னையில் அமைச்சரைக் காண நேர்ந்தது.

அவர் என்னைக் கண்டதும் அந்த ஆய்வாளர் பற்றிக் கேட்டார். புகாரை விசாரித்த அறிக்கையை அஞ்சலில் சேர்த்து விட்டேன், விசாரணையைவிட்டுப் புறப்பட்டேன் என்பதோடு, பதிலை நிறுத்திக் கொண்டேன். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆதாரம் இல்லாமையால் மாறுதலோடு நிறுத்திவிட்டது பொதுக்கல்வி இயக்ககம்.

ஆனால், அந்த ஆய்வாளர், டி.கே.வி. இராசகோபாலன் அதையே கண்ணனையாகக் கருதி, என்மேல், நெடுநாள் பகைமை பாராட்டினார்.

தி.கோ. சீனிவாசன் திருமணம்

நான் மதுரையில் இருந்தபோது, சர்.பி.டி. ராசனின் மூத்த மகள் செல்வி மீனாம்பாளுக்கும் செல்வன் தி.கோ. சீனிவாசனுக்கும் திருமணம் நடந்தது.

அது புரோகிதம் அற்ற முறையில் நடந்தது.

திரு கார்மேகக்கோனார் தலைமையில், நாயர் பிரிவைச் சேர்ந்த ஒரு நண்பர் ஒருவர் நடத்திவைத்தார்.

நான் திருமணத்தில் கலந்துகொண்டதோடு, வாழ்த்துரையும் கூறினேன்.

அது கடுமையான உணவுப் பற்றாக்குறை இருந்த காலம்.

எனவே, விருந்துக் கட்டுப்பாடு கடுமையாக் இருந்தது.

முப்பது பேர்கள் மட்டுமே வேளைக்குச் சாப்பிடலாம்

சர்.பி.டி. ராசன் அதை விழிப்பாகப் பின் பற்றினார்.

அன்று திருமண விருந்தில் கலந்துகொண்டவர்கள் சட்டத்தில் கண்டபடி முப்பது பேர்களே.

உலம்பட்டியில் திரு. சௌந்தர பாண்டியன் இல்லத் திருமணம் அன்று நடந்தது.

அதிலும் வாழ்த்துரை கூறும் பேறு எனக்குக் கிட்டிற்று.

தியாகி நாராயணசாமி பாரதி

நாராயணசாமி பாரதி என்பவரைப்பற்றி முன்னரே குறித்துள்ளேன். அவரோடு அடிக்கடி தொடர்பு ஏற்பட்டது.

நான் உத்தமபாளையம் பக்கம் செல்லும் போதெல்லாம் என்னைக் காண்பார்; நிகழ்ச்சிகள் சிலவற்றிற்கு ஏற்பாடு செய்வார்.

தேவாரம் என்பது ஓர் ஜமீன் பேரூர். வழிவழி வந்த ஜமீந்தார், கணக்கின்றிக் கடன் வாங்கியதால் ஜமீன் மூழ்கிவிட்டது. ஜமீன் தனவணிகர் கைக்குப் போய்விட்டது.

வணிகர் அவ்வூருக்குச் சென்று தங்கி, குடிமக்களின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற முயன்று கொண்டிருந்தார்.

அவ்வமயம், நான் உத்தமபாளையம் செல்ல நேரிட்டது.

நாராயணசாமி பாரதியார் என்னைத் தேவாரத்திற்கு அழைத்துச் சென்றார். வணிகரிடம் நேரம் கேட்டுப் பேட்டிக்கு அழைத்துப் போனார்.

நான், 'புதிய ஜமீந்தாரிடம்' 'தேவாரம் போன்ற பெரிய ஊருக்கு ஓர் உயர்நிலைப்பள்ளி தேவை; ஆனால் நடுநிலைப் பள்ளியே இருக்கிறது.

''ஜமீந்தார் விரும்பினால் ஓர் உயர்நிலைப் பள்ளி நடத்த இசைவு பெற்றுத் தருகிறேன்.

''அப்படி நடத்துவதன் வாயிலாக, ஊரார் நல்லெண்ணத்தைப் பெறலாம்'' எனச் சொல்லிப் பார்த்தேன்.

ஒருமணி நேரம் செலவிட்டும், கிடைத்த பலன் நல்ல சிற்றுண்டியும், காப்பியும் மட்டுமே. வணிகர் சிறிதும் பிடி கொடுக்கவில்லை.

வணிகரிடம் பலிக்காத என் நாவன்மை உழவர்களிடம் பலித்தது.

கட்டை வண்டிப் பயணம்

பெரியகுளம் வட்டத்தில் வெங்கடாசலபுரம் என்றோர் ஊர் உள்ளது. அக் காலத்தில் அவ்வூருக்கு வண்டிப்பாதை கூடக் கிடையாது; ஆனால் இருபது ஆண்டுகளாகப் பேருந்து போகும் சாலை அமைந்துள்ளது. அரசியல் விடுதலையின் பலன் இது.

அவ்வூரில் ஊரார் நிர்வாகத்தில் ஓர் உயர் தொடக்கப் பள்ளி நடந்து வந்தது. அது கம்மவார் நாயுடுகள் நிறைந்த ஊர்.

அக் காலத்தில் காங்கிரசிற்கு ஆதரவான ஊர். எனவே, விடுதலைப் போராட்ட தியாகியான நாராயணசாமி பாரதிக்கு வேண்டிய ஊர்.

உயர் தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழாவிற்கு அவர் என்னையும் என் மனைவியையும் அழைத்துச் சென்றார்.

வண்டி வழி இல்லாத அவ் வூருக்கு எப்படிப் போனோம் தெரியுமா?

நெடுஞ்சாலையில் உள்ள விக்ரபாண்டி என்ற ஊரில் இருந்து புஞ்சைக்காட்டில், கூண்டுகூட இல்லாத மாட்டு வண்டியில் ஏழெட்டு மைலோ மீட்டர் பயணம் செய்து அவ்வூர் சேர்ந்தோம்.

விழா நிகழ்ச்சி காலையில்; நான் தலைமை தாங்கினேன். நீண்ட உரையாற்றினேன். கல்வியை - பெண் கல்வியையும் வளர்க்க வேண்டினேன்.

என் மனைவியும் ஏராளமான பரிசுகளை வழங்கிவிட்டு அமர்ந்தார்.

பரிசளிப்புக்கு முன் பாரதியும் வேறு சிலரும் உரையாற்றினர்.

காந்தத்தின் தெலுங்குப் பேச்சு

ஆண்டு விழாவிற்கு நூற்றுக்கணக்கான பெண்கள் வந்திருந்தார்கள். அவர்களில் பலர் மூத்தவர்கள்; செல்வர்கள் என்பது கைகளால் தெரிந்தது.

என் மனைவி காந்தம்மா, பரிசுகளைக் கொடுத்துவிட்டுப் பேசாமல் அமர்ந்தது, அவ்வூர்த் தாய்க் குலத்திற்குப் பொறுக்கவில்லை; பொறுமை இழந்தனர்.

''அம்மாவையும் பேசச் சொல்லுங்கள்'' என்று வேண்டினார்கள்.

நான் என் மனைவிக்குப் பரிந்துரை கூறினேன்.

''நீங்கள் ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசி மக்களை மயங்கி விட்ட பிறகு, என் பேச்சு எடுக்காதே?'' என்று சொல்லி நழுவப் பார்த்தார் காந்தம்மா!

''அப்படியானால் தெலுங்கில் பேச, என்னிடம் அதிகப் பொறுப்பைப் பெறலாம்'' என்று கூறினேன்.

அப்படியே அரைமணி நேரம் தெலுங்கில் உரையாற்றினார். ஆண்களைப்போலவே பெண்களையும் படிக்க வைக்கும்படி அறிவுரை கூறினார்.

வெங்கடாசலபுரத்தில் உள்ள பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொள்ளவேண்டுமென்ற என் ஆலோசனையை ஆதரித்தார்.

அவையோர் பலமுறை கைதட்டினார்கள். பலன் உண்டா?

29. பள்ளி நிறுவ பெண்கள் அளித்த நகைகள்

பள்ளி பிறந்த கதை

கை தட்டுவோர் பலர்; பின்பற்றுவோர் மிகமிகச் சிலரே. வெங்கடாசலபுரத்து மக்கள் பின்பற்றுவோராக விரைந்து செயல் பட்டார்கள்.

ஆண்டு விழா முடிந்ததும் நல்ல விருந்து அளித்தார்கள். நாங்கள் உணவருந்திக் கொண்டிருக்கையில், அந்த ஊரில் உடனடியாக உயர்நிலைப் பள்ளி நடத்த விரும்புவதாகக் கூறினார்கள். தாங்கள் என்ன என்ன செய்யவேண்டும் என்று வினவினார்கள்.

''உடனடியாக-பதினைந்து நாள்களுக்குள்-முப்பத்தையாயிரம் ரூபாயைக் காப்புத் தொகையாக வங்கியில் போட்டு வைக்கவேண்டும். பள்ளிகள் திறக்கும் பருவத்திற்குள், புதிய வகுப்பு அறைகள், அவற்றிற்கான கரும்பலகைகள், தளவாடங்கள் ஆயத்தமாக வேண்டும்; விளையாட்டுத் திடலும் தேவை'' என்று பட்டியல் கொடுத்தேன். ஒருவர் குறித்துக் கொண்டார்.

பிற்பகல் வெங்கடாசலபுரத்தை விட்டுப் புறப்பட்டோம். மதுரைக்குச் சென்றோம். மூன்று நாள்கள் கழிந்தன.

நான்காம் நாள் காலை ஒன்பது மணிக்கு, அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்.

ஒரு வாடகைக் கார், விரைந்து வந்து என்னை வழி மறித்தது.

அதிலிருந்து வெங்கடாசலபுரத்தவர், மூவர் இறங்கி வந்தார்கள்.

பதினைந்து நாள் தவணை போதாது என்று சொல்லி, நீண்ட தவணை கேட்க வந்துவிட்டார்களோ, என்று அய்யப்பட்டேன். புன்முறுவலை ஒதுக்கிவிட்டு கண்டிப்பை வரவழைக்க முயன்றேன். ''எதற்கு இவ்வளவு காலையில் வந்து இருக்கிறீர்கள்'' என்று, சிடுசிடுப்போடு கேட்டேன்.

''நல்ல செய்தியுடன் வந்திருக்கிறோம். வீட்டிற்குள் செல்லலாமா?'' என்று பணிவோடு சொன்னார்கள்.

அனைவரும் உள்ளே சென்று உட்கார்ந்தோம். செய்தியைச் சொன்னார்கள்.

''நீங்கள் புறப்பட்டு வந்தவிட்டு பிறகு, ஊர்ப் பெரியவர்கள் கூடிப் பேசினோம். நீங்கள் கூறிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டோம். உடனே உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி நடத்த முடிவு செய்தோம்.

''காப்புப் பணத்தைப் பொறுத்தமட்டில், இரண்டு திங்கள் தவணை கேட்போம்; விளைச்சல் அறுவடையானதும் அதை விற்றுக் கட்டிவிடுவோம்'' என்றதோடு, எவரெவர் எவ்வளவு நன்கொடை கொடுப்பது என்பதையும் உறுதி செய்து கொண்டிருந்தோம்.

''ஆண்கள் பேசும்போது, எட்டி நின்று மூத்த தாய்மார்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கலைவதற்குமுன், அவர்கள் குறுக்கிட்டார்கள்.

''வலிய வந்த சீதேவியை விட்டுவிடக் கூடாதென்றார்கள். அவர்களை ஆண்டு விழாவுக்கு அழைத்தபோது, உயர்நிலைப் பள்ளியைப்பற்றி நாம் கனவு கூடக் காணவில்லை.

''வரதராசப் பெருமாளும் சீதேவியும் வந்துவரம் கொடுத்ததுபோல், இரண்டு பேருமே உயர்நிலைப்பள்ளி வைத்து நடத்தச் சொன்னார்கள். அந்த நல்ல வாக்கை நழுவவிடக்கூடாது.

''குடியானவர்களுக்குப் பணம் எப்போதே ஒருமுறைதான் வரும். அதுவரை, நடத்தவேண்டிய செயலைத் தள்ளிப்போட்டால் மனம் மாறிப்போகலாம்; காரியம் கைகூடாமற்போகலாம்.

''பணம் கட்டத் தவணை கேட்காதீர்கள். கண்டபடி செலவு செய்யக் கடன் வாங்குவதானால் தலைகுனியணும். நல்லதற்கு அவசரத்திற்குக் கடன் வாங்குவதில் தப்பு இல்லை.

''எங்கள் மூன்று வீடுகளில் இருந்து, போதிய நகைகளைக் கொண்டுபோங்கள். பெரியகுளம் அடகுக்கடையில் வைத்து முப்பத்தய்யாயிரத்தை வாங்கிக் கொண்டுபோய், வங்கியில் கட்டி விட்டு வாருங்கள்: தானியம் விளைந்ததும் நகைகளை மீட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

''அப்படியே, மூன்று வீட்டு நகைகளை வைத்து, பணத்தை வாங்கிக் கொண்டு வந்துள்ளோம். வங்கியில் கட்டுவதற்கான படிவங்களை, தங்கள் கைகளால் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளவே, இங்கு வந்துள்ளோம்'' என்றார்கள்.

அவர்கள் விரும்பியபடி, ஆவனசெய்தேன். உரிய தொகையைக் கட்டிவிட்டு உயர்நிலைப் பள்ளி கோரும் மனுவில் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். நான் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்தேன்.

சுளிப்பு ஏற்படவில்லை

அதைக் கலைப்பற்கு ஒரு நிகழ்ச்சி; வெங்கடாசலபுரத்திற்கு அருகில் ஸ்ரீரங்காபுரம் என்று ஓர் ஊர் இருக்கிறது. இரு ஊர்க்காரர்களும் நெருக்கமான உறவினர்கள்.

வெங்கடாசலபுரத்திற்கு உயர்நிலைப் பள்ளி கேட்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டதும் ஸ்ரீரங்காபுரத்தாரின் போட்டி உணர்வு மேலிட்டது.

அவ்வூர்க்காரர் ஒருவர் - திரு சீனிவாசன் - மதுரையில் வழக்குரைஞராக இருந்தார். அவரைக்கொண்டு மண்டல பள்ளி ஆய்வாளர் சாயபு நாயக்கரை அணுகினார்கள். தங்களுக்கு உயர்நிலைப் பள்ளியைக் கொடுக்கும்படி வேண்டினார்கள்.

மண்டல ஆய்வாளர் எனக்கு மேல்அதிகாரி. அவர் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். ஸ்ரீரங்காபுரத்திற்குப் பரிந்துரைக்கச் சொன்னார்.

''அவ்வூர், வெங்கடாசலபுரத்தைவிடச் சிறியது; அவ்வூரில் உள்ள பள்ளியில் அய்ந்து வகுப்புகளே உள்ளன; மாணாக்கர் எண்ணிக்கையும் குறைவு. அது முதலில், உயர்தொடக்கப்பள்ளியாவதே முறை. அதற்கு வேண்டுமானால் பரிந்துரைக்கிறேன்'' என்றேன். அப்படியே வாங்கித் தந்தேன்.

மண்டல ஆய்வாளருக்குச் சிறிது ஏமாற்றம். ஆனால் என்மேல் கசப்பு ஏற்படவில்லை. என்னிடம் பரிவோடும் நல்ல எண்ணத்தோடும் தொடர்ந்து நடந்துகொண்டார். அப்பெருந் தன்மை போற்றற்குரியது.

எனக்குக் கிடைத்த பாராட்டு

வெங்கடாசலபுரத்திற்கு உயர்நிலைப் பள்ளி கிடைத்தது. அதைத் திறப்பதற்கு முன், நான் சென்னைக்கு மாறுதல் ஆகிவிட்டேன்.

சில வாரங்கள், சென்னை மாவட்டக் கல்வி அலுவலராக இருந்து விட்டு, பிறகு சென்னை மாநகராட்சிக் கல்வி அலுவலராகச் செல்ல நேர்ந்தது.

அந்த வேலையில் இருக்கையில், அந்த உயர்நிலைப்பள்ளித் திறப்பு விழா வந்தது.

அப்போதைய கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. ஏ.பி. ஷெட்டி திறந்துவைத்தார். அந்த விழாவில், வாழ்த்துரை கூறும் சிறப்பினை எனக்கு அளித்தார்கள்.

வெங்கடாசலபுரத்தார் சிலர், சென்னைக்கே வந்து, என்னை வற்புறுத்தி இசைய வைத்தார்கள்.

விழாவிற்கு முன் விரைவாக வீரபாண்டியில் இருந்து வெங்கடாசலபுரத்திற்கு மண் சாலை ஒன்று போட்டார்கள்.

முன் இரவு மழையில் சாலை சேறாகிக்கிடந்தது. அதன் வழியாக, அமைச்சர் ஷெட்டி, முன்னே சென்றார். அடுத்துச் சில கார்கள் சென்றன.

நான், ஒரு ஜீப்பில் சென்றேன். அது வழியில் புதையுண்டு ஊர் போய்ச்சேரக் காலதாமதம் ஆகிவிட்டது.

வெங்கடாசலபுரம் நுழைவாயிலில் அமைச்சர்களையும் மற்ற பெரியவர்களையும் ஊரார் நிறுத்தி நான் வரும்வரையில் காக்க வைத்துவிட்டார்கள்.

பதினைந்து மணித்துளிகளுக்குப் பின் போய்ச் சேர்ந்த நான், பெரியவர்கள் எனக்காகக் காத்திருப்பதாகக் கேள்விப்பட்டதும் என் அடி வயிற்றைக் கலக்கிற்று.

பதற்றத்தோடு அமைச்சரிடம் ஓடி, என்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, மன்னிப்புக் கேட்டேன்.

''பரவாயில்லை'' என்று மட்டுமே அவர் பதில் சொன்னார்.

விழா உரையாற்றுகையில், -

''இவ்வூரார், நெ.து. சுந்தரவடிவேலுவை உச்சிமேல் வைத்துப் போற்றுவது பொருத்தம்; அது ஊருக்குள் வந்த பிறகே புரிகிறது.

''நெடுஞ்சாலைக்குத் தொலைவில் தடம் இல்லாத ஊரில், அவர்களாகக் கேட்டாலும் ஏதோ சாக்குச் சொல்லிப் பள்ளிக்கு இசைவை மறுத்துவிடுவதே இயல்பு.

''ஆனால் இவரோ துணிந்து, தாமே முன்னின்று, உயர்நிலைப் பள்ளியை வாங்கித் தந்துள்ளார்.

''குடியானவர்களுக்கு நன்றி உணர்வு அதிகம். அதன் எடுத்துக் காட்டே, நீங்கள் அவரை மறந்துவிடாமல், சென்னையிலிருந்து அழைத்து வந்துள்ளது'' என்று அமைச்சர் பாராட்டினார்.

''மற்ற அலுவலர்களும் இவரைப்போல் செயல்பட்டால், நாடு விரைவில் முன்னேறும்'' என்றும் என்னை அமைச்சர் ஷெட்டி பாராட்டியது இன்றும் பசுமையாக உள்ளது.

திரு. ஷெட்டியின் நூற்றாண்டு 1983இல் நடந்தது.

வெங்கடாசலபுரத்து மக்களின் நன்றி உணர்வு இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் செயல்பட்டது.

உயர்நிலைப் பள்ளியின் வெள்ளி விழாவிற்கு என்னை அழைத்து, உரை ஆற்றச் செய்தார்கள். மறதி மிகுந்த மக்கள் இடையே வெங்கடாசலபுரத்து ஆன்றோர்களும் வாழ்கிறார்கள்.

1947 இல் இந்திய விடுதலையும் விளைவுகளும்

நான் மதுரை மாவட்டக் கல்வி அலுவலராக இருந்தபோது, இந்திய வரலாற்றில் வைர எழுத்துகளால் எழுதப்பட வேண்டிய பெரும் நிகழ்ச்சி நடந்தது.

தியாகம் வென்றது

காந்தியடிகளின் தூய தியாகத் தலைமையில் நடந்த, இந்திய விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றது.

திலகர், லஜபதிராய், வ. உ. சிதம்பரம் காலந்தொட்டு அலை அலையாகப் பல நூறாயிரவர் - பெண்கள் உட்பட - இடர்மிகு இருட்டுச் சிறைகளில் வாடி வதங்கியது பலன் கொடுத்தது.

ஞாயிறு மறையாத பேரரசைக் கொண்ட ஆங்கிலேயர், இந்தியாவிற்கு விடுதலை அளித்துவிட்டு, இந்திய மண்ணிலிருந்து வெளியேற நேர்ந்தது.

அப்படி வெளியேறிய வேளை நாட்டைப் பிரித்துவிட்டு, பகைப் புற்றை வளர்த்துவிட்டு விலகியது மிகவும் வேதனை தருவதாகும்.

எனினும் அத்தனை கணக்கு வழக்குகளையும் ஒழுங்காக இந்தியர்களின் கைகளில் ஒப்படைத்துவிட்டு விலகிக் கொண்டதை எண்ணி அவர்களைப் பாராட்டாமல் இருக்க இயலாது.

இந்தியா விடுதலை பெற்றது பற்றிப் பெரிதும் மகிழ்ந்தேன். 'விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தையாம் காந்தியடிகளின் சீரிய தலைமை, பல்லாண்டு தொடரும்; கடையரும் கடைத்தேற வழிவகை செய்யும்; தீண்டாமை தொலையும்; வறுமை ஓடும்; வளம் பெருகும்; அவாவின்மை தழைக்கும்' என்று எதிர்பார்த்தோர் எண்ணற்றவர்.

அரசியல் உரிமை, பொருளியல் நீதியை, சமுதாய சமத்துவத்தைப் பெற விரையும் என்று எதிர்பார்த்த பல கோடி இந்தியர்களில் நானும் ஒருவன்.

'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ?

மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ' என்று பாரதி இடித்துக்கேட்டது, நம் தூக்கத்தைக் கலைக்கும்; பல நாள் கலைக்கும்; அதன் பயனாக, -

'முப்பது கோடியும் வாழ்வோம்' என்று ஒவ்வொருவரும் சூளுரைக்கும் நிலை உருவாகும்!

'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை' என்பது உறுதிப்படும்!

'சாதியில் இழிவு கொண்ட மனிதர் என்பர் இந்தியாவில் இல்லையே' என்பது பலித்துவிடும்!

'நிறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து, யாவரும் தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வோம் இந்த நாட்டிலே.'

'எல்லோரும் ஓர் விலை; எல்லோரும் ஓர் நிறை' இப்படியெல்லாம் கனவு கண்டோம்!

'எல்லோரும் சமத்துவ வாழ்வு வாழக் கூடிய புதிய இந்தியாவைக் காணப்போகிறோம்!' என்று பூரித்த இந்தியர்கள் கணக்கில் அடங்கார்!

'அரசியல் தன்னாட்சி அருமையான கருவி; அதைப் பெற்றுத் தந்த காந்தி அடிகள் அரசியல் சான்றோர்; தெளிந்த காட்சியர்; கனிந்த உள்ளத்தினர்; வாய்மையின் உயிரோவியம்; மாசுபடியாத மாண்பினர்; சொன்னதைச் செய்து முடிக்கும் திண்மையாளர்; தலைசிறந்த மனிதாபிமானி; அத்தகைய அண்ணல்காந்தி இருக்கப் பயமேன்?' என்று எண்ணி எண்ணி ஆர்வம் பெற்றோம்!

விடுதலை பெற்ற மகிழ்ச்சியில், கொடியோன் கோட்சேயின் கொலைச்செயலைப் பொது மக்களில் எவரும் எதிர் பார்க்கவில்லை.

1983 இல் இருந்துகொண்டு திரும்பிப் பார்க்கிறேன். அம்மம்மா! விடுதலை பெற்ற கால் நூற்றாண்டுக்குள் எத்தனை எத்தனை நெருக்கடிகள்!

பிள்ளையார் குட்டே கண்ணில் குத்திக்கொள்வது போல, தொடக்கத்திலேயே பரவலான வகுப்புக் கலவரம்; கொலை; கொள்ளை; நாட்டின் தந்தையைக் குண்டுக்கு இரையாக்கின கோரம்.

இரண்டின் பின் விளைவுகளையும் சமாளித்தல்! அய்ந்நூற்று அறுபத்து மூன்று இந்திய மன்னர்கள் ஆண்ட நிலத்திட்டுகளை - நாட்டில் மூன்றில் ஒரு பங்கை, மக்களாண்ட இந்தியாவோடு வெற்றிகரமாக இணைத்தல்! பிரஞ்சுக்காரர் கைகளில் சிக்கியிருந்த புதுச்சேரி பகுதிகளை இந்தியாவோடு சேர்த்தல்! அன்னிய ஆதிக்கத்தின் கடைசி அடையாளமாகப் போர்ச்சுகீசியர் வசம் இருந்த, கோவா, டி.டி. டாமன் பகுதியை இந்தியாவோடு ஒன்றித்தல்! இவை திறமையான ஆட்சியின் மாட்சிகள் அல்லவா?

1962 இல் சீன ஊடுருவல்; அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு முன், பாகிஸ்தான் நம்மீது போர் தொடுத்தல்; இந்தியப் படை வீரர்கள் காட்டிய தீரமும் தியாகமும் பொதுமக்கள் வேற்றுமைகளை மறந்து

ஓரினமாக நின்று எழுந்து ஆதரித்ததும் வெற்றியைப் பெற்றுத்தருதல்; மீண்டும் 1971 இல் பாகிஸ்தான் இந்தியாவின்மேல் படை எடுத்தல்; இந்திய சோவியத் உடன்படிக்கை நமக்குக் கை கொடுத்தல்.

அமெரிக்க உதவி பாகிஸ்தானுக்கும் சோவியத் உதவி இந்தியாவுக்கும் விரைதல் - நம் மக்களும் படைகளும் காட்டிய நாட்டுப் பற்று, பொழிந்த ஆதரவு, செய்த தியாகம் ஆகியவை விரைவில் வெற்றியைக் கொண்டு வருதல்; அத்தனையும் என் மனக்கண் முன் விரைந்து ஓடுகின்றன.

அத்தனைக்கும் மேலாக, உயர்வாக, அதோ ஓர் பேருருவம்! இந்தியாவின் விடுதலைக்காகத் தொடக்கத்தில் அரும்பெரும் தியாகங்கள் புரிந்த, வெண்தாடி வேந்தர் ஈ.வெ. ராமசாமியின் புன்முறுவல் ஈர்க்கிறது.

சாதாரண காலங்களில் பிரிவினை வாதியாகத் தோற்றமளித்த பெரியார், நம் இந்தியா போரில் சிக்கிக்கொண்ட ஒவ்வோர் முறையும் இந்திய அரசுக்கு ஆதரவு தந்தார்; வலிந்து தந்தார்.

தனிப்பட்ட முறையில் அல்லாது , திராவிடர் இயக்கத்தின் சார்பில் முழு ஆதரவையும் தந்தார்.

முதிர்ந்த 'அரசியல் வழக்காடி' நாட்டுக்கு நெருக்கடி ஏற்படும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு வழி காட்டினார்.

அதை மறந்துவிட்டு, 'மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக அலை கிறீர்களே!' என்று கேட்பது போன்ற பெரியாரின் புன்முறுவலைக் காண்கிறேன்.

பெற்ற சுதந்திரத்திற்குக் கேடு நேர்ந்த போதெல்லாம் ஒன்றாகக்கூடி எதிர்த்து வெற்றிபெற்று, இன்றுவரை பேணிக் காக்கிறோம்; போதுமா? வரும் தலைமுறைகளும் காக்க, வேண்டுமே!

உயிரினும் இனிய சுதந்திரம் பொது மக்களுக்குப் பயன்பட்டதா? இல்லையா? பயன்பட்டது.

தலைமுறை தலைமுறையாகப் பள்ளத்தில் வீழ்ந்து கிடப்போர் விழிபெற வழி என்ன? பதவி கொள்ள வழி என்ன? நாடாள வழி என்ன? கல்விப் பெருக்கு, அறிவுப் பெருக்கு, தெளிவுப் பெருக்கு, தொழில் பெருக்கு ஆகும்.

கல்வியில் இந்தியாவின் நிலை என்ன?

1947 இல் ஆங்கிலேயன் வெளியேறியபோது, தொடக்கப் பள்ளியும் இல்லாத இந்தியச் சிற்றூர்கள் நூறாயிரம்போல் இருந்தன. இன்றோ, பள்ளியில்லா ஊர் இல்லை என்று பெருமையோடு உரைக்கலாம்.

1950 இல் நமது ஆட்சியைக் குடியாட்சி என்று பறைசாற்றினோம், அதற்கென்று ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டோம்.

அப்போளை, நம் இந்திய நாடு முழுவதிலும் முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை படித்தோர் எண்ணிக்கை, இரண்டு கோடியே இருபத்திரண்டு இலட்சங்கள் ஆகும்.

அதே கணக்கை 1980 இல் பார்த்தபோது, ஒன்பது கோடியே பத்து இலட்சமாக வளர்ந்திருந்தது.

நாள்கு பங்கிற்கு மேற்பட்ட அவ் வளர்ச்சியை இரண்டு பங்காகப் பெருகி உள்ள மக்கள் தொகையின் பலன் என்று ஒதுக்கி விட முடியாது.

நிட்டமிட்ட, ஊக்கப்படுத்திய நிதியை வாரி வாரிக்கொட்டிய நாடு தழுவிய முயற்சியின் கூட்டுப்பலனே, நம் கல்விப் பெருக்கம்.

எட்டாம் வகுப்புவரை காணும் பெரும் வளர்ச்சியை மற்ற எல்லா நிலைகளிலும் காண்கிறோம்.

பல்கலைக்கழகத்தின் உயர் படிப்புகளும், ஆய்வு வாய்ப்புகளும் நாடெங்கே வாழ்வோர்களுக்கெல்லாம் எட்டுகிறது. இன்னும் பரவலாக அதிகமாக எட்டலாம் என்பது வேறு.

முந்தைய எந்த முப்பதாண்டுகளிலும் காணாத கல்வி வளர்ச்சி இந்தியாவில் எங்கே கொண்டு நிறுத்தியுள்ளது?

உலகத்தின் மூன்றாவது நிலைக்கு.

எதில் மூன்றாவது நிலை?

அறிவியல், பொறியியல், மருத்துவ இயல் ஆகிய துறை வல்லுநர் களை உருவாக்குவதில் இந்தியா மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளது.

உலகிலுள்ள நூற்று அய்ம்பதுக்கு மேற்பட்ட தன்னாட்சி நாடுகளின் இடையே இந்தியா மூன்றாவதாக இருப்பது போற்றத்தக்க சாதனையே!

அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும், பிரிட்டனிலும் இந்திய வல்லுநர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அங்குப் பணிகளில் சேர்ந்த எந்த இந்தியரும் உதவாக்கரைகளாகத் திருப்பி அனுப்பப்படவில்லை.

இதை விடச் சிறந்த நற்சான்றிதழ் வேண்டுமா?

30. ஒரு நாள் நீ இயக்குநர் ஆகிவிடுவாய்

பாரதியின் கனவு

'ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்' என்று கனவு கண்டார் மகாகவி பாரதியார்.

அந்தக் கனவு நனவாகிவிட்டதே! தன்னாட்சி இந்தியா பெற்றுள்ள பெருமளவு தொழிலில் வளர்ச்சியை அதே அளவில் எந்த நாடு பெற்றுள்ளது?

பல்லாயிரங்கோடி ரூபாய்களை முதலீடு செய்து, திரும்பிய பக்கமெல்லாம் இயந்திரத் தொழில்களை வளர்த்துள்ளோம்!

இதைக் கண்டு, பிறநாடுகள் வியக்கின்றனவே!

மக்கள் பெருக்கம்

இவ்வளவிற்குப் பிறகும் வறியோர் முன்னிலும் அதிகமாகப் பெருகியுள்ளதைக் கண்டு திகைக்கிறார்களே!

அப்படி நலியக் காரணம்?

நம் முன்னோர்கள், பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாடுபட்டும் 1947 இல் 33 கோடிக்கு மட்டுமே மக்கள் எண்ணிக்கையை உயர்த்த முடிந்தது.

சாதனையாளர்களாகிய நாமோ, முப்பத்தைந்து ஆண்டுகளில், அதை 68 கோடியாக்கியுள்ளோம்.

அரசுகளின் முயற்சிகளை முறியடிப்பதே நோக்கமாகக் கொண்டவர்கள் போல் தோன்றவில்லையா?

பிற வளர்ச்சிகள் எவ்வளவு பெரியனவானாலும் கட்டுக்கு அடங்காத மக்கள் பெருக்கம் வளர்ச்சியின் பலனைப் பாழாக்குகிறது.

பெரு மலைகளில் நெடுமரங்களையும் பள்ள வயல்களில் நெற்பயிரையும் வளர்த்தல் அடிப்படை வேளாண்மை அறிவாகும்.

மக்கள் தொகை மிகுந்த, பல தலைமுறையாக முழு வேலை இல்லாத, கோடிக்கணக்கான மக்களை உடைய இந்தியாவில் வேலை வாய்ப்புப் பெருக்கத்திற்கு முன்னுரிமை கொடுத்திருக்க வேண்டும்.

அதைப்பற்றிப் போதிய நாட்டம் செலுத்தாததால் தொழில்கள் பெருகின அளவு, வேலை வாய்ப்புகள்-அடிநிலை வேலைகள் பெருக்கம்-ஏற்படவில்லை.

நட்டமிடுதல், ஓர் திரவம் போன்றது. குவளையில் ஊற்றப் பட்ட நீர், குவளையின் உருவெடுக்கும்.

செம்பிலே ஊற்றப்பட்ட நீர் செம்பின் உருவெடுக்கும்.

கோப்பையில் ஊற்றினால்? கோப்பையாகத் தோன்றும்.

வேலை வாய்ப்புப் பெருக்கம் வற்புறுத்தப் படாததால், போட்ட பெருமுதல், பொருள்களைக் குவிக்க மட்டுமே பயன்பட்டது.

இந்திய இனம் இளைத்ததல்ல

'விண்ணை யளப்போம்' என்று துணிந்து பாடினார் பாரதி.

தொழில் நுட்ப வல்லுநர்கள் முதல், இரும்பைக் காய்ச்சி அடித்திடும் பட்டாளிகள்வரை, ஒருங்கிணைந்து செயல்பட்டு ரோகிணியை விண்வெளிக்கு அனுப்பிவிட்டார்கள். 1984 ஆம் ஆண்டு இந்திய விண்வெளிவீரர் ராகேஷ்சர்மா சோவியத் விண்வெளி வீரர்களோடு கூட்டாக விண்வெளிக்குச் சென்று வெற்றிகரமாக ஆய்வு நடத்திவிட்டுப் பாதுகாப்பாக நாட்டுக்குத் திரும்பியுள்ளார்கள். இந்திய இனம் இளைத்ததல்ல என்று உலகறியச் செய்து விட்டார்கள்.

காடுகளை அழிக்காதீர்; மரங்களை வளர்ப்பீர்.

விடுதலை பெற்ற இந்தியா, கட்டிய அணைகள் பல.

பக்ராநங்கல் முதல், மணிமுத்தாற்று அணைவரை எத்தனையோ கட்டினோம்.

அவற்றிற்காகச் செலவிட்ட நிதியோ கொஞ்சம் அல்ல.

தேக்கங்களிலே பல வறண்டு கிடப்பானேன்? வறட்சி, தமிழ் நாட்டைப் பற்றி உள்ள நோய் என்று தப்புக்கணக்குப் போட்டு மோசம் போகாதீர்கள்.

வடக்கிலும், தெற்கிலும் பல மாநிலங்களை வாட்டும் நோய் வறட்சி ஆகும்.

ஏன் அப்படி?

நாம் செய்த தவறு. தொடர் தவறு; தடுப்பார் இலாது, முப்பத்தைந்து ஆண்டுகளாகச் செய்துவரும் அழிவு வேலை.

எதைக் குறிப்பிடுகிறேன்?

பச்சை மரங்களை அழித்ததை, அழிப்பதைச் சொல்கிறேன்.

சாலையோர மரம்; குடிசை வாழ்வோரால் செதுக்கி அழிக்கப் படுகிறது.

தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே, அழித்துக் கொள்ளுகிறோம் என்று அறியாத அப்பாவிகள், அவர்கள்.

மலைக்காடுகள் என்ன ஆயின?

அழிக்கப்பட்டன; விரைந்து அழிக்கப்பட்டன; இமாலயக் காடுகள் முதல், பொதிகை மலைக்காடுகள் வரை, மொட்டை அடிக்கப்பட்டன.

சூளைக் கல்லும் பிடாரியானால், எவரைக் குறை சொல்ல?

வெட்டப்பட வேண்டிய முதிர் மரங்கள் அய்யாயிரத்தை வெட்டி உரிமம் பெறுவது; வழிநெடுக வாய்க்கரிசி போட்டுவிட்டு, பதினையாயிரத்தை வெட்டி எடுத்துக்கொண்டு போவது.

குடியாட்சியை ஏற்படுத்திக் கொண்ட நாள்முதல், எல்லாப் பக்கங்களிலும் போட்டி போட்டுக்கொண்டு, காடுகளை அழித்து விட்டோம்.

நம்மவரிடையே பணம் பெருகிற்று; நீர் வற்றிற்று.

இப்போக்கு நீடித்தால், நீரைத்தேடித் தென் கடலுக்குத்தான் செல்லவேண்டும்.

நம் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போவதையே குறிக்கோளாகக்கொண்டு வந்தவர் ஆங்கிலேயர்; கடல் கடந்து வந்தவர் வெள்ளையர்; அவர்கள்கூட, அழிக்காத காடுகளை-நம் காடுகளை நாம் அழித்துவிட்டோம்.

வனவளம் இருந்தால்தான் மழை வளம் இருக்கும்.

மழைவளம் நீர் வளத்தை உறுதி செய்யும்; நீர் வளம் விளைச்சல் வளத்தை வளர்க்கும்; பெருக்கும்.

விளைச்சல் செழிப்பே செல்வச் செழிப்பிற்கு அடிப்படை; செல்வச் செழிப்பு, தங்கள் தொடர் குவியலுக்குத் துணை.

இது அயலவருக்குத் தெரிந்தது; நம்மவருக்குத் தெரியவில்லை; தெரிவிப்பாரும் இல்லை.

பொன்முட்டை இடும் வாத்துகளைப் போட்டி போட்டுக் கொன்று வெட்டி வீழ்த்திவிட்டோம்.

இருக்கும் சொற்பக் காடுகளையாவது காப்பாற்ற முயல்வோம்.

நீர் நிலைகள், காலம் காலமாகக் காப்பாற்றப்பட்டு வந்த கண்மாய்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைகள் என்ன ஆயின?

மக்கள் மனம்போல், மேடிட்டு, வறண்டு கிடக்கின்றன.

தார்பாரைத் தவறியதோடு இந்தச் சாக்கிலும் அந்தச் சாக்கிலும் கண்மாய்களில், ஏரிகளில், பட்டா போட்டு, நிலத்தைத் தனியாருக்குக் கொடுத்துவிட்டோம்; அடுத்தடுத்துச் செய்தோம்.

பட்டா பெற்றவர்கள் மெல்ல மெல்ல நீர்ப்பிடிப்பைக் குறைக்க வழிசெய்துவிட்டார்கள். நீர்நிலைகளில் நீர் வற்றிப் போகவே, அக்கம்பக்கத்துக் கிணறுகளில் நீர் வற்றிவிட்டது.

நாடு தழுவிய இத் தொத்து நோய்க்கு நாடு தழுவிய மருத்துவம் தேவை.

காடுகளை, சோலைகளை, சாலையோர மரங்களை, தொடர்ந்தாற்போல் பயனுள்ள செடிகளை வளர்ப்பதை முன்னுரிமை பெற வேண்டிய நாட்டுக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

மரம் இல்லாமையைப் போக்கும் முயற்சிகளின் விளைவாக, அத்தனை கண்மாய்களும் ஆழப்படுத்தப்பட்டால், வாய்க்கால்கள் சீரமைக்கப் பட்டால், ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டால், அவற்றின் கரைகள் பலப்படுத்தப்பட்டால் வந்துள்ள துன்பமும் எதிர்கால நன்மையாக மாறி வாய்ப்புண்டு.

முல்லைப் பெரியார் இல்லாத அளவு சாதிச் சண்டைகளும் சமய வழக்குகளும் முல்லைத்துத் தழைப்பது பெரும் தீங்காகப் போய்விடும்.

மரம்பூரக் கல்லுங் குழையும்.

மறு மறு வன்முறைகளே ஆயினும் ஆயிரம் ஆயிரம் எனத் தொடர்ந்தால், சமுதாயம் நலிவுற்று வீழ்ந்துவிடும்.

உரிமையின் மறுபக்கம் கடமை. தன்னாட்சியின் மறுபக்கம் தன்னடக்கம்.

பொறுமையைக் கற்றுக்கொள்வது, பூமியாளக் கற்பதின் முதற்படியாம் ஆகும்.

இதை எவர் எவருக்குக் கற்றுக் கொடுப்பது? எங்கே தொடங்குவது?

'உலகைத் திருத்துவதற்குமுன், உன்னைத் திருத்திக் கொள்' என்பார்களல்லவா ஓர் அனுபவம் பெற்ற ஞானி!

அதை நினைவுக்குக் கொண்டு வருகிறேன். 'நான் மொழியால் தமிழன், நாட்டால் இந்தியன்; இனத்தால் மனிதன்' என்ற முதிர்ந்த நிலையிலிருந்து வீழாமல் மேலே செல்ல, உறுதியினைப் புதுப்பித்துக் கொள்கிறேன்.

பாரதி மணிமண்டபம்

நான் மதுரை மாவட்டக் கல்வி அலுவலராக இருந்த காலக் கட்டத்தில், எட்டயபுரத்தில் 'பாரதி மணிமண்டபம்' திறப்பு விழா நடைபெற்றது.

திரு. கல்கி கிருஷ்ணமூர்த்தி முன்னின்று கட்டிமுடித்த அம் மண்டபத்தை மூதறிஞர் இராசகோபால ஆச்சாரியார் திறந்து வைத்தார்.

அவ்விழாவிற்குச் சென்று நல்லுணர்வு பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

எட்டயபுரம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது.

அது மதுரை மண்டலப் பள்ளி ஆய்வாளரின் மேற்பார்வையில் இருந்தது.

எனவே, அவருக்கு விழாவிற்கு அழைப்பு வந்தது.

அப்போது அப் பதவியில் இருந்தவர் திரு. சாமி நாயர் என்னும் அறிஞர்.

அவர் தமது மனைவியோடு அவ் விழாவில் கலந்துகொள்ள விரும்பினார்.

அவர்கள், என் மனைவியையும் என்னையும் அழைத்துச் சென்றார்கள்.

விழா சிறப்பாக நடந்தது உலகம் அறிந்த செய்தி. அவ் விழாவில் இலக்கிய ஒளி-விடுதலை உணர்வு-எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இத்தனையும் பெற்றோம்.

கல்வித் துறையில் மாறுதல்

எவ்வளவு நேரம் வானில் பறப்பது?

கல்வித்துறை நிகழ்ச்சிகளுக்குத் திரும்பி வருவோம்.

1944 ஆம் ஆண்டின் இறுதியில் சர். மெவரல் ஸ்டேதம் மறையவும் அடுத்துப் பேராசிரியர் பீ.பீ.டே. பொதுக்கல்வி இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

டாக்டர் எஸ்.ஆர்.யூ. சவூர் அந்நியமனத்திற்கு எதிராக முறை இட்டுக் கொண்டார்; வெற்றி பெற்றார். அதனால், ஏறத்தாழ ஓராண்டு காலம் பேராசிரியர் டே, பதவியில் இருந்தார். இது கல்வித்துறை இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் ஆகும்.

டைரக்டர் சவுரும், ஈரான்டுபோல் இயக்குநராக இருந்துவிட்டு ஓய்வு பெற்றார். அவருக்குப்பின், டி. சதாசிவரெட்டி அப் பதவிக்கு வந்தார்.

மதுரை மண்டலப் பள்ளி ஆய்வாளர் பதவியில் வேறொரு காரணத்திற்காக மாறுதல் ஏற்பட்டது.

நான் மதுரையில் சேர்ந்தபோது, திரு. கே. முகமது, மண்டல ஆய்வாளராக இருந்தார்.

'லிடுப்பில் செல்லும்படி' ஆலோசனை கூறி, முகமதுவுக்கு இயக்குநரிடம் இருந்து, திடீரெனக் கடிதம் வந்தது. அப்படியே லிடுப்பில் சென்றார்.

அலுவலகத் தணிக்கை

அந்த இடத்திற்கும் பதவி உயர்வு பெற்ற, திரு சாமு நாயர் வந்து சேர்ந்தார். பல வாரங்கள் கழிந்தன.

அப்போது, என் அலுவலகம் தணிக்கைக்கு வந்தது.

ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலகத்தையும் ஆண்டுதோறும் ஒரு ஆய்வாளர் தணிக்கை செய்து, இயக்குநருக்கு விரிவான அறிக்கை அனுப்பி வைக்கவேண்டும்.

ஆனால் மதுரை மாவட்டக் கல்வி அலுவலர்கள் அடிக்கடி மாறி வந்ததால், பல ஆண்டுகளாகக் கல்வி அலுவலகத்தில் தணிக்கையே நடக்கவில்லை.

நான் சேர்ந்த சமயத்தில் தணிக்கை செய்யப்போவதாக அறிவிப்பு வந்தது.

12 ஆண்டுகள் தங்கிய கோப்புகள்

நான், நடைமுறை அலுவல்களோடு, பழைய கோப்புகளை, பதிவேடுகளைப் புரட்டிப் பார்த்து, தணிக்கைக்கு ஆயத்தம் செய்வதில் மூழ்கினேன்.

அப்படிச் செய்கையில், பன்னிரண்டு ஆண்டுகளாக, எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத, இருபத்தைந்து கோப்புகள் என் கண்களில் பட்டன. அவை எது பற்றியவை?

தலையார் பள்ளிகளில் வேலை செய்வதால் ஓய்வு பெறும்போது பெறுகிற வைப்பு நிதி பற்றியவை.

ஒவ்வொன்றும் இருநூறு முந்நூறு பக்கங்களைக் கொண்டது.

அவற்றைத் தொடவும் அஞ்சி அலுவலர்கள் ஒதுக்கியபடியே இருந்து இருக்கிறார்கள்.

அப்படி நானும் செய்தால் என்ன?

இதுவே என் முதல் எண்ணம்.

'தணிக்கையின்போது வெளியாகுமே? அப்போது என்னபதில் சொல்வது?' இது அடுத்த மின்னல்.

அந்தக் கோப்புகள் அனைத்தையும் துருவிப் பார்த்தேன்: கொடுக்க வேண்டிய நிதியைக் காலத்தில் கொடுத்து விட்டதைக் கண்டேன்.

உரியவர்களின் பற்றுச் சீட்டுகளும் முறைப்படி கோப்பில் இருந்தன. மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என்பது புலப்பட்டது; அந்த நடைமுறைக் கோப்புகளை நீண்ட நாளைய பதிவுக்கட்டுகள் காப்பகத்திற்கு அனுப்பி வைத்தேன்.

செய்யாத தவறுக்கு விளக்கமா?

தணிக்கை நடந்தது. திரு. ஜி. எல். லோபா தணிக்கை செய்தார்.

அறிக்கை சென்றது; அதனுடைய படி ஒன்று எனக்கும் வந்தது. படித்தேன்; பதறினேன்! ஏன்?

மேற்கூறிய இருபத்தைந்து கோப்புகளைப் பட்டியல்போட்டு, அவற்றின்மேல், பன்னிரண்டு ஆண்டு கால தாமதத்திற்குப் பிறகே நடவடிக்கை எடுத்தது குறை, எனக் குறும்பாக எழுதப்பட்டு இருந்தது.

பாராட்ட மனம் இல்லாவிட்டாலும் நான் செய்யாத தவறிவிட்டதுபோல் காட்டிய கீழ்மை, என்னைச் சுட்டது.

அது ஆறும் முன் இயக்ககத்திலிருந்து அது பற்றி விரிவான கடிதம் வந்தது.

அதில் 'மன்னிக்க முடியாத பன்னிரண்டு ஆண்டுகால தாமதத்திற்கு உடனே விளக்கம் கேட்கப்பட்டது.'

இழைக்காத பிழைக்கு விளக்கம் கேட்டது என்ன நேர்மை?

அதுவும் மற்றவர்கள் செய்யாமல் விட்டதைச் சாக்குப் போக்கு சொல்லிக் கொண்டிராமல், எடுத்து முடித்து வைத்தவனைப் பழித்து விளக்கங்கேட்டது எவ்வளவு அநீதி?

தூக்கம் கெட்டது?

சில நாள்கள் தூக்கமின்றி வேதனைப்பட்டேன்.

அக் கடிதம் வந்த சில நாள்களில் நான் சென்னைக்கு வர நேர்ந்தது.

அப்போது, சென்னை மாநகர மேம்பாட்டு நிறுவனத் தலைவராக இருந்தவர், திரு. டி.எம். சின்னையா பிள்ளை.

நான் சேலத்தில் இருந்தபோது, அங்கு, புகழ்பெற்ற வழக்குரைஞராக இருந்த அவர், எனக்குப் பெரிதும் துணையாக இருந்தவர்; அவர் உலகியல் பட்டறிவு மிக்கவர்.

எனவே, அவரை நாடிச் சென்றேன்.

தணிக்கை அறிக்கையின்மேல், என்மேல் குறை கூறி விளக்கம் கேட்ட கடிதத்தை அவரிடம் காட்டினேன்.

பொறுமையாகப் படித்தார்; அதைவிடப் பொறுமையாக என்னை அவர் அமைதிப்படுத்தினார்.

"பெரிய இடங்களுக்குப் போய்விட்டால், சாதாரணத் தெளிவுகூட மழுங்கிடும்போலும். பன்னிரண்டு ஆண்டுகளாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று, அந்த அலுவலகத்தில் ஆறு திங்களுக்கு முன்புதான் சேர்ந்தவனைக் கேட்பது, அது கேட்டவரின் கோளாறையே காட்டுகிறது.

"இளம் வயதிலேயே, கல்வி வட்ட அலுவலராகிவிட்ட நீ, ஒருநாள் மாகாணை இயக்குநராகிவிடுவாயென்று பொறாமை, வலுச்சண்டைக்கு அழைக்கிறார்கள். நீ, மாட்டிக்கொள்ளாதே!

"மேற்பதவியில் இருப்பவர், மேல் பதவியில் இருப்பவர்களின் முடிவுகள் தனத்தைப் பச்சையாகக் கூறக்கூடாது.

"நான், மதுரை அலுவலகத்தில் சேர்ந்து சில திங்களே ஆகின்றன, பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, என்னிலும் மூத்தவர்கள் தொட அஞ்சியதை நான் தொட்டு, தக்க நடவடிக்கை எடுத்து உள்ளேன்.

"அதற்காக எனக்கு உரியது பாராட்டு ஆகும். விளக்கம் வேண்டுமானால் முந்தையவர்களைக் கேளுங்கள்.

"அவர்கள் என்னிலும் பணி மூப்பு உடையவர்கள்; அவர்களை நான் கேட்பது முறையாக இராது என்று சுருக்கமாகப் பதில் எழுதிவிடு.

"அரசு வழியத்தில், வேலை செய்கிறவர்களைத்தான், குத்திக் கொண்டே இருப்பார்கள்.

"அவ்வேதனைகளைப் பொருட்படுத்தினால், வேலைத் தரம் பாதிக்கப்படும். அவற்றை அலட்சியப்படுத்திவிட்டு, பணித்திறனை நீயும் மேலும் வளர்த்துக்கொண்டே இருங்கள்.

"எவ்வளவு தொல்லைகள் கொடுத்தாலும் ஆர்வம் குன்றிவிடாதீர்கள்.

''அப்புறம், அவையெல்லாம் மூட்டைப்பூச்சிக் கடிகளாகவே, சாதாரண கொசுக்கடிகளாகவே நின்றுவிடும்'' என்று சின்னையா பிள்ளை அறிவுரை கூறினார்.

பச்சைப் புண்ணுக்கு இட்ட மாமருந்தாக அவ்வுரை பயன்பட்டது.

அவர் கூறியபடியே, இயக்குநருக்குப் பதில் எழுதிவிட்டேன். உளவு குத்தல், அதோடு நின்றுவிட்டது.

சின்னையா பிள்ளையின் அறிவுரை

தெலுங்கு மொழித் தேர்ச்சி பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதால், என்னுடைய 'பிரபேசனை' நிறைவாக முடித்து, என்னைப் பதவியில் உறுதிப்படுத்துவதில் காலதாமதமாயிற்று.

எனினும் மகிழ்ச்சியூட்டும் பதவி உறுதி ஆணை மதுரையில் இருக்கையில் வந்து சேர்ந்தது.

மாவட்ட அலுவலராகத் தொடங்கிய நாள் முதல் பதவியில் உறுதி செய்யப்பட்டேன்.

ஊதியத்தைப் பொறுத்த மட்டில் எனக்கு உதவியான ஆலோசனை வருவதில்லை.

1942 இல் நான் பதவியேற்றபோது, தொடக்க சம்பளம் 190 ரூபா மட்டும்.

'நான்கு திங்களில், ஈராண்டு முடியும்; ஆகவே 25 ரூபா உயர்வு பெறலாம்' என்று எண்ணிக் கொண்டிருக்கையில், ஊதிய மாற்று அறிவிப்பு வந்தது.

அதன்படி, மாவட்டக் கல்வி அலுவலரின் தொடக்க ஊதியம் 200 ரூபா, இப்போது முந்தைய பணிக்கு என்று சில நிலை ஊதிய உயர்வுவரை கொடுப்பது உண்டு.

கருமிகள் காலத்தில் பணி புரிந்த எங்களுக்கு, நான்காண்டு முன்பு பணி இருந்தால்தான், ஒரு உயர்வு உண்டு. அதற்குக் குறைந்தால் உயர்வு கிடையாது. அதன் பொருள் என்ன?

அய்ந்து திங்களுக்குப்பின் திங்கள் ஊதியம் 215 ரூபா எதிர்பார்த்த எனக்கு 200 ரூபா மட்டுமே

அய்ந்து திங்கள் முன்னதாக 10 ரூபா உயர்வு பெற்றது பின்னால் வரவேண்டிய 25 ரூபாய் ஏற்றத்தைத் தட்டிவிட்டது.

31. அதிகாரியின் சதி

சேர வேண்டிய பங்கு சேரவில்லை

நான், மாவட்டக் கல்வி அலுவலர் பணியில் உறுதி செய்யப் பட்டதால், செங்கற்பட்டு மாவட்ட உதவிப் பஞ்சாயத்து அலுவலராக வைத்திருந்த பிடிப்பை (லீன்) கத்தரித்து விடும்படி எழுதினேன்.

அப்படியே செய்தார்கள்.

உதவிப் பஞ்சாயத்து அலுவலராக, நான், திங்கள் தோறும் போட்டு வந்த, பிராவிடெண்ட் நிதிக்கணக்கை முடித்து, எனக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்துவிடும்படி எழுதினேன். அதில் ஒரு சிக்கல் எழுந்தது.

பணியருக்கு அய்ந்தாண்டு காலப் பணி நிறைவாகி இருந்தால், மாவட்ட ஆட்சிக் குழுவின் பங்கையும் சேர்த்துக் கொடுத்தாக வேண்டும்.

பணிக்காலம் குறைந்தால்?

ஆறு திங்கள் வரை குறைவை மன்னித்து, தங்கள் பங்கை வழங்கலாம்.

அப்படிச் செய்ய, ஆட்சிக் குழுவில் வைத்து ஒப்புதல் பெற வேண்டும்.

இது விதி.

அதையொட்டி, அவ் விவகாரம் ஆட்சிக் குழுவின் கூட்டத்தில் வைத்து விவாதிக்கப்பட்டது.

'பெரிய வேலைக்குப் போயிருப்பவருக்கு, அத்தகைய நிதிச் சலுகை தேவை இல்லை' என்று ஆட்சிக்குழு உறுப்பினர் ஒருவர் மறுத்தார்.

அவர் பெரியவர்; அன்று செல்வாக்கில் இருந்தவர். எனவே, மாற்றுக் குரல் எடுபடவில்லை.

நான் போட்டு வைத்திருந்த பணத்தை மட்டும் கொடுத்தார்கள்.

மறுப்பதற்குக் கூறிய காரணம் சரியானதல்ல; வேலையில் இருந்த குறை கண்டிருந்தால் மட்டுமே மறுக்கலாம். மேற்படி முடிவை மறுபரிசீலனை செய்து முறையிடுங்கள்' என்று சில நண்பர்கள் எழுதியிருந்தார்கள்.

காலம் தெறிப் போகுமென்பதால் வழக்காட மனம் விரும்பவில்லை.

கார் வாங்கினேன்

சேர்த்து வைத்த பணம், பொருத்தமான வேளை என் கைக்கு வந்தது எப்படி? அப்போது பழைய கார் ஒன்று வாங்கினேன்.

மதுரையில் 'சக்ரபாணி செட்டியார் கம்பெனி' என்ற பெயரில் ஒரு கார் சாமான் கடை இருந்தது. அதன் முதலாளி, போர்ட் வி. 8 கார் வைத்து இருந்தார். ஒரே ஓட்டி ஓட்டியதால் அது நல்ல நிலையில் இருந்தது.

சர்.பி.டி. இராசன் அவர்கள் அதை எனக்குப் பேசி முடித்தார். அதன் விலை 2500 ரூபாய் ஆகும். அத்தொகையைக்கட்டி வண்டியை எடுத்துக் கொள்ளப் பத்துநாள் தவணை கொடுத்திருந்தார்.

அவ்வேளை பணம் கிடைத்தது.

மதுரையில் என் வீட்டிற்குப் பக்கத்தில், ஓர் அரசு அலுவலர் குடியிருந்தார். அவர் கார் வைத்திருந்தார்.

அவரது காரோட்டிக்குத் திங்கள் ஊதியம் 25 ரூபாய்.

நான் கார் வாங்கப்போகிறேன் என்று கேள்விப்பட்டதும் அந்த அரசு அலுவலர் என்னோடு பேசினார்.

நீண்ட அனுபவமுடைய தன் காரோட்டியை, கூடுதலாக அய்ந்து ரூபாய் கொடுத்து, வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி பரிந்துரைத்தார்.

அப்படியே செய்தேன்.

அந்தக் காரோட்டி, என் வண்டியை எடுத்ததும் முதலில் பி.டி. இராசன் பங்களாவிற்குச் சென்றேன்.

அப் பெரியவர் என் காரோட்டியின் கடந்த காலத்தைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார்; நம்பிக்கைக்குரியவர் என்று நினைவு கொண்டபின், -

''கார் எவ்வளவு அதிகம் ஓடும் என்று சோதிக்காதே எவ்வளவு பாதுகாப்பாகக் கொண்டு போகலாமென்பதிலேயே கருத்தாயிரு. நிதானமாக ஓட்டு'' என்று காரோட்டிக்கு அறிவுரை கூறினார். என்னைப் பார்த்து, -

''போக வேண்டிய தொலைவு எவ்வளவு? முப்பது மைல் வேகத்தில் சென்றால், எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று கணக்குப் பார்த்துக் கொண்டு, அரை மணி கூடுதலாகவிட்டு, முன்னதாகவே புறப்பட்டுவிடு.

''நீயும் காரும் நெடுநாளைக்குப் பயன்படவேண்டும்; தலை தெறிக்கும் விரைவு வேண்டாம்'' என்று எனக்கும் அறிவுரை கூறினார்.

அப்படியே இன்றுவரை செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

48 இல் பெட்ரோல் விலை

முப்பத்தாறு ஆண்டுகளுக்குமுன் நான் கார் வாங்கியபோது, பெட்ரோல் விலை என்ன? அப்போது லிட்டர் கணக்கு இல்லை. காலன் கணக்கே இருந்தது. காலன் என்பது, 4.6 லிட்டர் ஆகும். அதன் விலை 14 அணாக்கள்; அதாவது இன்றைய 87 காசுகள்.

அவ் வண்டி, காலனுக்கு 16 மைல் ஓடிற்று. அதாவது எண்ணெய்ச் செலவு மைலுக்கு ஆறு காசுகளே.

எனவே, அந்தக் காரை வைத்துச் சமாளிக்க முடிந்தது; மற்றவர்களிடம் கார் கேட்டு, தாட்சணியப் படாமல் இயங்க முடிந்தது.

அது பிற்காலத்தில், பொல்லாத செலவினமாகும் என்று தெரியாது.

அதிகாரியின் சதி

அலுவல் பற்றி, மண்டல ஆய்வாளர் திரு. சாமு நாயர், என்னை அழைத்துக்கொண்டு கொடைக்கானல் சென்றார்.

சில நாள்களில் திரும்பினோம்; திரும்பும்போது, பட்டிவீரன் பட்டிக்குப் போகச் சொன்னார்.

முன்னாள் மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவர் திரு டபிள்யூ.பி.ஏ. சௌந்தர பாண்டியனைக் கண்டு பேச விரும்பினார்.

நல்ல வேளையாக, நாங்கள் போன நேரம், அவர் வீட்டில் இருந்தார்.

ஆய்வாளரை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன்.

சிறிது நேரம் கலந்துரையாடிய பின், நாடார் உறவின் முறையால் அவ்வூரில் நடத்தப்படும் உயர்தொடக்கப் பள்ளியின் நிர்வாகக் குழுவைச் காண விரும்புவதாகக் கூறினார்.

திரு. சௌந்தரபாண்டியன், குழுச் செயலாளருக்குச் சொல்லி அனுப்பினார். அவர் வந்து சேர்ந்தார்.

இரண்டு மணி நேர அறிவிப்பில், பள்ளிக் குழு, பள்ளியில் கூடிற்று. மண்டல ஆய்வாளர் அங்கே சென்றார். நான் உடன் சென்றேன்.

சில மணித்துளிகள் பொதுப்படையாகப் பேசினார்.

பட்டிவீரன்பட்டி போன்ற பெரிய ஊரில், செல்வம் செழிக்கும் அவ்வூரில், ஓர் உயர்நிலைப் பள்ளி தேவை என்று சொல்லி ஆசையை ஊட்டினார்.

குழு உறுப்பினர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டு, உயர்நிலைப் பள்ளியை வாங்கித் தந்தால், மகிழ்ச்சியாகவும் செம்மையாகவும் நடத்துவோமென்று உறுதி கூறினார்கள்.

''உங்கள் நிதி நிலைமையைப் புரிந்து கொள்ள, உங்கள் குழுவின் கணக்கைப் பார்க்கலாமா'' என்று கேட்டார்.

கணக்கை அவர் முன் வைத்தார்கள். அப் பள்ளி, உயர்தொடக்கப் பள்ளியாக உயர்த்தப்பட்ட ஆண்டிற்கு முந்தைய ஆண்டிலிருந்து தொடங்கிப் பார்த்தார்.

உயர்தொடக்கப் பள்ளி வாங்கச் செலவு 550 ரூபா என்று, ஒரு பதிவைக் கண்டார். அதன் விவரத்தைக் கேட்டார்.

அத் தொகையை, அப்பகுதி தொடக்கப் பள்ளி ஆய்வாளரிடம் சேர்ப்பித்ததாக உறுப்பினர் ஒருவர் கூறினார். எதற்காக என்று சாமி நாயர் கேட்டார்.

'சில முறையாவது மதுரைக்குச் சென்று, கோப்புகளை நகர்த்திவிட்டால்தான் உரிய காலத்தில் ஆணை வரும் என்று ஆய்வாளர் கூறினார். போய்வரும் செலவிற்கு மொத்தமாகக் கொடுத்தோம்'' என்பது குழுவின் பதில்.

''பலமுறை மதுரை போய் வரும் செலவே அவ்வளவு ஆகாதே! அதைச் சாக்காகக்காட்டி, வேறெவராவது எடுத்துக்கொண்டிருப்பார்களா?'' என்று நாயர் கேட்டார்.

''அப்படி நடக்கவில்லை; மொத்தத் தொகையும் இப்பகுதி ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்டதே உண்மை'' என்று குழு உறுப்பினர் ஒருவர் கூறினார்.

''மாவட்டக் கல்வி அலுவலர் பதவி காலியாயிருந்தது. எனவே, அவருக்குப் பங்கு என்ற பேச்சிற்கு இடமில்லை.

''நாங்கள் கொடுத்தது அக்கால வட்டார ஆய்வாளரிடமே. மண்டல ஆய்வாளரை நாங்கள் காணவே இல்லை. அப்போதிருந்த நிர்வாகக் குழு உறுப்பினர் எவரும் இப்போது இல்லை. எனவே, எவரிடம் சேர்ந்தது என்பது எங்களுக்குத் தெரியாது'' என்று பதில் வந்தது.

''அப்படியானால், 'வட்டார ஆய்வாளருக்கு 50 ரூபாயும், மண்டல ஆய்வாளருக்கு 500 ரூபாயும் கொடுக்க, அந்தத் தொகை

பயன்பட்டதாகக் கேள்வி' என்று சொல்ல முடியுமானால், நான் உங்களுக்கு உயர்நிலைப் பள்ளி வாங்கித் தருவது எளிதாகும்'' என்றார்.

துடி துடித்தேன்

அதுவரை ஊமையாக உட்கார்ந்து இருந்த நான், துடித்தேன் துள்ளி எழுந்து நின்று; ''இப்படித் திரித்துச் சொல்லிக் கொடுப்பது நியாயமா?'' என்று கேட்டுவிட்டேன்.

கேள்வி முடிந்ததும், மண்டல ஆய்வாளர், ''நான், முந்தைய மண்டல ஆய்வாளர் திரு. கே. முகமதுவின் பேரில் உள்ள ஒரு புகாரை விசாரணை செய்கிறேன். அவர் உங்களுக்கு மேல் நிலையில் இருப்பவர். எனவே, நீங்கள் வெளியே சென்று காத்திருங்கள்'' என்று ஆணையிட்டார்.

அதுவே முறையுங்கூட. எனவே, வெளியே சென்று காத்திருந்தேன்.

ஊமையானேன்

விசாரணையில், மண்டல ஆய்வாளர், கோடுகாட்டியபடி, பள்ளி நிலையாகக் குழுவின் சார்பில் எழுதிக்கொடுக்கப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட நான் சில நாள்கள், ஏன் பல நாள்கள் தூக்கம் இன்றிக் கலைந்துபட்டேன்.

'மேலே இருக்கிறவர்களுக்கு மதிப்புக் கொடுப்பதும் கட்டுப்படுவதும் அரசு ஊழியர்களின் அடிப்படைப் பொறுப்பு; முதல் பொறுப்பு; அதற்காக வாங்கிய வாக்குமூலம் பொய் என்று தெரிந்த பிறகும் ஊமையாக இருத்தல் முறையா?

'முறையில்லை என்றால், அதுபற்றி இயக்குநருக்குத் தெரிவிப்பது, தொழுங்கு முறையை மீறல் ஆகாதா?

'ஊமையாக இருந்தால், அநீதிக்குத் துணைபோன குற்றம்; எடுத்துரைத்தால், அதிகப்பிரசங்கித்தனம்; இரண்டில் எதை ஏற்பது?

'இருக்கக்கூடாத நேரத்தில், இருக்கக்கூடாத இடத்தில் இருந்ததால், விழுக்கூடாத செய்தி என் காதில் வீழ்ந்தது; அதைப் பயன்படுத்த உரிமை இல்லை'' என்று எனக்கு நானே ஆறுதல் கூறிக்கொண்டேன், அப்படிச் செய்ததைப்பற்றி இன்னும் எனக்கு நிறைவு ஏற்படவில்லை.

'முகமது மேல் ஊழல் புகார் சொல்ல இடமிருக்கிறது' என்று, சாமு தாவர், இயக்குநருக்கு எழுதினார்.

அவர் அதைக் காவல் துறையின் புலனாய்விற்கு அனுப்பிவிட்டார்.

காவல்துறை புலனாய்ந்து, மேலும் சில சிறு ஊழல் குற்றங்களைச் சேர்த்து அறிக்கை அளித்தது.

அது, ஊழல் ஒழிப்பு மன்றத் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

முடிவு?

பட்டிவீரன் பட்டியில் கொடுத்த கையூட்டு மட்டுமே மெய்ப்பிக்கப் பட்டதாக, திரு. முகமது வேலையில் இருந்து நீக்கப்பட்டார்.

அது அநீதி.

'நான், எனக்குத் தெரிந்த தகவலைத் துணிந்து வலியக் கூறியிருந்தால் அவருக்கு அந்த அநீதி விளைந்திருக்காதே. என்னைப் போன்ற கோழைகள் நிறைந்த நாட்டில், நீதிதேவன் அடிக்கடி மயக்கம் போட்டுச் சாய்வான்' என்பதை உணரும் முதிர்ச்சி அன்று இல்லை.

ஏழெட்டு ஆண்டுகளுக்குப்பின், சென்னைக்கு வந்த திரு. முகமது என் அலுவலகம் வந்தார். இயக்குநர் பதவி பெற்று இருப்பது பற்றி என்னைப் பெரிதும் பாராட்டினார்.

உங்கள் வேலை நீக்கம் அநீதியானது. அதன்மேல் அரசுக்குக் கருணை மனு போடுங்கள். நான் என்னாலான உதவி செய்கிறேன் என்றேன்.

'சரி' என்று பதில் கூறினார். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

திரு. முகமதுவின் மேல், ஒப்பனை செய்த கூற்றின் அடிப்படையில், அவர் கண்டிக்கப்பட்டபோது, என் சிந்தனை பின்னோக்கிப் பறந்தது.

கருப்புச் சட்டை மாநாடு

1946 ஆம் ஆண்டு மே திங்கள் மதுரையில், வைகை ஆற்றுப் படுகையில் கருஞ் சட்டைப்படை மாநாடு கூடிற்று. எதிர்பார்த்ததைவிட இரட்டிப்பு மக்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

முதலில் நீண்ட, பெரிய ஊர்வலம் வெற்றிகரமாக நடந்தது.

முதல் நாள் மாநாட்டு உரைகள் சிறப்பாக அமைதியாக அமைந்தன.

இரண்டாம் நாள் முற்பகல், மாநாடு தாக்கப்பட்டது; பந்தல் முழுவதும் கொளுத்தப்பட்டது.

மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்களைக் காப்பாற்றி அனுப்புவது காவல் துறைக்குப் பெரும்பாடாயிற்று.

அந்த வன்முறை சம்பவம் பற்றிப்பொது விசாரணை நடத்தும்படி, சென்னை மாகாண அரசு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரை நியமித்தது.

அவர் விசாரணை பற்றிய அறிவிப்பில், 'சாட்சி கூற வருபவர்கள் கருஞ்சட்டை அணிந்து வந்தால் ஆபத்திற்கு ஆளாகலாம்; எனவே சாதாரண உடையில் வரவும்' என்று விளம்பரப்படுத்தினார்.

அதை ஆட்சேபித்தும் வேறு நகரில் விசாரணை நடத்த வேண்டுமென்று கோரினர் கருஞ்சட்டைப் படையினர்.

அவர்கள் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. எனவே, விசாரணையில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர்.

ஒருதலைப்பட்சமாக விசாரணை செய்யப்படாத சாட்சியங்களை வைத்துக் கொண்டு கூறிய முடிவில், 'கருஞ்சட்டைக்காரர்கள் சிலர், மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்ததைக் கண்ட பக்தர்கள் அவர்கள் கையிலைத் தீட்டாக்கிவிடுவார்களென்று அஞ்சி, ஆத்திரப்பட்டதால் கலவரம் மூண்டது' என்று பொருள் படும்படி முடிவு கூறப்பட்டது.

கலவரம் நடந்து கொண்டிருக்கும் சூட்டிலும், அதற்கு அடுத்த நாள்களிலும் நான் கேள்விப்பட்டது என்ன?

'பெரியார் அப்போதுதான் தோற்றுவித்துள்ள, கருஞ்சட்டைப் படை யைத் தொடக்கத்திலேயே அடக்கிவிட வேண்டுமென்று, இப்படி பிட்டு, புனைந்துரைத்து, வன்முறை தூண்டிவிடப்பட்டது' என்பதாகும்.

எங்களிடம் இப்படிக் கூறியவர்கள் பல நிலையினர்; பல சாதியினர்; அனைவரும் கடவுள் நம்பிக்கையுடையவர்கள்; அதை நெற்றியில் காட்டிக்கொண்டு இருந்தவர்கள்.

கலவரத்தை அடுத்து இப்படிச் சொன்னவர்கள் எனக்காகச் சொல்ல வேண்டிய நிலையில் இல்லாதவர்கள்.

முதலில் கேட்டபோது, நான் அவர்களின் கூற்றைப் பொருட்படுத்த வில்லை.

ஆனால், திரு. முகமதுவின்மேல் பொய் வழக்கை உருவாக்கி, தண்டனை பெற்றுத் தந்ததைக் கண்டபோது, என் நினைவில் முன்னர்க் கேட்டவை மின்னின.

கலிபாபட்ட முறையில் பகையில்லாதபோதும் 'நிர்வாகம்' என்னும் கத்தியை விரும்பும் என்ற மயக்கத்தில்,-

கலிபாபட்ட பெரிய அலுவலர் மீது பொய்ப் பழியை மிக வெற்றி கரமாக் கமத்த முடியுமானால்,-

அரசுக்குத் தொல்லையாக இருந்த ஓர் இயக்கத்தை ஒடுக்க அரசின் முன் ஆணையின்றியே தூண்டுதல் இன்றியே அரசுக்கு வேண்டியவர்கள், குறுக்கு வழியில் பாய்ந்து, கலவரத்தை மூட்டி இருக்கலாம் அல்லவா என்ற அய்யம் என்னுள் மின்னிற்று.

இவ்விரண்டும் ஒரே தன்மையன, ஒரே தரத்தில் இட்டுக் கட்டப் பட்டவை என்பது அப்போது அவ்வளவு உறுதியாக என் மனத்தில் படவில்லை.

காலமும் அனுபவமும் வேறு பாடத்தைக் கற்பித்தன.

32. கல்வி அமைச்சர் அவினாசிலிங்கனார்

கல்வி அலுவலர் மாநாடு

1949 ஆம் ஆண்டு, அரசிதழ்பதிவு பெற்ற கல்வி அலுவலர்களின் மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றது.

பொதுக்கல்வி இயக்ககத்தில் கூடிய அந்த இரு நாள் மாநாட்டைக் கூட்டுவித்தவர், அப்போதைய கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. அவினாசிலிங்கம்.

கல்விச் சீரமைப்பு பற்றி, வளர்ச்சி பற்றி, கல்வி அலுவலர் கலந்து ஆலோசிப்பதாகும்.

அமைச்சர், இயக்குநர், துணை இயக்குநர்கள், மண்டல ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் பேசிய பிறகு, மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குத் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க, வாய்ப்பு கிட்டியது.

பெற்றோர் கழகக் கூட்டங்களை ஊக்குவித்தல், வேலை நாள்களை, நேரங்களை அந்தந்தப் பகுதி சூழ்நிலைக்கேற்ப, பருவநிலைக்கேற்ப மாற்றி அமைத்தல், பெண் கல்வியின் தேவைபற்றிப் பிரசாரம் செய்தல் போன்ற பலனற்ற பழைய ஊக்க மருந்துகள் பற்றியே பலரும் பேசினார்கள்.

பாடமொழி, எத்தனை மொழிகளைக் கற்றுத் தருதல், எந்தெந்த நிலையில் தொடங்குதல் என்பது பற்றிக் கருத்து அறிய முயன்றார் அமைச்சர்.

தாய்மொழி வாயிலாகக் கல்வி என்பதில் அதிகக் கருத்து வேற்றுமை இல்லை.

முதல் வகுப்பிலிருந்து தாய்மொழியும், ஆறாம் வகுப்பில் இருந்து ஆங்கிலமும் கற்றுத்தரும்படி பலர் கூறினார்கள்.

இந்தி மொழியைக் கற்றுத்தரலாமா?

காலத்திற்கு முந்தி-பத்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே- கட்டாய இந்தியைக் கட்டாய பாடமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு எதிர்ப்பு எண்ணமாரியைக் கிளப்பி விட்டதையும், அது அன்றும் தணியாது இருந்ததையும் சுட்டிக்காட்டி, கட்டாய இந்தியில் அதிக ஆர்வம் காட்ட வேண்டாம் என்றும் சில மூத்தவர்கள் அளவிற்கு மீறிய அக்கறையோடு ஆலோசனை கூறினார்கள்.

இந்தியை விரும்புவோர் படிக்க ஏற்பாடு செய்தால் போதும் என்பது சிலருடைய கருத்து.

அப்படியானால் எந்த நிலையில் தொடங்கலாம் என்ற கேள்வி எழுந்தது.

ஏழாவது வகுப்பில்-இரண்டாவது படிவத்தில் தொடங்கலாம் என்று இரண்டொருவர் கூறினார்கள்.

பழையபடியே முதல் படிவத்திலேயே தொடங்கலாமென்று வலியுறுத்தியவர்கள் இரண்டொருவர்.

மூத்தவர்கள் பலர் பேசியபிறகு, எனக்கும் வாய்ப்புக் கிட்டியது.

என் கருத்து

''கல்வி வாய்ப்பு எல்லோருக்கும் எட்டவேண்டும். அதற்கு முதல் வழி சிற்றூர்களிலும் பள்ளிகள் நடத்தல்.

''பள்ளி இல்லா ஊர்களில் புதிய பள்ளிகளை அனுமதிப்பதில், தாராளப் போக்கை மேற்கொள்ள வேண்டும்.

''அதற்காக விதிமுறைகளைத் தளர்த்திப் புதிய ஆணையை அரசு பிறப்பிக்க வேண்டும்.

''சில ஊர்களில் மட்டும் தொடங்கி உள்ள பகல் உணவுத் திட்டத்தைப் பல ஊர்களுக்கு விரிவுபடுத்த வேண்டும்.

''ஏழை மாணவ மாணவிகளுக்கு இலவசப் பாட நூல்கள், குறிப்பு நூல்கள் முதலியவற்றைத் தாராளமாகவும் ஆண்டின் தொடக்கத்திலேயே கொடுக்க வேண்டும்.

''உயர்நிலைப்பள்ளி நிலையில், படிப்போடு, வேலைப் பயிற்சிகளும் இணைய வேண்டும்.

''முந்தியது அதிகமாகவும் பிந்தியது குறைவாகவும் இருப்பது போதும். ஆனால், எல்லோருக்கும். வேலைப்பயிற்சி கொடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு திட்டமிடவேண்டும்.

''மொழிகளைப் பொறுத்த மட்டில், தாய்மொழி பாடமொழியாக இருப்பதே முறை.

''இதுவரை இருப்பதுபோல். முதல் வகுப்பில் தாய்மொழியைக் கற்பிக்கத் தொடங்கலாம்.

''ஆங்கிலத்தை ஆறாம் வகுப்பில் தொடங்கும் மரபு நீங்கி அதைக் கலைக்கவேண்டும்.

''ஆனால், ஏழைகள் படிக்கும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் அதே நிலையில் ஆங்கிலத்தைக் கற்பிக்கவேண்டும்.

''இந்தி மொழியைப் பொறுத்த மட்டில், அது எப்படியோ மக்களிடையே பெரியதோர் வழக்கில் மாட்டிக்கொண்டு இருக்கிறது.

''ஆயுள் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களுக்கு, ஒப்பந்தத் தொகை குறிப்பிட்ட அளவிற்குக் குறையாதிருந்தால், குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்காவது, கட்டணம் செலுத்தியிருந்தால், ஒப்பந்தத்தைத் தொடராவிட்டாலும் 'முறிவு மதிப்பு' என்று ஒரு தொகையைக் கொடுப்பார்கள்.

''ஆறாம் வகுப்பில் இருப்போரைவிட ஒன்பதாம் வகுப்பில் கற்போர், ஓரளவு உலகம் அறிந்தவர்களாக இருப்பார்கள்.

''அவர்களின் பெற்றோர்களுக்கும் மற்றவர்களைவிட அதிகமான தொலைநோக்கு இருக்கும்.

''எனவே, ஒன்பதாம் வகுப்பிலிருந்து-நான்காம் படிவத்திலிருந்து விரும்புவோருக்கு மட்டும் இந்தி சொல்லிக் கொடுக்கலாம்.

''அம்மொழியில் தேர்ச்சி பெற்றால்தான் மேல் வகுப்பிற்குப் போகலாம் என்று மிரட்டத் தேவையில்லை; சிலராவது மிரளாமல் படிக்கத் தொடங்கினால் மெல்ல மெல்ல பலரும் படிக்க முன் வருவார்கள்.

''கீழ் வகுப்பு மாணவர்களைக் காட்டிலும் மேல் வகுப்பு படித்தவர்களில் அனைத்திந்திய தொடர்பு அதிகமாகலாம்.

''அதனால், முயன்று கற்போர், 'முறிவு மதிப்பாவது' பெறும் வாய்ப்பு கிட்டும். படிப்பு வீணாகாது.''

இப்படி நான் கருத்து கூறினேன்.

மறுநாள் வேளைக்கு முன், எனக்குப் பின் இரண்டொருவர் வந்தனர்கள். எவரும் என்னை ஆதரிக்கவில்லை!

அதிர்ச்சி அடைந்தேன்

மறுநாள் வேளையில் அடுத்த கட்டடத்தில் உணவிற்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள்.

அந்த உணவுக் கூடத்தில் காத்திருக்கும்போது, மாவட்டக் கல்வி அலுவலர்களில் ஒருவரான-எனக்கு மூத்த-திரு.சாம்பசிவம் பிள்ளை என்னிடம் வந்தார்.

அன்றைய நாளிதழைக் காட்டினார்; ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினார். மின் ஆற்றல் தாக்கியது போன்ற அதிர்ச்சி; ஏன்?

சென்னை மாகாண அரசின் ஆணை அதில் வெளியாகியிருந்தது.

என்ன ஆணை?

மீண்டும் கட்டாய இந்தி

அரசு, மாவட்ட ஆட்சிக்குழு, நகர்மன்றங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவை நடத்தும் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் மூன்றாவது வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை இந்தி மொழியைக் கட்டாய பாடமாகக் கற்பிக்கப் பொதுக்கல்வி இயக்குநர் உடனடியாக நடவடிக்கை செய்ய வேண்டும். ஒவ்வோர் பள்ளியும் உடனே இந்தி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

எப்படியும் அடுத்த கல்வி ஆண்டில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்தி கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

ஆனால், அரசு, மாவட்ட ஆட்சிக் குழு பள்ளிகளில் நடைமுறை ஆண்டிலேயே நடைமுறைப் படுத்தியாகவேண்டும். இப்படி ஆணை முடிகிறது.

ஆணையிட்டபின் ஆலோசனை மாநாடா?

ஆலோசனை கேட்கக் கல்வி அலுவர்கள் மாநாட்டைக் கூட்டுவர், அந்த மாநாட்டிற்குப் பிறகு, ஆணை பிறப்பித்தால் சரியாக இருக்கும்.

மாநாட்டன்று காலை வெளியாகும்படி ஆணையை அறிவித்து விட்டு, நம் கருத்தைக் கேட்பது, நம்மை ஆழம் பார்ப்பதாகும். அந்த நோக்கம் உணர்ந்த மூத்த அலுவலர்கள் சிறிதும் பிடிகொடுக்காமல் இருந்தார்கள்.

''நான் இந்தி கட்டாய பாடத்தை விரும்பாதவர் என்பது உங்களுக்குத் தெரிந்தது தானே, இன்னும் ஒன்றரை ஆண்டே பணியில் இருக்க வேண்டிய நானே எதிர்க்கவில்லை. என்னைப் பார்த்தாவது, நீங்கள் பட்டும் படாமலும் பேசியிருக்கலாம்.

''இளங்கன்று பயமறியாது என்பதைப்போல். பேசிவிட்டீர், திட்டவட்டமாகக் கருத்துரைத்தீர்; அது அமைச்சர் ஆணைக்கு மாறாக உள்ளது. அவர் பகை கொண்டால்; தொலைத்து விடுவாரே!'' என்று என்பால் உள்ள பரிவினால் இடித்துரைத்தார், சாம்பசிவம்.

அப்போதும் அச்சம் ஏற்படவில்லை; திரு. சாம்பசிவம் பிள்ளை வட்டார ஆய்வாளராக இருந்தபோது, நான் அவரிடம் இளந்துணை ஆய்வாளராக வேலை பார்த்தவன். அவர் குணசீலர்.

அத்தகையோர்கூட, உள்ளத்தில் உணர்ந்ததைச் சொல்ல முடியாத சூழல் சமுதாயத்திற்குக் கேடானது.

இவ்வெண்ணம் என்னுள் மின்னுகையில், மற்றொன்றும் மின்னி, எனக்கு ஆறுதல் தந்தது.

சேலம் நாச்சியப்பர் என்னைப்பற்றி, எனக்கு அறியாமலே, அமைச்சர் அவினாசிலிங்கனாருக்கு எழுதி விட்டதைப்பற்றி நான் துடித்தபோது, அவர் அஞ்சவேண்டாம் எந்த ஆண்டிக்கு 'எந்த மடம் சொந்தம்' என்று சொல்லி என்னைத் தேற்றியது பளிச்சிட்டது.

நொடியில், 'உண்மையைப் பேசியதற்காகத் தொல்லை வந்தால் வரட்டும்; வாழ்க்கை முழுவதும் இரத்தினக் கம்பளத்திலேயே நடக்கமுடியுமா?' என்று திடப்படுத்திக்கொண்டேன்.

திரு. சாம்பசிவம் பிள்ளையின் மனம் புண்படக்கூடாதே என்பதற்காக-

'எனக்கு உலகம் புரிய நாளாகிறது' என்று கூறிவிட்டு, அந்தப் பேச்சை அத்துடன் முடித்தேன்.

எங்கள் மாநாட்டு ஆலோசனைகள் மெய்யாகவே வெட்டிப் பேச்சாயின.

இரட்டைத் தாழ்ப்பாள்

1938 இல் இராசாசி, இந்தி மொழியைக் கட்டாயமாக்கியபோது முதல் படிவத்திலிருந்து புகுத்தினார்.

தொடக்கத்தில் சில உயர்நிலைப் பள்ளிகளில் பரப்புதல் என்பது முதல் திட்டம்.

1967 ஆம் ஆண்டு நவம்பரில் வந்தது; ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு [illegible] த் தாழ்ப்பாள் என்பதுபோல், கெடுபிடியோடு வந்தது.

பள்ளிகள் தொடங்கிச் சில திங்கள் ஆன பிறகு திட்டம்பற்றி அலையிடுவது தவறு; அத் தவறு பலமுறை நடந்திருக்கிறது. பழைய [illegible] கதைவிட, விரைவாக, புதிய கட்டாய இந்தியை நடை [illegible]படுத்த முயன்றது, தேவையற்ற தொல்லை.

[illegible]சாரி, முதல் படிவத்திலிருந்து புகுத்தியதற்குப் பதில் அலைலையார், இரண்டாம் படிவத்திலிருந்து கற்பிக்க ஆணையிட்டது [illegible] மாற்றம்; அதுவும் நல்ல மாற்றம் அல்ல.

அலுவலர்கள் மாநாட்டில் வைத்துள்ளதைப் பற்றி மாநாட்டுக்கு [illegible]ல்லாமல் ஆணை பிறப்பித்தது, அலுவலர்கள் அரசிடம் நம்பிக்கை [illegible]க்கையும் அச்சம் கொள்ளவும் வித்தாயிற்று.

அரசின் நிர்வாக இயந்திரம் பெரும்பாலும் காலத்திற்கு ஒவ்வாத [illegible]யுள்ள பொறிகளே.

அதை விட்டுவிட்டு, செயல்பட்டால், நெடுந்தூரம் போக [illegible]டியாது, அதன் வழியே சென்றாலும் தேக்கந்தான்.

காங்கிரசு மண்டலத்தில் புதியதோர் சூழலை உருவாக்கிவிட்டால் [illegible]ாங்கங்களை இயக்குவோர், முணுமுணுக்காமலே செயல்முறை [illegible]யாம். அலுவலகு முறையையும் மாற்றிக் கொள்வார்கள்.

[illegible]நூறு ஆண்டு கோளாறுகளைச் சரிசெய்ய, பத்தாண்டுத் தவணை [illegible]கூடக்கூட அமைச்சர் அவினாசிலிங்கனார் ஒப்பவில்லை என்பதே கல்வித்துறையின் மதிப்பீடு; மக்களின் ஒப்பீடு.

அந்தப் பாய்ச்சலே, அவருடைய கல்வி முயற்சிகளை விழலாக்கி [illegible]து என்பது பொது மக்கள் முடிவு.

அப்போதைப் பொது மக்களுக்கு என்ன தெரியும்? இப்படிக் கேட்க [illegible]கும் தோன்றிற்று.

மக்களாட்சி என்றால் மக்களால் நடத்தப்படும் ஆட்சி? மக்களுக்காக [illegible]க்கப்படும் ஆட்சி என்று அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறோம்.

மக்கள் தன்மை அறிந்து, மக்கள் பக்குவம் அறிந்து, செய்ய [illegible]ண்டிய வற்றைச் செய்ய வேண்டும்' என்ற பொருளும் அதில் [illegible]ருக்கிறது. குதிரை ஓட்டத்தில் காலைத் தட்டிவிட்டால் [illegible]ம் நேரிடும்.

அவினாசிலிங்கனார் சாதனைகள்

அமைச்சர் திரு. அவினாசிலிங்கனார், கல்வியே கருத்தாகக் கொண்டவர்; இந்தியக் கல்வி பற்றி, அதைப் பிடித்து உள்ள நோய்கள் பற்றிச் சரியாகத் தெரிந்து வைத்திருந்தவர்; கல்வி பற்றி அவருடைய முற்போக்குச் சிந்தனைக்கு மேலே எவரும் செல்லவில்லை.

அவ்வளவு முன்னோடியாக, அவர்கள் செயல்பட்டார்கள்.

முதியோர் கல்வி – மக்கள் கல்லூரி

நூற்றுக்கு எண்பது பேர் வயது வந்தோர், தற்குறிகளாக உள்ள சூழலில், சமுதாயத்தில் சிறுவர் சிறுமியர் படிப்பு முழு வெற்றியடையாது.

வீட்டில் உள்ள முதியோர் படிப்பது, குழந்தைகள் படிப்பிற்கு ஏற்ற இயற்கையான தூண்டுகோலாகும்.

இந்த உண்மையை முதலில் உணர்ந்தவர் திருவாளர் அவினாசிலிங்கம்.

சென்னை மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல முதியோர் எழுத்தறிவுப் பள்ளிகளைத் தொடங்க ஆணை இட்ட, அவரது தொலைநோக்கு போற்றற்குரியது.

ஏற்கெனவே எட்டாவதுவரை படித்து நின்றவர்கள், தொடர் கல்வி பெறும் பொருட்டு, மக்கள் கல்லூரிகள் (ஜனதா கல்லூரிகள்) நடத்தும் திட்டத்தைக் கொண்டு வந்தவர் அம் முன்னோடி.

ஒரு காலத்தில் நலிவுற்றிருந்த டென்மார்க் என்ற நாடு, இத்தகைய 'மக்கள் கல்வி' நிலையங்களால்தான் பரவலான அறிவு ஒளிவிடும் வளம் மிகும் நாடாக மாறிவிட்டது.

அத்தகைய ஒய்ந்த நேரக் கல்வி நிலையங்களின் அருமை, பெருமை, வற்றாத சாத்தியக்கூறுகள் ஆகியவற்றைக் கிணற்றுத் தவளைகளாகிய நாம் உணரவில்லை.

அய்யா, அவினாசிலிங்கனார் உணர்ந்தார். பல ஊர்களிலும் தொடங்க ஆணையிட்டார்.

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மறைந்து கிடக்கும் எல்லா ஆற்றல்களையும் வெளிப்படுத்த வழி செய்தலாகும்.

அறிவுக்கூறு மட்டுமல்ல மாந்தரின் உடைமை; செயல் திறனும் செயல் துடிப்பும் அவர்களின் சொத்தாகும்.

இதுவரை நம் கல்வி முறை, பிந்திய இரண்டையும் பொருட் படுத்தாமல் பாழாக்கி வருகிறது.

இக் கேட்டினைப் போக்க ஆணையிட்டவர், அமைச்சர் அவினாசிலிங்கனார்.

தொழிற் பயிற்சி

உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் பொறியியல், செயலாளர் பயிற்சி, பயிர்க்கலை போன்ற தேவையான தொழிற் பயிற்சியை மாணவருமிகு திரு. அவினாசிலிங்கனாரே நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

தமிழ் பயிற்சி மொழி

சேலம் நகரவைக் கல்லூரியிலும் கோவை அரசினர் கல்லூரியிலும் குறிப்பிட்ட தர்க்க பாடத்தில் தமிழ் பயிற்சி மொழியைப் புகுத்திய பெருமை அவரது ஆகும்.

ஆங்கிலம் அகன்றது; தாய்மொழி வந்தது.

அவருக்கு முன்பு, உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமே பாட மொழியாக ஆதிக்கம் செலுத்தி வந்தது.

அதையொழித்து, இந்திய மொழிகள் பாட மொழியாகச் செய்த வெற்றி வீரர், அவினாசிலிங்கனார்.

மாகாணக் கல்வி விதிமுறையின்கீழ் இயங்கிய அறுநூற்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில், சென்னையில் இருந்த அய்ந்து பள்ளிகளில் மட்டுமே, ஆங்கில வகுப்புகள் இருக்கும் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தவர் அவரே.

தாய்மொழி ஆசிரியர்களை உயர்த்தினார்

அந்தந்த மாவட்டத்தில் இந்திய மொழி ஆசிரியர்கள், பாட ஆசிரியர்களிலும் மட்டமாகக் கருதப்பட்டதை, குறைந்த ஊதியம் கொடுக்கப்பட்டதை மாற்றி, மற்ற ஆசிரியர்களுக்கு நிகரானவர்கள் இந்திய மொழி ஆசிரியர்கள் என்ற ஆணையை முதலில் பிறப்பிக்கக் காரணமானவர் அவரே.

பாடத்திட்டத்தில் குறள்

வகுப்புக்கு இரண்டொரு குறட்பாக்களே கற்றுக்கொடுத்த நிலையை மாற்றி, முதல் படிவம் ஆறாம் படிவம் முடிய எல்லா

வகுப்புகளிலும் குறட்பாக்கள் கற்பிக்கச் செய்த நல்லார், அவினாசிலிங்கனாரே.

குறைந்தது பத்துக் குறளாகத் தொடங்கி, அறுபது குறள்கள் வரை கற்பிக்கச் செய்தார்.

கலைக் களஞ்சியம்

இந்திய மொழிகளிலேயே தமிழ்மொழியில்தான் முதன் முதலாகப் பெரிய கலைக்களஞ்சியம் உருவாயிற்று. தமிழ் வளர்ச்சிக் கழகத்தைத் தொடங்கியவர், அமைச்சர் அவினாசிலிங்கம் ஆவார்.

அண்மைக்காலம் வரை அவரே அந்தக் கழகத்தின் தலைவராக இருந்து, பெரியசாமித் தூரனைக் கொண்டு கலைக் களஞ்சியம் வெளியிடும் மகத்தான பெரும் சாதனையை ஆற்றினார்.

பெருக்கெடுத்தோடும் நாட்டுப்பற்றும் பொது மக்கள் நலனில் நல்லெண்ணமும் இரண்டையும் வளர்க்கும் முன்னோடிக் கருத்துகளும் செறிந்த அமைச்சர் அவினாசிலிங்கனாரைத் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை; கல்வித்துறை அவரது சிந்தனைக்கும் பயன்படவில்லை.

திரு. அவினாசிலிங்கனார், சில ஆண்டுகளில், அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுப்போனது, பொதுமக்களின் முதியோர் கல்வி வளர்ச்சியையும் கல்லூரி தமிழ்ப்பாட மொழியாவதையும் பாதித்தது.

அவரால் தொடங்கப்பட்ட, முதியோர் எழுத்து அறிவிப்பு மையங்கள், மக்கள் கல்லூரிகள், தாய்மொழி வாயிலாகக் கல்வி போதித்தல் போன்றவை அப்போதைக்கு ஆதரவின்றிப் பட்டுப் போயின.

'விசிறி'கள் தோன்றிவிட்டார்கள்

நான் மதுரை மாவட்டக் கல்வி அலுவலராக நிறைவோடு பணி புரிந்து வந்தேன். எந்தப் பள்ளியோடும் எனக்கு விரிசல் ஏற்படவில்லை.

தலைமையாசிரியர் பதவியில் முதியவர்கள்கூட என்னிடம் உண்மையான மதிப்போடு நடந்து கொண்டார்கள்.

உயர்நிலைப் பள்ளிகளின் ஆண்டுத் தணிக்கையின் போது, தனிப்பட்ட ஆசிரியர்களுடன் காணும் குறைகளை, தலைமையாசிரியர் முன்னிலையில் அவர்களிடம் தனித்தனியே சொல்லுவேன்.

நான்கு பேரும் தவிர்க்க வேண்டிய குறையாயிருப்பின் ஆசிரியர்கள் கூட்டத்தில் பெயர் குறிக்காமல் இதமாக எடுத்து வெளியிடுவேன்.

நிறையும் இருக்குமல்லவா? அதைப் பலரும் அறியப் பறைசாற்றுவேன்; பெயர் சொல்லி விளம்பரப்படுத்துவேன்.

எனவே, எனக்கு ஒவ்வொரு பள்ளியிலும் 'விசிறி'கள் தோன்றி விட்டார்கள்.

இந் நூற்றாண்டின் நாற்பதுகளிலேயே கல்வித் துறையில் ஊதல் நோய் வந்துவிட்டது. எதைக் குறிப்பிடுகிறேன்?

குறிப்பிட்ட சில பள்ளிகள் பெரிதாக வளர்ந்து விடுதலையே குறிக்கிறேன்.

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் மாணாக்கர் எண்ணிக்கை இரண்டாயிரம் ஆக இருந்தது. தலைமையாசிரியர் கிருஷ்ணமூர்த்தி அய்யர் கெட்டிக்காரர்.

அய்ம்பத்தாறு ஆசிரியர்களையும் பெயர் சொல்லிக் கூப்பிட இயலாது. பழைய மரபின் காரணமாகச் சிறப்பான ஒழுங்கு பேணப்பட்டு வந்தது.

33. அண்ணல் காந்தி மறைந்தார்

டாக்டர் சௌந்தரம் அம்மையார்

நான் மதுரையில் அலுவல் பார்க்கும்போது, முதன் முறையாக டாக்டர் சௌந்தரம் அம்மையாரைக் காண நேர்ந்தது.

இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டவர்.

சென்னை மாநில அரசியல் அரங்கில், சட்டமன்ற உறுப்பினராக விளங்கியவர்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும் இந்திய அரசின் துணைக் கல்வி அமைச்சராகவும் நற்பணி ஆற்றியவர்.

அவர் துணைக் கல்வி அமைச்சராகவும் இயங்கியபோது நான் இந்தியக் கல்வி அமைச்சகத்தின் இணைக் கல்வி ஆலோசகனாக இருந்தேன்.

அதைப்பற்றிப் பின்னர் உரிய இடத்தில் கூறுவேன்.

காந்தி கிராமப் பல்கலைக்கழகம்

டாக்டர் சௌந்தரம் அம்மையார், சின்னாளப்பட்டிக்கு அருகில் தம்பித் தோட்டம் என்னும் இடத்தில், உயர் ஆதாரப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார்.

தொடங்குவதற்கு முன்பு என்னைக் கண்டு பேசி ஆலோசித்தார்.

அது இன்று ஆல்போல் தழைத்து, காந்திகிராமப் பல்கலைக் கழகமாக இயங்குகிறது. இடையில் பலமுறை அங்குச் சென்றுள்ளேன். அவற்றை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

தேசத் தந்தை மறைந்தார்

ஒரு நாள் மாலைப் பொழுது சாய்ந்த பிறகு, வெளியூர் சென்றிருந்த நான், காரில் மதுரை நகருக்குள் நுழைந்தேன்.

தெருவெல்லாம் ஆங்காங்கே சோக மயமான கூட்டங்கள்; வானொலியில் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்கள். கார் ஓடிக் கொண்டிருந்ததால், செய்தி சரியாகக் கேட்கவில்லை.

வீட்டை அடைந்ததும் இடிபோன்ற செய்தியைக் கேட்டேன்.

தலை கிறுகிறுத்தது.

அண்ணல் காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டார்; கோட்சே என்ற இந்துவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வழக்கம்போல, 30-1-48 மாலை காந்தியடிகளார், வழிபாட்டுக் கூட்டத்திற்குச் சென்றார்.

தில்லியில் பிர்லா மாளிகைக்குள் கூடியிருந்தவர்கள் இடையே அண்ணல் காந்தியடிகள் நுழைந்தார்.

மக்களே போன்ற ஒருவர் கையெடுத்துக் கும்பிட்டார்.

அண்ணலும் வணங்கினார்.

மறுநொடி, கயவனின் குண்டு, அடிகளின் மார்பில் பாய்ந்தது. 'அரே! ராம்!' என்றபடியே மறைந்தார் காந்தி.

ஆம்; சத்தியம் சாய்ந்தது; சீலம் வீழ்ந்தது; தூய்மை மறைந்தது; நாட்டு நலம் ஆழ்ந்தது; வழிகாட்டும் பேராற்றல் சுக்கு நூறாயிற்று.

மக்கள் நலனுக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது.

காரிருள் சூழ்ந்தது; வெறி பின்னிக்கொண்டது; அவாக்கள் பற்றிக் கொண்டன; தணியாத பணத்தாசை; வெடிக்கும் சமய வெறி, ஓயாத சாதிக் கலவரம், ஆகியன நாட்டை அலைக்கழிக்கின்றன.

30-1-48 அன்று அண்ணல் காந்தி அடிகள் மறைந்ததைக் கேட்டு, உலகம் அழுதது; மன்னர்கள் இரங்கினார்கள்; நாடாளும் தலைவர்கள் தலைவணங்கினார்கள்; பொது மக்கள் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்தார்கள்.

காந்தி அடிகளாரின் பெருமை

அன்றைய அறிவியல் உலகமேதையின் இரங்கற் செய்தி இப்போது நினைவிற்கு வருகிறது.

'காந்தியைப் போன்ற ஒரு மனிதர், நம்மோடு இருந்தார், நடமாடினார், வாழ்ந்தார் என்று சொன்னால், வருங்கால சந்ததிகள் நம்பவே மறுக்கும்' என்று காந்தியடிகளின் சிறப்பை எடுத்துக் காட்டினார், அய்ன்ஸ்டீன் என்னும் அறிவியல் மேதை.

ஆயிரங் காலத்திற்கு ஒரு முறை தோன்றும் அறவோர் ஆவார் காந்தியடிகள்.

அரசியல் ஓடையை நேர்மை, தூய்மை வெள்ளம் பாய்ச்சி, புனிதப்படுத்தியவர் காந்தி அடிகள்.

பிழைப்பிற்கு இடமாயிருந்த அரசியல் களத்தைத் தொண்டிற்கு உலைக்களமாக, தியாகத்தின் பட்டறையாக மாற்றிய பெரியார், காந்தி அடிகள்.

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகக் காலமெல்லாம் தவங்கிடந்த சான்றோர்; கடையரும் கடைத்தேறவே தன்னாட்சி என்று நாள்தோறும் நினைவு படுத்திய ஏழைபங்காளர்.

பளிங்கென விளங்கும் தன்னல மறுப்பின் உயிரோவியம்; உள்ளமும், உரையும், சொல்லும், செயலும் ஒன்றாக இயங்கிய ஆயோன்.

இத்தகைய மாமனிதர் காட்டிய சுட்டுவிரல் கண்டல்லவா, இமயம் முதல் குமரிவரை பட்டம் பெற்றோர் முதல், படிப்பறியார் வரை - ஆண்களோடு பெண்களும்-இடர்மிகு சிறைப்பட்டார்கள்! விடுதலை வேள்வியில் குதித்தார்கள்! மண்ணாங் கட்டிகளாகக் கிடந்த இலட்சோப இலட்சம் மக்களை உரிமை வேட்கை கொண்ட, நாட்டு நலனைக் கருத்தில் ஏற்ற வீரர்களை, காந்திய வழியில் எவர் நடத்துவார்? எவர் நெறிப்படுத்துவார்? எவருடைய உண்ணா நோன்பு பொது மக்களை ஈர்த்துத் திருத்தும்.

இப்படி எண்ணங்கள் அலைமோதின; சோகம் புரட்டிற்று; தூக்கம் கெட்டது.

சில நாள்கள்வரை, நானும் என் மனைவி காந்தமும் சித்தம் கலங்கினோம்.

உணவும் உறக்கமும் கெட்டாலும் அலுவல் கெட முடியாதல்லவா?

அலுவல் பற்றி வெளியூர் பயணம் புறப்பட்டோம்.

அண்ணலின் அஸ்தியை நாட்டின் பல்வேறு பகுதிகளில் கரைத்தார்கள்.

அப்படிக் கரைத்த நாளில், நாங்கள் பெரிய குளத்தில் தங்கி இருந்தோம். அஸ்தி ஊர்வலம் நாங்களிருந்த பயணிகளின் விடுதியைத் தாண்டி நகர்ந்தது. எங்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

விடுதியை விட்டு, வீதிக்கு வந்தோம். ஊர்வலத்தில் கலந்தோம்; நடந்தோம்; களைப்பையும் பொருட்படுத்தாது நடந்தோம்; அமைதியாக நடந்தோம். நெஞ்சம் வெடித்து விடும்போல் இருந்தது.

உரிய இடத்தை அடைந்தோம். சிலர் உரை நிகழ்த்தினர்.

எனக்கும் வாய்ப்புக் கிட்டியது. சில மணித்துளிகள், வாய் திறக்க இயலவில்லை. கண்ணீர் மல்க,-

''ஈராயிரம் ஆண்டுகளாக, 'என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் குறள் வரிக்கு ஆள் தேடிற்று மானுடம்.

''கடைசியாக, அண்ணல் காந்தியடிகளின் உருவில் அவரைக் கண்டோம்.

''வாராமல் வந்த மாமணியை இழந்தோம்; எனினும் நாம் இருப்போம். எப்படி இருப்பது?

''காந்திய சத்திய நெறியில், அன்பு நெறியில், நாட்டுப்பற்று நெறியில், எல்லோரையும் வாழ்விக்கும் நெறியில் ஊன்றி நடப்போம் என்று நமக்கு நாமே வாக்குறுதி தந்து, அண்ணலுக்கு அஞ்சலி செலுத்துவோமாக'' என்று நான் பேசி முடித்தேன்.

காந்தி அடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட கயமை எண்ணற்றவர்களைப் பிடித்து உலுக்கியது.

எளிய மக்களை உலுக்கியது; அதைப் போன்றே தலைவர்களை உலுக்கியது; தந்தை பெரியாரை உலுக்கியது.

காந்தி அடிகளாரும் பெரியாரும்

காந்தியடிகளின் தெளிவான, தன்னலமற்ற, நாட்டுத் தொண்டாலும் தீண்டாமை ஒழிப்பு முயற்சியாலும் கவரப்பட்டு, நாட்டுத்

தொண்டிற்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டவர், தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி.

செல்வத்தில் பிறந்து, செல்வச் செழிப்பில் வளர்ந்து, செல்வக் குடியில் வாழ்ந்த பெரியார், காந்தியடிகளைத் தலைவராக ஏற்றுக் கொண்டபின், எளிமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்.

அண்ணல் காந்தியடிகள் 1924 ஆம் ஆண்டில் உண்ணாநோன்பிருந்த போது, அண்ணலின் உயிரைக் காக்கும்பொருட்டு, சென்னைத் திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடிய மக்களின் வழிபாட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, 'ஆண்டவனைப் பிரார்த்தித்தவர்.

பிற்காலத்தில் பெரியார், காந்தியடிகளின் வழிமுறை, முழு விடுதலைக்கு உதவாது என்று கருத்துகொண்டார்.

காங்கிரசு அணியில் இருந்து விலகியபடியே இருந்தார்; காந்தியத்தை அடிக்கடி கண்டித்தார், மறுத்தார்.

எனினும் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, பெரியார் உருக்கமான இரங்கல் அறிக்கை வெளியிட்டார். காந்தியடிகளின் பெருமைக் தன்மையை; ஈடு இணையற்ற தொண்டினைப் படம் பிடித்துக் காட்டினார்.

காந்தி நாடு

இந்தியாவிற்கு 'காந்தி நாடு' என்று பெயர் சூட்ட வேண்டுமென்றார்.

காந்தியடிகள் பற்றி, அப்போது பெரியார் எழுதியவை என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிட்டன; உணர்வில் கலந்து விட்டன.

இசைத்தட்டில் காந்தி

அந்த நிகழ்ச்சியை அடுத்து என்று நினைக்கிறேன்.

தமிழ்நாட்டு இசை உலகில் முன்னணியில் இருந்த மூவருடைய இசைத் தட்டுகள் வெளிவந்தன.

"கவிபாடிப் பெருமை செய்யக் கம்பன் இல்லை" என வரும் நெஞ்சை அள்ளும் பாடலை, கவிக்குயில், கே. பி. சுந்தராம்பாள் பாட, அது இசைத் தட்டாக நாடெங்கும் ஒலித்தது.

"நல்ல சமயமடா? இதை நழுவ விடுவாயோ? காந்தியைப் போல் தலைவர் எந்த நாளில் கிடைப்பாரடா?" எனவரும் பொருள் நிறைந்த பாடலை, இசை அரசு, தண்டபாணி தேசிகர், இசைத் தட்டாக வழங்கியிருந்தார்.

அதுவும் பொது மக்களைக் கவர்ந்தது; நெறிப்படுத்தியது.

இவர்களுடைய பாடல்களைப் போன்றே, திருச்சி, தியாகராய பாகவதர், காந்தியைப் பற்றிப் பாடிய பாடலைத் தாங்கிய இசைத் தட்டும் மக்கள் மத்தியில் புகழ்பெற்று இருந்தது.

மூவருமே கணீரென்று பாடியிருந்தார்கள்; முனை முறியாமல் பாடினார்கள்; கருத்தாழமுடைய பாடல்களைக் கனிவுடன் பாடி இருந்தார்கள்.

காந்திக்காகக் கண்ணீர் வடித்தேன்

1948 ஆம் ஆண்டு முதல் 1965 அக்டோபர் வரை, மூவருடைய பாடல்களையும் ஆண்டுக்குப் பல முறை, அண்ணன் குத்தூசி குருசாமி அவர்கள் வீட்டில் கேட்பேன்.

அந்தப் பாடல்கள், குடும்பத்தில் எல்லோர் உள்ளங்களையும் உருக்கிற்று.

எனினும் என்னைத் தேம்பித் தேம்பி அழ வைத்தன.

குழந்தைகளின் கேலிகூட, என் அழுகையை நிறுத்த முடியவில்லை.

தாய் மறைந்தபோது, தந்தை மறைந்தபோது, மாமா மறைந்தபோது, கொட்டாத கண்ணீரை, காந்தியடிகளை நினைத்த போதெல்லாம் கொட்டினேன்.

முந்திய மூவரும் எனக்கு உயிரானவர்கள். அண்ணல் காந்தியடிகளோ நாட்டுக்கே உயிரானவர்கள்.

நலிந்தோரின், நாதியற்றோரின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம்.

வாராததுபோல் வந்த மாமணியை இழந்தோமே என்ற வேதனையோடு, பெரியகுளத்தில் இருந்து மதுரைக்குத் திரும்பினோம்.

சென்னை மாவட்டக் கல்வி அலுவலரானேன்

ஆணை காத்திருந்தது. இயக்குநர் என்னைச் சென்னை மாவட்டக் கல்வி அலுவலராக மாற்றி இருந்தார். அதைப் பார்த்ததும் தலை சுற்றிற்று.

மற்றவர்களாக இருந்தால், தலைநகருக்கே மாற்றியுள்ளார்களே, என்று பூரித்துப் போயிருக்கக்கூடும். என் சிந்தனை வேறு விதமாக ஓடிற்று.

[illegible]வளவு இளமையில் சென்னைக்கு மாற்றிவிட்டார்களே! ஓய்வு [illegible]யோ பல்லாண்டுகள் உள்ளன.

அதுவரை எப்படி அங்கே இருப்பது?

முதிர்ந்த வயதில் மீண்டும் வெளியூர்களுக்கு மாற்றினால் எப்படித் [illegible]க்குப் பிடிப்பது?''-இப்படியொரு கவலை என்னுள் மின்னிற்று.

[illegible]னை, மண்டலப் பள்ளி ஆய்வாளர் திரு. சாமு நாயரிடம் [illegible]றேன். என் கவலையைத் தெரிவித்தேன். ''மதுரையிலேயே [illegible] காலமும் வைத்திருக்கப் பரிந்துரையுங்கள்'' என்றேன்.

[illegible]போது அதற்குக் காலங்கடந்து விட்டது. மாறுதல் செய்வதற்கு [illegible] என்னை நேரில் கேட்டார்கள். மாற்ற வேண்டாம் என்று [illegible]னேன். சென்னைக்கு உன்னிலும் தகுதியான ஆள் இல்லை என்று [illegible]டார்கள். எனவே, ஏற்றுக்கொண்டு, சென்னைக்குப் போ'' [illegible]

[illegible] நாள்களில், மதுரையில் அலுவலை ஒப்படைத்தேன்.

[illegible] சென்னைக்குப் புறப்பட்டோம்.

மதுரை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்த அடிப்படை [illegible]களான நீலமேகம், இராஜி, அருணகிரி ஆகிய மூவரின் [illegible]யும் இன்னும் நினைவில் நிற்கிறது.

[illegible]து விடிய, மதுரையில் புறப்பட்டு, காலை ஒன்பது மணிக்கு, [illegible] சென்று அடைந்தோம்.

அங்கே, கீழக் கோபுரத்தை அடுத்துக் குடியிருக்கும் நண்பர் டி. [illegible]மி வீட்டில், சிற்றுண்டி அருந்திவிட்டுப் புறப்பட்டோம்.

அலுவல்கள் கொடுத்தனுப்பிய கட்டுச் சோற்றை விழுப்புரத்தில் [illegible]ம்.

[illegible], மாலை ஐந்து மணிபோல் சென்னை சேர்ந்தோம்.

[illegible]போது என் மாமனார் குடும்பம்-கிருஷ்ணாம்பேட்டையில், [illegible] வாராவதி சாலையில் சிறிய வீட்டில் குடியிருந்தது.

[illegible]டொரு நாள்கள் அங்கே தங்கினோம்.

[illegible]சர் எஸ். இராமநாதன்

[illegible]யும் எஸ். இராமநாதன் அவர்கள் என் உதவிக்கு வந்தார். அவர், [illegible] மாவட்ட நிலக்கிழார் குடும்பத்தைச் சேர்ந்தவர். எம்.ஏ.பி.எல். [illegible] நல்ல வழக்கறிஞர்.

இந்த நூற்றாண்டின் இருபதுகளில் தமிழ்நாடு காங்கிரசு வானில் நட்சத்திரமாக ஒளிவிட்டவர்.

பெரியாருடைய சமுதாய சீர்திருத்தக் கருத்துகளுக்கும் வகுப்புரிமைக் கொள்கைக்கும் ஆதரவாக நின்றவர்.

பெரியார், தன்மான இயக்கங் கண்டபோது, அவரோடு சேர்ந்து பல்லாண்டு இணைந்து உழைத்தவர்.

பெரியாரின் ஆங்கில வார இதழின் 'ரிவோல்டி'ன் ஆசிரியராகப் பணியாற்றியவர். குத்தூசி குருசாமி துணையாசிரியராக இருந்தார். இவ்விதழ் 2 ஆண்டு போல் ஈரோட்டிலிருந்து வெளிவந்தது. இவ்விதழில் நானும் ஒரு கட்டுரை எழுதியதாக நினைவு.

எஸ். இராமநாதன், பெரியாரோடு சோவியத் நாடு போன்ற மேனாடுகளுக்குச் சென்று வந்தவர்.

பெரியார் வகுத்த, 'சுயமரியாதை சமதர்மத் திட்டம்' பற்றி முணுமுணுக்கத் தலைப்பட்டார்; பின்னர் அதை ஏற்றுக் கொண்டார்.

அந்தக் கீறலைக்கண்ட மூதறிஞர் இராசாசி, இராமநாதனை மீண்டும் காங்கிரசிற்கு இழுத்துக் கொண்டார்.

அதோடு 1937 இல் தாம் அமைத்த காங்கிரசு அமைச்சரவையில் இராமநாதனைச் சேர்த்துக் கொண்டார்.

சில ஆண்டுகளுக்குள், இராமநாதன் அரசியலில் இருந்து மெல்ல மெல்ல விலகிக்கொண்டார்.

கட்சிக்கட்டுகள் ஏதும் இல்லாத, மனித உரிமை, சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கருத்துகளுக்கு ஆதரவாளராக மாறி வாழ்ந்தார்.

இராமநாதன் இல்லத்தில் இரு திங்கள்

நான் மதுரையிலிருந்து சென்னைக்கு வந்தபோது திரு. இராமநாதனும், திருமதி இராமநாதனும் சாந்தோம் கடற்கரையில் ஓர் நல்ல பங்களாவில் குடி இருந்தார்கள்.

அங்குக் காலி அறைகள் இருந்தன. எனவே, தங்களோடு தங்கிக் கொள்ளும்படி எங்களை நேரில் அழைத்தனர்.

உடன்பட்டோம். ஏறத்தாழ இரு திங்கள் அவர் இல்லத்தில் அவர் விருந்தினராக இருக்கும் பேறுபெற்றோம்.

கோவையில் திரு. சி. சுப்பிரமணியம் வீட்டில் நான் மட்டும் சில திங்கள் உரிமையோடு தங்கினேன்.

சென்னையில் திரு. இராமநாதன் வீட்டில் நானும் காந்தம்மாவும் உரிமையோடு தங்கினோம்.

இருவருக்கும் நாங்கள் சுண்டைக் காய் அளவு கைம்மாறும் செய்யும் வாய்ப்பு நேரிடவில்லை.

34. மாநகராட்சிக் கல்வி அலுவலரானேன்

சென்னை மாவட்டக் கல்வி அலுவலர்

மதுரையிலிருந்து சென்னைக்கு நெடுஞ்சாலை வழி வந்தடைந்த நான், அடுத்த நாள், சென்னை மாவட்டக் கல்வி அலுவலர் பதவியை ஏற்றுக் கொண்டேன்.

அப்போது, சென்னை மாநகரம் முழுவதற்கும் ஒரே ஒரு கல்வி அலுவலரே.

அவருடைய அலுவலகம் எங்கே இருந்தது?

சென்னை நுங்கம்பாக்கம், கல்லூரி சாலையில், கூவம் ஆற்றங் கரையில் அமைந்துள்ள, பொதுக்கல்வி இயக்கக வளாகத்தில் இருந்தது.

அவ்வளாகம் பரந்தது. அதன் நடுவில் ஓர் சிவப்புநிற மாடிக் கட்டடம் உள்ளது. அதுவே 1948 ஆம் ஆண்டில் மாவட்டக்கல்வி அலுவலகம்.

அக்கட்டடத்தில் நான் அலுவலில் சேரும்போது, கல்வித் துறையில் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து கொண்டிருந்த முதியவர் ஒருவர்,-

''இது முன்பு, பொதுக்கல்வி இயக்ககம் ஆக இருந்தது. இங்கு பதவிப் பொறுப்பேற்கும் தாங்கள், பொதுக்கல்வி இயக்குநராக உயரவேண்டும்'' என்று வாழ்த்தினார்.

'நல்லதை விழையும் பெருமனம்' என்று அதை ஒரு காதில் வாங்கி, மறுகாதில் விட்டுவிட்டேன்.

நிதி ஆண்டின் இறுதி ஆகையால், அலுவலக வேலை நிறைய இருந்தது.

பள்ளிகள், ஆசிரியர் மையங்கள் முதலியன ஆண்டு விழாவில் கலந்துகொள்ளும்படி என்னை அழைத்தன.

மாநகராட்சிக்கு எதிர்பாராத நியமனம்

பெரும்பாலும் அவற்றை ஏற்றுக்கொண்டேன்.

நான் மாமனார் சுப்பிரமணியம் வீட்டில் 1948 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் மாலையில் அமர்ந்து, உரையாடிக் கொண்டிருந்தேன்.

அண்ணன் திரு. குருசாமி, அண்ணி குஞ்சிதம், என் மனைவி காந்தம்மாள் முதலியோர் உடன் இருந்தனர்.

நண்பர் ஒருவர், விரைந்து வீட்டிற்குள் நுழைந்தார்; மளமளவென்று கூடத்திற்கு வந்தார். கையில் இருந்த ரோஜா மாலையை என் கழுத்தில் சூட்டிப் பாராட்டினார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

''நான் சென்னைக்கு மாறுதல் ஆகிவந்த உடனேயே வந்து மாலை அணிவித்து வரவேற்றுவிட்டீர்கள். இப்போது எதற்கு மாலை?'' என்றேன்.

''மகிழ்ச்சிக்கு உரியதோ அல்லவோ தெரியாது; நீங்கள் சென்னை மாநகர் ஆட்சியின் கல்வி அலுவலராக நியமிக்கப் பட்டுள்ளீர்கள்; அதற்காக உங்களுக்கு மாலை சூட்டுகிறேன்'' என்று கல்யாணசுந்தரம் கூறினார். அவர் யார்?

சென்னை மாநகராட்சித் தொடக்கப் பள்ளி ஒன்றில் ஆசிரியர்; திறமையும் நாணயமும் கலந்த ஆசிரியர்.

போர்க் காலத்தில், சென்னை மாநகரில் போர் ஆதரவுப் பணியில் வெற்றிகரமாகச் செயல்பட்ட ஆசிரியர்.

பொது வாழ்க்கையிலிருந்த பல பெரியவர்களோடு நல்ல தொடர்புடையவர்; அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

எனினும் பணி முறையில் மேலே இருப்பவர்களிடம் பணிவாக நடந்து கொள்ளும் போக்கினர்.

அவரது செய்தியை நான் நம்பவில்லை. ''நீங்கள் சொல்வது சரியாக இராது'' என்று கூறிவிட்டு, அண்ணன் குருசாமியைப் பார்த்தேன்.

''தம்பி, மாநகராட்சி அலுவலுக்குப் போகாதிருக்க, தக்க முன்னேற் பாடுகள் செய்து வைத்துள்ளார். நீங்கள் கேள்விப் பட்டதுபோல நியமனம் செய்து இருக்க மாட்டார்கள்'' என்றார், அண்ணன் குருசாமி.

''நான் காற்று வாக்கில் கேள்விப்பட்டது அல்ல இச் செய்தி. இன்று மாலை மாநகராட்சி மன்றக் கூட்டம் நடந்தது; கல்வி அலுவலர் நியமனம் பற்றி முடிவு எடுப்பார்கள் என்று எனக்குத் தெரியாது.

''வேறொன்று பற்றி மாநகராட்சிக்குச் சென்ற நான், தாழ்வாரத்தில் காத்து இருந்தேன். கதவுகளை அடைத்துவிட்டு இரகசியக் கூட்டம் நடத்திக் கொண்டு இருந்தார்கள்.''

''சிறிது நேரத்திற்குப்பின் வெளியே வந்த உறுப்பினர் ஒருவர், 'நெ.து. சுந்தரவடிவேலு கல்வி அலுவலராக நியமிக்கப்பட்டார்' என்று காத்திருந்த ஒருவரிடம் கூறினார்.

''அதை உறுதிப்படுத்திக் கொண்டு திருவல்லிக்கேணி பூக்கடைக்குச் சென்றேன்; மாலையை வாங்கிக் கொண்டு நேரே இங்கே வருகிறேன்'' என்று ஆசிரியர் கல்யாணசுந்தரம் உரைத்தார்.

மாநகராட்சி அலுவலுக்குத் தள்ள மாட்டார்கள் என்ற தெம்போடு இருந்த எனக்கு அந்தச் செய்தி, பேரிடியாக இருந்தது.

குத்தூசி குருசாமி உறுதிப்படுத்தினார்

எப்படிச் செய்தியை உறுதிப் படுத்திக் கொள்வது? உண்மையானால் எப்படி அதிலிருந்து நழுவுவது? இக்கேள்விகளை உரக்க எழுப்பினேன்.

அவ்வேளை, அண்ணன் குருசாமி வெளியே சென்றார். சில மணித்துளிகளில் திரும்பி வந்தார்.

''இந்து நாளிதழின் அலுவலகத்தோடு தொலைபேசியில் பேசினேன். நீங்கள் மாநகராட்சி அலுவலராக நியமிக்கப்பட்டிருப்பது உண்மையே'' என்று உறுதிப்படுத்தினார். 03-03-1948 நாளைய இந்து நாளிதழ் என் நியமன விவரத்தை வெளியிட்டது.

இந்த நியமனம் எப்படி நேரிட்டது?

அதற்குச் சில திங்களுக்குமுன் மாநகராட்சிக் கல்வி அலுவலர் பதவி காலியாயிற்று. அவ்விடத்திற்கு அரசு ஊழியத்தில் உள்ள கல்வி அதிகாரி ஒருவரை நியமிக்க, மாநகராட்சி விரும்பியது. அதையொட்டி மூன்று மாவட்டக் கல்வி அலுவலர் கொண்ட பட்டியலை அரசிடம் கேட்டது.

அரசு அனுப்பிய பட்டியலில் முருகேச முதலியார், நரசிம்மலு நாயுடு, நெ.து. சுந்தரவடிவேலு ஆகிய மூவரின் பெயர்கள் இருந்தன.

மாநகராட்சி வாக்கெடுப்பின் வாயிலாக என்னை நியமித்தது. என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தேன். அடுத்த நாள் காலை பொதுக் கல்வி இயக்குநர் திரு. டி. சதாசிவரெட்டியைத் தேடிச் சென்றேன். கால தாமதமின்றிப் பேட்டி கிடைத்தது.

இயக்குநர் சொன்ன தகவல்

என்னைக் கண்டதும் இயக்குநர் பேசத் தொடங்கினார்.

''இன்று காலை இதழ்களில் வெளி வந்துள்ள செய்தி உனக்கு மிகுந்த ஏமாற்றமாக இருக்கலாம்.

''பல திங்களுக்கு முன்பு நீ சென்னைக்கு வந்து, என்னை மாநகராட்சிக் கல்வி அலுவலராக அனுப்பாதீர்கள் என்று கேட்டுக் கொண்டீர்கள். அதை நினைவில் வைத்திருந்தேன்.

''அரசுக்கு அனுப்பிய பட்டியலில் உன் பெயர் இல்லை; ஆனால் அரசு மாநகராட்சி மேயருக்கு அனுப்பிய பட்டியலில், நாங்கள் அனுப்பிய ஒரு பெயரை விட்டுவிட்டு, உன் பெயரைச் சேர்த்துவிட்டது.

''இருப்பினும் கடைசிப் பட்டியலில் இருந்த நரசிம்மலு நாயுடு, அப் பதவிக்கு மும்முரமாக முயன்றதால், உன்னை நியமிக்க மாட்டார்கள், என்று நானும் நம்பினேன்.

''நினைத்ததும் முயன்றதும் ஒன்று; நடந்ததோ வேறாக இருக்கிறது.

''கல்வித் துறையையும் மீறி நீங்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறீர்கள்'' என்று இயக்குநர் விளக்கினார்.

விடுப்பில் போக விரும்பினேன்

நான் சிறிது தயக்கத்தோடு, நான் ஆறு ஆண்டுகளாக விடுப்பு எடுக்கவில்லை. இப்போது எடுத்துக் கொள்ளட்டுமா?'' என்று கேட்டேன்.

''உன் பெயரை அமைச்சர் அவினாசிலிங்கமே, பட்டியலில் சேர்த்தாராம். அப்படியிருக்க, நீ புதிய வேலை வரும்போது விடுப்பு கேட்பதைப்பற்றி அவர் சினங்கொள்ளக்கூடும். அது உனக்குத் தீங்காக முடியலாம்.

''ஒன்று செய்! புதிய அலுவலில் சேர்ந்துவிடு, அதில் சில திங்கள் இருந்த பிறகு, விடுப்பு எடுத்துக்கொள்; விடுப்பு முடிந்ததும், நான் மீண்டும் தாய்த் துறைக்கே எடுத்துக்கொள்ளுகிறேன்'' என்று திரு. டி. சதாசிவ ரெட்டி கூறினார்.

ஆணை வந்தது

மறு சொல் சொல்லாமல், அவரிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பினேன்.

புதிய நியமன ஆணை மாதக் கணக்கில் தாமதமாகட்டும் என்று விழைந்தேன். அதுவோ இருபத்து அய்ந்து நாள்களில் என் கைக்கு வந்தது.

அதைப் பெற்ற பிறகு அப் பதவியை ஏற்க ஆர்வமின்றி இருந்தேன்.

மாநகராட்சி ஆணையர் திரு. சி. எச். நரசிம்மம் 31-3-1948 காலை 11 மணிக்கு என்னோடு தொலை பேசி வழியாகத் தொடர்பு கொண்டார்.

''மாநகராட்சியில் ஒரு மரபு உண்டு. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ஆம் நாள், அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை மன்றம் நிறைவேற்றும். அன்றிரவே, மேயர், மன்ற உறுப்பினர்களுக்கும் அலுவலர்களுக்கும் பலமான விருந்து அளிப்பார்.

''இன்று மாலைக்குள் நீங்கள் மாநகர் ஆட்சிக் கல்வி அலுவலராகச் சேர்ந்து அந்த விருந்துக்கு வரவேண்டும், என்று மேயர் விழைகிறார்; நானும் தங்களை அப்படியே அழைக்கிறேன்.

''இன்று காலை, உங்கள் கல்வி இயக்குநரோடு பேசியுள்ளேன். அவர் உங்களை விடுவிக்க ஒப்புக்கொண்டார். எப்படியாவது மாலை அய்ந்து மணிக்குள் வந்து சேருங்கள்; நேரே என்னிடம் வாருங்கள், இப்படி ஆணையர் கூறினார்.

இயக்குநர் விடுவித்ததும் வந்து சேருகிறேன்'' என்று சொன்னேன்.

மேயரும் ஆணையரும் ஏன் இவ்வளவு பரிவு காட்டுகிறார்கள் என்று எனக்குப் புலப்படவில்லை.

புதிய மணப் பெண், முதல் முதல் மாமியார் வீட்டிற்குச் செல்லும் போது என்ன மனநிலையில் இருப்பாளோ அந்த நிலையில் நான் இருந்தேன்.

பிறகு, இயக்குநர் என்னைத் தொலை பேசியில் கூப்பிட்டார். சில மணித்துளிகளில் உன்னை விடுவிக்கும் ஆணைவரும்; நீ விரும்பினால் அன்றே பொறுப்பை ஒப்புவித்துவிட்டு, மாநகர் ஆட்சிக்குச் செல்லலாம். என்றார்.

அதன்படி ஆணை வந்தது; பழைய பொறுப்பைக் கொடுத்து விட்டேன். புதிய பொறுப்பிற்குச் சென்றேன்.

புகழ் பெற்ற மேயர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ்

பொறுப்பை ஏற்கும் முன் முதலில் மாநகராட்சி ஆணையரைக் கண்டேன்.

அவர் அன்போடு வரவேற்றார். மேயருடைய அறைக்குப் 'போன்' செய்தார். என்னை அழைத்துக்கொண்டு வரட்டுமா என்று கேட்டார்.

மேயர் சரியென்று சொல்லவும் ஆணையர் என்னை மேயரிடம் அழைத்துப்போய் அறிமுகம் செய்தார்.

மேயர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ், இருக்கையில் இருந்து எழுந்து என் கையைப் பிடித்துக் குலுக்கினார். என்னை வரவேற்பதாகக் கூறி அமரச் சொன்னார்.

ஆணையரும் நானும் அவருக்கு எதிரில் அமர்ந்தோம்.

டாக்டர் யூ. கிருஷ்ணாராவும் அவருடைய தந்தை டாக்டர் யூ. ராமாராவும் சென்னையில் புகழ்பெற்ற டாக்டர்கள்.

காங்கிரசு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். நாவடக்கமும் கைத்தூய்மை யும் பெற்றுச் சிறப்புடன் இருந்தார்கள்; இனிய இயல்பினர்கள்.

மேயர், ஆணையரைப் பார்த்து, ''கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் நெ.து.சு. வைப்பற்றிக் கூறியதை அவர் இடம் சொன்னீர்களா?'' என்று கேட்டார்.

''இல்லை; அது உங்கள் மூலமாக அவருக்குத் தெரிவதே நல்லது என்று எண்ணிச் சொல்லாமல் அழைத்து வந்து இருக்கிறேன்'' என்று ஆணையர் அடக்கத்துடன் பதில் அளித்தார்.

அதைக் கேட்ட பிறகு, மேயர் கிருஷ்ணாராவ் சொன்ன செய்தி நான் எப்படி மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டேன் என்பதை தெளிவு படுத்தியது.

என்னைப் பற்றி அவினாசிலிங்கம் சொன்னதென்ன?

மேயர் என்ன சொன்னார்?

''அரசிடம் இருந்து மூவர் அடங்கிய பட்டியல் வந்தது. மூவரில் ஒருவரை நாங்களாகவே தேர்ந்தெடுப்பதற்குப் பதில், கல்வி அமைச் சரைக் கலந்து அவருடைய ஆலோசனை பெறுவது நல்லது என்று நினைத்தோம்.

''மாநகராட்சியை ஆளுங்கட்சியாகிய காங்கிரசின் மூத்த உறுப்பினர் களாகிய சர்தார் ஆதிகேசவலு நாயக்கர், கே. வேங்கடசாமி நாயுடு ஆகியவர்களை அழைத்துக்கொண்டு, நான் கல்வி அமைச்சரிடம் சென்றேன். வந்த காரணத்தை அமைச்சரிடம் சொன்னோம். பரிந்துரை கேட்டோம்.

''அவர், 'உங்கள் விருப்பம்' என்றார். மூவரில் மிகவும் தக்காரை நியமிக்க விரும்புகிறோம். அதனால்தான் வலிய வந்து கேட்கிறோம் என்றோம்.

''மூவரில், நெ.து.சு. சிறந்தவர். அவர் நாணயமானவர்; நேர்மை யானவர்; வேலைக்குச் சுணங்காதவர்'' என்று கல்வி அமைச்சர் கூறினார்.

''அவரையே எடுத்துக் கொள்ளுகிறோம்'' என்று சொல்லிவிட்டு வந்தோம். அப்படியே செய்து விட்டோம்.

''நீங்கள் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டது பற்றி மகிழ்ச்சி'' என்று கூறிவிட்டு மேயர் மேலும் தொடர்ந்தார்.

கிருஷ்ணாராவின் அறிவுரை

''அந்த அமைச்சரிடம் இப்படிப்பட்ட நல்ல பெயர் எடுப்பது அரிது. இனி எடுத்துள்ள நற்பெயரைக் காத்துக் கொள்வதிலேயே குறியாக இருங்கள்; எவருக்காகவும் எதற்காகவும் அந் நிலையில் இருந்து இறங்கிவிடாதீர்கள். நானும் உங்களுக்குத் துணை நிற்கிறேன்.

''நாங்கள், மூன்றாண்டுக்கு ஒரு முறை மக்கள் தயவை நாட வேண்டியவர்கள். எனவே, என்னிடம் பரிந்துரைக்காகப் பலர் வரக்கூடும்.

''அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி நாங்களே முடியாது என்று சொல்லி அனுப்பினால், விரைவில் எங்களுக்குப் பகைபெருகிவிடும்.

''அதனால் முடியாத கோரிக்கைகளைக்கூட நானும் மற்றவர்களும் உங்கள் இடம் சொல்ல நேரிடலாம்.

''நீங்கள் ஒரே ஒரு உதவி செய்தால் போதும் உங்கள் பட்டறிவின் பயனாக, கேட்பது, செய்யக்கூடாதது என்று நொடியில் புலப்படலாம்.

''அப்போதும் வந்தவரை வைத்துக்கொண்டு, பளிச்சென்று முடியாது என்பதைச் சொல்லிவிடாதீர்கள். 'கவனிக்கிறேன்' என்று அவர்முன் சொன்னால் போதும். அப்புறம் எது சரியோ அதைச் செய்யுங்கள்.

''எனக்கு அதுபற்றித் தகவல் கொடுத்துவிடுங்கள்; நான் உரியவருக்குப் பதில் சொல்லிக் கொள்கிறேன். என் ஆதரவைப் பெறும் பொருட்டு நீங்கள் பெற்றுள்ள பெருமதிப்பை இழக்காதீர்கள்'' என்றார் மேயர்.

அது கடும் வெயிலில் நெடுந்தூரம் நடந்து வந்து களைத்தவனுக்குச் செவ்விளநீர் கிடைத்ததுபோல் இருந்தது. முன்னர் மாநகராட்சி அலுவல் பற்றி என்னை உலுக்கிய அச்சம் அகன்றது.

டாக்டர் கிருஷ்ணாராவ், நவம்பர் இறுதிவரை மேயராக இருப்பார். அது வரையில் தொல்லை இராது என்று தோன்றியது. தெம்போடு மேயருக்கு நன்றி கூறினேன்.

பிறகு, ஆணையரோடு அவர் அறைக்குச் சென்றேன்; அவருக்கு நன்றி கூறினேன்.

அவர் தமது சுருக்கெழுத்தாளரை என்னுடன் அனுப்பினார்.

அவர், கல்வி அலுவலர் அறைக்கு என்னை அழைத்துக் கொண்டு போனார்.

அங்கு அலுவலகத்தோர் காத்திருந்தனர். அவர்கள் ஒத்துழைப்பை எதிர்பார்த்து மாநகராட்சிக் கல்வி அலுவலர் பொறுப்பை ஏற்றேன்.

முதன் முறை பார்த்த மாநகராட்சிக் கூட்டம்

பின்னர், மாநகராட்சி மன்றக் கூட்டத்திற்குச் சென்றேன்.

அலுவலர் பகுதியில் அமர்ந்தேன்; வரவு செலவுத் திட்டம் நிறை வேறுவதைக் கண்டேன்.

அதுவே நான் முதன் முறை பார்த்த மாநகராட்சிக் கூட்டம் ஆகும்.

இரவு எட்டு மணிக்கு, மேயர் கொடுத்த தடபுடலான விருந்தில் கலந்து கொண்டேன்.

அந்த வயதில் நன்றாக உண்ணும் உடல்நிலையில் இருந்தேன்; எனவே உண்டு மகிழ்ந்தேன்.

மாநகராட்சி உறுப்பினர்கள் பலரோடு உரையாடும் நல்ல வாயப்பு விருந்திற்குக் கூடியபோது கிடைத்தது.

அப்போது கிடைத்த செய்திகள், கல்வி இயக்குநர் சேர்க்காத என் பெயர் எப்படிப் பட்டியலில் இடம் பெற்றது என்பதை விளக்கின.

திரு. கே. வேங்கடசாமி நாயுடு ஏற்கெனவே எனக்கு அறிமுகமானவர், நான் உதவிப் பஞ்சாயத்து அலுவலர் பதவியைப் பெறுதவற்கு உதவியவர்.

அவரும் பிறரும் என்ன தகவல்களை எனக்குச் சொன்னார்கள்?

என்னைக் காங்கிரசு ஆதரித்தது

அக் காலகட்டத்தில், சென்னை மாநகர் ஆட்சிக்குத் திறமையான கல்வி அலுவலர் இருந்தால் மட்டும் போதாது; தமிழர் நலன்களைக் காத்துக் கொள்ளக்கூடிய, தமிழர் உணர்வுடைய அதேபோது நினைத்ததை முடிக்கும் தன்மையுடைய திறமையான ஒருவர் தேவை என்று காங்கிரசு கட்சி உறுதியாகக் கருதிற்றாம்.

அக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர், அமைச்சர் அவினாசிலிங்கத்தின் காதுகளில் இதைப் போட்டு வைத்தார்கள்.

அவர், அமைச்சர் பக்தவத்சலத்திடம் ஆலோசனை கேட்டாராம்.

அவரோ எல்லா மாவட்டக் கல்வி அலுவலர்களின் பெயர்களையும் பார்த்துவிட்டு, என்னைப் பரிந்துரைத்தாராம். எனவே, கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் என் பெயரைப் பட்டியலில் சேர்த்து விட்டாராம்.

மாநகராட்சியின் இரகசியக் கூட்டத்தில், என்னைக் காங்கிரசு ஆதரித்தது.

ஒருமித்த முடிவுக்கு வர இயலாமல் வாக்கெடுப்பிற்கு விட்டார்கள்.

எனக்கு மிகப் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவும் நான் மாநகர் ஆட்சிக் கல்வி அலுவலராகத் தேர்ந்து எடுக்கப்பட்டேன்.

இருப்பினும் நான் கட்சி விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகாமல் நடுநிலைமையோடு செயல்பட்டேன்.

பக்தவத்சலனாரின் பரிந்துரை

உதவிப் பஞ்சாயத்து அலுவலர் பணிக்கு என்னைப் பரிந்துரைத்த மீஞ்சூர் பக்தவத்சலனார் முன்னர் என்னைத் தேடி வந்த உடுமலை நகராட்சி தனி அலுவலர் வேலையைத் தட்டி விட்டார்; திருவள்ளூர் பேரூராட்சி அலுவலர் பதவியும் எனக்குப் பொருந்தாது என்று தடுத்தார்.

அவரே, என்னை மாநகராட்சிக் கல்வி அலுவலர் பதவிக்குப் பரிந்துரைத்தார். இது எதைக் காட்டுகிறது?

ஒரு முறை உதவுகிறவர்; மற்றொரு முறை, உதவாமற்போகலாம்; மீண்டும் உதவலாம்; உதவாதபோது வெறுப்போ காழ்ப்போ வளர்த்துக் கொள்வது அறியாமை என்பதாகும்.

35. வீடு வாங்கினேன்

ஆணையர் அளித்த பொறுப்பு

நல்ல தமிழ் உணர்வு உடையவன் என்பதற்காக என்னை மாநகராட்சிக் கல்வி அலுவலராக அனுப்பியுள்ளதாக மேயர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ், தெலுங்கராகிய ஆணையர் நரசிம்மத்தின் முன்சொல்லிவிட்டாரே; ஆணையர் உள்ளூரப் புகைச்சல் கொள்வாரோ?'' இப்படிக் கவலைப்பட்டேன்.

அது வீண் கவலை என்பது விரைவில் தெளிவாயிற்று.

ஆணையர் என்னை அழைத்தார்; மாநகராட்சியின் நிர்வாக நுட்பங்களை எடுத்துரைத்தார்.

விதிமுறைகளைப் பின் பற்றுவதில் கண்டிப்பாக இருக்கும்படியும் ஆலோசனை கூறினார்.

ஆண்டுதோறும் மாநகராட்சிப் பள்ளிகளுக்காகச் சில நூறு ஆசிரியர்களை நியமிக்கும் நிலை அப்போது இருந்தது.

'வேலை வாய்ப்பு நிலையங்களுக்கு எழுதிப் பட்டியல் பெற்று, நேர்முகப் பேட்டி நடத்தி, ஆசிரியர்களைப் பொறுக்குவது இப்போதைய முறை.

அன்று அப்படியல்ல.

மாநகராட்சிக்கு நேரே விண்ணப்பங்கள் வரும்.

அப்படி விண்ணப்பித்தவர்களில் எவரையும் ஆணையர் நியமிக்கலாம்.

ஆணையர், கல்வி அலுவலரைக் கலந்துகொண்டு முடிவு எடுப்பார்.

அம்முறை பின்பற்றப்பட்டது.

நான் கல்வி அலுவலராகச் சேர்ந்ததும் ஆசிரியர்களைப் பொறுக்கும் பொறுப்பை ஆணையர் என்னிடம் விட்டுவிடுவதாகக் கூறினார்.

மாநகராட்சி விதிமுறைப்படி ஆணையர் ஒப்புதல் கையெழுத்தும் தேவைப்பட்டதால் கோப்பைத் தமக்கு அனுப்பும்படி கூறினார்.

அதிகப்படியான பொறுப்புணர்ச்சியோடு, ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தேன்.

நீண்ட காலமாகக் காத்திருப்போருக்கு முன்னுரிமை கொடுத்தேன்; பரிந்துரை இல்லாவிடினும் ஏழைகளை முதலில் கவனித்தேன்;

எல்லாச் சாதிப் பிரிவுகளுக்கும் பங்கு கிடைக்கும்படி பார்த்துக் கொண்டேன்.

ஆணையர் என்னுடைய பரிந்துரைகளில் மனநிறைவு கொண்டார்.

மாநகராட்சி உறுப்பினரின் புரட்டு

ஒருநாள் ஆணையர் என்னை அழைத்தார். திடுக்கிடும் செய்தி ஒன்றைக் கூறினார். சிடுசிடுப்பின்றி, சிரிப்போடு கூறினார். செய்தி என்ன?

தெலுங்கு ஆசிரியர் ஒருவரைச் சில நாள்களுக்கு முன்பு நியமித்தோம்.

அவருடைய தந்தை, மாநகராட்சியில் தெரு பெருக்கும் வேலையில் இருந்தார்.

அப் பிரிவிலும் 'சாமர்த்தியம்' இல்லாதவர். எனவே, எவரையும் பிடித்துப் பரிந்துரை பெறத் தெரியவில்லை.

ஆகவே நான்கு ஆண்டுகளாக வேலைக்காகக் காத்திருந்தார். எவரும் அவரைக் கவனிப்பார் இல்லை.

நான் மாநகராட்சியில் சேர்ந்தபோது, தெலுங்கறிந்த தமிழன் என்று கேள்விப்பட்டு, அவர், என்னைக் கண்டு, ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தார்.

அதன் மேல் நடவடிக்கை எடுத்தேன்; வேலையும் கொடுத்தேன்.

நியமன ஆணை வந்ததும் ஆசிரியரின் அப்பாவித் தந்தை மகனை அழைத்துக்கொண்டு அப் பகுதி நகரசபை உறுப்பினரிடம் சென்றார்.

அந்த உறுப்பினர் பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்.

அந்த உறவு பற்றி அவரிடம் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். அவ்வுறுப்பினரோ, அரசியலில் விளைந்தவர்.

நொடியில் கதை கட்டினார்; ''வேலை வருது என்று எனக்குத் தெரியும். நானே சொல்லி அனுப்ப இருந்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய்.

''நீ எங்களவன் என்பதால் புதிய கல்வி அலுவலரைத் தேடி அய்ந்தாறு முறை அவர் வீடு சென்றேன்.

''நான் அடுத்தடுத்துச் சொன்னதால்தான் உனக்கு வேலை கிடைத்தது. அதற்கான 'டாக்ஸி' செலவு அய்ம்பது; ரிக்ஷாவில் போனதால் மதிக்க மாட்டார் என்று, டாக்ஸியில் சென்றேன்.

''அதைக் கொடுத்துவிட்டு வேலையில் சேர்ந்துகொள்'' என்றாராம்,

தெரு பெருக்கும் வேலையில் சேரும்போது, அதே உறுப்பினருக்குப் பத்துரூபாய் கொடுத்ததை அந்த அப்பாவி நினைத்துக் கொண்டார்.

எவரிடமோ கடன் வாங்கி, அய்ம்பது ரூபாய்களை உறுப்பினரிடம் செலுத்திவிட்டு, ஆசிரியர் பணியில் சேர்ந்தார்.

மூன்று நாள்களுக்குப் பின், ஆணையர் துப்புரவைச் சோதிக்கச் சென்றார்.

மேற்படி ஆசிரியரின் தந்தை அப்போது தெருகூட்டிக் கொண்டிருந்தார்.

ஆணையரைக் கண்டதும் அவர் காலில் விழுந்து கும்பிட்டார்.

மகனுக்கு வேலை கிடைத்ததை மகிழ்ச்சியோடு கூறினார்.

பேச்சு வாக்கில், உரிய உறுப்பினர் பெயரைச் சொல்லி, அவருக்கு அய்ம்பது ரூபாய் கொடுத்ததைக் கூறிவிட்டு,

''எதற்கும் காலம் வரவேண்டும் பாபு; இப்ப இளகின மனம், முன்னமே இளகி இருந்தால், நூறு இருநூறுகூடக் கொடுத்திருக்கலாம். நான்கு ஆண்டுகளாக எத்தனை பட்டினி!'' என்றாராம்.

ஆணையர் அவரை குறுக்கு விசாரணை செய்தார்; கையூட்டு கொடுத்தது உண்மை என்பதை உணர்ந்தார்; என்னிடம் அதைச் சொல்லி, மேற்படி உறுப்பினர் அவ்வேலை பற்றி என்னிடம் ''பரிந்துரைத்தாரா'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றேன்.

''உறுப்பினர்களில் சிலர் அத்தகையோரே; அதை நாம் தெரிந்து இருப்பதாகக் காட்டிக் கொள்ளக்கூடாது; பகைமை பாராட்டவும் கூடாது'' என்று அறிவுரை கூறினார்.

கையூட்டுப் புற்றுநோய்

இது ஒரு புதிய அதிர்ச்சியான பாடம்; பரிந்துரை இல்லாத போதும் பணம் பண்ணுவோர் இருப்பதை உணர்ந்தேன்.

எவ்வளவு பெரியவர்கள், உயர்ந்தவர்கள் பரிந்துரைத்தாலும் அவருக்குத் தொடர்பு படுத்தியவர்களில் எவரோ ஒருவர் 'வாணிகம்' செய்திருக்கக்கூடும் என்பதைக் காலம் செல்லச் செல்லப் புரிந்து கொண்டேன்.

கையூட்டுப் புற்றுநோய் ஆண்டுக்கு ஆண்டு விரைவாகப் பரவி வருவதால் நாடு அல்லல்படுகிறது;

உலகில் எவ்வளவு பொல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்பதை முதலில் தெரிந்துகொண்டபோது, பல நாள்கள் என் தூக்கம் கெட்டது.

பரிந்துரை வந்தாலே, அய்யக் கண்ணோடு காணும் போக்கு அப்போது முளைத்தது,

அன்றைய மாநகராட்சி உறுப்பினர்களில், மேற்கூறிய வகையினர் சிலராகவும் டாக்டர் கிருஷ்ணாராவ், கே. வேங்கடசாமி நாயுடு, ஆதிகேசவலு நாயக்கர் போன்ற சான்றோர்கள் பலராகவும் இருந்ததாலும் ஆணையர் எல்லா விதத்திலும் பெரியவராக இருந்ததாலும் என்னால் தாக்குப் பிடிக்க முடிந்தது.

செய்யாமற் செய்த உதவி

ஆணையர், பெருந்தன்மையுடையவர் மட்டுமல்லர்; உதவி செய்யும் நல்ல பண்பும் உடையவர்.

நான் அலுவலில் சேர்ந்த சில நாள்களுக்குப்பின், எனக்குச் சென்னையில் வீடு இருக்கிறதா?'' என்று ஆணையர் வினவினார்.

''எனக்கு வீடு இல்லை'' என்றேன்.

''அப்படியானால், புதிதாகக் கட்டப்படும் சேனாய் நகரில் உனக்கு ஒரு வீடு ஒதுக்கித் தருகிறேன்.

''குடிக்கூலிக்கு மேல், அதில் பாதிகட்டி வந்தால், பதினைந்து ஆண்டுகளில், வீடு உன்னுடையதாகிவிடும்.

''அத்தவணைப் பணம் அதிகம் என்று நினைத்தால், இருபது ஆண்டு தவணையில் எடுத்துக்கொள்.

''இருபது ஆண்டு காலம் வீணே குடிக்கூலி கொடுத்துவிட்டு, ஓய்வு பெறும்போது, இருக்க இடமின்றி அலையவேண்டாம்.

''சேனாய் நகர் வீட்டைத் தவணையில் வாங்கிக்கொள் எந்தப் பிரிவு வேண்டும்?'' என்று அன்போடு கேட்டார்.

எத்தனை பிரிவுகள் இருந்தன? நான்கு பிரிவுகள் இருந்தன. 'ஏ' பிரிவின் மதிப்பு 35,000 ரூபாய்கள். 'பி' பிரிவின் விலை 26,000. 'சி'. பிரிவின் விலை 19,000. 'டி' பிரிவின் விலை 11,000 ரூபாய்கள்.

உடைமைப்பற்று மனிதத் தன்மையைச் சிதைத்துவிடும் என்பது என்னை ஆட்கொண்ட பித்தம்.

எனவே, ஆணையர் நரசிம்மம் அறிவு உரையைக் கேளாது, 'சி' பிரிவு வீடு போதுமென்று அடம் பிடித்தேன். அப்படியே ஒதுக்கினார்.

இப்போது நான் குடியிருக்கும் வீடு அப்போது கட்டி முடியவில்லை.

உடனடிப் பயனுக்கு முடிந்திருந்த 81ஆம் எண்ணுள்ள வீட்டை எனக்குக் கொடுத்தார்.

1948ஆம் ஆண்டு மே திங்கள் அவ்வீட்டிற்குக் குடி புகுந்தோம்.

1948 செம்படம்பரில் இன்றுள்ள வீட்டிற்குக் குடி பெயர்ந்தேன்.

இருபது ஆண்டுகளில் இந்த வீடு என்னுடையதாயிற்று.

நரசிம்மம் என்பால் பரிவு கொண்டு, என்னைக் கட்டாயப் படுத்தாமல் இருந்திருந்தால், நாற்பதாண்டு அரசு ஊழியத்திற்குப் பின்னும் வீடு இன்றித் தவித்து இருப்பேன்.

என்னைப் பற்றியோ, என் எதிர் காலம் பற்றியோ, சிறிதும் சிந்திக்காத 'குழந்தை'யாகவே இருந்து விட்டேன்.

48 இல் சென்னாய் நகர்

அந்தக் காலத்தில் சென்னாய் நகருக்குள் பேருந்துகள் வந்து போவதில்லை.

இரவு 7 மணிக்குமேல், ஆள் நடமாட்டம் குறைவு; அச்சமூட்டும் சூழல்; ஆனால் களவு குறைவு.

அமைந்தகரை வேளாளத் தெருவில் குடியிருந்த திரு. கோபால் சாமி முதலியார் அவ்வப்போது வந்து நலம் கேட்பார், ஆள் அனுப்பி உதவுவார்.

என்னுடைய சென்னை மாநகராட்சிப் பணியின் வெற்றிக்கு, ஆந்திரராகிய திரு. நரசிம்மம் பெருந்துணையாக விளங்கியது போன்று, துணை ஆணையர் திரு. என். சங்கரன் அடிக்கடி கைகொடுத்தார்.

துணை ஆணையர் சங்கரன்

திரு. சங்கரன், தமிழ் உணர்வு மிக்கவர்; தமிழர் நல்வாழ்வு வாழ்ந்தால் தான், தமிழ் உரிய மதிப்புப் பெறும் என்ற கொள்கையுடையவர்.

தனியார் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வாழ்க்கையைக் தொடங்கிய திரு. என். சங்கரன், தொழிலாளர் நலத்தில் அக்கறை

கொண்டார்; தொழிற் சங்கம், பிற சமூகநல மன்றங்களின் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

சில ஆண்டுகளுக்குப்பின், மாநகராட்சித் தேர்தலில் நின்று வெற்றிபெற்று உறுப்பினர் ஆனார். மாநகர ஆட்சியில் செல்வாக்கு பெற்றார்.

போர் ஆதரவுப் பணியில் முனைந்தார். பின்னர் மாநகர் ஆட்சிக் கல்வி அலுவலராக நியமிக்கப்பட்டார்.

சில ஆண்டுகளுக்குப்பின், துணை ஆணையர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

அப்படிக் காலியான கல்வி அலுவலர் பதவிக்கே நான் போய்ச் சேர்ந்தேன்.

என் பொல்லாத அனுபவம் என்ன? பல தமிழர்கள் வெள்ளாடுகளுக்கு ஒப்பானவர்கள். எங்காவது பசுமை கண்டால், பாய்ந்து சென்று கடித்துத் தின்றுவிடுவார்கள்; பட்ட மரமாயின் மகிழ்ச்சி; ஏறி விளையாடுவார்கள்.

தங்களோடு எவ்விதப் போட்டிக்கும் வர வாய்ப்பு இல்லாதவர்கள் மேலும் அழுக்காறும் காழ்ப்பும் கொள்ளுதல் நம் தனித்த இயல்பு.

அதற்கு மாறாக திரு. என். சங்கரன் நடந்து கொண்டார்.

எனக்குப் புகழ் பெருகுவதைக் கண்டு பூரித்தார் திரு. சங்கரன்.

எனக்குப் பகை முளைக்காதபடி, விழிப்பாக உதவி செய்தார்.

நான் மாநகராட்சியில் அலுவல் பார்த்த காலத்தில், பகல் உணவுக்குப்பின் சில மணித்துளிகளாவது, துணை ஆணையர் சங்கரன் அறையில் செலவிடுவேன். அந்தப் பழக்கத்தைக் கற்றுக் கொடுத்தவர் திரு. சங்கரனே.

பாலமாக இருந்தார்

அவ்வேளைகளில், தமக்கு வேண்டிய மாநகராட்சி உறுப்பினர் எவராவது அங்கு வரும்படி ஏற்பாடு செய்வார்.

எனக்கும் உறுப்பினருக்கும் நல்லுறவு வளரும் பொருட்டு உதவுவார்.

எனக்குப் போட்டியாக, திரு. நரசிம்மலு நாயுடுவை மாநகராட்சிக்கல்வி அலுவலர் பதவிக்கு முன் மொழிந்தவர், நீதிக்கட்சியைச் சேர்ந்த திரு. எம். தாமோதரம் நாயுடு ஆவார்.

அதை ஆதரித்தவர்கள் நீதிக்கட்சியினர். அவர்கள் என்மேல் தொடர்ந்து பகை பாராட்டக்கூடாது என்று திரு. சங்கரன் விழைந்தார்.

ஒருநாள் பகல் உணவு வேளை, திரு. தாமோதரம் நாயுடுவைத் தம் அறைக்கு அழைத்தார்.

அவர் வந்ததும், இன்ன காரணத்திற்கு என்று சொல்லாமல், என்னை அங்கு அழைத்தார்.

திரு. நாயுடுவிற்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.

அவரைப்பற்றிச் சில பாராட்டுகளைக் கூறினார்.

அதைக் கேட்டபின் திரு. நாயுடு, ''நீங்கள், இங்கு வர விரும்புவீர்கள் என்று எவரும் சாடை காட்டவில்லை.

''அதோடு, காங்கிரசுக் கட்சி உங்கள் பெயரை முன்மொழிந்து ஆதரித்தது. அக் கட்சியின்மேல் உள்ள பகையால் உங்களுக்கு எதிராக ஒருவரை நிறுத்தினோம்'' என்றார்.

''சென்றதை மறந்து விடுவோம்; பொது மக்கள் நலனை முன்னிறுத்தி ஒத்துழைப்போம்'' என்றேன்.

பகை தணியத் தொடங்கியது இப்படியே. இன்னும் சில உறுப்பினர் களோடு, துணை ஆணையர் அறையில் நிகழ்ந்த பேட்டிகள் என்பால் நல்ல எண்ணம் பரவ உதவிற்று.

அவர் வாழ்நாள் முழுதும் என்பால் மாறாத அன்பு கொண்டிருந்தார்.

நான் மூன்று ஆண்டுகளுக்குப்பின், கல்வித்துறைக்குத் துணை இயக்குநராக மாறி வரும்போது என்னை மாநகராட்சியிலே நிறுத்தி வைத்து, துணை ஆணையராக்க முயன்றார்.

அங்கு இருந்தால் இ.ஆ.ப. இல் இடம் பெறலாம் என்றார். நான் இலாப இழப்புக் கணக்குப் பார்க்கவில்லை.

கட்டுப்பாடே முதன்மை பெறவேண்டும் என்று சொல்லிவிட்டு, கல்வித் துறைக்கே திரும்பி வந்துவிட்டேன்.

அதன் பிறகும் எங்கள் நட்பு நீடித்தது. சிற்சிலபோது, என் வேலைக்காகத் தம் காரை அனுப்பியதுண்டு; அவரது அகால மரணம் எனக்குப் பேரிழப்பாகும்.

அவர் இருந்த வரையில், நெருக்கடி ஏற்பட்டால், ஆலோசனைக்கும் உதவிக்கும் தக்கவர் ஒருவர் இருக்கிறார் என்ற நம்பிக்கை ஊறிற்று;

குஞ்சிதம் குருசாமி புண்பட்டார்

நான் சென்னை மாநகராட்சி அலுவலுக்கு வந்தபோது, என் மனைவியின் அக்காள், திருமதி. குஞ்சிதம் குருசாமி, மாநகராட்சி கல்வித்துறையில், பெண்கள் பள்ளி மேற்பார்வையாளராக வேலை பார்த்து வந்தார்.

அம்மையார் ஒருநாள் ஓர் ஆசிரியையை அழைத்துக்கொண்டு அலுவலகம் வந்தார். என் பேட்டியை விழைந்தார்.

இருவருக்கும் பேட்டி கொடுத்தேன்; கோரிக்கையைக் கேட்டுக் குறித்துக் கொண்டேன்.

இருவரும் விடைபெற்றுக் கொள்ளும் வேளை, ''இனிமேல், எவர் உதவி கோருகிறாரோ அவரை நேரே அனுப்பி வையுங்கள்; இட்டுக்கொண்டு வருவதை நான் விரும்பவில்லை'' என்று அழுத்தமாகக் கூறி அனுப்பினேன்.

திருமதி. குஞ்சிதம் அம்மையார் அப்போது புகழ்பெற்ற பேச்சாளர்.

தன்மான இயக்கத்தின் மாநாடுகளில் தலைமை தாங்கியவர்.

பெரியார் இயக்கத்தவரின் மதிப்பிற்கு உரியவர்.

என்னிலும் மூத்தவர்.

அப்படிப்பட்டவரின் மனம் வெகுவாகப் புண்பட்டது.

அப்புண் ஆறி, என்னோடு பேச, பல திங்கள் பிடித்தன.

ஆனால், அந்தச் செய்தி ஆசிரியர் சமுதாயத்தில் பரவிவிட்டது.

ஒரு வகையில் அது எனக்கு உதவி ஆகிவிட்டது.

எனக்கு வரும் பரிந்துரைகள் இரண்டொரு திங்களோடு நின்று விட்டன.

ஆனால் தகவல்களுக்குக் காது கொடுப்பேன்; உரியவரே நேரில் கோரும்போது, பொறுமையாகக் கேட்டுக் கொள்வேன்.

அதனால் நிகழ்ச்சிகள் உடனுக்குடன் எனக்குத் தெரியவந்தன.

36 . விடுதலை விழா கொண்டாடப்பட்டது

மாநகராட்சிப் பள்ளிகளில் துப்புரவு பெருகியது

மாவட்டக் கல்வி அலுவலர் பொறுப்பு - பள்ளித் தணிக்கையாகும்.

''கரும்பலகை வெளுத்திருக்கிறது; பள்ளிச்சுவர் கருத்திருக்கிறது; மேசை நாற்காலிகள் உடைந்து கிடக்கின்றன; கடிகாரம் இல்லை; துணைக்கருவிகள் இல்லை'' இப்படிக் குற்றங்குறைகளைக் கூறி, அவற்றை விரைந்து போக்க வேண்டுமென்று ஆணை இடுவதோடு முடிந்தது, அவர் வேலை.

சென்னை மாநகராட்சிக் கல்வி அலுவலர் பணி, அத்தகையது அல்ல; மற்றவர் காட்டும் குற்றங் குறைகளை, மீண்டும் சுட்டிக் காட்டுவதற்கு முன்பு, களைய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாவட்ட ஆய்வாளர் மதிப்பீடு செய்து, இதையும் அதையும் செய்ய வேண்டும், என்று பொதுப்படையாகக் கூறிவிட்டால் போதும்.

மாநகராட்சிக் கல்வி அலுவலரோ செய்து முடிக்கவேண்டியவர்; பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருப்பவர்; என்னைப் பொறுத்த மட்டில் பெரியவர்களிடம் பெற்ற நல்ல மதிப்பீட்டைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அதிகப்படியான பொறுப்பும் சேர்ந்தது.

எனவே, அதிக சுறுசுறுப்போடு செயல்பட்டேன்.

மாநகராட்சி அலுவலர்கள் பெரும்பாலும் காலையில் களத் தணிக்கைக்குச் செல்வார்கள், பிற்பகல் அலுவலகத்தில் தங்கி அலுவல் பார்ப்பார்கள்.

நானும் முதலில் சில வாரங்கள் அப்படிச் செய்தேன்.

பிறகு?

ஒரு நாள் காலை, மற்றோரு நாள் பிற்பகல், பிறிதொரு நாள் நடுப்பகல் என்று தணிக்கை முறையை மாற்றிக் கொண்டேன்.

''இந்த நேரத்தில் அலுவலர் வரமாட்டார்'' என்று எண்ணி, பிற்பகலில் வேலைச் சுணக்கம் ஏற்படுவது குறைந்தது. முழு நாளும் விழிப்பாகச் செயல்படத் தொடங்கினார்கள்.

திடீர்த் தணிக்கையின்போது, கண்ட குறைகளை ஒளிக்காமல் அதற்கு உரிய பதிவு ஏட்டில் பதிந்து விடுவேன்.

அதோடு உரியவரைக் கூப்பிட்டு, ''மீண்டும் திடீரென வருவேன். அப்போது நிலைமை திருந்தியிருக்கிறதா என்று பார்த்துவிட்டு, முதல் குறையை மன்னிப்பது பற்றி ஆலோசிப்பேன்'' என்று சொல்லிவிட்டு வருவேன்.

இந்த அணுகுமுறை நல்ல பலனைக் கொடுத்தது.

பல மாநகராட்சிப் பள்ளிகள் ஓட்டடை படிந்திருந்தன; சுற்றுச் சூழல் அழுக்காயிருந்தன; பாட முறைப்படி பாடம் நடவாமை ஆகியன முதலில் அடிக்கடி கண்ட குறையாகும்.

முதலில் பார்வை இடும்போது, இவற்றில் எதையாவது கண்டு, சுட்டிக்காட்டிவிட்டு வந்தால், அடுத்த பார்வையின்போது அவை நீக்கப்பட்டிருக்கும்.

தரம் உயர்ந்தது

சில திங்களுக்குள் பல மாநகராட்சிப் பள்ளிகள் துப்புரவில் வளர்ந்து விட்டன; ஒழுங்கில் முன்னேறின; திறமையில் ஒளி விட்டன.

இட வசதியும் நீர் வசதியும் இருந்த பள்ளிகள் சில, நல்ல தோட்டங்கள் போட்டு வளர்த்துக் காப்பாற்றின; அழகுத் தோட்டங்கள் அமைத்ததோடு, காய்கறித் தோட்டங்களும் போட்டன.

அந்தத் தோட்டங்கள் பள்ளிச்சூழலை குளிர்வித்ததோடு இயற்கைப் பாடங்கள் கற்பிக்கும் துணைக் கருவிகளாகவும் பயன்பட்டன.

வன்னிய தேனாம்பேட்டை மாநகராட்சி ஆண்கள் பள்ளி, மயிலை காரணீஸ்வரர் கோவில் பள்ளி முதலியன தோட்டங்களுக்குப் பெயர் பெற்றன.

பழுதடைந்த தளவாடங்கள்

இட நெருக்கடி மிகுந்த நகராட்சிப் பள்ளிகளில் பெரும்பாலான வற்றில், இரண்டொரு அறைகள் உடைந்த மரச்சாமான்களைப் போட்டு வைக்கத் தேவைப்பட்டன.

அவ் வகுப்புப் பிள்ளைகள் பலவேளை குறுகிய தாழ்வாரங்களில், சிலபோது, திறந்த வெளியில் உட்கார்ந்து படிக்க முயன்றார்கள்.

ஒரு பள்ளியில் மரப்பொருள் எதுவும் உடைந்தால், அருகில் உள்ள தச்சரைக் கூப்பிட்டுக் கூலி கொடுத்து, தலைமை ஆசிரியரே பழுது பார்த்துக் கொள்ளும் உரிமை இல்லை.

மாநகராட்சியின் எல்லாத் துறைகளின் மரப் பொருள்களையும் பழுது பார்க்க, மூன்று மையப் பட்டறைகள் சென்னை நகரில் இருந்தன.

ஒவ்வொரு பட்டறைக்கு இன்னின்ன வட்டங்கள் என்று வரையறுக்கப்பட்டு இருந்தது.

என்ன பொருள்கள், எத்தனை பொருள்கள் பழுதாகி விட்டன என்று தலைமையாசிரியர் பட்டறைக்குத் தகவல் கொடுக்க வேண்டும்.

அப்பட்டறையில் இருந்து, 'ஆயத்தமாயிருக்கிறோ'மென்று அறிவிப்பு வந்த பின்னர் பழுதான பொருளை அங்கு அனுப்பி வைக்க வேண்டும். பட்டறைக்குப் போன பிறகும் பல திங்கள் தேங்கிக்

கிடக்கக் கூடும். கொண்டு போகவும் திருப்பி அனுப்பவும் ஆகும் செலவு நாற்காலியின் செலவிற்குமேல் ஆவதும் உண்டு.

செலவு ஒருபுறம் இருக்க, காலதாமதம் பெரிது.

பல பொருள்கள் ஈராண்டிற்குமேல் பழுது பார்க்கப்படாமல் கிடந்தன.

ஆசிரியர்களுக்கோ மாணவர்களுக்கோ உட்கார வசதியில்லாத தொல்லை; பள்ளியில் இடம் அடைப்பு.

இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்பு உள்ள பொருள்கள் இப்படிப் பயன் அற்றுக் கிடந்தன.

அதே நேரத்தில் ஏறத்தாழ பதினைந்து மாநகராட்சிப் பள்ளிகளில், தச்சுவேலை பாடத்திட்டப்படி கற்றுக் கொடுக்கப்பட்டது. தச்சு ஆசிரியர்கள் இருந்தார்கள்.

அந்தப் பள்ளிகளில் உடைந்துபோன மரப் பொருள்களைக் கூட அடைத்து வைத்திருந்தார்கள். ஏன்?

மையப் பட்டறைகளுக்கு அனுப்பும்படி ஆணையிருந்ததால்.

தச்சு ஆசிரியர்கள் பழுது திருத்தினார்கள்

இம்முறையை மாற்றக் கருதினேன்.

முதலில் இரண்டு மூன்று தச்சு ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றேன்.

அந்தப் பள்ளிகளின் மேசை, நாற்காலி, கரும்பலகை போன்றவற்றை 'தச்சுப் பயிற்சியின் ஒரு கூறாகப் பழுது பார்த்துக் கொடுத்தார்கள்.

மாணவர்களும் அதில் ஆர்வம் காட்டினார்கள். அதில் பெருந் தொல்லையில்லை என்பது புலனாயிற்று.

மற்ற தச்சு ஆசிரியர்களும் அப்படியே செய்ய முன் வந்தார்கள். அந்த 'தன் உதவி' முயற்சி மேலும் வளர்ந்தது.

அக்கம் பக்கத்துப் பள்ளிகளில் ஏற்படும் சாதாரணப் பழுதுகளைச் சரிசெய்து கொடுக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள்.

உடனுக்குடன் பொருள்கள் பழுது பார்க்கப்பட்டதால் மையப் பட்டறைகளிலோ, பள்ளிகளிலோ குவிதல் குறைந்தது.

இதைக் கூர்மையாகக் கவனித்த, எழும்பூர் தொகுதி மாநகராட்சி உறுப்பினர், பாரிஸ்டர், இராசகோபால அய்யர், என்னைத் தேடி வந்து பாராட்டினார்.

விடுமுறையில் வெள்ளையடித்தல்

அதேர்டு -

பள்ளிகள் திறந்த பிறகே வெள்ளை அடிக்கும் பழக்கம் இருக்கிறது. அதனால், இடையில் இரண்டொரு திங்கள் படிப்புச் கெட்டுப்போகிறது. விடுமுறைகளின்போதே, வெள்ளையடிக்க ஏற்பாடு செய்துவிட்டால், பெரிய நன்மையாக இருக்கும். உங்களுக்குப் பெரிய புகழாக இருக்கும்'' என்று மறைமுகமாக ஆலோசனை கூறினார். அதை அறைகூவலாக ஏற்றுக்கொண்டேன்.

மாநகராட்சியின் பொதுப்பணித் துறையை அணுகினேன். அத் துறையின் பெரிய அலுவலர்கள் உதவினார்கள்.

ஒவ்வோர் பள்ளிக்குமான திட்ட மதிப்பீடு, 1946 மார்ச் 31க்குள் வந்தது.

உடனுக்குடன் ஒப்புதல் கையெழுத்திட்டு அனுப்பினேன்.

ஏப்ரல் திங்களில் பள்ளிகளை மூடும்போதே பழுது பார்க்கும் வெள்ளை அடிக்கும் வேலை தொடங்கிவிட்டது; பெரும்பாலான வற்றில் விடுமுறை முடிவதற்குள் வேலை முடிந்துவிட்டது.

அடுத்த 1950களிலும் அப்படியே செய்ய முடிந்தது.

அதற்குத் துணை புரிந்தவர்கள் பலர்.

தலைமைப் பொறியர்கள், கே.கே. நம்பியார், மீரான் ஆகியோர் களைப் போன்றே அப்போது துணைப் பொறியாளர்களாக இருந்த கோவிந்தராசு, வரதராசு, கிருஷ்ணன், ராகவன் ஆகியோர்களை நினைந்து நன்றி சொல்ல வேண்டும்.

ஷிப்டு முறையை அறிமுகப்படுத்தினேன்

இப்படிப் பள்ளிகளைப் பார்வையிடுகையில், கசப்பான தகவல் ஒன்று கிடைத்தது. அது என்ன?

சில மாநகராட்சிப் பள்ளிகளில், இடம் இன்மை பற்றி முந்திய ஆண்டில் பல பிள்ளைகளைச் சேர்க்க மறுத்துவிட்டார்கள் என்பதாம்.

தொடக்கக் கல்விக்குக்கூட இடங்கொடுக்க இயலாத நம் சமுதாயத் தின்மேல் கொதிப்புக் கொண்டேன்.

கொதிப்பு அடங்கியபோது வழி பிறந்தது.

அது என்ன?

அரசு ஆணை ஒன்று நினைவுக்கு வந்தது.

அது என்ன சொல்லிற்று?

''சில பள்ளிகளில் சேர வருகிற பிள்ளைகள் அனைவரையும் சேர்த்துக்கொள்ள விரும்பினாலும் இடவசதி, தளவாட வசதி ஆகியவை போதாமல் இருக்கலாம்.

''அப்படிப்பட்ட நெருக்கடி ஏற்படும்போது, பள்ளிக்கூடம் முழுவதையுமோ, சில வகுப்புகளையோ 'ஷிப்டு' முறையில் நடத்த நிர்வாகத்திற்கு உரிமை அளிக்கப்படுகிறது.

''அப்படி நடக்கும் பள்ளிகளில் 'ஷிப்டு' ஒன்று நான்கு மணிக்குள்ளாக இருக்க வேண்டும்; வாரத்திற்கு ஆறு நாள்கள் நடக்க வேண்டும்.

''ஒவ்வொரு 'ஷிப்டு'க்கும் தனித்தனி ஆசிரியர்கள் நியமிக்க வேண்டும்.

''அதே ஆசிரியர்களை இரண்டு 'ஷிப்டு' களிலும் வேலை வாங்கக் கூடாது.

''இரு 'பிரிவு' ஆசிரியர்களுக்கும் அரசின் நிதி அளிக்கப்படும்'' இப்படிப்பட்ட ஆணை ஏற்கெனவே வெளியாகி இருந்தது.

கல்வி உரிமை பொது உரிமை

திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் என்ற சீலர் சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சராகவும், திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சராகவும் இருந்தபோது, பொது மக்களின் கல்வி உரிமை, அவர்களின் உடைமையாகவும் விளைய வேண்டும் என்று விரும்பினார்கள்.

உள்ள வசதிகளைக் கொண்டே ஏராளமானவர்களுக்கு கூடனடி வாய்ப்புத் தரத் துடித்தார்கள்.

அதன் விளைவாக மேற்கூறிய, இரு 'ஷிப்டு' பள்ளிகளுக்கு அனுமதி வழங்கும் ஆணை பிறந்தது.

'வேண்டியபோது 'ஷிப்டு' முறையைப் பின்பற்ற அது அனுமதிக்கிறதே ஒழிய, அதைக் கட்டாயப்படுத்தவில்லை என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாணை நினைவுக்கு வந்ததும், முந்திய ஆண்டு, பிள்ளைகளைச் சேர்க்க மறுத்த தலைமையாசிரியர்களை அழைத்தேன்; கலந்து பேசினேன்.

'ஷிப்டு'ன் சாத்தியக் கூற்றை அவர்களுக்குக் காட்டினேன்.

கூடுதல் ஆசிரியர்கள் உடனுக்குடன் கிடைக்காமற்போனால் சமாளிக்க முடியாத அளவு தொல்லையாகிவிடும் என்று தயங்கினார்கள்.

சேர்க்கை மிகமிக, கூடுதல் ஆசிரியர்களைத் தயக்கமின்றி நியமிப்பதாகச் சொன்னேன்.

எல்லோரையும் சேர்த்துக் கொள்ள உரிமை கொடுத்தனுப்பினேன்; தெம்போடு சென்றார்கள்.

வந்தவர்களை எல்லாம் உரிய வகுப்புகளில் சேர்த்தார்கள்.

ஷிப்டுக்கு எதிரான முறையீடு

மூன்று நான்கு நாள்களில், துணை மேயரும் பல்லாண்டு காலம் மாநகராட்சி உறுப்பினரும் சென்னை தொழிற் சங்கத் தூண்களில் ஒருவருமான திரு. பக்கிரிசாமி பிள்ளை என்னிடம் வந்தார். இரண்டு மூன்று தொழிற்சங்கச் செயல்வீரர்கள் உடன் வந்தார்கள்.

என் அறையில் அமர்ந்ததும், ''உங்கள் குறையைக் கல்வி அலுவலரிடம் சொல்லுங்கள்'' என்றார்.

அவர்கள் குறைகளைக் கொட்டினார்கள்.

''நாங்கள் ஆலைத் தொழிலாளிகள். எங்கள் வீடுகளில் இருந்து இப்போதுதான் படிக்க வருகிறார்கள். இவர்கள் முழுநாள் படித்தாலும் படிப்பில் மற்றவர்கள்போல் தேறுவார்களா என்பது எங்கள் சந்தேகம்.

''அப்படியிருக்க, எங்கள் பள்ளியை அரை வேளை பள்ளியாக்கி விட்டீர்களாம். அய்ந்து மணி படித்தே முன்னுக்கு வராத எங்கள் பிள்ளைகள் நான்கு மணி நேரம் மட்டும் படிப்பதால் காலம் தான் பாழாகும் ''உங்களிடம் எவ்வளவோ பெரிதாக எதிர்பார்த்திருந்தோம் நீங்களே இப்படி செய்து விட்டால் அப்புறம் எங்கள் பிள்ளைகளுக்கு ஏது எதிர்காலம்?'' என்று அங்கலாய்த்தார்கள்.

நான் வந்தவர்கள் பேசுகையில் குறுக்கிடவில்லை. பொறுமையாகக் கேட்ட பின் கீழ் வருவதை அவர்கள் வாயாலேயே வரவழைத்தேன்.

''பழைய முறையில் பிள்ளைகள், வாரத்திற்கு 25 மணிகள் படித்தார்கள். 'ஷிப்டு' முறையில் 24 மணிகள் படிக்கிறார்கள் அந்த ஒரு மணி நேரம் குறைப்பு விளையாட்டு வேலையைத்தான் குறைக்கிறது ''அதே ஆசிரியர் இரண்டு 'ஷிப்டு' பாடம் சொன்னால், களைத்துப் போவார்; பாடம் கெடும் ஒருவர் ஒரு 'ஷிப்டு'க்கே வருவதால் சோர்வு ஏற்படாது.

''இம் முறையினால் எங்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள எல்லாச் சிறுவர் சிறுமியரையும் பள்ளிக்கு அனுப்பமுடியும். இது பொது நன்மைக்கு உதவி.''

போதிய ஆசிரியர்களை உடனடியாகப் போடும்படி வேண்டிக் கொண்டு, விடை பெற்றுக் கொண்டார்கள்.

தாமதமின்றி ஆசிரியர்களும் போய்ச் சேர்ந்தார்கள்.

அதனால் 'ஷிப்டு' முறை ஏற்புடையதாயிற்று. மேலும் சில பள்ளிகளுக்கும் பரவிற்று. இன்றும் எத்தனையோ பள்ளிகளில் செயல்படுகிறது.

தொலை பேசியில் புகார்

அந்தக் காலத்தில், மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்குத் தொலைபேசி வசதி கிடையாது. மாநகராட்சிக் கல்வி அலுவலகத்தில் அவ்வசதி உண்டு.

அலுவலர்களில் பலர், நேரே தொலை பேசியை எடுப்பதில்லை. நானோ, நேர்மாறான முறையைப் பின்பற்றினேன்.

தொலைபேசி மணி அடித்தால் நானே எடுத்துப் பேசுவேன்.

சென்னைப் பல்கலைக் கழக துணை வேந்தராக இயங்கிய போதும் உதவியாளரைத் தலையிட விடவில்லை; அவருக்கு அது குறை.

ஒரு நாள் பிற்பகல், ரிப்பன் கட்டடத்தில், என் அறையில் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தேன். தொலைபேசி மணி கேட்டது. எடுத்துப் பேசினேன்.

''மாநகராட்சித் தொடக்கப் பள்ளி ஒன்றின் தலைமையாசிரியராகிய திரு. சுப்பிரமணியம் பிள்ளை பெரியார் கொள்கைக்காரர். 'இந்தியா பெற்றது விடுதலை அல்ல; விடுதலை நாளைக் கொண்டாடுவதில் பொருள் இல்லை' என்று சொல்லும் தந்தை பெரியாரின் மதிப்பீட்டை ஏற்றுக் கொள்பவர்.

''எனவே வருகிற விடுதலை நாளின் முதல் ஆண்டு விழாவைக் கொண்டாட விரும்பாது, அன்றைக்கும் முன்னாளும் விடுப்பு எடுத்துக் கொள்ளுகிறார். அதற்கான மனு, இப்போது உங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது. மாநகராட்சி ஊழியர், இப்படி நடக்கலாமா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் என்று ஒருவர் என்னிடம் கூறினார்.

அந்தச் சுப்பிரமணியம் பிள்ளை எந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் என்பதையும் தெரிவித்தார்.

''தகவலுக்கு நன்றி'' என்று கூறியதோடு பேச்சை முடித்துவிட்டேன்.

தொலை பேசியில் பேசியவரும் தான் யார் என்று சொல்லவில்லை; நானும் கேட்கவில்லை.

விடுதலை விழா கொண்டாடினார்

அரைமணி பொறுத்திருந்தேன். பின்னர், அஞ்சல்களை வாங்கும் உதவியாளரை அழைத்தேன். அஞ்சல்களைக் கொண்டு வரச் செய்தேன்.

மேற்படி பள்ளிக்கூட உறை ஒன்று கட்டில் இருந்தது. அதை உடைத்துப் பார்த்தேன்.

தொலைபேசியில் கிடைத்த தகவல் சரியாக இருந்தது.

குறிப்பிட்ட பள்ளி, ரிப்பன் கட்டடத்திற்கு அருகில் இருந்தது. எனவே, மாலை எந்நேரமாக இருந்தாலும் என்னை வந்து கண்டுவிட்டு, வீடு செல்லும்படி சுப்பிரமணியம் பிள்ளைக்குக் குறிப்பொன்று அனுப்பினேன். அப்படியே என்னை வந்து பார்த்தார்.

நாற்காலி கொடுத்து உட்காரச் சொன்னேன்.

''பரவாயில்லைங்க! நின்று பேசுவதே எங்கள் பழக்கம்'' என்றார்.

''என்னுடைய பழக்கம் வேறு; ஆசிரியரை உட்கார வைத்தே பேசுவேன்'' என்றேன்.

''உங்கள் சக ஆசிரியர்கள் ஒத்துழைக்கிறார்களா?'' என்றேன்.

''ஆம்'' என்றார்.

''தான் விரும்புகிறபடியே, கால அட்டவணை போட்டுத் தந்தால் மட்டுமே, பாடம் நடத்த முடியுமென்று எந்த ஆசிரியராவது எப்போதாவது அடம் பிடித்தது உண்டா?''

''இல்லை; வேலை செய்கிற பத்துப்பேரும் ஆளுக்கொரு கால அட்டவணை கொடுத்தால் பள்ளிக்கூடத்தை எப்படி நடத்துவது?'' என்று கேள்வியாகப் பதில் அளித்தார்.

''முடியாதுதான். ஓர் அமைப்பின் கீழ் இருப்பவர்களுக்கு அடிப்படையில் ஒருமைப்பாடு இருந்தாலும் விவரங்களில் எண்ணற்ற கருத்துகள் இருக்கலாம். ஒவ்வொருவரும் தம் கருத்தே ஏற்கப்பட வேண்டுமென்று அடம்பிடிப்பது ஒழுங்காகுமா?'' என்று கேட்டேன்.

''ஆகாது'' என்றார்.

''அப்படிக் கருத்து மாறுபட்டவர்கள், பெரும்பாலோரின் முடிவுக்கு, நடைமுறைக்குக் குறுக்கே புகுந்து தொல்லை கொடுக்கலாமா?'' இது என் கேள்வி.

''ஆகாது'' என்பது தலைமையாசிரியரின் பதில்.

''சரி நீங்கள் அடுத்த வாரத்தில் இரு நாள்களுக்கு விடுப்புக் கேட்டிருக்கிறீர்களே? அது எதற்கு?'' என்று அமைதியாகக் கேட்டேன்.

''விடுப்புக் கேட்டிருப்பது உண்மை; காரணத்தை அம்மனுவில் குறிக்கவில்லை. ஆனால் உங்களிடம் ஒளிக்காமல் சொல்லுகிறேன்.

''விடுதலை நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள விரும்பாத தால், விலகி நிற்பதாக, விடுப்பு எடுத்துக் கொள்ள இப்படிச் செய்தேன்'' என்றார்.

''நான் கருத்துரிமையை மதிப்பவன். எனக்கு மாறான கருத்து கொண்டிருப்பதால், என்னால் உங்களுக்கு எவ்விதத் தொல்லையும் வராது. நீங்களும் கட்டுப்பாட்டை மதித்து நடத்தலே முறை.

''நாடு விடுதலை அடைந்துவிட்டதாக மகிழ்கிறது. அதைக் கொண்டாட முடிவு செய்துள்ளது நாட்டின் முடிவு, அரசு ஆணையாக வந்துள்ளது. நீங்கள் அதை மதித்துக் கட்டுப்படாவிட்டால், நாளை ஒவ்வொரு உதவி ஆசிரியரும் தமது கருத்தே கொடிகட்டிப் பறக்கவேண்டும் என்று கலவரம் செய்யக்கூடும்.

''மாணாக்கரும் கருத்துரிமை என்ற சாக்கில், பள்ளி நடை முறைக்கும், பாட நடப்புக்கும் ஒத்துப்போக மறுக்கலாம் அல்லவா? இதுவே என் கவலை.''

''மன்னியுங்கள் அய்யா; விடுப்பு தேவை இல்லை'' என்று எழுதிக் கொடுத்துவிடுகிறேன். விடுதலை நாள் விழாவைப் பள்ளியில் உரிய முறையில் கொண்டாடுகிறேன்'' என்றார் திரு. சுப்பிரமணியம் பிள்ளை.

அப்படியே சிறப்பாகச் செய்தார்.

சுதந்திர தின விழாவிற்கு முன்னரே, மேற்படி பேட்டி பற்றி ஊர் முழுவதும் பேச்சாகிவிட்டது.

அது நல்லதாகிவிட்டது.

எல்லா மாநகராட்சிப் பள்ளிகளிலும் விடுதலை விழா மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

37. சுட்டாலும் பொன் ஒளி குன்றாது

காலத்திற்கு ஒவ்வாத சட்டம்

மாநகராட்சிக் கல்வி அலுவலர் பதவி, நான் அஞ்சிய அளவு தொல்லை கொடுக்கவில்லை. காரணம்?

மன்ற உறுப்பினர்கள், நேர்மையாளனிடம் நேர்மையாகவே நடந்து கொண்டார்கள், கட்சிக் கண்ணோட்டமின்றி, நடுநிலைமையாளனாகப் பணி புரிந்த எனக்குப் போதிய ஒத்துழைப்பைத் தந்தார்கள்.

அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, மாநகராட்சிப் பள்ளிகளுக்குப் போதிய இடவசதி கிடையாது.

நான் அங்குப் பணிபுரிந்தபோது, அநேக பள்ளிகளில் கூடுதல் கட்டடங்கள் எழும்பின.

சென்னை மாநகராட்சிச் சட்டம் சென்ற நூற்றாண்டில் இயற்றப் பட்டது.

தொடக்கக் கல்விச் சட்டமோ, இந்த நூற்றாண்டில்-இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

முந்தையது பழைய சிந்தனையில் பிறந்தது.

சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் தொடக்கக் கல்வி அளிக்கும் பொறுப்பு, நகர மன்றத்திடம் விடப்பட்டிருந்தது.

ஆனால், தொடக்கக்கல்வி என்பதற்குக் குறுகிய பொருள் கூறப்பட்டது.

அச் சட்டத்தில் அய்ந்தாம் வகுப்பு வரையில்தான் தொடக்கக்கல்வி என்று வரையறுக்கப்பட்டு இருந்தது.

ஆனால், பின்னர் உருவாக்கப்பட்ட தொடக்கக் கல்வி சட்டத்திலோ, எட்டாம் வகுப்புவரை தொடக்கக் கல்வி என்று கூறப்பட்டது.

பிந்தியதைக் கவனத்தில் கொண்டு, சில ஆண்டுகளுக்கு முன்னர், சில மாநகராட்சிப் பள்ளிகளை, உயர்தொடக்கப் பள்ளிகளாக (எட்டாவது வகுப்புவரை உள்ளனவாக) உயர்த்தினார்களாம்.

உரிய ஆண்டின் கணக்குகளைத் தணிக்கை செய்த அலுவலர், அந்தச் செலவு வரம்பு மீறியது என்று குறிப்பு எழுதிவிட்டார்.

மாநகராட்சி, மாகாண அரசுக்கு முறையிட்டது. மாகாண அரசு என்ன செய்தது?

தணிக்கையாளர் எடுத்த நிலை சரி என்றது.

ஆனால், மாநகராட்சியிடம் தனித்தீர்மானத்தைப் பெற்றுக்கொண்ட, குறிப்பிட்ட பள்ளிகள் உயர்தொடக்கப் பள்ளிகளாகத் தொடர இசைவு தந்தது.

அப்படி நடந்து பல்லாண்டுகள் கழிந்தபின், நான் மாநகர ஆட்சிக்குப் போய்ச் சேர்ந்தேன்.

காலத்திற்கேற்ற இந்தியக் குறிக்கோள்

நம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் நெறிக்கொள்கை எட்டாவது வகுப்புவரை இலவசக் கல்விக்கு ஏற்பாடு செய்யச் சொல்லிற்று.

அக் குறிக்கோள் சட்டமானபிறகு பல பகுதிகளில் உயர் தொடக்கப் பள்ளிகள் கேட்டார்கள்.

அத் தேவையை நானும் உணர்ந்தேன். தாராளமாகப் பரிந்துரைத் தேன்.

அதிலுள்ள சிக்கல் கல்வித்துறையில் எவருக்கும் தெரியவில்லை.

கணக்குத் தணிக்கைத் துறையோ பழைய கோப்பைத் தேடி எடுத்தது; சட்டச் சிக்கலைக் சுட்டிக் காட்டிற்று.

பழையபடி சென்னை மாகாண ஆட்சியிடம் தனி இசைவு பெறும்படி ஆணையருக்குப் பரிந்துரைத்தேன்.

அவர் புதிய குறிக்கோளைச் சுட்டிக் காட்டி ஏற்றுக்கொண்டு, நகர் மன்றத்திற்குப் பரிந்துரைத்தார். மன்றமும் ஒப்புக் கொண்டது.

அரசின் இசைவோடு பல தொடக்கப் பள்ளிகளை உயர் தொடக்கப் பள்ளிகளாக மாற்றும் மகிழ்ச்சியில் எனக்கும் பங்கு கிடைத்தது.

மாநகராட்சி, அவ்வப்பொழுது, மாகாண ஆட்சியோடு, நேரடிக் கடிதத்தொடர்பு கொள்ளும்.

அரசுக்குப் போகும் கடிதங்களின் நகல்களை அந்தந்தத் துறையே ஆயத்தம் செய்யும்.

அதை, ஆணையர் சரி பார்த்தபின் மேயர் பார்வையிடுவார். பிறகு அது அரசுக்குச் செல்லும்.

கல்வித்துறை பற்றிய கடிதங்களை ஆயத்தம் செய்வதில், எனக்கு வழிகாட்டியவர் ஆணையர் திரு. நரசிம்மம் ஆவார்.

அவரிடம் வேலை பார்த்தது எனக்கு நல்ல பயிற்சியாக அமைந்தது.

நான் மாநகராட்சிப் பணிக்குச் சென்ற ஓராண்டில், பொதுத் தேர்தல் வந்தது. புதிய உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்றார்கள்.

திரு.வி.க. வுக்கு மாநகராட்சி வரவேற்பு

அவர்களில் ஒருவர், என் கல்லூரி நண்பர் திரு. எஸ் இராமசாமி நாயுடு.

அவர் 1948 ஆம் ஆண்டு நவம்பரில் மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் என்னிடம் பாசத்தோடு பழகினார்.

திரு. எஸ். இராமசாமி நாயுடுவிற்குத் தமிழ்ப்பற்று மிகுதி.

அவர் மேயராக இருந்தபோது, தமிழ்த்தென்றல், திரு. வி. கலியாண சுந்தரனாருக்கு மாநகராட்சியின் சார்பில் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்துச் சிறப்புச் செய்தார்.

அந் நிகழ்ச்சியின்போது, மாநகராட்சியின் தலைமை அலுவலர்களில் ஒருவன் என்ற முறையில் என்னை இராயப்பேட்டை முனிவருக்கு அறிமுகப்படுத்தியும் வைத்தார்.

பிற்காலத்தில், தந்தை பெரியாருக்கும் அத்தகைய சிறப்பு செய்தது. அப்போது நான் சென்னை மாநகராட்சி அலுவலில் இல்லை.

மேயரின் பதவிக்காலம் ஓராண்டே. எனவே, 1949 நவம்பரில், டாக்டர் செரியன் மேயரானார். 1950 நவம்பரில் இன்றைய செட்டி நாட்டு அரசரின் இளவல், திரு. இராமநாதன் செட்டியார் மேயர் ஆனார்.

எனக்குக் கிடைத்த பாராட்டு

டாக்டர் செரியன் மேயராக வீற்றிருந்தபோது, மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தை விவாதித்த வேளை அலுவலர்கள் அனைவரும் வழக்கம்போல அவையில் எங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்திருந்தோம்.

உரையாற்றிய பலர் என்னைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

அதை எதிர்பார்த்தேன். ஏன்?

அதற்குச் சில திங்களுக்கு முன்பே என்னை மேலும் இரண்டு ஆண்டுக்கு மாநகராட்சிப் பணியில் விட்டு வைக்குமாறு அரசிடம் கோருவதாக ஒருமனதாக முடிவு செய்து அனுப்பியிருந்தார்கள்.

அதோடு, மற்ற அலுவலர்களுக்குக் கொடுப்பதுபோல், எனக்கும் மாதம் 750 ரூபாய் சம்பளமாகத் தர ஒப்புதல் கேட்பதற்கும் முடிவு எடுத்தார்கள்.

அப்படி முடிவு செய்தது இரகசியக் கூட்டத்தில்.

கூட்டம் முடிந்த பிறகு சம்பளம் பற்றிய செய்தி என் காதில் வீழ்ந்தது.

அப்பரிந்துரையைக் கண்டால் அரசின் மட்டத்தில், என்னைப் பற்றித் தவறாக நினைக்கக் கூடுமென்று அஞ்சி அதை ஆணையரிடம் வெளியிட்டேன்.

ஆணையர் அப்படி அஞ்சத் தேவை இல்லையென்று ஆறுதல் கூறினார். எனக்குப் பதவி நீடிப்பு ஆணை வந்தது.

சம்பளம் என்ன?

மாவட்டக் கல்வி அலுவலராக வாங்கிய சம்பளத்தோடு கூடுதலாக இருபத்தைந்து விழுக்காடே கொடுத்தார்கள். (300+75) முந்நூற்று எழுபத்தைந்தே பெற்றேன். இருப்பினும் மனநிறைவோடு பணியில் தொடர்ந்தேன்.

அந்நிலையில், மேற்கூறிய மாமன்றத்தின் வரவு செலவு கூட்டம் நடந்தது.

அதில், எனக்கு அறிமுகமில்லாத ஒருவர் என்னைப் பாராட்டிப் பேசினார்.

வழக்கறிஞர் வி.சி. கோபாலரத்னம் பாராட்டினார்

''சென்னை மாநகராட்சியின் கல்வித் துறை நிர்வாகத்தை எவ்வளவு போற்றினாலும் தகும்.

''நான் அய்ம்பது ஆண்டுகளாகச் சென்னையில் குடியிருப்பவன். மாநகர் ஆட்சிப் பள்ளிகள் தரக்குறைவின் அடையாளங்கள் என்று முன்னர்க் கேள்விப் படுவதுண்டு. அவற்றில் ஒழுங்கு, கட்டுப்பாடு கிடையாது என்பார்கள்.

''இப்போது மாநகராட்சிப் பள்ளியின் தரம் எல்லோராலும் போற்றப்படுகிறது. ஒழுங்கும் கட்டுப்பாடும் உயர்ந்து உள்ளன.

''முதல் முறையாக, அப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியைகளுக்கு எவராலும் தீங்கு நேரிடாது என்கிற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

''அரசு அலுவலில் இருந்து எவரோ ஒருவர் நகராட்சிக்கு, கல்வி அலுவலராக வந்திருக்கிறாராம். அவர் அடிக்காமலேயே வேலை வாங்குகிறாராம்.

''அந்த 'மந்திரவாதி'யை நான் பார்த்தது இல்லை ஆனாலும் தயங்காமல் அவரைப் போற்றுகிறேன்.'' - இப்படிப் பாராட்டியவர் எவர்?

மயிலாப்பூரில் இருந்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த, திரு.வி.சி. கோபாலரத்னம் என்னும் வழக்கறிஞர்; மரியாதைக்குரிய பெரிய அய்யங்கார் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அப்படி அவர் பாராட்டி முடிப்பதற்குள், மேயரின் பக்கத்தில் நின்றிருந்த ஆணையர், மேயரிடம் சொல்லி என்னைப் பெயர் சொல்லி அழைக்க வைத்தார்.

நான் எழுந்து நின்று, அவைக்கு வணக்கம் கூறினேன்.

உறுப்பினர்கள் கையொலி எழுப்பிப் போற்றியது இன்றும் உயிரூட்டுகிறது.

சென்னை மாநகராட்சி, பல படிப்பகங்களைத் தன் சொந்த செலவில் சிறப்பாக நடத்தி வந்தது.

அவற்றில் சிலவற்றிற்கு இடவசதி தாராளமாக இருந்தது.

அங்கு வந்து படிப்போர் எண்ணிக்கையும் கணிசமாக இருந்தது.

நூலகங்கள் தொடங்கல்

பெரிய படிப்பகங்களை நூலகங்களாகவும் மாற்றி நடத்திப் பார்க்கும் யோசனை பிறந்தது.

ஒரு இருபது படிப்பகங்களைத் தேர்ந்தெடுத்தோம்.

ஒன்றிரண்டு தவிர மற்றவை, தமிழ்ப் படிப்பகங்கள்.

தெலுங்கர் வாழ்ந்த பகுதியில் தெலுங்கு இதழ்களும், உருது பேசுவோர் பகுதியில் உருது இதழ்களும் வந்து கொண்டிருந்தன.

படிப்பகம் ஒவ்வொன்றிற்கும் நூல்கள் வாங்க, இரு நூறு ரூபாய்கள் போல் கொடுக்கப்பட்டது.

சாதாரண மக்கள் படிக்கக்கூடிய நூல்களின் பட்டியலை ஆயத்தம் செய்யும் பொறுப்பை ஆணையர் என்னிடம் விட்டுவிட்டார்.

நூல் பட்டியல் போட்டேன்.

வ.உ.சி. நூல்களை வாங்கினேன்

அதில் கப்பலோட்டிய தமிழர், வ.உ. சிதம்பரனார் மொழி பெயர்த்த சில நூல்களையும் சேர்த்தேன்.

ஜேம்ஸ் ஆலன் என்பவர் ஆங்கில தத்துவ ஞானி. அவருடைய நூல்கள் சிறந்தவை. 'வலிமைக்கு மார்க்கம்' 'சாந்திக்கு மார்க்கம்',

'மனம்போல் வாழ்வு' 'மெய்யறம்' போன்ற நூல்களைச் சிதம்பரனார் மொழி பெயர்த்திருந்தார்.

அவற்றை வாவில்ல இராமசாமி சாஸ்திரி என்ற தெலுங்கர் வெளியிட்டிருந்தார். ஒவ்வொன்றின் விலை அரை ரூபாய். அவற்றையும் சேர்த்துப் பட்டியல் போட்டேன்.

ஒவ்வொரு வெளியீட்டுக்காரருக்கும் ஆணை அனுப்புவதற்குப் பதில், எல்லா நூல்களையும் வாங்கித் தரும்படி, சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கே ஆணை அனுப்பினேன்.

மூன்று நாள்கள் கழிந்தன.

திரு. சுப்பையா பிள்ளை என்னைத் தேடி வந்தார். ''சிதம்பரனார் நூல்களுக்குப் பதில் வேறு நூல்கள் வாங்கிக்கொடுக்கலாமா? என்று கேட்டார்.

''அவை கிடைக்காதா?'' என்றேன்.

''கிடைக்கும் - இருந்தாலும்....'' என்று இழுத்தார் திரு. சுப்பையா.

''எல்லா நூல்களையும் வாங்கிக் கொடுப்பதானால் சரி; இல்லாவிட்டால், முழு ஆணையையும் வேறு யாருக்காவது மாற்றிவிடுவேன்'' என்றேன்.

இரு நாள்களில் எங்கேயோ தேடி எல்லா நூல்களையும் கொண்டு வந்து ஒப்படைத்தார்.

படிப்பகங்கள் நூலகங்களாக மாறின. பிற்காலத்தில் அவை பொது நூலக இயக்ககத்தில் இணைந்துவிட்டன.

முதியோர் பள்ளிகள்

நான் மாநகராட்சிக் கல்வி அலுவலராக இருந்தபோது, நகர் மன்றம் முப்பது முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங்களை நடத்தி வந்தது.

நகர்மன்றப் பள்ளிகளில் முதியோர்க்கான இரவுப் பள்ளிகள் நடந்தன.

பகலில் வேலை செய்யும் ஆசிரியர் ஒருவருக்குக் கூடுதல் சம்பளம் கொடுத்து அப் பணியில் ஈடுபடுத்தி இருந்தோம்.

கற்போர்க்கான பாடநூல், பலகை, முதலியவற்றை நகர்மன்றம் தன் செலவில் கொடுத்தது. படிப்பவருக்கு முயற்சியும் நேரமுமே செலவு.

அதில் ஒரு குறை கண்டேன்.

என்ன குறை?

தொடக்கப் பள்ளிக் குழந்தைகளின் பாடநூலையே பின் பற்றியது.

அது பொருத்தம் அல்ல.

முதியோர் எழுத்தறிவிற்குத் தனிப்பாட நூல்கள் தேவை.

அது இல்லாதபோது? குழந்தைகள் நூலைப் பின்பற்றினார்கள்.

கற்போர் அதை விரும்பவில்லை என்று கேள்விப்பட்டேன்.

நான் கண்ட மாற்று என்ன?

படிக்கும் முதியவர்கள் என்னென்ன சொற்களைக் கற்க விரும்புகிறார்கள்? அதைக் கேட்டறியுங்கள்.

அச் சொற்கள் கொண்ட அட்டைகளை ஆயத்தம் செய்யுங்கள்; பயன்படுத்துங்கள். இப்படி ஆலோசனை கூறினேன்.

ஆசிரியர்கள் அப்படியே பின்பற்றினார்கள். அதிலும் ஒரு சிக்கல் எழுந்தது.

தெலுங்கு கற்பிக்கும் முதியோர் பள்ளிகளில் அவர்கள் எத்தகைய சொற்களை விரும்பினார்கள்.

ஆந்திர மாநிலம் கோரிய தலைவர்கள் பெயர்கள், அவர்கள் செயல்கள் பற்றிய சொற்களைக் கற்க விரும்பினார்கள்.

தெலுங்கு ஆசிரியர்கள் அச்சங் கொண்டார்கள்.

அத்தகைய சொற்களைக் கற்றுக் கொடுத்தால், தமக்குத் தீங்கு வருமோ, என்று அஞ்சினர்.

நான் ஊக்கமூட்டினேன். பாடத்தை அரசியல் வகுப்பாக்கி விடவேண்டாம் என்று மட்டும் எச்சரித்தேன்.

பலன் உண்டா?

இரவுப் பள்ளிகளுக்கு இருபது பேர்கள் கூட வருவதில்லை.

அவ்வளவு குறைந்த வருகையை வைத்துக் கொண்டு, முதியோர் கல்வி மையங்களை நடத்த வேண்டாம் என்று, மாநகர் ஆட்சி மறுப்பினர்கள் சிலர் கருதினார்கள்.

நாட்டுப்புறப் பகல் நேரப் பள்ளிகள் பலவற்றில்கூட இருபதிற்கும் குறைந்த வருகை தொடர்கிறது. சில இடங்களில் ஆண்டுக் கணக்கில் தொடர்கிறது.

அதிகப்படியான கண்டிப்பைக் காட்டாமல், அவற்றை எடுக்காதிருப்பதால், ஊருக்கு நாலு பேர்களாவது எழுத்து அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

அதேபோல், முதியோர் எழுத்தறிவு மையங்களை விட்டுவைத்தால் சில ஆண்டுகள் பொறுத்தாகிலும் அவை வளரும், பலன் கிடைக்கும் என்று கூறி, இரவுப் பள்ளிகள் தொடர்ந்து நடக்கச் செய்தேன்.

இவ்வேளை, ஒரு பொது நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது.

சென்னை புரசைப்பாக்கம் பகுதியில் சமூகத்தொண்டு செய்து வந்த நிறுவனம் ஒன்று தன் ஆண்டு விழாவை ஒழுங்காக நடத்தி வந்தது.

அமைச்சர் டி.எஸ்.எஸ். இராஜனின் பெருந்தன்மை

ஓர் ஆண்டு விழாவில், அப்போதைய அமைச்சர் மாண்புமிகு டாக்டர். டி.எஸ்.எஸ். இராஜன், மாநகராட்சி துணை ஆணையர் திரு. சங்கரன் ஆகியோரோடு நானும் கலந்து கொண்டேன்.

விழா, புரசை சர் எம்.சி.டி.எம். உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் நடந்தது.

டாக்டர் இராஜன் தமது உரையில், ''முதியோர் கல்வி எதிர் நீச்சல் முயற்சியாகும். அது அவ்வளவு தேவையல்ல. அதனால், மொட்டைக் கடிதங்கள் அதிகமாகும் பலன்தான் ஏற்படும்'' என்று பொருள்படப் பேசினார்.

என் முறை பிறகு வந்தது. அமைச்சரின் கருத்தைத் தொடாமலே பேசியிருந்தால் தவறாகி இராது. ஆனால் என் இயல்பு வெளிப்பட்டது.

'அமைச்சரோடு கருத்து மாறுபடுகிறோம். அதை ஊரறியச் சொல்வது உலகியல் அல்ல' என்று நழுவியிருக்கலாம். அப்படிச் செய்யாமல், அந்த மேடையில் பதில் சொல்லிவிட்டேன்.

''தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும். எழுத்தறியாதவர்கள் படும்பாட்டை, அவர்களைத் தாக்கும் இழிவை, நம்மைப்போன்று, 'படித்தவர்கள் உணர்வது அரிது. இளமைப் பருவத்தில் சொல்லிக் கொடுக்கத் தவறியதற்குக் கழுவாய் வேண்டும்.

''எவ்வளவு செலவானாலும் முதியோர்க்கு எழுத்து அறிவைக் கொடுக்க வேண்டும். அது, அவர்களுடைய பிறப்பு உரிமை.

''எழுதப் படிக்கக் கற்றவர்கள் மொட்டைக் கடிதம் எழுதுவதைக் கண்டு அஞ்சி, எழுத்தறிவிப்பு முயற்சியைக் கைவிடக் கூடாது.

''நீண்ட காய்ச்சலுக்குப் பின் பெய்யும் மழை சிறிதாயின் புழுக்கம் மேலும் அதிகமாகி, தொல்லைப்படுத்தும்; முதல் தூறலின் விளைவு அது. அடுத்துப் பெருமழை பெய்து விட்டால், நிலம் குளிர்ந்து விடும்.

''எழுத்தறிவு பெரும் அறிவாக வாய்ப்பு கொடுத்துவிட்டால், முறைப்படி சொல்வதைக் கேட்கும் பொறுமையை அலுவலர்கள் பெற்றுவிட்டால், அப்புறம் மொட்டைக் கடிதங்கள் குறையும்'' என்று அமைச்சருக்குப் பதில் கூறிவிட்டேன்.

கடைசிவரை இருந்து கேட்ட அமைச்சர் வெகுளவில்லை; கல்வி அமைச்சரிடம் புகார் சொல்லவில்லை; பழி வாங்க முயலவில்லை. கட்டாலும் பொன் பொன்னேயாகும்.

38. பெரியவர்கள் வாக்குறுதியும் மீறலும்

எஃகு மனிதர் படேலின் சாதனை

நான் சென்னை மாநகராட்சியில் 1948 ஆம் ஆண்டு முதல் 1951ஆம் ஆண்டுவரை, அமைதியாகப் பணி புரிந்தேன்.

அப்போது வெளியுலகில் அமைதி இருந்ததா? இல்லை!

அந்த ஆண்டுகளில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அதிலே ஒன்று, சுதேச மன்னர்கள் ஆண்டு வந்த அய்ந்நூற்றுச் சில்லறை இந்திய இராச்சியங்களை மக்கள் இந்தியாவோடு இணைத்த மிகப்பெரும் சாதனையாகும்.

நம்ப முடியாத அந்தச் சாதனையைச் செய்தவர், அன்றைய இந்திய அரசின் உள்துறை அமைச்சர், மாண்புமிகு வல்லபாய் படேல் ஆவார்.

அந்த எஃகு மனிதர் வெற்றிகரமாக மேற்கொண்ட நடவடிக்கை நம் இந்திய வரலாற்றில் முன்னர் எப்போதும் கண்டிராத முழு இந்தியாவை நமக்குத் தந்தது.

இப்படி நேர்ந்திராவிட்டால், நூற்றுக்கணக்கான இந்திய இராச்சியங்கள் நீடித்திருந்தால், எங்காவது ஒரு பக்கம், அயல்நாட்டில் ஒன்று காலூன்றிப் புதிய காலனி ஆதிக்கத்திற்குக் கடைக்கால் அமைத்து இருக்கக்கூடும்.

இணைந்த இந்தியாவை இப்படியே முழுமையாகக் காத்துக் கொள்ளும் விவேகம் குடிமக்களிடம் தழைத்து ஓங்க வேண்டும்.

ஆளும் வாய்ப்புடையோரும் ஆள ஆசைப்படுவோரும் எல்லாப் பிரிவினரையும் ஒற்றுமைப்படுத்த வேண்டிய தொலைநோக்கோடு

செயல் புரியவேண்டும்; பல பகுதிகளிலும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

விடுதலை பெற்றதும் பொங்கிய கிளர்ச்சிகள்

ஒரு பக்கம் வரலாற்றின் இந்த இணைப்புச் சாதனையொன்று நிகழ வேறு பக்கத்தில் - இல்லை பக்கங்களில் - நாடு பல கொந்தளிப்புகளைச் சமாளித்தது.

பல குழந்தைகளைப் பெற்றெடுத்த குடும்பத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். தந்தை, அத்தனை பேர்களையும் செல்லம் கொடுத்து வளர்த்ததாக நினைத்துக்கொள்ளுங்கள்.

அருமைத் தந்தை பல நாள் வெளியூர் சென்றுவிட்டு, வீடு திரும்பும் போது அக் குடும்பத்தின் சூழல் எப்படி இருக்கும் என்று ஊகித்துப் பாருங்கள்.

ஆளுக்கொரு புகார்; ஒவ்வொருவரிடமும் பல கோரிக்கைகள்; அத்தனை பேரும் தந்தையைச் சூழ்ந்துகொண்டு சொல்லத் துடித்தல்.

இப்படி இரைச்சலும் கூச்சலுமாகச் சிறிது நேரம் இருந்தே தீரும்.

ஒரு நாட்டின் ஆயுளில் நூற்றாண்டுகள்கூட சிறுபோதே!

இருநூறு ஆண்டுகள் நம்மை ஆண்ட ஆங்கிலேயர் வழிவழியான இந்தப் பழைய அநீதிகளை அப்படியே விட்டுவிட்டு வெளி யேறினார்கள்.

அவர்கள் ஆட்சிக் காலத்திலும் பெருகிய வறுமையும் வறட்சியும் இரண்டொரு ஆண்டுகளில் குறைந்து விடுமா?

உரிமை இழந்து கிடந்தபோது, நம் மக்கள் உரிமை பெற, நல்வாழ்வு பெறத் துடித்தார்கள்.

உரிமை இழந்த, உடைமை ஏதுமற்ற, அநீதிகளுக்கு ஆளான பல்வேறு பிரிவினர்களும் இந்தியா விடுதலை பெற்ற சூட்டோடு தங்கள் தங்கள் கோரிக்கைகளை அரசின் முன் வைத்தார்கள். முறையீடுகள் பெருகின; அணி வகுப்புகள் வளர்ந்தன; நீண்டன; கிளர்ச்சிகள் வெடித்தன; போராட்டங்கள் பெருகின.

ஆயுதமேந்தும் போராட்டத்தின் வழியாக, சமதர்ம வாழ்க்கை முறையைக் கொண்டுவரும் பலாத்கார நடவடிக்கைகளும் தெலுங்கானா பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

தன்னாட்சி இந்தியாவில், எடுத்த எடுப்பிலேயே வெள்ளம் போலக் கிளர்ச்சிகள் பெருகவும், அடக்குமுறைகள் கடுமையாயின.

இந்திய பொது உடைமைக் கட்சி தடை செய்யப்பட்டது.

சிறைப்பட்டோர் ஏராளம்; தலைமறைவானோர் பலர் ஆவார்.

அவர்களில் சிலருடைய தலைக்குப் பெரும் விலை அறிவிக்கப் பட்டது.

பல்லாயிரக்கணக்கான பொது உடைமைக் கட்சியினர் சிறைப் படுத்தப்பட்டார்கள். சென்னை மாகாணத்தில் சேலம், வேலூர், கடலூர் சிறைகளில் அரசியல் கைதிகள் துப்பாக்கிச் சூடுகளுக்குப் பலியாக நேர்ந்தது. இத் துயரச் செய்தி மக்களை உலுக்கியது.

இந்தியப் பொது உடைமைக் கட்சி 1951 ஆம் ஆண்டில் போராட்ட வழிக்குப் பதில், பாராளுமன்ற முறைக்கு மாறுவது என்று முடிவு செய்தது.

அதன் பின்னர், அடக்குமுறை தளர்ந்தது; அமைதி திரும்பியது.

தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு எதிர்ப்பு

பொது மக்கள் தமிழ் மாநில ஆட்சியின்மேல் கொண்டிருந்த பெரும் கோபம், 1952 இன் தொடக்கத்தில் வந்த பொதுத் தேர்தலில் வெளிப்பட்டது. தேர்தலில் சென்னை மாகாணத்தில், காங்கிரசு கட்சி பெரும்பான்மை பெறத் தவறிவிட்டது. 375 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட மன்றத்தில் காங்கிரசுக் கட்சி 152 இடங்களைப் பிடித்தது. பொது உடைமைக் கட்சி உறுப்பினர்கள் 62 பேர் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

பொதுவாகச், சென்னை மாகாண பொது மக்களும், சிறப்பாகத் தமிழர்களும் காங்கிரசிற்கு எதிராக மாறியதற்கு மற்றோர் காரணமும் உண்டு.

அது என்ன?

கட்டாய இந்தி பாடமுறை ஆகும்.

இராசகோபாலாச்சாரியார் 1938 இல் கொண்டு வந்த கட்டாய இந்தி பாடத்திட்டம் - 1940 இல் அமைச்சர்களுக்குப் பதில் ஆலோசகர்கள் ஆளும் நிலை ஏற்பட்ட கட்டாய இந்திப் பாடமுறை -1948 இல் மீண்டும் புகுத்தப்பட்டது.

இரண்டாம் முறை, சிறு மாற்றத்தோடு நுழைக்கப்பட்டது.

என்ன மாற்றம்?

இராசாசி, ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை இந்தி பாடத்தைக் கட்டாயமாக்கினார்.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அமைச்சரவை, அதே இந்தியை ஏழாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்புவரை கட்டாயப்படுத்தியது.

ஆங்கிலம் கற்பிப்பதையும் பழையபடி ஆறாம் வகுப்பில் தொடங்காமல், ஏழாம் வகுப்பில் தொடங்குபடி ஆணையிட்டது.

அதன் பொருள் என்ன?

ஒரே வகுப்பில் இரு புது மொழிகளைக் கற்கத் தொடங்கும் தொல்லை நீடித்தது.

இரு மொழிகளில் ஒன்றில் தவறினாலும் படிப்பு தடைப்படும், தேர்ச்சியை இழக்க நேரிடும் என்பது தொடர்ந்தது.

இம் மாற்றம் எவ் வகையிலும் உதவிகரமானதாக இல்லை.

எனவே, தமிழகத்தில் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போர் நடந்தது; கசப்பும் வெறுப்பும் வளர்ந்தது.

பிஞ்சுப் பருவத்தில் இந்திப் பாடத்தைச் சுமத்தி, அதில் போதிய மதிப்பு எண்கள் பெற்றால்தான் மேல் வகுப்பிற்குப் போகலாம் என்று இராசாசி ஆணையிட்டதும் பலிக்கவில்லை.

ஓமந்தூர் ஆணையிட்டதும் பலிக்கவில்லை.

விவகாரம் எப்படி முடிந்தது?

இராசாசி ஒரு காரணத்திற்காகப் பதவியைத் துறந்ததுபோல் ஓமந்தூராரும் வேறொரு காரணத்திற்காகப் பதவி துறந்தார்.

அவருக்குப்பின், திரு.பி. எஸ். குமாரசாமி ராஜா முதலமைச்சரானார். அந்த அமைச்சரவை சற்று விட்டுக் கொடுத்துச் செயல்பட்டது.

ஒவ்வோர் உயர்நிலைப் பள்ளியிலும் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை இந்தி கற்றுக்கொடுக்க ஏற்பாடு இருக்க வேண்டும்.

விரும்புகிறவர்கள், இந்தி படிக்கட்டும்; விரும்பாதவர்கள், ஏதாவதொரு பள்ளிக்கூட நடவடிக்கைகளில் கூடுதலாக ஈடுபடட்டும்.

இது மூன்றாவதாக வந்த இந்தித் திட்டம்.

இதன் பொருள் என்ன?

விளையாட்டுகளில் ஆர்வமுடையவர்கள் இருந்தால், அவர்கள் இந்திக்குப் பதில் அவ்வகுப்பு நேரங்களில் விளையாட்டில் ஈடுபடலாம்.

சிலர் ஆங்கிலப் பற்றாளர் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் அதிகப்படியாக ஆங்கிலம் கற்கலாம்.

தமிழ்ப் பற்றுள்ள மாணவர்கள் தமிழை அதிகப்படியாகப் படிக்கலாம்.

அறிவியல் நாட்டமுடையோருக்கு, இந்தி நேரத்தை அறிவியலுக்குச் செலவிட உரிமை உண்டு.

பள்ளியின் தலைமையாசிரியர் அவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நெளிவு சுளிவுக்கு இடம் கொடுத்த இம்முறை பத்தாண்டுகள் போல் எதிர்ப்பின்றி நடைமுறையில் இருந்தது.

தொலைநோக்கு உடையோர் இந்தி படித்தார்கள்.

தேர்வுக்கு இவ்வளவு மதிப்பெண் பெறவேண்டுமென்று விதிக்கப் படாமையால், இந்தி கற்பது பற்றி இருந்த அச்சம் மெல்ல அகலத் தொடங்கிற்று.

அதற்குக் கேடு வந்ததைப் பற்றிப் பின்னர் உரிய இடத்தில் கூறுவேன்.

நாட்டு நடப்பை இதோடு விட்டுவிட்டு என் வரலாற்றிற்கு வருகிறேன்.

சாமு நாயரைச் சந்தித்தேன்

மதுரை மண்டலப் பள்ளி ஆய்வாளரான திரு. சாமுநாயர் சென்னைக்கு வரும்போதெல்லாம் தகவல் கொடுப்பார்.

நான் அவரைக் கண்டு வருவேன். ஒரு முறை அப்படிக் கண்டபோது,-

''என்ன! தலைநகரில், இயக்குநருக்கு அருகில் இருந்தும் நீ அவரைக் கண்டு பல திங்கள் ஆயிற்றாமே; விரைவில் அவரைப் போய்ப் பார்'' என்றார்.

இயக்குநர் சொன்ன நல்ல செய்தி

அடுத்த நாள் காலை, பொதுக்கல்வி இயக்குநர், திரு. சதாசிவ ரெட்டியைக் கண்டேன்.

அதுவரை சென்று பாராததற்காக, அவரிடம் மன்னிப்புக் கோரினேன்.

அவர் சிரித்தபடியே, நல்ல செய்தி ஒன்றைக் கூறினார்.

அதைக் கூறுவதற்கு முன்பு என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்.

அது என்ன?

''உனக்குப் பதவி உயர்வு கிடைத்தாலும் இன்னும் பல திங்கள் எண்பத்து ஐந்து நகராட்சி உறுப்பினர்களுக்கு 'சலாம்' போட உன் மனம் ஒப்புவாயா?'' என்று கேட்டார்.

''அவர்களுக்கு வணக்கம் சொல்ல நான் என்றும் தயங்கியதில்லை. இனியும் தயங்க மாட்டேன்'' என்றேன்.

''பல திங்களுக்கு முன்பே, மண்டல ஆய்வாளர் பதவி காலியாவதாக இருந்தது. பதவி உயர்விற்குக் காத்துக் கொண்டிருப்பவர்களில், நீதான் முதல் இடத்தில் இருக்கிறாய். எனவே, நீயே மண்டல ஆய்வாளராக வேண்டும்.

''அதற்கான பரிந்துரை அனுப்பும் வேளை, அமைச்சர் மாதவமேனன் தலையிட்டார். அவரோடு படித்த திரு.கே.பி.ஜி. மேனனின் பதிவேடுகளில் குறை இருப்பதால் மாவட்டக் கல்வி அதிகாரியாகவே தேங்கிக் கிடக்கிறார்.

''அவர் ஓய்வுபெற ஈராண்டுகளே உள்ளன. அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க அமைச்சர் விரும்பினார்.

''ஏற்கெனவே ஒரு முறை திரு.வி.ஆர். அரங்கநாத முதலியாருக்குப் பதவி நீடிப்புக் கொடுத்ததால், உன் பதவி உயர்வு தடைப்பட்டது.

''இப்போது நல்ல மதிப்பீடு இல்லாத ஒருவர், நெ.து.சு. வைத் தாண்டிப் போக விடமாட்டேன் என்று நான் அடம்பிடித்தேன். இரண்டொரு திங்கள் இழுபறிக்குப்பின், அமைச்சர் ஒரு வழி கண்டுபிடித்துள்ளார்.

''உனக்குப் பதவி உயர்வு கொடுத்து, சென்னை மாநகராட்சிப் பணியிலேயே மேலும் சிலகாலம் விட்டுவைப்போம்.

''அப்படி நேர்வதால், உனக்குப் பதிலாக கே.பி.ஜி. மேனனை நியமிப்பதாக ஆணையிட்டு விடுவோம்.

''அப்போது சுந்தரவடிவேலுக்கு முதலாவதாகவும் அடுத்து மேனனுக்கு மண்டல ஆய்வாளர் பதவி கொடுக்கலாம் என்று அமைச்சர் நினைக்கிறார்.

''மாநகராட்சி கல்வி அலுவலர் பணியும் மண்டல ஆய்வாளர் பணிக்குச் சமம் என்று அரசு ஆணையிடுவதனால், அங்குச் செலவிடும் பணிக் காலமும் என் கணக்கிற்கு வரும்.

''அப்படி ஆணையிட இசைவதானால் உன் இசைவைக் கேட்பதாகக் கூறினேன்.

''அமைச்சர், செயலர்களைக் கலந்துகொண்டு, இசைவைத் தெரிவித்தார்.

''இதைப்பற்றி மாநகராட்சி ஆணையரிடம் இதுவரை சொல்லவில்லை. அவரிடம் சொல்லி, மாநகராட்சியின் ஆட்சேபணை இராதென்றால், உன்னை உயர் பதவியில் அங்கேயே விட்டு வைக்கிறேன்.''

இப்படிக் கூறினார் சதாசிவ ரெட்டி.

''உங்கள் இருவரையும் நம்பி, என் எதிர்காலத்தை உங்கள் கைகளில் ஒப்படைத்து விடுகிறேன்'' என்றேன்.

பொதுக்கல்வி இயக்குநருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

திரு. சதாசிவ ரெட்டி, மேற்படி திட்டத்தைச் சென்னை நகரசபை ஆணையர் நரசிம்மமிடம் கூறினார்.

அவர் ரெட்டியைவிட விழிப்பாகச் செயல்பட்டார்.

அப்போது, கல்வி, உள்ளாட்சித் துறை, மக்கள் உடல்நலம் ஆகிய மூன்று துறைகளுக்கும் ஒரே செயலர்.

அன்று, திரு. ஆர்.டி. பால் என்பவர் அப் பதவியில் இருந்தார்.

ஆணையர் அவரிடம் சென்றார். என் விவகாரம் பற்றிப் பேசினார். மாநகராட்சி கல்வி அலுவலர் பணியை, நான் அங்கு இருக்கும்வரை, மண்டல ஆய்வாளர் பதவிக்கு நிகராகக் கருத இசைவதாக, செயலரிடம் வாக்குறுதி பெற்றார்.

அதற்கான விதி பற்றியும் இருவரும் ஒருமித்த முடிவுக்கு வந்தார்கள்.

இருந்த இடத்திலேயே பதவி உயர்வு

சில நாள்களில் எதிர்பார்த்த பதவி உயர்வு ஆணை வந்தது.

இடம் பெயராமலேயே பதவி உயர்வு கிடைத்தது பற்றி மகிழ்ச்சி அடைந்தேன்.

மேற்படி ஆணை வந்ததும் ஆணையர் அதை மாநகராட்சிக் கூட்டத்தில் வைத்தார்.

மன்றம், நான் அங்குத் தொடர்ந்து பணியில் இருப்பதைப்பற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

பிறகு, ஆணையர் செயலருக்கு ஒரு நேர்முகக் கடிதம் எழுதினார்.

பதவி உயர்வுக்கு ஆணையிட்ட நாளில் இருந்து என் மாநகராட்சிப் பணிக்காலத்தை உயர் பதவியின் 'பிரபேசன்' காலத்திற்குக் கணக்கில் கொள்ளும்படி, அவரே எழுதினார்; அதற்கு ஆதரவான விதி முறையைச் சுட்டிக் காட்டினார்.

ஒரு திங்களுக்குப்பின் ஆணையர் எழுத்து மூலம் செயலரை நினைவுபடுத்தினார்.

'ஆலோசனையில் இருக்கிறது. விரைவில் முடிவு வரும்' என்று இரண்டு மூன்று முறை பதில் கிடைத்தது.

ஏமாற்றப்பட்டோம்

கிட்டத்தட்ட, நான்கு திங்களுக்குப்பின் ஆணை வந்தது. என்ன ஆணை?

ஆணையரின் பரிந்துரையை எற்றுக்கொள்ள இயலாது என்பது ஆணை.

அரசன் நடத்தும் ஆட்சியில் விருப்பு வெறுப்பு விளையாடும், பொய் விளையாடுமா என்று தெரியாது!

மக்கள் ஆட்சியில் மிக உயர்ந்த இடத்தில், கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் போகும் என்பதை அப்போதுதான், முதன் முறையாக நான் உணர்ந்தேன்.

ஆணையர், ஆணையைக் கண்டு ஆத்திரங் கொண்டார்.

திரு. சதாசிவ ரெட்டியாரோடு உடனே தொடர்புகொண்டார், விளைவு?

இருவரும் அவ் வாணைக்கு எதிராகத் தனித்தனியே அரசுக்கு எழுதினார்கள்.

என்னை முதுகில் குத்தியது ஆணை. அப்போது மாநகராட்சியின் மேயர் திரு. இராமநாதன் செட்டியார் ஆவார்.

ஆணையர், அரசுக்கு எழுதும் கடிதங்களை மேயருக்குக் காட்டிவிட்டு அனுப்புவதே மரபு. மேயர், உரிய கடிதத்தைக் கண்டு சினங்கொண்டார்.

அந்த அநீதியை முதலமைச்சர் குமாரசாமி ராஜாவின் நேரடி கவனத்திற்குக் கொண்டுவர விரும்பினார்.

அவரிடம் நேரில் சொல்லிவிட்டு, தாமும் எழுதுவதாகக் கூறினார்.

''அதிகார பூர்வமாக எழுதுவது போதும். முதலமைச்சருக்கும் கல்வி அமைச்சருக்கும் இடையே அவநம்பிக்கையையும் தீய எண்ணத்தையும் வளர்க்க விரும்பவில்லை.

''தயவுசெய்து முதலமைச்சரிடம் சொல்லாதீர்கள்'' என்று மேயரை வேண்டினேன். அதோடு விட்டுவிட்டார்.

துணை இயக்குநரானேன்

திரு. சாதாசிவ ரெட்டி அரசுக்கு எழுதியதோடு நிற்கவில்லை. துணை இயக்குநர் ஒருவர் விடுப்பில் போவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்.

அதை என்னிடம் கூறவில்லை.

என்னை மாநகராட்சியிலிருந்து அழைத்துக்கொண்டு, துணை இயக்குநராக நியமிக்கும்படி, இயக்குநர் அரசுக்குப் பரிந்துரைத்தார்.

அரசு மட்டத்தில், மீண்டும் ஒரு குறுக்குச்சால் ஓட்டப்பட்டது.

ஒருவரை மண்டல ஆய்வாளராக, சில காலம் வைத்திருந்த பிறகே, துணை இயக்குநராக நியமிப்பது மரபு.

அதை விட்டு விட்டு, சுந்தரவடிவேலுவை நேரே நியமிப்பது பொருத்தமா என்பது கோட்டைக் கோமான்களின் கேள்வி.

''சுந்தரவடிவேலுவின் ஆற்றலும் பணியும் பக்குவமும் கல்வித் துறைக்கு நன்றாகத் தெரியும். அவர் நேரே துணை இயக்குநராக மிகவும் பொருத்தமானவர்'' என்று சொல்லி இயக்குநர் உறுதியாக நின்றார்.

அதனால், நான் துணை இயக்குநராக (உயர்நிலைப் பள்ளிக் கல்வி) நியமிக்கப்பட்டேன்.

இதை இயக்குநர் எனக்கு இருபத்து நான்கு மணி முன்னதாகத் தெரிவித்தார்.

ஆணை வந்ததும் மேயர் என்னை விடுவிக்க விரும்பவில்லை.

முதலமைச்சரிடம் முறையிட அனுமதி கேட்டார்.

நான் புதிய பதவிக்குப் போகத் துடித்தேன்.

ஆணையர் மேயரிடம் என் சார்பில் பேசி, விடுவிக்க வைத்தார்.

39. திருவள்ளுவன் பிறந்தான்

தம்பி நடராசனின் திருமணம்

மாநகராட்சிப் பணியிலிருந்து விலகி, பொதுக்கல்வி இயக்ககத்தில் துணை இயக்குநராகச் சேர்ந்தேன்.

அந்த வரலாற்றைத் தொடர்வதற்கு முன்பு, முன்னரே நடந்த சில நிகழ்ச்சிகளைச் சொல்லவேண்டும்.

என் இரண்டாவது தம்பி, நெ.து. நடராசனுக்கும் பேரளம் மகாதேவர் மூன்றாவது மகள் செல்வி திலகத்திற்கும் பேரளத்தில் திருமணம் நடந்தது.

மீ. பக்தவத்சலனாரின் மைத்துனரான, திரு. தி.கோ. பாலசுப்ர மணியம், மகாதேவருக்கு நெருங்கிய உறவினர், அவர் இத்திருமணம் பற்றி என்னிடம் கூறினார்.

நான், அண்ணன் சா. குருசாமியிடம் கூறினேன். அவர் பல்லாண்டு களாக மகாதேவருக்கு வேண்டியவர்; இருவரும் ஒரே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

எனவே, அண்ணன் குருசாமி அந்த யோசனையை ஆதரித்தார்.

அப்புறம் இப்படி ஒரு வாய்ப்பு இருக்கிறதென்று என் தந்தைக்குச் சொல்லி அனுப்பினேன்.

அவருடைய இசைவு பெற்று, குஞ்சிதம், குருசாமி, நான் ஆகிய மூவரும் பெண் பார்க்கச் சென்றோம். அதன்பின், தந்தைக்குத் தகவல் கொடுத்தேன்.

அவர் ஒப்புதலோடு திருமண ஏற்பாடு செய்யப்பட்டது. 12-7-48 அன்று காலை பேரளத்தில் திருமணம் நடந்தது.

முன்னாள் அமைச்சர் திரு. எஸ். முத்தையா அவர்கள் தலைமை யேற்று நடத்திக் கொடுத்தார்.

உடல் நலமின்மையால் என் மனைவி, பேரளம் வரஇயலவில்லை. என்னுடன் திரு. குருசாமியும் திருமதி குஞ்சிதமும் வந்து, உதவி புரிந்தார்கள்.

ஊரிலிருந்து என் தந்தையுடன் என் மாமாவும் சித்தப்பாக்கள் சிலரும் வந்து கலந்து கொண்டனர்.

தம்பி நடராசன் பொறியியல் பட்டதாரி; இரண்டாம் உலகப்போரின் போது படிப்பை முடித்ததால், உடனே தற்காலிக வேலை கிடைத்தது.

பின்னர், அரசு ஊழியர்கள் பொறுக்கு ஆணையகத்தின் வாயிலாக, முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று நிர்வாகப் பொறியராக இருந்து, முந்திய நடைமுறையையொட்டி 55 ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

சில ஆண்டுகள் கழித்துப் பிறந்திருந்தால் 58 வயது வரையிலும் பணியில் நீடித்திருக்கலாம். அதற்கு மேற்பட்ட பதவிகளும் எட்டியிருக்கும்.

தம்பியின் பிள்ளைகள்

நெ.து. நடராசன் தம்பதிகளுக்கு மூன்று மகன்கள்; மூத்த மகன் பவணந்தி; பொறியியல் பட்டம் பெற்றுத் திருச்சி பெல் நிறுவனத் தேர்வு எழுதி வெற்றி பெற்று, அதில் சீனியர் பொறியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்.

பெற்றோர் ஏற்பாட்டின்படி திரு. பாஸ்கரன் மகள் எழிலரசி பி.எஸ்ஸி. அவர்களைத் திருமணம் செய்துகொண்டு, விக்ரம் என்னும் சிறுவனுக்குத் தந்தையாக உள்ளார்.

வடக்கே இராமகுண்டம், படின்டா முதலிய இடங்களில் பணியாற்றி விட்டு இப்போது திருச்சியில் இருக்கிறார்.

இரண்டாவது மகன் டாக்டர் பாண்டியன், எம்.டி.பட்டம் பெற்ற பின், அரசு மருத்துவத் துறையில் எழும்பூர் பிள்ளைப்பேறு மருத்துவ மனையில் பணி புரிந்து வருகிறார்.

இவர் 15-8-82 அன்று மேஜர் வெங்கடேசன் அவர்கள் மகள் டாக்டர் இராதா எம்.டி. அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்.

இவரும் அதே மருத்துவ மனையில் பணி புரிகின்றார். இருவருக்கும் கௌதமன் என்னும் பெயருடைய குழந்தை இருக்கிறது.

மூன்றாவது மகன் சஞ்சீவி, பி.காம். பட்டம் பெற்றபின், 'உரிமை பெற்ற கணக்கர்' (சார்டர்ட் அக்கௌண்டண்ட்) தேர்ச்சி பெற்று, கொல்லத்தில் இந்தியன் வங்கியில் அலுவலராகப் பணிபுரிகிறார்.

3-6-84 அன்று வேலூர், மா.து. நடராசன் அவர்களின் மகள் எம்.பி.பி.எஸ். படிப்பை முடித்து அவுஸ் சர்ஜனாகப் பயிற்சிபெறும் புவனேசுவரியைத் திருமணம் செய்து கொண்டார். மற்றோர் முக்கிய திருமணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

சித்தரஞ்சன் திருமணம்

என்னுடைய நகராட்சிப் பணிக்காலத்தில், அப்போதைய அமைச்சர் மாண்புமிகு மீ. பக்தவத்சலம் அவர்களின் மகன் சித்தரஞ்சனுக்குத் திருமணமாயிற்று.

மேஜர் ஜெனரல் அழகப்பனுடைய மகள் சந்திராவை வாழ்க்கைத் துணையாகக் கொண்டார்.

அதற்கான அழைப்பு வந்த மறுநாள் தன்னை வந்து பார்க்கும்படி, திரு. மீ. பக்தவத்சலம் என்னை அழைத்தார் அவர் இல்லம் சென்று கண்டேன்.

''அழைப்பு வந்ததா?'' என்று கேட்டார். ''ஆம்'' என்றேன்.

''காலையில் நடக்கும் திருமணத்திற்கு வந்து, இருந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள். அதோடு மாலை வரவேற்புக்கும் வந்துவிடுங்கள்.

''சென்னை நகரப் பெரியவர்களை உங்கள் அளவிற்குத் தெரிந்தவர் என் உறவினர் எவரும் இல்லை.

''எனவே, வரவேற்புக்கு முன்னதாகவே வந்துவிடுங்கள். நுழை வாயிலில் நின்று வருபவர்களை உரிய மரியாதையோடு வரவேற்று அமரச் செய்யுங்கள்; உதவிக்கு உங்கள் நண்பன் தி.கோ. சீனிவாசனையும் மற்றவர்களையும் உடன் வைத்துக் கொள்ளுங்கள்.

''அந்த வேளை, வழக்கமாக வருகிற ஜிப்பாவில் வராதீர்கள். அலுவலகம் செல்வதுபோல், மிடுக்கான மேனாட்டு உடையில் வாருங்கள்'' என்று அன்புடன் ஆணையிட்டார்.

அப்பெருமையைக் கேட்டுப் புளகாங்கிதம் ஆனேன். இப்போது நினைத்தாலும் அந் நிகழ்ச்சி இனிக்கிறது.

திருமணத்தன்று அமைச்சர் ஆணைப்படி, குறையேதும் இல்லாதபடி நடந்துகொண்டேன். இரவு உணவருந்திய பிறகே வீடு திரும்பினேன்.

இயக்குநரின் வியப்பு

அந்தத் திருமண வரவேற்புக்குப் பொதுக்கல்வி இயக்குநர் திரு. டி. சதாசிவ ரெட்டியார் வந்தார்.

நான் திருமண வரவேற்பு மண்டப வாயிலில் நின்று அவரை வரவேற்றேன். என்னைப் பார்த்துத் திகைத்துப்போனார்.

'அமைச்சர் குடும்பத்திற்கு இவ்வளவு நெருக்கம் என்பது பற்றி ஏன் எவ்விதக் குறியும் காட்டவில்லை' என்று வியப்போடு கேட்டார். என் புன்முறுவலையே பதிலாகக் கொடுத்தேன்.

அமைச்சர் மீ. பக்தவத்சலனாருக்கு வேண்டியவன் என்று, அப்போதும் பின்னரும் என்னை எவரிடமும் அறிமுகப்படுத்திக் கொண்டதில்லை; அவரிடமோ, எவரிடமோ அதைச் சொல்லி எவ்வித உரிமையும் பெற்றதில்லை: நிலையில் திரியாது அடங்கி ஒழுகினேன்.

டாக்டர் அழகப்பச் செட்டியார் வருகை

அடுத்து ஓர் செய்தி! எனக்குச் சோதனை வந்தது எந்த உருவில்?

என்னை மண்டல ஆய்வாளராக நியமித்து, சென்னை மாநகராட்சி யிலேயே விட்டுவைக்கும் ஆணை வந்த சில நாள்களில் கோட்டையூர் டாக்டர். அழகப்ப செட்டியார் என்னைக் காண வீட்டிற்கு வந்தார். அந்தப் பெரியவர் என்னைத் தேடி வந்தது பற்றி நான் வியப்படைந்தேன்.

அழகப்பர் எதற்காக வந்தார்?

பாடங்கள் எழுதப் பத்தாயிரம் ரூபாய்

''நான் 'விந்தியா பப்ளிகேசன்ஸ்' என்ற நூல் வெளியீட்டு நிறுவனத் தைத் தொடங்கியிருக்கிறேன். அதன் வாயிலாக, முதலில் பாட நூல்களை வெளியிட எண்ணியுள்ளேன்.

''ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரைக்குமான தமிழ்ப் பாட நூல்களை எழுத, துணை இயக்குநர் திரு.டி.பி. சந்தான கிருஷ்ண நாயுடு ஒப்புக் கொண்டுள்ளார். முதல் ஐந்து வகுப்புகளுக்கான தமிழ்ப்பாட நூல்களை உங்கள் பெயரில் வெளியிட விரும்புகிறேன்.

''நேரமிருந்தால் நீங்களே எழுதிக் கொடுங்கள்; வேலை அதிகமாக இருந்தால் உங்களுக்கு நம்பிக்கையான, ஒரு தமிழ் ஆசிரியரை ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். திட்டப்படி அவர் எழுதட்டும். நீங்கள் அவற்றைப் பார்த்து, 'சரி' யென்று சொன்ன பிறகு, வெளியிடுகிறேன்.

''இதற்கு அரசு ஆணை தேவை என்பதும் எனக்குத் தெரியும். நீங்கள் மட்டும் எழுதிக் கொடுங்கள். நான் ஆணைப் பெற்றுத் தருகிறேன்.

''அப்படி எழுதும் ஐந்து நூல்களுக்கும் மொத்தமாக, உங்களுக்கு ரூபாய் பத்து ஆயிரம் கொடுத்து விடுகிறேன். அது போக, உங்களுக்கு உதவியாக எழுதுபவருக்கு, ஐயாயிரம் ரூபாய் தருகிறேன். அரசு ஊழியர் 'ராயல்டி' பெறக்கூடாது என்பதும் தெரியும்.

''மேற்படி தொகைகள் போதாதென்றால் எவ்வளவு வேண்டுமென்று சொல்லக் கூச்சப்படாதீர்கள்.

''இதற்கு இசைவு தந்தால், முறைப்படிக் கடிதம் எழுதுகிறேன்.''

இப்படி, முதன்முறை என்னைக் கண்ட டாக்டர் அழகப்பா கூறினார்.

'அதுவரை நான் எந்த நூலும் எழுதியவன் அல்ல' என்பது மின்னிற்று.

'அப்படியிருக்க என்னைத் தேடி வருவானேன்?' என்று சிந்தித்தேன்.

விலை போக மறுத்தேன்

காரணம் பளிச்சிட்டது. அது என்ன?

'என் நூல்களை வெளியிடும் சாக்கில், பதினெட்டு ஆண்டுகள்போல், மண்டல ஆய்வாளனாகவாகிலும் இயங்க வேண்டிய என்னை விலைக்கு வாங்க முயற்சிக்கிறார்கள்' என்று எனக்குப் பட்டது.

என் பெயரைப் பயன்படுத்தி, மாநகர் ஆட்சிப் பள்ளிகளில் என் நூல்களை வைக்க நெருக்குவார்கள்; பிற ஊர்களிலும் அத்தகைய முயற்சிகள் நடக்கும்.

பெரிய பதவிக்காரன் ஒருவனைத் தன் கையில் வைத்துக் கொள்ளும் முயற்சியாக அது பட்டது.

ஒருவருக்கு, கன்னத்தில் அறைந்தாற்போல் பதில் சொல்வது சரியல்ல.

எனவே, யோசித்துப் பதில் கூறுவதாகச் சொல்லி, மரியாதையாக அனுப்பி வைத்தேன்.

சத்தியமூர்த்தி வந்தார்

அன்று மாலை நான்கு மணிபோல், என் அலுவலக அறைக்குள் ஒங்கி உயர்ந்து இருந்த, ஒருவர் நுழைந்தார். அவரை வரவேற்று அமரச் செய்தேன்.

அவர் யார்?

திரு. சத்தியமூர்த்தி, மாநகராட்சியின் உதவிக் கணக்கு அலுவலர்.

பெரிய இடங்களில் தொடர்புகளும் செல்வாக்கும் மிக்கவர். தாம் வகித்த பதவிக்கு மேற்பட்ட உயர்ந்த செல்வாக்கைப் பெற்றிருந்தவர்.

பலவற்றைச் செய்து முடிக்க வல்லவர். அவர் என்னைத் தேடிவந்ததை எதிர்பார்க்கவில்லை.

திரு. சத்தியமூர்த்தி, சுற்றி வளைத்துப் பேசி, நேரத்தை வீணாக்கவில்லை.

காலையில் அழகப்பச் செட்டியார் நீட்டிய நேசக் கரத்தை ஏற்றுக்கொள்ளும்படி பரிந்துரைக்கவே வந்துள்ளதாகச் சொன்னார்.

செட்டியாரின் விரிந்த தொடர்புகளை எனக்கு நினைவுபடுத்தினார். அவர், பிற்காலத்தில் உங்கள் பதவி உயர்விற்குப் பயன்படக்கூடும்.

''பிடித்தால் புளியம் கிளையைப் பிடி என்பார்கள். அப் புளியம் கிளை, வலிய உங்களைத் தேடி வந்துள்ளது. விட்டு விடாதீர்; பத்தாயிரம் போதாதென்றால் மேலும் கேட்கலாம்; ஐந்தாண்டு காலம் செலவாணியாகப் போகிற பாடநூல்கள் ஆயிற்றே!

''அதோடு, பெரிய மனிதர்களைத் தம்மோடு வைத்திருப்பதில் செட்டியாருக்குத் தனி ஆவல். எனவே கூடுதலாகக் கொடுக்கவும் தயங்கமாட்டார்'' என்று குழைவாகவே கூறினார்.

''யோசித்துச் சொல்லுகிறேன்'' என்று பழைய பதிலைக் கூறினேன்.

''யோசிக்க என்ன இருக்கிறது? மேற்கொள்ளப்போகிற செயலில் ஒளிவு மறைவு இல்லை. இவ்வளவு தொகை என்று அரசுக்கு எழுதி, இசைவுபெறப் போகிற காரியத்தில் கூச்சப்பட ஒன்றுமில்லை'' என்று அவர் வற்புறுத்தினார்.

''எனக்கு வேண்டிய இரண்டொருவருக்காவது, முன்கூட்டியே காதில் போட வேண்டாமா? அதற்கு நேரம் வேண்டும்' என்றேன்.

நொடியில் என் கட்சியில் சேர்ந்தார்.

''நமக்குப் பளிச்சென்று புரிந்தால் கூட, வேண்டியவர்களைக் கலந்துகொள்வது, நல்ல அணுகுமுறை; பெரியவர்கள் நம்மிடம் ஆசையாக இருப்பது நமக்கு ஆதாயம்.

''நீங்கள் நினைக்கிறபடியே, கலந்து பேசுங்கள். இரண்டு மூன்று, நாள்களில் திரும்ப வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டார்.

பக்தவத்சலனாரும் பரிந்துரைத்தார்

மறுநாள் காலை, அமைச்சர் திரு. மீ. பக்தவத்சலனாரிடம் சென்றேன்.

எவராக இருப்பினும், நேரம் கேட்காமலேயே போய் நின்றாலும் அவருடைய பேட்டி கிடைக்கும்.

அவர், என்னை அலுவலக அறைக்குள் அழைத்தார். நான் சென்றேன்.

''நானே உங்களுக்குச் சொல்லி அனுப்பவேண்டும் என்று நினைத்தேன்; நீங்களே வந்து நிற்கிறீர்கள்.

''நேற்றிரவு மாநகராட்சியில் இருக்கும் சத்தியமூர்த்தி என்னிடம் வந்தார். நீங்கள் அழகப்ப செட்டியாருக்கு ஐந்து தமிழ்ப்பாட நூல்கள் எழுத்தித்தர வேண்டுமாம். அதற்குப் பரிந்துரைக்கும்படி என்னை வேண்டிக்கொண்டார். நானும் உங்களிடம் பேசுவதாகச் சொன்னேன். அதற்காகச் சொல்லி அனுப்ப நினைத்தேன்'' என்றார்.

''.....தங்கள் ஆலோசனையைக் கேட்கவே முன்கூட்டியே சொல்லாமல், வந்துவிட்டேன்'' என்றேன்.

''இது முறைப்படியான காரியமே. முன்கூட்டியே அரசுக்கு எழுதி, ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாம். திரு. சந்தானகிருஷ்ண நாயுடு அப்படித்தான் செய்யப்போகிறார். அதைப்போல் நீங்களும் செய்வதில் முறைகேடு ஏதும் இல்லை'' என்றார் அமைச்சர்.

''அய்யா! நாயுடு, ஏற்கெனவே பாடநூல் எழுதியவர். நான் இதுவரை எத்தகைய நூலும் எழுதியது இல்லை. அப்படிப்பட்டவனிடம் நூல் எழுதும்படி வலிய வந்து சொல்வதில் எனக்கு ஓர் அய்யம் எழுகிறது.

''என் நூல்களின் தரத்தைவிட என் பதவி விற்பனைக்குப் பயன்படும். அவர் வெளியிடக்கூடிய பிற நூல்களை விற்றுக்கொள்ளவும் பயன்படும். ஏறத்தாழ பதினெட்டு ஆண்டுகளுக்கு எனக்கு வேண்டியவர் என்று காட்டிக்கொண்டு, பொருள் சேர்க்கலாம் என்று செட்டியார் திட்டமிடு கிறார் எனக் கருதுகிறேன்.

''அதற்கு உடன்பட்டு என் பதவியை விற்பது சட்டத்திற்கு உட்பட்டும் இருக்கலாம்; உயர்ந்த நடைமுறையாக இருக்குமா?'' என்றேன்.

''நீங்கள் புரிந்து கொண்டது சரியே! நீங்கள் எழுத்தாளர் என்பதற்காக உங்களை அழைப்பதாகக் கொள்ளவேண்டாம். பெரிய பதவியில் இருக்கிறீர்கள்; பல்லாண்டுகளுக்கு இருப்பீர்கள்; அதைப் பணமாக்கிக் கொள்ளும் முயற்சியே இது'' என்றார்.

''அப்படியானால், நூல் எழுத மறுத்து விடுகிறேன். தயவு செய்து நீங்கள் தவறாகக் கருதாதீர்கள்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டேன்.

அன்று அலுவலகம் சென்றதும் சத்தியமூர்த்தியோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டேன்; இதமாக என் முடிவைச் சொன்னேன். அதைச் சொல்லுவதற்குமுன் அவருடைய அசாத்தியமான திறமையைப் பாராட்டினேன்.

எனக்கு வேண்டியவர் மீ. பக்தவத்சலம் என்று தெரிந்து வைத்து இருந்ததையும், என்னைவிடச் சுறுசுறுப்பாக இயங்கியதையும் பாராட்டினேன்.

அவருக்கு நிறைவு இல்லை. ''மேலும் சில நாள்கள் சிந்தித்து முடிவு சொல்லும்படி'' ஆலோசனை கூறினார்.

மரியாதைக்காக ''ஆகட்டும்'' என்றேன். முடிவை மாற்றிக் கொள்ள வில்லை.

''உன்னை விற்காதே'' என்றார் புரட்சிக்கவி, பாரதிதாசன்.

தன்னை விற்பதைவிடப் பெரிதும் வெறுக்கத்தக்கது, தனக்குக் கிட்டிய பெரும்பதவியை விற்பது.

வலிய வந்த வாய்ப்பைக் கோட்டை விட்டவன் என்று இப்போதே சிரிக்காதீர்கள். மீண்டும் மீண்டும் சிரிக்க இன்னும் பல வாய்ப்புகள் வரும்.

நான் வீட்டிலிருந்ததைக் கோட்டை விட்டதைச் சொல்லட்டுமா?

1919ஆம் ஆண்டின் பிற்பகுதி, கருவுற்றிருந்த என் மனைவி காந்தம்மா எங்கள் வீட்டிற்கு நான்கு வீடுகளுக்கு அப்பாற் குடியிருந்த, தாயார் வீட்டில் தங்கியிருந்தார்.

என் வீட்டில், நான் மட்டும் தனியே இருந்தேன், எப்போதும்போல், சாப்பாடு மாமியார் வீட்டில்.

பதக்கம் களவு போயிற்று

ஓர் இரவு; வீட்டின் முன் அறையில் உறங்கிக் கொண்டிருந்தேன். பொழுது விடிந்தபிறகு, என் கடைநிலை ஊழியர் வழக்கம்போல் வந்தார்.

வீடு மூடிக்கிடந்ததைக் கண்டார். சாளரத்தின் பக்கம் நின்று கூப்பிட்டார்.

பலமுறை கூப்பிட்ட பிறகு விழித்துக் கொண்டேன். எழுந்து போய்க் கதவைத் திறந்தேன்.

''என்ன அய்யா? அலமாரிகள் ஏன் திறந்து கிடக்கின்றன?'' என்று அவர் கேட்டபோதே, அறையைக் கூர்ந்து கவனித்தேன்.

திறந்த அலமாரிகளிடம் சென்று பார்த்தோம். அவற்றிலிருந்த பொருள்கள் இறைந்து கிடந்தன. ஒவ்வொரு தட்டாக ஆய்ந்தேன்.

சிறப்பான போர் ஆதரவுப் பணிக்காக எனக்குக் கொடுக்கப்பட்ட பதக்கம் களவாடப்பட்டிருந்தது; சொக்காய்கள் சில இருந்த இடத்தில் இல்லை.

பிறகு, வீட்டிற்குள் போய்ப் பார்த்தோம். என்னிடம் விலை மதிப்புள்ள பொருள்கள் இல்லாமையால் வேறெதுவும் களவாடப்பட வில்லை என்று தெரிந்துகொண்டேன்.

ஆனால், வீட்டின் பின் தகவின் தாழ்ப்பாள் திறக்கப்பட்டிருந்தது. திருடர்கள் கொண்டு வந்த இரும்பு ரம்பத்தை அங்கே போட்டுவிட்டுப் போயிருந்தனர்.

அதைக் கண்ட ஊழியர்,

''அய்யா மன்னிக்கணும். நீங்கள் எப்போதும் நாய்த் தூக்கம் தூங்குகிறவர்கள். எப்படித்தான் இவ்வளவு நடந்ததும் தெரியாமல் அயர்ந்து தூங்கிவிட்டீர்கள்! இல்லாவிட்டால் திருடர்கள் என்ன செய்திருப்பார்களோ அய்யா! தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று' என்று ஆறுதல் அடையுங்கள் அய்யா'' என்று தேற்றினார்.

திருவள்ளுவன் பிறந்தான்

11-12-1949 அன்று மாலை இப்போது பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை என்று அழைக்கப்படும் அப்போதைய பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் உள்ள, டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியாரின் 'கென்சிங்டன்' மருத்துவ இல்லத்தில் காந்தம்மா ஒரு மகனைப் பெற்றார்.

பிள்ளைப்பேறு எளிதாக இல்லை. டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அன்று ஊரில் இருந்து அவரே மிகுந்த கவனத்துடன் மருத்துவம் பார்த்ததால், தாயும் சேயும் பிழைத்தனர்.

அவ்வேளை, மாநகராட்சி தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவிற்காக நான் சைதாப்பேட்டைக்குச் சென்றிருந்தேன். 'ஆபத்து இல்லை' என்ற நிலை வந்த பிறகே, நான் வந்து சேர்ந்தேன்.

அந்தக் குழந்தை தனிப்பொலிவோடு இருந்தது. பிள்ளைக்கலி தீர்ந்தது என்று மகிழ்ந்தோம்.

என்ன பெயர் இடுவது.

பல பெயர்கள் அடிபட்டன. திருவள்ளுவர் என்று முடிவு செய்தோம்.

திருமணத்திற்கு அழைத்ததைவிட அநேகரை அழைத்துத் தேனீர் விருந்து அளித்து அப் பெயரைச் சூட்டினோம்.

பேச்சுப் பாணியில் மாற்றம்

டாக்டர் செரியன், மேயராக இருந்தபோது, என் பேச்சுகளைப் பல முறை கேட்டிருக்கிறார்; இரண்டு முறை கேட்டபின், 'பேச்சைப் பத்து மணித்'துளிகளில் முடித்துக் கொண்டால் பிரமாதமாக இருக்கும்'' என்றார்.

அப்புறம் அவர் பதவிக் காலத்தில், விழாக்களில், பத்து மணித்துளிகளுக்குமேல் பேசுவதில்லை.

துணைமேயர் திரு. இராசாபாதர் முதல் கூட்டத்திலேயே என்னைப் புகழ்ந்து பேசினார். அவர் கிட்டத்தட்ட என் வயதினர், எனவே, அவரிடம் சிறிது உரிமை கொண்டாடினேன்.

''அய்யா! இப்படிப் பலரும் கூறுகின்றார்கள். மேலும் சிறப்பாக அமைய எவரும் வழி சொல்லவில்லை'' என்றேன்.

அவர் வழி சொல்ல முன் வந்தார்.

''பேச்சு முழுவதும் ஒரே உரத்த குரலில் பேசுவதற்குப் பதில், சில இடங்களில் உரத்தும் சில இடங்களில் மென்மையாகவும் பேசினால் நன்றாயிருக்கும்'' என்றார் அதைப் பின்பற்றினேன். அவரும் கேட்டு மகிழ்ந்தார்.

40. பாரிசுக்குப் போகிறாயா?

பகல் உணவுத்திட்ட வெள்ளோட்டம்

சென்னை மாநகரில் சைதாப்பேட்டையை ஒட்டி, சாபர்கான் பேட்டை என்று ஏழைகள் வாழும் ஒரு பகுதி இருக்கிறது.

அப் பகுதியில் 1950 இன் தொடக்கத்தில் தொடக்கப்பள்ளி இல்லை. அதேபோல், தியாகராய நகர் பகுதியிலுள்ள கண்ணம்மா பேட்டையிலும் தொடக்கப்பள்ளி இல்லை.

இரு பகுதிகளிலும் முதலில் மூன்றாவது வகுப்புகள் கொண்ட பள்ளிகள் திறக்க, மாநகராட்சியின் ஆணை பெற்றேன். கல்வித் துறையின் ஒப்புதல் பெற்றேன்.

இரு பள்ளிகளுக்கும் சிறப்பான திறப்பு விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அத்தொகுதி மாநகர மன்ற உறுப்பினராக திரு.கே.எம். சுப்ரமணியம் முன்நின்று ஏற்பாடுகளைச் செய்தார்.

சாபர்கான் பேட்டை விழாவிற்கு முன், பலமான சிற்றுண்டி விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். செலவு, அந்தப் பேட்டையில் வாழ்வோருடையது.

அவர்களில் பெரும்பாலோர், அரசு அலுவலகங்களில் அடிப்படை ஊழியர்கள். அவர்கள், சிற்றுண்டிக்கு மட்டும் நூறு ரூபாய்க்குமேல் செலவு செய்தனர்.

தன் கையே தனக்குதவி

அவ்வளவு செலவு செய்துவிட்டு, அப் பள்ளிகளில் சேருவோர் ஏழைகள் ஆனதால், மாநகராட்சி பகல் உணவுத் திட்டத்தை அப் பள்ளிக்கும் ஏற்பாடு செய்யும்படி என்னை ஊரறிய வேண்டிக் கொண்டார்கள்.

'ஆகட்டு'மென்று சொல்ல, மாநகர் ஆட்சிக்கே உரிமை உண்டு; முடியாது என்று சொல்ல முடியவில்லை.

எனது உரையில் ''இன்று பண்டிகை நாள்; எல்லோரும் வீடுகளில் விருந்து உண்டிருக்கிறோம். சிற்றுண்டி மிகை.

''அதற்குச் செலவிட்ட நூறு ரூபாய்களை மிச்சப்படுத்தியிருந்தால், அதைக் கொண்டே, ஆண்டு முழுவதற்கும் அய்ந்து பேர்களுக்கு நீங்களே உணவு அளித்திருக்க முடியும்.

''உங்கள் தொகுதி உறுப்பினர் உதவியை நாடியிருந்தால், அவரும் அவரது நண்பர்களுமாகச் சேர்ந்து பதினைந்து பேர்களின் செலவை-முந்நூறு ரூபாய்களை ஏற்றுக்கொண்டிருப்பார்கள்.

''உங்களுக்கு நீங்களே உதவி செய்துகொள்ள முன் வந்தால், மாநகராட்சி சும்மா இருக்க முடியாது. அது முன்வந்து பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்.

''உங்கள் முன் கை நீளட்டும்; பெரிய நன்கொடைகள் வேண்டாம்; குறைந்தது கால் ரூபாயாகிலும் கூட்டத்திலேயே கொடுத்து விடுங்கள்'' என்றேன்.

உடனே உறுப்பினர் நிதி திரட்டத் தொடங்கிவிட்டார்.

நீண்ட காகிதத்தில் தம் பெயரை எழுதி நூறு ரூபாய் நன்கொடையை எழுதினார்.

மளமளவென்று, மற்றவர்களும் அளித்தனர்; பெரும்பாலோர் அரை ரூபாய் கொடுத்தனர். இருநூறு ரூபாய்களுக்குமேல் அப்போதே சேர்ந்துவிட்டது.

பகல் உணவுக்குழு ஒன்று நிறுவினர்; அதைக்கொண்டு பள்ளி உணவுத் திட்டத்தை நடத்த முடிவு செய்தனர்.

நிதி அளித்து, குழு அமைத்துப்பொறுப்பேற்ற அவர்களில் பெரும் பாலோர், அப்போது சைதாப்பேட்டையில் இருந்த செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் அடிப்படை ஊழியர்கள்.

அந்த ஏழைகள் ஏற்றுக்கொண்ட பொறுப்பைத் திறமையாக, செம்மையாக நடத்தினார்கள்.

ஏறத்தாழ ஈராண்டு காலம், உள்ளூர் நிதி உதவியைக் கொண்டே செயல்படுத்தினார்கள்.

பின்னர், அத் திட்டத்தை மாநகராட்சி ஏற்றுக்கொண்டது.

கண்ணம்மா பேட்டை பின்பற்றியது

கண்ணம்மா பேட்டை பள்ளியின் தொடக்க விழாவின் போதும் பலமான சிற்றுண்டி விருந்தளித்தார்கள்.

சாபர்கான் பேட்டையாளர்களைவிட அதிகம் செலவு செய்தார்கள். வேண்டுகோளும் ஒரே வகையாக இருந்தது.

என் வழிகாட்டலும் பழையபடியே இருந்தது. பலன் அதிகமாக இருந்தது. நானூறு ரூபாய்களுக்குமேல் அவ் விழாவின் போதே கிடைத்தது.

சற்றுத் தாராளமாக நிதி திரண்டபிறகு, பகல் உணவைத் தொடங்கும் படி ஆலோசனை கூறினேன்.

அப்படியே செய்தார்கள். இப் பள்ளியும் உள்ளூர்ச் செலவில், ஈராண்டுக்குமேல் பகல் உணவு அளித்தார்கள்.

பிறகு மாநகராட்சி ஏற்றது.

கர்மவீரர் காமராசர்

இவ்விரு பள்ளிகளிலும் பெற்ற படிப்பினை, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழகம் தழுவிய, மக்களால் தொடங்கி நடத்தப்பட்ட பகல் உணவுத் திட்டத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது.

மக்கள் முயற்சியால் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்பதை என்னைவிட நன்றாகப் புரிந்து கொண்டிருந்த கர்மவீரர் காமராசர், அப்போது முதல் அமைச்சராக விளங்கினார்.

அவர் என்னை முடுக்கிவிட்டார். அது பற்றி விவரங்களை அதற்கு உரிய இடத்தில் காண்போம்.

நான் மாநகராட்சியில் இருக்கையில் சென்னை வண்ணாரப் பேட்டையில் மாநகர் மன்ற உயர்தொடக்கப் பள்ளிக்குப் பெரிய புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

ஓமந்தூரார் நிறைவு பெற்றார்

அதை முதலமைச்சர், ஓமந்தூர் பி. இராமசாமி திறந்து வைத்தார்.

அவ் விழாவின்போது, அப் பெரியவரோடு முதன் முறையாகக் கலந்துரையாடும் வாய்ப்பு கிட்டியது.

கல்வி பற்றிய பல புள்ளி விவரங்களைத் துருவித்துருவிக் கேட்டார். அவருக்கு நிறைவு ஏற்படும் வகையில் பதில் உரைக்க முடிந்தது.

தொடக்கக் கல்வி வளர்க்க ஒரு கோடி

இப்போது பொதுக்கல்வி இயக்ககப் பணி பக்கம் வாருங்கள்.

அரசு ஆணைகள், கடிதங்கள் ஆகியவற்றை உடைத்ததும் ஒரு கோப்பில் கட்டி, இயக்குநர், துணை இயக்குநர்கள் வேறு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஆகியோருக்கு நாள்தோறும் அனுப்பி வைத்தார்கள்.

அநேகர், தங்கள் பிரிவைச் சார்ந்தவற்றை மட்டுமே கவனிப்பார்கள்.

நானோ, எல்லாப் பிரிவுகளுக்கும் உரியனவற்றைக் கவனமாகப் படிப்பேன்.

ஏன் அப்படி?

இன்றைக்கு ஒரு பிரிவின் பொறுப்பில் இருப்பவர், நாளைக்கு வேறொரு பிரிவின் துணை இயக்குநர் ஆகலாம். வாய்த்த போதெல்லாம் எல்லாக் கடிதங்களையும் படித்து, அரசின் அணுகு முறையைத் தெரிந்து கொள்வது, எப்போதோ ஒருபோது, செயல் திறனுக்கு உதவும்.

இப்போக்கு, நான் திட்டமிடாமலே என் மதிப்பை உயர்த்திவிட்டது.

ஒருநாள் தொடக்கக்கல்வி பற்றி கல்விச் செயலரிடமிருந்து இயக்குநர் திரு. டி. சதாசிவ ரெட்டியாருக்கு ஒரு நேர்முகக் கடிதம் வந்தது.

அது, உடனே, அதில் கண்டதுபற்றிப் பதில் அனுப்பக்கோரிற்று.

அவ்வேளை, தொடக்கக்கல்வி துணை இயக்குநர் திரு. பத்மநாப ரெட்டியார் ஒரு விடுப்பில் சென்றிருந்தார். திரும்பி வர ஒரு வாரத்துக்குமேல் பிடிக்கும் என்பது தெரிந்தது.

இயக்குநர் அதுவரை காத்திருக்க விரும்பவில்லை.

அக் கடிதத்தை என்னிடம் காட்டினார்.

அது பற்றிய கோப்பைப் பார்த்துப் பதில் எழுதிக் கொண்டுவர வேண்டினார்.

உரிய கோப்பைப் பார்த்தேன்.

செய்தி என்ன?

இந்திய அரசு, ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாகவும் அதைக் கொண்டு தொடக்கக்கல்வி வளர்ச்சிக்குத் திட்டம் தீட்டி அனுப்பும்படியும் சென்னை மாகாண அரசுக்கு எழுதியது.

அக் கடிதம் இயக்குநருக்கு அனுப்பப்பட்டது.

தொடக்கக்கல்வி துணை இயக்குநரே, இயக்குநரிடமும் காட்டாது பதில் எழுதிவிட்டார். என்ன பதில்?

ஏற்கெனவே, பல ஊர்களில் கட்டாய இலவசக் கல்வியை நடை முறைக்குக் கொண்டு வந்தோம்.

அச் சுமையைத் தாங்க முடியவில்லை.

அவ்வூர்களில் தற்காலிக ஆசிரியர்களை அனுப்ப வேண்டிய நிலை இருக்கிறது.

இந்த ஒரு கோடியைக் கொண்டு அதைத் தடுப்போம்.

உள்ள ஆசிரியர்களை வேலையில் நீடிப்போம். இது திட்டம்.

அதற்காக, ஊர்களின் பெயர்களையும் ஆசிரியர்களின் எண்ணிக் கையையும் உடன் அனுப்பினார்கள்.

வளர்ச்சித் திட்டம் கேட்டால், மாற்றுக் கணக்கு எழுதும் திட்டத்தை அனுப்பினார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், மாகாண அரசு அதை இந்திய அரசுக்கு அனுப்பிவிட்டது.

தில்லி, அதை ஏற்கவில்லை.

வேறு வளர்ச்சித் திட்டம் கேட்டது.

அதை ஆயத்தம் பண்ணுவதில் கால தாமதம் ஏற்பட்டது.

அதனால் இயக்குநருக்கு நேர்முகக் கடிதம் வந்தது.

இந்த விவகாரத்தைக் கோவையாக இயக்குநரிடம் கூறினேன்.

எந்த வளர்ச்சித் திட்டத்திற்கு அந்த ஒரு கோடியைச் செலவு செய்யலாம் என்று இயக்குநர் கேட்டார்.

என் யோசனை

பள்ளியில்லாத ஊர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

அவை அனைத்திலும் பள்ளிகள் திறப்பது, வளர்ச்சித் திட்டத்தில் முக்கிய இடம்பெற வேண்டும்.

அதற்கு ஒரு கோடி போதாது; பல கோடி தேவை.

அதைச் சொல்லி, உடனடியாக, பள்ளிக் கட்டடத்தை இலவசமாகக் கொடுக்கும் ஊர்களில் பள்ளிகள் தொடங்குவோம்; மிச்சம் இருந்தால், அய்ந்தாண்டுக்கு இலவசக் கட்டடம் கொடுக்கும் ஊர்களில் திறப்போம், என்று திட்டமிடலாம் என்றேன்.

அப்படியே ஆயத்தம் செய் என்றார்.

இருபத்து நான்கு மணிகளுக்குள் விவரமான திட்டத்தை இயக்குநரிடம் கொடுத்தேன்; படித்து மகிழ்ந்தார்; அரசுக்கு அனுப்பினார்.

அங்கிருந்து தில்லிக்குச் சென்றது. தில்லி ஒப்புதல் அளித்தது.

சென்னை பவழக்காரத் தெருவில் ஏ.ஆர்.சி. உயர்நிலைப் பள்ளி ஒன்று நடக்கிறது.

பவழக்காரத் தெருவிலோ, அக்கம் பக்கத்திலோ, அய்ந்து ஏக்கர் விளையாட்டுத் திடலுக்கு எங்கே போவது?

அது இல்லாமையால் அப் பள்ளியின் அங்கீகாரம் ஆண்டுக்கு ஆண்டு நீடிக்கப்படும்.

பவழக்காரத் தெருவில் காலி இடம் ஏது?

1951 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மதுரை மண்டல ஆய்வாளர் பல ஆண்டுகளாகியும் விளையாட்டுத் திடல் ஏற்பாடு செய்யாத அப் பள்ளிக்கு மேற்கொண்டு ஒப்புதல் கொடுக்க வேண்டாம் என்று எழுதிவிட்டார்.

உயர்நிலைப் பள்ளி பற்றியதாகையால், அது என் ஆணைக்கு வந்தது. ஆய்வாளர் பரிந்துரையை ஏற்பதாயின் நானே முடிவு செய்திருக்கலாம்.

மதுரை ஆய்வாளர் திரு. சாமு நாயர் இடம் மதிப்புக் கொண்டவன்.

இருப்பினும் எத்தனை கோடி கொடுத்தாலும் பவழக்காரத் தெருவில் அய்ந்து ஏக்கர் திறந்தவெளி கிடைக்காதென்பது எனக்குத்தானே நன்றாகத் தெரியும்.

மண்ணில் இல்லாததைக் கேட்டு, அப்பகுதியினர் கல்வியில் மண் அள்ளிப் போடலாமா?

பொதுநலன் பற்றிய கேள்வி எழும்போது, நாம் பலருக்கு மாறாகப் பேசுகிறோம்? எதற்கு மாறாகப் பேசுகிறோம்!

அது எனக்குத் தீமையை விளைவிக்கும் என்று சிந்திக்கத் தெரியாதவன்.

எனவே, ஆய்வாளர் பரிந்துரைக்கு மாறாக எழுதி அனுப்பினேன்.

சில கிலோ மீட்டர் தூரம் வரை திடல் இல்லாத நிலையில் வேறு இடத்தில் வேறு ஒருவரைக் கொண்டு மாற்றுப்பள்ளி திறக்க இயலாது.

இருக்கிற கல்வி வாய்ப்பையும் கெடுக்க ஆணையிடுவது சரியல்ல. விளையாட்டுத் திடல் இல்லாமையைப் பொருட்படுத்தாது, தொடர்ந்து நடத்த இசையலாம், என்றேன்.

இயக்குநர் முடிவு சொல்லவில்லை. நேரில் பேசும்படி ஆணையிட்டார்.

பேசச் சென்றதும் ''நீ சொல்வது முழுவதும் சரி. தங்கள் பரிந்துரையைப் பொருட்படுத்தவில்லை என்று கல்வி அலுவலர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டு விடக்கூடாது.

''எனவே, நீ நேரில் பார்த்துவிட்டு அறிக்கை கொடுக்கும்படி ஆணையிடப் போகிறேன். அதன் பேரில், ஒப்புதல் அளிக்கிறேன்'' என்றார்.

அதன்படி நானே தணிக்கை செய்தேன். அக்கம்பக்கத்தில் திறந்த வெளி இல்லாமையை அப்பொழுதுதான் தெரிந்து கொண்டது போல் எழுதினேன்.

அதன் அடிப்படையில் பள்ளியை நடத்த ஒப்புதல் அளிக்கலாமென்று பரிந்துரைத்தேன்.

இயக்குநர் சதாசிவ ரெட்டி அதை ஏற்றுக் கொண்டார்.

ஆணையில் என் நேர்முகத் தணிக்கையைப் பீடிகையாகக் குறிப்பிட்டார்.

இப் பள்ளி இன்றும் இயங்குகிறது; கல்வியை வளர்க்கிறது.

அதே போன்று, சூளை இந்து ஒற்றுமைக் கழக உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்டுக்கு ஆண்டு ஒப்புதல் தந்தார்கள்.

1951 இல் அதை முறித்துவிடப் பரிந்துரை வந்தது.

பழைய உத்தியை இயக்குநர் கையாண்டார்.

சேரவேண்டிய பணத்தை உடனே கொடுப்பீர்

தொழிலாளர்கள் நிறைந்த பின் தங்கிய பகுதியில் கல்விப் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறது. அரசு அலுவலர்கள் பலருக்கு எப்படியோ எளிதில் ஆணவப்போக்கு வந்து விடுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலராகவே நேராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், துன்பப்பட்டு மெல்ல மெல்ல வளர்ந்தவர்களைவிட தாராளமாகவும் பணிவோடும் இருக்க வேண்டும். வெளிமாவட்ட மொன்றில் கல்வி அலுவலராக இருந்த ஒருவரிடம் தலையிடும்படி மாவட்டக் கழகத் தலைவர் ஒருவர், அலுவல் பற்றி என்னிடம் வேண்டினார்.

அவர் ஏதாவது சலுகை கேட்டாரா? இல்லை; உதவி கேட்டாரா? இல்லை.

மாவட்ட ஆட்சிக்குழுவிற்கு அவ்வப்போது சேரவேண்டிய உயர்நிலைப் பள்ளி மானியத் தொகைகளில் பாதியை முன்பணமாகக் கொடுக்க வேண்டும் என்பது விதி.

ஆண்டின் இறுதிக்குப்பின், தக்கவரால் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு வந்ததும் மீதியைக் கொடுக்க வேண்டும்.

குறிப்பிட்ட மாவட்ட அலுவலர் அப்படிக் கொடுப்பதில், அதிகமாகக் காலதாமதம் செய்துவிட்டார்.

ஆட்சிக்குழுத் தலைவர் அவரை நேரில் பார்த்துக் கேட்டும் பலன் இல்லை.

ஆசிரியருக்குச் சேரவேண்டிய சம்பளம் நான்கைந்து திங்களாகி விட்டது.

ஆசிரியர்களின் அவலக் குரல் செய்தித் தாள்களில் வெளியாயின.

பிறிதின் நோய் தன்னோயெனக் கருதிய தலைவர், எனக்கு நேர்முகக் கடிதம் எழுதினார்.

அத்தகையர் எனக்குப் பழக்கமில்லாதவர். இருந்தால் என்ன?

பொதுநலன் பற்றிய வேலைகளில் நேரா நேரத்தில் தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

குறிப்பிட்ட அலுவலரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

''கொடுக்க வேண்டியதைச் சட்டெனக் கொடுப்பது எப்போதும் நல்லது. காலதாமதத்தில் நெருக்கடி ஏற்படும் நிலை உருவாகும்போது தனி விரைவு காட்டுங்கள்.

''உங்கள் மாவட்ட ஆட்சிக்குழுவுக்குச் சட்டப்படி எவ்வளவு முன் பணம் கொடுக்க உரிமை இருக்கிறதோ அவ்வளவையும் இரண்டொரு நாள்களில் கொடுத்து விடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று இதமாகவே கூறினேன்.

அவரோ, என் பணி மூப்பையும் பொருட்படுத்தாது-

''அவருக்குச் சேர வேண்டியதைப் பற்றியே அவருக்கு நினைப்பு.

''எனக்கோ, அது பல அலுவல்களில் ஒன்று'' என்று சற்று காரசாரமாகவே பதில் கூறினார்.

நான் ஆத்திரமடையவில்லை; இயக்குநரிடம் புகார் செய்யவில்லை.

எனக்கே உரிமை இருந்ததால், நானே குறிப்பிட்ட அலுவலருக்கு விரிவான கடிதம் எழுதினேன்.

மூன்று நாள்களில் இன்னின்னவற்றைக் கவனித்துவிட்டு உரிய பணத்தைக் கொடுத்துவிடும்படி எழுதினேன். அப்படியே செய்தார்.

அதை முன்னரே செய்திருக்கலாம். அவருடைய போக்கு பொது நலத்துக்குத் தீங்கானது என்று என் நெஞ்சில் ஆழப்பதிந்துவிட்டது.

எனவே, நான் எதிர்பாராத பெரும் நிலைகளுக்கு உயர்ந்தபோதும் அத்தகைய போக்கு மறந்தும் என்னுள் புகாதபடி நடக்க முடிந்தது.

சேரவேண்டிய பணத்தை அவரவருக்கு அனுப்புவதில் காலதாமதம் ஏற்படாதபடி பார்த்துக்கொண்டேன்.

பாரிசுக்குப் போகிறாயா?

இயக்குநர் சதாசிவ ரெட்டி, இயக்க வளைவுக்குள் இருந்த பங்களாவில் குடியிருந்தார்.

தள்ளமுடியாத ஆலோசனை ஒன்று பெற, அவரைத் தேடிப் போனேன். பல்கலைக்கழகக் கூட்டங்களுக்குச் செல்லவேண்டி இருப்பதால் அவரைப் பகல் உணவு வேளையின் போதே காண முடியும் என்று தெரிந்தது.

அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அங்குப் போய்ச் சேர்ந்தேன்.

உண்டு முடிந்ததும் வந்ததைப் பற்றிச் சொன்னேன்.

அவரது வழிகாட்டல் கிடைத்தது. விடைபெற்றுக்கொள்ள எழுந்தேன்.

''நெ.து.சு. எப்போது பாரிஸ் செல்லப் போகிறீர்கள்'' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன கேட்கிறீர்கள்?'' என்றேன்.

திரும்பச் சொன்னார் திகைத்துப் போனேன்.

என் உடையில் ஏதாவது குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டு விட்டதோ என்று மேலும் கீழும் பார்த்துக்கொண்டேன். ஒன்றும் விளங்கவில்லை.

இயக்குநரே நடந்ததைக் கூறினார்.

என்ன நடந்தது?

1951 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பாரிஸ் நகரை அடுத்த 'சேவ்' என்ற ஊரில், 'யூனெஸ்கோ' சார்பில் அனைத்துலகக் கருத்தரங்கு ஒன்று நடக்கிறது.

அது, 'வரலாற்றுப் பாடத்தை உலகில் நல்லெண்ணத்தை வளர்க்கும் பாடமாகக் கற்பிப்பது எப்படி? என்று ஆயும்.

மூன்று வாரங்கள் நடக்கும் அக் கருத்தரங்கிற்கு இந்தியாவில் இருந்து இருவரை அனுப்பி வையுங்கள்.

அவர்கள் திரும்பி வந்தபின், சில ஆண்டுகளுக்காகிலும் வரலாறு கற்பிக்கவோ, வரலாற்றுப் பாடத் திட்டங்களை வகுக்கவோ வாய்ப்புப் பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

இருவரில் ஒருவர் பேராசிரியராகவும், ஒருவர் கல்வித்துறை நிர்வாகியாகவும் இருத்தல் நல்லது.

இப்படி யூனெஸ்கோ இந்திய அரசுக்கு எழுதிற்று.

இந்திய அரசு, சென்னை மாகாண அரசுக்குச் சுற்றறிக்கை அனுப்பியது.

நம் மாகாண அரசு, இயக்ககத்தைக் கேட்டு எழுதியது.

அக் கருத்தரங்கிற்குப் போகக்கூடியவர் எவரும் இல்லை என்பது கல்வித்துறையின் பதில்.

அப் பதிலை அப்படியே அனுப்பிவிடலாம் என்ற குறிப்போடு, அக் கோப்பு, கல்வி அமைச்சருக்குச் சென்றது. கல்வி அமைச்சர் மாண்புமிகு மாதவமேனன் அதை ஏற்கவில்லை.

''அனைத்திந்தியப் போட்டியில் நாம் பரிந்துரைக்கும் ஆளுக்கு இடம் கிடைக்குமா என்பது தெரியாது.

''ஆயினும், இத்தகைய வாய்ப்புகள் வரும்போதெல்லாம் நம்மிடம் இருப்பவர்களில் அதிகத் தகுதி படைத்தவர் பெயரை அனுப்பத் தவறக்கூடாது'' என்று ஆணையிட்டார்.

அமைச்சர் எவரை மனத்தில் வைத்துக்கொண்டு அப்படி ஆணையிட்டார்?

இயக்குநர், அமைச்சரை நேரிற் கண்டு கேட்டார். அவர் மனத்தில் எவரும் இல்லை என்பது தெரிந்தது.

இயக்குநர் என்ன செய்தார்?

பதிவு பெற்ற அலுவலர்களின் ஊழியப்பட்டியலைப் புரட்டிப் பார்த்தார்.

துணை இயக்குநராக இருந்த நான், அடுத்துப் பதினாறு ஆண்டுகள் பணிபுரிவேன்; நான் ஒருவன்தான் இந்திய வரலாற்றைத் துணைப்பாடமாக எடுத்துப் பட்டம் பெற்றவன்.

இத் தகவல்கள் கிடைத்ததோடு, அந்த அளவு தகுதி உள்ளவர்கள் எவரும் இல்லை என்பது புலனாயிற்று.

எனவே, இயக்குநர் என்னைப் பாரிஸ் கருத்தரங்கிற்கு அனுப்பலாம் என்று பரிந்துரைத்தார்.

அதை ஏற்று, தில்லிக்கு அனுப்பிவிட்டது மாகாண அரசு.

மேற்படி செய்தியை உரிய துணை இயக்குநர் திரு. கே. கிருஷ்ண மேனன் எனக்குத் தெரிவிப்பாரென்று இயக்குநர் நினைத்தார்.

மேனனோ, இயக்குநரே சொல்லட்டும் என்று வாய்மூடி இருந்தார்.

இரகசியங்கள் காக்கப்பட்ட காலம் ஆகையால், அடுத்த நிலை ஊழியர்கள் எவரும் என்னிடம் கூறவில்லை.

இயக்குநர் மேற்கூறிய செய்தியைக் கூறினார். ''அப்படி நீ பாரிஸிற்குப் போவதானால், அங்கிருந்து இங்கிலாந்து சென்று நான்கைந்து திங்கள் தங்கி, அங்குள்ள பல்வகை - பல மட்ட கல்விக்

கூடங்களைப் பார்த்து வரலாம் என்று அரசுக்குப் பரிந்துரைக்க எண்ணியுள்ளேன்.

''அதற்கு ஆயத்தமாயிரு!

''எதற்கும் தில்லியின் முடிவு வரட்டும்'' என்று கூறினார். மகிழ்வதா? கவலைப்படுவதா?

41. கப்பல் பயணம்

காந்தத்திற்கு அதிர்ச்சி

வெளிநாடுகளுக்குச் செல்ல நேரிடலாம் என்ற செய்தியோடு வீட்டுக்குத் திரும்பினேன்.

உள்ளே நுழைந்ததும் அச் செய்தியை என் மனைவியிடம் கூறினேன்.

''உங்களைப் போன்ற சாது-இங்கும் அங்கும் அலைந்து பழகாத ஒருவர்-எப்படி நீண்ட பயணத்தைச் சமாளிக்கப் போகிறீர்கள்?'' இது அவருடைய கவலை தோய்ந்த கேள்வி.

''ஏதோ! கைமேல் வந்துவிட்டதைப்போல் கவலைப்படாதே. செல்வாக்கு உடைய எவராவது அதைத் தட்டிக் கொண்டு போகலாம். அப்படி விலகட்டுமே இந்த ஆபத்து'' என்று ஆறுதல் கூறிவிட்டு அமைதி கொண்டேன்; வெளியில் பேச்சு மூச்சு விடவில்லை.

பாரிசுக்குப் போக ஆணை

ஒருநாள் தில்லியில் இருந்து செய்தி வந்தது. பஞ்சாப் மாநிலக் கல்லூரி ஒன்றில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிந்த திரு. குரோவா என்பவரையும் என்னையும் பாரிஸ் மாநாட்டிற்கு அனுப்ப முடிவு செய்திருப்பதாக அது சொல்லிற்று.

சென்னைக் கோட்டையிலிருந்து அது தொலைபேசி வழியாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

என்னைக் கவலை கௌவிற்று.

இயக்குநர் சதாசிவ ரெட்டி சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்.

பிரிட்டனுக்குப் போய் வா

பாரிஸ் மாநாட்டிற்குப்பின் பிரிட்டனில் பலநிலைக் கல்வி நிலையங்களைப் பார்த்துவர அனுப்பும்படி அன்றைய சென்னை மாநில அரசுக்கு எழுதினார்.

அதேபோது, சென்னையில் இருந்த 'பிரிட்டிஷ் கௌன்சில்' நிறுவனத்தோடு தொடர்பு கொண்டார்.

நான்கு திங்களுக்கும் குறையாது என்னுடைய பிரிட்டன் பயணத்திற்குத் திட்டம் போட்டுத் தரும்படி அவர்களைக் கோரினார்.

என்னுடைய பயணச் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று துணிந்து தெரிவித்தார்.

அம் முயற்சிகள் நன்றாகப் பலித்தன.

புதிய கார் வாங்கிக்கொள்

இதற்கிடையில் இயக்குநர் என்னை அழைத்தார்.

''நெ.து.சு. உன் கார் பழையது; சில ஆண்டுகள் வரையில் தான் தொல்லை கொடுக்காது ஓடும். போகிறது போகிறாய் இங்கிலாந்திலிருந்தே புதிய கார் ஒன்று வாங்கிக்கொண்டு வந்து விடு'' என்று சொன்னார்.

இடி வீழ்ந்தாற்போல் இருந்தது.

''புதிய காருக்குப் பணம் இல்லை அய்யா!'' என்றேன்.

திரு. ரெட்டியார், என் எதிரில், சென்னையில் உள்ள 'ஆஸ்டின் கார்' ஏஜென்சியோடு தொலைபேசியில் பேசி,

''ஆஸ்டின் 40 இன் அப்போதைய இலண்டன் விலை; அங்கிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்ய வரி; அதில் தள்ளுபடி'' முதலியவற்றைக் கேட்டுக் கொண்டார்; விரைவாகக் கணக்குப் போட்டார். இறுதியிலே,

''கார் கம்பெனியாரை வரச்சொல்லுகிறேன்; நீ இலண்டனுக்குப் போனதும் காரை உன்னிடம் கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்கிறேன்.

''அவர்களே, காரோட்டியை ஏற்பாடு செய்து, அய்ந்தாறு கல் ஓடவைத்து, திரும்பவும் காரை வாங்கி அவர்களே வைத்துக் கொள்ளுவார்கள்.

''நீ வரும்போது கப்பலேற்றி அனுப்பி விடுவார்கள். அங்குப் பயன்படுத்தப்பட்டது என்பதால், இறக்குமதி வரியில் சலுகை உண்டு.

''பதினோராயிரம் ரூபாய் கொடுத்துப் புதுக் கார் வாங்கி விட்டால், ஓய்வு பெறும்வரை அது பயன்படும், இங்கிலாந்தில் விற்கும் கார்கள் அவ்வளவு உறுதியானவை'' என்றார்.

முடிவு சொல்ல ஒருநாள் தவணை கேட்டேன்.

அன்று மாலை, குடும்பத்தோடு கலந்து ஆலோசித்தேன்.

இயக்குநர் வழிகாட்டல் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தோம்.

அடுத்த நாள் அலுவலகம் சென்றதும் இயக்குநரைக் கண்டு கார் வாங்க இசைவதாகக் கூறினேன்.

உள்ளூர் விற்பனையாளரை அழைத்தார். உரிய கடிதங்களைப் பார்த்து, என்னைக் கையெழுத்திடச் சொன்னார்.

பிறகு?

கார் வாங்க, முன் பணம் தரும்படி அரசைக் கோரும் என் கடிதத்தைப் பெற்று அதன்மேல் பரிந்துரைத்தார்.

திரு. ரெட்டியாருக்கு இருந்த நன்மதிப்பால் அதுவும் பலித்தது.

அவதூறு பிறந்தது

இப்படியிருக்கையில் இரண்டொரு நாள்களில், நான், பாரிஸ் மாநாட்டிற்குப் போகும் செய்தி, நாளிதழ்களில் வெளியாயிற்று; இரண்டொரு வரிகளில் அந்தச் செய்தி அடங்கிவிட்டது. சிறு எழுத்துகளில் வெளிவந்த அதைப் பாராதோரே அதிகம்.

இருந்தால் என்ன? குண்டுமணியைக் குன்றாகக் காட்டி, அதோடு எதை எதையோ இட்டுக் கட்டி, வகை வகையான பகைகளை வளர்ப்பதற்கென்றே நம்மில் சிலர் வாழ்கிறார்கள்.

அவர்களில் ஒருவர், எவருக்கோ கொடுத்த தேனீர் விருந்தில், மேற்படி செய்தியை இழுத்து வைத்தாராம்.

''அமைச்சர் பக்தவத்சலம் சாதிப்பற்றின் காரணமாக நெ.து.சு.வை பாரிசில் நடைபெறும் உலகக் கல்வி மாநாட்டுக்கு அனுப்பச் செய்துவிட்டார்.

''இவ்வளவு பெரிய மாநிலத்தில், நெ.து.சு. ஒருவர் மட்டுமா கிடைத்தார்?''

''நாமும் அத்தகைய சாதி உணர்வோடு செயல்படவேண்டும். நம் சாதியாரையே எல்லாவற்றிற்கும் பரிந்துரைக்கவேண்டும்'' என்று சாதி வெறி ஊட்டிப் பேசினாராம்.

இவர் எம்.ஏ. படித்தவர். கைகட்டிப் பணிபுரிய விரும்பாததால், தலைமை மோகத்தால் பொது வாழ்க்கைக்கு வந்தவர். மாநகராட்சியில் நான் அலுவல் பார்த்தபோது, என்னோடு மிகவும் நெருக்கமாக இருந்தவர்.

என்னைப் பற்றிக் குறைபடக் காரணம் இல்லாதவர். இவர் இப்படிப் பேசியது மிகமிகத் தவறே.

வெறியூட்டும் இப் பேச்சு, கொட்டை எழுத்தில் சில நாளிதழ்களில் வெளியாயிற்று. அது எனக்குத் தெரியாது.

திரு. பக்தவத்சலம் நான் பாரிஸ் போகும் செய்தியை அப் பேச்சிலிருந்தே தெரிந்து கொண்டார்.

உடனே என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். அச் செய்தி பற்றிக் கேட்டார்.

அது உருவான வகையை விரிவாக அவரிடம் கூறினேன்.

''உங்களுக்குத் தானாக வந்த வாய்ப்புக்கு எனக்குப் பழி. கடைக்கட்டும்; நன்றாகத் திரும்பி வாருங்கள்'' என்று வாழ்த்தி அனுப்பினார்.

சாதிச்சாயம் பூசிப்பூசி, தன்னையும் சிதைத்துக்கொண்டு, தன் இன மக்களையும் சிதைத்துக் கொள்ளும் பொது வாழ்க்கைத் தமிழர்கள் பலரைப் பல ஆண்டுகளாகக் கண்டு வருகிறேன்.

அது ஒருவரையும் திருத்தாது என்பதால் என் வேதனை மறைந்து விடுமா?

துணைவியோடு செல்க

நான் அய்ந்தாறு திங்கள் வெளிநாட்டுப் பயணத்தில் இருப்பேன் என்று கேள்விப்பட்ட பல நண்பர்கள் என்னைத் தேடி வந்து ''காந்தம்மாவையும் உடன் இட்டுக்கொண்டு போங்கள்'' என்று அன்புடன் பரிந்துரைத்தார்கள்.

முதலில் அதைக் கேட்டபோது, எல்லோரும் தயக்கங்கொண்டோம்.

என் மாமியாரும் மாமனாரும் ஒன்றரை வயதுக் குழந்தையான திருவள்ளுவனைப் பார்த்துக் கொள்வதாகவும் தயங்காமல் போய் வரும்படியும் காந்தத்திற்கு ஊக்கமூட்டினார்கள். அதையே குஞ்சிதம், குருசாமி இருவரும் ஆமோதித்தார்கள்.

வெளிநாடு போய் வரலாம் என்ற எண்ணம் முளைத்தபோது பணத்திற்கு என்ன செய்வதென்ற ஏக்கம் பிறந்தது.

கடன் தரப் பெரியார் முன் வந்தார்

இரண்டொரு நாள்களில் பெரியார் சென்னைக்கு வந்தார்.

காந்தம்மாவின் பயணச் செலவிற்கான நாலாயிரம் ரூபாய்களைத் தான் கடனாகத் தருவதாகக் குத்தூசி குருசாமியிடம் சொல்லி அனுப்பினார்.

பெரியாரிடம் கடன் வாங்க விரும்பவில்லை; பணிவாக மறுத்து விட்டேன்.

மணஞ்சேரி கந்தசாமி முதலியார் உதவி

என்னிடம் எந்த உதவியும் அதுவரை பெறாத மணஞ்சேரி கந்தசாமி முதலியார் வந்து என்னைக் கண்டு, அந்தச் செய்தி பற்றிய மகிழ்ச்சியைத் தெரிவித்தார். வேண்டிய உதவி செய்ய முன் வந்தார்.

என் காரை உடனே விற்றுத் தரும்படி கோரினேன்.

''அவசரப்பட்டுக் குறைந்த விலைக்கு விற்க வேண்டாம். நீங்கள் இலண்டனுக்குப் புறப்பட்ட மறுநாள், நான் வந்து காரை ஓட்டிக் கொண்டு போகிறேன். வருவதற்குள் விற்று வைக்கிறேன்'' என்றார்.

பயணத்திற்கு வேண்டிய தொகையை முன் பணமாகவே கொண்டுவந்து கொடுத்தார்.

எங்களுக்குத் தெம்பு பிறந்தது.

என் மனைவியும் நானும் சென்றுவர ஏற்பாடுகள் செய்தோம்.

கொழும்பு சென்றேன்

சென்னையிலிருந்து விமானம் வழியாக கொழும்பு சென்று, அங்கே ஆஸ்திரேலியாவிலிருந்து இலண்டன் செல்லும் கப்பலேறுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டோம்.

துணை இயக்குநர் நிலையில் இருப்பவர்கள் அக் காலத்தில் கப்பலில் செல்வதற்கு மட்டுமே அரசு அனுமதித்தது.

கொழும்பில் இருந்து இலண்டனுக்குக் கப்பல் கட்டணம் எவ்வளவு?

இரு படுக்கையுள்ள தனி அறைக்கு நூற்றுப் பன்னி ரெண்டு பவுன்கள்; அப்போது பவுனுக்குப் பதின்மூன்றரை ரூபாய் மதிப்பு.

மேற்படி கட்டணத்தில், இருவேளை உணவு, காலைச் சிற்றுண்டி, மாலைத் தேனீர் இவ்வளவும் அடங்கும்.

கப்பலேறும் கொழும்பிற்கு, மூன்று நாள் முன்னர்ப் போக வேண்டியிருந்தது.

அங்கே மதராஸ் பாளையகாட் கம்பெனியில் தங்குவதற்கு வாலாஜாபாத் வா.தி. மாசிலாமணி முதலியார் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

மதராஸ் பாளையகாட் நிறுவனத்தார், எங்கள் இருவரையும் தங்களோடு தங்க வைத்து, நகரைச் சுற்றிக் காட்டி, இமைபோல் காத்து, துறைமுகத்திற்கு அழைத்துப்போய், அன்புடன் வழி அனுப்பி வைத்தார்கள்.

பத்து நாள்களுக்கு வரக்கூடிய அளவு சீடை செய்து கொடுத்தனுப்பினார்கள்.

புக்கர் வாஷிங்டன் – இந்தியப் பதிப்பு அப்பா வா.தி. மாசிலாமணி முதலியார்

இவ்வளவும் வா. தி. மாசிலாமணி முதலியார்மேல் கொண்ட பற்றால் எங்களுக்குக் கிடைத்தது.

'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு,

எல்லார்க்கும் பெய்யும் மழை'

அந்த நல்லார் வா. தி. மாசிலாமணி முதலியார் பற்றிச் சொல்ல வேண்டும்.

அவர் பயிற்சி பெற்ற ஆசிரியர்; வாலாஜாபாத்தில் எட்டு வகுப்புகள் கொண்ட இந்துமத பாடசாலையை நிறுவி நிர்வகித்து வந்தார்.

வள்ளலார் மாணவர் இல்லம் ஒன்றையும் தொடங்கி, தாய் தந்தையரை இழந்த நூற்றுக்கணக்கான சிறுவர்களுக்கு 'அப்பா'வாக விளங்கி, கல்வி கற்பித்து, ஒழுக்க நெறியில் பழக்கி, ஆயிரக்கணக்கானவர்களை ஆளாக்கியவர்.

'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அக் கல்வி நிலையத்தையும் அதன் சிறந்த பணிகளையும் அங்கு நடைபெறும் கைத்திறப் பயிற்சிகளையும் அருமையான உடலோம்பலையும் நாள் முழுதும் கவனித்துப் பார்த்துவிட்டு,

'பாலாற்றங் கரையிலே' என்ற தலைப்பில் அருமையான கட்டுரை ஒன்றை விகடனில் எழுதிப் பாராட்டினார்.

அதன் பின்னர், அது பல சிந்தனையாளருக்குப் புனிதப் பயணத்தலமாக மாறிவிட்டது என்பது மிகையல்ல.

இந் நூற்றாண்டின் இருபதுகளிலிருந்து தமிழ்நாட்டுச் சமய குருமார்கள், அரசியல் தலைவர்கள், தமிழ்மொழி வல்லுநர்கள், சமூக

சீர்திருத்தத் தலைவர்கள் ஆகிய அனைவருக்கும் வேண்டியவராக வாழ்ந்த அறிஞர் 'அப்பா' வா. தி. மாசிலாமணி முதலியார்,-

சைவ நெறியில் ஆழ்ந்த பற்றுடையவர்; எளிமைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர்; பண்புக்கு உறைவிடம்; தொண்டிற்குத் தும்பி.

1929 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஈரோட்டில் தந்தை பெரியார் ருஞ்சிதம் குருசாமி திருமணத்தை எவ்விதச் சடங்கும் இன்றி நடத்தி வைத்தார். அதற்கான அழைப்பைப் பெற்ற 'அப்பா' அங்குச் சென்றார்.

வைதீகக் கோலத்தோடு உடனிருந்து விருந்தோம்பும் ஏற்பாடுகளை மிகுந்த உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டார்.

அப்போது எடுக்கப்பட்ட புகைப் படத்தில், தரையில் நடுவில் மகிழ்ச்சி பொங்க அப்பா மாசிலாமணி முதலியார் அமர்ந்து இருப்பதைக் காணலாம்.

அவர், வேண்டியவர்கள் வீட்டுத் திருமணங்களில் தாமே மகிழ்ச்சி யுடன் உதவிப்பணி புரிவதை அய்ம்பது ஆண்டு காலம் தமிழ்நாடு கண்டது.

திருமணங்களில் இந்துமத பாடசாலையின் சார்பில் வாழ்த்து மடல் அளிக்கத் தவற மாட்டார்.

புக்கர் வாஷிங்டன்

புத்தியைத் தீட்டுவதோடு செயல் திறனையும் வளர்ப்பது கல்வியின் குறி.

எட்டு வயதிற்குப்பின், அடிமை நிலையிலிருந்து விடுதலை பெற்ற அமெரிக்கச் சிறுவன் புக்கர் வாஷிங்டன், அதற்குப்பின் பகுதி நேரம் கல்வி கற்று, சில ஆண்டுகளில் பள்ளி இறுதி நிலைக்குச் சென்று பட்டமும் பெற்றார்.

தமது நீக்ரோ மக்களுக்காகப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார்.

'பகுதி நேரம் படிப்பு, பகுதி நேரம் வேலை' என்ற திட்டத்தில் இயக்கி அதை வளர்த்தார்.

டஸ்கிகி கழகம் என்ற பெயரில் இன்று அது அமெரிக்காவில் செயல்படுகிறது. அக் கல்வி நிலையம் அமெரிக்காவில் புகழ்பெற்ற கல்வி நிலையமாகும்.

புக்கரின் கல்வி முறையைத் தமிழகத்திற்கு அறிமுகப் படுத்திய நூல், டாக்டர் வ.வெ.சு. அய்யர் எழுதிய 'மகான் புக்கர்' வாஷிங்டன் என்ற நூல்.

அப் பயிற்சி முறையால் ஈர்க்கப்பட்ட வா.தி. மாசிலாமணி, பாலாற்றங் கரையில், அதே பாணியில் செம்மையான கல்வி நிலையத்தை நடத்தி வந்தார்.

புக்கரை அமெரிக்கர் பயன்படுத்திக் கொண்ட அளவு, மாசிலா மணியை நாம் பயன்படுத்திக் கொண்டோம் என்று சொல்வதற்கில்லை.

எனினும் நமது வழக்கத்திற்கு அதிகமான ஆதரவு கொடுத்தோம். அந்தக் கல்வி நிலையம் தமிழர்களை வளர்க்கத் தவறவில்லை.

மேல் விழுந்து உதவும் பண்பினரான வா.தி. மாசிலாமணி முதலியாரின் இனிய நண்பர்கள் கொழும்பிலிருந்து வழியனுப்ப, நாங்கள் கப்பல் ஏறும்போது காற்றும் மழையும் அமளிபண்ணின.

புயலில் புறப்பட்டோம்

''இது புயலின் அறிகுறி: இச் சூழலில் போகலாமா? முடிந்தால் இரண்டு நாள்கள் கழித்து வேறு கப்பல் பிடித்துப் போவதுதானே?'' என்று பலரும் கேட்டுக் கொண்டனர்.

''ஆனது ஆகட்டுமென்று துணிந்து புறப்பட்டோம்'' இரண்டு நாள்கள் கடல் கொந்தளிப்பாக இருந்தது; பெரிதும் துன்பப்பட்டோம். அப்புறம் பயணம் மகிழ்ச்சியாகவே இருந்தது.

வழியில் போர்ட்செய்ட், ஏதென்சு, மார்ஸெல்ஸ் ஆகிய முன்று இடங்களில் கப்பல் தங்கிற்று.

அந்தப் பயணம் மகிழ்ச்சிகரமாக இருந்ததோடு, ஓய்வாகவும் இருந்தது; கடற்காற்று உடல் நலத்திற்கு உகந்ததாக இருந்தது.

பயணத்தின் இறுதியில் இரண்டு நாள்கள், கடல் கொந்தளிப்பைச் சமாளிக்க நேர்ந்தது; இருப்பினும் நோய்வாய்ப்படவில்லை.

கப்பல் பயணத்தில் கண்ட சுகத்தால், இரண்டொரு ஆண்டுக்கு ஒருமுறையாகிலும் கப்பல் பயணம் மேற்கொள்ளக் கோட்டை கட்டினோம். அது கனவாகவே நின்றுவிட்டது.

இலண்டன் சேர்ந்தோம்

கப்பல் தேம்ஸ் ஆற்றங் கரையில், டில்பா துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சியது. பயணிகள் வரிசைப்படி இறங்க ஒழுங்கு படுத்தி வைத்து இருந்தார்கள்; கூச்சலோ, குழப்பமோ சிறிதும் இன்றி, ஒழுங்காக இறங்கி, சுங்கச் சோதனைக்குச் சென்றோம்.

அலுவலர்களின் சுறுசுறுப்பு மிகவும் மெச்சத்தக்கது. அத்தனைச் சூட்டுகளையும் சோதிக்க வேண்டிய பெட்டிகளையும் சோதித்து, 1600 பேர்களையும் இரண்டு மணி நேரத்தில் இரயிலேற்றி இலண்டன் நகரத்திற்கு அனுப்பிவிட்டார்கள்.

இலண்டனில் இந்தியத் தூதரகத்தில் திருமதி. கலியாணசுந்தர் சீதாராமன் என்ற தமிழர் ஒருவர் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

நாங்கள் வரும் கப்பலைப் பற்றிய தகவலை அரசு அலுவலகம் வழியாக அவருக்கு முன் கூட்டியே எழுதியிருந்தோம்.

அவர் இலண்டனில் சம்பந்தப்பட்ட புகைவண்டி நிலையத்திற்கு வந்து எங்களை அழைத்துக் கொண்டு போனார்.

'இந்திய மாணவர்கள் இல்லத்தில்' நான்கு நாள்களுக்கு மட்டும் தங்க ஏற்பாடு செய்து வைத்தார்.

அதற்குமேல், ஓட்டல் ஒன்றிற்குப் போகத் திட்டம்.

42. பாரிசுக்குப் போனோம்

கட்டிய பணத்துக்கு ரசீது இல்லை

பதினைந்து நாள்கள் ஆடும் கப்பலில் உறங்கிய நாங்கள், பதினாறாம் நாள், உறுதியான இலண்டன் பெருநகரில் அயர்ந்து உறங்கினோம்.

அடுத்த நாள், காலைக்கடன்களை முடித்து, சிற்றுண்டி அருந்தினோம்.

அடுத்து, இந்தியத் தூதரகத்திற்குச் சென்று உரிய அலுவலரைக் கண்டோம்.

எங்களைப் பற்றிய கோப்பை எடுத்துப் படித்தார். அரசின் ஆணைப்படி, எனக்குப் பதினைந்து நாள்களுக்கொரு முறை பயணப்படி கொடுக்கப்படும்.

அதை நேரில் வந்து பெற்றுக்கொள்ளச் சொன்னார். முதல் தவணைப் பணம் சில மணித்துளிகளில் என்னிடம் கொடுக்கப்பட்டது.

அதைக் கொடுக்கும்போது,

''இந் நாட்டில் திருட்டுப்பயம் இல்லை. எனினும் பணப் பையிலிருந்து வீழ்ந்துவிடக்கூடும்.

ஆதலால், உடனே வங்கியில் போட்டு விடுங்கள்; செலவைப் பெரிதும் காசோலையாகவே கொடுக்கலாம்'' என்றார்.

இதே அறிவுரையைச் சென்னையில், இலாயிட்ஸ் வங்கியில் கணக்கைத் தொடங்கினேன்.

சிறுதொகையை மட்டும் இங்கு வைத்துக்கொண்டு, குறிப்பிட்ட சில ஆயிரங்களை, இலண்டன் இலாயிட்ஸ் வங்கியின் கிளை ஒன்றிற்கு மாற்றச் சொன்னேன்.

அதற்கான ஏற்பாடுகளை வங்கியார் செய்து இருந்தார்கள்.

இந்தியத் தூதரகத்திற்கு அருகில் உள்ள கிளை ஒன்றில் என் பெயரில், வங்கிக் கணக்கு, நான் போய்ச் சேருமுன் தொடங்கப்பட்டு இருந்தது.

அத் தகவல், நம் தூதரகத்தில் எனக்காகக் காத்திருந்தது.

அதன்படி, அவ்வங்கிக்குச் சென்றேன். இலண்டனில், முதல் முறையாகப் பெற்ற பணத்தில் பெரும் பகுதியை அதில் கட்டினேன்.

பணம் கட்டுவதற்கான சீட்டை நிரப்பி பணத்தோடு கொடுத்தேன்.

கணக்கர், அதைச் சரிபார்த்துவிட்டுப், பதிவேட்டில் குறித்துக் கொண்டார்.

என்னைப் பார்த்து, ''பணம் சரியாக இருக்கிறது, அய்யா!'' என்றார். நான் அசையவில்லை.

மீண்டும் ''சரியாக இருக்கிறதய்யா'' என்றார். அப்போது, நான், ''பற்றுச் சீட்டு எங்கே?'' என்றேன்.

அவர், எரிச்சல் கொள்ளவில்லை. மெய்யான புன்முறுவலோடு,

''இந்த நாட்டில், வங்கியில் பணம் போடும்போது, வாடிக்கைக் காரருக்குப் பற்றுச் சீட்டு கொடுக்கும் வழக்கம் இல்லை, அய்யா!'' என்றார்.

அப்போது, நான் எனது உயர்கல்வியில் படித்தது நினைவிற்கு வந்தது.

அது என்ன?

பிரிட்டனில் வங்கியில் பணம்போடுவோர், பற்றுச்சீட்டுப் பெறுவதில்லை.

ஆனால் எவருடைய நிதியிலும் துண்டு விழுந்ததில்லை என்பதாகும்.

அது நினைவிற்கு வரவும், வேறு வழியின்றி அங்கிருந்து விலகிச் சென்றேன்.

அடுத்த சில நாள்கள்வரை, நான் காண நேர்ந்த எல்லா இந்தியர்களிடமும் இந் நிகழ்ச்சியைக் கூறி, ''பணம் பத்திரமாக இருக்குமா?'' என்று விசாரித்துக் கொண்டே இருந்தேன்.

''ஒரு காசும் குறையாது'' என்றே எல்லோரும் தைரியம் கூறினர். அய்ந்து திங்களில் நான் கண்டதும் அதுவே.

பி.பி.சி. மாத்ருபூதம்

இரண்டாம் நாள் மாலை நாங்கள் தங்கியிருந்த இல்லத்திற்குத் தமிழர் ஒருவர் வந்தார்.

மேனாட்டு உடையில் இருந்த அவர் எங்களை அணுகி, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''என் பெயர் மாத்ருபூதம். நான் இங்கு பி.பி.சி.யில் பகுதி நேரப் பணியாற்றுகிறேன்'' என்றார். நாங்கள் யார் என்பதைத் தெரிவித்தோம்.

பிறகு கலகலப்பாக உரையாடினோம்.

அவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்தவர். எம்.ஏ. பட்டம் பெற்றவர்; இரண்டாவது உலகப்போருக்கு முன்பு, கிறித்தவ இளைஞர் கழகத்தின் வாயிலாக இங்கிலாந்திற்கு வந்தார்.

உலகப்போரின்போது, துணைப்போர்ப் பணியில் இருந்தார்.

அமைதி திரும்பிய பிறகு, பி.பி.சி.யின் தமிழ்ப் பிரிவில் சேர்ந்தார்.

இந்துவாக வந்தவர் கிறுத்தவராக மாறிவிட்டார்.

நாங்கள் இன்னும் நான்கு நாள்களில் ஏதாவது ஓர் ஓட்டலுக்கு மாறவேண்டும் என்பதைக் கூறினேன்.

தம் வீட்டில் இரு படுக்கைகள் உள்ள அறையொன்று காலியாக இருப்பதாகவும், அங்கு வந்து தங்கலாம் என்றும் யோசனை கூறினார்.

''இங்கிலாந்து போன்ற மேனாடுகளில் பணம் கொடுத்துத் தங்கும் விருந்தாளி'' முறை உண்டு.

''ஓர் ஊருக்கு வருவோர், அத்தகைய ஒரு குடும்பத்தில் தங்குவர்.

''இரவுக்கு உறங்கும் இடமும், காலைச் சிற்றுண்டியும் விருந்தாளிக்கு அளிப்பது அந்த வீட்டுக்காரர் பொறுப்பு.

''இரண்டிற்கும் சேர்த்தே கட்டணம் வாங்குவார்கள்.

''அம் முறைப்படி, என்னோடு தங்கலாம்'' என்றார்.

அடுத்த நாள், எங்களை அழைத்துப்போய்த் தம் வீட்டைக் காட்டினார்.

சூழலும், வீடும், எங்களுக்கு ஒதுக்கிய அறையும் பிடித்திருந்தன.

அங்குப் போய்த் தங்க முடிவு செய்தோம்.

இந்தியத் தூதரகத்தில் உரிய அலுவலருக்குத் தெரிவித்தோம். அவர் அதை ஆதரித்தார்.

வீட்டை அமர்த்திக்கொண்டபின், ஆஸ்டின் கம்பெனிக்குச் சென்றோம்.

''எனக்கு ஒதுக்கிய கார் எப்போது கிடைக்கும்'' என்று கேட்டேன்.

கோப்பைப் புரட்டிப் பார்த்த அலுவலர் அத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் நடந்ததாகவும், அதனால் சற்றுக் காலதாமதம் ஆகுமென்றும் சொன்னார்.

பாரிசு மாநாட்டிற்குப்பின் ஒரு தேதியைக் குறிப்பிட்டார். சரி என்று ஏற்றுக் கொண்டேன்.

நான்காம் நாள், மாத்ருபூதம் இல்லத்திற்குக் குடி புகுந்தோம்.

அது 'கென்சிங்டன்' என்ற பகுதியில் இருந்தது. வீட்டுக்கு அருகில் பூங்கா.

மறுநாள் காலை சிற்றுண்டி உண்ணும்போது, ''சிறு வேண்டுகோள்! இது முடிந்ததும் நீங்கள் இருவரும் பங்கீட்டு அலுவலகம்வரை வாருங்கள். வீடுகளில் வந்து தங்குவோருக்கு, சீனி, 'சாக்லெட்', 'காப்பி' முதலியவற்றிற்குப் பங்கீட்டு அட்டை வாங்கியாக வேண்டும்.

''அது இல்லாமல் வேறு வகையில் சமாளிக்க முடியாது. உரியவர்களே வந்துதான் பங்கீட்டு அட்டை பெறவேண்டும்'' என்றார்.

''இது தொல்லை பிடித்த வேலை ஆயிற்றே! இரண்டு மூன்று நாள்கள்கூட நடக்க நேர்ந்துவிடலாமே!

இப்படித் தெரிந்திருந்தால், ஓட்டலுக்கே போயிருப்போமே!

''வீட்டுக்குக்குடியேறி, காலத்தை வீணாக்கவா இவ்வளவு தூரம் வந்தோம்'' என்று அங்கலாய்த்தேன்.

''இலண்டன் பங்கீட்டு அலுவலகத்திற்கு வந்துதான் பாருங்களேன்.

''இங்குள்ள எவருக்கும் அய்ந்து மணித் துளிகளுக்குமேல் செலவிட முடியாது.

''எல்லோரும் வேலைக்கு ஓடுகிறவர்கள். அய்ந்து மணித்துளிகளுக்கு மேல் பிடித்தால் என்னைக் கேளுங்கள்'' என்றார், மாத்ருபூதம்.

அவரை நான் நம்பவில்லை. ஆனால் வேறு வழி? 'பாஸ்போர்ட்' களை எடுத்துக்கொண்டு, என் மனைவியும் நானும் அருகிலிருந்த 'பங்கீ'டு அலுவலகம் சென்றோம்.

விரைந்து செயல்பட்ட பங்கீட்டு அலுவலகம்

பல அலுவலர்கள் காத்துக்கொண்டு இருந்தார்கள். நான் ஒருவரிடம் என் மனைவி வேறொருவரிடம் வந்து அலுவல் பார்க்கச் சொன்னார்கள். இரு அலுவலர்களும் பெண்கள்.

அப்படியே பிரிந்து நின்றோம். இமைக்கும் முன், அலுவலர் இருவரும் அச்சிட்ட மனுப் பாரங்களைக் கையில் எடுத்துக் கொண்டார்கள்.

''உங்கள் பெயர்களைப் பிழையின்றி எழுத உதவும் பொருட்டுப் பாஸ்போர்ட்டைக் கொடுங்கள்'' என்று நாசூக்காகக் கேட்டார்கள்; வாங்கினார்கள்.

அதில் இருந்த தகவல்களை எழுதிக் கொண்டார்கள்.

ஓர் இடத்தைக் காட்டி, அங்குக் கையெழுத்திடச் சொன்னார்கள்.

அப்படிச் செய்ததும் வெவ்வேறு வண்ணங்களில் அச்சிடப்பட்டு இருந்த 'இனிப்பு, சாக்லேட், பழம்' வவுச்சர்களையும், சீனி, காப்பி அடையாளங்களையும் எங்களிடம் எண்ணிக்காட்டி, ஓர் உறையில் போட்டுக் கொடுத்தார்கள்.

''நீங்கள் தாவர உணவுக்காரர்; ஆகையால், பழம், சாக்லேட், இனிப்பு, மற்றவர் பங்கீட்டைக் காட்டிலும் அதிகம். இவற்றை நீங்களே பயன்படுத்திக் கொள்ளலாம்.

''ஆனால், காப்பி, சீனி ஆகியவற்றை வாங்கிக்கொள்ள, உங்களுக்குக் காப்பி கொடுக்கும் வீட்டுக்காரருக்கு உரிமை உண்டு'' என்று சொல்லியனுப்பினார்.

பங்கீட்டு அலுவலர்கள் எவ்வளவு நேரத்தில் எங்கள் வேலைகளை முடித்துக் கொடுத்தார்கள்? நான்கு மணித்துளிகளுக்குள் முடித்து விட்டார்கள்.

அக்கால கட்டத்தில், அந்த நாட்டில் உழைக்கும் நிலையிலுள்ள எல்லா மக்களினுடைய மொத்த உழைப்பும் நாட்டின் புனரமைப்பிற்குத் தேவைப்பட்டது.

அப்படியிருக்க, நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான அலுவலர்கள், பாட்டாளிகள் முதலியோர் தவிர்க்க முடியாத பங்கீட்டுத் தொல்லைகளில் நேரத்தை வீணாக்க நேர்ந்துவிட்டால் அது நாட்டிற்கே பேரிழப்பு ஆகும் என்பதை அரசும் மக்களும் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

எனவே, அரசும் பங்கீடு போன்ற முறைகளை எளிமைப்படுத்தி வைத்திருந்தது.

அலுவலர்களோ, தங்கள் திருமண வேலையைக் கவனிப்பதுபோலச் சுறுசுறுப்போடு செயல்பட்டார்கள்.

உணர்வு பெற்றேன்

அக் காட்சி எனக்கு நல்ல படிப்பினையாக அமைந்தது.

நான், பொது மக்களின் நலன் என்று வரும்போது சிறிதும் காலதாமதமின்றி நொடியில் செயல்பட்டு வந்தது அப்போது ஏற்பட்ட உணர்வால்தான்.

அலுவலருக்குத் துடிப்பும், பொதுத் தொண்டு உணர்வும் இருந்தால் மட்டும் போதாது. சட்டதிட்டங்கள், நிர்வாகமுறைகள் ஆகியவை இணைந்து செயல்படுவதற்கு இடங்கொடுக்க வேண்டும்.

தாமத முறை

நம்முடையவை அப்படியில்லையே!

அய்ந்து திங்களுக்குப்பின், அந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்த சில மணித்துளிகளில், சென்னை மாநகரின் தலைமைப் பங்கீட்டு அலுவலர் இயக்ககத்திலிருந்து என்னோடு தொடர்பு கொண்டார்.

நாங்கள் வெற்றிகரமாகவும் உடல் நலத்தோடும் திரும்பியதற்காக அவரிலா மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அவர் கிறுத்தவர்; எனக்கு நெடுநாள் நண்பர்.

அதே நண்பரை ஒரு வாரத்திற்குப்பின் தொலைபேசி வழியாக நான் தொடர்பு கொள்ள நேரிட்டது.

"இலண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னால் என்னுடைய பங்கீட்டு அட்டையை உரிய அலுவலகத்தில் ஒப்படைத்து, ரசீது பெற்றுக் கொண்டேன்.

"திரும்பி வந்ததும் முழுத் தகவலோடு பங்கீட்டு அட்டைக்கு மனுச் செய்து உள்ளேன்.

"ஒரு வாரம் ஆகிவிட்டது. எனக்குப் பங்கீட்டு அட்டை வரவில்லை.

"நாள்தோறும் என் ஊழியர் சென்று, நினைவுபடுத்திவிட்டு வருகிறார். நாங்கள் தலையிட்டு ஆணையிட்டால், உதவியாக இருக்கும்" என்று வேண்டினேன்.

அவருடைய பதில் என்ன?

''ஒவ்வோர் மனுவையும் கள ஆய்வர் நேரில் சென்று, விசாரித்து, பரிந்துரைத்த பிறகே, துணைப் பங்கீட்டு அலுவலர், பங்கீட்டு அட்டையில் கையெழுத்திடலாம்.

''நான் சொல்லுகிறேன் என்பதற்காக என் கீழ் வேலை செய்பவர், பரிந்துரை வருமுன்னே, பங்கீட்டுச் சீட்டைக் கொடுத்துவிட்டால், எவர் எவரைச் சந்தியில் இழுத்து வைப்பார்கள் என்று சொல்லமுடியாது.

''காலம், கீழ் நிலையில் அலுவல் பார்ப்போர் காலம்.

''நம் மேல் அழுக்காறு கொண்டிருப்பவர்கள் சிறியவர்களின் பொய்க் கூற்றைப் பெரிதுபடுத்தி, நம்மேல் சேற்றைப் பூச நினைக்கக்கூடும்.

''பொறுத்தது பொறுத்தீர்கள்; இன்னும் இரண்டொரு நாள்கள் பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்று எனக்கு ஆறுதல் கூறினார்.

சில நாள்களில் கள ஆய்வாளர் வந்தார்; நான் இல்லாத நேரம் வந்தார். நாங்கள் திரும்பி வந்தது உண்மை என்று அறிக்கை அனுப்பினார்.

அடுத்த ஒரு வாரத்தில் பங்கீட்டுச் சீட்டைப் பெற்றேன்.

பிரிட்டிஷ் கவுன்சில்

மீண்டும் இலண்டனுக்குப் போனோம் அங்கே, 'பிரிட்டிஷ் கௌன்சில்' அலுவலகத்திற்குச் சென்றோம்.

ஆர்வத்தோடு வரவேற்கப்பட்டோம். எங்களுக்காக விரிவான பயணத் திட்டம் போட்டுவைத்திருந்தார்கள்.

எங்கள் வசதிக்கேற்ப, ஆங்காங்கே மாற்றங்கள் செய்து உதவினார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டியவர்களோடு தொடர்பு கொண்டு நாங்கள் போகும் இடங்களில், தங்கும் ஓட்டல், பார்வையிடும் கல்வி நிலையங்கள் ஆகிய ஏற்பாடுகளை மிகச் செம்மையாகச் செய்து கொடுத்தார்கள்.

அந்த நான்கு திங்களுக்கு மேற்பட்ட பிரிட்டானியக் கல்விப் பயணத்தின்போது எங்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படவில்லை.

புதிய ஊருக்குச் சென்று இறங்கினால், உரியவர் வந்து காத்திருப்பார்; உடனிருந்து உதவுவார்; அழைத்துப்போக வேண்டிய

இடங்களுக்கு அழைத்துப்போவார்; அவ்வூர் வேலை முடிந்தால், திட்டமிட்டபடி, இரயிலிலோ, பேருந்திலோ ஏற்றி அனுப்புவார்.

பிரிட்டனுக்கும் பிற நாடுகளுக்கும் இடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காகவே, இயங்கி வந்த அமைப்பு, பிரிட்டிஷ் கௌன்சில் என்பதாம்.

'பிரிட்டிஷ் கௌன்சில்' அலுவல் சார்பற்ற அமைப்பு.

அந் நாட்டின் மேலோர்களைத் தலைவர்களாகவும் உறுப்பினர் களாகவும் கொண்டு, பல்லாண்டுகளாக அரும்பணி ஆற்றி வருகிறது.

இக் கௌன்சிலுக்கு அந் நாடு முழுவதிலும் பெருமதிப்பு உண்டு.

இதன் துணையால் ஆண்டுதோறும் எண்ணற்றோர், பிரிட்டனில் கல்விப் பயணத்தை மேற்கொண்டு நன்மை பெறுகின்றனர்.

இந் நிறுவனம் சிறிதும் சுணங்காது தொண்டாற்றுகிறது,

நாங்கள் முதன் முதல் சென்ற ஊர் ஆக்ஸ்போர்டு நகரமாகும்.

தொடர்கல்விக்கு கருத்தரங்கு

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் கல்லூரி ஒன்றில், 'வாலிபர் களுக்கான தொடர் கல்வி' பற்றிய கருத்தரங்கு ஒன்று நடந்தது. அதில் நாங்கள் இருவரும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள்.

திட்டமிட்டபடி அங்குச் சென்றோம்; கல்லூரி அறையில் தங்கினோம். கருத்தரங்கில் கலந்து கொண்டோம்.

மூச்சுவிடல், உயிர் உள்ளவரை தொடர்கிறது.

அதேபோல், கல்வி வாழ்நாள் முழுவதும் தொடரவேண்டும்.

அப்படியென்றால் நிதி வசதி படைத்தவர்களோ, அரசு உதவி பெற்றவர்களோ, பணிபுரியாமல், அலுவல் பார்க்காமல், முழு நேரமும் கற்பதில் மூழ்கி விடலாமா? கூடாது.

உரிய வயதில் ஏதாவதொரு தொழிலை மேற்கொண்ட வாலிபர்கள், அதற்கு இடையூறு இல்லாதவகையில், அவ்வப்போது, சில நாள்களோ பல நாள்கள் பகுதி நேரமோ, 'தொடர் கல்வி' நிலையத்திற்குச் சென்று கற்க வழிவகை காணல் வேண்டும்.

தொடர் கல்வி எது பற்றியதாக இருக்கலாம்?

செய்துவரும் தொழில் பற்றியதாக இருக்கலாம். பொது அறிவு, இலக்கிய அறிவு, வரலாற்று அறிவு போன்ற சிந்தனையைப் படரவிடும் கூறாகவும் இருக்கலாம்.

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, வேலைகளில் சேருவோர் இரண்டு மூன்றாண்டு காலம்வரை வாரத்திற்கு ஒருநாள் அறிவு விரிவாக்கப் படிப்பிலும், ஒருநாள் தொழில் திறன் வளர்ச்சிக்கும் செலவிடுவதற்குப் பெரிய தொழிற்சாலைகள் வழிவகை செய்து தருதல் நல்லது.

இத்தகைய கருத்துகள் வெளியிடப்பட்டன. இந்தக் கருத்துகளைச் செயல்படுத்த எவ்வளவு செலவாகும்?

அந் நிதியை எங்கெங்கிருந்து திரட்டுவது என்பது பற்றிச் சிந்திக்கப் பட்டன.

மொத்தத்தில், பத்தாண்டுப் பள்ளிப்படிப்பு இக்கால மக்களுக்குப் போதாது.

வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புகள் வெள்ளம் போல் பெருக வேண்டும் என்னும் கருத்து பிரிட்டனில் செல்வாக்குப் பெற்று இருந்ததை எங்களால் உணர முடிந்தது.

நாங்கள் ஆக்ஸ்போர்டில் தங்கியிருந்தபோது, கோடைகாலம். எங்கும் பசுமை; மாலைப் பொழுதில், மணிக் கணக்கில் ஆற்றங்கரையில் உலாவி மகிழ்ந்தோம்.

பாரிசுக்குச் சென்றோம்

ஆக்ஸ்போர்டிலிருந்து இலண்டன் திரும்பினோம். அங்கிருந்து பாரிஸ் சென்றோம்.

பாரிசின் புறநகராகிய 'சேவ்' என்ற நகரில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் 'வரலாறு பற்றிய யூனெஸ்கோ கருத்தரங்கம்' நடந்தது.

அந்த இடத்தைத் தேடிச் சென்றோம்.

பிரெஞ்சு மொழி தெரியாதது மிகவும் இடையூறாக இருந்தது.

வாடகைக் காரோட்டி, மீட்டர் கணக்குமேல் கட்டணம் கேட்டு வாங்கிக்கொண்டார்.

43. பாரிசு வரலாற்றுக் கருத்தரங்கு

எது வரலாறு?

வரலாறு என்ற பெயரால் நாம் எதைக் கற்பிக்கிறோம்?

அரசர்கள் - அவர்களுடைய மண்ணாசை - அதனால் விளைந்த படையெடுப்புகள் - போர்கள் - அழிவுகள்-

எண்ணற்றோர் சிரம் அறுத்தல் - கணக்கில் அடங்காதவர்களின் கைகால் ஒடிதல் - கழுகுகளுக்கும் காக்கைகளுக்கும் இலவச விருந்துகள்-

இன்னபிற கோரச் செயல்களே - கொலைகளே - கொள்ளைகளே - அபலைகளின் கண்ணீர் வெள்ளமே கற்பிக்கப்படுகின்றன.

சென்ற கால வரலாறுகளில், போரும் கொலையும் பின்னிவிட்டதால், எதிர்கால வரலாறும் அதே வகையில் அமைய வேண்டுமா? தேவையில்லை.

ஊடலும் கூடலும் சேர்ந்தே குடும்ப வாழ்க்கை. அதில் ஒன்றை மட்டும் பிரித்துக்கூறல் குறை.

அதேபோல், போர்களும் கூட்டு முயற்சிகளும் இணைந்ததே உலக வரலாறு. அப்படியிருக்க, போர்களை மட்டுமே விவரிப்பது குறை; கேடு; பகையைப் பயிரிடுதல் ஆகும்.

முந்தைய காலங்களிலும் ஆக்கமான சிந்தனைகள், மக்கள் இன நன்மைக்கு உதவும் சாதனைகள் நிகழவில்லையா?

உலகின் ஏழு அற்புதங்களாகக் கருதப்படுபவை, மானுடத்தின் ஆக்கத்திறனின் கொடுமுடிகள் அல்லவா?

பேராறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டிய சாதனைகள் வரலாற்றில் இடம் பெற வேண்டாமா?

கண்கவர் கோபுரங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றிற்கு வரலாற்றில் இடம் இல்லையா?

நெடுஞ்சாலை அமைப்பு முறையைக் கற்றுத்தந்தது, போர்க்கள வெற்றிக்குக் குறைந்ததா?

சட்டத்தொகுப்பு நீதியை ஒருநிலைப்படுத்தும் வரலாற்றுச் சிறப்பு அல்லவா?

அறிவியல் கண்டுபிடிப்புகள், வரலாற்றின் அடையாளங்கள் அன்றோ?

நெடுந்தூரம்வரை படையெடுத்துக் கொன்று குவிக்காத, அமைதியான நாடுகள்கூட, அண்டை நாடுகளின்மேல் போர் தொடுக்க வில்லையா?

அநேகமாக எல்லா நாடுகளுமே குற்றவாளிகள் என்பதால், திட்டமிட்ட கூட்டுக் கொலைகளாகிய, போர்களைப் போற்றிக் கொண்டே போகவேண்டுமா?

எத்தனையோ விலங்குப் போக்குகளை - தீய குணங்களை, மெல்ல மெல்லக் கை விட்டு முன்னேறி வரும் மாந்தர் இனம் வலுத்தவன் இளைத்தவனை அடக்கியாளும்' முறையைக் கைவிடக் கற்றுக் கொள்வது உடனடித் தேவையல்லவா?

வாழ்வாய்; வாழவிடுவாய்' என்பது அல்லவா உயிர் எண்ணம்.

'நாங்கள் அழிந்தாலும் அதற்குள் பகைவர்களைப் பூண்டோடு அழித்து விடுவோம்' என்ற போக்கில் இயங்குவது தவறு அல்லவா?

இத்தகைய கேள்விகள், வரலாறு பற்றிய கருத்தரங்கில் எழுப்பப் பட்டன; விவாதிக்கப்பட்டன.

எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த கல்வியாளர்கள் கலந்து கொண்டு, ஆலோசனைகள் கூறினர். எனக்கும் பேச வாய்ப்பு கிட்டியது.

கருத்தரங்கின் திசை

கருத்து அரங்கின் திசைகாட்டல் எப்படி அமைந்தது?

மாந்தர் இனம், தனது நீண்ட பயணத்தில், பன்முறை போர்கள் என்ற பெயரால், தேவையற்ற இன ஒழிப்பில் ஈடுபட்டுள்ளது கசப்பான உண்மையாகும். அந்தக் கசப்பான உண்மையை மறைக்கத் தேவையில்லை.

போர்களைப் பற்றிச் சொல்லுகையில் அவற்றைப் போற்றிப் புகழ்ந்து பேசி, வம்புகளை, காழ்ப்புகளை, பகைகளை, பழிவாங்குதலைப் பயிரிட்டுக்கொண்டே போவது அறிவுடைமை ஆகாது.

மனித குலத்திற்கு நன்மையான கண்டுபிடிப்புகளைச் சில நாடுகளில் மட்டுமா காண்கிறோம்? பல நாடுகளிலும் காண்கிறோம்.

ஒரு நூற்றாண்டில் இல்லையென்றால், பிறிதொரு நூற்றாண்டில், மாந்தர் இனப்பிரிவு ஒவ்வொன்றும் செயற்கரிய செய்துள்ளது; இனியும் செய்யும்.

மனித நாகரிகம் என்பது பல கலவைகளின் விளைவு ஆகும்.

மக்கள் இனத்தைப் பண்படுத்த எத்தனையோ பிரிவினர் பாடுபட்டு, உதவி வந்துள்ளனர். இத்தகைய ஆக்கப் போக்குகளைப் போதிய அளவு விரிவாகச் சொல்வதில்லை.

அது இன்றைய வரலாற்றுப் பாடங்களில் உள்ள குறை.

இக்குறை தொடரக்கூடாது.

வரலாறு என்பதை வெறும் அரசியல் நிகழ்ச்சிகளின் தொகுப்பாக மட்டும் கருதுதல் சரியல்ல.

வரலாறு என்பது ஒட்டுமொத்தச் சமுதாய இயக்கத்தின் பதிவுத் தொகுப்பு.

சமுதாய இயக்கம் அரசியல் போர்கள், போராட்டங்களை உள்ளடக்கி உள்ளதைப் போன்று, சமுதாய உறவுகள், முன்னேற்றங்கள், பொருளியல் ஈடுபாடுகள், அவை பற்றிய மாற்று முயற்சிகள் ஆகியவற்றையும் தன்னகத்தே கொண்டு பாய்வது ஆகும்.

வரலாற்றுப் பாடம் கற்பிக்கையில் சமுதாய, பொருளியல், பெருமுயற்சிகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிக இடம் கொடுக்க வேண்டும் என்பது எல்லோருடைய சிந்தனையாக இருந்தது.

நடைமுறை அரசியல், தற்கால சமுதாய இயல், பொருளியல், இவை பற்றிய மாறுபட்ட முயற்சிகளை வரலாற்று வகுப்புகளில் சொல்லிக் கொடுக்கலாமா? இதைப்பற்றிச் சற்று விரிவாகவே, விவாதித்தனர்.

இக்கால மாணவ மாணவிகளின் காதுகளில், நடைமுறை அரசியல் போன்றவை வீழாமல் தடுக்க இயலாது.

கண்டவர் கண்டபடி அவை பற்றிச் சொல்லுவதைவிடப் பொறுப்புள்ள ஆசிரியரே இக் காலப் பெரும் நிகழ்ச்சிகள் பற்றிச் சொல்வதே சிறந்தது.

ஆனால், ஆசிரியர் நடைமுறை அரசியல், சமூக இயல், பொருளியல் பற்றிய தமது தனிப்பட்ட கருத்தைப் பிஞ்சு உள்ளங்களில் திணிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பாக அதை மாற்றிவிடக் கூடாது.

முக்கியமான நிகழ்ச்சிகளை, பெரும்போக்குகளைத் திரிக்காமல் சொல்லிவிட்டு, மாணாக்கரைச் சிந்திக்கவைப்பதே பொருத்தம்.

இத்தகைய கருத்துகளை வெளியிட்டோம். இதற்கு இயைந்த வகையில் வரலாற்றுப் பாடத் திட்டங்களை மாற்றி அமைக்கும்படி பரிந்துரைத்தோம்.

பலன் உண்டோ? ஓரளவு உண்டு.

போர்களுக்கு அப்பாற்பட்ட பெரும் சாதனைகள், போக்குகள் ஓரளவு இடம்பெற்றுள்ளன.

இன்னமும் ஆக்க சிந்தனைகள் அதற்கு உரிய இடத்தைப் பெற்றதாகக் கூறமுடியுமா? கூறுவதற்கு இல்லை.

சோலையில் உலாவினோம்

பாரிஸ் கருத்தரங்கு கோடை காலத்தில் நடந்தது; மாலை அய்ந்து மணிக்குக் கூட்டம் முடியும். இரவு ஏழு, ஏழரை மணிவரை பகல் வெளிச்சம் இருக்கும். எனவே, அக்கம் பக்கத்தில் அமைத்து இருந்த சோலைகள், பூங்காக்களில் என் மனைவியும் நானும் உலாவி வருவோம்.

சில நாள்கள் வெளியில் விருந்துகளுக்கு எல்லோரையும் அழைத்துப் போவார்கள்.

வார்சேல் அரண்மனை உலகப் புகழ்பெற்றது. அங்கு அனைவரையும் அழைத்துச் சென்று காட்டினார்கள்.

பாரிஸ் மாநகரின் புகழ்பெற்ற மாதா கோயில்கள், பூங்காக்கள் அய்பல்கோபுரம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துக்கொண்டு போய்க் காட்டினார்கள்.

பிரெஞ்சு மக்கள்

ஒரு முறை, இருநாள் சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது நகரங்களோடு நாட்டுப்புறங்களையும் காண நேர்ந்தது.

பிரெஞ்சு மக்கள் சிற்றுண்டிச் சாலைகளுக்குள் அடைபட்டு, தேனீர், மது முதலியன அருந்துவதில்லை. பெரும்பாலும் திறந்த வெளியில் குடையை நிறுத்தி அதன் நிழலில் அமர்ந்து குடிப்பதையும் உண்பதையும் கண்டோம்.

கலைப் பிரியர்களாகிய பிரெஞ்சுக்காரர்கள் நிற வேற்றுமை பாராட்டுவதில்லை.

ஆப்பிரிக்க நாட்டு மக்கள், பிரெஞ்சு வெள்ளையர்களோடு மிகத் தாராளமாகப் பழகுகிறார்கள்.

'விடுதலை, சமத்துவம், உடன்பிறந்த உணர்வு' ஆகிய முப்பெரும் கொள்கைகளை உலகிற்கு அளித்த பெருமை பிரான்சு நாட்டிற்கு உரியதாகும்.

அவை அந்த நாட்டின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளதைக் காணலாம்.

பழஞ்சுவடிகள் பாதுகாப்பு

நாம், நம் பழஞ்சுவடிகளைப் பதினெட்டாம் பெருக்கில் ஆறுகளில் இட்டு, அறியாமையால் அழித்தோம்.

ஆனால், இந்திய மண்ணில் சிறு பகுதிகளைச் சில நூற்றாண்டு ஆண்ட பிரெஞ்சுக்காரர்களோ, இங்கிருந்து, பல ஏட்டுச் சுவடிகளைப் பத்திர மாகக் கொண்டுசென்று, தங்கள் நாட்டில் பாதுகாத்து வைத்திருந்தார்கள்.

பாரிசில் உள்ள 'சோபோன் பல்கலைக் கழக' நூலகத்தில், அரிய தமிழ் ஏட்டுச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

தமிழர்கள், மொழித் தீண்டாமைக்குத் தலைமுழுக்குப் போட்டு விட்டு, பிரெஞ்சு போன்ற மொழிகளைக் கற்று, அங்குள்ள அருஞ்சுவடி களை, நூல்களை ஆயும் நிலையும் ஒருநாள் வருமோ என்று ஏங்குகிறது எம் உள்ளம்.

நமக்குள்ளேயே வடமொழி தென்மொழிச் சழக்கிலேயே 'வட்டங்கள் இட்டும் குளமகலாத மணிப் பெருந்தெப்பமாக'க் கிடப்பது நல்லதா?

புதிய திசைகளிலே நம்முடைய பழைய தொடர்புகளைத் தேடிக்கொண்டால் நல்லதா?

மனித நேய ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் முன்னோடிகளாவது காலத்தின் கட்டாயம் அல்லவா?

மது அருந்தாத பேராசிரியர்

பாரிசு கருத்தரங்கிற்கு வந்த அறிஞர்களில் என்னைப் போன்று 'கிறுக்கர்' ஒருவர் இருந்தார்.

ஆஸ்திரேலியாவில் வரலாற்றுப் பேராசிரியராக விளங்கியவர் அவர். 'போதை தராத' மதுவைக்கூட தொடவில்லை.

'ஒயின் வகையில் சிவப்பு ஒயின் போதை இல்லாதது; அதைக் குடிக்கலாம்' என்று அவரைப் பலரும் விழுந்து விழுந்து உபசரித்தனர்.

அவரோ தண்ணீர் மட்டுமே அருந்தினார். எங்களுக்கும் ஒரு துணை கிடைத்தது என்று மகிழ்ந்தோம்.

உணவைப் பொறுத்தமட்டில், என் மனைவியும் நானும் தாவர உணவுக்காரர்களாக இருந்துவிட்டோம்.

எங்களுக்காகத் தனி ஏற்பாடு செய்துகொடுத்த அமைப்பாளர்களுக்கு நன்றி கூறச் சொற்கள் இல்லை.

அறிஞர்களோடு வாழ்ந்து, அவர்களோடு ஒளிவுமறைவின்றி மனம்விட்டுப் பேசி, மானுடத்தின் நல்ல எதிர்காலத்திற்கான கருத்துகளைத் தொகுத்துக்கூறிய நிறைவோடு, கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவரும் கலைந்தோம்.

இயக்குநர் ஜெனரல்

அக் கருத்தரங்கில்; பிரெஞ்சு நாட்டுக் கல்வித் துறையில் பெரிய ஆய்வாளர் ஒருவர் பங்கு கொண்டார்.

இனிய இயல்பினராகிய அவரை, பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னால், வேறோர் கருத்தரங்கில் காணும் பேறு எனக்குக் கிட்டிற்று.

1968 இல் பாரிசில், 'கல்வி நிலையங்களில் இன வேறுபாடுகளைக் களையும் செயற்பாடுகள்' என்ற தலைப்பில், ஒரு கருத்தரங்கை யூனெஸ்கோ கூட்டிற்று.

இந்திய அரசு, அதன் இணைக் கல்வி ஆலோசகனாகப் பணிபுரிந்து கொண்டிருந்த என்னை மட்டும் அந்தக் கருத்தரங்கிற்கு இந்தியத் துணைக்கண்டத்தின் சார்பில் அனுப்பி வைத்தது.

போன இடத்தில் கருத்தரங்கின் தலைமைப் பதவி, எனக்கு வாய்த்தது.

அக் கருத்தரங்கிற்குள் நுழைந்ததும் பிரெஞ்சு ஆய்வாளர் என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

விரைந்து வந்து, கட்டித் தழுவி அன்பை வெளிப்படுத்தினார். நானும் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். வரலாற்றுக் கருத்தரங்கை அவருக்கு நினைவு படுத்தினேன்.

அவர், 1968 இல் பிரெஞ்சு நாட்டுக் கல்வித் துறையின் இயக்குநர் தளபதியாக (இயக்குநர் ஜெனரலாக) விளங்கினார்.

பாரிசில் நடந்த வரலாறு, பற்றிய கருத்து அரங்கில் சில பெண்மணி களும் கலந்துகொண்டார்கள். துருக்கியின் சார்பில் பள்ளிக்கூட ஆசிரியை ஒருவர் பங்கு கொண்டார். கூச்சமின்றி, அழுத்தந்திருத்தமாக உரையாற்றினார்.

துருக்கியின் மறுமலர்ச்சிக்குக் காரணமான, கமால்பாட்சா பற்றி ஒரு நூல் எழுத எண்ணினேன். அந்த நூலை நான் இனிமேல் தான் எழுத வேண்டும்.

பல மொழி கற்பீர்

1951 இல் பாரிசுக்குச் சென்றபோதும், பின்னர் ஐந்து முறை அங்குச் சென்ற போதும், என்னுள் ஓர் ஏக்கம் ஊற்றெடுத்தபடியே இருந்தது.

கல்லூரி மாணவனாக இருந்தபோது, பிரெஞ்சுமொழி கற்க வாய்ப்பு இருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால் என்னுடைய பாரிசுப் பயணங்கள் நம் மக்களுக்குப் பயன்படுவனவாகவும் அமைந்திருக்குமே!

பிரெஞ்சு மொழியைக் கற்கத் தவறியதால், அரிய வாய்ப்புகள் விளையாத பயிர்கள் ஆயினவே. இத்தகைய ஏக்கம் எனக்கு வந்தது உண்டு.

இளைஞர்களே! நீங்களும் நான் செய்த தவற்றைச் செய்யாதீர்கள். இளமைப் பருவத்தில் எத்தனை மொழிகளைக் கற்க முடியுமோ அத்தனையும் கற்றுக்கொள்ளுங்கள்; பல்துறை அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

எப்போதோ ஒரு நாள் அவற்றில் ஒன்று உங்களுக்குக் கைகொடுக்கும்.

சுவிட்சர்லாந்தைக் கண்டோம்

பாரிசில் கருத்தரங்கு முடிந்த பிறகு, அங்கிருந்து இருப்புப் பாதை வழியாகச் சுவிட்சர்லாந்திற்கு, நானும் என் மனைவியும் சென்றோம்.

முதலில், வடக்கிலுள்ள சூரிச் நகரை அடைந்தோம். அங்கே எங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓட்டலைத் தேடிச் சென்றோம்.

மூன்று நாள்கள் தங்கினோம். இயற்கையின் குளுமையும் பசுமையும் எங்களுக்கு மகிழ்வு ஊட்டின.

என் மனைவியின் புடவையைக் கண்டு வியந்து நின்றோர் பலராவார்.

சில பெண்கள் அவரை அணுகி, புடவையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

இந்திய நாகரிகத்தின் ஓர் இழையை அறிமுகம் செய்துவிட்டதாக, என் மனைவி மகிழ்ந்தார்.

சூரிச்சிற்குப் பிறகு 'லாசேன்' என்ற நகருக்குச் சென்று அங்கு இரண்டு நாள்கள் தங்கினோம்.

அந்த நகருக்கு அருகில் பனிமலையேறும் கம்பி இரயில் உள்ளது. அதில் பயணம் செய்து மகிழும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை.

பனி பெய்யும் ஆல்ப்ஸ் மலைமேல் நின்று, நான்கு பக்கங்களிலும் கண்களைச் சுழற்றி அனுபவிக்கும் வாய்ப்பை இழந்து விட்டோம்.

இருப்பினும் கண்ணுக்கு எட்டும் தொலைவிற்கு அப்பாலும் பனி மலைகளே தென்பட்டன.

உயர்ந்து பரந்த பனி மலைகளினூடே நிற்கும் மானுடர்களாகிய நாம், எவ்வளவு சிறியர்கள் என்ற எண்ணம் உள்ளத்தில் மின்னிற்று.

டி.எஸ். இராஜம்

அடுத்த நொடி, ''எப்போது வந்தீர்கள்?'' என்று தமிழில் கேட்டது காதில் வீழ்ந்தது. ஒலி வந்த பக்கம் திரும்பினேன். எங்கோ, எப்போதோ பார்த்த ஒருவர் முன் நிற்கக் கண்டேன்.

ஒரு பெருமகனாரும் அவரது வாழ்க்கைத் துணைவியாரும் எதிரில் இருந்தனர்.

அவர் தடித்த மேல்நாட்டு உடை அணிந்து, மேல் 'கோட்', போட்டுக்கொண்டு இருந்தார்.

அம்மையார் பட்டுச் சேலை அணிந்து, கம்பளியாலான மேல் 'கோட்' போட்டுக் கொண்டு இருந்தார்.

''இந்த உடையில் என்னை அடையாளம் தெரியவில்லையா? நான் மதுரை டி.எஸ். இராஜம். இவர் என்னுடைய மனைவி'', என்று அவர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

''டி.வி.எஸ். உரிமையாளர்களில் ஒருவர் அல்லவா?'' என்றேன்.

''ஆம்'' என்றார்.

அவர்கள் பல மணித்துளிகள் எங்களோடு கலகலப்பாகப் பேசினார்கள். பிறகு விடை பெற்றுக்கொண்டு அவரவர் ஓட்டலுக்குத் திரும்பினோம்.

''எவ்வளவு பெரியவர் எவ்வளவு அன்பாகப் பழகுகிறார்; அந்த அம்மாளுக்குச் சிறிதும் கருவம் இல்லை, பாருங்கள்'' என்று என் மனைவி காந்தம்மா மதிப்புரை கூறினார்.

மலைக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு புரிந்தது.

அன்பு செய்வீர்

'அன்பு செய்தல்; பிறர்பால் - ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்தல்; இது மனித உயிர்களுக்கே சாத்தியம். உடலினால் சிறிய மனிதன் - உள்ளத்தால் உயர்ந்து நிற்பதற்கு ஆணிவேர் இந்த அன்பெனும் அமிழ்தமே ஆகும்.

'அன்பு செய்தலே மானுடத்தின் உயர்வு; அன்பு செய்தலே வாழ்வின் ஒளி; அன்பே - பேரன்பே - புத்தராக - ஏசுவாக - தாமியன் பாதிரியாக - ஆல்பர்ட் சுவைட்சராக, காந்தி அடிகளாக ஒளிவிடுகிறது' என்ற தெளிவு பிறந்தது. அத்தெளிவோடு தங்குமிடம் சேர்ந்தோம்.

44. ஹைடு பூங்காவில் பேச்சுரிமை

ஜினிவா சென்றோம்

சுவிட்சர்லாந்தில் லூசேனைப் பார்த்த பிறகு என் மனைவியும் நானும் ஜினிவா நகருக்குச் சென்றோம். அங்கும் நல்ல ஓட்டலில் தங்கினோம். கவலையற்றுப் பல அருங்காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தோம்.

ஜினிவா பெரியதொரு ஏரிக்கரையில் அமைந்த நகரம். உலக நிறுவனங்கள் சில அங்கே அமைந்துள்ளன. இது அனைத்துலக நகரங்களில் ஒன்றாகும்.

நகரின் முக்கியமான பகுதியில் மலர்க்கடிகாரம் அமைக்கப் பட்டுள்ளது; அது நிலத்தடியில் இருந்து இயங்குகிறது; கடிகாரமுகம் மலர்களால் ஆனது.

அது பல்லாண்டுகளாகச் சரியான நேரம் காட்டிக் கொண்டிருப்பது அருங்காட்சியாகும்.

அக்காட்சியைக் கண்டு வியப்போர் கூட்டத்தை இரவு நெடுநேரம் வரை காணலாம்.

மும்மொழியாட்சி

சுவிட்சர்லாந்து, உலகின் வங்கியாகச் செயல்படுகிறது.

இந்நாடு, உலகப்போர் எதிலும், எச்சார்பிலும் பங்கு கொள்ளாது நடு நிலை வகித்து வருகிறது.

இந்த நாட்டில், ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலிய மொழிகள் ஆட்சிமொழிகளாகவும் நிர்வாக மொழிகளாகவும் பயன்படுகின்றன.

வெவ்வேறு மொழிப் பிரிவினரும் ஒன்றுபட்டு வாழ முடியும் என்பதை இந்நாடு மெய்ப்பித்து வருகிறது.

சுவிட்ஸ் கடிகாரம்

எந்நாளும் பிற நாட்டவர்கள் வந்து மொய்த்துக் கொள்ளும் சுவிட்சர்லாந்து நகரங்களில் பொது மக்கள் அச்சமின்றி உலவி வருகிறார்கள்.

இயற்கை வளம் நிறைந்தது இந்நாடு. தொழில் வளத்திலும் சிறந்தது.

கடிகாரம் செய்யும் தொழிலுக்கு இந்நாடு பெயர் பெற்றது. கடிகாரத் தின் பல உதிரிப் பாகங்களை, வீடுகளில், சிறு தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்து பெரிய மையங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

பெரிய தொழிற்சாலைகளில் அவற்றைப் பொருத்தி, கடிகாரங்களைச் செய்து முடிப்பார்கள்.

உதிரிப் பாகங்கள் பல இடங்களில் செய்யப்படுவதால், பொருள் களின் தரத்தில் வேற்றுமை புகுமா? புகாது. எல்லாம் ஒரே தரமாகவே இருக்கும்.

பேரரசுகளை இழந்த பிறகும், மேல் நாடுகளின் வணிகம் சிதையாமல் இருப்பதற்கு ஒரு காரணம், அந் நாடுகளின் உற்பத்திப் பொருள்கள் தரங்குறையாமல், காக்கப்படுவதாகும்.

இதை இந்தியர்கள் கவனிக்கவேண்டும். உற்பத்திப் பொருள்களில் தரக்குறைவு ஏற்படாதபடி காத்துக் கொள்ளவேண்டும்.

வாய்ச் சொல்லுக்கு மதிப்புண்டு

ஜினிவாவிலிருந்து இலண்டனுக்குத் திரும்பினோம்.

அங்கே முதல் வேலையாக ஆஸ்டின் கம்பெனிக்குச் சென்றோம். நாங்கள் கேட்ட 'கார்' பற்றி விசாரித்தோம்.

அலுவலர், எவரோடோ தொலைபேசியில் பேசினார். பிறகு,

''உங்கள் கார் எப்போது வந்து சேருமென்று திட்டவட்டமாகக் கூற இயலாது'' என்று எங்களிடம் கூறினார்.

''முன்னர் நீங்கள் கூறிய தவணை தீர்ந்து இரண்டு நாள்கள் ஆகிவிட்டன. இப்போது இப்படிச் சொல்லலாமா?

''உரிய காலத்தில் காரை வாங்கினால்தான், குறிப்பிட்ட குறைந்த காலம் வரையாவது அதைப் பயன்படுத்த இயலும், அதைக்கொண்டு வரிச்சலுகை பெற முடியும்.

''காலந்தாழ்த்திக் கிடைத்தால் வரிச்சலுகையை இழக்க நேரிடும். உங்கள் பதில் எனக்கு வேதனையூட்டுகிறது'' என்று சிடுசிடுப்போடு பேசினேன்.

''தவணை நாளைக் குறிக்கும் சீட்டைக் காட்டுங்கள் பார்க்கலாம்'' என்று அலுவலர் என்னை மடக்கப் பார்த்தார்.

அவருடைய வயது இருபத்தைந்துக்குள் இருக்கும்.

''நாங்கள் ஆங்கிலேய ஆட்சியளித்த ஆங்கிலக் கல்வியைக் கற்றவர்கள். ஆங்கிலேயர் ஒருவர், எழுத்துவழி ஒப்புக்கொண்டால் என்ன மதிப்பு உண்டோ அது அவருடைய வாய்ச் சொல்லுக்கும் உண்டு என்று எங்களை நம்ப வைத்திருந்தார்கள்.

''எனவே, சென்ற முறை உங்களைப் பார்த்து, தவணை நாளைத் தெரிந்து கொண்டபோது, எழுதி வாங்கிக் கொள்ளாமல் போய் விட்டேன்.

''பழைய தலைமுறை ஆங்கிலேயரின் தன்மை, இளைய தலைமுறை ஆங்கிலேயருக்கு இல்லை என்பது எனக்குத் தெரியாமல் போய் விட்டது'' என்று கடுகடுப்பாகக் கூறினேன்.

அச் சொல் சுருக்கென்று அவருக்குத் தைத்தது போலும்.

'ஒரு மணித்துளி' என்று சொல்லிவிட்டு, கார் தொழிற்சாலையோடு தொலைபேசியில் உரையாடினார்.

பின்னர், ''வேலு, மன்னித்துவிடுங்கள். நாங்கள் சொன்னால் சொன்னதுதான். வரிச்சலுகை பெறப்போதுமான காலம் இருக்கும்படி காரை ஒப்படைத்து விடுகிறோம்; கார் ஓட்டியும் அப்போதே ஆயத்தமாக இருப்பார்'' என்று சொல்லிவிட்டு, அடுத்த வாரத்தில் ஒரு நாளைக் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட நாள் அங்குச் சென்றோம். காரையும் பத்திரங்களையும் என்னிடம் ஒப்படைத்தார்.

அக் கம்பெனி ஏற்பாடு செய்திருந்த காரோட்டி, சில நாள்கள் எங்களிடம் பணிபுரிந்தார்.

காந்தம்மாள் காரோட்டப் பயிற்சி பெற்றார்

என் மனைவி காந்தம்மா காரோட்டக் கற்றுக்கொள்ள விரும்பினார்.

காரோட்டப் பயிற்றுவிக்கும் நிலையத்தில் சேர்ந்து பழைய கார் ஒன்றை ஓட்டிப் பழகினார்.

இலண்டன் நகரத் தெருக்களில் நன்றாகவே பயிற்சி பெற்றார். காரோட்டும் உரிமம் பெறுவதற்குமுன், வெளியூர் செல்ல நேர்ந்தது.

திரும்பி வந்தபின், பாக்கி உள்ள பயிற்சியைப் பெற்று உரிமத்தைப் பெறுவதென்றே முடிவோடு பயணத்தைத் தொடங்கினோம்.

திரும்பி வந்த பிறகு போதிய நேரம் கிடைக்கவில்லை.

ஹைடு பூங்கா

இலண்டனில் சிறிதும் பெரியதுமாகப் பல பூங்காக்கள் உள்ளன. அவற்றில் பெரியது **'ஹைட் பூங்கா'** என்பதாகும்.

கடுங்கோடையிலும் அது குளுகுளு என்றிருக்கும் அது வானுயர் மரங்கள் செறிந்தது. பரந்த புல் வெளிகள் கொண்டது.

ஆங்காங்கே உட்கார்ந்து இளைப்பாற இருக்கைகள் கொண்டது.

குப்பை கூளங்கள் இல்லாமல், தூய்மையாக இருக்கும்; மலர்களைக் குழந்தைகள் கூடப் பறிப்பதில்லை.

அவ்வளவு கட்டுப்பாட்டில் அந் நாட்டுக் குழந்தைகள் வளர்க்கப்படுகின்றன.

அந்த ஹைட் பூங்காவின் ஒரு மூலை வரலாற்றுச் சிறப்புடையது. எவ்வகையில்? பேச்சுரிமையை நிலைநாட்டிய நிலம் என்ற வகையில்.

ஆங்கிலேயருடைய பாராளுமன்ற முறை, பிற பாராளுமன்றங்களின் தாய் என்று கருதப்படுகிறது.

அம்முறை எளிதில் உருவாகிவிடவில்லை. பல தியாகிகள் அரும்பாடுபட்டு உருவாக்கினார்கள்.

பாராளுமன்ற மக்களாட்சி முறை நடைமுறைக்கு வருமுன், கட்டுகளற்ற கோனாட்சி முறையில் அந் நாடு ஆளப்பட்டது.

''மன்னர், ஆண்டவன் அருளால் அப்படிப் பிறந்திருக்கிறார். எனவே, அவருக்கே எல்லா உரிமைகளும் உண்டு'' இப்படிப்பட்ட கருத்தே நெடுங்காலம் கோலோச்சியது.

பிரிட்டானியர் மன்னராட்சியிலிருந்து மக்களாட்சிக்கு மாறும் பொருட்டு, நீண்ட போராட்டம் நடத்த நேர்ந்தது! அதில் எண்ணற்றோர் துன்பப்பட்டனர். உயிரிழந்தோருக்கும் குறைவு இல்லை.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில், சென்னை திருவல்லிக்கேணி கடற்கரை - திலகர் கட்டடம் - பயன்பட்டதுபோல், பிரிட்டானிய மக்களின் உரிமைப் போராட்டத்தின்போது, 'ஹைட் பூங்கா' பயன்பட்டது. இன்றும் பயன்பட்டு வருகிறது.

எதைப்பற்றியும் பேசலாம்

அப் பூங்காவின் குறிப்பிட்ட மூலைப் பகுதியில், எவரும் எவருடைய அனுமதியும் கோராமலேயே, எதைப்பற்றியும் பேச உரிமை உண்டு.

அங்கே மேடை போட்டுப் பேசக்கூடாது; ஒலிபெருக்கி வைத்து, அதன் வாயிலாகப் பேசக்கூடாது.

ஒருவர் ஒலிபெருக்கி வாயிலாகப் பேசினால், அது அக்கம்பக்கப் பேச்சாளர்களுக்கு இடையூறாகும் என்பதால் இக் கட்டுப்பாடு மட்டும் உண்டு.

ஞாயிற்றுக் கிழமைகளில், அத்தகைய பேச்சுகள் நிறைய இருக்கும் என்று கேள்விப்பட்டோம்; ஒரு ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் அங்குச் சென்றோம்.

சமயப் பேச்சுகள்

பூங்காவினுள் நுழைந்ததும், சிறிய மரப்பெட்டியின்மேல் நின்று பேசிக் கொண்டிருந்த ஒருவரைக் கண்டோம். அங்கே சிறிது நேரம் நின்று பேச்சைக் கேட்டோம்.

''மாந்தர் இனத்தைக் காப்பாற்றி அருள, ஆண்டவர் இரட்சகரை அனுப்பப்போகிறார். அவரை வரவேற்க ஆயத்தமாதல் வேண்டும். புனிதமடைதல், பிறர்க்குதவுதல் போன்ற நற்செயல்களினால் ஆண்டவரின் தூதரை வரவேற்கப் பக்குவப்படுத்திக் கொள்வோம்'' இது யூத போதகரின் கருத்துரை.

சில மீட்டர் தொலைவில் வேறொருவர் பேசிக்கொண்டிருந்தார்.

அவ்விடத்திற்குச் சென்றோம். அவருடைய உரையைக் கேட்டோம்.

''ஆண்டவரின் தூதர் வந்துவிட்டார். மக்களின் பாவங்களை எல்லாம் தாமே ஏற்றுக்கொண்டு சிலுவையில் மாண்டார். அவர் என்றும் அழியாதவராக இருக்கிறார். அவரைக் கர்த்தராக

ஏற்றுக்கொள்ளுவோம். விசுவாசிகளாகப் பின்பற்றுவோம்'' இப்படிக் கிறுத்தவக் கத்தோலிக்கப் பாதிரியார் பேசியதைக் கேட்டுவிட்டு, மெல்ல நகர்ந்தோம்.

அடுத்து, ஒருவர் பேச்சு காதில் வீழ்ந்தது. அவரும் கிறித்துவை விசுவாசிக்கும்படி அறிவுரை கூறிக்கொண்டிருந்தார். அவர் 'பிராடெஸ்டன்ட்'' பிரிவைச் சேர்ந்தவர்...

கடவுள் மறுப்பு

நான்காம் நபர் ''இவர்கள் அனைவரும் சோம்பேறிகள்; கடவுள் பெயரைச் சொல்லி, உழைக்காமல், ஆனால் வளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

''இவர்களை நம்பாதீர்கள்; இவர்கள் சொல்லும் கடவுளையும் நம்பாதீர்கள். மக்கள் தொண்டு ஒன்றே பிறவியின் நோக்கம்'' என்று பேசினார்.

கேட்டோர் பலரா? இல்லை - ஏழெட்டுப் பேர். ஓரிடத்தில் அதிகம் கூடியது பத்துப் பன்னிரண்டு பேர்களே.

சமயப் பேச்சுகளையும் சமய மறுப்புப் பேச்சையும் கேட்டுவிட்டு நகர்ந்தோம். இருபது பேர்களிடையே ஒருவர் பேசிக்கொண்டு இருந்தார். அவர் அரசியல் பேசினார்.

ஆணவம் குறையும்

''பொதுத்தேர்தல் வரும். கட்சிகள் போட்டியிடும். 'கன்சர்வேடிவ்' கட்சியினர் சர்ச்சில் தலைமையில் வென்றாலும், தொழிற் கட்சியார் அட்லி தலைமையில் வென்றாலும், மக்கள் நிலையில் அதிக வேறுபாடு வந்துவிடாது.

''வாக்காளர்களே! தேர்தலைப் புறக்கணியுங்கள்'' இப்படி ஒருவர் உரை ஆற்றுகையில், அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் குறுக்கிட்டார்-

''நூற்றுக்குப் பத்துப் பேர்கள் மட்டுமே வாக்களிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதில் ஆறு பேர் சர்ச்சிலுக்கும் நான்கு பேர் அட்லிக்கும் வாக்களித்தால், சர்ச்சில் வெல்லப்போகிறார். நாம் தேர்தலைப் புறக்கணிப்பதால், தேர்தல் நின்று விடப்போவ தில்லையே'' என்று கேள்வியை எழுப்பினார்.

பேச்சாளர் வெகுளவில்லை. அமைதியாகப் பதில் கூறினார்.

''அறுபது இலட்சம் வாக்குப்பெற்று வெற்றிபெற்று, ஆட்சிக்கு வருவதற்குப் பதில் மொத்தத்தில் ஆறாயிரம் வாக்குகளே பெற்று, பெரும்பான்மையாகி, ஆட்சிக்கு வரும்போது, ஆணவம் குறைந்து விடும்; மக்கள் சிந்தனைக்கு மதிப்பு உயரும்; மக்கள் மதிக்கப்படுவார்கள்'' என்று பதில் உரைத்தார்.

ஆங்கிலேயரின் அரசியல் விவகாரம் நமக்கு வேண்டாமென்று எண்ணி, அடுத்த பேச்சாளர் பக்கம் சென்றோம்.

அங்கே இருபத்தைந்து பேர்களுக்குமேல் கூடிநின்று பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு வெள்ளையர் பேசிக் கொண்டிருந்தார்.

''உலகில் எந்த நாட்டிற்கும் இன்னொரு நாட்டை ஆளும் உரிமையில்லை; காலந்தாழ்த்தாது, காலனிகளை வைத்து இருக்கும் அய்ரோப்பிய அரசுகள் அவற்றிற்கு விடுதலை கொடுத்து விட வேண்டும்'' - இது அவருடைய பேச்சின் சாரம்.

குருதியைக் குடிப்போம்

அதே இடத்தில் வெள்ளையருக்குப்பின், ஆப்பிரிக்கர் ஒருவர் பேசினார். எடுத்த எடுப்பிலேயே கனல் வீசப் பேசினார்.

''ஆப்பிரிக்காவிற்கு வந்த மதக்குருக்கள், வல்லரசுகளின் கையாள்களாகவே செயல்பட்டிருக்கிறார்கள். அய்ரோப்பிய முதலாளிகளுக்கு மலிவான தொழிலாளிகள் தேவைப்பட்டார்கள். அவர்கள் ஆப்பிரிக்க நாடுகளில் நிறையக் கிடைப்பார்கள் என்பது உலகறிந்த செய்தி.

''சூதுவாது அறியாத ஆப்பிரிக்க மக்களை மயக்கி, மலிவான கூலிகளைத் திரட்டித் தரும் கங்காணிகளாகவே வெள்ளை நிறக் கிறுத்தவ போதகர்கள், ஆப்பிரிக்காவிற்கு வந்தார்கள்.

''மதத்தைப் பரப்பும் திரைமறைவில், வெள்ளை முதலாளிகளுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். இதை நீடிக்கவிடமாட்டோம்.

''இனி வெள்ளையர் எவராவது ஆப்பிரிக்க நாடொன்றில் காலெடுத்து வைத்தால், அவர் கழுத்தை அறுத்துக் குருதியைக் குடிப்போம்'' என்றார்.

கேட்டுக்கொண்டிருந்தவர் அனைவரும் வெள்ளையர்கள். அவர்களுடைய முகங்களில் வெகுளியோ, அதிர்ச்சியோ சிறிதும் தென்படவில்லை.

அவ்வமயம் எங்களுக்கு முன்னே, இளந்தம்பதிகள் நின்று கொண்டிருந்தார்கள். கணவர் மனைவியைப் பார்த்து, ''நாம் வேறு

பக்கம் போவோமா?'' என்று கேட்டது எங்கள் காதுகளில் வீழ்ந்தது. அவள் பதில் என்ன?

''கண்ணே! பேச்சாளர் இவ்வளவு சினங்கொள்வதற்குக் காரணம் இல்லாமற் போகாது. அதைக் கேட்டுவிட்டுப் போவோம்'' என்பதுதான்.

இளம் பெண் அமைதியாகச் சொன்னதும் எங்களுக்குக் கேட்டது. இருப்பினும் நாங்கள் நழுவி விட்டோம்.

பொது உடைமைப் பேச்சாளர், பெண் உரிமைப் பேச்சாளர் போன்ற சிலருடைய உரைகளைக் கேட்டபின் வந்த வழியே திரும்பினோம்.

ஆப்பிரிக்கர் பேசிக்கொண்டு இருந்த இடத்தின்மேல் கவனத்தைத் திருப்பினோம். அவரே பேசிக்கொண்டிருந்தார்; கூட்டம் பெருகியிருந்தது.

''செவிகைப்பச் சொல் பொறுக்கும் பண்பை''ப் பார்த்து வியந்தோம்.

ஆங்கிலேயர், சில நூற்றாண்டுகள், பல நாடுகளை ஆண்டவர்களாக இருந்ததற்கும் இப்பண்பும் ஒரு காரணமோ!

ஆங்கிலேயர் பண்பாடு

எங்களை வியப்பில் ஆழ்த்திய மற்றொன்றை இங்கே குறித்தல் பொருத்தம்.

எண்ணற்ற பிரிட்டானியக் குடும்பங்கள், தங்கள் அன்றாடத் தேவைகளுக்கான பால், பழம், தயிர், முட்டை, புலால், மளிகைக் கடைப் பொருள்கள் ஆகியவற்றை வீட்டிலிருந்தபடியே பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

உரிய கடைகளுக்கு, இன்னின்ன பொருள் இவ்வளவு வேண்டு மென்று தொலைபேசியில் சொல்லி விடுவார்கள்.

கடைக்காரர், அப்பொருள்களை வீட்டிற்கு அனுப்பி வைப்பார்; தரக்குறைவோ, எடை அளவு குறைவோ இருக்காது.

பால், முட்டை போன்றவற்றை விடியற் காலையில் கொண்டு வருவார்கள்.

வீட்டில் இருப்போரை எழுப்பித் தொல்லை கொடுக்க மாட்டார்கள்.

அந்தந்த வீட்டின் வெளி வாயிலில் பண்டங்களை வைத்து விட்டுப் போவார்கள்; வாடிக்கைக்காரர் பெயரைச் சீட்டில் எழுதி உடன் வைத்துவிட்டுப் போவார்கள்.

அநேகமாக வீட்டின் வெளி வாயில் நடைபாதையை ஒட்டியே இருக்கும்.

அங்கு வைத்த பொருள்களை, வழிப்போக்கர் தொடுவதில்லை. காலாற நடந்துவரும் சிறுவர் சிறுமியரும் தொடுவது இல்லை.

தன்னுடையது அல்லாத எப்பொருளையும் தொடாத ஒழுக்க நெறி, பரவலாக இருக்கக் கண்டோம். இது போற்றற்குரியதாகும்.

உணவுப் பற்றாக்குறை காரணத்தால், வயது வந்தவர்களுக்கு ஆளுக்கு வாரத்திற்கு மூன்று முட்டைகளே பங்கீடாகக் கிடைத்த காலத்தில் நாங்கள் இங்கிலாந்தைக் கண்டோம்.

புலால், மீன், சீனி போன்றவையும் பற்றாக்குறை அளவே கிடைத்தன; கள்ளச் சந்தையில் எதையும் வாங்க முடியாத நிலை.

அந்நெருக்கடியிலும் எவரும் பிறர் பொருளைத் திருடாதிருந்ததையும் கடைக்காரர்கள் நாணயமாக நடந்ததையும் போற்றுவதற்குச் சொற்கள் போதா.

நாளிதழ்கள், வார இதழ்கள் போன்றவற்றை ஓர் ஆள் இருந்து விற்பதில்லை.

அவற்றை, மக்கள் நடமாட்டம் உள்ள சில இடங்களில் தெரு மூலைகளில் அடுக்கி வைத்து விடுவார்கள்.

பக்கத்தில், திறந்த சிறு அட்டைப் பெட்டியை வைத்துவிட்டுப் போய்விடுவார்கள்.

தேவைப்படுவோர், இதழை எடுத்துக்கொண்டு அதற்கு உரிய காசைப் பெட்டியில் போட்டுவிட்டுப் போவார்.

சில மணிகளுக்குப் பிறகு, நாளிதழ்களை வைத்தவர் அங்கு வந்து, விற்காதவற்றையும் விற்றவற்றிற்கான காசையும் எடுத்துக்கொண்டு போவார்.

பொது மக்கள் மோசடி செய்யாதது போலவே, அவ்விதழ்களைக் கொண்டு போவோரும் நாலுகாசு ஒளித்து வைத்துக் கொள்ளாமல் அவ்வளவையும் ஒப்படைப்பார்.

45. பிரிட்டனில் கல்வி முறை

இருட்டடிப்பு இல்லாத வரலாறு

பிரிட்டனில் நாங்கள் பார்த்தவற்றுள் ஒன்று, நூற்றாண்டிற்கு ஒருமுறை நடக்கும் பெரும் கண்காட்சியாகும்.

அது, அந் நாட்டின் எல்லாத் துறைகளையும் பற்றியதாக அமைந்திருந்தது. வரலாற்றுப் பகுதிக்குச் சென்றோம்,

வரலாற்றின் எந்தப் பகுதியும் இருட்டடிப்புச் செய்யப்படவில்லை.

பிரிட்டன் ஒரு காலத்தில், ரோமாபுரியினரால் வெல்லப்பட்டதையும், அவர்கள் ஆண்ட காலத்தையும் கொட்டை எழுத்தில் எழுதி வைத்திருந்தார்கள்.

ரோமாபுரியாருக்கு அடிமைப்பட்டதால், நெடுஞ்சாலை அமைப்பைக் கற்றுக் கொண்டோம்; எல்லார்க்கும் ஒரே நீதி கிடைப் பதற்கு ஏதுவாக, சட்டத் தொகுப்பு முறையைப் பெற்றோம். இப்படி இயம்பியது அப்பகுதி.

ஏன் அன்னியருக்கு அடிமையானார்கள்?

ஆதியில், பிரிட்டன் ஓர் அரசின் கீழ் இல்லாமல் பல சிற்றரசுகளின் ஆளுகையில் இருந்தது. அதனால், வலிமை குன்றி இருந்தது; படையெடுப்பை முறியடிக்க முடியவில்லை.

காலத்தின் கட்டாயத்தால், பிரிட்டன் ஒரு குடைக்கீழ் வர நேர்ந்தது. அந்த ஒருமைப்பாடு வலுவூட்டியது; பேரரசாக வளர்வதற்கு வித்தாயிற்று.

மன்னரின் தனியாட்சியை எதிர்த்து நடந்த போராட்டங்கள், அடக்குமுறைகள் ஆகியவற்றின் படங்கள் வரலாற்றை உள்ளங்கை நெல்லிக்கனி எனக் காட்டின.

பிரிட்டானியக் கல்வி முறை

அந்த நாட்டுக் கல்வி பற்றிச் சில சொல்லுகிறேன்:

பிரிட்டனில் வாழும் எல்லாப் பையன்களும் பெண்களும் பதினைந்து வயது முடியும்வரை கட்டாயம் படிக்க வேண்டும். வேலைக்குப் போகக்கூடாது. அதுவரை கல்வி இலவசம். பள்ளி இறுதித் தேர்வு பெற விரும்புவோர் பதினோராவது வகுப்பு படிக்க வேண்டும்.

பாடத் திட்டம் இல்லாப் படிப்பு:

அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்திட்டம் என்று ஒன்றும் பிரிட்டனில் கிடையாது. இப்படிக் கேள்விப் பட்டபோது, எங்கள் காதுகளை நம்ப முடியவில்லை. ஆனால் அது உண்மை.

ஒப்புதல் பெற்ற பாடத்திட்டம் இல்லாதபோது, ஆசிரியர்கள் எதை எப்படிச் சொல்லிக் கொடுப்பது? பள்ளி இறுதித் தேர்வின்போது, இன்னின்ன மொழிகளில் பாடங்களில் இவ்வளவு தெரிந்திருக்க வேண்டும் என்று இலக்கை மட்டும் கல்வித்துறை காட்டிவிடும்.

பாடங்களை எங்கே தொடங்குவது, எப்படித் தொடங்குவது, என்ன வேகத்தில் நடத்திக்கொண்டு போவது என்பதை அந்தந்தப் பள்ளிக்கூட ஆசிரியர்களே கூடி ஆலோசித்து முடிவு செய்து கொள்ள உரிமை பெற்றிருக்கிறார்கள்.

அவ்வுரிமையில் தலையிடும் கட்டாயத்தை உருவாக்கும் வகையில் அந்த நாட்டு ஆசிரிய சமுதாயம் நடந்து கொண்டதே இல்லை.

அவ்வளவு பொறுப்புணர்ச்சி, அவர்களுக்கு!

எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் சமையற் கூடங்களும் உணவுக் கூடங்களும் உண்டு.

மாணாக்கர் பள்ளிக் கூடத்திலேயே பகல் உணவு உண்கிறார்கள்.

மேல்தட்டு வருவாய் உள்ள வீட்டுப் பிள்ளைகளிடம் ஓரளவு உணவுக் கட்டணம் பெற்றுக் கொண்டார்கள்.

சில ஊர்களில் தனித்தனி சமையற் கூடங்களுக்குப் பதில், மையச் சமையற்கூட முறையை நடைமுறைப்படுத்திக் கொண்டு இருந்தார்கள்.

பள்ளிகள் - தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் என இருபெரும் பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்தன.

உயர்நிலை வகுப்புகளில் - ஈராண்டு - ஏட்டுக் கல்விப் பிரிவு, தொழிற் பயிற்சிப் பிரிவு என இரண்டு கல்வி வாய்க்கால்கள் இருந்தன.

'கல்வி என்பது அறிவை மலரச் செய்யும் முயற்சி; எனவே, பள்ளி நிலையில் தொழிற் பயிற்சிக்கு இடம் இல்லை' என்ற கருத்து, நெடுங்காலம் பிரிட்டனில் செல்வாக்கு பெற்றிருந்தது.

ஆனால், சமுதாயத்தின் தேவை, கற்போரில் பெரும்பாலோர்க்குச் செயல் போக்கில் உள்ள ஆர்வம் முதலியன, தொழிற் பயிற்சிப்

பிரிவையும் ஒரே உயர்நிலைப் பள்ளியில் இயக்கும் நிலையை உருவாக்கிற்று.

போதிய அவகாசம் கொடுத்து, வேண்டியவற்றை எல்லாம் ஆயத்தம் செய்து கொண்ட பிறகே, புதிய முறைகளை நடைமுறைப் படுத்துவது பிரிட்டானிய செயல்முறை ஆகும்.

1944 இல் பிரிட்டன் இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது எனலாம்.

அந்த நெருக்கடியிலும் கல்விக் கொள்கை, திட்டம் பற்றி உயர்மட்டத்தில் ஆலோசனை செய்தார்கள். அனைத்துக்கட்சி பேராளர் களைக் கொண்ட ஒரு குழு, பலமுறை கூடி, ஆசிரியர்களைக் கலந்து திட்டம் தீட்டியது. பின்னர் அதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் இயற்றினார்கள்.

அதன் அடிப்படையில்தான் இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்கப்பட்டது.

'பொதுப் பள்ளிகள்' என்ற பெயரில் குபேரர் வீட்டுப் பிள்ளை களுக்காக நடத்தப்பட்ட சில பள்ளிகள் மட்டும் சம்பளம் வாங்கின. அவை உண்மையில் பொதுப் பள்ளிகள் ஆகா. அவற்றில் தலையிடாது, மற்ற எல்லாப் பள்ளிகளையும் இலவசப் பள்ளிகளாக்கிவிட்டு, இலவசக் கட்டாயக் கல்வியைச் செம்மையாகச் செயல்படுத்தினார்கள்.

பள்ளிக்குப் போகாவிட்டால் வழக்கு

இலண்டன் உலகப் பெரு நகரங்களில் ஒன்று.

அவ்வளவு பெரிய நகரில், 1951 இல் எவ்வளவு மாணாக்கர், பள்ளிக்குச் செல்லாதவர்கள்?

ஆறு திங்களுக்கு ஒரு முறை பள்ளிக்கு வராதவர்கள் கணக்கைத் தணிக்கை செய்கிறார்கள்.

அப்படிச் செய்ததில், அறுநூறு பேர்கள் வராதவர்கள் என்று தெரிந்தது.

அப் பட்டியல் 'வருகை அலுவலர்கள்' இடம் கொடுக்கப்பட்டதாம்.

அவர்கள், தங்கள் பகுதிப் பட்டியலைக் குறித்துக் கொண்டார்கள்.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்கள் பேரில் வழக்குத் தொடர வேண்டுமென்பது சட்டம்.

'வருகை அலுவர்கள்' நேரே வழக்குத் தொடர்ந்துவிட முடியாது.

வழக்குத் தொடர்வதற்கு முன்னர், குறிப்பிட்ட பெற்றோர்களை - அவர்களின் வசதிப்படி - கண்டு அறிவுறுத்த வேண்டும்.

வேண்டுமென்றே பேட்டி கொடுக்க மறுக்கிறார்; அல்லது எவ்வளவு சொல்லியும் பிள்ளைகளைப் படிக்க வைக்கவில்லை என்று தெளிவாகத் தெரிந்தால்தான் வழக்குத் தொடர்வார்.

அப்படிப் பெற்றோரிடம் தொடர்பு கொண்டதில், முந்நூறு பிள்ளைகள், முறைசாரா வகையில் தக்கவர்களிடம் படித்துக் கொண்டிருப்பது புலனாயிற்று.

எனவே, அவர்களை விட்டுவிட்டு, மற்றவர்களின் மேல் வழக்குத் தொடரப்பட்டதாம்.

நடத்துநரின் சிந்தனை

ஓர் இரவு இலண்டன் பேருந்தில் காந்தம்மாவும் நானும் வீடு திரும்பிக் கொண்டிருந்தோம்.

பேருந்து, பெரும்பாலும் காலியாக இருந்தது. நடத்துநருக்கு ஓய்விருந்தது.

அவர் எங்களோடு உரையாடினார்.

இந்தியாவிலிருந்து வந்த கல்வியாளர்கள் என்று தெரிந்து கொண்டதும் கல்வி நிலைபற்றி மதிப்பிட்டுப் பேசினார்.

''நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது, பள்ளிகளில் பகல் உணவு கிடையாது. இலவசக் கல்விகூட முதல் சில வகுப்புகளிலேதான்.

''நாங்கள் பெறாத கல்வி வாய்ப்புகளை - வசதிகளை - இக்கால மாணாக்கர் பெறுவது, எதிர்காலம் பற்றி நம்பிக்கை ஊட்டுகிறது'' என்று போற்றினார்.

இது ஒரு கட்சி ஏற்பாடல்ல. நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் பேசி, ஒருமித்த அடிப்படையில் சட்டம் செய்து இருக்கிறார்கள்.

'கல்வியைக் கட்சி விவகாரமாக்கக் கூடாது' என்று பேருந்து நடத்துநர் சொன்னதைக் கேட்டு மகிழ்ந்தோம்.

சிறுமியின் கனிவு

நாங்கள், இலண்டன் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், மான்செஸ்டர், பர்மிங்காம், எடின்பரோ, ஆபர்டீன் முதலிய பல நகரங்களைக் காண 'பிரிட்டிஷ் கௌன்சில்' ஏற்பாடு செய்து உதவிற்று.

பர்மிங்காமில் ஒருநாள் காலை, பெண்கள் பள்ளி ஒன்றைப் பார்வையிட்டோம்.

மூன்றாம் வகுப்புச் சிறுமிகள், 'இளஞ்செஞ்சிலுவைச் சங்கம்' நடத்திக்கொண்டு இருந்தார்கள். அதை முழுமையாகக் கவனித்தோம்.

'பிற நாடுகளோடு நட்புறவை வளர்த்தல்' இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாம்.

இந்தியாவைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினார்கள்.

என் ஆலோசனைப்படி, அவர்கள் தெரிந்துகொள்ள விரும்புவதைக் கேள்விகளாகக் கேட்டார்கள்.

என் மனைவி காந்தம்மா அவர்களுக்குப் பதில் கூறினார்.

கேள்விகள் அனைத்தும் குழந்தைகள் மையமாகக் கொண்டிருந்தன.

இந்தியக் குழந்தைகள் எங்களைப்போல், சின்னஞ்சிறு வகுப்புகளிலும் 'நோட்' புத்தகத்தில் எழுதாமல், கரும்பலகையில் எழுதிப் பழகுவானேன்?

இது ஒரு கேள்வி.

சிலேட்டானால் ஒவ்வொரு பயிற்சியையும் அழித்துவிட்டு, அடுத்ததை எழுதிப் பார்க்கலாம்.

ஒரே சிலேட்டை இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பயன் படுத்தலாம்.

நோட்டென்றால், எழுதின தாளை மீண்டும் பயன்படுத்த முடியாதே! எத்தனையோ 'நோட்டு'கள் வாங்க வேண்டியிருக்குமே.

இப் பதில், வகுப்பில் இருந்த ஒரு சிறுமியின் நெஞ்சத்தில் தைத்து விட்டது. தன்னைப் போன்ற இந்தியக் குழந்தைகளுக்கு உதவ வேண்டுமென்ற உணர்வு அச் சிறுமியிடம் எழுந்தது.

'அம்மா! நான் நிறையக் காகிதம் தருகிறேன். தயவுசெய்து இந்தியாவிற்கு எடுத்துச் சென்று, குழந்தைகளுக்கு வழங்குங்கள்' என்று கெஞ்சிற்று.

நெஞ்சை நெகிழ்விக்கும் அந் நிகழ்ச்சி இன்றும் பசுமையாக இருக்கிறது.

அன்பளிப்புக் கொடுக்க முன்வரும் அளவுக்குச் சின்னஞ்சிறு வயதிலேயே உரிமை பெற்றிருக்கும் அக் குழந்தை பெரும்பேறு பெற்றது.

நாமும் நமது குழந்தைகளுக்கு நல்லது செய்ய உரிமை கொடுத்து வளர்க்க வேண்டுமென்று கருத்து மின்னிற்று.

ரிசர்வில் ஆசிரியர்

எடின்பரோ நகரக் கல்வி அலுவலரோடு அவரது அலுவலகத்தில் பேசிக் கொண்டிருந்தோம். தொலைபேசி மணி அடித்தது. அலுவலர் தொலைபேசியில் பேசிவிட்டு, அதை என்னிடம் கூறினார்.

செய்தி என்ன?

நகரத்திற்கு அப்பால், மலைப்பகுதியில் இயங்கிக்கொண்டிருந்த ஓராசிரியர் பள்ளியின் ஆசிரியர் நோய்வாய்ப்பட்டார். எனவே அவருக்குச் சில நாள்களுக்கு விடுப்புத் தேவை. விடுப்புக்காக மனு அன்றைய அஞ்சலில் போடப்பட்டதாம்.

பள்ளியை மூடவிடாமல், ஆசிரியர் ஒருவரை அனுப்பி வைக்கும்படி, நோயால் தாக்கப் பெற்ற ஆசிரியர் தொலைபேசியில் கூறினாராம்.

அலுவலர் அப்படியே ஏற்பாடு செய்தார். 'ரிசர்வில்' இருந்த ஒருவரை அங்கு அனுப்பி வைத்தார்.

''வாய் மொழியை நம்பி இப்படி ஏற்பாடு செய்யலாமா?'' என்று நான் அவரைக் கேட்டேன்.

''வாய்ச்சொல் போதும்'' என்று புன்முறுவலோடு பதில் அளித்தார். அவ்வளவு நம்பிக்கைக்குரிய மக்கள்!

மாட்டுப் பால் அசைவமா?

இங்கிலாந்தில் மையப் பகுதிகள், ஏரிகள் நிறைந்த மலைப்பரப்பு ஆகும். அந்தப் பரப்பை, 'ஏரி மாவட்டங்கள்' என்பார்கள்.

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில், எந்த அலுவலகமும் வேலை செய்யவில்லை. எனவே, வார இறுதியில் பொழுது போக்கில் ஈடுபட்டோம்.

ஏரி மாவட்டத்தில் ஓர் ஊரில், தங்க ஏற்பாடு செய்திருந்தார்கள். எங்களுக்கு ஓட்டல் அறையைப் பதிவு செய்தவர் 'கண்டிப்பான தாவர உணவுக்காரர்கள்' என்று தகவல் கொடுத்தார்.

காலைச் சிற்றுண்டியின்போது மேசை மேல் தனித்தனியே காப்பிக் கஷாயமும் பாலும் வைக்கப்பட்டன. பாலைக் கலந்து குடித்தோம். சுவையில் வேறுபாடு இருந்தது. திகைப்போடு ஓட்டல் தலைவரிடம் புகார் செய்தேன்.

'கண்டிப்பான தாவர உணவுக்காரர் என்றதால், மாட்டுப் பால் கொடுக்காமல் சோயா மொச்சையின் பாலைக் கொடுத்தோம்' என்ற விளக்கத்தைப் பெற்றோம்.

எங்களுக்கு மாட்டுப்பால் தள்ளுபடி அல்ல என்று சொல்லி, அதைப் பெற்றோம்.

ஆங்கில இலக்கிய மேதையான பெர்னாட்ஷா, தாவர உணவுக்காரர். அவரைப் பின்பற்றிச் சில ஆயிரக்கணக்கில், புலால் உண்ணாத பிரிட்டானியர்கள் இருப்பதாகவும், அவர்களுக்காக முக்கிய ஊர்களில், தாவர உணவுச் சாலைகள் இயங்குவதாகவும் கேள்விப்பட்டேன்.

மாட்டுப் பால்கூடச் சேர்த்துக் கொள்ள மறுப்பவர்களை 'வீகன்'கள் என்று அழைப்பார்களாம்.

பிரிட்டிஷ் மியூசியம் – நூலகம்

பசுமையும் குளுமையும் கொண்ட ஏரி மாவட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதில் இரு நாள்களைச் செலவிட்டோம். சுற்றுலாப் பேருந்து காலையில் புறப்படும். இரவு திரும்பிவந்து ஓட்டலில் சேர்க்கும். பகல் உணவு? ஓட்டலில் பொட்டலமாகக் கட்டிக் கொடுத்தார்கள்.

அந்தப் பகுதியில் கோடிக்கணக்கான மரங்களை நட்டு வளர்ப்பதில் முனைந்து இருந்தார்கள். இது நமக்கு ஒரு பாடம்.

இலண்டனில் உள்ள 'பிரிட்டிஷ் மியூசியம்' அரும்பொருட் காட்சிச்சாலை மிகப்பெரியது. அதோடு இணைந்துள்ள நூலகம் உலகப்புகழ் பெற்றது. அங்கு உள்ள பழஞ்சுவடிகள், புது நூல்கள் பெற்றாத கருவூலங்கள் ஆகும்.

எகிப்து நாட்டின் தொல்பொருள்கள் - இந்தியச் சிற்பங்கள் - கிரேக்கச் சிலைகள் - இப்படி எத்தனையோ அரும் பொருள்களைக் கொண்டது அக் காட்சிச்சாலை.

அந் நூலகம் உலக மேதைகளின் பண்ணையாகப் பயன்பட்டு வருகிறது.

அந்த நூலகத்திற்கு நாங்கள் சென்றபோது, அங்கிருந்து ஆய்ந்து, பட்டம் பெற்ற டாக்டர் அம்பேத்கார் நினைவுக்கு வந்தார்.

மாணவப் பருவத்தில் ஏற்பட்ட எரிச்சலூட்டும் இழிவுகளையும் நாங்கிக் கொண்டு, கருமமே கண்ணாக இருந்து சிறந்த அறிவாளியாக வளர்ந்த அம்பேத்கார் வழியை நம் இளைஞர்கள் பின்பற்றினால் நன்றாக இருக்கும்.

உலகப் புகழ் பெற்ற கார்ல்மார்க்ஸ் நினைவுக்கு வந்தார்.

அங்கிருந்து எண்ணற்ற நூல்களைப் படித்து, மூலதனம் என்ற நூலை அவர் எழுதியது நினைவுக்கு வந்தது.

நம்ப முடியாத செய்தி

நாங்கள் பிரிட்டனில் தங்கியிருந்தபோது, நம்பமுடியாத செய்தி ஒன்றை நாளிதழ்களில் படித்தோம்.

ஓர் அட்டைப் பெட்டித் தொழிற்சாலை குறிப்பிட்ட விலைகளில் அதனுடைய பொருள்களை விற்று வந்ததாம். அப்படி விலைகளை முடிவு செய்யும்போது, இவ்வளவு விழுக்காடு இலாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பில், முடிவு செய்தார்கள். ஆண்டின் இறுதியில் வரவு செலவு கணக்குத் தணிக்கையில் திட்டமிட்டதைவிடக் கூடுதலாக இலாபம் பெற்றிருப்பது தெரிந்தது. அந் நிலையில் சாதாரணமாக என்ன எதிர்பார்க்கலாம்? பங்குதாரர்களுக்குக் கூடுதலான ஈவுத் தொகை, தொழிலாளர்களுக்கு அதிகப்படியான போனஸ் இவற்றை எதிர்பார்ப்போம். பங்குதாரரும் தொழிலாளரும் போலவே வாடிக்கைக்காரர்களும் இலாபத்திற்குப் பங்காளிகள் - இப்படிக் கருதினார்கள், அந்தத் தொழிற்சாலை இயக்குநர்கள்; வாடிக்கைக்காரர் களுக்குக் குறிப்பிட்ட விழுக்காட்டில், 'தள்ளுபடி' பணமாக அனுப்பப் படும் என்று அறிவித்தார்கள். இதைப் படித்த நாங்கள், அது ஓர் ஏமாற்று வித்தையாக இருக்கலாமென்று நினைத்தோம்.

'நமக்கேன் இதுபற்றிக் கவலை' என்று நினைத்து மறந்து விட்டோம். ஆனால்-

நாங்கள் சென்னைக்குத் திரும்பியபோது, இலண்டன் 'ஆஸ்டின் கம்பெனியிடமிருந்து வந்த கடிதம் ஒன்று எனக்காகக் காத்துக் கொண்டிருந்தது. பிரித்துப் பார்த்தேன். என் மனைவியும் படித்து விட்டு உறுதிப் படுத்திய பிறகே அதை நம்பினேன்.

அக் கடிதம் சொன்ன செய்தி என்ன?

''தங்களுக்கு விற்ற காருக்கு விலை என்ன விலை உண்டோ அதற்கு மேலாக ஆறு பவுன்கள் வாங்கிவிட்ட தவறைக் கம்பெனி கணக்குத் தணிக்கையாளர் சுட்டிக்காட்டி உள்ளார். அதற்காக மன்னிப்புக் கோருகிறோம்.

''அக் கூடுதல் பணத்தை சென்னையில் உள்ள உங்கள் வங்கிக் கணக்கில் சேர்த்துவிடும்படி ஆணையிட்டு உள்ளோம். இது தகவல்.

உரிய பணம் என் கணக்கில் சேர்ந்துவிட்டதை அடுத்த நாள் வங்கி அலுவலர், தொலைபேசி வாயிலாகத் தெரிவித்தார்.

இலண்டனில் மோட்டார் வரி கட்டினேன். அந்த அரையாண்டு முடிவதற்குமுன் கார் ஏற்றுமதி செய்யப்பட்டது.

அதற்குத் தள்ளுபடி உண்டு. கம்பெனிக்காரர் அதற்கான படிவத்தில் என்னுடைய கையெழுத்தைப் பெற்றுக் கொண்டார்.

பணம் வருமா என்று அய்யப்பட்டேன். அந்தக் 'கழிவுப் பண'மும் சென்னைக்கு நான் வருவதற்கு முன்பே வங்கியில் என் கணக்கில் வரவு வைக்கப்பட்டு இருந்தது.

அவர்கள் அல்லவா மக்களுக்குத் தொண்டாற்றுகிறவர்கள்? அய்ம்பது ரூபாய் சலுகைபெற இருபத்தைந்து ரூபாய் செலவு வைப்பவர்களை என்ன என்று அழைப்பது!

46. வளர்விக்கும் முதியோர் கல்வி

முதியோர் கல்வியில் 64 வகைப் பாடம்

பிரிட்டானியர்களின் பொறுப்புணர்ச்சியைக் காட்டும் பொருட்டு, இலண்டனில் இருந்து சென்னைக்குத் தாவி விட்டேன். மீண்டும் இலண்டனுக்கே அழைத்துச் செல்கிறேன்.

இலண்டனில் நான் முதியோர் கல்வி நிலையம் ஒன்றைக் காண ஏற்பாடு செய்திருந்தார்கள். முப்பதாண்டுகளுக்கு முன்னரே, பிரிட்டனில் முதியோர் கல்வி என்பது எழுத்தறிவுக் கல்வி அல்லாது, பல்வகையான தொடர் கல்வியாகவும் மாறி விட்டது.

இலண்டனில் இயங்கி வந்த பெரிய முதியோர் கல்வி நிலையத்தில், மொத்தம் அறுபத்து நான்கு வகைப் பாடங்களும் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

அக் கல்வி நிலையம் பெரிய, ஆறு அடுக்கு மாளிகை முழுவதையும் நிரப்பிக் கொண்டிருந்தது.

அக் கல்லூரியின் இயக்குநர் ஒரு காலத்தில் வங்காளத்தில் பணி புரிந்தவர். எனவே, இந்தியாவின் கல்விச் சிக்கல்கள் அவருக்கும் தெரிந்தன.

அக் கல்லூரியில் எந்த அடிப்படையில், குறிப்பிட்ட வகுப்பில் சேர்த்துக் கொள்கிறார்கள்?

மாணாக்கரின் சுயமதிப்பீட்டில்.

பெரும்பாலான மாணவர்களும் மாணவிகளும் எங்காவது ஓர் இடத்தில் அலுவல் அல்லது பணிபுரிபவர்கள். பகல் எல்லாம் பணிபுரிந்து, மாலைப் பொழுதைப் படிப்பில் அல்லது பயிற்சியில் செலவிடல் எளிதல்ல. இருப்பினும் அக் கல்வி நிலையத்தில் சில ஆயிரம் பேர்கள் சேர்ந்திருக்கக் காரணம் என்ன?

நங்கள் அறிவையும் திறமையையும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்னும் அவாவின் உந்துதலே காரணம்.

அப்படிப்பட்டவர்கள் ஏதாவது ஒரு வகுப்பில் சேர விரும்பினால், அவர்களை அதற்குத் தகுதியானவர்களா என்று தேர்வு நடத்துவ தில்லையாம்.

தூண்டி வளர்த்தல்

நான் அக் கல்லூரி இயக்குநரோடு பேசிக்கொண்டு இருக்கையில் நடுத்தர வயதுள்ள ஒரு பெண்மணி, அவரைக் காண அனுமதி கோரினாள்.

''வேலு! கற்போர், இங்கு இரண்டு மணிகள் இருந்தால் அதிகம். அவர்களை அப்புறம் வா என்பது அவர்களுக்கு இடையூறாகலாம். எனவே, உடனுக்குடன் பார்த்து விடுவது என் பழக்கம். நம் பேச்சை இடை மறிக்கலாமா?

''அந்த மாணவியோடு பேசி, அனுப்ப அனுமதி உண்டா?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

என் இசைவைப் பெற்றபின், அந்தப் பெண்மணியை அழைத்துக் கேட்டார். அயலவர்முன் சொல்லக்கூடிய சிக்கலே என்று அப் பெண்மணி சொல்லவும் அவருடைய சிக்கல் பற்றிக் கேட்டறிந்தார்.

அவர் என்ன சொன்னார்?

'நான் சில வாரங்களுக்கு முன், ஏற்கெனவே, நானாகவே படித்த தத்துவ நூல்களின் அடிப்படையில் தத்துவத்தில் இரண்டாம் நிலை வகுப்பில் சேர்ந்தேன். ஏழெட்டு வகுப்புகளில் பாடம் கேட்டேன். நான் இந்த வகுப்பிற்குச் சென்று கற்பதே என் நிலைக்குப் பொருத்தம் என்று தெரிகிறது.

''தங்கள் இசைவு கிடைத்தால், இப்போது கல்லூரியில் இருந்து விலகிக் கொண்டு அடுத்த முறை முதல் வகுப்பு தொடங்குகையில், வந்து சேர்ந்து கொள்ளுகிறேன்'' என்று அப் பெண்மணி தெளிவாகக் கூறினார்.

கல்லூரி இயக்குநர், வெகுளி கொள்ளவில்லை; எரிச்சல் படவும் இல்லை. மாறாகப் புன்முறுவலோடு, அப்பெண்மணியை இரண்டாம் வகுப்பிலிருந்து, முதல் வகுப்பிற்கு மாற்றியிருப்பதாக, ஒரு சீட்டில் எழுதி, அந்த அம்மையாரிடம் கொடுத்தார். அப்படிக் கொடுக்கும்போது,

''நம்பிக்கை இழக்க வேண்டாம். தொடக்கத்தில், உண்பதுகூடக் கடினமாகவே இருந்திருக்கும். மேலும் ஏதாவது துன்பம் நேர்ந்தால், என்னிடம் வந்து சொல்லும் என்று ஊக்கப்படுத்தி அனுப்பி வைத்தார்.

ஓரளவு தோல்வி மனப்பான்மையோடு வந்த பெண்மணியை ஊக்கப்படுத்தி, கல்வி முயற்சியில் தொடர வைத்த முதல்வரின் அணுகுமுறை, நம் கல்வியாளர்களின் சிந்தனைக்கு உரியதாகும்.

ஊக்கம் அளித்தல்

அந்தக் கல்லூரியில், இரண்டொரு பாடங்களைக் கவனித்தேன்.

புகைப்பட வகுப்பில் நடந்ததைப் படியுங்கள். வகுப்பில், பத்துப் பன்னிரண்டு கற்றுக்குட்டிப் புகைப்படக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் முந்திய வகுப்பிற்கும் அந்த வகுப்புக்கும் இடையில் பயிற்சியின் பகுதியாக, சில புகைப்படங்களை எடுத்திருந்தார்கள். ஒவ்வொரு பயிற்சியாளரும் அழைக்கப்பட்டார். அவர், தாம் எடுத்த படத்தைக் கரும்பலகையின் நடுவில் வைத்துப் பெரிய ஊசியால் குத்தினார்.

என்னை மதிப்பிடச் சொல்லி இருந்தால், எதுவும் சரியாக வரவில்லை என்று உளறி இருப்பேன்.

வகுப்பு ஆசிரியரோ, சகமாணாக்கரோ அப்படிச் சொல்லவில்லை. பின் எப்படி மதிப்பிட்டார்கள்?

''இப் படத்திற்கு மேலும் சில வினாடி ஒளிக்கதிர் தேவை'' இது ஒரு மதிப்பீடு.

''அப் படத்தை எடுக்கையில் கண்ணாடி மையப் பகுதிக்கு வந்திருந்தால் நன்றாய் இருக்கும்.''

இது செய்தால், அது செய்தால், சரியாக வந்திருக்கும்'' என்று சொல்லி ஊக்கப்படுத்தினார்கள்.

வளர்க்கும் வழி அதுவே. தாயகம் திரும்பியதும் அதை எண்ணற்ற தமிழ்நாட்டு ஆசிரியர்களிடம் சொன்னேன். ஓரளவு பலிக்கும் என்று தோன்றிற்று. அதற்கு விலையாக நான் பெற்றது. என்ன தெரியுமா? பெரியவர்களின் பொறாமையை வரவழைத்துக் கொண்டேன்.

வழ வழ என்று எழுதாதே

எனது கல்விப் பயணத்தில், ஒரு திங்களை இலண்டன் பெருநகரில், கல்வி அலுவலரோடு இருந்து, அங்குள்ள கல்வி நடை முறைகளைப் பயில ஏற்பாடு செய்து இருந்தார்கள்.

என்ன உடன்படிக்கை? சம்பளம், பயணப்படி, இழப்பீடு முதலிய எதையும் கேளாமல், என் செலவிலும் என் பொறுப்பிலும், ஆனால், அவர்கள் விதிமுறைகளுக்கு ஏற்பப் பணிகளைக் கவனிப்பேன் என்று எழுதிக்கொடுத்துவிட்டு அந்த அனுபவத்தைப் பெற்றேன்.

அப்போது, பிரிட்டனில் சிக்கன இயக்கமொன்று நடந்து கொண்டிருந்தது. அரசுக் கோப்புகளில் உள்ள குறிப்புகள், ஆணைகள் முதலியன தேவைக்கும் அதிக நீளமாக இருந்தனவாம்.

அவற்றைச் சுருக்கமாக எழுதவும் வெளியிடவும் வேண்டுமென்ற கருத்து நாடு தழுவியதாக இருந்தது.

'அலுவலகங்களில் எழுத்துச் சிக்கனம்' பற்றி விரிவான ஆலோசனை கூறும்படி, உயர்மட்ட ஆணையம் ஒன்று பிரிட்டானிய அரசால் நியமிக்கப்பட்டதாம். அது அரசின் கோப்புகளை - விளம்பரங்களை - விரிவாக ஆய்ந்து திட்டவட்டமான பரிந்துரைகளைச் செய்ததாம்.

அவற்றின் அடிப்படையில், சுருங்கச் சொல்லும் முயற்சிகள் அரசு அலுவலகங்களிலும், பிற அலுவலகங்களிலும் நடந்து கொண்டிருந்தன.

'இலண்டன் பெருநகரக் கல்வி அலுவலகத்தில் மிகப்பெரிய கோப்பு எத்தனை பக்கங்கள் கொண்டது?' என்று வினவினேன்.

கல்வி ஆலோசகர், மிகப் பெரிய கோப்பைக் கேட்டு வாங்கி, என்னிடம் காட்டினார். அது இருபத்தினான்கு பக்கங்கள் கொண்டது.

அதற்குமேல் பெரிய கோப்பு கிடையாது என்று உறுதி கூறினார்.

'நனைந்து சுமப்பதில் நம்மிடம் பாடங் கேட்டுக்கொண்டு போகலாமே!' என்று எனக்குத் தோன்றியது.

இந்தியாவில், அரசு, பொதுத்துறை முதலிய அலுவலகங்களில் வளர்ந்து கிடக்கும் கோப்புகளில் பாதி ஏடுகள், தேவையற்று - வேகம் தடுக்கும் புல் பூண்டுகள் ஆகும்.

விவகாரங்களை வளர்த்துக் கொண்டு போகவே, தாய் அமர்த்தப்பட்டு இருப்பதாக, இந்திய ஊழியர் அனைவரும் நினைக்கிறார்கள் என்பது மிகையல்ல.

'குறிப்பிட்ட ஒரு பணியைக் குறிப்பிட்ட விரைவோடு முடித்து வைக்கவே அலுவலில் இருக்கிறோம்' என்ற உணர்வுடைய இந்திய ஊழியரை - பித்தரைக் காண்டல் அரிதினும் அரிது.

வேதனையான தாமதம்

அண்மையில் வேதனையான ஒரு தவக்கம் என் கவனத்திற்கு வந்தது.

அரசுத் துறையில் பணிபுரிந்த ஓர் அம்மையார் இறந்து விட்டார். அவருடைய கணவர் குடும்பப் பென்சனுக்கு மனுப் போட்டார். அய்ந்தாண்டு காலம் கேட்டதையே கேட்டுக் கீழிடத்துத் தகவலுக்கும் மேலிடத்து வழிகாட்டலுக்கும் அனுப்பி, கால தாமதம் செய்தார்கள் உரிய அலுவலர்கள். கடைசியில்,

''மறைந்த திருமதி மலர்விழியின் கணவர் திரு. முருகன் ஒருவரே அம்மையாரின் வாரிசு என்று இதழில் சொல்லப்பட்டு இருக்கிறது; திருமதி. மலர்விழி முருகன் என்பதே அவரது ஊழியப் பட்டியில் கண்ட பெயர். எனவே சான்றிதழை ஏற்றுக்கொண்டு பென்சன் கொடுக்க இயலாது'' என்று பதில் வந்தது.

சான்றிதழ் பெற்ற, நான்காவது ஆண்டில் இப்படியொரு பதில். இது நமக்குள்ள நாட்டுப் பற்று, இனப் பற்று, சமுதாயப் பற்று, மனிதாபிமானம் ஆகியவற்றிற்குச் சான்றிதழாகும்.

நயாகரா அருவியெனப் பேச்சு! அதற்கு மேல் ஏதும் இல்லை.

தேவையில்லாத அழிவு

அது கிடக்கட்டும்.

''அலுவலக எழுத்துச் சிக்கனத்திற்கு முன்னுரிமை கொடுக்கும்படி, என்ன நெருக்கடி ஏற்பட்டது?'' என்று இலண்டன் கல்வி அலுவரைக் கேட்டேன்.

''இரு பற்றாக்குறைகள் காரணம். ஒன்று, ஆள் பற்றாக்குறை; இது உலகப்போரின் விளைவு. மற்றொன்று, காகிதப் பற்றாக்குறை; இதுவும் உலகப்போரின் பின் விளைவாகும்'' என்றார்.

போர் என்ற பெயரால், கோடிக்கணக்கான உயிர்க் கொலைகளையும் கோடானுகோடி மதிப்புள்ள பொருள்களையும் பொசுக்கிவிட்டு,

இப்படிச் சில்லறைச் சிக்கனத்தைத் தேடுவது, அவ்வளவு சரியான வாழ்க்கை முறையாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அதைச் சொல்லி இலண்டன் கல்வி அலுவலரைப் புண்படுத்தவில்லை.

பிரிட்டனில் பொதுத்தேர்தல்

திரு. அட்லி, பிரிட்டானியப் பிரதமராக ஆண்டுகொண்டிருந்த போது, நாங்கள் அந்த நாட்டிற்குச் சென்றோம். நாங்கள் அங்குத் தங்கியிருக்கையில் காலத்திற்கு முந்தி, 'திடீரென' இடைக்காலப் பொதுத் தேர்தலுக்கு நாள் குறித்து அறிவிப்பு வந்தது.

அடுத்த நாள் ஒரு மாநகராட்சிப் பள்ளியைப் பார்வையிட்டேன்.

பகல் உணவு வேளையில் தேர்தல் பற்றிப் பேச்சு வந்தது.

அங்கிருந்த ஆசிரியர்கள், எக் கட்சிக்கு வாக்களிக்கப் போகிறோம் என்பதை வெளிப்படையாகவே சொன்னார்கள். வெவ்வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கப் போவதாகச் சொன்ன அவர்களிடம் வெறுப்போ, கசப்போ எழவில்லை.

மக்கள் ஆட்சிக்கு அடிப்படை வாக்குரிமை மட்டுமல்ல; விருப்பப் படி வாக்களிக்கவும், அதனால் எந்தத் தொல்லைக்கும் ஆளாகாமல் காக்கப்படவுமான சூழ்நிலை; அத்தகைய சூழல் அந் நாட்டில் வளர்க்கப்பட்டிருக்கிறது. 'தங்களுக்கு வாக்களித்தார்களா? இல்லையா?' என்று புலன் விசாரித்து, அதற்காக எப் பிரிவினரையும் பழிவாங்கும் போக்கு அந் நாட்டுக்குப் புறம்பானது என்று கேள்விப்பட்டேன்.

மக்களின் பண்பு

நான்கு பேர்களை வைத்துக்கொண்டு, 'இன்ன கட்சிக்கு வாக்களிப் பேன்' என்று சொன்னதைக்கூட, ஒருவருக்கு எதிராகப் பயன்படுத்த மாட்டார்களாம்.

இவை இந்தியர்களுக்குப் பகற் கனவாக இருக்கிறது; - இருக்கும். நம் பக்குவம் அத்தகையது.

தேர்தல் அறிவித்ததும், இலண்டன் கல்வி அலுவலர் எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரு சுற்று அறிக்கை அனுப்பினார். அது என்ன சொல்லிற்று?

பள்ளிக்கூட... மண்டபங்களைப் பள்ளிக்கூட வேலைகளுக்கு இடையூறு இல்லாதபடி, தேர்தல் கூட்டங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

அந்த நெறிமுறை என்ன?

முன்னே கேட்ட கட்சிக்கு முன்னேயும், அடுத்து வந்தவர்களுக்கு அந்த வரிசையிலும் கொடுக்கும்படி தெளிவாக ஆணையிட்டார்.

''பள்ளிக்கூடங்களில் தேர்தல் கூட்டம் நடத்தாவிட்டால், குழப்பம் ஏற்படும் வேளைகளில், பள்ளிக்கூடப் பொருள்களுக்குச் சேதம் விளையாதா?'' இப்படி விசாரித்தேன்.

''பொதுத் தேர்தல், திட்டம் மாற்றுத் திட்டங்கள் ஆகியவற்றை மக்கள்முன் வைத்து ஒப்புதல் பெறும் வாய்ப்பாகும். அப்படி மக்கள்முன் எடுத்துரைக்க எல்லாருக்கும் வசதி செய்து கொடுப்பது நிர்வாகத்தின் கடமை. ஆட்சிகள் மாறலாம்; நிர்வாகம் நிலையானது நீடிப்பது.

''தேர்தல் கூட்டங்களில் பள்ளிக்கூடம் போன்ற பொதுச் சொத்தைச் பாழாக்கின செய்தி இதுவரை இல்லை'' என்று கேள்விப்பட்டபோது 'அந்த நாளும் வந்திடாதோ இந்தியாவிற்கு' என்று ஏங்கினேன்.

ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொடுத்த காந்தியடிகள் அதற்குப் பாதுகாவலான பொறுப்பு உணர்ச்சியைக் கற்றுக் கொடுக்கும்வரை வாழ்ந்திருந்தால்?

இலண்டனில் என் பிறந்த நாள்

எனது நாற்பதாம் பிறந்த நாளில், என் மனைவியும் நானும் இலண்டனில் இருந்தோம்.

எனது இருபத்தெட்டாம் வயது முடியும் வரை, நான் பிறந்த நாளை நினைத்துக் கொண்டது, அய்ந்தாறு முறைகளே. வெவ்வேறு வேலைகளுக்கு மனுச்செய்கையில், பிறந்த நாளைக் குறிப்பிட நேர்ந்தது மற்றபடி பிறந்த நாள் விழா கொண்டாடியது இல்லை.

1941 ஆம் ஆண்டு, அக்டோபர் 15ஆம் நாள், நான் தங்கியிருந்த எனது மாமனார் வீட்டில், வடை பாயசம் செய்து போட்டு என் பிறந்த நாளை எனக்கு நினைவுபடுத்தினார்கள்.

அடுத்த இருபது ஆண்டுகள்வரை, என் பிறந்த நாள் குடும்பத்திற்குள் அப்பால் எவருடைய கவனத்தையும் ஈர்த்தது இல்லை.

1961 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதுபெற்ற பிறகு வந்த பிறந்த நாள் முதல், அன்பர்கள் என்னைத்தேடி வருகிறார்கள்; வாழ்த்துகிறார்கள். ஓய்வு பெற்றுவிட்ட என்னை அன்பர்கள் தேடி வருவது உள்ளத்தை நெகிழ்விக்கிறது.

இலண்டனில் இருந்தபோது, என் பிறந்த நாளில், பாயசத்தோடு சாப்பாடு போட்டார், திரு. மாத்ருபூதம். நான் புது சூட் தைத்துக்கொள்ள வேண்டும் என்று என் மனைவி வற்புறுத்தினார்; அதற்கு இசைந்தேன்.

இலண்டன் தையற் கடைக்காரரும் நம்மூர்த் தையற்கடைக்காரரைப் போன்று குறித்த தவணையன்று சூட்டைக் கொடுக்காது நடக்க வைத்தார்.

எனினும், எனது நாற்பதாம் ஆண்டு பிறந்த நாள் அன்று, புது 'சூட்டில்' வெளிச்சம் போட்டேன்.

47. குத்தூசி குருசாமிக்கு நெஞ்சுவலி

குழந்தையை பற்றிய சிந்தனை

பகலும் இரவும் அடுத்தடுத்து வரும்; சம அளவில் வருவதில்லை. சில பருவங்களில் பகல் நீண்டும், இரவு சுருங்கியும் வரும்.

உலகின் சில பகுதிகளில் குறிப்பிட்ட நாள்களில், இரவு பத்து மணிக்கு மேலும் சூரிய வெளிச்சம் கிடைக்கும்.

அதேபோல், மாந்தர்களுக்கும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். பலருக்கு முந்தியதைவிடப் பிந்தியது அதிகமாக இருக்கும்.

பிரிட்டனிலிருந்தபோது என் மனைவிக்கு அடிக்கடி குழந்தை திருவள்ளுவனைப் பற்றிய நினைவு எழும். எப்படி இருக்கிறானோ என்ற ஏக்கம் பிறக்கும்.

''பச்சைக் குழந்தையை விட்டுவிட்டு வந்துவிட்டேனே!'' என்று வேதனைப்படுவார். நான் ஊமையாகி விடுவேன்.

வாரந்தோறும் சென்னையிலிருந்து ஒழுங்காகக் கடிதம் வரும். விமான அஞ்சலில் வந்த அக் கடிதத்தைப் பதற்றத்தோடு உடைத்துப் படிப்பார்.

குருசாமி செய்தி குத்தீட்டியாயிற்று

ஒரு முறை சென்னைக் கடிதம் ஒன்றைப் படிக்கையில் காந்தம்மாவின் முகத்தை வருத்தம் கவ்விற்று. மேலே படிக்க முடியாமல் கடிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்.

குத்தீட்டி கொண்டு குத்துவது போன்ற செய்தியைப் படித்தேன். உச்சி முதல் உள்ளங்கால்வரை மின்னாற்றல் பாய்ச்சிய உணர்வு ஏற்பட்டது.

'செய்தி என்ன?

போன இடத்தில் மார்புவலி

குத்தூசி குருசாமியார் - என் சகலர் - ஒரு பொது நிகழ்ச்சிக்காகத் திருவாரூர் சென்றார். திருவாரூர் புகைவண்டி சந்திப்பில் இறங்கு கையில், நெஞ்சில் பெரும் வலி ஏற்பட்டது. அப்படியே மயங்கி உட்கார்ந்துவிட்டார்.

அவரை வரவேற்க வந்திருந்த திராவிடர் கழகத்தினர் சிலர், விரைந்து ஓடினர். அருகில், இருந்த ஓய்வு பெற்ற மருத்துவரை அழைத்து வந்தனர். அவர் பெயர் நாராயணசாமி அய்யர் என்று நினைவு.

'டாக்டர்' வந்தார்; ஊசி போட்டார். தமது மருத்துவ இல்லத்தில் சேர்த்து, சில நாள்கள் தம் பார்வையில் கவனமாக மருத்துவம் செய்தார்.

ஆபத்து விலகிவிட்டது என்று தோன்றியதும் இரயிலில் முதல் வகுப்பில், இருவர் துணைவர, சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

பத்திரமாகச் சென்னை வந்து சேர்ந்த சா. குருசாமி படுத்த படுக்கையாக இருக்கிறார்.

டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவரை விழிப்போடு கவனித்து வருகிறார். எத்தனை திங்கள் வீட்டோடு இருந்தாக வேண்டு மென்பது போகப் போகத்தான் தெரியும். 'நீங்கள் கவலைப்பட வேண்டாம்' என்று சென்னைச் செய்தி கூறிற்று.

குடும்பச் சுமையைத் தாங்கினார்

கலவரப்படாமல் இருக்க முடியுமா? 'அவருக்குப் பதில் என்னால் குடும்பத்தைத் தாங்க முடியாதே' என்ற கவலை கௌவிற்று.

மாமனார் திருவாரூர் சுப்பிரமணியத்தின் குடும்பத்தில் ஒரு கூறாக, அவரது இரு மாப்பிள்ளைகளாகிய சா. குருசாமியும் நானும் இணைந்திருந்தோம்.

குருசாமி, அவர் மனைவி குஞ்சிதம், மைத்துனி வெங்கடேசம்மாள் ஆகியோர் வருவாயை நம்பி, எங்கள் மாமா, மாமி, மைத்துனர், பேரக் குழந்தைகள் செல்வி இரஷ்யா, செல்வன் கௌதமன் ஆகியோர் வாழ்ந்த நிலை.

காந்தம்மாவும் நானும் அக் கூட்டுக் குடும்பத்தில் சேர்ந்து வாழ்ந்த போதிலும் எங்களால் அவர்களுக்குச் சிறிதும் நிதி உதவி இல்லை.

காந்தம்மா அலுவலில் இல்லை. என் ஊதியம் மற்ற எல்லோருடைய மொத்த ஊதியத்திலும் அதிகம்.

ஆனால், 1946 ஆம் ஆண்டிலேயே கார் வாங்கிவிட்டதால், என் வரவுக்கும் செலவுக்கும் சரியாகப் போயிற்று; மாமனார் குடும்பத்திற்கு என்னால் உதவி செய்ய முடியவில்லை.

சா. குருசாமி, 1946 ஆம் ஆண்டிலேயே, பெரியாரின் முழு நேரத் தொண்டராக இருக்கவேண்டுமென்னும் துடிப்பால், அரசு ஊழியத்தில் இருந்து ஓய்வுபெற்றுக் கொண்டார்.

அய்ம்பத்து அய்ந்து வயது அடைவதற்கு முன்பே ஓய்வு பெற்றதால் அவருக்குக் கிடைத்த ஓய்வூதியம் கைச் செலவுக்குக் கூடப் பற்றாது.

மாநகராட்சி ஆசிரியைகளான திருமதி குஞ்சிதம், செல்வி வெங்கடேசம்மாள் பெற்ற ஊதியம் சொற்பம்.

எந்த நடுத்தர வகுப்பு மனிதரும் பணமுடையால் நலிந்திருப்பர். குருசாமியார் பொறுப்போ குடும்பத்திற்கு அப்பாலும் விரிந்தது.

தன்மான இயக்கத்தின் பேச்சாளர்களாகிய பொன்னம்பலனார், அழகிரிசாமி, எஸ்.வி. லிங்கம் முதலியோர் சென்னைக்கு வந்தால், குருசாமியாரோடுதான் தங்குவார்கள்.

அச் செலவுக்கும் குருசாமி சுணங்க மாட்டார். இத்தகைய செலவுக்காக வீட்டிலுள்ள நகையில் ஒன்று ஓசைப்படாமல் அடகுக் கடைக்குப் போகும்.

தன் சாதியில் அய்ம்பதாயிரம் ரூபாயோடு பெண் கொடுக்க வந்ததை உதறி விட்டு, கொள்கை காரணமாகச் சாமான்ய குடும்பத்தில் பெண் எடுத்துக்கொண்டதோடு, பொது உடைமைக் கொள்கையில் இருந்த பிடிப்பினால், குடும்பம் முழுவதையும் தாங்குவதோடு, இயக்கத்தவர்களையும் தாங்கும் கடமையை மகிழ்வோடு மேற்கொண்டார்.

குடும்ப நகைகள் ஒவ்வொன்றாக அடகுக் கடைக்குப் போவதைப் பற்றியும் அவர் கவலைப்பட்டது இல்லை.

இயக்கச் சுமைக்குத் தோள் கொடுத்தார்

பேச்சு, எழுத்து நீங்கலாக, அன்றாட வாழ்க்கை முறையில் நெறியாகவும் இனிமையாகவும் வாழ்ந்த குருசாமிக்கு நெஞ்சுவலி நோய் வருவானேன்? இதைப்பற்றிக் காந்தம்மாவும் நானும் அடிக்கடி பேசினோம்.

இலட்சியம் உயர்ந்ததாக இருப்பினும், வாழ்க்கை முறை நெறியாக அமைந்து இருப்பினும் நாள்தோறும் பெரும் போராட்டத்தில் உணர்ச்சியுடன் ஈடுபட நேர்ந்தது அதன் பலனைக் காட்டாமல் போகுமா?

சா. குருசாமியின் தொடக்க காலப் போராட்டத்தைக் காட்டிலும் பல மடங்கு அதிகப்படியான பாதிப்புக்கு இடமானது; 1946ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட போராட்டங்கள்.

எதிர்ப்பு மேல் எதிர்ப்பு

கடவுள் கற்பனை என்று சொல்லும்போது, கேட்போர் மனம் புண்படும். அவர்கள் எரிச்சல் கொள்வார்கள். சில வேளை மிகுந்த வேதனையுடன் மண்மாரி பொழிவார்கள்; பகை ஏற்படும்.

உயிரோடு இருக்கையில் காந்தி அடிகளையோ, பண்டித நேரு வையோ, மூதறிஞர் இராசாசியையோ, கர்மவீரர் காமராசரையோ வன்மையாகக் கண்டித்தால் ஆபத்தும் பகையும் அதிகமாகும்.

விடுதலை நாளா? கெடுதலை நாளா?

1947 ஆம் ஆண்டில் இந்தியா பெற்றது சுதந்திரம் அல்ல; வெறும் ஆள் மாற்றமே என்ற நிலையைத் தந்தை பெரியாரின் திராவிடர் கழகம் எடுத்தது.

பெரியாரின் வழியில் நடை பயின்றவர்கள்கூட 'அரசியல் விடுதலை' கிடைத்திருப்பதாக மகிழும்போது 'அது மயக்கம்' என்று ஓயாமல் பேசியும் எழுதியும் வந்த குருசாமியார், அக் காட்டாற்று எதிர் நீச்சலால், அவரை அறியாமலே பாதிக்கப்பட்டார்.

பெரியாருக்காக அயராது போராடினார்

அடுத்து, பெரியார் மணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவி யாக்கிக் கொண்ட திருமண ஏற்பாடு திராவிடர் கழகத்தைப் பிளந்தது.

அறிஞர் அண்ணா தாய்க் கழகத்திலிருந்து விலகினார். தம்பியர் பலர் அவருடன் சென்றனர்.

அவர் விரும்பியபடி தொடர்ந்த வேண்டுகோளின்படி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார்.

அப்போது குருசாமியார் எந்தப் பக்கம் இருந்தார்? எவருக்காக வாதிட்டுப் போராடினார்?

தந்தை பெரியார் பக்கம் இருந்தார்; பெரியாருக்காக மிகுந்த ஆற்றலுடன் வன்மையாக வாதிட்டார்; போராடினார்.

அப்போது பேச்சிலும் எழுத்திலும் குருசாமி புகுத்திய கனல் அதிகம்.

பெரியாரிடம் ஏதாகிலும் புதிதாக எதிர்பார்த்து அப்படி இயக்கினாரா? இல்லை; இல்லவே இல்லை.

அண்ணாவிடம் பகையா?

அறிஞர் அண்ணா பேரிலோ, அவரோடு இயங்கிய எவர் பேரிலோ தனியாகப் பகை கொண்டிருந்தாரா? இல்லை.

தலைவர் பெரியார்பால் குருசாமியார் கொண்டிருந்த பற்று ஈடு இணையற்றது! பெரியாரை எவர் குறை கூறவும் குருசாமி பொறுக்க மாட்டார்.

பெரியார் திருமணத்தால், தன்மான இயக்கத்தின் எந்த அடிப்படைக் கொள்கையும் தகர்க்கப்படவில்லை என்பது குருசாமியின் கருத்து.

'அந் நிகழ்ச்சி, வரலாற்றுப் போக்கை மாற்றும்படி விடக்கூடாது; வளர்ந்து வரும் பகுத்தறிவுப் பிரசாரத்தை, சமதர்மச் சிந்தனையைத் திசை திருப்பவிடக் கூடாது என்பது அவருடைய அழுத்தமான முடிவு. முற்போக்குப் பணிகளின் வேகத் தடுப்பியாகப் பயன்படக்கூடாது என்று உறுதியாகக் கருதினார்.

பங்காளிச் சண்டையால் விளைந்த திருமண ஏற்பாடு, பங்காளிகள் உறவை வேண்டுமானால் பாதிக்கலாமே ஒழிய, தியாகத்தால் வளர்க்கப் பட்ட ஒரு முற்போக்கு இயக்கத்தைப் பாழாக்கப் பயன்படுத்தல் ஆகாது, என்பதில் குருசாமி உறுதியாக இருந்தார்.

பெரியாரிடம் மரியாதையோடும் மதிப்போடும் பழகி வந்த குருசாமி, அண்ணாவோடு நெருக்கமான தோழமையோடு பழகி வந்தார்.

இருவரும் கலந்து உரையாடி மகிழ்ந்த நாள்கள் ஏராளம். அண்ணாவின் இருமொழியாற்றலை, குணத்தை, குத்தூசியார் மெய்யாகவே போற்றினார்.

அவரது ஆற்றல் மிகப்பெரிய முற்போக்கு நடவடிக்கைக்குப் பயன்படவேண்டுமென்று விழைந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியதால் அண்ணா பெறக்கூடிய ஆதாயம் கடுகளவே இருக்கும். உடன் இருப்போர் பெறக்கூடியதே அதிகமாக இருக்கும் என்பது அவர் கணிப்பு.

அண்ணாவைப் போன்ற அறிஞர், புரட்சிக்குப் பொறுப்பேற்று முன்னேற வேண்டிய காலகட்டத்தில், தம்மை அறியாமல், எடுப்பார் கைப்பிள்ளை ஆகிவிட்டாரென்று சரியாகவோ, தவறாகவோ எண்ணினார்.

அப்போதைய நிலையில், திராவிடர் கழகத்தில் இருந்த ஒழுக்கமும் ஆற்றலும் உள்ள நல்ல பேச்சாளர்களில், சுண்டி இழுக்கும் எழுத்தாளர் களில் குருசாமியார் முன்னணியில் இருந்தார்.

எனவே, பெரியாரின் திருமணத்தால், திராவிடர் கழகம் சரிந்துவிடாத படி பார்த்துக் கொள்ளும் பொறுப்பு, பெரியாருக்கு அடுத்தபடி குத்தூசியாருக்கே இருந்தது.

தி.மு.க. வைக் கடுமையாக நாள்தோறும் தாக்கும் பழியை அவர் ஏற்றுக் கொண்டார். தனிப்பட்ட முறையில் அறிஞர் அண்ணாவிடம் ஆழமான அன்பு கொண்டிருந்த குருசாமி நாள்தோறும் பெரியாரை ஆதரித்து எழுதியதோடு, பம்பரம்போல் சுழன்று, நீண்ட உரைகள் ஆற்றி வந்தார். அதுவே அளவிற்கு மீறிய பணி.

பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுப் போர்

அதோடு, 1950 ஆம் ஆண்டில் உருவாக்கிக் கொண்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், பழங்குடி மக்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு செய்யும் உரிமை வழங்கப்பட்டது; பிற்படுத்தப் பட்டோருக்கு இடங்களை ஒதுக்குவதற்கு வழி செய்யவில்லை.

அந்தச் சட்டத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு கொண்ட சென்னை வழக்கறிஞர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், அச் சட்டம் நிறைவேற்றும்வரை காத்து இருந்தார். நிறைவேறியதும், சென்னை மாகாணத்தில் நடைமுறையில் இருக்கும் 'வகுப்பு வாரி இட ஒதுக்கீட்டுமுறை செல்லாது' என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

'பழைய ஒதுக்கீட்டு முறை, புதிய இரசியல் சட்டத்திற்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் முடிவு கூறிற்று.

தந்தை பெரியார், அதற்கு எதிராக மக்கள் மன்றத்திடம் சென்றார்.

மாநாடுகள் கூட்டினார்; பொதுக்கூட்டங்கள் வாயிலாக மக்கள் ஆதரவைத் திரட்டினார்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய உரிமை கொடுக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்குப் போராட்டம் நடத்தினார்.

அவ் வியக்கத்தின் இடையறாத முன்னணிப் பேச்சும் எழுத்தும் - பெரியாருக்கு அடுத்தபடியாக குத்தூசி குருசாமி உடையது.

பெரியார் அதில் வெற்றி பெற்றார். பிரதமர் நேரு முன்னின்று அரசியல் சட்டத்திற்கு முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார்.

சமூகம், கல்வி ஆகியவற்றில் பின் தங்கியவர்களுக்கும் கல்வி நிலையங்கள், அரசுப் பதவிகள் ஆகியவற்றில் இட ஒதுக்கீடு செய்யலாம் என்னும் புதிய விதியொன்று சேர்க்கப்பட்டது.

அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம்

அத் திருத்தம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது, பின்தங்கியவர்கள் என்பதைப் பொருளாதார அடிப்படையில் முடிவு செய்யும்படி உறுப்பினர் ஒருவர் திருத்தம் கொண்டு வந்தார். பிரதமர் நேரு அதை ஏற்கவில்லை. எனவே, முதல் திருத்தம் அப்படியே நிறைவேறியது.

பொது உடைமை இயக்கத்துக்குப் பாதுகாவலர்

இத் திருத்தக் கிளர்ச்சிக்கு முன்னரே பெரியாரும் திராவிடர் கழகமும் வேறு ஓர் இயக்கத்தவரை அடக்குமுறையில் இருந்து விடுவிக்கும் பெரும் போராட்டத்தையும் பொறுப்பையும் தூக்கிப் போட்டுக் கொள்ள நேர்ந்தது.

இந்தியா ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெற்ற சூட்டோடு, பொது உடைமைக் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டது.

சேலம், வேலூர், கடலூர் சிறைகளில் அடைக்கப்பட்ட பொது உடைமைக் கட்சியினரில் பலர், சுட்டுக் கொல்லப்பட்டார்கள்; அடக்கு முறை 1951 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது.

பொது உடைமைக் கட்சியினரைத் துணிந்து வெளிப்படையாக ஆதரித்து, அவர்களின் கேடயமாகச் செயல்பட்டவர்கள் பெரியாரும் குருசாமியும்; செயல்பட்டது திராவிடர் கழகம்.

குருதி உறையும் துப்பாக்கிச் சூட்டுச் செய்திகள் அடுத்தடுத்து வரும் உடனே 'குத்தூசி'யாரின் பேனா கனலைக் கக்கும்; விரைவாக அச்சமின்றி அரசின் நிர்வாகத்தைக் கண்டிக்கும்.

நூறு முறை 'வாழ்க' என்று உரத்த குரல் எழுப்பினாலும் அயர்வு தோன்றாது. பத்து முறை 'ஒழிக' என்று கத்திவிட்டால், பலருக்கு அயர்வு ஏற்படும்.

சமுதாயத்தின் தலைகீழ் மாற்றத்திற்கு ஆதரவாக, அதற்குத் தடையாக நிறுத்தப்படும் மரபுகள், இலக்கியங்கள், செயல்முறைகள் ஆகிய வற்றைத் தகர்க்கும் பொருட்டு ஏவப்படும் எழுத்து பேச்சுக் கணைகள் தன்பாட்டிற்குச் சந்தடியின்றி வேலை செய்தது.

தலைமறைவாக இருந்த, பொது உடைமைக் கட்சியின் முன்னோடி களான, தோழர்கள் ஏ.எஸ்.கே. ஜீவானந்தம், எம். ஆர். வெங்கட்ராமன், மணலி கந்தசாமி, பி. இராமமூர்த்தி, பாலதண்டாயுதம் போன்றோர், அவ்வப்போது சென்னாய் நகரில் உள்ள குருசாமி வீட்டிற்கு வந்து, சில நாள்கள் தலை மறைவாகத் தங்கியிருந்து அப்போதைய நெருக்கடி யிலிருந்து உயிர் தப்பினார்கள்.

எவ்வளவு ஆர்வமிருப்பினும், அத்தகைய உதவியைச் செய்யும் போது, எவ்வளவு பெரிய ஆபத்திற்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்கிறோம் என்பது குருசாமிக்குத் தெரியும்.

'தலைக்கு ஆபத்தை'த் தேடிக்கொண்ட குருசாமிக்கு இதிலும் துணை நின்ற குஞ்சிதம் அம்மையாரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

'பார்ப்பனப் பகைவர்' என்று நிந்திக்கப்பட்ட - நிந்திக்கப்படும் - பெரியாரின் விருப்பப்படி, குத்தூசி குருசாமியார் இவ்வளவு பெரிய ஆபத்தை மடியில் கட்டிக்கொண்டார்.

அப்படிக் காப்பாற்றப்பட்டவர்களில், இரு தலைவர்கள் இந்த நாட்டு மரபுப்படி பார்ப்பனர்கள் ஆவர்.

அவர்களைப் பெரியாரோ, குருசாமியோ திராவிடர் கழகத்தவரோ காட்டிக் கொடுக்கவில்லை; காப்பாற்றி உதவினார்கள். அது அக்கால இயக்கத்தின் பண்பைக் காட்டுவதாகும்.

போராட்ட வீரர் குருசாமி

இளமையில் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பாடல்களில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த குருசாமி தன்மான இயக்கப்பற்றால் மிக எளிதாகச் சமயத் துறையில் பெரியவராகும் வாய்ப்பைத் துறந்து விட்டார்; கைநிறைய ஊதியம் பெறக்கூடிய அரிய வாய்ப்புகளையும் உதறிவிட்டார்.

முழுநேரப் போராட்ட வாழ்க்கையை விரும்பி மேற்கொண்டார்.

உதட்டிலிருந்து பேசிக் கைதட்டல் பெறும் குறுக்கு வழியில் செல்லாமல், நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து, உணர்வுகளை உரைகளாக்கி, மணிக்கணக்கில் வாதத் திறமையுடன் பொழிந்தார்.

எங்கெங்கோ அலைந்தார்; வீட்டில் இருந்ததைவிட, இரயிலில் பேருந்துகளில் மேடைகளில் செலவிட்ட நேரமே அதிகம். இதுவே பல பொதுத் தொண்டர்களின் சங்கடமான வாழ்க்கை.

அளவுக்குமேல் அடுக்கிக்கொண்டே போனால், மயிலின் தோகையும் வண்டியின் அச்சினை உடைத்துவிடும்.

கொள்கைவேள் குத்தூசி குருசாமியார் அந் நிலைக்குத் தள்ளப்பட்ட செய்தியைப் பிரிட்டனில் கேட்டபோது, காந்தம்மாவும் நானும் பட்ட வேதனை சொற்களில் அடங்காது.

48. நான் யாருக்கு உரியவன்?

தாயகம் திரும்பினோம்

குத்தூசி குருசாமியாரின் உடல்நிலைப் பற்றி வந்த செய்தியை அடுத்து மற்றோர் செய்தி இலண்டனுக்கு எட்டியது.

நான், சென்னை திரும்பியதும், சைதாப்பேட்டை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராக நியமிக்கப்படலாமென்ற வதந்தி சென்னையில் மையமிட்டு, விரைந்து இலண்டனுக்கு எட்டிற்று.

அது துணை இயக்குநர் பதவிக்கு இணையானது.

எனினும், வகுப்பறைகளோடு முடங்கவேண்டிய அப் பதவியின் மேல் எனக்குப் பற்று ஏற்படவில்லை.

எதற்கும் ஆயத்தமாக இருப்போம் என்று, கல்வி உளவியல் பற்றிச் சில புதிய நூல்களை வாங்கினேன்; படித்தேன்; பக்குவப்படுத்திக் கொண்டேன்.

குறிப்பிட்ட காலம் முடிந்ததும் தாய் நாட்டிற்குத் திரும்பினோம்.

போலந்து நாட்டிற்கு உரிய 'படோரி' என்ற கப்பலில் பயணமாகி, பாதுகாப்பாகப் பம்பாய் வந்தடைந்தோம்.

'படோரி' எண்ணூறு பயணிகளோடு வந்தது, இவ்வளவு பேரைத் தணிக்கை செய்து அனுப்ப, சுங்க அலுவலர்கள் காலை ஆறு மணி முதல் மாலை நான்கு மணி வரை, பத்து மணி நேரம் எடுத்துக்கொண்டார்கள்.

அதற்கு இரட்டிப்பான எண்ணிக்கையினரை இலண்டனில் இரண்டு மணிகளில் சுங்கத்தணிக்கை முடித்ததை நினைவுகூர்ந்து கொண்டோம்.

ஏற்கெனவே சுற்றுலாகம்பெனி வழியாகச் சென்னைக்குச் செல்லும் விமானவண்டிப் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தோம். அதன்படி

அன்றிரவே சென்னைக்குப் புறப்பட்டோம்; நலமே சென்னை வந்து அடைந்தோம்.

சென்னை மையப் புகைவண்டி நிலையத்தில் குடும்பத்தினரும் நண்பர்களும் கூடி வரவேற்றார்கள்.

குழந்தை திருவள்ளுவன் என்னை அடையாளம் கண்டு திகைத்தான்.

பிறகு மின்னலென ஓடித் தாயின் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? அன்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு செனாய் நகர் சென்றோம்.

அண்ணன் குருசாமி உடல் நலம் பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ந்தோம். ஆறு திங்கள் ஓய்வுக்குப்பின், மீண்டும் சுற்றுலாவைத் தொடங்கிவிட்டார்.

இதற்கிடையில், டாக்டர் உமாபதி முதலியாரிடம் ஓமியோபதி முறை மருத்துவம் பார்த்துக் கொண்டார். அது அவர் உடம்பிற்கு ஏற்றுக் கொண்டது.

என்னை மீண்டும் துணை இயக்குநராகவே நியமித்தார்கள். மனநிறைவோடு பணியில் சேர்ந்தேன்.

கோவைக் கண்காட்சியைத் திறந்து வைத்தேன்

அலுவலக வேலை அதிகமாயிருந்தது. அங்கும் இங்கும் உரையாற்ற அழைத்தார்கள். அத்தோடு இயக்குநர் திரு. சதாசிவ ரெட்டிதான் போக வேண்டிய இடங்கள் இரண்டொன்றிற்கு என்னை அனுப்பி வைத்தார்.

'தென்னிந்திய ஆசிரியர் கழகம்' என்ற ஓர் அமைப்பு பல்லாண்டு களாக ஆசிரியர்கள் நலனைப் பாதுகாப்பதோடு, கல்வி பற்றி ஆழ்ந்து ஆரய்ந்து கருத்து அறிவிக்கும் மையமாக இயங்கி வந்தது.

அது ஆண்டுதோறும் மாநிலக் கல்வி மாநாட்டை நடத்தும். 1951 இல் அந்த மாநாடு கோவை நகரில் டைபெற்றது.

சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக விளங்கி, விலகி, ஓய்வு பெற்றிருந்த சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் வரவேற்புக் குழுத் தலைவராக விளங்கினார்.

அவரது அழைப்பின் பேரில், இயக்குநர் ரெட்டியார் மாநாட்டின் கல்விக் கண்காட்சியைத் திறந்துவைக்க ஒப்புக்கொண்டிருந்தார்.

கடைசி நேரத்தில், இயக்குநர் சென்னையில் இருக்கவேண்டிய பெரும் பொறுப்பு ஒன்று வந்தது.

இயக்குநர் என்னை அழைத்து, தமக்குப் பதிலாகப் போய்க் கண்காட்சியைத் திறந்து வைக்கும்படி இருபத்துநான்கு மணி அறிவிப்போடு ஆணையிட்டார்.

நான் நழுவப் பார்த்தேன்.

''இரயிலில் இடம் கிடைக்காது; கோவையில் தங்குவதற்கும் இடம் கிடைக்காது'' என்று சொன்னேன்.

தொலைபேசி வழியாகப் புகைவண்டியில் இடம் கிடைக்கும்படி செய்தார்.

ஜி.ஆர். தாமோதரன்

''பீளைமேடு ஜி.ஆர். தாமோதரன் என்னோடு சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் இருக்கிறார். எனக்கு மிகவும் வேண்டிய பெரிய மனிதர். நீ அவரோடு தங்கு.

''நானே, தொலைபேசி வழியாக, நீ அவருடைய விருந்தாளியாகச் செல்வதைத் தெரிவித்து விடுகிறேன்'' என்று சொல்லியபடியே கோவையோடு தொடர்பு கொண்டார். திரு. தாமோதரனிடம் தெரிவித்தார்.

அவ்வேற்பாட்டின்படி, இயக்குநருக்குப் பதில் நான் கோவை சென்றேன்; இட்ட பணியினை நிறைவேற்றினேன்; அங்கே சர்.ஆர்.கே. சண்முகம் முதல் பலருடைய பாராட்டைப் பெற்றுக்கொண்டு சென்னை திரும்பினேன்.

திரு. ஜி.ஆர். தாமோதரனின் இல்லத்தில் அவரது விருந்தாளியாகத் தங்கினேன்; அன்பான, பண்பான உபசரிப்பைப் பெற்றேன்.

அப்போது ஏற்பட்ட நட்பு, வளர்பிறையென வளர்ந்துள்ளது. இயக்குநர் ரெட்டியாரின் மதிப்பீடு முழுக்கமுழுக்கச் சரி என்று மெய்ப்பித்து வருகிறார்.

எப்போதும் என்னிடம் வரம்புக்கு அப்பாற்பட்ட சலுகை பெற அவர் முயன்றதே இல்லை.

நெல்லூர் மாவட்ட விளையாட்டுப் போட்டித் தலைமை

நெல்லூர் மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் 1952 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இயக்குநர் தலைமையில் நடக்க ஏற்பாடாகி இருந்தது.

அரசின் உடனடிப் பணி பற்றி, இயக்குநர் அங்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

மீண்டும் மாற்று ஆளாகச் சென்றேன். அமைப்பாளர்களும் பொது மக்களும் என்னைப் பரிவோடு நடத்தினார்கள்; நானும் பாசத்தோடு பழகினேன்.

ஆங்கிலக் கருத்தரங்கு தொடக்கம்

சென்னையில் பிரிட்டிஷ் கௌன்சில், ஆங்கில மொழிக் கருத்தரங்கு ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. இயக்குநர் திரு. ரெட்டி அதைத் தொடங்குவதாக அறிவித்து இருந்தார்கள்.

தொடக்கத்திற்கு இரண்டு மணி நேரம் இருக்கையில், இயக்குநர் வருகை தலைமைச் செயலகத்தில் தேவைப்பட்டது. திரு. சதாசிவ ரெட்டியாருக்குப் பதில் நான் சென்றேன்; கருத்தரங்கைத் தொடங்கி வைத்தேன்.

''ஆங்கிலமொழி இங்கிலாந்தில் பிறந்தது; ஆனால் அது அவர்களுக்கு மட்டும் உரியதல்ல. முயற்சி எடுத்துக் கற்றுக்கொள்ளும் எவருக்கும், கற்ற மொழி சொந்த மொழியாகிறது. ஆங்கிலத்தின் நிலையும் அதுவே.

''இன்றைய சூழலில், நிர்வாகத்திற்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்து கிறோம். அயல்நாட்டுப் படிப்பிற்கு அது பெரிதும் உதவுகிறது.

''எனவே ஆங்கிலம் கற்றுத்தரப்படுகிறது; கற்பதை முறைப்படி கற்றுக் கொள்ளுதல் நல்லது; பேசாமல் பயன்படுத்துங்கள். மொழித் தீண்டாமையை விட்டுவிடுங்கள்'' இப்படி என் கருத்தரங்கத் தொடக்க உரை அமைந்தது.

தமிழ் வளர்க்கும் மாணவர் மன்றம்

'மாணவர் மன்றம்' என்ற தமிழ்நாடு தழுவிய அமைப்பொன்று பல்லாண்டுகளாக இயங்கி வருகிறது. மயிலை சிவமுத்து, டாக்டர் தருமாம்பாள், பண்டிதர் எஸ்.எஸ். அருணகிரிநாதர் முதலியோர் மன்றத்தின் தொடக்ககால உயிர்நாடிகள்.

தமிழைப் புறக்கணித்து வந்த காலத்தில் மாணவர்களிடையே தமிழ்ப் பற்றையும் தமிழறிவையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, மாணவர் மன்றம் செயல்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் எட்டாம் வகுப்பு மாணாக்கருக்கும் பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கும் அரசின் பொதுத் தேர்வுகளுக்கு முன், மன்றம், அதே முறையில் தேர்வுகளை நடத்தி ஒத்திகைப் பயிற்சி கொடுக்கும்.

அதிகப்படியான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கும்.

பேச்சு, எழுத்து, ஒப்புவித்தல் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கும்.

ஆண்டுக்கு ஆண்டு மன்றத்தின் புகழ் பரவிற்று; போட்டிகளில் பங்கு கொள்வோர் எண்ணிக்கை பெருகிற்று.

இடையூறு நீக்கப்பட்டது

அழுக்காறு திரண்டது; துணை இயக்குநர் ஒருவர் வாயிலாக அந்த அழுக்காறு செயல்பட்டது.

மாணவர் மன்றம் நடத்தும் போட்டிகளில் மாணாக்கர்களைப் பங்கு கொள்ளச் செய்து, தேர்வுச் சுமையையும் அதுபற்றிய கிலியையும் வளர்க்கவேண்டாம்.

'பள்ளிக்கூடக் கட்டடங்களை அந்தப் போட்டிகளுக்குப் பயன்படுத்த வேண்டாம்' இப்படியொரு சுற்றறிக்கையை துணை இயக்குநர் ஒருவர், திடீரென்று அனுப்பிவிட்டார்.

அவர் இதுபற்றி இயக்குநரிடம் சொல்லவில்லை.

சுற்றறிக்கை இடியென வீழ்ந்தது. மாணவர் மன்ற முன்னோடிகள் டாக்டர் மணவாள இராமானுஜத்திடம் உதவி கோரினார்கள்.

அவர் இயக்குநரிடம் அழைத்துச் சென்றார். மறுபரிசீலனை கோரினார்.

இயக்குநர், அதுபற்றி என்னோடு கலந்தாலோசித்தார். துணை இயக்குநரின் ஆணையை மாற்றினார்.

கட்டாயப்படுத்தியதாகப் புகாருக்கு இடங்கொடாமல், தேர்வுகள் நடத்த, மாணவர் மன்றத்திற்கு உரிமை தந்தார்.

அந்த உரிமை இன்றுவரை தொடர்ந்து இருக்கிறது.

தமிழ் வளர்க்க, நேரத்தில் நான் ஆற்றிய சிறு உதவியாக அதைக் கருதுகிறேன்.

பாடநூலில் என் கட்டுரை

மாணவர் மன்றம் அச்சிறு உதவியை மறக்கவில்லை.

அடுத்து வந்த ஆண்டு விழாவில், டாக்டர் மணவாள இராமானுஜம் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற என்னையும், பரிசு வழங்க என் மனைவி காந்தம்மாவையும் அழைத்துப் பெருமைப் படுத்தினார்கள்.

மன்ற அமைப்பாளர்களின் வேண்டுகோளுக்கிசைய, என் உரையை முன்கூட்டியே எழுதிக்கொடுத்தேன். அச்சிட்டு, ஆண்டு விழாவில் வழங்கினார்கள்.

மாணவர்கள் கற்கும் பருவத்தில் கல்வியின்பால் முனைப்பாக இருக்க வேண்டுமென்பது; உரையின் மையமாக அமைந்தது.

அவ்வுரை, சென்னைக்கு அப்பாலும் ஆசிரிய உலகத்தைக் கவர்ந்தது.

எனவே, அடுத்தமுறை எட்டாம் வகுப்புக்கான அரசின் பாட நூலைப் பதிப்பித்தபோது 'அரிய படிப்பினை' என்னும் தலைப்பில் அவ்வுரை இடம் பெற்றது.

அதற்காக நான் ஊதியம் ஏதும் பெறவில்லை என்பதை இங்கே குறிக்கவேண்டும்.

முதல் பொது நூலகச் சட்டம்

மாந்தர் தோற்றுவாயில், 'தமிழர்கள் மூத்தவர்கள்' என்பது அறிஞர்கள் அறிந்த ஒன்றாகும்.

அதேபோல் சிந்தனைகளிலும் தமிழர்கள் முன்னோடிகள். பல நல்ல கருத்துகள், நல்ல முயற்சிகள் ஆகியவற்றின் முன்னோடிகள் தமிழர்கள். இத்துறையில், நாம் வேறு எந்தப் பிரிவினருக்கும் பின்னடைந்தவர்கள் அல்லர்.

முதலில் பொது நூலகச் சட்டம் ஒன்றை இயற்றிய பெருமை சென்னை மாகாணத்திற்கே உரியதாகும்.

டாக்டர் அரங்கநாதன் என்ற நூலக அறிஞரின் உந்துதலால், சென்னை மாகாணம் அத்தகைய சட்டமொன்றை இயற்றியது.

பழைய யானையைக்கொண்டு புது யானையைப் பயிற்றுவிப்பது போல், பொதுக்கல்வி இயக்குநருக்கு உள்ள செல்வாக்கு, வாய்ப்பு முதலியவற்றைக் கொண்டு, பொது நூலகப் பணியை வளர்ப்பது எளிதென அப்போது கருதப்பட்டது.

எனவே, பொதுக்கல்வி இயக்குநரே, பொது நூலக இயக்குநர் என்று சட்டம் சொல்லிற்று.

அதன் விளைவாகப் பொது மக்களிடம் படிப்பு ஆர்வத்தை வெள்ளமென வளர்க்க முடியுமென்று எதிர்பார்த்தோம்.

சிறுவர் சிறுமியர்களிடையே படிக்கும் வழக்கத்தை வளர்த்து விட்டால், அது காலமெல்லாம் செயல்படும்.

சிறுவர் சிறுமியருக்காகத் தனிநூலகம் தேவை என்று இயக்குநர் உணர்ந்தார்.

வயது வந்தவர்களுக்கான பொது நூலகங்களை, மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு விட்டுவிட்டு, பொதுக்கல்வி இயக்கக வளாகத்தில், சிறுவர்க்கான நூலகத்தைத் தொடங்கினார்.

அதன் முதல் நூலகர், செல்வி சம்யுக்தா என்னும் அம்மையார்.

அவர் நூலகப் படிப்பிலும் பட்டம் பெற்றிருந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் மாவட்டக்கல்வி அலுவலர் நிலையிலிருந்த என் இனிய நண்பர் திரு. புல்லையாவைத் திருமணம் செய்து கொண்டார்.

ஆந்திர மாநிலம் பிரிந்தபோது, அப் பகுதிக்குச் சென்றார். திரு. புல்லையா, பொதுக்கல்வி இயக்குநராகவும் ஆந்திரப்பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருமுறையும் விளங்கினார். ஆந்திர வங்கியின் இயக்குநர்களில் ஒருவராக இயங்குகிறார். தற்போது ஆந்திரமாநில சாரணர்களின் தலைமை ஆணையராகச் செயல்பட்டு வருகிறார்.

திருமதி. சம்யுக்தா இப்போது ஆந்திர மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களில் ஒருவர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திர வீட்டு வசதி வாரியத் தலைவராக இருந்து அரும்பணியாற்றி உள்ளார்.

திருமதி. புல்லய்யா சாரணீய இயக்கத்தில் ஊதியம் பெறாது சிறந்த பணி ஆற்றி வருகிறார்.

முதல்வர் குமாரசாமி ராஜாவின் பெருந்தன்மை

சிறுவர் நூலகத்தின் முதல் ஆண்டு விழாவிற்கு அப்போதைய முதல் அமைச்சர் மாண்புமிகு பி.எஸ். குமாரசாமி இராஜா தலைமை தாங்கினார்.

முதலமைச்சரின் வருகைக்காக, இயக்குநருக்கு அடுத்து கல்வி அலுவலர்களும் நிலை, பணி, மூப்பு வரிசையில் நின்று கொண்டிருந்தோம்.

உரிய நேரத்தில் வந்திறங்கிய முதலமைச்சரை இயக்குநர் வரவேற்று விட்டு, வரிசையாக நின்றிருந்த மற்ற அலுவலர்களுக்கு அமைதியாக அறிமுகம் செய்து வந்தார்.

மூன்றாம் இடத்தில் நின்றிருந்த என்னை அறிமுகம் செய்கையில், திரு.பி.எஸ். குமாரசாமி ராஜா, என்னைத் தோளில் தட்டி,

''இவரைச் சில ஆண்டுகளாகத் தெரியும். இவரும் நானும் ஏற்காட்டில் ஒரே கூடாரத்தில் தங்கியிருக்கிறோம்'' என்று அறிவித்துவிட்டு,

''நலந்தானா?'' என்று கேட்டார்.

என் சகாக்களின் கண்களில், நான் திடீரென மிகவும் உயர்ந்து விட்டேன்.

ஆண்டுவிழா இனிது நடந்து முடிந்தது; முதலமைச்சரை வழியனுப்பிய பிறகு, இயக்குநர், ரெட்டியார் என்னைப் பார்த்து,-

முதலமைச்சர் உனக்கு இவ்வளவு வேண்டியவர் என்பதைக் காட்டிக் கொள்ளவே இல்லையே!'' என்று குற்றம் சாட்டும் பாவனையில் கேட்டார்.

''முதலமைச்சர் பண்போடு, என்னைப் போன்ற அலுவலரை அடையாளம் காட்டுகிறார்.

''நான், அவ்வளவு பெரியவரிடத்தில் உரிமை கொண்டாடலாமா?' என்று மெதுவாகப் பதில் கூறினேன்.

''நெ.து.சு. அளவுக்கு மீறிய தன்னடக்கம் உடையவர்'' என்று துணை இயக்குநர் வி.கே. கிருஷ்ணமேனன் இடைமறித்துச் சொல்லி, என்னைக் காப்பாற்றினார்.

ஆச்சரியமான மனிதன்

மறுநாள் அலுவலகத்தில், இயக்குநர் இதைப்பற்றி மீண்டும் பேசினார்.

இவ்வளவு வேண்டிய முதலமைச்சர் ஆட்சிக் காலத்தில் அமைச்சர் மட்டத்தில் உனக்குத் தீங்கு இழைக்கப்பட்டது.

உன் மாநகராட்சிப் பணிக்காலத்தை துணை இயக்குநர் பதவிக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று விதிமுறைக்கு மாறாக - கொடுத்த வாக்குறுதியையும் மீறி - ஆணை வந்தது.

''அமைச்சர் பக்தவத்சலத்தைக் கொண்டும் அதற்குப் பரிகாரம் தேடவில்லை; உனக்கு வேண்டிய முதலமைச்சரின் கவனத்திற்கும் கொண்டுபோய், நியாயம் பெற்றுக் கொள்ளவில்லை. நீ ஆச்சரியமான மனிதன்'' என்று இயக்குநர் சதாசிவ ரெட்டி பாராட்டினார்.

நம்பிக்கை வளர்ந்தது

அப்போது, அவர் வேறொரு நிகழ்ச்சியையும் நினைவு படுத்தினார்.

''பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிக்கு உன் மனைவி மனு போட்டார். நான், அலுவலர் பொறுக்குக் குழுவில் இருந்து அவரைப் பேட்டி கண்டேன். அவருக்குப் போர்ப் பணி முன்னுரிமை இருந்தது. அதனால், உன் மனைவியை எளிதாகத் தேர்ந்தெடுக்கலாம்.

''ஒரே குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் உயர்ந்த பதவிகளில் இருப்பது நல்லதா என்ற குழப்பத்தில், உன் மனைவியை எடுக்காமல், வேறொருவரை எடுத்துவிட்டோம். அதைப் பற்றியும் நீ குறைபட வில்லை.

''உன் நிலையில் வேறொருவர் இருந்தால், இவ்வளவு நெருக்கமான முதலமைச்சர் வாயிலாக மனைவிக்கே அவ் வேலையைப் பெற்றிருப்பார்கள்'' என்று சொல்லி வியந்தார்.

''தான், தன் குடும்பம் என்ற சிந்தனையில் சுழல விட்டால் பொது மக்கள் நலம் குன்றிவிடும். ஆசைக்கு அளவேது'' என்று கீழ்க்குரலில் கூறியதைக் கண்டு இயக்குநர் மகிழ்ந்தார்.

அவர் என்பால் வைத்து இருந்த நம்பிக்கை வளர்ந்தது.

தியாகராயர் கல்லூரி தொடக்கவிழா

சென்னை வண்ணாரப் பேட்டையில் இயங்கி வரும் சர். தியாகராயர் கல்லூரியின் தொடக்கம், நான் மாநகராட்சிப் பணியில் இருந்தபோது நடந்தது.

அதைத் தொடங்குவதற்கு அச்சாணியாக இயங்கியவர் அன்றைய மாநகர ஆட்சி வடிகால் பொறியர், திரு. இராமசாமி செட்டியார் ஆவார்.

அவர் சர். தியாகராயருக்கு உறவினர். வெள்ளை உள்ளத்தினர். பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

அவருக்குத் துணை நின்ற பலரில் திரு. பார்த்தசாரதி நாயக்கரும், திரு. ஆதிகேசவலு நாயக்கரும் நினைவிற்கு வருகிறார்கள்.

அக் கல்லூரியின் தொடக்க விழாவில், நான் அவையில் வீற்றிருக்க வாய்த்தது. நான் துணை இயக்குநராக இருக்கையில் அக்கல்லூரியின் தமிழ்ப் பேரவை விழாவில் பேசும்படி என்னை அழைத்தார்கள். டாக்டர் பி. சுப்பராயன் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

எங்களை வரவேற்கையில், திரு. ஆதிகேசவலு நாயக்கர் 'நெ.து.சு. எங்கள் செங்கற்பட்டு மாவட்டக்காரர், என்பதால் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்'' என்று சொன்னார்.

டாக்டர் சுப்பராயன் உரையாற்றுகையில் ''நெ.து.சு. சேலம் மாவட்டத்தின் தத்துப்பிள்ளை. ஆகவே நாங்கள் மகிழ்கிறோம்'' என்று கூறினார்.

''நான் தமிழ்நாட்டின் தொண்டன்; இந்தியக் குடிமகன்'' என்று பதில் கூற வேண்டுமென்ற எண்ணம் மின்னிற்று.

ஆனால், பெரியவர்கள் முன் ஊமையாக இருந்துவிட்டேன்.

49. இராசாசியை முதல் அமைச்சர் பதவி தேடி வந்தது

இயக்குநரைத் தேடிவந்த ஆர்.கே. சண்முகம் செட்டியார்

1952 ஆம் ஆண்டின் முற்பகுதியில் திரு.டி. சதாசிவ ரெட்டியாரின் ஓய்வு பெறும் நாள் வந்தது.

அதற்கு முன்னர், தமது சகாவாகிய திரு. வி.ஆர். அரங்கநாத முதலியாருக்குத் தற்காலிக இயக்குநர் பதவிக்கு ஏற்பாடு செய்து விட்டு ஒரு திங்கள் சதாசிவ ரெட்டியார் விடுப்பில் சென்றார்.

பின்னர், அதை மற்றோர் திங்களுக்கு நீடித்தார்.

திரு. அரங்கநாத முதலியார் இயக்குநராக இருக்கையில், திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார் இயக்குநர் அலுவலகம் தேடி வந்து, முன்னவரைப் பேட்டிக் கண்டார்.

அவருக்குப் பேட்டி கொடுத்தபோது, இயக்குநர் என்னைக் கூப்பிட்டு உடன் வைத்துக்கொண்டார்.

ஆர்.கே. சண்முகம் எது பற்றி வந்தார்?

கோவை நகரில், தமது தாயார் ஸ்ரீரங்கம்மாள் பெயரில் ஒரு உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்கு ஆலோசனையும் அனுமதியும் கோரி வந்தார்.

கோவை நகருக்கு உயர்நிலைப்பள்ளி தேவைதானா?

இதை ஆய்ந்தோம்; ஆண்டுக்கு ஆண்டு மக்கள் தொகை பெருகிவரும் கோவை நகருக்கு மேலும் ஒரு உயர்நிலைப் பள்ளி அதிகமில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

அப்படி அனுமதிப்பதனால், ஓராண்டிற்கு முன்பே, அனுமதி கொடுக்கும்படி சர். சண்முகம் கோரினார்.

அதுவரை அப்படிக் கொடுத்ததில்லை, எனவே, இயக்குநர் நிகைத்தார்.

அனுமதியைப் பெற்றுக்கொண்டு, முழுமையான கட்டடத்தைக் கட்டி, தளவாடங்களை ஆயத்தம் பண்ணிவிட்டு உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க இருப்பதாக, ஆர்.கே.எஸ். கூறினார்.

''என் நீண்ட பணிக் காலத்தில், ''இப்படி எல்லாவற்றையும் தேடிக் கொண்டு, உயர்நிலைப் பள்ளியைத் தொடங்குபவர், நீங்கள் மட்டுமே என்று பாராட்டிவிட்டு, உரிய மனுவை உடனே அனுப்புங்கள். ஓர் ஆண்டுத் தவணை கிடைக்கும்படி ஆணை கொடுக்கிறேன். என்று, சர். சண்முகத்துக்கு இயக்குநர் உறுதி கூறினார்.

சர். சண்முகம் உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையானவற்றை யெல்லாம் தெரிந்து கொண்டு, சென்றார். அதற்கான மனுவை அனுப்பினார். அனுமதியும் உடனே வழங்கப்பட்டது.

ஓராண்டில் உறுதியான கட்டடத்தைக் கட்டி முடித்துவிட்டு மேசை, நாற்காலி, கரும்பலகைகள் ஆகியவற்றைச் சேகரித்துக் கொண்டு, ஸ்ரீரங்கம்மாள் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கினார்.

அப் பள்ளி, கோவை நகரில் உள்ள நல்ல உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்றாக இப்போது விளங்குகிறது.

நான், பொதுக்கல்வி இயக்குநரானபின், அந்தப் பள்ளி விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டிற்று.

முதல்வராக சி. சுப்பிரமணியம்

சதாசிவ ரெட்டியார் ஓய்வு பெறும் வயதை நெருங்கினார். சென்னை மாகாண ஆட்சியில் மாறுதல் ஏற்பட்டது.

1952 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி, நூறு இடங்கள்போல் பிடித்தது.

கம்யூனிஸ்ட் கட்சி அறுபத்திரண்டு இடங்களையும், எக்கட்சியிலும் சேராத சுயேச்சையாளர்கள், அறுபத்திரண்டு இடங்களையும் வேறு சில சில்லறைக் கட்சிகள் சில இடங்களையும் பிடித்தன.

மொத்தத்தில் சிறுபான்மையாக இருப்பினும், காங்கிரசு கட்சி பெற்ற அளவு இடங்களை வேறு கட்சி எதுவும் பெறாமையால், அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பு காங்கிரசுக்கு வந்தது.

எவர் முதலமைச்சராவது என்ற கேள்வி பிறந்தது. திரு. சி. சுப்பிரமணியம் முதலமைச்சராக வேண்டும் என்று அகில இந்திய காங்கிரசின் மேலிடம் அறிவித்தது.

திரு. சி. சுப்பிரமணியம், அப்போது வழக்கறிஞராக விளங்கினார். திங்களுக்கு நாலாயிரம் ரூபாய்போல் சம்பாதித்தார்.

அவர் திரு. பா.ச. கைலாசம் அவர்கள் இல்லத்தில் சேத்துப்பட்டில், பச்சையப்பன் விடுதி சாலையில் வந்து தங்கினார்.

மேற்படி அறிவிப்பு வந்த சில மணிகளுக்குள் நான் அங்குச் சென்று, முதலமைச்சர் என்று குறிப்பிடப்பட்ட திரு. சி.சு.வுக்கு மாலை யணிவித்து மகிழ்ந்தேன். மகிழ்ச்சி நீர்க்குமிழ் ஆகிவிட்டது. முடிவில் மாற்றம். இராசாசி முதல்வர் ஆனார்.

மேலிடம் தனது முடிவை மாற்றிக் கொண்டது; இராசாசி அவர்களை முதல் அமைச்சராக்க விரும்பியது.

காமராசரை இராசாசியிடம் தூது அனுப்பியது.

காமராசர், இராசாசியை முதல்வராக இசைய வைத்தார்.

அதனால், சி.சு.வுக்கு 'கை'க்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போயிற்று.

முதலமைச்சர் இராசாசி, தமது அமைச்சரவையில், திரு.சி. சுப்பிரமணியத்தைச் சேர்த்துக்கொண்டு, அவரை நிதி அமைச்சர் ஆக்கினார்.

திரு. சி.எஸ். காலமெல்லாம் இராசாசியிடம் பற்றோடு வாழ்கிறார்.

கல்வி அமைச்சர் யார்? ஆந்திராவைச் சேர்ந்த டாக்டர் எம்.வி. கிருஷ்ணராவ்.

இராசாசிக்குச் சட்டமன்ற உறுப்பினர் பதவிபெற என்ன செய்தார்கள்.

தேர்தலுக்கு நிற்க வைக்காமல், ஆளுநர் நியமனத்தால், சட்டமன்ற மேலவைக்கு உறுப்பினர் ஆக்கினார்கள்.

முதல்வர் இராசாசிக்குப் பெரியார் ஆதரவு

இராசாசி, பெரியார் ஈ.வெ.ரா.வின் ஆதரவைக் கோரி தூது அனுப்பினார்.

பெரியார், தமக்கே உரிய தனியான பெருந்தன்மையோடு திரு. இராசாசியை ஆதரிக்க முன்வந்தார்.

'தன்னல மறுப்பும், தனி வாழ்க்கையில் முற்போக்குச் சிந்தனையும் உருவான முதலமைச்சர் இராசாசியின் ஆட்சியில் அரசியல் கட்சிகளின் தலையீட்டைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் மாநிலம் தழுவிய வளமுழுக்கும், பதுக்கலுக்கும், தொல்லைக்கும் காரணமாகிவிட்ட பங்கீட்டு முறையை எடுத்து விடவேண்டும்' என்றும் ஆலோசனை கூறி ஆதரித்தார்.

'ஆறு அவுன்ஸ்' ஒழிந்தது

இராசாசியும் பெரியார் எதிர்பார்த்தபடியே செயல்பட்டார்.

அரசியல் கட்சிக்காரர்கள் தலையிட்டு நிர்வாகத்தைச் சீர் குலைக்காதபடி, கண்டிப்பாகப் பார்த்துக்கொண்டார்.

அரிசி பங்கீட்டு முறையை எடுத்துவிட்டார். ஆறு அவுன்ஸ் ஆட்சி என்ற அவப்பெயர் நீங்கிற்று.

அதன் விளைவு என்ன?

ஏழை எளிய மக்கள் அட்டைகளை ஏந்திக்கொண்டு, வேளைக் கணக்காக, பங்கீட்டுக் கடைகளின் முன் காத்துக் கிடக்கும் பெருந் தொல்லை ஒழிந்தது.

உணவுப் பொருள்கள் கிடைத்தனவா?

தாராளமாகக் கிடைத்தன; விலையேற்றம் இல்லாமல் கிடைத்தன.

நல்ல காலம் பிறந்துவிட்டது என்று பொதுமக்கள் மனநிறைவும் நம்பிக்கையும் பெற்றனர்.

இராசாசி திரு. அப்பாதுரை முதலியாரை மின்துறையின் தலைமைப் பொறியாளராக நியமித்தார்.

ரெட்டியார் யுனெஸ்கோ இயக்குநரானார்

பொதுக்கல்வி இயக்குநர் சதாசிவ ரெட்டியாரை ஓய்வுபெற விடாமல், அவருக்குப் பணி நீடிப்புக் கொடுத்தார்.

இவை அலுவலர்கள் வட்டாரத்தில் நல்ல நம்பிக்கையை வளர்த்தது.

சில திங்கள் சென்றன. கல்வி இயக்குநருக்கு ஆணை ஒன்று வந்தது.

திரு. சதாசிவ ரெட்டியாரை ஆப்பிரிக்காவைச் சேர்ந்த லைபீரிய நாட்டில் யுனெஸ்கோ நிறுவனத்தில் கல்வி இயக்குநராக நியமித்த ஆணை வந்தது.

எடுத்த எடுப்பில் மூன்றாண்டுகளுக்கு நியமிக்கப்பட்டார்.

அந்த ஆணையை என்னிடம் காட்டினார்; நான் மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவித்தேன்.

''போவதா? வேண்டாமா? என்று இனிதான் முடிவு செய்ய வேண்டும்.

''என்னிடம் நம்பிக்கை வைத்து, எனக்குப் பதவி நீடிப்புத் தந்த முதலமைச்சர் இராசாசியிடம் ஆணையைக் காட்டப்போகிறேன். அவர் போகச் சொன்னால் போகிறேன். இருக்கச் சொன்னால் இருந்து விடுகிறேன். இச் செய்தி உன் உள்ளத்திலேயே இருக்கட்டும்'' என்று ரெட்டியார் கூறினார்.

இராசாசி அறிவுரை

முதலமைச்சரைத் தேடிச்சென்ற அவருக்கு எளிதில் பேட்டி கிடைத்தது.

இயக்குநர் பாரிசிலிருந்து வந்துள்ள ஆணையைக் காட்டினார்.

இராசாசி என்ன சொன்னார்?

''உலக நிறுவனத்தின் நியமனம். இது உங்களுக்கும் பெருமை; நாட்டிற்கும் பெருமை. இந்தப் பதவிக்காலம், நான் கொடுத்த நீடிப்பை விட அதிகம். ஆகவே தயங்காது ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று இராசாசி கோடு காட்டினார்.

திரு. சதாசிவ ரெட்டியார் முறைப்படி அரசுக்கு எழுதி, தம்மை விடுவித்து அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்.

தவறான ஆலோசனை

இரண்டொரு நாள்களில் இச்செய்தி பரவிற்று. பலரும் ஆலோசனை கூறத் தலைப்பட்டார்கள்.

''இப்போதைக்குக் கல்வித்துறையைச் சேர்ந்த எவரையும் இயக்குநராக நியமிக்க வேண்டாம் இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒருவரை நியமித்துவிடுங்கள் என்று அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளேன்'' என்றார் ஒரு பெரியவர்.

இப்படி என்னிடம் நேருக்கு நேராகக் கூறியவர் எவர்?

திரு. வி.ஆர். அரங்கநாத முதலியார்.

அவர் கல்வித்துறைக்குத் தீங்கையும் செய்துவிட்டு, என்னிடம் கூறி, என்னையும் இழிவு படுத்தினார்.

பல்லைக் கடித்துக்கொண்டு ஊமையாக இருந்தேன். ஆனால், சும்மா இருக்கவில்லை.

நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியத்திடம் உடனே சென்றேன்.

''இ.ஆ.ப. (ஐ.ஏ.எஸ்) யைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கப் போவதாக வதந்தி ஒன்று அடிபடுகிறது.

''அது ஈடுசெய்ய முடியாத தீங்காகிவிடும். கல்வித் துறையைச் சேர்ந்த ஒருவரை இயக்குநர் ஆக்குங்கள். அவருக்கு என் முழு ஒத்துழைப்பையும் அளிக்க உறுதி கூறுகிறேன். கல்வித் துறையை இழிவுபடுத்த வேண்டா மென்பதே என் வேண்டுகோள்'' என்று அவரிடம் தெளிவாகக் கூறினேன்.

அதற்குமேல், நான் எவரையும் தேடி அலையவில்லை.

கோவிந்தராசுலு நாயுடு இயக்குநரானார்

சில வாரங்கள் உருண்டன. அரசு சட்டக்கல்லூரி முதல்வர், திரு. கோவிந்தராசுலு நாயுடுவைப் பொதுக்கல்வி இயக்குநராகவும், பொது நூலக இயக்குநராகவும் நியமித்தது.

அவர் விரைந்து இயக்குநர் பதவியை ஏற்றுக் கொண்டார். எனவே திரு. சதாசிவ ரெட்டி ஓய்வு பெற்று, லைபீரியாவில் இயக்குநர் பொறுப்பு ஏற்கச் சென்றார்.

ரெட்டியாரை நியமித்த யுனெஸ்கோ ஆணையில், அவரே தம் விருப்பப்படி ஒரு துணை இயக்குநரைத் தேர்ந்து எடுத்து, நியமித்துக் கொள்ளலாம் என்றிருந்தது. துணை இயக்குநருக்கும் நல்ல ஊதியம் உண்டு.

யுனெஸ்கோ பதவியை மறுத்தேன்

ஆணையை முதலில் காட்டியபோதே ''நான் லைபீரியா செல்வ தானால் எனக்குத் துணை இயக்குநராக வந்துவிடு: நல்ல எதிர்காலம் வரும். இங்கிருக்கிறவர்களும் உன்னைத்தேடி அழைப்பார்கள்'' என்று கூறினார்.

தமிழ்நாடு என்னைப்போன்ற ஆர்வமுள்ள கல்வித் தொண்டனுக் காகக் காத்திருப்பது போன்றும் ஏதோ என் பணியால் ஓரளவாவது முன்னுக்கு வந்து விடுவார்களென்றும் தவறான மதிப்பீடு போட்டுக் கொண்டு, லைபீரியாவைச் சிந்திக்க மறுத்தேன்.

லைபீரியா சென்ற பிறகும் திரு ரெட்டியார் எனக்குக் கடிதம் எழுதி அழைத்தார். அதைப் பற்றிக்கொள்ள அப்போது தவறிவிட்டேன்.

''இளைஞர்களே தயவுசெய்து என்னைப்போன்று கோட்டை விடாதீர்கள். நேர்மையும் உழைப்பும் நம்மவர்களுக்குத் தேவையில்லை. ஒத்து ஊதும் திறமையையே நாடி நாசமாகப் போவார்கள்.

''ஆகவே, உங்கள் உழைப்பு ஒளிவிடக்கூடிய பிற நாடுகளில் அலுவல் கிடைத்தால், அங்குச் செல்லுங்கள்; மதிப்போடு வாழுங்கள். ஆணவத்தை மட்டும் காட்டாதீர்கள். அடிமையாகிப் பல் இளிக்காதீர்கள்.

இயக்கக வளாகத்தில் குடிபுகுந்தேன்

இயக்குநர் கோவிந்தராசுலுவுக்கு ஆர்வத்தோடு, வஞ்சகமில்லாமல் பணிபுரிந்தேன். என்னால் அவருக்குத் தொல்லையேதும் ஏற்படாதபடி விழிப்பாகப் பார்த்துக்கொண்டேன்.

முன்னர் பழக்கமில்லாத என்னிடம் அவர் முழு நம்பிக்கை கொண்டார்.

கல்வி இயக்கக வளாகத்தில் குடியிருக்கும் பங்களா ஒன்று இருந்தது.

அதில் சதாசிவரெட்டி குடியிருந்தார்.

அவர் அதைக் காலிசெய்தபோது, எவர் அந்தப் பங்களாவுக்குக் குடி போவது என்ற கேள்வி எழுந்தது.

இயக்குநருக்கு ஒரு பங்களா இருந்தது. எனவே, அவர் அங்குக் குடியேறவில்லை. இயக்குநர் என்னை அழைத்து ''அவ்வில்லத்திற்கு நீ வந்துவிட்டால், நான் சட்டென்று கூப்பிட்டுப் பேச வசதியாக இருக்கும். உன் வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, இங்கு வந்துவிடு'' என்றார்.

அந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. ஏன்? தனிக்குடித்தனம் வந்துவிட்டால் குடும்பப் பொறுப்பு சுமந்துவிடுமே; எனினும் மறுமொழி கூறாமல் ஏற்றுக்கொண்டேன்.

மாலை வீடு திரும்பியதும் இச் செய்தியைக் காந்தம்மாவிடம் கூறினேன். அவருக்கு இடி வீழ்ந்ததுபோல் இருந்தது.

எனினும் தியாகத்திற்காகவே பிறவி எடுத்த அவர், என் முடிவைப் பற்றி, மறுசொல் சொல்லாமல் அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்.

சில நாள்களில் இயக்கக வளாகத்தில் உள்ள வீட்டுக்குக் குடி பெயர்ந்தோம்.

இரவு பகல் பாராமல், பார்வையாளர்களைக் காணும் நிலைக்கு என்னைத் தள்ளிக் கொண்டேன்.

அனைத்திந்தியக் கல்வி ஆணையம்

அந்தக் காலக்கட்டத்தில், டாக்டர். ஆ. இலட்சுமணசாமி முதலியார் தலைமையில், அனைத்து இந்திய உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆணையம் ஒன்று இந்திய அரசால் நியமிக்கப்பட்டது.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த இந்தியக் கல்வியாளர்களோடு, ஓர் ஆங்கிலேய, ஓர் அமெரிக்கக் கல்வியாளரும் அதில் இடம் பெற்றனர்.

அக் குழுவிற்கு இடப்பட்ட கட்டளை என்ன?

இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் செல்லவேண்டும். கல்வி முறைகளைக் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும். கல்வி நிலையங் களைக் கண்டுவரவேண்டும்.

பல்வேறு பகுதிகளில் உள்ள கல்வி நிலைகளை ஆய்ந்தபின், இந்தியா முழுமைக்கும் காலத்திற்கேற்ற ஒரே சீரான கல்வித் திட்டத்தை உருவாக்கித் தரல் வேண்டும்.

இக் கல்வி ஆணையம், கல்லூரி முதல்வர்கள் போன்ற பல நிலைக் கல்வியாளர்களைப் பேட்டி கண்டு, கருத்தறிதல் முதல் கடமையாகும்.

இலட்சுமணசாமி முதலியார் ஆணையம், ஒவ்வோர் மாநிலத்திற்கும் செல்லுகையில், அந்தந்த மாநில அரசு, தொடர்பு அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் அந்த ஆணையத்தின் விருப்பப்படி பயணத்திற்கும் பேட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

அப்போது இருந்தது தமிழ்நாடு அல்ல; சென்னை மாகாணமே.

அப்பெரும் நிலப்பரப்பிற்குத் தொடர்பு அலுவலனாக நான் நியமிக்கப்பட்டேன்.

அவ் வேலைக்கென்று தனியாக என்னை ஒதுக்கிவிடவில்லை.

துணை இயக்குநர் வேலையையும் பார்த்துக்கொண்டு, தொடர்பு அலுவலராகவும் செயல்பட நேர்ந்தது.

கூடுதல் சுமை பற்றி நான் குறைபடவோ, முணுமுணுக்கவோ இல்லை.

பல அறிஞர்களின் கருத்துகளைக் கேட்கும் வாய்ப்புகள் வாய்ப்போவதை எண்ணி மகிழ்ந்தேன்.

ஆணையத்தின் தலைவர் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியாரை அடிக்கடி கண்டேன்.

அவர் கருத்துப்படி சென்னை, உதகை, விசாகப்பட்டினம், கோவை, மதுரை ஆகிய நகரங்களில் கல்வியாளர்களையும் பெற்றோர்களையும், ஆசிரியக் கழகப் பேராளர்களையும் கண்டு கலந்துரையாடவும், கல்வி நிலையங்களைப் பார்வையிடவும் திட்டம் தீட்டினேன்.

ஒரு சுற்றுலா வாரியம் செய்யவேண்டிய பணிகளையெல்லாம் செய்ய நேர்ந்தது. அப் பட்டறிவு, அப்போது சுமையாக இருப்பினும், பிற்காலத்தில் எனக்குப் பயன்பட்டது.

ஆணையம் ஒரு நகருக்கு வந்து சேருவதற்கு முன்னதாகவே நான் அந்நகருக்குச் சென்று முன்னேற்பாடுகள் செய்வேன். விருந்துகளுக்கு ஏற்பாடு செய்யப் போட்டியிட்டோர் பலராவர்.

எல்லோரிடமும் பணிவாகப் பேசி, முரண் ஏற்படாமல் நிகழ்ச்சிகளை நிரல்படுத்தினேன்.

ஒவ்வொரு நிகழ்ச்சியையும் உரிய நேரத்தில் முடிக்க வேண்டுமே?

ஏதாவது ஒன்று தாமதமாகிவிட்டால், அடுத்தவை தாமதமாகுமே! அத்தகைய நிலையை நீக்குவது எப்படி?

'பழி' ஏற்றுக் கொண்டேன்

இதைப்பற்றி டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அதிகம் கவலைப்பட்டார். நீண்ட உரையாடலுக்குப்பின்.

''நீ பழியேற்றுக்கொள்ள முடியுமா? ஒரு தூதுக்குழுவைப் பேட்டி கண்டு பேசிக்கொண்டிருக்கையில், அதற்குரிய நேரம் முடியும் தருவாயில், நீ உள்ளே நுழைந்து, என்னிடம் நேரம் முடியப்போகிறது என்று காதோடு உரை. நான், வாய் பேசாமல், முகத்தால் வெகுள்வது போல் நடிப்பேன். நீ மனம் புண்படாமல் விலகிக்கொள். ஆனால், நான், நீ நினைவுபடுத்தியதைச் சொல்லி, பேட்டியில் இருப்பவர்களை அனுப்பிவிட்டு, அடுத்ததைக் கவனிக்க உதவுகிறேன்'' என்றார்.

பழியை ஏற்கமாட்டேன் என்று சொல்லமுடியுமா? ஒப்புக் கொண்டேன்.

கல்வி ஆணையத்தின் சென்னை மாகாணப் பயணம் எவ்வித இடையூறும் இன்றிச் செம்மையாக நடந்தது.

அது பல தரக்கல்வி நிலையங்களைக் காண முடிந்தது.

கல்லூரி முதல்வர்கள் உட்படப் பல ஆசிரியக் கழகத்தாரோடு கலந்து உரையாட முடிந்தது.

புலப்பட்டது என்ன?

தொடக்கக் கல்வி வாய்ப்புக்கூடப் பல ஆயிரக்கணக்கான ஊர்களில் இல்லை; இருக்கிற பள்ளிகளுக்கு ஏற்ற கட்டடம் இல்லை; தளவாடங்கள், துணைக்கருவிகள் பஞ்சம் பரவலானது.

போதிய ஆசிரியர்கள் உண்டா? பற்றாக்குறையே உளது!

50. திருவள்ளுவன் விழுந்து பிழைத்தான்

தொழிற் சார்புக் கல்வி

அன்றைய சென்னை மாகாணம் ஓரளவு முன்னேறிய மாகாணம். இங்கே கூட, தகுதி இல்லாத, கட்டடங்களே இருந்தன.

ஆசிரியர்கள் நிலை என்ன?

மொத்தத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து, முப்பது ஆசிரியர்கள் பதவிகள் காலியாக இருந்தன. பதவியில் இருந்தவர்களில் சராசரி முப்பது விழுக்காட்டினர் பயிற்சி பெறாத ஆசிரியர்கள்.

நாடு தழுவிய இக் குறைகளினூடே, நம்பிக்கைக் கீற்று ஒன்று மின்னிக் கொண்டிருந்தது.

திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராகவும் திரு. அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராகவும் இருந்தபோது பள்ளிக் கல்விக்கு ஊட்டம் ஏற்றப்பட்டது.

இல்லாமையையும் பற்றாமையையும் அப்படியே நீடிக்கவிட்டு விட்டு, புதிய போக்கொன்றைச் சென்னை மாகாணம் மேற்கொண்டது.

'எல்லோர்க்கும் ஏட்டுக் கல்வி மட்டுமே' என்ற நீண்ட மரபு கட்டுப்படுத்தப்பட்டது.

சில பெரிய உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் தொழிற் சார்புடைய படிப்பு முறைகள் புகுத்தப்பட்டன.

அந்தந்தப் பாட முறைகளுக்குச் செலவு அதிகம்.

அதையும் பொருட்படுத்தாது, அரசு நிதியுதவி செய்து ஊக்குவித்தது.

இப்போக்கு வரவேற்கத் தக்கதாக இருந்தது. ஏன்?

வெறுங்கருத்து வானில் மிதப்போர் சிலரே; செயற்பாடு முயற்சிகளில் நாட்டமுடையோர் பலராவர்.

தொழிற் சார்புக் கல்வித் திட்டங்கள் அத்தகைய பலருக்குப் பிடித்தனவாக இருந்தன.

அவை உயர்நிலை வகுப்புகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டன. அதுவும் விரும்புகிறவர்களுக்கு மட்டுமே.

உண்மை மறைக்கப்பட்டது

அந்தத் திட்டங்களில் பயின்றோர்க்கு வேலை கிடைப்பது எளிதாக இருந்தது.

கல்வி வெள்ளத்தை, இப்படி நல்ல வண்ணம் மடைமாற்றும் போக்கை நடைமுறைப் படுத்தியதில் சென்னை மாகாணம் முன்னோடி யாக இருந்தது.

தொழிற் சார்புடைய கல்விமுறையை இந்திய நாடு பின்பற்ற வேண்டுமென்று இலட்சுமணசாமி முதலியார் தலைமையிலான கல்வி ஆய்வு ஆணையம் பரிந்துரைத்தது.

ஆனால் ஒன்றை மறைத்துவிட்டது! மறந்துவிட்டது என்று வேண்டு மானாலும் சொல்லுங்கள்.

அது என்ன?

சென்னை மாகாணத்தில், தொழிற் சார்புடைய கல்வி முறை நடைமுறையில் உள்ளது; வெற்றிகரமாக செயல்படுகிறது என்ற வரலாற்று உண்மையை அறிக்கையில் குறிப்பிடவில்லை.

ஏதோ, தாங்கள் புதிதாகச் சொல்வது போல் பரிந்துரை எழுதப்பட்டது இது நல்ல மரபு அல்ல. நாம் தான் தோன்றிகள் அல்லர். நமக்கு நீண்ட வரலாறு உண்டு; மரபு உண்டு; சிந்தனைச் சிறப்பு உண்டு; சாதனைப் பெருமைகள் உண்டு.

ஆனால், உலகத்தின் கண்களில், நாம் குள்ளர்களாகவே - சிறியவர்களாகவே - காட்சி அளிக்கிறோம்.

தேவையற்ற நிலையிலும் இருட்டடிப்பில் தனிச்சுவை காணும் தீய இயல்பு, இந்தியர்களைப் பொதுவாகவும் தமிழர்களைச் சிறப்பாகவும் பாழாக்கி வருகிறது.

ஒவ்வோர் பெரியவரும் தமக்கு முன்னே, தெரிந்தவரோ செயற்கரிய செய்தவரோ இல்லாததுபோல், ஓர் மாயையை உருவாக்கிக் கொண்டே போனால், நாட்டில் அறிஞர்களும் சாதனையாளர்களும் எப்படித் தோன்றுவார்கள்?

சொல்லத் தகுதியான பெரும் நிகழ்ச்சிகளை - நன் நிகழ்ச்சிகளை - சொல்ல வேண்டிய நேரங்களில் சொல்லத் தவறிவிட்டால் - அவற்றை இருட்டடிப்புச் செய்யத் துணை நின்றால் - எவரெஸ்ட் முடி அனைய நம்மவர்களும், பறங்கிமலைக் குன்றாக உலகிற்குத் தோன்றுவதில் வியப்பு என்ன!

ஒவ்வோர் இந்தியனும் ஒவ்வோர் தமிழனும் தலைநிமிர்ந்து பார்க்கக்கூடிய சாதனையொன்றை உலகம் கண்டது.

டாக்டர் எஸ். சந்திரசேகரன் என்னும் தமிழர் நோபெல் பரிசு பெற்றார்.

தமிழ்ச் செய்தி உலகம் - இதழ் உலகம் - இதை எவ்வளவுக்குப் பொதுமக்கள் முன் கொண்டு வந்தது?

நம்மவர் ஒருவர் உலகப் பரிசு பெறும் அளவு வளர்ந்துள்ளதைத் திரும்பிய பக்கமெல்லாம் கண்களில் படும்படி வெளியிட்டிருந்தால், அது இளைஞர்களுக்கு ஊக்கமூட்டியிருக்கும்.

அதை விட்டு விட்டு, களவு, கொள்ளை, வழிப்பறி, கற்பழிப்பு, மோசடிச் செய்திகளையே தேடித் தேடிக் கொட்டை எழுத்துகளில் பொது மக்கள் முன் வைக்கும் சமுதாயத்தில்-தலைமுறையில்-எந்த இளைஞருக்கு நோபெல் பரிசு பற்றிய சிந்தனை பிறக்கும்?

எதை விதைக்கிறோமோ அதை அறுக்கிறோம்.

தீய நடத்தைகளைப் பற்றிய செய்திகளையே கொடுத்துக் கொண்டிருந்து விட்டு, சீலம் பழுக்கவில்லையே என்று ஒப்பாரி வைத்துப் பயன் என்ன?

இருட்டடிப்புப் போக்கை விடும் பாடமே நமக்கு அரிச்சுவடி - முதற்பாடமாகும்.

தொடர்புகளை அழிப்பதில் மட்டுமே நாட்டம் செலுத்திவிட்டு, இனப் பகையை வளர்த்துக்கொண்டே, காலம் போக்கும் நம்மைப்பற்றி இப்போது இவ்வளவு போதும்!

திருவள்ளுவன் மாடியிலிருந்து விழுந்தான்

பொதுக்கல்வி இயக்கக வளாகத்தில், நான் குடியிருந்தபோது வேதனையான விபத்து ஒன்று நடந்தது.

இயக்குநர் ஆணைப்படி ஒருநாள் காலை பேராசிரியர் ஹகார்ட்டி என்ற அமெரிக்கக் கல்வியாளரையும் அவரது மனைவியையும் சில கல்வி நிலையங்களைக் காண அழைத்துச் சென்றேன்

பார்வைக்குப்பின், அவர்களைக் கன்னிமாரா ஓட்டலில் இறக்கி விட்டு, பகல் உணவருந்த வீடு திரும்பினேன்.

அந்தப் பங்களாவில், உணவுக்கூடம், கீழே இருந்தது. குடியிருக்கும் அறைகள் மாடியில் இருந்தன.

உணவு அருந்தியபின் மாடிக்குச் சென்றேன்.

அறைக்குள் இருந்த குழந்தை திருவள்ளுவன், தாழ்வாரத்திற்கு ஓடி வந்து என் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்.

அவன் தாயார் வந்து விடுவிக்க, நான் உள்ளே சென்றேன்.

அவன், தனது தாய் பக்கத்திலிருந்த தாழ்வாரத்தின் கைப்பிடிக் கட்டையைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தான்.

இளங்கன்று, அச்சமறியாது! சிறுவன் இமைப்பொழுதில், கைப் பிடியின் குறுக்குக் கட்டையின்மேல் கால் வைத்தான். ஒற்றைக் காலில் நின்றபடியே, கீழே குனிந்து பார்த்தான். கால் நழுவிற்றோ? கை நழுவிற்றோ?

கண் மூடிக் கண் திறப்பதற்குள், 'பொத்'தென்ற ஒலி கேட்டது.

'தம்பி! தம்பி!' என்ற கூக்குரல் கேட்டது.

நான் அறைக்கு வெளியே ஓடி வந்தேன்.

காந்தம்மா, மடமடவென்று, படி இறங்கி ஓடக் கண்டேன்.

நானும் ஓடினேன்.

திருவள்ளுவன், காரோட்டி எதிராசுவின் மடியில் கிடந்தான். கடைசிநிலை ஊழியர் ஒருவர், விசிறிக்கொண்டே அருகில் நின்றார்.

என்ன நடந்தது?

மாடித் தாழ்வாரத்தின் ஓரம் நின்றிருந்த திருவள்ளுவன் குனிந்து பார்க்கையில், நிலைகுலைந்து குப்புற வீழ்ந்தான்.

உயரமான மாடியிலிருந்து நேரே, தரையில் வீழ்ந்து இருந்தால் எலும்பு நொறுங்கி இருக்கும்.

ஆனால், வெளிக் காயமின்றி எப்படிப் பிழைத்தான்?

திருவள்ளுவன் வீழ்ந்த இடத்திற்கு நேர் கீழே, என் ஆஸ்டின் கார், நின்று கொண்டிருந்தது.

காருக்கும் மாடிக்கும் இடையில், பசுங்கொடிகளாலான பூப்பந்தல் தழைத்து இருந்தது.

குப்புற வீழ்ந்த குழந்தையைப் பந்தல் தாங்கிக் கீழே விட்டது.

அவன் காரின் மேல் வீழ்ந்தான்.

காரோட்டி எதிராசு, வாரி அணைத்தார்; மடியில் இருத்தி, குழந்தையோடு பேச்சுக்கொடுக்க முயன்று கொண்டு இருந்தார்.

குழந்தை அதிர்ச்சியடைந்திருந்தான்.

'எங்கே, கண்ணு வலிக்கிறது?' என்று கேட்டபடியே, திருவள்ளுவன் உடலைத் தடவிப் பார்த்தார். அவன் தாயார் காந்தம்மாள்.

எப்படித்தான் பறந்து சென்றார்களோ!

டாக்டரின் பரிவு

என் அலுவலக எழுத்தாளர்களில் இருவர், நுங்கம்பாக்கத்தில், குடியிருந்த டாக்டர் ஒருவரை அழைத்து வந்தனர்.

அவர் அரசு ஊழியத்தில் சேராது; தனியாக மருத்துவத் தொழில் நடத்தி வந்தார்.

அவரே, காரோட்டிக் கொண்டு, விரைவாக வந்துசேர்ந்தார். அவர் நொடியும் வீணாக்காது, திருவள்ளுவனைச் சோதித்துப் பார்த்தார்.

''நல்லவேளை, கைத்தாங்கலாகத் தாங்குவதுபோல் பந்தல் தாங்கிவிட்டுக் காப்பாற்றியுள்ளது; வெளிக்காயமில்லை; உட்காயம் இல்லாதபடி ஆண்டவன் காப்பாற்றி இருப்பார் என்று நம்புகிறேன்'' என்று தேற்றியபடியே திருவள்ளுவனைத் தம் காரின் பின் இடத்தில் படுக்க வைத்தார்.

தாமே காரை ஓட்டிக்கொண்டு, சென்னை, பொது மருத்துவமனைக்கு விரைந்து சென்றார். அக்காரில் நான் தொத்திக் கொண்டேன்.

டாக்டர், பொது மருத்துவமனையில் பலருக்கும் தெரிந்தவர்; நிர்வாக நுணுக்கங்களும் அறிந்தவர்.

எனவே, விரைந்து திருவள்ளுவனைச் சோதிக்க வைத்தார்.

''வெளிக்காயம் இல்லை; உட்காயம் உண்டா, என்று முழுமையாக ஆய்ந்து பார்க்க வேண்டும்'' என்று கூறி, திருவள்ளுவனை மருத்துவ மனையில் சேர்த்துக்கொண்டார்கள்.

பொதுப்பிரிவில், பலவகையான நோயாளிகளுக்கு இடையில் திருவள்ளுவனுக்கு இடம் கிடைத்தது.

அதனால், புது நோய் எதுவும் ஒட்டிக் கொள்ளக்கூடாதே என்பது எங்கள் டாக்டரின் கவலை.

எனவே, மருத்துவ மனையிலேயே வாழும் மருத்துவ அலுவலரிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார்; பலிக்கவில்லை.

மறுநாள், தனிப் பிரிவில் இடம் காலி ஆயிற்று. அதுவும் திருவள்ளுவனுக்கு ஒதுக்கப்படவில்லை.

நாள் தோறும் கடுமையான நோய்களோடும் போராடிப் போராடி, உறுதி பெற்றுவிட்ட மருத்துவர்கள், பொது மக்களோடு பழகும்போது நெளிவு சுளிவு இல்லாமல் நடக்கும் இயல்பைப் பெற்றுவிடுகிறார்கள் போலும்.

திருவள்ளுவன், சில நாள்கள், மருத்துவ மனையில் இருந்தான். காந்தம்மா கவலையோடு பெரும்பாலும் உடன் இருந்தார்.

எவ்விதப் பின் விளைவும் காணவில்லை. அதிர்ச்சி நீங்கிவிட்டது. முழுநலம் பெற்றுவிட்டான். 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய் விட்டது' என்று பூரித்தோம்.

ஈடுகொடுக்க முடியாத பெரும் வேதனைக் குண்டைப் பிற்காலத்தில் எங்கள்மேல் போடவே அப்போது உயிர் தப்பினான் என்று எண்ணவில்லை.

தலைக்கு வந்த தீங்கின்போது திருவள்ளுவனுக்கு முதல் உதவி செய்த அந்த டாக்டரின் பெயர் என்ன? சாரங்கபாணி அய்யங்காரா, சக்ரபாணி அய்யங்காரா என்று தடுமாறுகிறேன்.

என் ஒரே மைந்தனின் உயிரைக் காப்பாற்றிய நல்லவர் பெயரை உறுதியாகச் சொல்லும்படி குறித்து வைத்துக்கொள்ளத் தவறி விட்டதற்கு வேதனையும் வெட்கமும் படுகிறேன்.

மருத்துவர் பெயரை மறந்தேன்

எனது வரலாற்றை எழுதும் நிலை வருமென்று நான் எதிர்பார்க்க வில்லை. இளைஞர்களே நீங்களாவது, வரும்முன் ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.

நாட்குறிப்பு எழுதாவிட்டாலும் குறைந்த அளவு, ஒரு பெரிய பதிவேட்டில், அவ்வப்போது கிடைக்கும் உதவிகளையும் உதவியவர் களையும் குறித்துக்கொண்டு வாருங்கள்.

திருவள்ளுவன் மருத்துவமனையிலிருந்து நலமே வீடு திரும்பிய பிறகு, நுங்கம்பாக்கம் டாக்டரைத் தேடிச் சென்றோம்.

உரிய மரியாதையோடு, கட்டணம் கொடுக்க முயன்றோம்.

ஏவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை.

கட்டணம் பெற மறுத்துவிட்டார்.

''நொடியில் மருத்துவ மனைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்த உதவி ஒன்றே நான் செய்தது. அச் சிறு உதவிக்கு, உங்களிடம் பணம் பெறமாட்டேன்.

''தாங்கள் 'ஏழைகளின் அடைக்கலம்' என்பதைப் பலர் வாயிலாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

''அடிக்கடி, என் உதவியைத் தேட நேரிடாத அளவு, தாங்களும் தங்கள் குடும்பமும் நலமாயிருக்க வேண்டும் என்பதே, என் பிரார்த்தனை. அதையும் மீறி என் கவனிப்புத் தேவைப்படும் போதெல்லாம் ஆள் அனுப்புங்கள்'' என்று கூறி எங்களை அனுப்பி வைத்தார்.

இப்படியும் டாக்டர் இருந்தார்கள்; இருக்கிறார்கள்; வாழையடி வாழையாகத் தொடர்ந்து வருகிறார்கள்.

சில திங்களுக்குப் பிறகு, வேறு காரணங்களுக்காக நான் நுங்கம்பாக்கத்தில் இருந்து சென்னாய்நகருக்குத் திரும்பி விட்டேன். எனவே, நுங்கம்பாக்கம் டாக்டரின் உதவியைப் பெறும் வாய்ப்பு எனக்கு வரவில்லை.

எனினும், நாங்கள் வேறு டாக்டர்களின் பேருதவியைப் பெற நேர்ந்தது.

குடும்ப மருத்துவர்களுக்கு நன்றி

சோகச்சுமையில் உள்ளம் உடைந்த என் மனைவி, பல்லாண்டுகளாக ஏதாவதொரு நோயால் துன்பப்படுகிறார். அது என்னை அவ்வப்போது மிகவும் பாதிக்கிறது.

சென்னையில் டாக்டர் பி. அனுமந்தராவ், டாக்டர். இரத்தினவேல் சுப்பிரமணியம், டாக்டர் உமாபதி முதலியார், டாக்டர் செல்வபதி, டாக்டர் எம்.எஸ். அமரேசன், டாக்டர் மதன கோபால், டாக்டர் பழனியப்பன், கண் மருத்துவர் டாக்டர் ஆபிரகாம், பல் மருத்துவர் டாக்டர் பி.பி. இராசன், அறுவை மருத்துவர் டாக்டர் பாஸ்கர ஆச்சாரியார், டாக்டர் சாமி சண்முகம், தில்லி டாக்டர் சகானி (சீக்கியர்) ஆகியோர் வெவ்வேறு காலங்களில் விழிப்போடும் திறமையோடும் என் மனைவிக்கே, எனக்கே மருத்துவம் பார்த்து, எங்கள் இருவரையும் பேணி வந்தார்கள். காப்பாற்றி வருகிறார்கள்.

அவ்வளவு பெரியவர்களின் திறமை எங்கள் வாழ்நாளை நீடிக்கின்றன.

அவர்கள் எங்களிடம் கட்டணம் கேட்டிருந்தால், அதைக் கொடுக்க முடியாது முறிந்திருப்போம். நாங்கள் இருவரும் இவர்களுக்கு நன்றி யுடையோம்.

திரும்பிப்பாராத, எவர் எவருக்கோ செய்த உதவி, மேற்கூறிய மருத்துவர்கள் வாயிலாகத் திரும்பி வருகிறது; எங்கள் உயிர்காத்தலாகத் திரும்பி வருகிறது. பூரிக்கக் காரணம் உண்டு அல்லவா?

சில அலறுவதுபோல், 'உலகம் முழுவதும் கெட்டுவிடவில்லை' என்று நம்பிக்கை கொள்ளச் சரியான நியாயமும் உண்டு அல்லவா?

எதிரும் புதிருமான நிலைகள், உணர்ச்சிகள் ஒரே நேரத்தில் ஒருவனைச் சுற்றிச் சுற்றித் தாக்குவது போன்ற வேதனை வேறொன்றும் இல்லை.

ஆடும் குதிரை

திருவள்ளுவனை மருத்துவ மனையில் சேர்த்துவிட்டுப் பெரும் கவலையோடு, இருட்டிய பிறகு வீடு திரும்பிய நான் கண்டது என்ன?

குழந்தைகள் ஏறி உட்கார்ந்து ஆடும், மரத்தால் செய்யப்பட்ட குதிரை ஒன்று இருக்கக் கண்டேன்.

''எவரோ ஒரு வெள்ளைக்கார அய்யாவும் அம்மாவும் கொண்டு வந்து வைத்தார்கள். அதோடு இக் கடிதத்தையும் கொடுத்தார்கள்'' என்று என் அடிப்படை ஊழியர் கூறினார்.

கடிதம் எவர் எழுதியது? அமெரிக்கக் கல்வியாளர் ஹார்ட்டி எழுதியது. அத் தம்பதிகள் அந்தக் குதிரையைத் திருவள்ளுவனுக்கு அன்பளிப்பாக ஏற்றுக் கொள்ளும்படி கடிதத்தில் அன்புடன் கோரி இருந்தார்கள்.

காலையில் அவர்களுக்குச் சில கல்வி நிலையங்களைக் காட்ட அழைத்துக்கொண்டு சென்றபோது, அவர்கள் எனது குடும்பம் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். தற்செயலாகத் திருவள்ளுவனையும் கண்டார்கள்.

ஏற்பதா? மறுப்பதா? காலை ஆறு மணிக்கு விமானத்தில் புறப்பட இருக்கும் அவர்களிடம் அதை எப்படித் திருப்பிக் கொடுப்பது? இப்படிக் குழம்பினேன்.

அடுத்த வினாடி அச்சம் ஊட்டும் கருத்து மின்னிற்று.

ஊர் வாயை மூட, உலை மூடி இல்லை.

எனது ஊழியர், 'வெள்ளைக்காரர்' கொடுத்த அப் பரிசைப் பற்றி நான்கு பேர்களோடு பேசக்கூடுமே!

அப்புறம் அவரும் இவரும் இப்படிப் பரிசுகளைக் கொண்டு வந்து, வைக்கத் தொடங்கிவிட்டால்?

பழிக்கும் குற்றத்திற்கும் ஆளாக நேர்ந்துவிடுமே! இக் கருத்து மின்னியதும், நான் துருவாசன் ஆனேன்.

''எவரும் எப்போதும் எதையும் என் பங்களாவிற்குக் கொண்டு வைத்துவிட்டுப் போகவிடாதே. நாங்கள் இருக்கிறபோது வந்தால், நாங்களே விரட்டி விடுவோம்; இல்லாதபோது வந்தால், நீ திருப்பி அனுப்பிவிடு. மறுபடியும் இதுபோல் தவறு நேர்ந்தால், உன்னைத் தொலைத்துவிடுவேன்'' என்றேன்.

ஊழியர் என்ன செய்வார்? ஊமையாக இருந்துவிட்டார்.

அனைத்திந்திய கல்வி மாநாடு

1952 ஆம் ஆண்டின் இறுதியில் பம்பாய் மாநகரில் அனைத்து இந்தியத் தொடக்கக் கல்வி மாநாடு ஒன்றை இந்திய அரசு ஏற்பாடு செய்திருந்தது.

அம் மாநாட்டிற்குச் சென்னை மாகாணத்தின் கல்வி அமைச்சராக விளங்கிய டாக்டர் எம்.வி. கிருஷ்ணராவ் சென்றிருந்தார்; பத்து நாள்களும் பங்குகொண்டார்.

அம் மாநாட்டிற்கு, அப்பொழுது தொடக்கக்கல்வியின் துணை இயக்குநராக இருந்த என்னையும் அவருடன் அனுப்பி வைத்தார்கள்.

பம்பாயில் இரயில்வே மருத்துவராக இருந்த, டாக்டர் சூரிய நாராயணரோடு பத்து நாள்கள் தங்கினேன். அவருடைய விருந்தோம் பலுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளால் இயலாது.

அந்த மாநாட்டில், இந்தியக் கல்வி அமைச்சகத்தில் கூடுதல் ஆலோசகராக விளங்கிய சயதீன், பம்பாய் மாகாண பொதுக்கல்வி இயக்குநர் டாக்டர் பவதே, இந்தியக் கல்வி முன்னோடிகளில் ஒருவரான திரு. ஜே.பி. நாயக் ஆகியவர்களை முதலில் பார்க்கிறேன்.

திரு. ஜே.பி. நாயக் கோலாப்பூர் பகுதியில் காந்தியச் சார்புடைய 'கிராமிய'க் கல்வி முறையைத் தம் முயற்சியால் செயல்படுத்திக் கொண்டிருந்தார்.

எல்லோர்க்கும் கல்வி, தரமான கல்வி, பயனுள்ள கல்வி கொடுப்பதில் நம் நாடு, நம் காலத்திலேயே வெற்றி பெறும் என்னும் முழு நம்பிக்கையோடும், அதனால் பொங்கிய ஆர்வத்தோடும் நாயக் இயங்கி வந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், இந்திய அரசின் தொடக்கக் கல்வி ஆலோசகரானார்; பல்லாண்டு ஆலோசகராகச் செயல்பட்டார்.

நேரு ஆட்சி முதல், லால்பகதூர் ஆட்சி, திருமதி இந்திரா காந்தி ஆட்சி, மொரார்ஜி ஆட்சி ஆகியவற்றிற்கெல்லாம் ஆலோசகராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

பிறகு பூனே 'இந்தியன் கல்வி நிலையம்' என்ற அமைப்பை உருவாக்கினார்.

அக் கழகத்தின் ஆயுள் உறுப்பினர்களில் நானும் ஒருவன்.

திரு நாயக் எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்; சில ஆண்டுகளுக்கு முன்பு, எண்ணற்ற நண்பர்களை ஏங்க விட்டு மறைந்தார்.

51. இராசாசியின் தொடக்கக் கல்வித் திட்டம்

பவதே அறிமுகமானார்

பம்பாயில் நடந்த அனைத்திந்திய தொடக்கக் கல்வி மாநாட்டில் பம்பாய் மாகாணப் பொதுக் கல்வி இயக்குனர் திரு பவதே என்னும் அறிஞருக்கு அறிமுகமானேன்.

மாநாட்டு நாள்களில் சிலமுறை அவரோடு உரையாடினேன்.

அவர் அப் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின், கோலாப்பூர் சிவாஜி பல்கலைக்கழகத் துணை வேந்தரானார்.

துணைவேந்தராக இருக்கையில் அவரது மணிவிழா வந்தது.

பாராட்டத்தெரிந்த மராட்டியர்கள், ஒரு இலட்சம் ரூபாய் திரட்டி மணிவிழா நினைவாக அப் பல்கலைக்கழகத்திற்கு அளித்தார்கள்.

அவ் விழாவிற்கு டாக்டர் வாழ்த்துக் கூறி, நிதியளிப்பைச் செய்து மகிழ்வித்தார்.

டாக்டர் பவதே அவர்களைச் சில முறை கல்வி மாநாடுகளில் இந்தியாவில் கண்டு மகிழ்ந்தேன்.

ஒரு முறை சோவியத் நாட்டுப் பயணத்தில் 1971 ஆம் ஆண்டில் மாஸ்கோவில் கண்டேன்.

இருவரும் ஒரே ஓட்டலில் தங்கியிருந்தோம்.

அதற்கப்புறம் டாக்டர் பவதே பஞ்சாப் மாநில ஆளுநர் ஆனார்.

வெள்ளையர் பள்ளிகள்

நீலகிரி மலையில், 'லவ் டேல்' என்ற இடத்தில், புனித லாரன்ஸ் உயர்நிலைப் பள்ளி என்ற பெயரில் ஓர் உறையுள் பள்ளி நடந்து வருகிறது.

அதே பெயரில் சிம்லா மலையில் ஓர் உயர்நிலைப் பள்ளி நடக்கிறது.

இரண்டு பள்ளிகளும் வெள்ளைக்காரர்கள் நிறுவியவை.

ஆட்சி அணியைச் சேர்ந்த ஆங்கிலேயரும் படையணியைச் சேர்ந்த வெள்ளையரும் தங்கள் பிள்ளைகளின் படிப்பிற்காக, இப்படிச் சில பள்ளிகளை நிறுவிக் கொண்டார்கள்.

அதற்குப் போதுமான சொத்தை அறக்கட்டளையாக்கி வைத்தார்கள்.

மேற்கூறிய இரு பள்ளிகளுக்கும் தனித்தனி அறக்கட்டளை உண்டு.

இரண்டும் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் மேற்பார்வையில் தன்னாட்சி பெற்ற ஆட்சிக் குழுக்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

நம்நாடு அரசியல் விடுதலை பெற்றபிறகு மேற்கூறிய பள்ளிகளில் படிக்கக்கூடிய வெள்ளையர் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவிட்டது.

அதோடு நம்மவரைச் சேர்க்காது வெள்ளையர் மட்டும் படிக்கும் பள்ளிகள் இந்தியாவின் மானத்திற்கு அறை கூவல் அல்லவா?

அதே நேரத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆங்கிலோ இந்தியக் கல்வி நிலையங்களுக்குப் பழைய நிலையில் நிதிப் பாதுகாப்பு அளிக்கும் விதி சேர்க்கப்பட்டது.

எனவே, இந்திய மாணவர்களையும் அத்தகைய பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் ஆணை மாநில அரசுகளால் பிறப்பிக்கப்பட்டது.

புனித லாரன்ஸ் பள்ளி நிதி உதவி பெறாத பள்ளி எந்த மாநில அரசின் மேற்பார்வைக்கும் உட்படாத பள்ளி.

எனினும், இந்தியர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டுமென்னும் உணர்வு பற்றாமல் இருக்குமா?

அப் பள்ளி, இந்திய மாணாக்கர்களைச் சேர்க்க நேரடித் தேர்வு நடத்தும் முறையை மேற்கொண்டது.

தேர்வுக் குழுவின் பணி

பள்ளித் தலைமை ஆசிரியர், இரண்டொரு ஆசிரியர்கள், உளவியல் அறிஞர் ஒருவர், வெளியிலிருந்து கல்வியாளர் ஒருவர் ஆகியோர் கொண்ட தேர்வுக் குழு அமைக்கப்படும்.

அக் குழு மாணாக்கர்களுக்கு எழுத்துத் தேர்வும், பேட்டித் தேர்வும் நடத்தும்.

இரண்டு தேர்வு மதிப்பெண்களையும் கூட்டிப் பார்த்து, மொத்த மதிப்பெண் அடிப்படையில் சிறுவர் சிறுமியரைச் சேர்ப்பது வழக்கம்.

1952 ஆம் ஆண்டு தேர்வுக் குழுவில் நான் இடம் பெற்றேன்.

சென்னைப் பல்கலைக் கழக உளவியல் பேராசிரியர் டாக்டர் ஜோயஸ் அக் குழுவில் இருந்தார்.

இந்தக் கூட்டணி மூன்று ஆண்டுகள் நீடித்தன.

1952 ஆம் ஆண்டு தேர்வுக்குச் சென்று நாங்கள் தலைமை ஆசிரியர் தாமஸ் பங்களாவில் தங்கினோம்.

தலைமை ஆசிரியருக்கு இயக்குநர் சம்பளம்; அவருடைய அன்பான விருந்தோம்பலால் மகிழ்ச்சி அடைந்தேன்.

போய்ச் சேர்ந்த அன்று பிற்பகல் நாங்கள் கூடிப் பேசி, தேர்வுகளை எப்படி நடத்துவது என்று முடிவு செய்து கொண்டோம்.

அடுத்த நாள் காலை அப்படியே தேர்வுகளைத் தொடக்கினோம்.

பெற்ற படிப்பினை

எழுத்துத் தேர்வுக்குப்பின் நேர்முகத் தேர்வில், பரிவான அச்சமூட்டாத-அணுகுமுறையை மேற்கொண்டோம்.

அக் குழுவிலிருந்து பெற்ற அனுபவம் என் அகக் கண்ணைத் திறந்தது.

அரசு அலுவலர் வீட்டுப் பிள்ளைக்கு அதிகார கோபுர அடுக்குபற்றித் தெரிந்தது; விமானம் ஓட்டியின் பிள்ளைக்கு, பல வகை விமானங்கள், அவற்றின் விரைவு, அவற்றின் இயந்திர நுட்பம் முதலியன தெரிந்தன.

ஆசிரியரின் பிள்ளைக்கோ, பாடத் திட்டத்தில் உள்ள நுட்பமான தகவல்கள் நன்றாகத் தெரிந்தன.

குடியானவர்களின் பிள்ளைகளோ, வகைவகையான பயிர்கள் அவற்றின் பயிர் முறைகள் பற்றி நிறையத் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

அலுவலரின் பிள்ளைகளுக்குப் பெரும்பாலும் பயிர் வகைகள் பற்றி ஒன்றும் தெரிவதில்லை.

குடியானவர்களின் பிள்ளைகளுக்கு அலுவலர் அடுக்கோ, விமானத்தின் வகைகளோ தெரிவது அரிது.

வெவ்வேறு பின்னணியிலிருந்து வரும் பிள்ளைகளின் தரத்தையும் தகுதியையும் எப்படி மதிப்பிடுவது?

சம எடையுள்ள நெல்லும் சோளமும் ஒரே மதிப்புடையனவாகுமா?

திறமைக்கு அறிகுறிகள் என்ன?

கூர்ந்து கவனித்தல், கண்டதை மனத்தில் ஈர்த்தல், அது பற்றித் தெரிந்து கொள்ளல் ஆகியவை அறிகுறிகள்.

நகர்ப்புற பங்களாக்களில் வாழ்ந்துகொண்டு, பயிர்களையே பார்க்க வாய்ப்பு பெறாத பிள்ளைகளுக்குப் பயிர் பற்றி அறிவு இன்மை இயற்கையிலுள்ள குறையல்ல; வாழ்க்கைச் சூழலில் உள்ள குறை.

எப்போதோ ஒரு முறை, வானத்தில் பறக்கும் விமானத்தை மட்டுமே, மண்ணிலிருந்து பார்த்த பட்டிக்காட்டுப் பையனுக்கு விமானங்களின் வகை தெரியாதது, மந்த புத்தியா?

அறிந்து கொள்ளும் வாய்ப்பை நாம் கொடுக்கத் தவறியதன் விளைவல்லவா?

சின்னஞ்சிறு வகுப்புகளில் சேர்ப்பதற்குக்கூடத் தேர்வுகள் நடத்தி, தகுதியானவர்கள், தகுதியற்றவர்கள் என்று பிரிப்பது எனக்கு மிகவும் கொடுமையாகத் தோன்றிற்று.

எத்தனையோ அநீதிகள் மண்டியுள்ள தாய்த்திரு நாட்டில், மற்றோர் அநீதிக்குத்தான் துணை போகிறோம் என்னும் வேதனையை அடக்கிக்கொண்டு அப்போதைய பணியை ஆற்றினேன்.

குடிசை வாழ் சிறுமியின் மதி நுட்பம்

அறிவும் அமைதியும் சுறுசுறுப்பும் தன்னம்பிக்கையும் ஒளிவிடும் கண்களோடு, பத்து வயது சிறுமியொருத்தி, நேர்முகத் தேர்வுக்கு எங்கள் முன் உற்சாகத்துடன் வந்தாள்.

எழுத்துத் தேர்வில் நிறைய மதிப்பெண் பெற்று, இரண்டாம் இடத்தைப் பெற்று இருந்தாள்.

நேர்முகப் பேட்டியில், நிதானப்படுத்தும் பொருட்டு, பெயர், ஊர் முதலிய எளிய கேள்விகளைக் கேட்டோம்; பதற்றமின்றித், தெளிவாகவும் திடமாகவும் பதில் அளித்தாள்.

''பாட்டிகளிடம் கதை கேட்டிருக்கிறாயா?''

''ஆம்'' என்றாள்.

''சாவித்திரி என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''தெரியும்'' என்பது சிறுமியின் பதில்.

''என்ன தெரியும், சொல்.''

''சாவித்திரி நல்ல நடிகை. சமீபத்தில்... என்ற படத்தில் நடித்திருக்கிறார். இப்போது அது பல கொட்டகைகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.''

''அந்தப் படத்தை நீ பார்த்தாயா?''

''இல்லிங்க! கஞ்சிக்கே கஷ்டம்: படம் பார்க்க எனக்குக் காசு ஏதுங்க?''

''அப்படியானால், இன்ன படத்தில் நடித்திருக்கிறார் என்று உனக்கு எவர் சொன்னது?''

''நான் பள்ளிக்குப்போகும் வழியில், குறுக்குச் சாலை. தேனீர்க் கடையில் தட்டியில் சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள், அதைப் பார்த்துத் தெரிந்துகொண்டேன்'' என்றாள்.

அவள் குடியிருக்கும் ஊரும், படிக்கும் ஊரும் காரமடைக்கு அப்பால் மலைக்குப் போகும் வழியில் இருந்தன.

அவள் குறிப்பிட்ட சந்திப்பு எனக்குத் தெரியும்.

கோவை மாவட்டத்தில் பயிற்சி பெறும் கல்வி அலுவலராகப் பெற்ற பட்டறிவைக்கொண்டு, அந்தப் பகுதி பற்றிச் சில கேள்விகள் கேட்டேன்.

அத்தனைக்கும் சரியான பதில் கூறினாள். தேர்வு பெற்றாள்.

அதோடு முடியவில்லை விவகாரம்.

''அவள் குடிசையில் வாழ்பவள்.

''அவளைச் சேர்த்துக்கொண்டால், வறியவள் என்பதால் செலவுக்கு உதவித்தொகை கிடைக்கும்.

''அதைக் கொண்டு, செல்வர் வீட்டுப் பிள்ளைகளுக்குச் சமமாக இருந்துவிட்டுக் கோடை விடுமுறைக்கு வீட்டிற்குப் போனால், மீண்டும் தன் குடிசையில் இருக்க ஒப்புவாளா?''

இக் கேள்வியை ஒருவர் கிளப்பினார்.

இதற்குப் பதில் எது?

'நம்முடைய வேலை தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்தல். பிற விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளியல்ல' என்று சொல்லி நழுவி விட்டோம்.

கலக்கம் ஊட்டிய கடிதம்

நான் அலுவல் பற்றி வெளியூர் சென்று, இரண்டொரு நாள் தங்க நேர்ந்தால், அலுவலகத்திலிருந்து நாள்தோறும் கடிதங்களையும் உடனே கவனிக்க வேண்டிய கோப்புகளையும் அனுப்பி வைக்கத் தொடர்ந்து ஏற்பாடு செய்வது என் வழக்கம்.

கடிதங்களைப் பார்க்காவிட்டால் எனக்குத் தூக்கம் வராது.

இம்முறை கடிதமொன்றைப் பார்த்ததால் என்னுடைய தூக்கம் தொலைந்து பசியும் கெட்டது.

அப்படி வந்த கடிதம் மொட்டைக் கடிதமா? இல்லை.

அவதூறா?

இல்லை.

மிரட்டலா? அதுவும் இல்லை.

பின் என்ன?

எனது தலைவர், பொதுக்கல்வி இயக்குநர் திரு கோவிந்தராசுலு நாயுடு, ''உடனடிக் கவனத்திற்கு'' என்று, இரகசியக் குறிப்பு ஒன்றை உறையில் அனுப்பியிருந்தார்.

நீளமான அக் குறிப்பைப் படித்தேன். அதிர்ச்சி கொண்டேன்.

மீண்டும் படித்தேன், வேதனை கௌவிற்று; உடன் இருப்பவர்களுக்குக் காட்டிக் கொள்ளமுடியாத நிலை.

வேதனையை மெல்லவும் முடியாமல், சொல்லவும் முடியாமல் தவித்தேன்.

உணவு வேளை; எல்லோருடனும் மேசையண்டை அமர்ந்தேன். உண்ணவே முடியவில்லை. அதை நண்பர்கள் கவனித்து விட்டார்கள்.

என்ன கவலை என்று கண்டுபிடிக்க முயன்றார்கள்.

அலுவலக இரகசியத்தைச் சொல்லாமல், மூன்று நாள் கழிப்பதற்குள் நான் பட்டபாட்டை, எப்படி விவரிப்பேன்?

பசியும் பறந்து, தூக்கமும் கெட்டு, எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டிருந்தேன்.

சின்னையா வழிகாட்டுகிறார்

பிறகு சென்னைக்குத் திரும்பி வந்து சேர்ந்தேன்.

அலுவலகம் போவதற்கு முன்பு, தியாகராயநகரில் குடியிருந்த என்பால் பேரன்பு கொண்டிருந்த, திரு டி.எம். சின்னையா பிள்ளையைக் கண்டேன்.

தனியே அவரோடு பேசினேன். நீண்ட நேரம் பேசினேன். என்ன பேசினேன்?

''நாட்டுப்புற, தொடக்கப் பள்ளிச் சிறுவர் சிறுமியர், முழு நாள் படிப்பதற்குப் பதில் அரைநாள் படித்துவிட்டு மற்றப் பாதி நாள் தத்தம் குலத் தொழிலைச் செய்யப் போகவேண்டுமாம் பொது மக்களுக்குக் குலத்தொழிலும் ஓரளவு எழுத்தறிவும் பெறுவதே போதுமாம். இதை நோக்கமாகக்கொண்டு, அரைநாள் படிப்புத் திட்டமொன்றைத் தீட்டித்தாருங்கள் - இப்படி முதல் அமைச்சர் இராசாசி தம்மிடம் நேரில் கூறியதாக எங்கள் இயக்குநர் கூறுகிறார்.

''நான் தொடக்கக் கல்விக்குத் துணை இயக்குநர். ஆகையால், புதிய திட்டத்திற்கு வரைவு போட்டுத்தர என்னைக் கேட்டிருக்கிறார். நான்கு நாள்களாக நான் ஊண் உறக்கம் இன்றி அவதிப்படுகிறேன்.

''பொது மக்களுக்குக், கேடான திட்டத்துக்கு நான் உடந்தையாக இருப்பதா, என்று குருதி கொதிக்கிறது.

'இந்த யோசனைக்கு எதிராகக் குறிப்பு எழுதினால் கவனிக்கவா போகிறார்?

''வயிற்றுப் பிழைப்பிற்காக மக்கள் தலையில் மண்ணை அள்ளிப் போட என் மனம் ஒப்பவில்லை.

''பதவி வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விடலாமா என்று கூடத் தோன்றுகிறது'' இப்படி அவரிடம் அங்கலாய்த்தேன்.

பிள்ளை என்ன பதில் சொன்னார்?

''நகரத்துப் பிள்ளைகளை வசதிகள் அதிகம் கொண்ட பள்ளிகளில், முழு நேரம் படிக்க விட்டுவிட்டு, ஊமைகளான நாட்டுப்புற மக்களை அரை நாள் படித்தால்போதும் என்பது பெரிய அநீதி; தடுத்து நிறுத்த வேண்டிய கொடுமை; அதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

''தடுத்து நிறுத்துவது யார் என்பதே கேள்வி? அலுவலர்கள் தடுத்து நிறுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதா? அல்லது காற்றடித்த பக்கம் பறப்பதா?

''ஆட்சியில் இருகூறு செயல்கள் உள்ளன. அன்றாட நிர்வாகம் ஒன்று. அந்த நடிவடிக்கைகளில் அநீதி, தீங்கு, கொடுமை நுழையாதபடி தடுக்கும் பொறுப்பு பெரிதும் அலுவலர்களைச் சார்ந்தது. இது நிர்வாகத்தின்பாற் பட்டது எனலாம்.

''ஆட்சி என்பது நிர்வாகத்திற்கும் மேற்பட்டது. சில கொள்கை களையும் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு நடப்பது.

''அத்தகைய கொள்கைகளை முடிவு செய்யும் உரிமை அலுவலர் களுடையது அல்ல.

''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களுடையது ஆகும்.

''அவ் வுரிமையைப் பயன்படுத்தித் தவறான கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முயல்கையில், அலுவலர், கைகட்டி, வாய்பொத்தி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதானா? இல்லை.

''குறிப்பிட்ட கொள்கையோ, திட்டமோ, பொது நலனுக்குக் கேடானதென்று அலுவலருக்குத் தோன்றினால், அவருக்கு மனச்சாட்சி இருந்தால், அவர் அத் திட்டம் இன்னின்ன வகையில் பொது மக்களுக்குக் கேடாக முடியும் என்று விவரமாக-அதே நேரத்தில் சொற்களை அளந்துவைத்து-எழுத்து வழித் தெரிவிக்க வேண்டும்.

''அறுவை மருத்துவம் பார்க்கும் இடத்தில், நோய் மாற்றும் மருந்தைத் தடவுவதைப் போன்று, மாற்றுக் குறிப்பு எழுதுகையில்

படிப்போர் மனம் புண்படாதிருக்கும் வகையில் சில பணிவான சொற்றொடர்களைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

''நீங்கள் கீழ்மட்ட அலுவலராக இருந்து வாய் மூடிக்கிடந்தால், உங்கள்மேல் பழிவராது.

''இயக்குநருக்கு அடுத்த நிலையில் இருக்கும் உங்களிடம் சுய சிந்தனையையும் சொந்தக் கருத்தையும் மேலிடத்தில் எதிர்பார்ப்பதே முறை.

''ஆகவே, சிறிதும் ஒளிக்காமல், அரைவேளைப் படிப்பில் உள்ள குற்றங்களை விவரமாக எழுதிக் கொடுத்து விடுங்கள்.

''அப்புறம் அரசுக்கு இயக்குநர் எந்த ஆலோசனையாவது கூறட்டும்.

''அரசு அப்படியே அரைவேளைப் படிப்பை நடைமுறைப்படுத்தினால், பொதுமக்களோ, அவர்கள் சார்பில் பொது வாழ்க்கைப் பெரியவர்களோ முன்வந்து போராடட்டும்.

''பேரறிவு படைத்த ராஜாஜிக்கு ஏனோ இப்படியொரு எண்ணம் முளைத்துவிட்டது. இது அவருக்கும் நல்லதல்ல நாட்டுக்கும் நல்லதல்ல.

''உங்கள் வேலையோ, நேரக்கூடிய குறைகளை ஒளிக்காமல் சொல்லி விடுவதே. அப்படிச் சொல்கையில் சொற்களை மட்டும் அளந்து போடுங்கள்'' என்று வழிகாட்டினார்.

திரு சின்னையா பிள்ளை இராசாசியிடம் பற்றுடையவர் என்பதை இங்கே குறிப்பிடுவது என் கடமை ஆகும்.

என் மனத்தில் இருந்த பெரும் பாரம் இறங்கிவிட்டது.

அலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக மாறிவிடக் கூடாதென்ற தெளிவோடு அலுவலகம் சென்றேன்.

பழைய திட்டமே

பொதுக்கல்வி இயக்ககத்தில் தொடக்கக் கல்வித் திட்டம் பற்றிய அலுவல் பார்த்த மேற்பார்வையாளர் திரு கிருஷ்ணசாமி அய்யங்கார்.

அவர் பி.ஏ. எல்.டி. பட்டங்கள் பெற்றவர்; அந்த அலுலகத்தில் நீண்ட காலம் பணிபுரிந்தவர்.

மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான திறமைசாலி; நேர்மையிலும் அப்படியே; நினைவு ஆற்றல் மிக்கவர்.

எல்லா வகையிலும் நம்பிக்கைக்குரியவர். அவரை அழைத்து ''நான் கொடுக்கப்போகும் இரகசியக் குறிப்பை நீங்களே வைத்திருக்க வேண்டும். அது பற்றிய தகவல்களை, எழுத்தர்களுக்குத் தெரியாதபடி, நீங்களே தீட்டிக் கொண்டுவரவேண்டும். அது விரைவாகவும் என் கைக்கு வந்து சேர வேண்டும்'' என்று சொல்ல, இயக்குநர் எனக்கு அனுப்பிய இரகசியக் கட்டளையை அவரிடம் கொடுத்தேன்.

அவர் அதைப் படித்துப் பார்த்தார். இது பழைய யோசனை; 1937 இல் இராசாசி முதல் அமைச்சரான போதும் இப்படியொரு திட்டத்தைக் கொண்டு வரமுயன்றார்.

''இயக்குநர், முதலில் எங்காவது வெள்ளோட்டம் பார்த்து விட்டு விரிவு படுத்தலாம், என்று எழுதினார்.

''முதல் அமைச்சர் அதைப் பாராட்டினார். மாகாணம் முழுமைக்கும் நடைமுறைப் படுத்தும்படி சொல்லவில்லை.

''அந்தப் பழைய கோப்பு நம் அலுவலக ஆவணக் காப்பிடத்தில் உள்ளது. இரண்டு நாள்களில் கொண்டுவந்து காட்டுகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

52. தூக்கம் கெட்டது

இராசாசியின் நேர்முகக் கடிதம்

பொதுக்கல்வி இயக்ககத்தில் மேற்பார்வையாளர்களில் ஒருவரான திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார், சொன்னபடி பழைய கோப்பைக் கொண்டு வந்தார். சில இடங்களில் கொடிகளைக் குத்திக் கொடுத்தார். என்ன கண்டேன்?

பிரதமர் இராசகோபாலாச்சாரியார் - தலைமை அமைச்சருக்கும் அப்போதைய பெயர் பிரதமர் என்பதே - பொதுக்கல்வி இயக்குநருக்கு எழுதிய நேர்முகக் கடிதத்தைக் கண்டேன்.

அதில், ''தாழ்த்தப்பட்டவர்களும், பின்தங்கியவர்களும் மற்றவர்கள் போல் பள்ளிக்கு வருவது இல்லை. அவர்கள் தொடக்கக் கல்வி பெறுவதற்கு வசதியான திட்டத்தை உருவாக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

''தொடக்கப் பள்ளிகள் அரைவேளை மட்டுமே வேலை செய்தால், அவர்கள் வருகை அதிகரிக்கலாமோ என்று நினைக்கிறேன்.

''முழு நேரமும் வரச்சொல்வதால், வீட்டு வேலைக்குப் பயன்படாமற் போய்விடுகிறார்களே என்று பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருக்கிறார்கள் போலும்.

''அரைவேளை. படிப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று உங்களுக்குத் தோன்றினால், அதற்கான விரிவான ஆலோசனைகளை அனுப்பி வையுங்கள்'' என்று இயக்குநரைக் கேட்டிருந்தார்.

வெள்ளோட்டத்தில் தோல்வி

இயக்குநர் என்ன செய்தார்? சில பெரும் நகரங்களுக்குச் சென்றார். புதிய திட்டம் பற்றி மூத்த கல்வி அலுவலர்களின் நாடிகளைப் பார்த்தார்.

அவர்கள் சொன்னது என்ன?

''தொடக்கப் பள்ளிகள் வாரத்தில் அய்ந்தரை நாள்களே வேலை செய்கின்றன. சனிக்கிழமை அரை நாள் வேலை; மற்ற நாள்களில் வருகையோடு ஒப்பிடும்போது, சனிக்கிழமை வருகை பாதியாகி விடுகிறது. 'அன்றும் தாழ்த்தப்பட்டவர்களோ பிற்படுத்தப்பட்டவர்களோ' நிறைய வருவதில்லை''.

இதை இயக்குநர், தமது பதிலில் சுட்டிக் காட்டினார். ''அரை வேளைப் படிப்பிற்கு அதிகப்படியானவர்களைப் பள்ளிக்கு இழுக்கும் வலிமையில்லை என்பது எங்கள் கணக்கு. எனினும், குறிப்பிட்ட ஏதாவதொரு வட்டத்தில் அரை வேளைப் படிப்பைச் செயல்படுத்திப் பார்த்து, பிறகு முடிவு செய்யலாம். அப்படிச் செய்ய, இயக்குநருக்குத் தயவு செய்து உரிமை கொடுங்கள்.

''ஷெடியூல் மக்களும் பின் தங்கிய மக்களும் மிகுதியாக உள்ள ஏதாவது ஒரு வட்டத்தில் இதை வெள்ளோட்டம் பார்க்கிறேன்'' என்று நீண்ட பதிலை இயக்குநர் எழுதினார்.

பிரதமர் இராசாசி, இயக்குநரின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்தார். அவர் கேட்ட அனுமதியை வழங்கினார்.

இயக்குநர் மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைத் தேர்ந்தெடுத்து அரசுக்கு எழுதினார்.

வெள்ளோட்டம் பார்க்க இயக்குநருக்கு உரிமை கிடைத்தது.

அவ் வட்டத் தொடக்கப் பள்ளிகள் அரைவேளை மட்டுமே செயல் பட்டன. வருகை அதிகரிக்கவில்லை; குறைந்து விட்டது. ஓராண்டின் இறுதியில் அதை அரசுக்குத் தெரிவித்தார். செய்து கொண்டிருந்த சோதனை நீக்கப்பட்டது.

பழையபடி எல்லாப் பள்ளிகளும் முழு நாள் வேலை செய்தன.

ஷிப்டு முறைப் பள்ளி

இவற்றைப் பழைய கோப்பிலிருந்து கண்டேன். 1938க்குப் பிறகு நடந்தவற்றைக் கிருஷ்ணசாமி அய்யங்கார் நினைவு படுத்தினார்.

எந்த ஊரிலாவது, எந்தப் பள்ளியிலாவது - உயர்நிலைப் பள்ளி யானாலும் சரி-இடம், தளவாடம் போதாமை பற்றி, சேர வருகிற அனைவருக்கும் இடம் கொடுக்க முடியாமல் போனால், அந்தப் பள்ளியின் நிர்வாகம் விரும்பினால், 'ஷிப்டு' முறையைப் பின்பற்றி, அதிகமானவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு ஷிப்டும் நான்கு மணிநேரம் வேலை செய்யும். ஷிப்ட்டை ஏற்றுக் கொள்ளுகிற பள்ளிகள் வாரத்திற்கு ஆறு நாள்கள் வேலை செய்யும்.

அதாவது ஒவ்வொரு ஷிப்டும் வாரத்திற்கு இருபத்துநான்கு மணிகள் இயங்கும்.

ஒரே ஆசிரியரை இரண்டு ஷிப்டிலும் வேலை செய்ய வைக்கக் கூடாது. ஒவ்வொன்றிற்கும் தனித்தனி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

அப்படிச் செய்வதற்குத் தேவையான கூடுதல் ஆசிரியருக்கு அரசின் நிதி உதவி உண்டு,'' என்ற ஆணையை நினைவு படுத்தினார். அது சான்றோர் ஓ.பி. இராமசாமி முதல் அமைச்சராகவும் திரு. அவினாசிலிங்கனார் கல்வி அமைச்சராகவும் விளங்கிய காலத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகும்.

அதைப் பயன்படுத்தி, இங்கும் அங்கும் சிற்சில பள்ளிகள் அரை நாள் பள்ளிகளாக இயங்கி வருவதை, அய்யங்கார், சுட்டிக்காட்டினார்.

வேலைச்சுமை அதிகமாகும்

''அப்படியானால், இப்போது இராசாசி சொல்லும் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமே'' என்று குறுக்குக் கேள்வி கேட்டேன்.

''முந்தியது தேவைப்படும்போது தேவைப்படுவோர் மட்டும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மருந்தாகும். இப்போதுள்ள யோசனை, எல்லோரும் உண்ண வேண்டிய சாப்பாடு.

''முதலமைச்சரின் திட்டப்படி, ஒரே அணி ஆசிரியர்கள் இரு முறையும் வேலை செய்தாக வேண்டும்.

''அதாவது, புதிய திட்டத்தில், தொடக்கப் பள்ளி ஆசிரியருக்கு ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் வேலையும் ஆறு நாளைக்கும் அதாவது, முன்பு இருபத்தெட்டு மணி நேரம் வேலை செய்தவர்கள் இனி முப்பத்தாறுமணி வேலை செய்ய நேரிடும். அதனால் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் எதிர்ப்பு வளரும்'' என்று எச்சரித்தார்.

குடிமக்களுக்கிடையே வேறுபாடா?

மேலும் ஒன்றையும் சுட்டிக்காட்டினார். ''1937 ஆம் ஆண்டில் நமக்கென்று ஓர் அரசியல் அமைப்புச் சட்டம் இல்லை; இப்போது இருக்கிறது.

''அதன்படி, ஒரு பிரிவு குடிமக்களுக்கும், வேறு ஒரு பிரிவு குடிமக்களுக்கும் இடையே வேறுபாடு காட்டக்கூடாது.

''நகரப் பிள்ளைகளுக்கு அய்ந்து மணி நேரப்படிப்பு, நாட்டுப்புறப் பிள்ளைகளுக்கு மூன்று மணி நேரப் படிப்பு என்பது, இரு பிரிவினருக்கும் இடையே வேறுபாடு காட்டுவதாகாதா என்பதை அரசியல் சட்ட அறிஞர்கள் முடிவுகட்ட வேண்டும்'' என்றார்.

மக்கள் பகை வளரும்

''அப்போது நாட்டுப்புறம் முழுவதற்கும் அரைவேளைப் படிப்பு கூடாது'' என்கிறீர்களோ என்று அய்யங்காரைக் குறுக்கே கேட்டேன்.

''ஆம், அப்படியே! இது வீண் வம்பை விலைக்கு வாங்குவது; தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப் பகைத்துக் கொள்வது; பொது மக்களின் வெறுப்பைத் தேடிக்கொள்வது. ஆனால், இவ்வளவு பச்சையாகப் பதில் எழுத வேண்டாம். 'இதமாக' எழுதுவோம்'' என்று அய்யங்கார் கூறினார்.

''சரி! ஒரு மாற்று யோசனை கூறுவோம். ஏற்கெனவே உள்ள முறையை அனுமதிக்கும் அரசு ஆணையைப் பயன்படுத்தி, அதிகப் பிள்ளைகளைத் தூண்டி ஊக்குவிக்க உரிமம் கொடுங்கள் என்று பிரதம மந்திரிக்கு எழுதினால் என்ன?'' என்றேன்.

''அதுவும் சரியே'' என்றார்.

நாங்கள் கலந்துபேசி முடிவு எடுத்தபடி, நீண்ட குறிப்பு எழுதினோம்.

கிணற்றில் போட்ட கல்

இரண்டு மூன்று முறை படித்தோம். இதமான சொற்களை இடையே சேர்த்தோம். அந்த இரகசியக் குறிப்பை இயக்குநர் கோவிந்தராசுலு நாயுடுவிடம் கொடுத்தேன்.

''வேண்டுமென்றே, இக் குறிப்பில், மேற்பார்வையாளரோ, நானோ கையெழுத்திடவில்லை. தாங்கள் விரும்பினால், கையெழுத்துப் போட்டுத் தருகிறேன்'' என்று சொன்னேன்.

இயக்குநர் படித்துப் படித்துப் பார்த்தார்; மீண்டும் படித்தார்.

''இக் குறிப்பு சரியானது; ஏற்றுக்கொள்ள வேண்டியதே. ஆனால், நானாக இதை முதல்வரிடம் காட்ட மாட்டேன். அவராக என்னைக் கேட்டால், அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

''இதற்கு இடையில் பெரியவருக்குக் காலம் வேறு சிந்தனையைத் தரட்டும்'' என்று பிரார்த்திப்பேன்.

''அவ்வளவு பெரியவரிடம் உங்கள் திட்டம் சரியாக இயங்காது என்று எப்படிச் சொல்வது?'' என்று கூறியபடி இயக்குநர் இரகசியக் குறிப்பைத் தம் கைப்பெட்டியில் வைத்துக்கொண்டார்.

அரைவேளைப் படிப்புத் திட்டம், 'கிணற்றில் கல் போட்டாற்போல்' ஓசை எழுப்பாது இருந்தது.

நாள்கள் சென்றன; வாரங்கள் வந்தன; மாதங்கள் ஓடின.

ஆறு ஏழு திங்கள் கடந்துவிட்டதால், 'ஆறின கஞ்சி பழங்கஞ்சி' என்று எண்ணி மகிழ்ந்தேன்.

முதல்வரைக் காணல்

1953 ஆம் ஆண்டு மே திங்கள் இறுதிப் பகுதி, ஒருநாள் மாலை, இயக்குநர் கோட்டைக்குப் புறப்பட்டார்.

மலபார் மாவட்டத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளம் கொடுப்பது பற்றிப் பேசப்போனார்.

அப்போது என்னையும் தம்முடன் அழைத்துக்கொண்டு போனார்.

முதலமைச்சர் இயக்குநருக்குப் பேட்டி கொடுத்தார். இயக்குநர் என்னை உள்ளே அழைத்துச் செல்லவில்லை.

வெளியே, தனி அலுவலர் அறையில் காத்து இருந்தேன்.

அரை மணிக்குப்பின் வெளியே வந்த இயக்குநர் என்னை அழைத்துக்கொண்டு தமது அலுவலகத்திற்குத் திரும்பினார்.

வருகிற வழியில்,

''இன்று மாலை உங்களுக்கு ஏதாவது வேலை இருக்கிறதா? இல்லையென்றால், அலுவலகத்தில் மேலும் சிலமணிகள் இருந்து வேலை செய்யலாமா? நாம் இருவருமாக உட்கார்ந்து கவனிக்க வேண்டிய அவசரப் பணி ஒன்று வந்து இருக்கிறது'' என்றார்.

''இயக்குநரோடு இருந்து வேலை செய்ய முடியும்'' என்றேன்.

''இன்று பேசப்போன விஷயம் முடிந்ததும், முதலமைச்சர் இராசாசி அவர்கள் என்னைப் பார்த்து,

''அரை வேளைப் படிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உங்களுக்கு ஏதோ தயக்கம் இருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால், அதற்காக வெளியார் ஒருவரைத் தனி அலுவலராக நியமித்துக் கொள்ளட்டுமா? அவர் உங்கள் நிர்வாகத்தில் தலையிட மாட்டார். ஊர் ஊராகச் சென்று பேசி, புதிய திட்டத்திற்கு மக்களிடம் ஆதரவு திரட்டுவார். சரிதானா?'' என்று கேட்டார்.

''அரசின் முடிவுகளைச் செயல்படுத்தவே அலுவலர்கள் இருக்கிறோம். அரசு அரை வேளைப் படிப்பு போதுமென்று முடிவு செய்துவிட்டால், நானே நடைமுறைப்படுத்துகிறேன். அதற்காகத் தனி அலுவலரை நியமிக்கத் தேவை இல்லை'' என்று பதில் சொன்னேன்.

அவர் நினைத்திருக்கிற தனி அலுவலர் பெயரைக் கூறினார். அப்பெயரைப் பின்னால் தெரிவிக்கிறேன் என்று கூறிவிட்டு இயக்குநர் தொடர்ந்தார்.

முதலமைச்சரோ, 'நான் சொல்லுகிறேன் செய்யுங்கள். இன்றே சுற்றறிக்கை அனுப்பிவிடுங்கள், அச் சுற்றறிக்கையை இன்றிரவே, 'இந்து', 'எக்ஸ்பிரஸ்' ஆகிய நாளிதழ்களுக்குக் கொடுத்துவிடுங்கள்' என்றார்.

''எனவே, நாம் இருவரும் அலுவலகத்தில் உட்கார்ந்து, சுற்றறிக்கையை இன்றே எழுதி ஆயத்தம் செய்து முடித்துவிடுவோம்'' என்று இயக்குநர் சொல்லுகையில், மாலை அய்ந்து அடிக்கப் பத்து மணித்

துளிகள் இருந்தன. அய்ந்து மணித்துளிகளில் அலுவலகம் வந்து சேர்ந்தோம்.

தம் அறைக்குள் நுழைந்ததும் இருவருக்கும் சிற்றுண்டியும் காப்பியும் வாங்கி வரும்படி தமது எழுத்தருக்கு அவசரமாக ஆணை இட்டார்.

கிருஷ்ணசாமி அய்யங்காரையும் திறமையான தட்டச்சர்கள் இருவரையும் அடிப்படை ஊழியர்கள் இருவரையும் வீட்டுக்குப் போகாமல் இருக்கும்படி ஆணையிட்டார். அவர்களும் மகிழ்ச்சியோடு இருந்து உதவினார்கள்.

எரிச்சலூட்டும் தொடக்கம்

இயக்குநர், ''இப்போது நான் சுற்று அறிக்கையைச் சொல்லிக் கொண்டே வருவேன்; நீங்கள் கையெழுத்தில் எழுதி வாருங்கள். தகவல் பிழையோ, வேறு குறைகளோ கண்டால் என்னிடம் கூறுங்கள்'' என்று ஆணையிட்டார்.

''திருத்தி அமைக்கப்பட்ட தொடக்கக் கல்வித் திட்டம்'' என்ற தலைப்போடு சுற்றறிக்கையைத் தொடங்கினார்.

சுற்றறிக்கையின் முதற் சொற்றொடர் என்ன தெரியுமா?

''பிள்ளைகள், பெற்றோர் தொழிலைச் செய்வதால் தீங்கொன்றும் இல்லை'' என்று தொடங்கிற்று.

அதைக் கூறியதும்,-

''அய்யா! அப்படித் தொடங்குவதற்குப் பதில், 'ஏழைகளுக்கும் படிப்பு எட்டும் வகையில், பள்ளி நிர்வாக மாற்றம் தேவைப்படுவதால்'' என்று அறிக்கையைத் தொடங்கினால் என்ன?'' என்று குறுக்கிட்டேன்.

''இருக்கட்டும் யோசிப்போம்'' என்றார், இயக்குநர்.

''எடுப்பை ஒட்டியே தொடர்பு இருக்கவேண்டும். எனவே, எடுப்பு எரிச்சலைக் கிளப்புவதாக இருக்கவேண்டாம்'' என்றேன்.

''முதல் அமைச்சர் சொன்ன சொற்கள் இவை; எனவே, அப்படியே தொடங்குவோம்'' என்றார்.

''அறையில் பேச்சுவாக்கில், சொன்ன பாணியிலேயே தொடங்குவது நல்லதல்ல! என்னைத் தயவு செய்து தவறாக எண்ணிவிடாதீர்கள்.

''முதலமைச்சரும் அவரது தனிச் செயலர் திரு. சபாநாயகமும் இன்னும் கோட்டையில்தான் இருப்பார்கள். முதலமைச்சரோடு நேரே பேசுவது முறையல்ல என்றால், தனிச் செயலரிடம் பேசி, சுற்றறிக்கையின் அமைப்பு முறையை நிர்வாகப் பாணியில் மாற்றிக்கொள்ள அனுமதியைக் கேளுங்கள். அவர் முதல் அமைச்சரைக் கேட்பார். ஒப்புக்கொண்டால், நல்லதாகி விடும்'' என்றேன்.

''வேண்டாம்; முதலமைச்சர் பாணியிலேயே சுற்றறிக்கை அனுப்புவ தால், ஏற்படும் நன்மை தீமைகளுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளு கிறேன்'' என்று இயக்குநர் கூறினார். அப்புறம் நான் குறுக்கே நிற்கவில்லை.

சுற்றறிக்கை எழுதப்பட்டது. இடையிடையே சிறுசிறு சொல் மாற்றங்களைக் கூறினேன்; ஏற்றுக்கொண்டார்.

இரவோடு இரவாக ஆணை

சுற்றறிக்கையை ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் 'இந்து' 'எக்ஸ்பிரஸ்' அலுவலகங்களில் இருந்தும் இயக்குநரைக் கூப்பிட்டார்கள்.

''புதிய கல்வித் திட்டச் சுற்றறிக்கை ஒன்றை நீங்கள் இன்று அனுப்பப் போகிறீர்களாம். அது நாளைக் காலை வரும் நாளிதழி லேயே வரும்படி பார்த்துக்கொள்ளச் சொல்லி முதலமைச்சரின் அலுவலகத்திலிருந்து, தொலைபேசிச் செய்தி வந்துள்ளது. அந்த அறிக்கையை வாங்கிக் கொள்ள, எப்போது, எங்கே வர?'' என்று கேட்டனர்.

''சுற்றறிக்கையை அனுப்பிவிட்டே வீட்டிற்குப் போவோம். அது உங்கள் அலுவலகத்திற்கே வந்து சேரும்'' என்று இயக்குநர் பதில் அளித்தார்.

சொன்னபடியே நடந்தது. இயக்குநர் சொல்ல நான் எழுதி முடித்ததை வாங்கிப் படித்தார். சில சொல் மாற்றம் செய்தார். கிருஷ்ணசாமி அய்யங்காரை அழைத்து, அதை அவரிடம் கொடுத்தார்; அய்யங்கார், சுற்றறிக்கைக்கு அலவலக வரிசை எண் போட்டு வந்து காட்டினார். ஒப்புதல் பெற்றுக்கொண்டு போய், தட்டச்சர்கள் பக்கத்தில் உட்கார்ந்து, முழு அறிக்கையும் விரைந்து அச்சாகத் தூண்டுகோலாக இயங்கினார்.

சுற்றறிக்கையை 'ஸ்டென்சில்' எடுத்து இயக்குநரிடம் கொண்டு வந்து காட்டினார். பிழையின்றி இருந்ததால் வெளியிடக் கட்டளை கிடைத்தது.

அடிப்படை ஊழியர்கள் வழியாக இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி. தினத்தந்தி அலுவலகங்களுக்கு, அச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப் பட்டது.

''எடுத்ததை முடித்து விட்டோம்'' என்ற நிறைவோடு இயக்குநர் வீடு சென்றார்; நாங்களும் சென்றோம்.

எனக்கோ, அன்று இரவெல்லாம் தூக்கம் இல்லை.

53. முதலமைச்சர் இராசாசியின் கட்டளை

செயலரின் அதிர்ச்சி

மறுநாள் பொழுது விடிய, இயக்குநர் இல்லத்தின் தொலைபேசி அலறிற்று. இயக்குநர் கோவிந்தராசுலு பேசினார்.

''சுலு! எப்போது முதல் நீர் அரசாக மாறிவிட்டீர்?'' இப்படி ஒருவர் இயக்குநரைக் கேட்டார்.

அவர் யார்? சென்னை மாகாணக் கல்வித்துறைச் செயலர்.

இயக்குநர், ''நான் எப்போதும் அரசாகும் வாய்ப்பு இல்லை'' என்று இனிமையாகப் பதில் கூறினார்.

''அப்படியானால், புதிய கல்வித் திட்டத்தை அரசின் ஆலோசனைக் கும் ஆணைக்கும் அனுப்பாமல், நீங்களாகவே எப்படி நடைமுறைப் படுத்த ஆணையிடலாம்?'' - இது செயலர், திரு. உன்னித்தன் அய்.சி.எஸ். ஸின் கேள்வி.

''நீங்கள் அலுவலகம் சென்றதும் பார்க்கப் போகிற கடிதத்தில் விவரமாக எழுதியுள்ளேன். அதில் இப்படி ஒரு திட்டத்தை உடனே நடைமுறைக்குக் கொண்டுவரும்படி கன்ம் முதல் அமைச்சர் கட்டளையிட்டார். இத் திட்டத்தை அரசுக்கு ஆலோசனையாக அனுப்பினால் போதும். அரசின் ஆணையைக் கேட்க வேண்டாம்.

''புதிய திட்டத்தைச் செயல்படுத்த சுற்றறிக்கை அனுப்பி விட்டு, அரசின் தகவலுக்காக அதன் படியை அனுப்பி வையுங்கள் என்பது முதலமைச்சரின் கட்டளை. அதை அப்படியே நிறைவேற்றியுள்ளேன். அவ்வளவே நான் செய்தது'' என்றார்.

முதலமைச்சர் பெயரை இழுக்கும்போது மோதிக்கொள்ள முடியுமா? எனவே, செயலர் பேச்சை அத்தோடு நிறுத்திக் கொண்டார்.

உன்னித்தனும் கோவிந்தராசுலுவும், இங்கிலாந்தில் ஒன்றாகப் படித்தவர்கள்.

அமைச்சரின் கேள்வி

சில மணித்துளிகளுக்குப்பின், கல்வி அமைச்சர் டாக்டர் எம்.வி. கிருஷ்ணராவ், இயக்குநரோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

''இன்று காலை, செய்தித் தாளில் வெளியாகி இருப்பது உண்மை தானா? அரைவேளைப் படிப்புத் திட்டம் பற்றி, இதுவரை என்னிடம் ஒன்றும் சொல்ல வில்லையே. கல்விச் செயலர் இடமாவது சொன்னீர்களா? சொல்லியிருந்தால், அவர் ஏன் என் காதில் போடவில்லை?

''இத்திட்டத்தை அரசுக்கு ஆலோசனையாக அல்லவா நீங்கள் அனுப்பி வைத்து இருக்கவேண்டும்?

''இவ்வளவு பெரிய தலைகீழான மாற்றத்தை அமைச்சரவையில் வைத்து ஒப்புதல் பெற்ற பிறகு அல்லவா நிறை வேற்றி இருக்க வேண்டும்? ஏன் நீங்களாக இவ்வளவு பெரிய மாற்றத்தைச் செய்து விட்டீர்கள்?'' என்று கல்வி அமைச்சர் கேட்டார்.

''நான் முதலமைச்சர் கட்டளைக்குப் பணிந்து நடந்தேன்'' ஆறு திங்களுக்கு முன்பு, அரை வேளைப் படிப்பு போதும் என்கிற முறையில் சிந்தித்துத் திட்டம் தீட்டும்படி முதலமைச்சர் இரகசியக்குறிப்பு வந்தது.

''நேற்று வரை நான் பதில் குறிப்பு அனுப்பவில்லை. மாற்றுக் குறிப்பு கொடுத்தால், பெரியவர் மனம் புண்படுமே என்று சும்மா இருந்தேன்.

''நேற்று மாலை, 'இரவோடு இரவாக' அதுபற்றிச் சுற்றறிக்கை அனுப்பிவிட்டு அப்புறம் தகவலுக்கு மட்டும் அதை அரசுக்கு அனுப்புங்கள் என்றார்.

''இதை விவரமாக எழுதி அனுப்பி உள்ளேன். என் கடிதம் தங்கள் பார்வைக்கு, கோட்டையில் காத்திருக்கும்'' என்று இதமாகப் பதில் கூறினார்.

கோட்டைப் பெரியவர்கள் முணு முணுப்போடு நின்று விட்டார்கள்.

இருவருமே திட்டத்தின் நன்மை, தீமை பற்றி இயக்குநரிடம் பேசவில்லை.

காமராசரின் கண்டனம் – பெரியார், அண்ணா எதிர்ப்பு

வெளியுலகில், இடி முழங்கிற்று. அரசியல் வானில், பல பக்கங் களிலும் மின்னல்கள் மின்னின.

மேற்படி சுற்றறிக்கை வெளியாகும்போது, தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் ஏழைபங்களார் திரு. கு. காமராசர் விருது நகரில் இருந்தார்.

இந்தச் சுற்றறிக்கை பற்றி எரிச்சல் கொண்டார்.

காங்கிரசு இயக்கத்தவர் அவரிடம் சென்று மனக்குறை பட்டனர்.

விருதுநகரில் காங்கிரசின் சார்பில் பொதுக்கூட்டம். அந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில்,

''இந்தப் பைத்தியக்காரத் திட்டத்தை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை'' என்று காமராசர் முழங்கினார்.

புதிய திட்டம் தந்தை பெரியாரைப் பொங்கி எழச் செய்தது.

''பெற்றோர் தொழிலுக்குப் போகட்டும்'' என்பது ஆத்திர மூட்டியது.

''குலக்கல்வித் திட்டத்தை''க் கண்டித்து அறிக்கை எழுதி தமது விடுதலை நாளிதழில் வெளியிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அறிஞர் அண்ணா கண்டனம் தெரிவித்தார். இப்படிப் பற்பல காட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

வேலைச் சுமை கூடுதல் ஆகிவிட்டதைப்பற்றித் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் பதை பதைத்தார்கள்.

கையெழுத்து வேட்டை

இரண்டொரு நாள்களில் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர், குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராக, கட்சி உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கத் தலைப்பட்டனர்.

விவாதிக்க மறுத்தேன்

அத்தகைய முயற்சியில் முன்னணில் இருந்தவர்களில் திரு. வி.கே. இராமசாமி முதலியார் ஒருவர் ஆவார்.

இவ்விவகாரம் பற்றி ஆழம் பார்ப்பதற்காக, அப்பெரியவர், என்னைத் தேடி வந்தார். நீண்ட நேரம் பேச்சுக்கொடுத்தார். நான் புதிய திட்டம் பற்றி எவ்வித உட்தகவலும் கொடுக்கவில்லை. எனவே, ஏமாற்றத்தோடு திரும்பினார்.

திட்டம் வெளியான சில நாள்களுக்குப்பின், ஒரு மாலைப்பொழுது, நான் மேற்கு மாம்பலம் மாநகராட்சிப் பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்ற என் காரில் போய்க் கொண்டிருந்தேன்.

கோடம்பாக்கம் இருப்புப் பாதைக் கதவு அடைப்பட்டிருந்தது. காரில் காத்து இருந்தேன். வாயில் திறப்பதற்கு முன், மற்றோர் கார் பின்னால் வந்து நின்றது.

அதில், அமைச்சர் யூ. கிருஷ்ணராவ் இருந்தது என் கண்களில் பட்டது.

அவர் சென்னை நகர மேயராக இருந்த காலத்தில்தான், நான் மாநகராட்சிக் கல்வி அலுவலராகச் சென்றேன்.

எனவே, பழைய பற்றுதல் பற்றி என் காரிலிருந்து இறங்கி அவர் கார் அருகில் சென்றேன். அவர் தம் காரில் என்னை ஏற்றிக் கொண்டார்.

''இப்போது வெளியாகியுள்ள புதிய தொடக்கக் கல்வித் திட்டத்திற்கும் உங்களுக்கும் தொடர்பு உண்டா?'' என்று கல்வி அமைச்சர் யூ. கிருஷ்ணராவ், என்னைக் கேட்டார்.

''நான், தொடக்கக் கல்வி துணை இயக்குநர், அந்த நிலையில் புதிய கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியவன்'' என்றேன்.

''அப்படியானால் அதுபற்றிக் கேள்வி கேட்டு, சங்கடப்படுத்த மாட்டேன்'' என்று சொல்லிப் பேச்சை வேறு பக்கம் திருப்பிவிட்டார்.

புதிய திட்டம் நகரங்களில் நடைமுறைக்கு வரவில்லை, எனவே, அன்றைய பள்ளிக்கூட நிகழ்ச்சியில் எவரும் அதைத் தொடவில்லை.

மேலும் சில நாள்கள் நகர்ந்தன.

இந்திய அரசின் இரயில்வே துணை அமைச்சர் திரு. ஓ.வி. அளகேசன், அலுவல் பற்றிச் சென்னைக்கு வந்தார். தமது மூத்த சகலர், திரு. மீ. பக்தவத்சலம் இல்லத்தில் தங்கியிருந்தார்.

செய்தி அறிந்த நான், அளகேசனைக் காணச் சென்றேன்.

பக்தவத்சலனாரும் அளகேசனும் பேசிக்கொண்டு இருந்தார்கள். என்னையும் சேர்த்துக் கொண்டார்கள்.

ஏதேதோ பொதுப்படையாகப் பேசிக்கொண்டு இருக்கையில் திரு. வி.கே. இராமசாமி முதலியார் எங்களுடன் வந்து கலந்து கொண்டார்.

சில வினாடிகளில், அப்போதைய அமைச்சர் திரு. பரமேசுவரனும் அங்கு வந்து சேர்ந்தார், அவரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

என்னை முதுகில் தட்டியபடியே, அடுத்த இருக்கையில் அமர்ந்தார். அவரும் நானும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள்; நண்பர்கள்.

சில நொடிகள் ஓடின. பேச்சு, அரை வேளைப்படிப்பு முறையின் பக்கம் திரும்பியது.

பரமேசுவரன் என்னைப் பார்த்து-

''சுந்தரவடிவேலு, புதிய திட்டம் பற்றித் தங்கள் தனியான கருத்து என்ன? ஒளிக்காமல் சொல்லுங்கள்; இங்கே, வெளியார் எவரும் இல்லை'' என்று கேட்டார்.

நான் ஊமையாக இருந்தேன்.

அளகேசனின் விளக்கம்

சில மணித்துளிகளுக்குப்பின், அளகேசன் குறுக்கிட்டார்.

''சுந்தரவடிவேலு, இது பற்றித் தம் மனைவியோடு கூடப் பேசியிருக்க மாட்டார். நீங்கள் கேட்பது சரியல்ல. அவர் உள்ளத்தில் உள்ள உண்மை, கிணற்றில் வீழ்ந்த கல்தான்'' என்று பரமேசுவரனைப் பார்த்துக் கூறினார். அம் மதிப்பீடு துல்லியமானது.

''அப்படித்தான்!'' என்று பக்தவத்சலனார் கூறவும் பேச்சை அதோடு விட்டு விட்டார்கள்.

''புதிய திட்டம் எப்படி உருவானது; அதன் நன்மை, தீமை என்ன? இவை பற்றி அண்ணா சா. குருசாமி என் வாயைக் கிளறப் பார்த்தார். அவரது முயற்சியும் வீணாயிற்று.

முதல்வரின் தனிச் செயலர் வந்தார்

ஒரு விடுமுறை நாள்காலை; சிறிது ஓய்வாக வீட்டில் இருந்தேன்.

கார் ஒன்று வந்து நின்றது; அதை ஓட்டி வந்தவர், வண்டியை விட்டு இறங்கினார். வந்தவர் எவர்?

முதல் அமைச்சரின் தனிச் செயலர் திரு. சபாநாயகம் ஆவார்.

அவர் ஏற்கெனவே எனக்குப் பழக்கமானவர்; என்னிலும் இளையவர்.

இருப்பினும் அவ்வளவு முக்கியமான பணியில் இருப்பவர் என்னைத் தேடி வந்தது பற்றி அதிர்ச்சி அடைந்தேன். விரைந்தோடி, வரவேற்று வந்தேன்.

அவர் நாற்காலியில் அமர்ந்ததும், என்னிடம் ஒரு பயணச் சீட்டை நீட்டினார்.

சென்னை மையப் புகைவண்டி நிலையத்தில் இருந்து ஆம்பூருக்கு எடுக்கப்பட்ட முதல் வகுப்புப் பயணச்சீட்டு.

''இன்று பகல் பெங்களூர் விரைவு வண்டியில், முதல் அமைச்சர் ஆம்பூர் செல்கிறார். நீங்கள் அங்கு வரவேண்டுமாம். இது முதலமைச்சரின் கட்டளை அதே வண்டியில் உங்களுக்கும் இடம் பதிவு செய்துள்ளோம்.

''திரும்பி வருவதற்கும் இடம் ஏற்பாடு, செய்துவிட்டு, பயணச் சீட்டை ஆம்பூரில் உங்களிடம் கொடுப்பார்கள். சில மணி இடை வெளியில் அறிவிப்புக் கொடுப்பதற்காக வருந்துகிறேன்'' என்று சபாநாயகம் கூறினார்.

''நான் வெளியூர் செல்வதற்கு, இயக்குநர் ஒப்புதல் தேவை; அவரோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ளுகிறேன். அவர் இசைந்தால் போய் வருகிறேன்'' என்றேன்.

''இயக்குநரிடம் நானே சொல்லி ஒப்புதல் பெற்றுவிட்டேன். அதன் பிறகே, பயணச்சீட்டு வாங்க ஏற்பாடு செய்தேன்'' என்று பதில் கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

பிறகு, நான் இயக்குநரோடு தொடர்பு கொண்டேன்.

ஆம்பூர் பயணம்

ஆம்பூரில் திரு. நாதமுனி நாயுடு எம்.எல்.சி. யின் முயற்சியில், வடஆர்க்காடு மாவட்டக்கல்வி மாநாடு கூட்டப்பட்டு இருக்கிறது. ''புதிய கல்வித் திட்டத்தை ஆதரிக்க அம் மாநாடு, இந்த வம்பில் உன்னை ஏன் இழுத்து விடுகிறார்களோ? என்னை இதிலிருந்து விட்டுவிடச் சொன்னால், என்ன நினைப்பார்களோ என்று நான் சும்மா இருந்து விட்டேன்.

''உன் நிலை தர்ம சங்கடமானது. எச்சரிக்கையாகப் பழகு; போய் வா'' என்று இயக்குநர் இசைவு தந்தார்.

பிறகு என் மனைவியிடம் சொல்லி, பயணத்திற்கு வேண்டியவற்றை ஆயத்தம் செய்யச் சொன்னேன்.

குழந்தை திருவள்ளுவன் புகைவண்டி நிலையம் வந்து வேடிக்கைப் பார்க்க விரும்பினான். அவனுக்குத் துணையாக காந்தம்மா வர ஒப்பினார்.

பெங்களூர் விரைவு வண்டி புறப்படுவதற்கு வெகு முன்னதாகவே, போய்ச் சேர்ந்தோம். என் இருக்கையைத் தேடி, அங்குப் படுக்கை, பெட்டியை வைத்துவிட்டு, கீழே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

இராசாசி திருவள்ளுவனை வாழ்த்தினார்

புறப்படும் நேரத்திற்கு முன்னதாகவே முதலமைச்சர் வந்தார்.

எனக்கு அடுத்த பெட்டியில் அவரது இருக்கை இருந்தது.

அவர் பெட்டியை நெருங்குகையில், நாங்கள் மூவரும் அவரை வணங்கினோம்.

அவர், பெட்டிக்குள் சென்று பார்த்து விட்டே கீழே இறங்கினார்.

என்னைப் பார்த்து, ''உங்கள் மகனா?'' என்று கேட்டார்.

''ஆம்'' என்றேன்.

அவனை அருகில் அழைத்தார். கன்னங்களைத் தடவினார்.

இரு ஆப்பிள் பழங்களை அவனிடம் கொடுத்தபடியே,

''உன் பெயரென்ன?'' என்றார்.

''திருவள்ளுவன் என்று சிறுவன் பதில் கூறவே, ''அப்படியே வளர்வாய்'' என்று வாழ்த்தினார்.

என் மனைவியைப் பார்த்து, ''நல்ல பையன்'' என்றார்.

திருவள்ளுவன், 'நன்றி' கூறியபடியே மீண்டும் வணங்கினான்.

பேசும்படி முதல்வர் கட்டளை

புகைவண்டி உரிய நேரத்தில் புறப்பட்டு, ஆம்பூர் சென்றடைந்தது.

ஏராளமானவர்கள் கூடி, முதலமைச்சரை வரவேற்றார்கள்.

அங்கு இரு நிகழ்ச்சிகள் முதல் நிகழ்ச்சி, இந்து உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தல்.

கனம் இராசாசி அக்கட்டடத்தைத் திறந்து வைத்தார்; கட்டடத்தைச் சுற்றிப் பார்த்தார்.

பிறகு, புதிய கட்டடத்திலேயே தேனீர் விருந்து நடந்தது.

இராசாசி, நாதமுனி நாயுடு, பிற அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் தலைமை மேசையண்டை இருந்தார்கள்.

நான் எட்டி இருந்த மேசையில் அடக்கமாக அமர்ந்து உண்டேன். அவ்வேளை, நாதமுனி நாயுடு என்னிடம் வந்தார்.

''இரண்டாவது நிகழ்ச்சி அடுத்து நடக்கவிருக்கிறது. அக் கல்வி மாநாட்டில் நீங்களும் பேசவேண்டும் என்று முதலமைச்சர் விரும்புகிறார்'' என்று காதோடு கூறினார்.

''முதலமைச்சர் பேசும் மாநாட்டில் சாதாரண அரசு ஊழியன் பேசுவது, அதிகப்பிரசங்கித் தனமாக மக்கள் கருதி விடலாம். எனவே, என்னை மன்னித்து விடச் சொல்லுங்கள். நானே, அவரிடம் வந்து சொல்லக் கூச்சமாக இருக்கிறது'' என்று உளறினேன்.

நாதமுனி நாயுடு, முதலமைச்சரிடம் சென்று, என் பதிலைக் கூறினார்.

என் கண்களும், கவனமும் முதலமைச்சர்பால் பொருந்தியிருந்தன.

முதலமைச்சர், நாதமுனி நாயுடு சொன்னதைக் கேட்டதும் என்னைச் சுட்டி,

''நீங்கள் பேசவேண்டும் என்பது போல்'' குறிப்பு காட்டினார்.

நாதமுனி மீண்டும் என்னிடம் வந்து அக் குறிப்பை உறுதிப்படுத்தினார். என் தலை சுழன்றது. எப்படி பேசுவது என்று குழம்பினேன்.

தேனீர் விருந்துக்குப்பின், அதே வளாகத்தில் கூடியிருந்த மாநாட்டிற்குச் சென்றோம்.

அவையில் அமரச் சென்ற என்னை, முதலமைச்சர் இராசாசி மேடைக்கு அழைத்து விட்டார்.

வேறு வழி இன்றி மேடைக்குச் சென்று அமர்ந்தேன்.

மாநாட்டில் ஆயிரம் பேர்களுக்குமேல் அமர்ந்து இருந்தார்கள்.

54. இப்படியும் ஒரு சோதனையா?

இறை வணக்கத்தோடு வடஆற்காடு கல்வி மாநாடு தொடங்கிற்று.

வரவேற்பு உரைக்குப் பின்னர், தலைவர் முன்னுரை கூறினார்.

அடுத்த ஒருவர், சுருக்கமாகப் பேசியபின், மாநாட்டுத் தலைவர் என்னைப் பேச அழைத்தார்.

நான் எழுந்து ஒலி பெருக்கியிடம் சென்றேன். நெஞ்சுபட படத்தது; உடம்பெல்லாம் வியர்த்தது.

''வேண்டிய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று இராசாசி கூறியது காதில் வீழ்ந்தது. எனக்குப் பதற்றம் அதிகம் ஆயிற்று.

'இப்படியும் ஒரு சோதனையா?' என்ற ஏக்கத்தோடு, ஒலி பெருக்கி முன் சென்று நின்றேன்.

மாநாட்டில் பங்கு கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டு இருந்தவர்களின் பெயர்களைச் சொல்லி விளிப்பதில் இரு மணித் துளிகள் நகர்ந்தன.

ஓரளவு பதற்றம் தணிந்தது. எப்படியோ பேசினேன். சில மணித் துளிகள் அல்ல; இருபத்தைந்து மணித்துளிகள்போல் பேசினேன்.

கடமையை நிறைவேற்றினேன்.

என்ன பேசினேன்?

''அண்மையில் புதியதோர் - மாற்றி அமைக்கப்பட்ட தொடக்கக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

''இக் கல்விச் சோதனை, பல வட்டாராங்களில் அச்சத்தையும் பகை உணர்ச்சியையும் வளர்த்து உள்ளது.

''இது பெரும் அரசியல் விவகாரமாகி விட்டது.

''அரசியல் காட்டாற்று வெள்ளத்தில் கல்வித்துறையைச் சேர்ந்த நாம் சிக்கிக் கொள்ளக்கூடாது; கட்சி, பிரதிகட்சியாளராக மாறிவிடக்கூடாது.

''பொது ஊழியர்கள் என்ற முறையில் நமக்கு உயிர்நாடியான உணர்வு கட்டுப்பாட்டு உணர்வே ஆகும்.

''ஆட்சியே, கல்வி இயக்கமே, தீட்டும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதும், அதில் சிக்கல்கள் கேடுகள் வந்தால், உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுபோய், பரிகாரம் தேடுவதும்,

''தென்னிந்திய ஆசிரியர்களின் நீண்ட நெடிய நல்ல மரபு.

''அந்த மரபு முறியாமல் பார்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

''இத் திட்டம் பற்றிய சழக்கினை, மற்றவர்களுக்கு விட்டு விடுவோம்; இதை விழிப்போடு செயல்படுத்தி, பலாபலன்களைக் காண்போம்.

''சென்னை மாகாணத்தில் பன்னிரண்டாயிரம் பள்ளிகள் போல், ஓராசிரியர் பள்ளிகளாகவே நடக்கின்றன''

''அவற்றில் பெரும்பாலானவற்றில் அய்ந்து வகுப்புகள் உள்ளன.

''ஒருவரே ஒரே நேரத்தில் அய்ந்து வகுப்புகளுக்கு எப்படிப் பாடம் சொல்ல முடியும்?''

''அந்த 'பஞ்சாவதானத்தால்' முழுப் பலன் கிட்டுமா?

''புதிய கல்வித் திட்டம் ஓர் ஆசிரியரே அய்ந்து வகுப்புகளுக்கும் கற்பிக்கும் பொறுப்பை மாற்றி விடவில்லை.''

''ஆனால், இரு அரை வேளைகளாகப் பிரித்துக் கற்பிக்கச் சொல்லுகிறது.

''அதாவது, ஒரு வேளை இரண்டு வகுப்புகளையும், மறுவேளை மூன்று வகுப்புகளையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

''இதை வேறொரு வகையில் பார்த்தால், தனிப்பாடம் பிரைவேட் டியூஷன் போன்ற நிலைக்குக் கொண்டுவந்து விட்டுள்ளது.

''அதனால், எல்லோரையும் தேர்ச்சி பெற வைக்கும் நல்ல வாய்ப்பு முளைத்து உள்ளது.

''இதேபோல்தான், இரு ஆசிரியர், மூன்று ஆசிரியர்களைக் கொண்ட பள்ளிகளில் ஒரு வேளை மூன்று வகுப்புகளும், மறுவேளை இரு வகுப்புகளும் நடக்கும்.

''அதாவது, தனிப்பாடச் சூழல் வளர்ந்துவிட்டது.''

''இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அதிகப்படியானவர்களைத் தேர்ச்சி பெறச் செய்யுங்கள்.''

''அப்போது ஆண்டுக்கு ஆண்டு, பள்ளியைவிட்டு நின்று விடுவோர் எண்ணிக்கை குறையும். தொடர்ந்து படிப்போர் எண்ணிக்கை பெருகும்.

''ஆசிரியருக்கு ஒரு வகுப்பு என்கிற நிலையில் உள்ள பெரிய பள்ளிகளில் 'குறிப்பிட்ட ஆசிரியர்', 'குறிப்பிட்ட வேளை' மாணாக்கரில் பாதிப் பேர்களுக்கே கற்பிப்பார்.

''அந் நிலை தேர்ச்சியினால் நூற்றுக்கு நூறாக உயரலாமே! அப்படிச் செய்து, பாதிநாள் படித்தாலும் தேர்ச்சி பெறும் நிலையில் படித்தார்கள் என்னும் நல்ல நிலையை உருவாக்கிப் பாருங்கள்''

மேற்கூறிய பாணியில் பேசினேன். அவையோர் அமைதியாகவும், அக்கறையோடும் கேட்டார்கள்.

அளவுக்கு மீறிய விளம்பரம்

நான் பேச்சை முடித்த அடுத்த நொடி,

'சுதேசமித்திரன் - முதல் பக்கம்' என்று முதல் அமைச்சர் இராசாசி, எல்லோருக்கும் கேட்கும் வகையில் செய்தியாளர்க்குக் குறிப்புக் காட்டினார்.

முதல் அமைச்சர், தமது உரையில், இரண்டு மூன்று முறை என்னைக் குறிப்பிட்டுப் பாராட்டினார், பின்னர் தனியாகவும் ''ரொம்ப நன்றாகப் பேசுகிறீர்கள்'' என்று கூறிப் பாராட்டினார்.

இரவு வண்டியில் சென்னைக்குத் திரும்பினோம்.

குத்தூசியின் எரிச்சல்

மறுநாள் மாலை நிகழ்ச்சி ஏதுமில்லை. வழக்கம்போல் அருகில் இருந்த, என் சகலர் குத்தூசி குருசாமி அவர்கள் வீட்டிற்குச் சென்றேன்.

உள்ளே நுழையும்போதே, மாமனார் சுப்பிரமணியம், ''ஆமாம் தம்பி, வேலையில் இருந்தால், அரசு திட்டத்தை ஆதரித்துத்தானே ஆகவேண்டும்'' என்று சொல்லியபடியே வரவேற்றார்.

மாடியில் இருந்த அண்ணனையும், அண்ணியையும் கண்டேன்.

அண்ணன் கையில், 'சுதேசமித்திரன்' நாள் இதழ் இருந்தது.

அதன் முதல் பக்கத்தில் முழுப் பக்கத் தலைப்புக் கொடுத்து எனது ஆம்பூர் பேச்சு வெளியிடப்பட்டிருந்தது.

வாங்கிப் படித்துப் பார்த்தேன். என் பேச்சை முழுமையாகவும் பேச்சிலிருந்த உணர்வு வெளிப்படும்படியும் வெளியிட்டு இருக்கக் கண்டேன்.

அண்ணன் முகத்தில் வெகுளி கொப்பளித்துக் கொண்டிருந்தது.

கடமையைச் செய்வதில், பிறர் மனம் புண்பட்டால், நான் என்ன செய்ய முடியும்?

சில நாள்கள் ஓடின. ஒரு மாலைப்பொழுது, மகன் திருவள்ளுவனை அழைத்துக்கொண்டு, குத்தூசி குருசாமியார் இல்லம் சென்றேன்.

அவர் தமது இயக்க நண்பர்கள் இரண்டொருவரோடு கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தார். அதைக்கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

அவர்கள் பேச்சு, 'குலக் கல்வித் திட்டத்தின்' மேல் சென்றது. மூவருமே அதைக் கண்டித்தனர். வீட்டைப் பட்டிமன்றமாக்க விரும்பாது, ஊமையாக இருந்தேன்.

பேச்சின் இடையே, 'இராசாசி பொல்லாதவர்' என்று பொருள் படும்படி, குருசாமி கடுமையாகத் தாக்கினார்.

இராசாசி நல்லவரே

அப்போது நான்கு வயதும் நிரம்பாத திருவள்ளுவன் குறுக்கிட்டான்.

''பெரியப்பா! நீங்கள் சொல்வது தப்பு, அவர் பொல்லாதவர் அல்ல! நல்லவர்'' என்று அடித்துச் சொன்னான்.

''உனக்கு எப்படித் தெரியும்?'' என்று மடக்கினார், குருசாமி.

''எனக்குத் தெரியும் பெரியப்பா? நான், அப்பாவை அனுப்பப் போயிருந்தபோது, அவர் என்னை எவ்வளவு ஆசையாகக் கூப்பிட்டார்; அன்பாகத் தட்டிக் கொடுத்தார். ஆப்பிள் பழங்களும் எனக்குக் கொடுத்தார். குழந்தைகளிடம் அவ்வளவு ஆசையாக இருப்பவர், பொல்லாதவராக இருக்க முடியாது'' என்று ஒரு போடு போட்டான்.

''ஊரார் எல்லாம் வேண்டாமென்கிற அரைவேளைப் படிப்பை எடுக்கமாட்டேன் என்று ஏன் பிடிவாதம் காட்டுகிறார்?'' என்று கேட்டார், குருசாமி.

சளைக்கவில்லை திருவள்ளுவன், ''ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்றில் பிடிவாதம். முதலமைச்சருக்குப் படிப்பு பற்றிப் பிடிவாதம்'' என்று, திருவள்ளுவன் பதில் கூறியதைக் கேட்டு வியப்பில் ஆழ்ந்தேன்.

கட்சிக் கட்டுப்பாடு

புதிய தொடக்கக் கல்வி பற்றிய சண்டை பெருகி வந்தது.

குலக்கல்விக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம் காங்கிரசுக்கு எதிரான கட்சிகள், அதுவும் பெரியாரின் திராவிடர் கழகத்தின் கை ஓங்கிவிடும் என்று கருத்து வேகமாகப் பரவியது.

எனவே, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர், காமராசர் தனிப்பட்ட கருத்து மாறுபாட்டையும் பின்தள்ளி வைத்து, காங்கிரசுக்காரர்களின் எதிர்ப்பின் 'வேகம் தணிக்க' முயன்றார்.

குலக்கல்வி முறையை ஒழிப்பதன் வாயிலாக, மாற்றுக்கட்சிகள் மேலோங்கி விட உதவலாகாது, என்று சொல்லி நிதானப்படுத்தினார்.

இராசாசியின் பெருமைக்குக் குறைவு வராமல் பார்த்துக் கொள்ளும் படியும் சட்ட மன்ற உறுப்பினர்களை நெறிப்படுத்தினார்.

ஏற்கெனவே, எவ்வளவு காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் குலக்கல்வியை எதிர்த்துக் கையெழுத்து இட்டுள்ளார்கள் என்பதை முதலமைச்சரிடம் காமராசர் தெரிவித்தார்.

ஆகவே, தக்க சமயத்தில் இராசாசியே கட்சியின் வலிமையைக் காத்துக் கொள்ளும் வகையில் மாற்றுவழி காண்பார், என்று எதிர்பார்த்தார்.

அந் நிலையில், நான் வெளிமாவட்ட நகரங்களுக்குச் சென்று ஆசிரியர்கள் கூட்டங்களில் பேசி, அரைவேளைப் படிப்பு முறைக்கு ஆதரவு திரட்டவேண்டும் என்று, இயக்குநர் வழியாக, அரசு ஆணையிட்டது.

அதன்படி, முதலில் ஆந்திர மாவட்டங்கள் சிலவற்றிற்குச் சென்றேன்.

அப்போது, வட சர்க்கார் மண்டல ஆய்வாளராக இருந்த திரு. ரங்கராவ் நாயுடு முறையாகவும் சீராகவும் பயண ஏற்பாடுகளையும், கூட்ட ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார்.

என்னுடன் எல்லா ஊர்களுக்கும் வந்தார். கூட்டங்களில் பேசினார்.

சகாக்களிடம் விசுவாசம் காட்டும் நல்லோர்களுக்கு எடுத்துக் காட்டாக, திரு. ரங்கராவ் செயல்பட்டார்.

பின்னர், நான் மாவட்டம் மாவட்டமாகத் தமிழ் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, புதிய கல்வி முறைக்கு ஆதரவு திரட்டினேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்பட்டியில், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டமொன்றைக் கல்வித்துறையினர் ஏற்பாடு செய்தனர்.

அக் கூட்டத்திற்கு நாடார் உறவின் முறைப் பள்ளியின் நிர்வாகியாகச் செயல்பட்ட, திரு. ஈ.வே.கே. வள்ளிமுத்து (இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பேரவைத் தலைவர்) தலைமை ஏற்றார்.

அவர், தமது தலைமை உரையில், புதிய திட்டத்திற்கு எதிரான கருத்துகள் சிலவற்றைச் சொல்லி, ''பெரியாருக்கு வேண்டியவரான நெ.து.சு. புதிய கல்வித்திட்டத்தை ஆதரிப்பது வியப்பாக இருக்கிறது'' என்றார்.

ஆசிரியர்கள் இடையே சலசலப்பு எழுந்தது. மாவட்டக் கல்வி அதிகாரி திரு. மரியசூசை பதறிப் போனார். அவரை நான் அமைதிப் படுத்தினேன்.

''கல்வித் துறையின் அதிகாரபூர்வமான ஆசிரியர் சங்கத்தின் சார்பில் இக்கூட்டம் கூட்டப்பட்டு இருக்கிறது.

''சமுதாயத்தின் பெரிய மனிதர் என்கிற முறையில், அவைத் தலைவர் கூறிய கருத்துகளை நான் கவனமாகக் கேட்டுக் கொண்டேன்.

''ஆதரிக்கிறவர்களுக்கு இருக்கிற உரிமை எதிர்ப்பவர்களுக்கு இல்லை என்று நான் சொல்லப் போவதில்லை.

''அதே நேரத்தில், அரசுத் துறையின் முறையான கூட்டத்தை நான் பொதுக்கூட்டமாக மாற்றிவிடுவது முறையல்ல.

''எனவே, கல்விக் கண்ணோட்டத்தோடு மட்டும் புதிய திட்டத்தினை ஆதரிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்'' என்று தொடங்கினேன்.

மேற்படி பீடிகையோடு, ஆம்பூரில் எடுத்துரைத்ததை விளக்கிக் கூறினேன்.

கூட்டத் தலைவர் உள்ள நிறைவோடு கூட்டத்தை முடித்துக் கொடுத்தார்.

சோமயாஜுலு

திருநெல்வேலி சுற்றுப் பயணத்தின்போது, விடுதலைப் போராட்ட வீரர் திரு சோமயாஜுலு அவர்களுடன் அறிமுகமாகும் வாய்ப்பு கிட்டிற்று.

நான் பேசிய கூட்டங்கள் சிலவற்றில் அவரும் பேசி, புதிய கல்வித் திட்டத்தை ஆதரித்தார். 1953 இல் ஏற்பட்ட அந்தத் தொடர்பு, இன்றுவரை தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

பிற்காலத்தில், நான் பொதுக்கல்வி இயக்குநராகி, மதிய உணவுத் திட்டம், சீருடைத்திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றின் வாயிலாகக் கல்வி நீரோடையைப் பட்டி தொட்டிகளுக்கு எல்லாம் கொண்டு செல்ல வாய்ப்புப் பெற்றபோது எனக்கு ஆதரவு தந்தவர்களில் தியாகச் செம்மல் திரு. சோமயாஜுலு அவர்களும் ஒருவர் ஆவார்.

புதிய கல்வித் திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் பொருட்டு, அரசியல் தொடர்பும், செல்வாக்கும் உடைய ஒருவர் இயங்குவது தேவை என்று அரசு எண்ணிற்று.

திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்களைப் புதிய திட்டத்தின் தனி இயக்குநராக (கௌரவ நிலையில்) நியமித்தது.

அந்த நிலையில் மற்றோர் மாற்றமும் அப்போது நேர்ந்தது.

இராசாசி என்பால் வைத்த நம்பிக்கை

கல்வி இயக்ககத்தில் 'அலுவலர்' பிரிவின் கல்லூரிப் பிரிவைக் கவனிக்கும் துணை இயக்குநராக இருந்த திரு வி. கே. கிருஷ்ணமேனன் ஏற்கெனவே ஓராண்டு பதவி நீடிப்புப் பெற்றிருந்தார்.

அது முடியும் தருவாயில், மேலும் ஓராண்டிற்கு அவருக்குப் பதவி நீடிப்புக் கொடுக்கும்படி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரைத்தார்.

மூத்த கல்லூரி முதல்வர்களோடு உறவு கொள்ள முதிர்ந்தவர் ஒருவர் இருப்பதே நல்லது.

உயர்நிலைப் பள்ளிப் பிரிவைக் கவனிக்கும் டாக்டர். பாலுவும் தொடக்கப் பள்ளிப் பிரிவை கவனிக்கும் நெ. து. சுந்தரவடிவேலுவும் இளைஞர்கள்.

''எனவே, அவர்களிடம் கல்லூரிப் பிரிவைக் கொடுப்பதற்குப் பதில், திரு கிருஷ்ணமேனனுக்கு நீடிப்புக் கொடுப்பது பொது நன்மைக்கு ஏற்றது'' என்பது இயக்குநரின் பரிந்துரை.

அந்தப் பரிந்துரை முதலமைச்சர் இராசாசியின் ஆணைக்குச் சென்றது.

''நெ. து. சு. வுக்கு வயது குறைவாக இருக்கலாம். திறமை குறைவு இல்லை.

''நேர்மையும், நடுநிலைமையும் சமாளிக்கும் திறமையும் உடைய நெ.து.சு.வே உயர் பள்ளி-கல்லூரி துணை இயக்குநர்களின் பணியையும் செம்மையாகப் பார்த்துக் கொள்வார்'' - இது மூதறிஞரின் மதிப்பீடு.

''திரு வி.கே. கிருஷ்ணமேனனுக்குப் பதவி நீடிப்பு வேண்டாம். நெ.து.சு. இரு பதவிகளை ஏற்றுக்கொள்ளட்டும். உயர்நிலைப் பள்ளி-கல்லூரி ஆகிய இரு பிரிவுகளுக்கும் நெ.து.சு.வை துணை இயக்குநராக நியமிக்கவும்'' இப்படி முதலமைச்சர் ஆணையிட்டார்.

அதுபற்றிக் கிருஷ்ணமேனன் முகம் சுளிக்கவில்லை; என்மேல் அழுக்காறு கொள்ளவில்லை; பற்றற்ற துறவிபோல அம்முடிவை ஏற்றுக்கொண்டார்.

நான் ஏற்கவேண்டிய பணிபற்றிய சிக்கல்களை, நுட்பங்களை கோப்புகளை, பொறுமையாக எனக்குக் காட்டினார்.

எல்லோரிடமும் நல்லெண்ணத்தை விதைத்துவிட்டுப் பதவி விலகினார்.

தொடக்கக் கல்வித் துணை இயக்குநராக எவர் நியமிக்கப்பட்டார்?

டாக்டர் எம். டி. பால் நியமிக்கப்பட்டார். அவர் திரு ஜி. இராமச்சந்திரனோடு, பல நகரங்களுக்குச் சென்று, ஆசிரியர் கூட்டங்களுக்குத் திறமையாக ஏற்பாடு செய்தார்.

ஆள்கள் கதையைவிட்டு, காலத்தின் போக்கைச் சிறிது கவனிப்போம்.

புதிய சட்டம் பற்றிச் சட்டமன்றம்

1953 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் சென்னைச் சட்டமன்றம் கூடியது.

அரசு அண்மையில் கொண்டுவந்த புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தைச் சட்டமன்றம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்வது என்ற தீர்மானம் 29-7-53 அன்று அரசின் சார்பில் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டன. ''தீர ஆலோசனை'' செய்து திட்டத்தைத் தள்ளிவிட வேண்டும். ''ஆலோசனைக்குப்பின் வல்லுநர்

குழுவிற்கு அனுப்ப வேண்டும்'' என்பன அவற்றில் முக்கியமான திருத்தங்கள்.

புதிய கல்வித் திட்டம் 'எவ்வளவு' நேரம் விவாதிப்பது என்பதிலேயே அவையின் அருமையான காலத்தை அளவுக்குமேல் செலவிட்டார்களோ என்று கூறத்தோன்றும்.

காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் புதிய திட்டத்தை எதிர்த்துக் கையெழுத்திட்டது உலகறிந்த செய்தி. இருப்பினும் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் கூட்டம் 'மாற்றானுக்கு இடங்கொடேல்' என்ற கொள்கையைப் பின் பற்றியது. அப் போதைக்குத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்க முடிவு செய்தது.

பல தரப்பினரும் பேசியபின், இராசாசி நீண்ட உரையாற்றினார். பிறகு திருத்தங்கள் ஒன்றன்பின் ஒன்றாக, அவையின் முடிவுக்கு வந்தன.

''கைவிட்டு விட வேண்டும்'' என்ற திருத்தத்திற்கு ஆதரவாக 138 வாக்குகளும் எதிராக 138 வாக்குகளும் சமமாகக் கிடைத்தன.

சபைத்தலைவர் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார். வல்லுநர் குழுவிற்கு அனுப்பும் திருத்தத்திற்கு ஆதரவாக 139 ஓட்டுகளும், எதிராக 137 வாக்குகளும் கிடைத்தன. திருத்தம் இரண்டு வாக்கில் நிறைவேறியது.

''அரசின் முக்கியமான திட்டம் ஒன்றைச் சட்டமன்றம் ஏற்றுக் கொள்ளாததால், அமைச்சரவை பதவியை விட்டுவிலக வேண்டும்'' என்று அடுத்த நாள் சட்டமன்றக் கூட்டத்தில் சிலர் குரல் எழுப்பினார்கள்.

வெளியில் அப்படிக் குரல் கொடுத்தோர் உண்டு. நீதிமன்றம் சென்று அரசு விலகும்படி ஆணை வாங்கப்போவதாகவும் பேச்சு அடிபட்டது. அந் நெருக்கடி தற்செயலாக விலகிற்று.

எப்படி?

55. இராசாசி ஆட்சி நீடித்தது

மொழிவழி மாநிலம்

இந்திய நாடு, மொழிவழி மாநிலங்களாக உருவாக்கப்பட வேண்டும் என்பது, அனைத்து இந்திய காங்கிரசின் கொள்கைகளில் ஒன்றாக இருந்தது.

எனினும், அரசியல் உரிமை பெற்ற பிறகும் மொழிவழி மாநிலங்கள் அமைவதில் காலதாமதம் ஏற்பட்டது.

விடுதலை பெறுகையில் இந்தியாவை இரண்டாகத் துண்டாடியது

அதனால் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்கள்-காந்தியடிகளின் மறைவு

அய்ந்நூற்று அறுத்துமூன்று சுதேச இராச்சியங்களை இந்திய அரசோடு இணைத்ததால் ஏற்பட்ட நிலைமைகள்-

அழுந்தி அவதிப்பட்டுக் கொண்டு இருந்த பிரிவினர் அனைவரும் ஒரே நேரத்தில் நல்வாழ்வுபெற நடத்திய போராட்டங்கள்- ஆகியவை அரசின் நாட்டங்களை வேறு பக்கம் ஈர்த்தன.

ஆந்திர மக்கள், தனி மாநிலம் பெறும் பொருட்டுப் போராட்டம் நடத்த நேர்ந்தது. பொட்டி ஸ்ரீராமுலு என்பவர், ஆந்திர மாநிலப் பிரிவினை கோரி உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார்.

ஆந்திர மாநிலம் 1-10-1953 முதல் உருவாகும் என்று இந்திய அரசு உறுதியாக அறிவித்தது.

இந்திய அரசின் அறிவிப்பிற்குப் பிறகே, இணைந்த சென்னை மாகாணச் சட்டமன்றக் கூட்டத்தொடர் தொடங்கியது; 30-7-1953 வரை சட்டமன்றத்தை நடத்துவது என்ற முடிவு செய்தது.

முதல்நாள் சிறுதோல்வி–மறுநாள் பெரும் வெற்றி

அரசின் அலுவல் பற்றியவை முடிவான பிறகு ஒரு நாளோ, சில நாள்களோ, தனியார் கொண்டு வரும் தீர்மானங்களுக்கும் சட்ட முன் வடிவுகளுக்கும் ஒதுக்குவது வழக்கம்.

குறிப்பிட்ட கூட்டத் தொடரில் 27-7-1953 அன்று தனியார் தீர்மானத்தை விவாதிக்கத் தொடங்கினார்கள். 30-7-1953 அன்று தொடர் விவாதத்திற்கு ஒதுக்கி இருந்தார்கள்.

முன் அறிவிப்பின்படி, அன்று ஆலோசனைக்கு வர வேண்டியது, சில ஆந்திர மாவட்டங்களில், நிலம் அற்றோர்க்குப் புறம்போக்கு நிலங்களை வழங்குவது பற்றியது.

அந்த 30-7-1953 அன்றே, ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நல்வாழ்த்துக் கூறி வழி அனுப்பி வைப்பது என்றும் ஏற்பாடு செய்து இருந்தார்கள்.

கல்லூரியின் கடைசி நாள் அன்று மாணவர்களில் பலர் கல்விக் கூடங்களுக்கு 'மட்டம்' போடுவது வியப்பல்ல.

அதைப்போன்று எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் 30-7-1953 அன்று அவைக்கு வரவில்லை.

அந்த நிலையில் ஆந்திர மாநிலத்துப் புறம்போக்கு நிலம் பற்றிய தீர்மானம் ஆலோசனைக்கு வந்தது.

ஆற்றுப்படுகை, ஏரி எதிர்வாய், காட்டுப்பகுதி போன்ற எல்லாப் புறம்போக்கு நிலங்களையும் நிலமற்ற ஆந்திர மாநில உழவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும்.

எவருக்கும் மூன்று ஏக்கருக்கு மேல் கொடுக்கக்கூடாது.

அந்த நன்கொடையும் சேர்த்து, எந்தக் குடும்பத்திற்கும் அய்ந்து ஏக்கருக்குமேல் நிலம் சேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தியப் போராட்ட வீரர்களையும் நிலமற்ற குடியானவர்களுக்குச் சமமாகக் கருத வேண்டும்.

இதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து 31-3-1954க்குள் நில ஒதுக்கீட்டை முடித்துவிட வேண்டும்.

இத்தனை கூறுகளைக் கொண்ட தீர்மானம் பற்றி அரசு எடுத்த நிலை என்ன?

ஏற்கெனவே, சில திங்களுக்கு முன், பல ஊர்களிலும் புறம்போக்கு நிலங்கள் ஏலத்தில் விடப்பட்டுள்ளன மேலும் தியாகிகளுக்கு இலவசமாகப் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை உறுதியாகாத ஏலங்களை புதிய ஆந்திர மாநிலம் வந்த பிறகு, அமையும் ஆட்சி உறுதி செய்வதா இல்லையா என்று ஆந்திர மாநில சட்ட மன்றம் முடிவு செய்யட்டும்.

புதிய மாநிலம் அமையும்வரை, சென்னை மாகாண அரசு, மேற் கொண்டு ஏலம் விடாது; எவருக்கும் புறம்போக்கு நிலங்களை ஒதுக்காது.

மேற்கூறிய உறுதி மொழிகளின் பேரில், தீர்மானத்தை வாக்கு எடுப்பு இல்லாமல் கைவிட்டு விடுவோம் என்பது அரசின் நிலைமை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் திரளாத அந் நிலையில, அரசின் உறுதி மொழியை ஏற்றுக்கொள்வதே விவேகம் என்று பல உறுப்பினர்கள் காதைக் கடித்தார்கள்.

தீர்மானம் கொண்டு வந்தவர்கள் சார்பில், அவையின் முடிவை முடிவு செய்ய வற்புறுத்தப்பட்டது.

வாக்கு எடுத்ததில், 119 வாக்குகள் ஆதரவாக இருந்தன 136 வாக்குகள் எதிராக இருந்தன.

அது தீர்மானத்திற்குத் தோல்வி; அரசிற்கு வெற்றி; தாராள வெற்றி.

முந்திய நாள் புதுக்கல்வித் திட்டத்தை வல்லுநர்கள் குழுவின் ஆலோசனைக்கு அனுப்பச் சொன்ன திருத்தம் ஒரு வாக்கு அதிகத்தில் நிறைவேறியது,

அது அரசின் மேல் நம்பிக்கை இல்லை என்பதைக் காட்டுவதற்கு ஒப்பாகும் என்று தென்னேட்டி விசுவநாதம் என்னும் காங்கிரசு உறுப்பினர் சொல்ல; அவர் வாயை அடைப்பதுபோல் இப்பெரும் வெற்றி அமைந்தது.

30-7-1953 அன்றைய வாக்கெடுப்பு அரசிடம் பெரும் நம்பிக்கையைக் காட்டுவதாகக் கொள்ளப்பட்டது.

முதல் அமைச்சர் இராசாசியின் ஆட்சி நீடித்தது.

பருலேக்கர் குழு பரிந்துரை

சட்டமன்ற முடிவின்படி, புதிய தொடக்கக் கல்வித் திட்டம் பற்றி ஆய்ந்து ஆலோசனை கூறும்படி, அரசு ஒரு குழுவை அமைத்தது.

அக் குழுவின் தலைவர், திரு பருலேக்கர் என்ற மராட்டியக் கல்வியாளர் ஆவார்.

அவர், சில ஆண்டுகளுக்குமுன், தாம் எழுதிய கல்வி பற்றிய நூலில் அரைவேளைப் பள்ளிகளுக்காக அழுத்தமாக வாதாடி இருந்தார்.

அக் குழுவில் இயக்குநர் கோவிந்தராசுலு இருந்தார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அலுவல் பற்றற்ற சிலர் இடம் பெற்றிருந்தனர்.

அந்தக் குழு, சில பள்ளிகளைப் பார்வையிட்டது.

மாணாக்கருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கிராமக் கைத்தொழில் பட்டறைகளைப் பார்த்தது.

அரைவேளைப் படிப்பு முறைக்கு ஆதரவாகப் பருலேக்கர் கல்வி நிபுணர் குழு, பரிந்துரை செய்தது.

பள்ளிகளின் வருகை குறைந்தது

வேறு பக்கம் பொது மக்களிடம் எதிர்ப்பு வளர்ந்தபடியே இருந்தது.

திராவிடர் கழகத்தின் சார்பில், ஆங்காங்கே கண்டனக் கூட்டங்கள், மாநாடுகள் நடத்தப்பட்டன.

கழகத்தின் கட்டளைப்படி, புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து, நீடாமங்கலம் ஆறுமுகம் என்பவர் தலைமையில் நாகப்பட்டினத்தில் இருந்து சென்னை நகரை நோக்கிக் கால் நடையாக ஓர் அணி வந்தது.

வழி நெடுகிலும் அந்த அணி அரை வேளைப் பள்ளிக்கு எதிராகப் பிரசாரம் செய்து வந்தது.

தொடக்கப் பள்ளிகளின் நிலை என்ன?

வீட்டு வேலைக்கு இடையூறு இல்லாத வகையில் எழுதப்படிக்க ஏற்பாடு செய்யும் புதிய திட்டத்தில் பள்ளிக்கு மாணவர்கள் வருகை அதிகமாகும் என்று அரசின் சார்பில் எதிர்பார்க்கப்பட்டது; பெரும் பாலான பள்ளிகளில் நேர்மாறான பலனைக் கண்டோம்.

அவற்றில் வருகை குறைந்துவிட்டது.

இதை முதல் அமைச்சர் இராசாசியே பின்னர் நடந்த சட்டமன்றக் கூட்டத்தில், ஒரு கேள்விக்குத் தமது பதிலாக வெளியிட்டார்.

எதிர்பார்த்தபடி வருகை பெருகாததால், முதல் அமைச்சரே புதிய கல்வித் திட்டதைக் கைவிட்டு விடுவாரென்று, காங்கிரசு வட்டாரங்கள் நம்பின.

அலுவலர் பங்கீடு

ஆந்திர மாநிலம் பிரிந்து போகையில் அலுவலர்கள் பங்கீடும் நடந்தது.

கல்வித்துறை இயக்குநர் திரு கோவிந்தராசுலு நாயுடுவை ஆந்திர மாநிலத்திற்கு ஒதுக்கினார்கள்.

அந்த மாநிலத்தின் பொதுக்கல்வி இயக்குநராக அவர் நியமிக்கப் பட்டார்.

அவர், அப்படி நியமிக்கப்படுவார் என்ற பேச்சு வந்ததும் மற்றொரு பேச்சும் வந்தது,

கல்வித் துறையில் உள்ள எவரையும் இயக்குநராக்க மாட்டார்கள்.

இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பார்கள் என்ற செய்தி காற்றில் மிதந்தது.

மீண்டும் முன்போலவே நானும் அமைச்சர் மாண்புமிகு சி.சுப்பிர மணியத்தைக் கண்டேன். அரசு - கல்வித் துறையைச்சேர்ந்த எவரை வேண்டுமானாலும் நியமிக்கட்டும் என்று அன்புடன் வேண்டினேன்.

முதல் பெண் இயக்குநர்

வேண்டுகோள் வீண் போகவில்லை. அரசு திருமதி ஓ.சி. சீனிவாசன் என்கிற கேரள அம்மையாரைக் கல்வித்துறை இயக்குநராக நியமித்தது.

செய்தி வெளியானதும், அவர் இல்லம் சென்று வாழ்த்து கூறினேன்.

''நேற்று நியமனச் செய்தியை என்னிடம் நேரில் கூறிய, கல்விச் செயலர், திரு வெங்கடேசுவரன் அய். சி. எஸ்.,

''நீங்கள் எல்லாப் பிரிவுகளைப் பற்றியும் நெ. து. சு. வின் ஆலோசனையைக் கேட்கலாம். அவருக்கு அவ்வளவும் அத்துப்படி; மேலும் விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படாதவர்; தங்களுக்குச் சொல்லும் ஆலோசனையைப் பிறரிடம் சொல்லமாட்டார். மிக நம்பிக்கைக்கு உரியவர்'' என்று என்னிடம் சொன்னார்.

''ஆகவே, உங்கள் வழிகாட்டலை அடிக்கடி கேட்பேன்'' என்றார், திருமதி ஓ. சி. சீனிவாசன்,

சொன்னபடியே செய்தார். கூடுதல் சுமை பற்றி நான் சுணங்கவில்லை.

வீடு மாற்றம்

திருமதி சீனிவாசன், சேத்துப்பட்டு நவ்ரோஜி சாலையில் ஓர் வாடகை வீட்டில் குடியிருந்தார்.

இயக்குநராகி விட்டதால், இயக்கக வளாகத்தில் உள்ள அரசுக்கு உரிய பங்களாவில் குடிபுக விரும்புவதாகவும் அதை நான் ஒரு வாரத்தில் காலி செய்யும்படியும் என்னிடம் கூறினார். அப் பங்களாவில் நான் குடியிருந்தேன்.

காலி செய்யவேண்டும் என்பதைக் கேட்ட என் மனைவி-

''ஒரு வாரத்தில் நம் வீட்டில் குடி இருப்பவரை காலி செய்ய முடியுமா? நமக்குத்தான் வேறு வீடு கிடைக்குமா?'' என்று கூறிக் கண் கலங்கினார்.

''இதுதான் வாழ்க்கை! என் செய்வது? அன்றைய இயக்குநர் கட்டளைக்குப் படிந்து நம் வீட்டை விட்டு, சுற்றத்தாரைவிட்டு இங்கே வந்தோம்.

''இன்றைய இயக்குநர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, எங்கே போக நேரிடுகிறதோ அங்கே போவோம்'' என்றேன்.

அடுத்த நாளே, தற்செயலாக ஒரு வீடு கிடைத்தது.

சென்னை செனாய்நகர்க் கோடியில், எழுத்தர்கள் நிலைக்கான சிறு வீடு-'அய் டைப்'-கட்டி முடிந்தது. அது எங்களுக்குக் கிடைத்தது.

படுக்கை அறையும் வருவோரை வரவேற்கும் அறையும் ஒன்றே.

இரண்டு திங்கள்போல அந்த எலி வளையில், நான், காந்தம்மா, திருவள்ளுவன் ஆகிய மூவரும் முடங்கிக் கிடந்தோம். சிறுவன் திருவள்ளுவனுக்கு நடமாடவே இடம் இல்லை.

ஏழைகளும் அவர்கள் வீட்டுப் பிள்ளைகளும் ஒண்டுக் குடித்தனத்தில் என்ன பாடு படுகிறார்கள் என்பதை நானே உணரும் நிலை ஏற்பட்டது.

நான் உணர்ந்து பயன் என்ன? பொது மக்களும் துன்பப்படுவோரும் உணர்ந்து எழுந்தால்தானே!

கோவிந்தராசுலு தமிழகம் திரும்பினார்

திருமதி சீனிவாசன் ஓய்வுபெற, கிட்டத்தட்ட ஆறு திங்கள் குறைவாக இருக்கும் போதே அவர் கல்வித்துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

''நியமித்ததுதான் நியமித்தார்கள்; அவர் இரண்டொரு ஆண்டு களாவது பதவியில் இருந்தால் கல்வித்துறையின் நிர்வாக நிலை ஒரு சீராக இருக்கும்'' என்று எனக்குத் தோன்றியது.

இயக்குநர் திருமதி அம்மையாரிடம் அதைக் கூறினேன்.

''அவர்களாகப் பார்த்துக்கொடுத்தால் இருக்கலாம். நானாகப் போய்க்கேட்டால் அது பலித்தாலும், என் உரிமைக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடலாம்'' என்றார் இயக்குநர்.

இதைக் கேள்விப்பட்ட பெரிய அலுவலர் ஒருவர், ''அடுத்து உன்னை இயக்குநராக்க வேண்டிக்கொள், மற்றவர்களுக்குப் பதவி நீடிப்புக்குப் பரிந்து உரைக்காதே'' என்றார்.

ஆந்திர மாநிலம் பிரிந்து போய்விட்ட பிறகு, சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் பதவி, திரு சி. சுப்பிரமணியத்திடம் ஒப்படைக்கப் பட்டது. பதவி நீடிப்பு சம்பந்தமாகப் பேசுவதற்கு அவரிடம் ஒரு நாள் சென்றேன்.

இயக்குநருக்குப் பதவி நீடிப்புத் தந்தால், நிர்வாகத்திற்கு நல்லதாக இருக்கும் என்றேன்.

அதைப் பற்றிச் சிந்தித்து முடிவு எடுப்பதாக அமைச்சர் கூறினார்.

அப்படிச் செய்வதற்கு முன், எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

ஆந்திராவிற்குக் கல்வி இயக்குநராகச் சென்ற திரு கோவிந்தராசுலு, சென்னைக்கு வந்துவிட விரும்பினார்.

எனவே, லைபீரியாவிற்கு யுனெஸ்கோவின் இயக்குநராகச் சென்றுள்ள திரு டி. சதாசிவ ரெட்டியைத் திரும்ப அழைத்து இயக்குநராக்கிக் கொள்ளலாம் என்று அரச மட்டத்தில் உள்ளவர்களிடம் கூறினார். ஆந்திர மாநில ஆட்சியும் அதை விரும்பியது.

திரு ரெட்டிக்கு அரசின் சார்பில் நேர்முகக் கடிதம் சென்றது. நண்பர்கள் பரிந்துரைக் கடிதம் எழுதினார்கள்.

ரெட்டியின் தாய் நாட்டுப் பற்று அவரை இந்தியாவிற்கு வர உந்திற்று.

ஆந்திராவின் பொதுக்கல்வி இயக்குநராகத் திரும்பி வந்தார்.

அதன் விளைவு? திரு ரெட்டி இந்தியா வருவதற்கு முன்பே, திரு கோவிந்தராசுலு சென்னை மாகாணப் பொதுக்கல்வி இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

அதனால், திருமதி சீனிவாசன், துணை இயக்குநராகப் பதவி இறக்கம் பெற்றார்; அம்மையார் அதை சிறிதும் பொருட்படுத்த வில்லை.

முன்னர் எங்கள் அனைவருக்கும் இயக்குநராக இருந்தவர்தானே என்று ஆறுதலோடு ஏற்றுக்கொண்டார்.

அடுத்த நாள் வந்த கடிதம் அம்மையாருக்கு விரக்தியை ஏற்படுத்தியது.

அரசு அலுவலர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கோ பதவிக்கோ மாறுதல் ஆகும்போது, பயண நாள் என்று சில நாள் எடுத்துக் கொள்ளலாம். அதைக்கூட எடுத்துக் கொள்ளாமல் அடுத்த நாளே வந்து பதவி ஏற்றுக் கொள்ளப் போவதாக, திரு கோவிந்தராசுலு நாயுடு எழுதி இருந்தார்.

''பதவி இறக்கம் பெறுபவருக்குச் சில நாள் தவணைகூடக் கொடாதவரிடம் ஏன் வேலை செய்யவேண்டும்'' என்று புண்பட்ட உள்ளத்தோடு அம்மையார் கோவிந்தராசுலு பதவிக்கு வந்ததும் சிலநாள் விடுப்பில் சென்று ஓய்வு பெற்றுக்கொண்டார்.

56. காமராசர் முதல்வரானார்

தமிழ்நாடு அரசியல் உலகிலும் எதிர் பார்த்ததற்கு மாறாகப் பெரியதோர் நிகழ்ச்சி நடந்தது.

இராசாசியின் நிபந்தனை

முன்பெல்லாம் சட்டமன்ற காங்கிரசு கட்சித் தலைவர் தேர்தல் ஆண்டுதோறும் நடைபெறும். ஒருவரே மீண்டும் மீண்டும் தேர்ந்து எடுக்கப்படுவதாயினும் தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறும். 1954 ஆம் ஆண்டுக்கான தலைவர் தேர்தல் நெருங்கியது.

காமராசர் உட்படப் பலரும் முதல்வர் இராசாசியே தொடர வேண்டுமென்று விரும்பினர். அதே நேரத்தில் பொது மக்கள் வெறுத்தும் எதிர்த்தும் வந்தனர். பள்ளிகளின் வருகையைப் பாதித்துவிட்டதால் அரைவேளைப் படிப்பு முறையைக் கைவிட்டுவிட வேண்டும் என்று காங்கிரசு வட்டாரங்களிலும் பிற வட்டாரங்களிலும் பெரும்பாலோர் கருதினர்.

பல பள்ளிகளில் வருகை குறைந்து விட்டதை முதல்வர் இராசாசியே அறிவித்த பிறகு, அதை மாற்றிவிட நல்ல வாய்ப்பு இருப்பதாக எண்ணினார்.

காங்கிரசுக் கொள்கைகளிலோ, திட்டங்களிலோ, உயர்ந்த வாழ்க்கை நெறிமுறை அடிப்படைகளில் ஒன்றாகவோ இல்லாத அரைவேளைப் படிப்புத் திட்டத்திற்கு அளவுக்கு மீறிய மதிப்பைக் கொடுத்துவிட்டார் இராசாசி.

அத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த விடுவதானால் மட்டுமே, தாம் தலைவர் பதவியை மீண்டும் ஏற்று, முதல் அமைச்சராகச் செயல்பட முடியும் என்று இராசாசி, கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டார்.

இது தேவை இல்லாத நிபந்தனை என்பது, அரசியல் புதை மண்டலத்தில் சிக்கிக்கொள்ளாத நடுநிலையில் இருக்கும் பார்வையாளர் களின் கணிப்பு.

தலைவர்கள் மேலுள்ள பக்தியின் காரணமாக வழியில் பாம்பு ஊர்ந்தாலும் தலைவரின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தாமல் நிற்பது, நம் மக்களின் போக்கு. இராசாசி அவர்களின் பக்தர்களும் அப்படித்தான் இருந்தார்களோ என்னவோ!

இராசாசி தம்முடைய நிபந்தனையைத் தளர்த்த மறுத்து விட்டார்.

முதல்வர் பதவிக்குப் போட்டி

நாம் தேர்தலுக்கு நிற்காமல், தம் சார்பில் ஒருவரைத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தப் போவதாகச் சொல்லிவிட்டார்.

காங்கிரசு ஆட்சியின் பெருமைக்கு இழுக்கு வராத வகையில், 'குலக்கல்வித் திட்டத்தை எடுத்துவிட ஏற்பாடு செய்ய முடியும்' என்று நம்பியல்லவா பெரும்பாலான சட்டமன்ற காங்கிரசு உறுப்பினர்கள் புதுக்கல்வித் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தார்கள்?

அவர்களிடம் ஏமாறிப் போன உணர்வு மேலாங்கியது. பொது வாழ்க்கைக்கு அது ஆகாத உணர்வு. அவ்வுணர்வால் உந்தப்பட்டு இராசாசிக்குப் போட்டி, அணி உருவாயிற்று.

இராசாசி திரு சி. சுப்பிரமணியம் - கல்வி அமைச்சர் அவர்களைத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தினார். அவரை வெல்லக்கூடிய ஒருவரை, இராசாசி எதிர்ப்பு அணி தேடும் சங்கடமான நெருக்கடி உருவாயிற்று.

சில பெயர்கள் ஆலோசனைக்கு வந்தன. எவர் எவருக்கு எத்தனை வாக்குகள் கிடைக்கலாம் என்று 'கணக்கு'ப் போட்டுப் பார்த்தனர்.

டாக்டர் சுப்பராயன் மறுப்பு

டாக்டர் சுப்பராயனை நிறுத்தினால், வெற்றி உறுதி என்று கருதப்பட்டது. அவரை அணுகி, சென்னை மாநில முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்க விரும்பி வேண்டினர்.

டாக்டர் சுப்பராயன் முதலமைச்சர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். ஏன்?

''இராசாசி எனது அரசியல் குரு போல. அவர் இடத்திற்கு நான் முயல்வது முறையல்ல. அவருடைய வேட்பாளருக்குப் போட்டியாக நிற்பது குருவை எதிர்ப்பதற்கு ஒப்பாகும்'' என்பது டாக்டர் சுப்பராயனின் பதில்.

காமராசர் நின்றார்

இராசாசிக்கு எதிராக அணி திரண்டவர்களுக்கு அது பெரிய சோதனைக் காலம். இராசாசியின் வேட்பாளர் என்றால், குலக் கல்வி நீடிக்கும். அதோடு, பொதுமக்களிடம் அவர்கள் செல்வாக்கு குறைந்துவிடும். இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் இராசாசி எதிர்ப்பாளர்கள் அனைவரும் காமராசர் அவர்களைச் சட்டமன்ற காங்கிரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடச் செய்தனர்.

தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் என்ற முறையில், காமராசர் ஏற்கெனவே குலக்கல்வி முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு, அது அடுத்த கல்வி ஆண்டில் எடுபடலாம் என்று நம்பிக்கையூட்டி தம் கட்சிக்குள் இருந்த எதிர்ப்பைத் தணித்து வைத்திருந்தார்.

ஆகவே, காமராசர் ஆட்சிப் பதவி விலங்கை மாட்டிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

குருசாமி இல்லத்தில் காமராசர்

அந்தக் காலகட்டத்தில் காமராசர் சென்னாய்நகரில் என் வீட்டிற்கு நான்கு வீடுகள் தள்ளி இருந்த குத்தூசி குருசாமியார் இல்லத்திற்குப் பலமுறை வந்து, கலந்து ஆலோசித்தார்.

எனது நெறி

முதன் முறை அப்படி அவர் வந்த சிறிது நேரத்திற்கு எல்லாம் நான் தற்செயலாக அவ் வீட்டிற்குச் சென்றேன். அப் பெரியவர் வந்து பேசிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டதும் உள்ளே நுழையாமல் வந்துவிட்டேன்.

என் மாமனார், எவ்வளவு சொல்லியும் மேலே சென்று கும்பிடு மட்டும் போட்டுவிட்டு அங்குத் தங்காமல் திரும்பி விட்டேன். பலமுறை இப்படி விலகி வந்துவிட்டேன்.

அரசு ஊழியன் பொது மக்களின் ஊழியன். அவனுடைய சொந்தக் கட்சிப்பற்று தனது பணியின்போது குறுக்கிடக்கூடாது. எல்லார்க்கும் நடுவில் நின்று, உரிய நேரத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லவும் அதைவிட விழிப்பாக நேரா நேரத்தில் எல்லாப் பிரிவினரின் கோரிக்கைகளையும் கவனிக்கவும் கடமைப்பட்டவன்.

எனவே, பெரியவர்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதும் அவர் களுக்குத் தாட்சண்யப்படும் நிலைக்குத் தள்ளிக் கொள்வதும் நல்லதல்ல.

இப்படி நானாக ஏற்றுக்கொண்ட நெறியைக் கட்டிக்காக்கும் விழைவில் பல பெரியவர்களுக்கு 'நெருக்கமானவனாகும் வாய்ப்புகளில் இருந்து விலகினேன். பழைய பழக்கத்தால் இன்றும் அப்படியே விலகி நிற்கிறேன்.

காமராசர் வென்றார்

சென்னைச் சட்டமன்ற காங்கிரசுக் கட்சிக்கூட்டம் முறைப்படி கூடிற்று. தேர்தல் நடந்தது.

திரு சி. சுப்பிரமணியம், திரு கு. காமராசர் ஆகிய இருவர் போட்டி யிட்டார்கள். திரு. கு. காமராசர் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

அலெக்சாண்டர் என்ற கிரேக்க மாவீரர், தம்மிடம் தோற்ற புருஷோத்த மனை, அரசனாக தலைமை ஏற்று நடத்தும்படி கட்டளையிட்டார்.

காமராசரும் அதே பாங்கில் நடந்து கொண்டார். திரு சுப்பிரமணியத்தைத் தமது அமைச்சரவையில் கல்வி, நிதி அமைச்சராக விளங்கும்படி வேண்டிக் கொண்டார்.

திரு சுப்பிரமணியம் அதை உடனே ஏற்றுக் கொண்டதன் மூலம், 'குடிசெயல் வகை'க்குச் சிறந்த எடுத்துக் காட்டாக ஒளிவிட்டார்.

புதிய கல்வித் திட்டம் நீங்கியது

காமராசர் ஆட்சி புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தை நீக்கிவிட்டது; பழைய கல்வி முறைக்கு மாறியது.

ரெட்டியாரின் வேதனை

காமராசர் முதலமைச்சரான சில நாள்களுக்குப் பிறகு, திரு டி. சதாசிவ ரெட்டி லைபீரியாவில் இருந்து தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்தார்.

அவர் சென்னைக்கு வந்தபோது, நான் மீனம்பாக்கம் விமானநிலையத் திற்குச் சென்று வரவேற்றேன்.

என் மாலையை ஏற்ற திரு. ரெட்டி, என்னிடம் கேட்ட முதல் கேள்வி என்ன?

''நீ இருந்துமா அரைவேளைப் படிப்பு முறை நுழைய முடிந்தது?'' என்பதாகும்.

நான் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன்.

'பெரியோர் தங்கும் அறை'யில் அதைப்பற்றி விவரமாகக் கேட்டார்.

நான் அத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டாமென்று கொடுத்த குறிப்பை இயக்குநர் முதலமைச்சர் இராசாசியிடம் காட்டவில்லை என்பதைத் தெரிந்து கொண்டார்.

''இறைவன் எவரையாவது அழிக்க விரும்பினால், அவருக்கு விபரீதமான சிந்தனையைக் கொடுப்பார் என்பது உலகத்தில் இருந்து வரும் வழக்கு.

''இராசாசி போன்ற திறமையும் நேர்மையும் இணைந்த ஒருவரைச் சாதாரணமாகப் பதவியிலிருந்து நீக்க இயலாது. அவ்வளவு பெரிய அறிவாளி இவ்வளவு பெரிய தவறைச் செய்வதற்கு வேறு விளக்கம் சொல்ல இயலாது'' என்று வேதனையுடன் கூறினார்.

நான் ஒன்றும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன்.

முதலமைச்சர் காமராசருடன் பேட்டி

1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாள் காமராசர் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார்.

அப்போது, வடசென்னையில், விருதுநகர் நாடார் உறவின் முறையின் சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க, உரிமை கேட்கும் மனு ஒன்று பொதுக்கல்வி இயக்ககத்தின் ஆலோசனையில் இருந்தது.

சில வாரங்களுக்குப் பிறகு முதலமைச்சர் காமராசர் இயக்குநரோடு தொலைபேசியில் பேசினார். ஒரு நாளையும் நேரத்தையும் குறிப்பிட்டார்.

''வடசென்னை உயர் நிலைப் பள்ளிபற்றி என்ன முடிவு செய்யப் போகிறீர்கள் என்பதை அது சம்பந்தப்பட்ட துணை இயக்குநரிடம் சொல்லி அனுப்புங்கள். அவர் குறிப்பிட்ட வேளை என்னைத் தலைமை அலுவலகத்தில் கண்டு எடுத்து உரைக்கட்டும்'' என்றார்.

இயக்குநர், தாமே நேரில் காண்பதாகக் கூறினார்.

''இதுபற்றிக் கல்வித்துறையில் விதிமுறைகள் இருப்பது உறுதி. அவற்றிற்கு ஏற்ப, என்ன முடிவு செய்வீர்கள் என்பது தெரிய வேண்டும். அவ்வளவு தான்! இந்தச் சிறு தகவலுக்காக, இயக்குநரே வரவேண்டிய தில்லை. துணை இயக்குநர் வந்தால் போதும்'' என்று முதலமைச்சர் ஆணையிட்டார்.

இயக்குநருக்குச் சங்கடமான நிலை, அவ்வளவு சொல்லிய பிறகு, தாமே செல்ல விரும்பவில்லை.

என்னை அனுப்பினால், எள் பிளந்தாற்போல் பதில் கூறிவிடுவேனோ என்று அஞ்சினார்.

என்னைக் கூப்பிட்டு எனக்குப் பாடம் போதித்தார்.

''முதலமைச்சரின் அணுகுமுறை தாராளமாக இருக்குமா, அழுத்தமாக இருக்குமா என்பது தெரியாது. அவரது போக்கையொட்டி இயங்குவதே பாதுகாப்பு. ஆகவே, உன்னைக் கேட்கும்போது, கொடுக்கலாமா கூடாதா என்று பளிச்சென்று பதில் சொல்லிவிடாதே.

''முதலமைச்சர் விரும்புகிறபடி ஆணையிட இயக்குநர் சித்தமாயிருப் பதாகக் கூறிவிடு! அவர் விருப்பத்தைத் தெரிந்து கொண்டுவா'' என்றார்.

முடிவு எடுக்கும் உரிமை, மக்களின் நம்பிக்கைக்குரிய முதல் வருடையது என்பதில் எனக்குத் தெளிவு இருந்தாலும் தலைமை அலுவலர்கள் தமக்கு மேலே இருப்பவர்களின் விருப்பத்தைப் பதிந்துகொள்ளும் பதிவு நாடாக்களாக மாறிவிடுவது நல்லதல்ல என்று எனது உள்மனம் உறுத்திற்று.

ஆணைப்படி முதலமைச்சரின் பேட்டிக்குச் சென்றதால் இயக்குநர் சொல்லியபடியே சொல்லிவிட்டு வருவோம் என்று தெம்பாகச் சென்றேன்.

சில மணித்துளிகள்கூடத் தாமதமின்றி முதல் அமைச்சர் பேட்டி கிடைத்தது.

சட்டத்துக்கு மதிப்பளிப்பவர்

''தனியார் உயர்நிலைப் பள்ளிகள் நடத்த என்னென்ன விதிகளை நிறைவேற்ற வேண்டும்? எதை எதை எவ்வளவுக்குச் செய்ய வேண்டும்? இவற்றை இப்போதுதான் நான் தெரிந்துகொள்ளப் போகிறேன். விவரமாகச் சொல்லுங்கள்'' என்றார் முதலமைச்சர்.

''தேவையான இடம், விளையாட்டு இடம், தளவாடங்கள், ஆய்வகம், நூலகம், அறக் கட்டளை நிதி முதலியவற்றைச் சுருக்கமாகக் கூறினேன். கல்வித்துறை அவ்வப்போது விதிக்கும் தகுதியின் அடிப்படையில் ஆசிரியர்கள் முதலியோரை நியமித்தல், குறிப்பிட்ட சம்பள விகிதத்தில் ஊதியம் அளித்தல், பணப் பாதுகாப்பு உறுதியளித்தல் ஆகியவற்றைப் பட்டியல் போட்டுக் கொண்டுபோனபடி படித்தேன்.''

''வட சென்னை பள்ளிக்கூடத்தார் எவற்றை நிறைவேற்றி விட்டார்கள்? எவற்றைப் பாக்கி வைத்திருக்கிறார்கள்?'' இவ் விரண்டும் முதல்வரின் கேள்விகள்.

''உரிமை கொடுத்தால்தான் பொதுப்பணத்தைச் செலவிட்டு, தளவாடங்கள், படங்கள், நூல்கள் முதலியவற்றை வாங்குவார்கள். முதலில் உயர்நிலைப் பள்ளியை வேறு பணிக்குக் கட்டிய கட்டடத்தில் தொடங்கி, பின்னர் அதற்கு எனத் தனிக் கட்டடம் கட்டப்போகிறார்கள். அது ஒரிரு ஆண்டுகள் ஆகலாம். பொருள்களை வாங்குவது சில நிங்களில் நிறைவேறிவிடும்.

''தாங்கள் விரும்புகிறபடி ஆணையிடுவதாக இயக்குநர் சொல்லி விட்டு வரச் சொன்னார்'' என்று பதிலுரைத்தேன்.

''இத்தகையவற்றை நான் விரும்புகிறேனா இல்லையா என்று பாராமல், விதிமுறைகளின் அடிப்படையில் முடிவு செய்வதே நிர்வாகத்திற்கு நல்லது.

''உயர்நிலைப் பள்ளிக்கு என்று, பொருத்தமான தனிக் கட்டடம் இல்லாத நிலையில் சாதாரணமாக என்ன அனுமதி கொடுப்பீர்கள்?'' என்று முதலமைச்சர் திரு காமராசர் கேட்டார்.

''புதிய கட்டடம் கட்டுவதை எதிர்பார்த்து முதல் மூன்று படிவங்களைத் தற்காலிகமாக அனுமதிப்போம், கட்டட வேலை முடிந்த பிறகு ஒன்பது, பத்து, பதினோராவது வகுப்புகளை ஆண்டுக்கு ஒன்றாக அனுமதிப்போம்'' என்றேன்.

''சரியான போக்கே! வாக்குறுதியை மட்டும் நம்பி எடுத்த எடுப்பிலேயே, கேட்டதை எல்லாம் கொடுத்துவிட்டால், அப்புறம் செயற்குழு உறுப்பினர்கள் அவரவர் தொழிலைக் கவனிக்கப் போய்விடக்கூடும். அடியோடு அனுமதி மறுத்துவிட்டால், ஊரார் மகமைப் பணத்தைச் செலவிட முடியாது. இதுவரை பின்பற்றும் நடைமுறை இனியும் தொடரலாம்'' இப்படி ஆணையிட்டார், காமராசர்.

நான் பணிவான குரலில்,

''தாங்கள் விரும்பினால், அவர்கள்கேட்டுள்ள முதல் நான்கு படிவங்களையும் கொடுப்பதாக, இயக்குநர் என்னிடம் கூறி அனுப்பினார்'' என்றேன்.

இந்தப் பள்ளிக்கூடம் தொடங்கப் போகிறவர்கள் எனக்கு வேண்டியவர்கள்தான். அவர்கள், அரசின் விதிமுறைக்குக் கட்டுப்பட்டால்தான் மற்றவர்களைக் கட்டுப்படுத்த முடியும்.

''மூன்று படிவங்கள் கொடுத்தால் போதும் என்று இயக்குநரிடம் சொல்லுங்கள்'' என்ற கட்டளையோடு பேட்டியை முடித்துக் கொண்டார்.

நான் காமராசரை நேரில் கண்டு பேசியது, அதுவே முதன் முறை. அவரைச் சட்டம், விதி முறைகளுக்கு மதிப்பு அளிப்பவராக மதிப்பிட்டேன். பின்னர் ஒன்பது ஆண்டுகள் அவரிடம் இயக்குநராகத் தொண்டாற்றும் பேறு கிடைக்குமென்பது அப்போது தெரியாது. அந்த ஒன்பது ஆண்டுகளில் என் முதல் மதிப்பீட்டை மறு பரிசீலனை செய்ய நேரவில்லை.

அனுமதி கிடைத்தது

இயக்ககம் வந்து, இயக்குநரிடம் நடந்தபடியே சொன்னேன். வருத்தம் அவரைக் கௌவிற்று. நான் திறமையாகச் சமாளிக்கவில்லை, என்று எண்ணியதுபோல் தோன்றிற்று.

அடுத்த நாள், அப் பள்ளியின் சார்பில் அதன் செயலரும் வழக்கறிஞருமான சண்முகவேலு, கல்வித்துறை இயக்குநரைக் கண்டார். தாம் கொண்டு வந்த கடிதத்தைக் கொடுத்தார்.

''இப்போதைக்கு முதல் மூன்று படிவங்கள் நடத்த அனுமதி தாருங்கள். அடுத்த ஆண்டிற்குள் புதிய கட்டடம் கட்டிவிட்டு, மேல் வகுப்புகளை வாங்கிக்கொள்கிறோம்'' என்று அந்தக் கடிதம் கூறிற்று.

இயக்குநர் அப்படியே, முழுமை பெறாத மூன்று படிவங்கள் கொண்ட உயர்நிலைப் பள்ளியை நடத்தும் உரிமையை வழங்கினார்.

அது படிப்படியாக வளர்ந்தது. பெரிய உயர்நிலைப் பள்ளியாகப் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு இன்று கல்வி அறம் ஆற்றி வருகிறது.

57. பொதுக் கல்வி இயக்குநரானேன்

தணிக்கையாளர் குறும்பு

மாந்தர் வாழ்க்கையில் காண்பது என்ன? பெரியவர்கள்கூட, சிறியனவற்றைப் பற்றிய விவகாரங்களில், அதிக அக்கறையும் முனைப்பான ஈடுபாடும் காட்டி, அருமையான பொழுதை வீணாக்குவதைக் காண்கிறோம்.

அரசு ஊழியர்கள் இதற்கு விலக்கல்ல. அவர்களுடைய போக்கு சில வேளை, சிரிப்பிற்கு இடம் கொடுப்பது உண்டு.

நான், இரு துணை இயக்குநர் பதவிகளை ஒரே நேரத்தில் ஏற்றிருந்த கட்டத்தில் இயக்ககக் கணக்குகள், ஆண்டுத் தணிக்கைக்கு உட்பட்டன.

புரட்டோ, பொறுப்பு இன்மையோ, கோப்புகள் இன்மையோ என்று ஒன்றுகூடத் தென்படவில்லை.

தணிக்கை செய்யும் தொழிலில் இருப்பவர் குறை சொல்லக் கற்பதே முதல் வேலை என்று அறிவுரை சொல்லவில்லையா?

தணிக்கை செய்தவர் அத்தகைய கொள்கையில் வளர்ந்த ஒருவர்போலும்.

ஏதாவது குறை சொல்லாவிட்டால், தமது மேல் அலுவலர்கள் தம்மைத் தவறாக மதிப்பிடுவார்கள் என்று நினைத்து இருக்கக்கூடும்.

நீண்ட பட்டியல் ஒன்று திரட்டினார். குறிப்பிட்ட சில திங்களில் பல தேதிகளை வரிசைப்படி எழுதினார்.

ஒவ்வொன்றிற்கும் நேரே, ஒன்றே கால் ரூபாய், ஒன்றரை ரூபாய் என்று கணக்கு எழுதினார்.

அந்த நீண்ட பட்டியலைக் கணக்குத் தணிக்கைத் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டார்.

அலுவலகக் கோப்புகள் ஏன் இத்தனை முறை துணை இயக்குநரின் வீட்டுக்கு அனுப்பப்பட்டன?

அந்தக் கோப்புகளை அலுவலகத்திலே பார்த்திருக்கக் கூடாதா?

அப்படி வாடகை ரிக்ஷாவில் அனுப்புகையில் ஒரே தொலைவுக்கு வெவ்வேறு கட்டணம் கொடுப்பானேன்? இந்தச் செலவுகளைத் தவிர்த்து இருக்க முடியாதா?

இவ்வளவு பெரிய கேள்விகளை எழுப்பி, 'கணக்கு எதிர்ப்புக் குறிப்பினை' அனுப்பி இருந்தார்.

சில நாள்களுக்குப்பின் இக் குறிப்பு பொதுக்கல்வி இயக்குநருக்கு நேரடியாக வந்தது.

திருமதி ஓ.சி. சீனிவாசன் அப்போது இயக்குநராக இருந்தார்.

அவர், அவ்வறிக்கையையும் எதிர்ப்புக் குறிப்பையும் படித்துப் பார்த்தார்; தணிக்கைக் குறிப்பில் இருந்த சில்லறைத்தனத்தைக் கண்டு வெகுண்டார்.

திருமதி ஓ.சி. சீனிவாசன், தலைமைக் கணக்குத்தணிக்கையாளருக்கு ஒரு நேர்முகக் கடிதம் எழுதினார்.

''பல திங்களாக, நெ. து. சுந்தரவடிவேலு இரு துணை இயக்குநர் பதவிகளை ஏற்று நடத்தி வருவதை, உங்கள் தணிக்கையர், பதிவேடுகளில் இருந்து உணர்ந்து இருப்பார்.

''அப்பருவத்தில்தான், வீட்டிற்குக் கோப்புகளை அனுப்ப நேர்ந்தது என்பதும், அவர் கண்ணில் பட்டிருக்க வேண்டும். 'ரிக்ஷா கூலி' என்பது ஒரே சீராக நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல.

''சுமையையும் நேரத்தையும் பொறுத்துக் கூலி கொடுக்க நேருமென்பது யாவரும் அறிந்ததே.

''இரண்டு பெட்டிகளுக்குமேல் சேர்ந்து விடும்போது, கூடுதல் கூலி கேட்பதும் கொடுப்பதும் விபரீதமல்ல.

''நெ. து. சு. வின் வீட்டுக்கு வாடகை வண்டியில் கோப்புப் பெட்டிகளை அனுப்பியது எந்த நாள்களில்?

''அவர், பிற்பகலில், அலுவல் பற்றி வெளியில் கூட்டத்திற்குச் சென்று விட்டு, அங்கிருந்தபடியே வீடு திரும்ப நேரிட்ட நாள்களில் மட்டுமே.

''மற்ற நாள்களில் அவரது காரிலேயே கோப்புப் பெட்டிகளைக் கொண்டு செல்வார். இதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல், கோடிக்கணக்கான ரூபாய்களை மான்யமாக வழங்கியதில் எவ்வித குறையும் காண முடியாத ஆற்றாமையில் 'கால் ரூபாய்' ஆட்சேபணை எழுப்பியுள்ளது பொதுப் பணத்தைக் கண்காணிப்பதற்குச் சரியான முறையல்ல'' என்று மிகத் தெளிவாக எழுதினார்.

தலைமைக் கணக்குத் தணிக்கையர், இயக்குநரின் கடிதத்திற்கு உடனே பதில் எழுதினார்.

''ரிக்ஷா வாடகை பற்றி ஆட்சேபணைக் குறிப்பு எழுதியது சரியல்ல.

''அதை நீக்கிவிடாமல் நான் தணிக்கை அறிக்கையை அனுப்பியதற்காக வருந்துகிறேன். இதை இத்துடன் விட்டு விடுவோம்'' எனறு பொருள்படும்படி எழுதினார்.

தம்மிடம் வேலை பார்க்கிறவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும், அதற்கு வேண்டிய துணிவும் பெற்றிருந்த திரு டி. எஸ். ரெட்டி, திருமதி சீனிவாசன் போன்ற துறைத்தலைவர்கள் மேலவர்கள், ஒரு சிலராகவே ஆகிவிட்டதால் நாட்டு நிர்வாகத்தில் ஆங்காங்கே விரிசல்கள் கண்டு வருகின்றன.

முன்னோடிகளாக உற்சாகத்துடன் செயல்பட வேண்டிய அலுவலர்கள் தற்காப்பு உணர்ச்சி மட்டுமே உள்ளவர்களாக நலிந்து வருகிறார்கள்.

இந்தியா அரசியல் விடுதலை பெற்ற பிறகு சில ஆண்டுகள்வரை, விடுதலை நாளையும், குடியரசு நாளையும் கோலாகலமாகக் கொண்டாடுவது வழக்கம்.

இரு நாள்களும் ஆளுநர் வாழும் ராஜ்பவனில் தேனீர் விருந்து நடக்கும்.

1954 ஆம் ஆண்டு ஆகஸ்டில் வந்த விடுதலை நாள் விருந்திற்கு அழைக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

காந்தம்மாவும் நானும் உரிய நேரத்தில் அங்குப் போய்ச் சேர்ந்தோம்.

சில மணித்துளிகளில் அங்கு வருகை தந்த செட்டிநாட்டு அரசர் சர். எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் கண்களில் பட்டோம்.

அரசர் என்னைத் தனியே அழைத்துப் போய்ப் பேசினார்.

''இது உங்கள் உள்ளத்திலேயே இருக்கட்டும். திரு கோவிந்தராஜுலு நாயுடு திருப்பதியில் புதிதாக ஏற்பட இருக்கும் வெங்கடேசுவரப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராகச் செல்லப் போகிறார்.

''அவரிடத்தில் எவரை இயக்குநராக நியமிப்பது என்று ஆலோசித்தார்கள். டாக்டர் எம். டி. பால், நீங்கள் இருவர்தான் அதற்கு உரியவர்களாம்.

''இவ்விருவரில் எவருடைய இரகசியப் பதிவுக் கோப்பு சிறப்பாக இருக்கிறதோ, அவருக்குக் கொடுப்பதென்று முடிவு செய்திருக்கிறார்கள். உங்கள் கோப்பு எப்படி இருக்கும்?'' என்ற கேள்வியோடு இரகசியத்தை முடித்தார்.

''நியாயமான முடிவே. இரு கோப்புகளில் என்னுடையது சிறந்ததாக இருக்குமாவென்று உளவு பார்த்தது இல்லை'' என்று மெல்லிய குரலில் உண்மையைச் சொன்னேன்.

செட்டி நாட்டு அரசர், என்னை விடுவித்த சில மணித்துளிகளில், அப்போதைய அமைச்சர் மாண்புமிகு மீ. பக்தவத்சலம் நாங்கள் நின்று கொண்டிருந்த பக்கம் வந்தார். என்னைத் தனியாக வரும்படி குறிப்புக் காட்டினார்.

அமைச்சர் பக்தவத்சலனார் பின்னால் சென்றேன். மக்கள் இல்லாத பக்கம் அழைத்துச் சென்றார்.

''இப்போதைக்கு உங்களோடு இருக்க வேண்டிய செய்தி'' என்ற பீடிகையோடு, நீண்ட செய்தியைக் கூறினார். அது என்ன?

''வெங்கடேசுவரப் பல்கலைக் கழகச் சட்டம், அண்மையில்தான் நிறைவேறி உள்ளது. அந்தச் சட்டத்தின்படி, ஆளுநருக்குப் பதில், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியே வேந்தர் ஆவார்.

''எனவே 'வெங்கடேசுவர' பல்கலைக்கழகத் துணை வேந்தரை நியமிக்கும் பொறுப்பு ஆந்திர மாநிலத் தலைமை நீதிபதியினுடையது.

''தலைமை நீதிபதி, மாண்பமை சுப்பாராவ் சென்னை மாநில அரசுத் தலைமைச் செயலர் திரு இராமுன்னி மேனனனுக்கு நேரடியாக இரகசியக் கடிதம் ஒன்றை எழுதி உள்ளார்.

''புதிய பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக, இயக்குநர் கோவிந்தராஜுலுவை அனுப்பி உதவும்படி வேண்டிக் கொண்டார். அரசு ஊழியராகிய நாயுடுவை அனுப்புவது பற்றி, முதலமைச்சர் காமராசர், கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம், நான், தலைமைச் செயலர் ஆகியோர் இரண்டு நாள்களுக்குமுன் கலந்து ஆலோசித்தோம்.

''தலைமை நீதிபதியின் கடிதத்தைப் படித்து முடித்ததும் காமராசர், தலைமைச் செயலரைப் பார்த்து, 'உங்கள் ஆலோசனை என்ன?' என்று கேட்டார்.

'வேண்டும் என்றால் அனுப்பலாம். அப்படி அனுப்பிவிட்டால் நமக்கு முதிர்ந்த இயக்குநர் கிடைப்பது அரிது' என்றார், தலைமைச் செயலர்.

'அனுப்பமாட்டோம் என்றால், அண்டை மாநிலத்தோடு நல்லுறவு இருப்பது கெடாதா?' இப்படி முதலமைச்சர் கேட்டார்.

'ஆமாம், கெடும். நாயுடுவிற்குப் பதில் இயக்குநர் பதவிக்கு இருவரைக் கவனிக்க வேண்டும். இருவருமே இளைஞர்கள்; நாற்பத் திரண்டு வயதினர்.

'இருவரில் எவரை நியமித்தாலும் அவர் பதின்மூன்று ஆண்டுகள் ஒரே இயக்குநர் பதவியில் இருப்பார். இது நல்லதா?' என்று மெல்ல இழுத்தார், தலைமைச் செயலர்.

'நாயுடுவை அனுப்பி வைப்பதனால் இவ்விருவருக்குப் பதில், வேறு எவரையாவது நியமிக்கும் சாத்தியக்கூறு இருக்கிறதா?' -இது முதலமைச்சர் காமராசரின் கேள்வி.

'இந்திய ஆட்சி அணி', 'இந்திய சிவில் அணி' இவற்றைச் சேர்ந்த எவரையாவது கவனிக்கலாமா?' என்று தலைமைச் செயலர் வினவினார்.

'கல்வியின்பால் தனி நாட்டமுடைய எவராவது இருந்தால் அவரையும் கருதலாம்' என்றார் முதல் அமைச்சர்.

அப்படி ஒருவரும் இல்லை. இந்திய சிவில் பணியைச் சேர்ந்தவர்கள் அனைவருமே அதிகப் பணி மூப்பு உடையவர்கள்; இந்திய ஆட்சி அணியைச் சேர்ந்தவர்களில்கூட, தகுதியானவர்கள் இயக்குநர் பதவிக்கும் மேற்பட்ட நிலைக்கு உரியவர்கள்.

'ஆனால், அரசு பார்த்து, அவர்களில் ஒருவரை இயக்குநராக நியமிப்பதானால் அதை ஏற்றுக் கொள்ளும் அளவு கட்டுப்பாடு உடையவர்கள்; அத்தகைய ஒருவரைத் தேடட்டுமா?'

'ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதற்காக, இயக்குநர் பதவியை ஏற்பவர், ஆர்வம் காட்டுவார் என்று எதிர்பார்க்க இயலாது. பதவி கிடைக்காத எரிச்சலில் துணை இயக்குநர்கள் இருவருமே ஏனோதானோ என்று வேலை பார்க்கும் சூழ்நிலை உருவாகி விடும். கல்வித்துறை பாழாகிவிடும்.

'கல்வியின்பால் ஈடுபாடு உடைய இந்திய ஆட்சி அணியினர் எவரும் இல்லாததால், துணை இயக்குநர் இருவரில் ஒருவரை நியமிப்போம்.

'இயக்குநர் பதவி, பணிமூப்பு அடிப்படையில், நிரப்பப்பட வேண்டியதா? தகுதி அடிப்படையில் கொடுக்கப்படவேண்டியதா?' என்றார் முதலவர்.

'அதுவரை இரு துணை இயக்குநர்களின் பெயரும் வெளியிடப் படவில்லை.

'தகுதி உயர்வு பற்றியே, இயக்குநர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

'இப் பதவியைப் பொறுத்தமட்டில், உரிமை உடைய இரு துணை இயக்குநர்களின் இரகசியக் கோப்புகளையும் சென்னை மாகாண அரசு ஊழியர்கள் பொறுக்கு ஆணையகத்திற்கு அனுப்பி, எவருடைய தகுதி அதிகமென்று ஆணையத்தின் கருத்தைக் கேட்டுக்கொள்ளட்டுமா?' என்று தலைமைச் செயலர் முதல்வரிடம் கேட்டார்.

'எங்களுக்கு உங்கள் மதிப்பீட்டில் நம்பிக்கை இருக்கிறது. நீங்களே பார்த்துச் சொல்லலாம்' என்றார் முதலமைச்சர் காமராசர்.

'இருந்தாலும் ஆணையத்தின் கருத்தை அறிந்துகொள்ள விடுங்கள்' என்று வேண்டினார் தலைமைச் செயலர்.

'தேவை இல்லாததைச் செய்து, அதை ஒரு மரபாக்கிவிடாதீர்கள்' என்றார் முதல்வர்.

''தலைமைச் செயலர் மீண்டும் வற்புறுத்தியதால், ஆணையத்தின் மதிப்பீட்டைப் பெற்று, டாக்டர் பாலையாவது உங்களையாவது நியமிப்பார்கள். உங்கள் இரகசியப் பதிவு நன்றாயிருக்கும் என்று நம்புகிறேன்'' என்றார் அமைச்சர் பக்தவசத்சலனார்.

''எவர் கோப்பு எப்படி இருக்கும் என்று நான் உளவு பார்த்தது இல்லை. அரசின் முடிவு நியாயமானது. அதன் அடிப்படையில் எவருக்குக் கிடைத்தாலும் சரிதான்'' என்று அடக்கமாகப் பதில் கூறினேன். அதோடு, அமைச்சர் விடை கொடுத்தார்.

வீடு திரும்பியதும் நாங்கள் பேசிக்கொண்ட இரகசியம் பற்றி காந்தம்மா கேட்டார். நான் வெளிப்படுத்தவில்லை.

இரு திங்கள், நான் பள்ளி, கல்லூரி விழாக்களுக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டேன். அலுவலகம் உண்டு, வீடு உண்டு என்று இருந்தேன்.

என் வாய் மூடிக்கிடந்ததால், ஊர் வாயும் மூடிக்கிடக்குமா?

இயக்குநர் பதவி காலியாகப் போகிறது என்ற செய்தி காற்றில் கலந்து பரவிற்று. பலர் சுறுசுறுப்பாயினர். எனக்குத் தெரியாமலே திரு காமராசருக்குத் தந்தை பெரியார், என் பெயரைப் பரிந்துரைத்தது சில திங்களுக்குப்பின் வெளியாயிற்று.

அதேபோல் எனக்குத் தகவல் இல்லாமல், எனக்காகச் சிலரும் வலியப் பரிந்துரைகள் வழங்கினர்.

அவர்களில் ஒருவர் செய்யூர் திரு வி. கே. இராமசாமி முதலியார். அவர் அப்போது காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்.

மற்றொருவர், கிளியானூர் வெங்கட கிருஷ்ண ரெட்டியார். அக் காலகட்டத்தில் அவரை எனக்கு அறிமுகமேயில்லை.

என்னைப் பற்றிக் கேள்விப்பட்டதை வைத்துக்கொண்டு, சொந்த மதிப்பீட்டின்படி, எனக்கு ஆதரவாகச் செயல்பட்டு இருக்கிறார்.

சென்னையில் வாழ்ந்த இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்ற தியாகிகளில் ஒருவர் - காமராசருக்கு வேண்டிய ஒருவர்- எனது மாநகராட்சிப் பணிக் காலத்தில் எனக்கு வேண்டியவரானார். கேரளத்தைச் சேர்ந்த அத் துறவி. ஒரு நாள் காலை, என்னைத் தேடி வந்தார்; என்னை முதல் அமைச்சர் காமராசரிடம் அழைத்துப் போக முயன்றார். இயக்குநர் பதவியை எனக்குப் பெற்றுத்தர விழைந்தார்.

அவருடன் செல்ல மறுத்துவிட்டேன். ''நல்லவர்களின் நல்லெண்ணம் போதுமென்று'' நயமாகச் சொல்லி அனுப்பினேன்.

எனது மாவட்டத்தைச் சேர்ந்த திரு வ. கந்தசாமி என்பவர், அப்போது இந்திய அரசு பொதுப்பணித்துறையில் மேற்பார்வைப் பொறியாளராக இருந்தார். அவருக்குப் பெரிய மனிதர்கள் வேண்டியவர்கள் பலர்.

அவருக்கு நான் பதவி உயர்வுபெறவேண்டும் என்ற எண்ணம். நான் எவரையும் போய்ப்பார்த்துக் கேட்கவில்லை என்பது குறை.

எனவே வலிய வந்து, என்னை அப்போது சென்னைக்கு வந்திருந்த இந்திய அமைச்சர் மாண்புமிகு அளகேசனிடம் அழைத்துப்போய், என் பதவி உயர்வுக்காகப் பரிந்துரைக்க முயன்றார்.

அதற்கும் நான் உடன்படவில்லை. பலரைப் போல, அவரும் என்னை 'ஆணவக்காரனென்று நினைத்துவிட்டு இருந்தால் வியப்பில்லை.

டாக்டர் எம்.டி. பாலுக்காகப் பரிந்துரைகள் பல இருந்தன.

எல்லோர்க்கும் ஒரே பதில், 'பார்க்கலாம்' என்பதற்குமேல் முதலமைச்சர் குறிப்பு காட்டவில்லை.

என் நண்பர் பாலுக்காகப் பரிந்துரைத்தவர்களில் ஒருவர், ஒரு சமயம் தவறான துருப்புச் சீட்டைப் போட்டுவிட்டார்.

''நெ.து.சு. இராசாசியின் குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராகக் குறிப்பு எழுதினார். ஆனால் அரசு அத் திட்டத்தைச் செயல்படுத்தியபோது, அவர் பல ஊர்களுக்கும் சென்று அதே திட்டத்துக்குப் பேசி ஆதரவு திரட்டினார்.

''பின்னர் டாக்டர் பால் அப் பதவியை ஏற்றுக் கொண்டபோது திரு. ஜி. இராமசந்திரனோடு ஊர்ஊராகச் சென்று ஆசிரியர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தாரே ஒழிய, எந்தக் கூட்டத்திலும் அது பற்றிப் பேசவில்லை. வரவேற்புரை நன்றியுரை என்று கூடப் பேசவில்லை.

''ஆகவே, டாக்டர் பாலை நியமித்தல் நல்லது'' என்று முதலமைச்சர் காமராசரிடம் பரிந்துரைத்தார்.

முதலமைச்சரின் மதிப்பீடு வேறு வகையில் இருந்தது. அது என்ன?

''நீங்கள் சொன்ன பிறகே, நினைவிற்கு வருகிறது. ஆமாம். நெ.து.சு. அஞ்சாமல் ஆட்சேபனை சொன்னார். அதைப் பாராமல், அரசு வேறு விதமாக ஆணையிட்டபோது, அதை நிறைவேற்ற உண்மையாகப்

பாடுபட்டார். அந்த அளவிற்கு அவரிடம் கட்டுப்பாடு இருந்தது'' என்று முதலமைச்சர் முடிவு சொன்னபோது பரிந்துரைத்தவர் பதறிப்போனார்.

பரிந்துரைகள் பல இருந்தும் எந்த அடிப்படையில் இயக்குநரைத் தேர்ந்து எடுப்பது என்று முடிவு செய்தார்களோ, அதிலிருந்து நழுவவில்லை.

ஊழியர் ஆணையத்தின் கருத்து கோரப்பட்டது. அது என்னுடைய தகுதியே அதிகம் என்று மதிப்பிட்டது.

1954ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் நாள் மாலை 4 மணிக்கு இயக்குநருக்குப் பதில், நான் கல்வித் துறை ஆசிரியர்களைப் பொறுக்கும் பணி பற்றி, ஊழியர் ஆணையக் கூட்டத்தில் இருந்தேன்.

தலைமைச் செயலகத்திலிருந்து 'இந்து' நிருபர் நெ.து.சு. விடம் நேரில் பேசத் துடிப்பதாக, ஆணையச் செயலர் ஆணையத் தலைவருக்குக் குறிப்பு அனுப்பினார்.

அவர் அதை என்னிடம் காட்டிப் போய்வரும்படி குறிப்புக் காட்டினார் நான் அதை விரும்பவில்லை.

மீண்டும் அவர் சாடை காட்டினார். செயலர் அறைச்குச் சென்றேன். தொலைபேசியில் பேசினேன்.

இந்து நிருபர் என்னை இயக்குநராக நியமித்திருப்பதாகவும், அதற்காக என்னைப் பாராட்டுவதாகவும் கூறினார்.

''இது விழைவா? நடந்துவிட்ட செய்தியா?'' என்றேன்.

நியமன ஆணையின் எண்ணைப் படித்தார். உண்மை என்று உணர்ந்தேன்.

''இச்செய்தியை வெளியிடும்போதே உங்கள் படத்தையும் வெளியிடவேண்டும். தங்களைப் படம் எடுக்க, எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கே வந்து கொண்டிருக்கிறார். தயவு செய்து இரண்டு நிமிடம் வெளியே வந்து, படம் எடுக்க உதவுங்கள்'' என்று அந்நிருபர் கேட்டுக் கொண்டார்.

பதினைந்து மணித்துளிகள் ஓடின. புகைப்படக்காரர் வந்து தலை காட்டினார்.

ஆணையத்தலைவரிடம் கேட்டுக்கொண்டு படம் எடுக்க மூன்று மணித் துளிகள் செலவிட்டேன்.

அய்ந்தரை மணிவரை, அங்குள்ள பணியை முடித்துக்கொண்டு வீடு திரும்பினேன்.


பொதுக் கல்வி இயக்குநராக நியமிக்கப்பட்ட செய்தியைச் சொன்னேன்.

செய்தியைக் கேட்டு காந்தம்மா மகிழ்ச்சி அடைந்தார். குடும்பத்திலுள்ள எல்லோருக்கும் குதூகலம். ''அப்பா! இயக்கக வளாகத்தில் உள்ள பங்களாவிற்கு மாறவேண்டுமா?'' என்று மகன் திருவள்ளுவன் கவலையோடு கேட்டான்.

இங்கேயே இருக்கலாமென்று கூறக் கேட்டுக் கூத்தாடினான்.

இரண்டாம் பாகம் முற்றிற்று

நினைவு அலைகள்



டாக்டர் **நெ.து.சுந்தரவடிவேலு**

சாந்தா பதிப்பகம்